==========
Language in India www.languageinindia.com **ISSN 1930-2940 Vol. 19:6 June 2019**
==========

Semantic Change and Semantic Extension of Tamil Verbs
A Research Monograph in Tamil

Prof. Rajendran Sankaravelayuthan
Amrita Vishwa Vidyapeetham University
Coimbatore 641 112
rajushush@gmail.com
&
Dr. K. Bakkiyaraj
bhakyalingus@gmail.com

==========

This monograph in Tamil investigates semantic change and semantic extension of verbs in Tamil. The semantic change and semantic extensions of meaning of verbs are studied from the perspectives of cognitive semantics and generative lexicon. The monograph is organized into six chapters. They are briefly described below.

Chapter 1 Introduction

The introduction deals primarily about the aims and objective of the research work. A number of research works on semantics have been taken up Rajendran: The syntax and semantics of Tamil verbs, Semantics of Tamil vocabulary, Tamil Thesaurus, Tamil electronic thesaurus, Tamil WordNet, Generative lexicon for Tamil verbs, Generative lexicon for Tamil nouns, Ontological study of Tamil nouns, Semantic structure of Tamil sentences and Tamil visual thesaurus. The present work is one in that direction taking up the issues of semantic extension or semantic charge of verbs.

The polysemy found in verbs and the expansion of dictionaries disproportionately due to polysemy need to be checked. In order to account for the dynamic process of polysemy mainly due to semantic change or meaning expansion, especially in verbs, it is felt that the polysemy needs to be addressed seriously. The endless list of meanings found in the entries of verbs in dictionaries led to the present study. It is felt that the semantic change or meaning extension need to be explained properly for the verbs to lessen the burden of lexicon. Practically speaking there is no principal difference between semantic change and sematic change. The principles of cognitive semantics and principles of generative lexicon have been adopted to explain the phenomenon of semantic change and semantic extension found in verbs.

Chapter 2 Semantic Change and Semantic Extension

The units of a language change in course of time. The change affects both words and other bigger units of language including constructions. The meaning changes as the time passes away. The time induces change in the meanings of all the units of language. Both content and grammatical words undergo meaning change. The content word becomes grammatical word and gives grammatical meaning. For example the verbs *poo* and *vaa* are grammaticalized to denote some aspectual and modal meanings.

The cognitive linguistics helps us to understand how words change their meanings to some extent. The prototype theory promoted by Greeaerts (1997) and Fernandez (2007) helps us to understand the meaning expansion or extension in cognitive perspective. According to the prototype theory each word has their prototypical or central meaning from where the meaning expands. But prototype theory helps us to understand the meaning expansion to some extent only. Carpenter (2013) opines that the cognitive principles such as metaphor and metonymy induce meaning changes. We can look at the meaning change from the point of view of historical linguistics too. Historical change look at meaning change as a gradual change, just like waves spread form the center of a disturbance in a still water body. Language changes due to the cognitive principle of analogy too. There are two approaches to semantics: subjective approach and objective semantics. Comparatively subjective approach to semantics explains semantic change more successfully by making use of the prototype meaning than objective approach to semantics. That is why Historical semanticists support prototype approach to semantics.

Traditionally change of word meaning is divided into two: one is amelioration and another is pejoration. In pejoration, a word takes on a derogatory meaning. Amelioration is the opposite process, in which a word's meaning changes to become more positively valued. The normalization of previously proscribed taboo words is a good example (like *ass*). Whether a meaning change is in positive direction or negative direction will often depend on little more than one's subjective judgement. The meaning change is considered due to generalization, widening and broadening. Opposite to generalization is specialization. The third dimension to traditional approach to semantic change is metaphor and metonymy. Metonymy is the process of sense development in which a word shifts to a contiguous meaning. 'Contiguous' has a number of different meanings. But the essential idea is that two senses are contiguous if their referents are actually next to each other, either spatially or temporally. Metonymy was a notion adopted into linguistics from rhetoric, the traditional study of figurative, literary and persuasive language.. Another originally rhetorical concept with linguistic application is metaphor. Metaphors are based not on contiguity, but on similarity or analogy. Many instances of metonymic and metaphoric changes can be found in Tamil too.

Much modern work on semantic change stresses the role of conventionalization of implicature as a source of semantic change. To understand why meaning changes, we should not be thinking in terms of broad cognitive operations like metaphor and metonymy, but should look instead at how inference generated in discourse become part of lexicalized meaning.

Chapter 3 Polysemy and Meaning Change

To some extent, direct correlation can be found between polysemy and meaning change. One can say without any second thought that meaning change leads to polysemy. Blank (1991) in his paper talks about polysemy in lexicon. This section is written mainly based on Blank (1991). Polysemy can be looked at as a synchronic and diachronic phenomenon. In order to understand the diachronic foundation of lexical polysemy we need to understand the typology of semantic change. Blank (1991) lists eleven types of lexical semantic changes: 1. metaphor, 2. Co-hyponymous transfer, semantic extension, semantic restriction, lexical ellipsis (absorption) metonymy, popular etymology, auto-converse change, antiphrasis, auto-antonymy and analogous semantic change.

The well-known type of polysemy is metaphoric polysemy. Metaphoric polysemy is generally considered as a diachronic process. The similarity inside one and the same conceptual domain or folk-taxonomy is the basis of co-homonymous transfer. This gives rise to co-homonymous polysemy. When converse relation develops within the same word, the auto-converse change takes place leading to auto-converse polysemy. The synchronic relation between two senses of a word as "metaphoric polysemy" is inexact as they do not describe the whole polysemy of a word. A pair of two related senses of a word can establish semantic links to other senses of the word in question is self-evident. It does not mean that all the senses of a word are interrelated or have "something in common" when we say that the word is polysemous. Polysemy has to be visualized as a chain or network of senses. An application of polysemy in lexicography inevitably leads to complex representations. It allows characterizing of the relations between the senses of one word.

Polysemy as a phenomenon of semantic description interacts with contextual variation (as also called "vagueness") and homonymy (also known as "ambiguity"). Generally distinguishing these three concepts are not that easy. Contextual variation can be accountable to polysemy. Generally words occur only in concrete utterances; it does not occur in more abstract and idealized dictionary situations. One has to define the boundary between senses attributed to a particular word. This can lead to the distinction between vagueness, polysemy and homonymy.

According the modal developed by Blank there are fourfold typology of different levels of polysemy: (1) Rule-based non-lexicalized polysemy, (2) Rule based and lexicalized polysemy with no or few idiosyncratic restrictions, (3) rule-based and lexicalized polysemy with idiosyncratic restrictions and (4) idiosyncratic lexicalized polysemy. These different levels of conventionalization and idiosyncratic restrictions mark the speaker's awareness of polysemy to certain extent.

Blank has demonstrated with his examples that polysemy is not fully derivable form semantic change. Polysemy is revealed to be merely one way in a set of possibilities. It is a directly lexicalized consequence of semantic innovation. Innovations can become conventional on the level of a discourse type. Lexical polysemy has now become defined in positive terms and as a tool of semantic and lexicographic description.

Chapter 4 Earlier Researches in Tamil on Lexical Semantics and Semantic Change

There are a few earlier researches in Tamil on lexical semantics and semantic change. Inadvertently they are the research works undertaken by Rajendran. "Syntax and semantics of Tamil verbs" is the PhD research work of Rajendran (1978). This work followed the principles of Nida (1975) expounded in his book entitled "Componential analysis of meaning: an introduction to semantic structures". This work has great relevance to the present research work as Rajendran has classified verbs into certain semantic domains and subdomains based on the principles of componential analysis propounded by Nida (1975). Another important work on lexical semantics by Rajendran is his post-doctoral work on "Semantics of Tamil vocabulary". These works have been culminated into two book entitled "*taRkaalat tamiz coRkaLanjciyam* (Thesaurus for modern Tamil)" which has been written in Tamil and published by Tamil university in 2001 (Rajendran 2001) and '*tamiz min coRkaLanjciyam* (Tamil electronic thesaurus)" written in collaboration with Baskaran and published by Tamil University in 2006 (Rajendran 2006). He has published a book on lexical semantics entitled "*coRkaL*: *vaazvum varalaaRum* (Words: Life and History) written in collaboration with Sakthivel. His research papers entitled "Verbs of 'seeing' in Tamil' (Rajendran 1982), "Coming and Going in Tamil" (Rajendran 1983), "Semantic Structure of Directional verbs of movement in Tamil", (Rajendran 2002), "Syntax and semantics of Verbs of Transfer in Tamil" (Rajendran 2002), "Creating generative lexicon from dictionaries" (Rajendran 2003), "Building generative lexicon from MRDs in Tamil" (Rajendran 2010), "Grammaticalization verbs in Tamil" (Rajendran 2018) and "Cognitive extensions of meaning in verbs of movement in Tamil" (Rajendran 2019) have direct or indirect bearing on the present research work. Some of unpublished research manuals but uploaded in the websites academia.edu and Research Gate which can be said to be directly or indirectly concerned with the present research work are "*tamiz colvalai* (Tamil WordNet)", "*muulapporuNmaiyiyal aavyu*" (Ontological structure for Tamil), "*tamiz peyarc coRkaLin aakkamuRai akaraati*" (Generative lexicon for Tamil nouns)" and "*tamiz vinaicoRkaLin aakkamuRai akaraati* (Generative lexicon for Tamil)".

Chapter 5 Semantic Change and Semantic Extension of Meaning in Tamil Verbs

Recognition of polysemy becomes very crucial for the proper understanding of the meanings of sentences. When we translate one language into another language, especially when we resort to machine translation, the polysemy creates a lot of problems. The polysemy leads to ambiguity which makes the translation across language a difficult process. So, the study of polysemy across language also becomes important. We need to study how words become polysemous and what is the reason for a word to acquire polysemy. This naturally evokes the question whether is it possible to predict or define the change of meaning or extension of meaning of a lexical item. It is difficult to draw a line between semantic change and semantic extension. If the polysemy leads to the formation of new entries in the lexicon, then we call the process as semantic change; if the polysemy does not lead to the formation of new entries we call them as semantic extension. For example *ndaTa* 'walk' of Tamil has two entries in a typical Tamil dictionary as it means 'walk' in one entry and 'happen' in another entry; this can be considered as a semantic change. The meaning listed under an entry is considered as semantic extension.

Rajendran (1978 and 2001) made a full-fledged study of sematic structure of Tamil. He tried to classify verbs of Tamil into certain domains based on componential analysis of meaning propounded by Nida (1975). He has classified verbs into verbs of movement, verbs of transfer, verbs of change of state, verbs of impact, verbs of senses, verbs of emotion, verbs of intellection, verbs of communication and verbs of other complex actions. This lays foundation to the semantic study of verbs. It is understood that the cognitive study of meaning change coupled with field semantics can give better perspective on meaning change or meaning extension. The semantic field analysis comes handy to understand the semantic change or extension of lexical items. It is possible to find out and predict how a lexical item belonging to one semantic domain or filed moves to another domain or field. Verbs of movement typically show ample instances of cognitive extensions of meaning. For example *ooTu* 'run', *paRa* 'fly' can denote movement of time, movement of mind, etc. *ndaTa* which denotes walking in general extends its meaning to denote 'happen'. We can visualize some sort of universal tendency in these meaning extensions. The verbs found in verbs of movement, verbs of transfer, verbs of change of state, verbs of impact and verbs of senses have been studied on the perspectives of cognitive semantics and field semantics and relevant information have been presented in this chapter.

Chapter 6 Explaining Semantic extension of meaning of verbs using Principles of Generative Lexicon

Taking into account the principles of generative lexicon propounded by Pustejovsky, the semantic extension of meanings has been studied taking the data from Crea's Modern Tamil dictionary (Ramakrishnan 2008). Nearly 28 verbs have been taken from Crea and their meanings have tabulated by extracting the participants of actions expressed by verbs such as subject, object, indirect object, location etc. from the examples given for meanings of each verbal entry. The participants are realized as noun phrases (NPs). The verbs such as *acai1* 'move' , *acai2* 'cause to move', *anjcu* 'be afraid of', *aTangku* 'subside', *aTakku* 'control', *aTi* 'beat', *aTai1* 'get' and *aTai2* 'confine', *aNi* 'wear', *aNai1* 'be extinguished' and *aNai2* 'extinguish', aNai 3 'embrace', *amai1* 'be established', *amai2* 'establish', *aaTu* 'move', *aaTTu* 'shake', *izu* 'pull', *iir* 'attract', *uTai* 'be broken', *uTai* 'break', *uuRu* 'secrete', *uuRRu* 'pour', *eTu* 'take', *eeRu* 'climb', *eeRRu* 'load', *ooTu* 'run', *ooTTu* 'cause to run', *kaTTu* 'construct', *kalai* 'become disorderly', *kalai* 'change the order', *ceer1* 'join', *ceer* 'assemble', *taTTu* 'pat', *ndaTa* 'walk' and *maRRu* 'change' have been selected from Crea. From the meanings of each verb and taking into account the participants of the action such as subject, object, indirect object, location etc. realized as NPs, the sematic features of the participants are studied and the polysemy and semantic extension of the verbs are plotted and given explanation from the point of view of Pustejovsky.

Chapter 7 Conclusion

The findings of research are given here. The scope of the study and future prospects of the study are also discussed here.

Bibliography

தமிழ் வினைகளில் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்

(Semantic Change and Semantic Extension of Tamil Verbs)

பேரசிரியர் இராசேந்திரன் சங்கரவேலாயுதன்
Prof. Rajendran Sankaravelayuthan
அமிர்தா விஷ்வ வித்யபீடம், கோயம்புத்தூர்
rajushush@gmail.com
&
Dr. K. Bakkiyaraj
முனைவர் க. பாக்கியராஜ்
தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை
bhakyalingus@gmail.com

கோயம்புத்தூர் 641 112

சூன் 2019

என்னுரை

”தமிழ் வினைகளில் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்” என்ற இவ்வாய்வு தமிழ்ப் பொருண்மையியலைத் தொடர்ந்த எனது நீண்டநாள் பயணத்தின் விளைவாகும். 1978-இல் நான் செய்து முடித்த “syntax and semantics of Tamil verbs” என்ற எனது முனைவர் பட்ட ஆய்வும் அதைத் தொடர்ந்து நான் செய்த “Semantics of Tamil vocabulary” என்ற எனது முதுமுனைவர் பட்ட ஆய்வும் தொடக்கங்களாகும். அதைத் தொடர்ந்து தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம், தமிழ்ப் பெயர்ச்சொற்களின் ஆக்கமுறை அகராதி உருவாக்கம், தமிழ் வினைச்சொற்களின் ஆக்கமுறை அகராதி உருவாக்கம், தமிழில் சொல்வலை, தமிழ்ப் பெயர்ச்சொற்களின் மூலப்பொருண்மையியல் ஆய்வு, தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு என்ற பொருண்மையியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு ஆய்வேடுகளை உருவாக்கினேன். “பொருண்மையியல்” என்ற நூலையும் எழுதியுள்ளேன். அச்சேற்றி வெளியிட இயலாததால் இவற்றை academia.edu மற்றும் Research Gate என்ற இணையதளங்களில் பதிவேற்றம் செய்துள்ளேன். தற்போது எனது கவனத்தை புலனறிவுப் பொருண்மையியலில் திருப்பியுள்ளேன். அதன் விளைவுதான் ”தமிழ் வினைகளில் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்” என்ற இந்நூல். இதை முனைவர் க. பாக்கியராஜ் அவர்களுடன் இணைந்து எழுதியுள்ளேன். இதை Language in India என்ற மின் ஆய்விதழில் வெளியிட உதவிபுரியும் பேராசிரியர் மா. திருமலை அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் ஊக்கம் இல்லாவிட்டால் இது எனது மடிக்கணியில் உறங்கிக்கொண்டிருக்கும்.

இராசேந்திரன் சங்கரவேலாயுதன்

பொருளடக்கம்

வரிசை எண்	தலைப்பு	பக்கம்
1	இயல் 1 அறிமுகம்	16
2	இயல் 2 பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்	23
2.1	அறிமுகம்	23
2.2	சொற்பொருண்மையியல்	24
2.2.1.	சொற்பொருண்மையின் இயல்பு	25
2.2.1.1.	சொல் என்றால் என்ன?	26
2.2.1.2.	சொற்பொருண்மையும் இலக்கணப்பொருண்மையும்	28
2.2.1.3.	சொற்பொருண்மையும் வாக்கியப் பொருண்மையும்	30
2.2.1.4.	சாத்தியமான சொற்பொருண்மைக் கருத்துச்சாயல்	30
2.2.2.	சொற்பொருண்மையியலின் முக்கியச் சிக்கல்கள்	35
2.2.2.1	பொருளடக்கத்தின் விளக்கம்	35
2.2.2.2	சூழல் மாறுபாடு	36
2.2.2.3	அகராதி பொருண்மை உறவுகளும் அமைப்புகளும்	36
2.2.2.4.	சொற்பொருண்மையும் தொடரியல் பண்புகளும்	36
2.2.3	சொற்பொருண்மையியல் அணுகுமுறைகள்	37
2.2.3.1	ஒருநிலை அணுகுமுறையும் இருநிலை அணுகுமுறையும்	37
2.2.3.2	ஒருபொருண்மை மற்றும் பல்பொருண்மை அணுகுமுறைகள்	38
2.2.3.3	பொருண்மைக்கூறாய்வு அணுகுமுறை	40
2.2.3.4	முழுமை வாதத்தார் அணுகுமுறை	42
2.2.3.4.1	ஹாஸ்	43
2.2.3.4.2	லையான்ஸ்	44
2.2.3.5.	கருத்துசார் அணுகுமுறைகள்	45
2.2.3.6.	வடிவுசார் அணுகுமுறைகள்	48
2.3	புலனறி மொழியியல் பார்வையில் பொருண்மை மாற்றம்	49

2.4	வரலாற்று மொழியியல் பார்வையில் மொழி மாற்றம்	51
2.5	பொருண்மை மாற்றத்தின் ஆய்வு	56
2.6	பொருண்மை மாற்றமும் பொருண்மையியல் கோட்பாடும்	57
2.7	பொருண்மை மாற்றம் - மரபு வகைப்பாடு	59
2.8	தற்கால முன்னேற்றங்கள்: பொருண்மை மாற்றத்தில் ஒழுங்குகள்	64
2.9	பொருண்மை மாற்றத்தின் வகைகள்	68
2.10	கோட்பாட்டு ஆய்வுகள்	75
2.10.1	ரெசிக்கின் வகைப்பாட்டியல்	76
2.10.2	பாலின் வகைப்பாட்டியல்	77
2.10.3	டார்மெஸ்டரின் வகைப்பாட்டியல்	77
2.10.4	ப்ரெயலின் வகைப்பாட்டியல்	77
2.10.5	ஸ்டர்னின் வகைப்பாட்டியல்	78
2.10.6	ஸ்டீபன் உல்மானின் வகைப்பாட்டியல்	79
2.11	பொருண்மை மாற்றத்தில் களப்பொருண்மையிலின் தாக்கம்	80
2.11.1	பொருண்மைக் களங்களும் பொருண்மை மாற்றங்களும்	81
2.11.2	விலங்கு உருவகங்கள்	86
2.11.3	உருவக மாற்றலும் பொருண்மை மாற்றமும்	91
2.12	பொருண்மை நீட்சி	92
2.13	வினைகளில் அர்த்த நீட்சி	95
2.13.1	அர்த்தங்களுக்கு இடையேயுள்ள உறவுகள்	96
2.13.2	உருவகத்தைக் கையாளல்	100
2.13.3	அர்த்த நீட்சி இயக்கமுறை	106
2.14	முடிவுரை	112
3	இயல் 3: பல்பொருள் ஒருமொழியும் பொருண்மை மாற்றமும்	114
3.1	அறிமுகம்	114
3.2	பொருண்மை மாற்றம்: பல்பொருளொருமொழியத்தின் வகைகள்	115
3.3	சூழல் மாறுபாடு: பல்பொருளொருமொழியம், ஒருசொல்போலியியல்	124

3.3.1	சூழல் மாறுபாடும் பல்பொருளொருமொழியமும்	125
3.3.2	பல்பொருளொருமொழியமும் ஒருசொல்போலியமும்	128
3.3.3	குறிப்பிடும் வகுப்பு மற்றும் பொருண்மை உறவு: பல்பொருளொருமொழியத்திற்கு இரட்டைப் பரிசோதனை	131
3.4	கருத்தாடல் விதிகள், தனிப்போக்கு, சொல்லனாக்கம்: பல்பொருளொருமொழியத்தின் நிலைகள்	133
3.4.1	வழமையாக மீண்டும் மீண்டும் வரும் பல்பொருளொருமொழியங்கள்	133
3.4.2	இருநிலை பொருண்மையியல் மற்றும் பல்பொருளொருமொழியம்	135
3.4.3	கருத்தாடல் விதிகள் மற்றும் பல்பொருளொருமொழியம்	138
3.4.4	பல்பொருளொருமொழியின் நான்கு மட்டங்கள்/நிலைகள்	148
3.5	முடிவுரை	152
4	இயல் 4 தமிழில் சொற்பொருண்மையியல் மற்றும் பொருண்மை மாற்றம் பற்றிய முந்தைய ஆய்வுகள்	154
4.1	அறிமுகம்	154
4.2	தமிழ் வினைகளின் பொருண்மையியலும் தொடரியலும்	154
4.3	தமிழ்ச் சொற்றொகையின் பொருண்மையியல் ஆய்வு	156
4.4	தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம்	157
4.5	தமிழ் மின்சொற்களஞ்சியம்	157
4.6.	தமிழ்ச் சொல்வலை ஆய்வுத்திட்டம்	158
4.7.	இயந்திரம்படிக்கவியலும் தமிழ் அகராதிகளைப் பயன்படுத்தி ஆக்கமுறை அகராதி உருவாக்குதல்	159
4.8.	தமிழ்ப் பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச் சொற்களின் ஆக்கமுறை அகராதி உருவாக்கம்	160
4.9.	தமிழ்ச் சொல்வலை	161
4.10	வைரமுத்துக்கவிதைகளில் வரும் உவமை மற்றும் உருவகங்களின் பொருண்மையியல் ஆய்வு	163
4.11.	தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு	163
4.12.	தமிழ்ப் பெயர்ச்சொற்களின் மூலப்பொருண்மையியல் ஆய்வு	165
4.13.	தமிழ் வினைகளின் சொற்பொருண்மையியல் ஆய்வுகள்	166

4.14.	தமிழ்வினைகளின் வரலாற்று மொழியியல் ஆய்வுகள்	167
4.15.	தமிழ்ப்பெயர்ச்சொற்களின் வரலாற்று மொழியியல் ஆய்வு	167
4.16	சுருக்கவுரை	168
5	இயல் 5 தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்	169
5.1	அறிமுகம்	169
5.2.	தமிழ் வினைகளை முக்கியப் பொருண்மைக் களங்களாகப் பிரித்தல்	174
5.3	சலன வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்	178
5.3.1	சில முந்தைய முக்கிய ஆய்வுகள்	179
5.3.1.1	மனவியக்கத்தின் கருத்துருசார் செயல்நோக்கம்	179
5.3.1.2	சட்டகப் பொருண்மையில் அடிப்படையிலான ஆய்வு	184
5.3.2.	சலன வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்	185
5.3.2.1	சலன வினைகளின் பொருண்மைகளப் பாகுபாடு	185
5.3.2.2	முன்னோக்குச் சலனம்	186
5.3.2.2.1	*நட* என்ற வினையின் பொருண்மை நீட்சி	189
5.3.2.2.2	ஓடு என்ற வினையின் பொருண்மை நீட்சி	192
5.3.2.3	மேல்நோக்குச் சலனம்	198
5.3.2.3.1	*ஏறு* என்பதன் பொருண்மை நீட்சி	199
5.3.2.3.2	*எழு* என்பதன் பொருண்மை நீட்சி	205
5.3.2.4	கீழ்நோக்குச் சலனம்	207
5.3.2.4.1	*இறங்கு* என்பதன் பொருண்மை நீட்சி	209
5.3.2.5	சலனவினைகள் உணர்ச்சி நிலைகளை உருப்படுத்தம் செய்தல்	212
5.3.2.6	சலனவினைகள் சில புலனுணர்வுகளை உருப்படுத்தம் செய்தல்	216
5.4.	கைமாற்ற வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்	217
5.4.1	கைமாற்ற வினைகளின் பொருண்மைக்களப் பாகுபடு	217
5.4.2.	கைமாற்ற வினைகளின் பொருண்மை மாற்றம் மற்றும் பொருண்மை நீட்சி	218

5.4.2.1	கையிலிருந்து பொருள் போதல் அல்லது இழத்தல்	218
5.4.2.1.1.	கொடு என்பதன் பொருண்மை நீட்சி	219
5.4.2.2	கைக்குப் பொருள் வருதல் அல்லது பெறுதல்	229
5.4.2.2.1	வாங்கு என்பதன் பொருண்மை நீட்சி	230
5.5	நிலைமாற்ற வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்	232
5.5.1	ஈரமிழத்தல்-ஈரம்பெறுதல் வினைகள்	233
5.5.2	சூடு பெறுதல்-சூடு இழத்தல் வினைகளின் பொருண்மை நீட்சி	236
5.5.3	கடினமாதல்-கடினமிழத்தல் வினைகளின் பொருண்மை நீட்சி	237
5.5.4	நிறமாற்ற வினைகளின் பொருண்மை நீட்சி	239
5.5.5	துண்டு அல்லது துணுக்கு நிலைமாற்ற வினைகளின் பொருண்மை நீட்சி	240
5.6	தாக்க வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்	245
5.6.1	தாக்கு என்ற வினையின் பொருண்மை நீட்சி	247
5.6.2.	உடை என்பதன் பொருண்மை நீட்சி	248
5.7	புலனுணர்வு வினைகளின் பொருண்மை மாற்றமும் நீட்சியும்	249
5.7.1	புலனுணர்வு வினைகள் பற்றிய முன்னோடியான ஆய்வுகள்	249
5.7.1.1	புலனுணர்வின் உருவகங்களில் ஸ்வீட்சரின் அணுகுமுறை	251
5.7.1.2	புலனறி வினகளின் பல்பொருளொருமொழியின் இப்ரடெக்-ஆண்டுனாஞோவின் மாதிரி	253
5.7.2	புலணர்வு வினைகளின் பொருண்மைக்களப் பாகுபாடு	258
5.7.2.1.	கட்புலன் தொடர்பான வினைகளின் பொருண்மை நீட்சி	259
5.7.2.2.	செவிப்புலன் தொடர்பான வினைகளின் பொருண்மை நீட்சி	264
5.7.2.2.1.	*கேள்* என்பதன் பொருண்மை நீட்சி	266
5.7.2.3.	முகர்புலன் தொடர்பான வினைகளின் பொருணமை நீட்சி	269
5.7.2.4.	நா உணர்வு தொடர்பான வினைகளின் பொருண்மை நீட்சி	269
5.7.2.5.	தொடு உணர்வு தொடர்பான உணர்வு வினைகளின் பொருண்மை நீட்சி	270
5.7.2.5.	புலனுணர்வு வினைப் பொருண்மைகள் அறிவுசார்ந்த பொருண்மைக் களத்துக்கு விரிதல்	271

5.8.	முடிவுரை	274
	இயல் 6 ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டு அடிப்படையில் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்	276
6.1	அறிமுகம்	276
6.2	ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு	277
6.2.1.	பல்பொருண்மையின் தர்க்கச்சிக்கல்	283
6.2.1.1	பொருண்மை நீட்சியின் பல்வேறுவகைகள்	283
6.2.1.2	முரண் மயக்கம்	285
6.2.1.3	துணைநிலை வருகைப் பல்பொருண்மை	287
6.2.1.4	தொடக்க நிலை சொற்பொருண்மைக் கோட்பாடு	290
6.2.2	பொருளினைப் பட்டியலிடும் அகராதிகளின் எல்லை	297
6.2.2.1	சொற்பொருண்மைக் கோட்பாட்டின் குறிக்கோள்கள்	298
6.2.2.2	சொற்களின் படைப்பாக்கப் பயன்பாடு	299
6.2.2.3	பொருள்களின் பரவுதல்	301
6.2.3	பொருண்மை வகை ஒழுங்குமுறை	308
6.2.3.1.	பங்கெடுப்பாளர் அமைப்பு	310
6.2.3.2.	குண அமைப்பு	312
6.3	ஆக்கமுறை அகராதி கோட்பாடு அடிப்படையில் வினைகளின் பொருண்மை நிட்சி	327
6.3.1	அசை	327
6.3.1.1.	அசை1	327
6.3.1.2	அசை2	330
6.3.2	அஞ்சு	334
6.3.3	அடங்கு	336
6.3.4	அடக்கு	339
6.3.5	அடி	342
6.3.6	அடை	351
6.3.6.1.	அடை1	351
6.3.6.2	அடை2	355

6.3.7	அணி	356
6.3.8	அணை	360
6.3.8.1.	அணை1	360
6.3.8.2.	அணை2	361
6.3.8.3.	அணை3	362
6.3.9	அமை	365
6.3.9.1.	அமை1	365
6.3.9.2.	அமை2	367
6.3.10.	ஆடு	369
6.3.11.	ஆட்டு	373
6.3.12	இழு	376
6.3.13.	ஈர்	380
6.3.14	உடை	383
6.3.14.1	உடை1	383
6.3.14.2	உடை2	387
6.3.15.	ஊறு	392
6.3.16	ஊற்று	395
6.3.17	எடு	397
6.3.18	ஏறு	410
6.3.19	ஏற்று	414
6.3.19.1.	ஏற்று1	415
6.3.19.2	ஏற்று2	420
6.3.20	ஓடு	421
6.3.21	ஓட்டு	428
6.3.22	கட்டு	432
6.3.23.	கலை	440
6.3.23.1	கலை1	440
6.3.23.2	கலை2	443
6.3.24.	சேர்	447

6.3.24.1	சேர்1	447
6.3.24.2.	சேர்2	452
6.3.25.	தட்டு	458
6.3.25.1	தட்டு1	458
6.3.26.	நட	462
6.3.27.	மாறு	468
6.3.28.	மாற்று	472
6.4.	சுருக்கவுரை	477
7	முடிவுரை	479
	துணைநூல்கள் (Bibliography)	492

இயல் 1

அறிமுகம்

“தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்” என்ற இவ்வாய்வு தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றம் பற்றிய விரிவான ஆய்வு இல்லாத குறையை நிறைவு செய்யும் முகத்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொருண்மையில் பற்றி இராசேந்திரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் (Rajendran, 1978, 1983, 2002, 2003; இராசேந்திரன் 2009, 2010, 2015) இவ்வாய்விற்கு அடித்தளமாக அமைகின்றன.

மொழிக்கூற்றுகள் காலப் போக்கில் அவற்றின் பொருண்மையில் மாற்றம் அடையும். நம்மைப் பொறுத்தவரையில் எவ்வாறு தமிழ் வினைச் சொற்கள் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் அடைகின்றன, அதற்கான காரணங்கள் என்ன, பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் எவ்வாறு வகைப்பாடு செய்து விளக்கலாம் என்பன குறிக்கோள்கள் ஆகும். மொழிக்கூறுகள் சொற்களையும் பிற பெரிய இலக்கணக் கட்டுமானங்களையும் உட்படுத்தும். பொருளடக்கச் சொற்களும் இலக்கணச்சொற்களும் பொருண்மை மாற்றத்திற்கு உள்ளாகும். பொருளடக்கச் சொற்கள் இலக்கணச் சொற்களாக மாறி இலக்கணப் பொருளைத் தரும். எடுத்துக்காட்டாக, *போ, வா, இரு* போன்ற பொருளடக்கச் சொற்கள் வினையாற்று வினைகளாகவும் செயற்பாங்கு வினைகளாகவும் செயற்பாடு செய்யும் படி பொருண்மை மாற்றம் அடைந்துள்ளன. தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றத்தை ஆய்வதுதான் இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும். இது இருவழிகளில் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது: ஒன்று பொருண்மை மாற்றத்திற்கான புலனறிவுப்

பொண்மையில்சார் காரணங்களை ஆய்ந்து விளக்குவது மற்றொன்று புஸ்தெஜொவ்ஸ்கியன் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைப் பின்பற்றி வினைகளின் பல்பொருண்மையை விளக்குவது

புலனறிவுப்பொருண்மையியல் அடிப்படையிலான வினைகளின் பொருண்மை நீட்சி அல்லது பொருண்மை மாற்ற ஆய்வு இருவழிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது: ஒன்று பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் தமிழ் வினைகளைப் பொருண்மைக் களங்களாகப் பிரித்து தேர்ந்தெடுக்கப்பட்ட வினைகளின் ஒருபொருள்பன்மொழியத்தன்மையை அல்லது பல்பொருண்மையை (polysemy) விளக்குவது; இரண்டாவது வினைகளின் பல்பொருண்மை மூலம் வெளிப்படும் பொருண்மை நீட்சிகளையும் பொருண்மை மாற்றங்களையும் ஆய்ந்து விளக்கி, எவ்வாறு ஒரு பொருண்மைக்களத்தைச் சார்ந்த வினைகள் பொருண்மை நீட்சி காரணமாக மற்றொரு பொருண்மைக்களத்திற்குச் செல்கின்றது என்பதைத் தெளிவுபடுத்துவது.

சொற்களின் அர்தங்களைப் பட்டியலிட்டு அவற்றின் பயன்பாட்டின் எடுத்துக்காட்டுகளைத் தரும் சொற்தகவல் மூலவளங்களாக அகராதிகள் மிளிர்கின்றன. சொற்களைப் பொருண்மை அடிப்படியில் பொருட்புலங்களாகப் பாகுபாடு செய்து அவற்றின் கீழ் சொற்களைத் தரும் சொல் தகவல் மூலங்களாகப் பொருட்புல அகராதிகள் அல்லது சொற்களஞ்சியங்கள் அமைகின்றன. தரவுத்தொகுதிகளைப் பயன்படுத்தி சொற்களைக் கண்டுபிடித்து அவற்றை ஒருபொருள்பன்மொழியக் குழுமங்களாகப் பட்டியலிட்டு அவை ஒவ்வொன்றின் வேறுபட்ட அர்த்தங்களைக் கண்டுபிடித்து அவற்றின் பயன்பாட்டு எடுத்துக்காட்டுகளைத் தருவதுடன் அவற்றைப் அவற்றிற்கு இடையேயுள்ள பொருண்மை உறவுகள் அடிப்படையில் இணைத்து

மூலப்பொருண்மையியல் பின்னணியில் தருவதைச் சொல்வலைகள் (wordNets) செய்கின்றன.

இங்கு சிக்கல் என்னவென்றால் ஒவ்வொரு சொல்லுக்கும் அர்த்தங்களின் பட்டியல்கள் நீண்கொண்டிருக்கும். வினைகளைப் பொறுத்தவரையில் இப்பட்டியல் பக்கக்கணக்கில் நீளும். இத்தகைய பட்டியலைப் பயன்படுத்தி மொழியைக் கடந்து மொழிபெயர்ப்பதற்கும் தகவல் பரிமாற்றத்திற்கும் தகவல் பெறுதலும் கடினமாகும். இப்பட்டியலுக்குப் பதிலாக இப்பட்டியல் மூலம் வெளிப்படும் சொற்களின் பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சிகளையும் விதிகளாகவோ அல்லது வகைப்பாடுகளாகவோ அமைத்துத் தந்தால் மேற்சொன்ன செயல்பாட்டை செம்மையாகவும் எளிமையாகவும் செய்யவியலும் என்பது வெளிப்படை. இத்தகைய நோக்கிலும் தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் ஆயப்பட்டுள்ளன.

சொற்களின் பல்பொருளொருமொழியத்தன்மை சொற்களை விளைவாக்க முறையில் கையாளுவதற்கு உதவினாலும் வாக்கியங்களின் பொருள்கோளுக்கும் மொழிபெயர்புக்கும் சொற்கள் அடிப்படையிலான தகவல் பேறுக்கும் இடையூறாக அமைகின்றது. சொற்களின் பல்பொருளொருமொழியத்தன்மை சொற்பொருள் மயக்கத்திற்கு மிக முக்கிய காரணமாகும். சொற்களின் பல்பொருளொருமொழியத்தன்மை பொரும்பாலும் ஊக்கிக்க இயலுவதாக அமைகின்றன. இவ்வூக்கிக்க இயலும் பொருண்மை மாற்றத்தை அல்லது நீட்சியைப் பொதுமை விதிகளாகத் தரவோ ஊகிக்கவியலும் போக்குகளாக விளக்கவோ இயலுமானால் அது பல மொழியியல் செயல்பாடுகளுக்குப் பயனுள்ளதாக அமையும். இதன் அடிப்படையிலும் இவ்வய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் வினைகள் பொருண்மை அடிப்படையில் மாற்றமும் நீட்சியும் அடைகின்றன அவற்றை வகைபடுத்தி விளக்கவும் அதற்கான பொதுவான காரணங்களைக் கண்டறியவும் இயலும் என்ற கருதுகோள் இங்கு முன்வைக்கப்படுகின்றது. வினைகளின் பெரும்பாலான பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் ஊகிக்க அல்லது எதிர்பார்க்க இயலுவதாகவும் விதிகளால் விளக்க இயலுவதாகவும் அமைகின்றது. இத்தகைய எதிர்பார்ப்பும் ஊகிப்பும் நமது கருத்துப் பரிமாற்றச் செயல்பாட்டை எளிதாக்குகின்றது. வினைகள் பெரும்பான்மையும் பொருண்மை அடிப்படையில் உருவக நீட்சியோ மாற்றமோ அடைகின்றன. அத்தகைய உருவகப் பொருண்மை மாற்றத்தின் அல்லது நீட்சியின் விளைவுகளில் சிலவற்றை நாம் எதிர்பார்க்கவோ ஊகிக்கவோ இயலும். குறிப்பிடத்தக்க பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் உலகப்பொதுமையாகவோ அல்லது (ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில்) பொதுமையான போக்காகவோ அமையலாம். ஆகுபெயர் பொருண்மை நீட்சியையும் உருவகப் பொருண்மை நீட்சியையும் ஒரு சொல்லின் பல்பொருள்ஒருமொழியத் தன்மைக்கான முக்கிய காரணங்களாகக் கருத இயலும்.

இங்கு தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் அகராதிகளின் அடிப்படையில் ஆயப்படும். குறிப்பாக, க்ரியாவின் தற்காலத் தமிழகராதியில் காணப்படும் வினைகள் பற்றிய பொருண்மைத் தகவல்களின் அடிப்படையில் ஆயப்படும். இத்தகைய அகராதி வினைச்சொற்களின் பொருண்மை பற்றிய தற்கால நிலையை வெளிப்படுத்துவதாக அமைந்தாலும் அது வரலாற்றுக் காலத்தை பிரதிபலித்தே ஆகும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தற்கால நிலை பெரும்பாலும் காலபோக்கின் விளைவுதான் என்பதை நாம் அறுதியிட்டு கூறலாம். குறிப்பாக ஒரு வினை பெறும் பல்பொருண்மை அதன் பொருண்மையில் ஏற்பட்டுள்ள

வரலாற்று கால மாற்றத்தின் விளைவு தான் என்பதைத் தயக்கமின்றி கூறலாம். கார்பெண்டர் (Carpenter, 2013) எழுதிய 'பொருண்மை மாற்றமும் புலனறிவும்: எவ்வாறு தற்காலம் முற்காலத்தையும் பிற்காலத்தையும் வெளிப்படுத்துகின்றது" (Semantic Change and Cognition: How the present illuminates the past and the future) என்ற கட்டுரை இங்கு கருத்தில் கொள்ளவேண்டியதாகும்.

சொற்கள் எவ்வாறு தமது பொருண்மையை மாற்றுகின்றன என்பது பற்றிய நமது புரிந்துகொள்ளலை அதிகரிக்க சொற்களின் பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் ஆயும் அண்மைக்காலப் புலனறி மொழியியல் ஆய்வுகள் நமக்கு உதவுகின்றன. இவ்வாய்வுகள் குறிப்பாக மூலவகைக் கோட்பாடின் அடிப்படையில் (Geeraerts, 1997; Fernandez, 2007) செய்யப்படுகின்றன. புலனறிவு மொழியியல் கோட்பாடு பற்றி இயல் இரண்டில் விளக்கமாகத்தரப்பட்டுள்ளது. புலனறி மொழியிலைக் கவனக்குவிப்பு செய்து தமிழ் வினைகளின் பொருண்மைகள் ஆயப்பட்டு அவற்றின் பொருண்மைமாற்றங்களும் பொருண்மை நீட்சிகளும் வகைப்படுத்தப்பட்டு ஆயப்பட்டுள்ளன. வர்ணனை மொழியியல் கோட்பாடும் வரலாற்று மொழியியல் மற்றும் சமகால மொழியியல் கோட்பாடும் புலனறி மொழியிலின் பின்னணியில் அமையும்.

லேரர் (Lehrer 1985) தமது கட்டுரையில் பொருண்மை மாற்றத்தின் கொள்கைகளில் உள்ள நுண்ணறிவை அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்களின் வெளிப்பாடகக் காணாமல் ஒரு பொருண்மைக் களத்தைச் சார்ந்த சொற்களின் மொத்த வெளிப்பாடக் கருதுவதால் பெறவியலும் எனத் தமது கருத்தை முன்வைக்கின்றார். லேரின் இக்கருத்து இரண்டாம் இயலில் விளக்கப்பட்டுள்ளது.

இவரது இக்கருத்து பொருண்மை மாற்றம் மற்றும் பொருண்மை நீட்சி குறித்த இவ்வாய்வில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் ஒரு சொல்லைப் பல்பொருளொருமொழியாக மாற்றும். பொருண்மை நீட்சியும் பல்பொருள் ஒருமொழியமும் புஸ்தெஜொவிஸ்கியின் (Pustejovsky, 1995) ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையில் ஆயப்பட்டு விளக்கங்கள் தரப்படுள்ளது.

தமிழ் மொழியின் வினைகளின் பொருண்மை மாற்றம் மற்றும் பொருண்மை நீட்சி பற்றிய விரிவான ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாய்வேடு இத்தேவையைப் பூர்த்திசெய்யும். மேலும் தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றம், பொருண்மை நீட்சி, ஒருபொருள்பன்மொழியம் இவற்றிற்குக் காரணமான உருவக நீட்சி, ஆகுபெயர் நீட்சி என்பன விரிவாக ஆயப்படும் போது பொருண்மை மாற்றத்தின் மற்றும் பொருண்மை நீட்சியின் ஒரு வகைப்பாட்டியல் கிடைக்கும்.

வினைகளின் பொருண்மை நீட்சி மற்றும் பொருண்மை மாற்றங்களின் பொதுத்தன்மை, பொதுமையான போக்கு, உலகப்பொதுத்தன்மை, ஊகிக்க இயலும் அல்லது எதிர்பார்க்க இயலும் தன்மை என்பன நமது கருத்தாடல் செயல்பாட்டை எளிதாக்குகின்றது. மேலும் புதிய மொழியில் வினைகளைக் கையாளுகையில் வினைகளின் பொருண்மை மாற்றம் மற்றும் பொருண்மை நீட்சி குறித்த நமது அறிவு மிகப் பயனுள்ளதாக அமையும். இத்தகைய அறிவு தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வரப்பிரசாதமாய் இருக்கும்.

பொருண்ம மாற்றம் மற்றும் பொருண்மை நீட்சி குறித்த விதிகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு வினைக்கும் பக்கக் கணக்கில் நீண்டுகொண்டிருக்கும் அர்த்தங்களின்

பட்டியலைக் கட்டுப்படுத்த இயலும். புஸ்தொஜோவிஸ்கியின் (Pustejovsky, 1995) ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு இதற்கு வழிவகுக்கும்.

மொழிபெயர்ப்பாளர்களுக்கு, குறிப்பாக இயந்திரத்தைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பல்பொருளொருமொழியம் குறிந்த விளக்கங்களும் விதிகளும் சொற்பொருண்மை மயக்கங்களை நேரிடுவதற்கு உறுதுணையாக அமையும்.

இவ்வாய்வு மேற்சொன்ன கோட்பாடுகளை உட்படுத்தி செய்யப்பட்டுள்ளது. முதலாவதாகப் புலனறிவு (cognition) அடிப்படையில் வினைகளின் பொருண்மை மாற்றங்கள் ஆயப்பட்டு அதற்கான புலனறிவு மொழியியல் (cognitive linguistics) காரணங்களைக் கண்டுகொள்ளும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாவதாக புஸ்தெஜோவிஸ்கியின் (Pustejovsky, 1995) ஆக்கமுறை அகராதிக் (generative lexicon) கோட்பாட்டை அடிப்படையாக எடுத்துக்கொண்டு பொருண்மை நீட்சிக்கான காரணங்களை வினைகள் ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைப் பண்புக்கூறுகள் அடிப்படையில் விளக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விரு முயற்சிகளும் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு பொருண்மை மாற்றம் மற்றும் பொருண்மை நீட்சிக்கான காரணங்கள் யாவும் தெளிவாகக் கண்டுபிடிக்கப்பட்டு இவ்வாய்வேட்டில் தரப்பட்டுள்ளன என்று கூற இயலாது. இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தான் கூற இயலும். இவ்வாய்வு ஒரு முதன்மையான மற்றும் தொடக்கமான ஆய்வாகும். எனவே இதன் கண்டுபிடிப்புகள் ஒரு எல்லைக்கு உட்பட்டே அமைகின்றன. இவை குறித்து மேலும் ஆய்வு செய்யப்படவேண்டும்.

இயல் 2

பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்

2.1 அறிமுகம்

மொழிக்கூற்றுகள் காலப் போக்கில் மாற்றமடைவது தவிர்க்க இயலாத ஒன்றாகும். நம்மைப் பொறுத்தவரையில் எவ்வாறு வினைச் சொற்கள் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் அடைகின்றன என்பது கருத்தத்தக்கதாகும். மொழிக்கூறுகள் சொற்களையும் பிற பெரிய இலக்கணக் கட்டுமானங்களையும் உட்படுத்தும். பொருளடக்கச் சொற்களும் இலக்கணச்சொற்களும் பொருண்மை மாற்றத்திற்கு உள்ளாகும். பொருளடக்கச் சொற்கள் இலக்கணச் சொற்களாக மாறி இலக்கணப் பொருளைத் தரும். எடுத்துக்காட்டாக *இரு*, *போ*, *வா* போன்ற பொருளடக்கச் சொற்கள் வினையாற்றுவினையாகவும் செயற்பாங்கு வினையாகவும் செயற்பாடு செய்யும் படி பொருண்மை மாற்றம் அடைந்துள்ளன.

பொருண்மை மாற்றத்திற்கும் பொருண்மை நீட்சிக்கும் வேறுபாடு பாராட்டுவது கொள்கை அடிப்படையில் தேவையில்லாததாகும்; ஏனென்றால் சில வேளைகளில் பொருண்மை மாற்றத்தின் ஒரு துணை வகையாகப் பொருண்மை நீட்சியைக் கருத இயலும். தேவைக்காக வரலாற்று அடிப்படையில் தொடர்புள்ள ஆனால் அகராதியில் தனிப் பதிவுகளாகத் தரப்பட்ட பொருண்மைகளைப் பொருண்மை மாற்றம் என்றும் ஒரே பதிவில் பட்டியலிடப்பட்டுள்ள பொருண்மைகளைப் பொருண்மை நீட்சி என்றும் கூறவியலும். தேவை கருதி ஒரு சொல்லின் முற்றிலும் வேறுபட்ட பொருண்மைகளை மாற்றங்கள் என்றும் தொடர்புள்ள மற்றும் மாற்றங்களை விளக்க இயலும் அல்லது ஊகிக்கவியலும் பொருண்மைகளை பொருண்மை நீட்சிகள் என்றும் கூறவியலும். இருப்பினும் “முற்றிலும் வேறுபட்ட” மற்றும் “தொடர்புள்ள” என்பவைகளுக்குக் கொள்கை

அடிப்படையில் சரியான விளக்கம் தருவது கடினம். எனவே இவ்வாய்வில் பொருண்மை மாற்றம் என்பதும் பொருண்மை நீட்சி என்பதும் தேவைகருதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

அகராதி இலக்கணத்தின் துணைநிலைக் கருவியாக மொழி ஆய்வில் முக்கியப் பங்களிப்புச் செய்கின்றது. சாம்ஸ்கியின் இலக்கணத்தில் இலக்கண விதிகளுக்குத் துணையாக நிற்பது அகராதிதான். இலக்கணம் வாக்கியங்களின் கட்டமைப்பைத் தரும்போது அகராதி அவ்விலக்கணத்தால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பிற்கு உருவம் அல்லது வடிவம் கொடுக்கத் தேவையான சொற்களைத் தருகின்றன. இத்தகைய அகராதி, சொற்களை வரிசைப்படுத்தி அர்தங்களைப் பட்டியலிடும் அகராதியாக அமையாமல் தொடரமைப்புகளை வருவரைவு செய்யும்படியாகவும் தொடரியல் செய்திகளை உள்ளடக்கிதாகவும் அமையும் படி எதிர்பார்க்கப்படுகின்றன.

2.2 சொற்பொருண்மையியல்

பொருண்மையைப் பற்றிப் பேசுகையில் நம் மனதில் உடனடியாக உதிப்பது சொல். சொல்லுக்குப் பொருண்மை இருக்கிறது என்று பலரும் கருதுகின்றனர். இதனால் அகராதிகளின் உருவாக்கம் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. மொழியியலார் ஒலியனியல் தவிர மொழியின் பிற மட்டங்களான உருபன், சொல், தொடர் மற்றும் வாக்கியம் போன்ற எல்லா மட்டங்களிலும் பொருண்மை வெளிப்படுவதாகக் கொள்கின்றனர். ஒரு வாக்கியத்தில் வரும் சொற்களின் பொருண்மைகளை வரிசையாக இணைத்துப் பெறுவதல்ல வாக்கியப் பொருண்மை. சொற்களின் பொருண்மை வாக்கிய நிலையில் வெளிப்பட வாக்கியத்தில் வரும் சொற்களுக்கு இடையே உள்ள உறவுகள் கருத்தில் கொள்ளப்படவேண்டும். சுருக்கமாக வாக்கியப் பொருண்மை வாக்கியத்தில் வரும் சொற்களின் தொடர் உறவு (syntagmatic relation) மற்றும் அடுக்குறவு (paradigmatic relation) அடிப்படையில் வெளிப்படும். பின்வரும் எடுத்துக்காட்டை எடுத்துக்கொள்வோம்.

(1) இராமன் பாம்பைக் கொன்றான்.

↓ ↓ ↓

எழுவாய் செயப்படுபொருள் பயனிலை

↓ ↓ ↓

கொல்பவர் கொல்லப்படுவது செயல்

இவ்வாக்கியத்தில் *இராமன்* என்பதற்கும் *கொல்* என்ற வினைக்கும் உள்ள உறவு எழுவாய் உறவாகும். *பாம்பு* என்பதற்கும் *கொல்* என்பதற்கும் உள்ள உறவு செயப்படுபொருள் உறவாகும். இராமன் கொல்பவன்; *பாம்பு* கொல்லப்படுவது. வாக்கியத்தில் வரும் சொற்களுக்கிடையிலான இத்தகைய உறவு தொடர் உறவு எனப்படும். *இராமன்* என்பதை *அவன், பையன், சிறுமி, மனிதன்* என்ற சொற்களால் இடம் பெயர்க்கலாம். *பாம்பு* என்பதை *பூனை, நாய், விலங்கு* என்ற சொற்களால் இடம் பெயர்க்கலாம். *கொல்* என்பதை *அடி, உதை, மிதி* என்ற சொற்களால் இடம் பெயர்க்கலாம். இவ்வாறு இடம் பெயர்க்கவியலும் சொற்களுக்கு இடையே உள்ள உறவு அடுக்கு உறவு எனப்படும். இவ்வாறு ஒரு வாக்கியத்தின் பொருள் அதில் வரும் சொற்களின் தொடர் உறவு மற்றும் அடுக்கு உறவு இவற்றால் பெறப்படும். இத்தகைய ஓர் அணுகுமுறை சொற்பொருண்மையியல் (lexical semantics) எனப்படும்.

2.2.1.சொற்பொருண்மையின் இயல்பு

பொருண்மையின் வரையறை விளக்க அறிமுகத்தில் சொற்களின் பொருண்மைகள் குறித்துக் கூடுதலாகப் பேசப்படுவது இயல்பு. ஆனால் வடிவவாத அடிப்படையிலான விளக்கத்தில் சொற்களின் பொருண்மை ஆயப்படுவதில்லை அல்லது அவற்றின் சட்டகமாகச் சுருக்கப்படும். இருப்பினும் மொழியியல் கண்ணோட்டம் இல்லாதவர் பொருண்மையைத் தனித்தனிச் சொற்களுடன் தொடர்புபடுத்தும் உள்ளுணர்வு இருக்கின்றது. இம்மாதிரியான உள்ளுணர்வு பொருண்மையின் நோக்கை மிகக் குறைத்து மதிப்பிடுகின்றது. அது முழுவதும் தவறில்லை என்றாலும் பொருண்மையின் முகவுரை அதை ஒரு நேர்த்தியான வடிவவாதத்தில் அடக்க இயலாது என்ற காரணத்தால் சொற்பொருளின் கலவைத்தன்மையை விளக்கத் தவறக்கூடாது.

2.2.1.1. சொல் என்றால் என்ன?

இலக்கண அலகான சொல்லின் தன்மையைப் பற்றி ஏராளமான வாதங்கள் இருக்கின்றன. அவற்றில் பல நம் கவனத்திற்கு ஏற்புடையதல்ல. நாம் எதைப்பற்றிப் பேசுகின்றோமோ அதைப்பற்றிச் சில கருத்துகள் இருப்பது அவசியம். இக்கருத்துச்சாயல் சரியான வரையறை விளக்கத்தைத் தடை செய்கின்றது. நல்ல அணுகுமுறை மூலமுன்மாதிரி (prototype) அணுகுமுறையாகும். மரபு அடிப்படையில் ஒரு குறைந்த வரிசை மாற இயலும் அலகு என்று பண்பாக்கம் செய்வது நமக்குப் பயனுள்ளதாக அமையும். மூலமுன்மாதிரி சொல்லுக்கு இரு பண்புக்கூறுகளை அடை செய்கின்றது:

1. இதை வாக்கித்தில் அங்கும் இங்கும் நகர்த்தலாம் அல்லது குறைந்தது பிற உறுப்புகளுடன் தொடர்புடைய அதன் இடத்தைச் சில புதிய விவரங்களை இடையில் சேர்த்து மாற்றலாம்.

2. அதை இடையூறு செய்யலாம் அல்லது அதன் பாகங்களை வரிசை மாற்றம் செய்யலாம்.

வாக்கியத்தில் மாற்றங்களைச் செய்கையில் நாம் சொற்களை அமைப்பு அடிப்படையில் ஒரு முழுமையாகக் கருதப்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

(2) அ. மக்கள் தேசியமயமாக்கலைக் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

ஆ. தேசியமயமாக்கலை மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

இ. கடுமையாக மக்கள் தேசியமயமாக்கலை எதிர்க்கிறார்கள்.

புதிய விவரங்களைப் பின்வருமாறு இடையில் சொருகலாம்.

(3) நம் நாட்டு மக்கள் முழுமையான தேசியமயமாக்கலை மிகக் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

இடைச்செருகல் இடங்கள் சொற்களுக்கு இடையில் வருவதைக் கவனிக்கவும். சொற்கள் எழுதுகையில் இடம் விட்டு எழுதப்படுகின்றன. ஆனால் பேசுகையில் நிசப்தத்தால் பிரிக்கப்படுவதில்லை. அவைகளுக்குத் தனிப்பட்ட உள்ளமைப்பு உண்டு. மூலமுன்மாதிரியில் (Prototypically) ஒன்றுக்கும் மேற்பட்ட சொல் வேர்கள் இல்லை.

எ.கா

(4) அநியாயம், இனிமை, வேகம்-ஆக, அழகு-ஆன, முன்-நாள், நடந்தான், படித்தல்

சில சொற்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட சொல் வேர்கள் இருப்பது போல் தோன்றுகின்றன.

எ.கா

(5) வண்ணத்துப்பூச்சி, கரும்பலகை.

இவை முன்மாதிரியானவை அல்ல; பெரும்பாலானவற்றில் வேர்கள் போன்று தோற்றமளிப்பவை முழுவதும் பொருண்மை அடிப்படையில் தனிப்பட்டவை அல்ல; ஒருங்கிணைந்த வேர் (fused root) ஆகும். பிற சொற்களில் சொல் வேர்களே இல்லை; இவை இலக்கணச் சொற்கள் என்று அழைக்கப்படும்; எ.கா. *அந்த, மற்றும், அல்லது, உடைய.*

இந்த இடத்தில் நாம் சொல் என்று குறிப்பிடுவதை ஓரளவுக்குத் துல்லியமாகக் கூறவேண்டும். ஒரு பொருளில் *நட, நடந்தான், நடக்கிறான், நடப்பான்* என்பன வேறுபட்ட சொற்கள். மற்றொரு பொருளில் அவை ஒரு சொல்லின் (*நட* என்பதன்) வேறுபட்ட வடிவுகள் ஆகும். மாறாக *நட* என்பதும் *நடப்பு* என்பதும் இரு பொருளிலும் வேறுபட்ட சொற்கள். ஆனால் *படி* (step) என்பதும் *படி* (a measure) என்பதும் ஒரே வடிவில் உள்ள சொற்கள்; அவைகளுக்குத் தனித்தனியான பதிவுகள் தரப்படுவதை நாம் எதிர்பார்ப்போம்; எனவே அவை இரண்டாவது பொருளில் வேறுபட்ட சொற்களாகும். சொல் வடிவுகளுக்கும் (word forms) சொல்லன்களுக்கும் (lexemes) வேறுபாடு பாராட்ட வேண்டும். சொல் வடிவுகள் அவற்றின் ஒலியன் வடிவாலோ எழுத்து வடிவாலோ தனிப்பட்டவை. சொல்லன்களை வேர்கள் மற்றும்/அல்லது அதற்கு மேற்பட்ட வடிவங்கள் ஒன்றாகக் குழுமம் செய்யப்பட்டவையாகக் கருதலாம். எனவே *ஓடு, ஓடினான்,*

ஓடுகிறான், ஓடுவான் என்பன *ஓடு* என்ற சொல்லனைச் சார்ந்த வடிவங்களாகும். *நட, நடந்தான், நடக்கிறான், நடப்பான்* என்பன *நட* என்ற சொல்லனைச் சார்ந்த வடிவுகளாகும். *மதித்தான், மதிக்கிறான், மதிப்பான்,* என்பன *மதி* என்ற சொல்லனைச் சாரும். *அவமதி, அவமதித்தான், அவமதிக்கிறான், அவமதிப்பான்* என்பன முதல் குழுமத்தின் வேரைக் (*மதி*) கொண்டிருந்தாலும் வேறுபட்ட சொல்லனைச் சாரும் (அவமதி என்றச் சொல்லைனைச் சாரும்). *அவமதி* என்பது *மதி* என்ற சொல்லனிடமிருந்து *அவ* என்ற சொல்லாக்க ஒட்டைக் கொண்டிருப்பதால் வேறுபட்டதாகக் கருதப்படும்.

2.2.1.2. சொற்பொருண்மையும் இலக்கணப்பொருண்மையும்

சொற்பொருண்மைக்கும் இலக்கணப்பொருண்மைக்கும் பெரும்பாலும் வேறுபாடு பாராட்டப்படும். எல்லா இரண்டாகப்பிரித்தலிலும் ஆபத்து உண்டு. சொல்லின் தன்மை, இலக்கணத்தன்மை என்பனவற்றில் தொடர்ந்து வேறுபடுகின்ற அளவுகோல் உண்டு என்பதை மனதில் கொண்டால் இந்த இரண்டாகப்பிரித்தல் ஆபத்தானதல்ல. பொருண்மையைக் கொண்டிருக்கும் அலகுகளின் வகை அடிப்படையில் இந்த வேறுபாட்டை வெளிப்படுத்துவது வசதியான வழியாகும். நாம் இலக்கண அலகுளை மூடிய குழும அலகுகள் (closed set items) மற்றும் திறந்த குழும அலகுகள் (open set items) என்று பகுக்கலாம். மூடிய குழும அலகளின் எடுத்துக்காட்டுகள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்:

- இவைச் சிறிய பதிலீட்டுக் குழுமங்களைச் (substitution sets) சார்ந்திருக்கும்.
- இவற்றின் முக்கியமான செயல்பாடு வாக்கியங்களின் இலக்கண அமைப்பை வெளிப்படுத்துவதாகும்.
- இவை ஒத்தறி அடிப்படையில் மிகக் குறைவாக மாறும்; ஒரு தனிப்பட்ட பேசுபவர் அதன் இழப்பையோ ஈட்டத்தையோ அவர் வாழ்நாளில்

கண்டுகொள்வது அரிது. அதாவது ஒரு குறிப்பிட்ட மூடிய குழும இலக்கண வகைப்பாட்டில் அலகுகளின் பட்டியல் நிலையானது (fixed).

இதைப் பின்வரும் பண்புகளைக் கொண்ட திறந்த குழும அலகுகளுடன் ஒப்பிட்டு வேறுபடுத்தலாம்:

• இவை ஒத்தறி அடிப்படையில் பெரிய பதிலீட்டுக் குழுமங்களைச் சாரும்.

• ஒத்தறி அடிப்படையில் பதிலீட்டு வகுப்புகளின் உறுப்பினர்நிலையில் (உறுப்புரிமையில்) விரைவான புரள்வு இருக்கின்றது; ஒரு தனிப்பட்ட பேசுபவர் அவர் வாழ்நாளில் பல இழப்புகளையும் ஈட்டங்களையும் எதிர்கொள்வது சாத்தியமாகும்.

• அவற்றின் முக்கியச் செயல்பாடு ஒரு பொருண்மையைச் சுமப்பதாகும்.

மூடிய மற்றும் திறந்த குழும அளகுகள் இரண்டும் பொருண்மையைச் சுமக்கின்றன. அவை முன்மாதிரியாகச் சுமக்கின்ற பொருண்மைகளின் பண்புகளில் வேறுபாடுகள் இருக்கின்றன என்பது அவற்றின் வேறுபட்ட செயல்பாட்டைப் பொருள்படுத்துகின்றன. மூடிய குழும அலகுகள் இலக்கண அலகுகளாகச் சரியாகச் செயலாற்ற வேர்களின் அகன்ற எல்லைப் பரப்புடன் எந்த ஒழுங்கின்மையும் இல்லாமல் இணையும். இந்தச் சாத்தியத்திற்காக அவற்றிற்கு நெகிழ்வான பொருள் இருக்கும். எளிதில் முரண்பாடுகள் உருவாகாதபடி போதுமான அளவு வலிமை குறைக்கப்படவேண்டும். அடிக்கடி நிகழும் வேறுபாட்டைக் குறிப்பீடு செய்யவேண்டும். எனவே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் போன்ற எந்த வினைக் கருத்துச் சாயலுடனும் இணைந்து வரும் பொருண்மைகளும் மூலமுன்மாதிரி அடிப்படையில் இலக்கணப் பொருண்மைகளாகும். மாறாக அடிக்கடி நிகழ்வுறுகின்ற பொருண்மைகளோ அகன்ற இணைந்த வருகைச் சாத்தியங்களோ தேவை இல்லாமையால் ஒரு திறந்த குழும அலகு சுமக்கும் பொருண்மையின் குறிப்பிட்ட தன்மைக்கோ வளமைக்கோ எல்லை இல்லை. எனவே திறந்த குழும அலகுகள் கூற்றுகளின் பொருண்மை உள்ளடக்கத்தின் சுமையை

முன்மாதிரியாகச் சுமக்கின்றது. அவற்றின் பொருண்மையின் வளமை மற்றும் அவற்றின் எல்லையற்ற எண்ணிக்கையின் காரணமாக அவை கலவை நிலை அடுக்குறவு மற்றும் உறுப்பமைவு உறவு அமைப்புகளில் பங்கெடுக்கின்றன.

பொருளடக்கச் சொற்கள் (content words) (அடிப்படையான பெயர்கள், வினைகள், பெயரடைகள், மற்றும் வினையடைகள்) மூலமுன்மாதிரியாக ஒரு திறந்த குழும (பொதுவாக வேர் உருபன் என்று அழைக்கப்படும்) உருபனைக் கொண்டிருக்கும் மற்றும் அவை ஒன்றோ அல்லது அதற்கு மேலோ மூடிய குழும அலகுகளை ஒட்டு வடிவில் கொண்டிருக்கும். பொருளடக்கச் சொற்களின் பொருண்மைகளை ஆய்வது ஏறக்குறைய சொற்பொருண்மை இயலாகும்; மற்றும் திறந்த குழும அலகுகள் செய்கின்ற பங்களிப்புடன் முக்கியமாகத் தொடர்புகொண்டுள்ளது. இலக்கணப் பொருண்மையில் மூடிய குழும அலகுகளின் பொருண்மையில் கவனத்தைச் செலுத்துகின்றது. இருப்பினும் இலக்கணப்பொருண்மைக்கும் சொற்பொருண்மையையும் கண்டிப்பான வேறுபாடு காண்பது சாத்தியமானதல்ல; ஏனென்றால் இவ்விரு இனங்களும் கலவைத்தன்மையான வழிகளில் ஊடாட்டம் செய்கின்றன.

2.2.1.3. சொற்பொருண்மையும் வாக்கியப் பொருண்மையும்

பொதுவாகச் சொற்பொருண்மைகள் தனிநிலை அடிப்படையில் கருத்துப்பரிமாற இயலும் பொருண்மை அலகுகளின் வகை அல்ல. ஒரு சொல் தானாக எதையும் சொல்வதில்லை. பிற பொருண்மை உறுப்புகள் உட்படையாக இருப்பது வரை ஒரு முழு எண்ணத்தையும் கூறுவதில்லை. அப்பயன்பாட்டிற்குக் கூடுதல் கலவைத் தன்மையான குறைந்தது தேற்றக்கூற்றுகளின் (proposition) கலவை நிலை உள்ள (சொற்களால் உருவாக்கப்பட்ட) பொருண்மை அலகுகள் தேவை. சொற்கள் (அடிப்படை நிலையில் உருபன்கள்) இக்கூடுதல் கலவை அமைப்புகளின் உருவாக்கும் அலகாக மாறுகின்றன.

2.2.1.4. சாத்தியமான சொற்பொருண்மைக் கருத்துச்சாயல்

சொற்களுக்குச் சாத்தியமான பொருண்மைகளின் மேல் எந்தக் கட்டுப்பாடும் இருக்கின்றதா என்ற கேள்வியை எழுப்புவது நன்மை பயக்கும். இதை இரண்டு நிலைகளில் அணுகலாம். ஏதாவது உலகளாவிய கட்டுப்பாடுகள் இருக்கின்றதா என்று கேட்கலாம். பின்னர் நாம் குறிப்பிட்ட மொழிக் கட்டுப்பாடுகளின் இருப்பைக் கேட்கலாம். முதலாவது கேள்வியை எடுத்துக்கொள்வோம். சொல்லின் பொருண்மையாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ள இயலாத ஏதாவது இருக்கின்றதா? சொற்களின் கூட்டிணைப்பால் வெளிப்படுத்தப்பட இயலும் கருத்துச்சாயல்களுடன் நாம் கட்டுப்படுத்திக் கொண்டால் நல்லது. இல்லாவிட்டால் நாம் ஆழத்தில் மூழ்கிவிடுவோம். ஒருவகைப்பட்ட எண்ணத்தை நாம் விரைவாகத் தீர்வு கண்டுவிடலாம். எடுத்துக்காட்டாக 'ஒன்றை விரைவாகச் செய்யும்போது வெயில் அடிக்கும் காலையில் மேற்குத் திசையைப் பார்ப்பது' என்ற சொற்பொருண்மையைத் தருகிற மொழி இருக்க இயலாது என்று எண்ணலாம். இப்படி ஒரு சொல்லைக் கண்டால் நாம் பேரதிசயம் கொள்வோம். இது கோட்பாடு அடிப்படையில் சாத்தியமானதல்ல. அதற்குக் குறைந்த பயன்பாடு இருக்கலாம் என்ற காரணத்தால், மொழிகளுக்குக் குறைந்தது சொற்கள் பயன்படுத்தப்படுகின்ற பண்பாட்டில் அவை சுமக்கும் பொருண்மைகள் கருத்துப்பரிமாற்றம் செய்யப்படவேண்டும் என்ற காரணத்தால் சொற்கள் இருக்கும். (பண்பாட்டின் வளர்ச்சி சொற்களைப் பயன்படுத்தாது விட்டுவிடலாம். இருப்பினும் சொற்கள் ஏதாவது நிலையில் சாத்தியமான பயன்பாடு என்ற அடிப்படையில் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.) இதன் பொருள் என்னவென்றால் ஏதாவது பண்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துச் சாயலுக்குப் பயன்பாடு இருந்தால், அதை வெளிப்படுத்தச் சொற்கள் இருப்பது வியக்கத்தக்கதல்ல. எடுத்துக்காட்டாக, மேற்சொன்ன கேள்விக்கு உரியதில் சொல் தண்டனைக்கு உரிய சூரிய கடவுளை அவமாரியதை செய்வதன் ஒருவகையைக் குறிப்பிடலாம். நாம் நமக்குப் பழக்கமில்லாத மத நம்பிக்கைகளின் சாத்தியத்தை எடுத்துக்கொண்டால் இவ்வகையில் படும்

சாத்தியமில்லாத பொருண்மைகளின் நோக்கம் எல்லை இல்லாதது. நாம் வேறு ஒரு வகை விஷயத்தை எடுத்துக்கொள்வோம். பின்வரும் வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம்:

(6) அந்த ஆள் மதுபானத்தை மெதுவாகக் குடிக்கிறான்.

மெதுவாகக் குடி என்ற கருத்துச் சாயலை அகராதியாக்கம் செய்லாம் (அதாவது ஒரு சொல்லால் வெளிப்படுத்தலாம்). *உறிஞ்சு* என்பது *குடி* என்பதுடன் முறை வினையடைக் கூறை சேர்ந்து வெளிப்படுத்தும். இதுபோல் *மதுபானத்தைக் குடி* என்பதையும் அகராதி ஆக்கம் செய்ய இயலாது எனக் கூற இயலாது. ஏனென்றால் *குடி* என்பதன் ஒரு பொருள் 'மதுபானம் குடி' என்பதும் ஆகும்.

(7) அவன் குடிப்பதில்லை. கொக்கக்கோலாதான் குடிப்பான்.

இந்தச் சாத்தியமான சொற்பொருண்மைக்கு வேறுபாடாக *அந்த ஆள் குடித்தான்* அல்லது *மதுபானத்தைக் குடித்தான்* என்பதை எடுத்துக்கொள்வோம். நாம் முடியவே முடியாது என்ற எல்லையில் இல்லாமல் சாத்தியம் இல்லை என்ற எல்லையில் இருக்கின்றோம். நாம் *மிக இனிப்பான காப்பி* என்பதை எடுத்துக்கொள்வோம். *இனிப்பான காப்பி* என்பதற்கோ *மிக இனிப்பான* என்பதற்கோ *மிக இனிப்பான காப்பி* என்பதற்கோ தனிநிலைச் சொற்பொருள் இருக்கவேண்டும். மிக ... காப்பி என்பதற்குத் தனிநிலைச் சொற்பொருளை உருவாக்க இயலாது. சாத்தியமானவற்றிற்கும் சாத்தியமில்லாதவற்றிற்கும் இடையிலான வேற்றுமை என்ன என்ற கேள்வியின் விடைக்கு இரண்டு பாகங்கள் இருப்பதாகத் தோன்றுகின்றது. முதலாவது சொற்பொருள் எழுவாய்-பயனிலை வேறுபாட்டை அங்குமிங்குமாகக் கால்வைக்க அனுமதிக்கவில்லை. இரண்டாவது பொருண்மைச் சார்பால் அயலான வழியில் சாத்தியமான சொற்பொருண்மைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. முதலாவதாகப் பொருண்மை கூட்டிணைப்பின் உட்கூறுகளைச் சார்பான உட்கூறுகள் (dependent components) மற்றும் சார்பல்லாத சுதந்திரமான உட்கூறுகள் (independent components) என்று வேறுபடுத்துவது தேவையாகும். சுதந்திரமான உட்கூறுகள் வெளி அலகுகளுடன் சேர்வதைக்

கட்டுப்படுத்துகின்றன. *மிகப்பெரிய தண்ணீர்* என்பதன் இயல்பற்ற தன்மைக்குப் *பெரிய* என்பதற்கும் *தண்ணீர்* என்பதற்கும் இடையே உள்ள பொருண்மை இணக்கமின்மையைக் காரணமாகக் கூறலாம். *மிக* என்பதற்கும் தண்ணீர் என்பதற்கும் இடையே இயற்கையான பொருண்மை முரண்பாடு இல்லை. *மிதச் சூடான தண்ணீர்* என்பது இயல்பான தொடராகும். இதே காரணத்தால் *மிதச் சூடான பால்* என்பதில் *பால்* சுதந்திரமான அலகாக வருகின்றது; *மிதச் சூடான பாலைக் குடி* என்பதில் *குடி* என்பது சுதந்திரமான அலகாக வருகின்றது. இந்த அறிவைப் பின்பற்றி நாம் பொருண்மை சார்பின் சங்கிலிகளை நிறுவலாம். எடுத்துக்காட்டாக *மிக அழகான பெண்* என்பதற்கும் *மிதச் சூடான பாலைக் குடி* என்பதற்கும் சங்கிலிகள் முறையே பின்வருமாறு அமையும்:

(8) அ. மிக →அழகான → பெண்

ஆ. மிதச்→சூடான → பால்

குடி ஒரு சொல்லின் பொருண்மையை உருவாக்கும் அலகுகள் தொடர்ச்சியான சார்புச் சங்கிலியை உருவாக்கும். இதன் பொருள் என்னவென்றால் அலகுகளுக்கு இடையே சார்புத் தொடர்பு இருக்க வேண்டும் என்பதாகும். இது "மதுபானம் மெதுவாக" என்பதைச் சாத்தியமான சொற்பொருளாக வருவதை அனுமதிக்காது. ஏனென்றால் *மதுபானம் மெதுவாக் குடி* என்பதில் *மதுபானம்* என்பதற்கும் *மெதுவாக* என்பதற்கும் இடையே சார்பு இல்லை. இரண்டாவது, சங்கிலியில் சொல்லுக்கு வெளியே வரும் அலகால் நிரப்பத்தக்க இடைவெளி இருக்கலாகாது. இது *சூடான* என்ற வெளி அலகால் நிரப்பத்தக்க மிக…பால் என்பதை அனுமதிக்காது. விவாதத்திற்குரிய கேள்வியை அணுகும் மற்றொரு அணுகுமுறை நீட்சிப் பார்வையை எடுத்துக்கொண்டு 'சாத்தியமான பெயரிடத்தக்கன' என்பதன் பண்புகள் என்ன என்று கேட்பது. இந்தக் கேள்விக்கு முழுவதுமான விடை பெயரித்தகுந்த பொருட்கள் (objects), நிகழ்வுகள் (events), நிலைகள் (states) போன்றவற்றைப் பற்றிக் கூறுவது ஆகும். தற்போதைய விவாதம் புல்மனைப் (Pulman,

1983) பின்பற்றி இவற்றில் முதலாவதாகப் பேசப்படும். பொதுவாகப் பெயரிடத் தகுந்தவைகள் இயற்பெயர்கள் எடுக்கும் ஆற்றலால் மட்டுமல்லாமல் ஒருமை, தொகைப்பெயரல்லா எண்ணுப்பெயர்களால் குறிப்பிட இயலும் ஆற்றலாலும் மொழியியல் அடிப்படையில் வேறுபடுத்தப்படுகின்றன.

நாம் பௌதிகப்பொருள்கள் என்ற பெயரிடத்தகுந்த குறிப்பிட்ட வகையைக் குறிப்பிட்டு எது பெயரிடத்தகுந்தது என்று கூறுவதன் வாதங்களின் வகையை எடுத்துக்காட்டுவோம். பௌதிகப்பொருள்களின் கருத்துரு பார்த்து உணர்தல் (perceivability), இடம் மற்றும் காலம் இவற்றின் ஒத்தறித் தொடர்ச்சி (relative continuity) மற்றும் சூழலிருந்து பிரிப்பதற்கான ஆற்றல் (potential detachability) போன்ற கருத்துச் சாயல்களை உட்படுத்துவதாகத் தெரிகின்றது. இருப்பினும் இந்த அளவீட்டால் எல்லாப் பௌதிகப் பொருள்களும் இயற்கையாகப் பெயரிடத் தகுந்தவை அல்ல. சாம்ஸ்கியின் சில மேற்கோள்கள் இங்குப் பொருத்தமானவையாகும்.

- ‘பௌதிகப்பொருள்’ என்ற மிக ஆதாரமான கருத்துச் சாயல் மிகக் கலவைத் தன்மை உடையதாய்த் தெரிகின்றது. ஆகாய விமானத்தின் ஓர் இறகு ஒரு பொருளாகும் ஆனால் அதன் இடப்பகுதி அதே அளவுக்குத் தொடர்ச்சியாக இருந்தபோதும் ஒரு பொருள் அல்ல (Chomsky 1976:203).

- நாயின் கால் கறுப்பானது என்பது நான்கு கால்களைக் கொண்டிருக்கும் பொருள் கறுப்பு என்று குறிப்பிடும் அளவுக்கு நாயின் நான்கு கால்களைக் கொண்டிருக்கும் தனியான பொருளைக் குறிப்பிடாமல் *கால்* (limp) போன்ற சொற்கள் வெளிப்படையாக இல்லாமல் இருப்பதற்கு எந்தத் தர்க்க வாதமும் இல்லை. இது போல் *ஒரு பசு ஒரு காலை இழந்து விட்டது* என்பது ‘மந்தைக் (herd) காலை இழந்துவிட்டது’ என்று பொருள்பட *மந்தை* என்ற தொகைப் பெயர் பசுக்களை அதன் பாகங்களாகக் கொண்டிருக்கும் ஒரு தனிப்பொருளைக் குறிப்பிடாமல்

மந்தை (herd) என்ற சொல்லை இயற்கை மொழி கொண்டிருக்காததற்கு முன் காரணம் (a priori reason) இல்லை.

சாம்ஸ்கியின் எடுத்துக்காட்டுகளான LIMB மற்றும் HERD என்பன கூடுதல் சிக்கலானவையும் முரண்படுவதற்கும் உரியன. நாம் புல்மனை ஓரளவுக்குச் சுவீகரிப்பதற்காகப் பெயரிடத் தகுந்த தொகுதிகள் ஆனால் தனித்தனியாகப் பெயரிடத் தகுந்த இருப்புகள் உள்ளவை பின்வருவனவற்றில் ஒன்றையோ அதற்கு மேலோ பண்புக்கூறுகளைக் கொண்டிருக்கும் என்று கூறலாம்.

- தொகுதி ஒத்தறி அடிப்படையில் இட-கால அடிப்படையில் பக்கத்திலிருப்பவை (எ.கா. வேலி, காடு, கிராமம்)
- அது மனிதச் செயலாண்மையின் விளைபொருள் (வேலி, கிராமம், கலை அமைப்பு)
- ஒரு தொகுதியின் உறுப்பினர்கள் அவைகள் தனித்தனியாக நிறைவேற்றாத செயற்பாட்டை ஒன்றாக நிறைவேற்றும் (வேலி).

சாம்ஸ்கியும், புல்மனும் (Chomsky and Pulman) ஒருமைத் தன்மையான சிதறப்பட்ட பொருள்களுக்கும் பொருள்களுக்கும் (singular scattered objects) தொகுதிகளுக்கும் (collectives) இடையில் உள்ள வேறுபாட்டை வற்புறுத்துகின்றார்கள்.

2.2.2. சொற்பொருண்மையியலின் முக்கியச்சிக்கல்கள்

வேறுபட்ட கோட்பாடுகளைக் கொண்ட மொழியியலார்கள் சொற்பொருண்மையியலின் மையச்செயல்பாடு பற்றி வேறுபட்ட விளக்கங்களைத் தருவர்.

2.2.2.1. பொருளடக்கத்தின் விளக்கம்

பொருளடக்கத்தை விளக்குவது என்பது மிகவும் வெளிப்படையான செயல்பாடு: ஒரு சொல் எதைப் பொருள் செய்கின்றது? துரதிருஷ்டவசமாக இந்த நிலையின் பொதுத்தன்மை கோட்பாட்டின் பிடியிலிருந்து தப்புவது கடினம்; எனென்றால் 'ஒரு சொல்லின் பொருண்மை' என்ற கருத்துச்சாயல் ஒத்திசைவானது அல்ல என்று கூறுகின்ற அறிஞர்கள் உள்ளனர்; சொல்லுக்குப் பொருண்மை உண்டு என்று நம்புகிறவர்களுக்கு அதன் விளக்கத்தின் இயல்பு அது எப்படிப்பட்டது என்று நம்பப்படுகின்றது என்பதில் இருக்கும்.

2.2.2.2. சூழல் மாறுபாடு

நாம் எவ்வாறு சொல்லின் பொருண்மையின் கருத்துச்சாயலைப் பண்பாக்கம் செய்தாலும் தனிச்சொல்லின் பொருண்மை, சூழலுக்குச் சூழல் வேறுபடும் என்ற உண்மையைக் கட்டாயமாகச் சந்தித்தாக வேண்டும். இச்சிக்கலை நேரிடுவதற்குப் பல வேறுபட்ட கோட்பாடு சார்ந்த திட்டங்கள் இருக்கின்றன. வேறுபாடுகள் விளக்கப்படவேண்டும். வேறுபாடுகள் கட்டுப்பாடற்றதல்ல. திருப்திகரமான விளக்கத்தின் பகுதி மாறுபாடுகளின் அமைப்பொழுங்குகளை விளக்கும்.

2.2.2.3. அகராதி பொருண்மை உறவுகளும் அமைப்புகளும்

வேறுபட்ட சூழலில் ஒரு தனிச் சொல்லின் பொருண்மையின் தன்மை மற்றும் வருகை முறையில் (nature and distribution) மட்டுமன்றி ஒரே சூழலில் வரும் வேறுபட்ட சொற்களுக்கு இடையேயும் சீரான அமைப்பொழுங்கு இருக்கின்றது. இது சொல் தொகுப்பில் மறுபடி நிகழும் பொருண்மை உறவுகளின் அடிப்படையில் சொற்களின் அமைப்பாக்கம் செய்யப்பட்ட குழுக்களை விளைவிக்கின்றன.

2.2.2.4. சொற்பொருண்மையும் தொடரியல் பண்புகளும்

எந்த அளவுக்கு சொற்களின் தொடரியல் பண்புகள் அவற்றின் பொருண்மையிலிருந்து சுதந்திரமானவை அல்லது கட்டுப்பட்டவை என்பது முக்கிய கேள்வியாகும். இத்தலைப்புப் பற்றி இன்னும் பல வேறுபட்ட பார்வைகள் இருக்கின்றன.

2.2.3. சொற்பொருண்மையியல் அணுகுமுறைகள்

2.2.3.1 ஒருநிலை அணுகுமுறையும் இருநிலை அணுகுமுறையும்

பொருண்மையியலுக்கும் கலைக்களஞ்சிய அறிவுக்கும் (encyclopaedic knowledge) வேறுபாடு செய்யவேண்டுமா என்ற கேள்வி பொருண்மையியலாரைப் பிரிக்கும் முக்கியப் பாகுபாட்டுக் கோட்பாடாகும். இப்பாகுபாட்டை நம்புகின்றவர்கள் ஒலியியல்-ஒலியனியல் பாகுபாட்டுடன் ஒப்புமை காண்கின்றனர். மனித இனம் பேச்சொலிகளின் எல்லையில்லாத வகைகளை உருவாக்கவும் அறிந்து கொள்ளவும் இயலும். ஆனால் இவற்றில் கையில் அடங்குகிற சிறிதளவு பேச்சொலிகள் பொருண்மையை வெளிப்படுத்துவதற்கு வேறுபடுத்திக்காட்டும் செயல்பாடு புரிகின்றன. இதே வழியில் ஆயப்படாத பொருண்மைகளின் வேறுபட்ட வகைகள் எல்லை இல்லாதவை. ஆனால் இவற்றில் எல்லைக்குட்பட்ட எண்ணிக்கையிலானவை தான் உண்மையான மொழி அலகுகள். இவை மொழி ஒழுங்குமுறையின் பிற நோக்குகளுடன் ஒழுங்காக ஊடாடும்.

இருநிலை அணுகுமுறையின்படி பேசுபவர்கள் கொண்டிருக்கின்ற உலகத்தைப் பற்றிய விரிவான அறிவு மொழி அலகுகளின் உடமை அல்ல; மொழிக்கு வெளியிலுள்ள கருத்துருக்களின் உடமை ஆகும். உண்மையில் மொழிப் பொருண்மை அலகுகள் மிகச் சுருங்கிய வகையைச் சாரும் மற்றும் முறைப்படுத்தலுக்கு உட்படுத்தக் கூடியதாகக் கருதப்படும். சில இலக்கண அலகால் பொருண்மை சுமக்கப்படுவதன் காரணத்தாலோ உடன்பாட்டு அமைப்பொழுங்கு அல்லது முக்கியத் தொடரியல் வகைப்பாடுகளின் துணை வகைப்பாடு போன்ற காரணிகளுடன் தொடர்புகொண்டுள்ளதாலோ மொழிப் பொருண்மையைப் புரிந்துகொள்ளப் பரிந்துரைக்கப்பட்ட ஒரு அளவீடு தொடரியலுடன் தொடர்புடையது.

ஒருநிலை அணுகுமுறையில் ஈடுபாடு உடையவர்கள் பொருண்மை அல்லது களஞ்சிய வசம் என்ற ஈரிணையான பொருண்மையின் நோக்குகளைத் தருவதற்கு இடுகுறியற்ற அடிப்படை இல்லை என்ற சாதாரண பரிசோதனைக்கும் நிலைநிற்கும் கருத்தைக் கொள்கின்றனர். பெரும்பாலான புலனறி மொழியியலார் (cognitive linguists) எல்லாப் பொருண்மையும் கருத்துரு அடிப்படையிலானவை என்ற பார்வையை எடுக்கின்றனர். இலக்கணப் பொருண்மைக்கும் சொல்/கலைக்களஞ்சியப் பொருண்மைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை மறுக்க வேண்டியதில்லை. அது ஈரிணையானது மற்றும் முழுவதும் கருத்துருத் தன்மையானது என்பதற்குப் பதிலாகத் தொடர்ச்சியான ஒன்றாகப் பார்க்கலாம்.

2.2.3.2. ஒருபொருண்மை மற்றும் பல்பொருண்மை அணுகுமுறைகள்

ஒரு சொல்லுக்கு எத்தனைப் பொருள்கள் தரவேண்டும் என்பதன் அடிப்படையில் ஒருபொருண்மை அணுகுமுறைக்கும் (monysememic approach) பல்பொருண்மை அணுகுமுறைக்கும் (polysememic approach) இடையில் உள்ள வேறுபாடு விவாதத்திற்கான முக்கியக் கருத்தாகும். *படி* என்பது போன்ற தெளிவானவற்றின் ஒருசொல்போலித் (homonymy) தன்மையைப் பற்றி எந்தக் கருத்து வேற்றுமையும் இல்லை. இதில் ஒன்றிலிருந்து மற்றொன்றை உருவாக்கும் எண்ணத்தகுந்த வழியில்லை. பல்பொருண்மையின் பண்பு தொடர்பான தொடர்புள்ள பொருள்களின் தொகுப்பில் கருத்து வேற்றுமை மையமிட்டுள்ளது. ஒரு மொழியின் அகராதியில் (ஒரு சொல்லுக்கு) எவ்வளவு குறைவாகப் பொருள் செய்ய இயலுமோ அந்த அளவுக்கு வேறுபட்ட அங்கீகாரத்தைத் தரவேண்டும், அவற்றிலிருந்து எவ்வளவு ஆக்க முடியுமோ அவற்றை ஆக்க வேண்டும் என்பது ஒருபொருண்மைப் பார்வையாகும். ஒரு சொல்லின் பொருண்மை ஏதாவது வழியில் மற்றொன்றின் உந்தப்பட்ட நீட்சியாக (motivated extension) இருந்தால், ஒன்று மட்டும் பதிவு செய்யப்பட வேண்டும்; மற்றொன்று சொல்

விதிகளின் (lexical rules) செயல்பாட்டில் விட்டுவிடப்பட வேண்டும். சொல் விதிகள் பொதுவாக ஒன்றுக்கும் மேற்பட்ட நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும்; எனவே அகராதியில் ஒழுங்காக உருப்படுத்தம் செய்யப்பட வேண்டும்.

பல்பொருண்மை அணுகுமுறை சொற்பொருண்மையின் உந்தப்பட்ட நீட்சி அகராதியில் பதிவு செய்யப்பட வேண்டியதில்லை என்ற ஊகத்தை மறுக்கின்றது. இதன் காரணம் என்னவென்றால் சொல் விதிகள் சாத்தியமான பொருண்மையின் நீட்சிகளைக் குறிப்பிடுகின்றது; சில மரபுத்தன்மை பெற்று அகராதியில் உட்படுத்தப்படுகின்றது. அவை புதிய வடிவுகளாக/ஆக்கங்களாகத் தோன்றலாம்; இருப்பினும் இவற்றிற்கும் நிறுவப்பட்டவற்றிற்கும் தெளிவான வேறுபாடு இருக்கின்றது. (கொள்கை அடிப்படையில் உண்மையில் நிறுவுதலின் தொடர்ச்சியான அளவு இருக்கின்றது.) *குடி* என்பதை எடுத்துக்கொள்வோம்; பல சூழல்களில் 'குடித்திருப்பது' என்பதன் பொருள் தெளிவானது; இருப்பினும் வெளிப்படையாக ஒருவர் *குடி* என்பதற்கு குடிக்கத்தக்க எல்லா திரவங்களுக்கும் வேறுபட்ட சொற்பதிவை உருவாக்க விரும்புவதில்லை. இந்த அளவில் ஒற்றைப் பொருண்மையியலார்களும் (monosemist) பல்பொருண்மையியலார்களும் (polysemist) ஒத்துக்கொள்வர். இருப்பினும் *குடி* என்பதற்குக் குறிப்பிட்ட பொருண்மையாகக் குறிப்பிடத்தக்க திரவங்களை உள்ளடக்குதல் சாத்தியமானது. கொள்கை அடிப்படையில் எந்த வகைக் குடிபான வகுப்பும் இவ்வகையில் உள்ளடக்கப்படலாம். தமிழில் மதுபானங்கள் என்பதைப் பின்வருமாறு குறியாக்கம் செய்யலாம்.

(9) ராஜா திரும்பவும் குடிக்கத் தொடங்கிவிட்டான் என்று வருத்தமாக இருக்கின்றது.

கொள்கை அடிப்படையில் மதுபானத்திற்குப் பதில் பழரசங்களுடனும் இது நிகழலாம். தமிழ் அகராதியைப் பொறுத்தவரையில் உண்மை என்னவென்றால் *குடி* என்பதற்கு

இச்சாத்தியங்களில் ஒன்று இருக்கின்றது; ஆனால் மற்றொன்று இல்லை. தற்போது பெரும்பான்மையான அணுகுமுறை ஒருபொருண்மை அணுகுமுறையாகும்.

2.2.3.3 பொருண்மைக்கூறாய்வு (componential analysis of meaing) அணுகுமுறை

சொற்பொருண்மையை அணுகுவதின் மிகப்பழமையான மற்றும் இன்றும் புழக்கத்தில் உள்ள மிகப்பரந்த வழி சொற்பொருண்மையைப் பொருண்மையின் மிகச்சிறிய, மிக அடிப்படையான மாறாத அலகுகளிலிருந்து உருவாக்கப்படுவதாக எண்ணுவதுதான். (பொருண்மையின் அணு அமைப்பிற்கு ஒப்பிடலாம்.) இந்தப் பொருண்மை அணுக்கள் பலவகைகளில் அழைக்கப்படுகின்றன் பொருளன்கள் (sememes), பொருண்மைப் பண்புக்கூறுகள் (semantic components), பொருண்மைக் குறிகள் (semantic markers), பொருண்மை முதன்மைகள் (semantic primes). தற்கால மொழியியலுக்குள் பொருண்மையியலுக்குக் கூறாய்வுத் திட்டத்தின் (componential programme) முதல் மொழிபுக்குக் காரணமானவர் யெல்ம்ஸ்லெவ் (Hjelmselv 1961) என்பவராவார். இவர் கொள்கை அடிப்படையில் மொழிக் குறியின் (linguistic signs) பொருண்மை வசம் ஒலி வசத்தைப் போன்று அமைப்புக் கொள்கைகளைக் காட்ட வேண்டும் என்று நம்பினார். அவருக்கு குறைத்தல் (reduction) என்ற கருத்துச்சாயல் மிக முக்கியமானதாகும். ஒரு மொழியிலுள்ள வேறுபட்ட குறிகளின் நூற்றுக்கணக்கான ஆயிரங்களில் ஒலியன் அமைப்பு (phonological structure) ஒரு சில நூற்றுக்கணக்கில் வரும் பட்டியலிலிருந்து எடுக்கப்பட்ட அசைகளின் கூட்டிணைப்பாகப் பகுப்பாய்வு செய்யலாம். மேலும் இவை ஐம்பதோ அதற்கு மேலோ வரும் பட்டியலைச் சார்ந்த ஒலியன்களிலிருந்து உருவாக்கப்பட்டவையாகக் காட்ட இயலும். இறுதியாக ஒரு டசன் எண்ணிக்கையுள்ள சிறப்புப் பண்புக்கூறுகளை (distinguishing features) ஒலியன் உருவாக்க அலகுகளாகக் (phonological builing blocks) காட்டலாம். இதைப்போல

குறிகளின் பொருண்மை வசம் (meaning side of signs) பகுப்பாய்வு செய்யப்படுகின்ற குறிகளைவிட மிகக்குறைந்த எண்ணிக்கையிலான அளகுகளின் பட்டியலிலிருந்து எடுக்கப்பெற்றவற்றின் கூட்டிணைப்பாகக் குறைக்கப்பட வேண்டும். அவை மொழியின் பொருண்மைகளாகும். எல்லாச் சொற்களின் பொருண்மைகளையும் உருவாக்க இயலும் அடிப்படைச் சொற்களின் குழுமத்தைக் கண்டுபிடிப்பதுதான் அவர் மனத்தில் இருந்ததாகத் தோன்றுகின்றது. எல்மஸ்லெவ் உலகப்பொதுமை பற்றிய கருத்துடையவர்களின் (universalists) பாவனைகளைக் கொண்டிருக்கவில்லை; ஒவ்வொரு மொழியும் தனித்தன்மையானது, அதன் நியதியிலேயே அது ஆயப்படவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அவருடைய கலைச் சொல்லான 'figurae' என்பதும் அருவத்தன்மையானது அல்ல; அவை மொழியிலுள்ள சொற்களின் பொருண்மைகள் ஆகும். எல்மஸ்லெவ் முதல் அமைப்புப் பொருண்மை இயலார் (structural semantist) ஆவார். இந்த அணுகுமுறை ஐரோப்பிய மொழியியலாரால் வளர்க்கப்பட்டது; ஜெர்மன் வகையும் பிரஞ்சு வகையும் இதன் விளைவுகளாகும். அமேரிக்காவில் கூறாய்வு அணுகுமுறை ஐரோப்பிய இயக்கத்திலிருந்து சுதந்திரமாக வளர்ந்தது. இது மானிடவியல் மொழியியலாருக்கு (Anthropologial linguists) இடையில் முதலில் தோன்றியது. உட்புக இயலாத (பகுத்தாய இயலாத) உறவுமுறை ஒழுங்கு முறைகளின் (kinship systems) கலவைத் தன்மையைக் குறைந்த பண்புக்கூறுகளின் குழுமங்களின் கூட்டிணைப்பாகக் குறைப்பதில் பெருமளவில் வெற்றி அடைந்தது.

காட்ஸ் மற்றும் பாடர் (Katz and Fodor 1963) என்பவர்களால் முன்மொழியப்பட்ட ஒரு புதிய விருத்தாந்தம் தொடக்கக் கால சாம்ஸ்கியின் ஆக்கமுறை இலக்கணச் சூழலில் தோன்றியது. இது இதற்குமுன் தோன்றிய எல்லாவற்றையும் விட மிகப் பேராசை உள்ளதாக அமைந்தது. முதலாவது மொழியின் முழுக்கோட்பாட்டின் முழுமை தரும்

பகுதியாக (integral part) அமைந்தது. இரண்டாவது இது உலகப்பொதுமை (universality) மற்றும் உளவியல் உண்மைநிலை (psychological reality) என்பனவற்றை உரிமை கொண்டாடியது. மூன்றாவது, பண்புக்கூறுகள் நடப்பில் இருக்கின்ற சொற்களின் பொருண்மைகளோடு (meanings of existing words) நின்றுவிடாமல் அவை அருவத்தன்மையானதாகவும் கருதப்பட்டது. இந்த அணுகுமுறை முக்கிய ஆக்கமுறை மொழியியலுடன் இணையவில்லை. தற்போதைய ஆக்கமுறையாளர்களுக்குள் முழுமையான பொருண்மைக்கூறாய்வு ஜாகெண்டாப் (Jackendoff, 1987, 1990, 1996) ஆராய்ச்சியில் காணப்படுகின்றது. பொருண்மைக் கூறாய்வின் தீவிரமான மறுவடிவம் வெர்ஸ்பிகாவின் (Wierzbicka, 1996) ஆராய்ச்சியில் காணப்படுகின்றது. இது மிக முதன்மையான (தன்முயற்சியான) அணுகுமுறையாகும்; இது மேற்சொன்ன எந்த அணுகுமுறையின் கிளையும் அல்ல. இது லெப்னிஸ் (Leibniz 1903) போன்றவர்களின் முந்தைய தத்துவ ஆய்வுகளிலிருந்து தூண்டுதலைப் பெறுகின்றது. எல்லாக் கருத்தில் உருவாக்கக்கூடிய பொருண்மைகளையும் வெளிப்படுத்த இயலும் மிக எல்லைக்குட்பட்ட உலகளாவிய பொருண்மை அணுக்களின் குழுமம் இருக்கின்றது என்பது வெர்ஸ்பிகாவின் பார்வைக் கோணமாகும். வெர்ஸ்பிகாவின் முதன்மைகளின் பட்டியல் (inventory of primes) ஆச்சரியப்படத்தக்க அளவு சிறியதாகும் (அவர் பதினொன்றில் தொடங்குகிறார், ஆனால் பட்டியல் ஐம்பதாக நீள்கின்றது.) அவை அருவத்தன்மையானது அல்ல, எனவே காட்ஸ் மற்றும் பார்டரைப் போல் நேரடி உணர்வால் பரிசோதனைக்கு உட்படாதது. அவை பருமைத் தன்மையானது (concrete); எந்த ஆய்வும் மொழி பேசுவோரின் உள்ளுணர்வைத் திருப்தி செய்யவேண்டும்.

2.2.3.4. முழுமை வாதத்தார் அணுகுமுறைகள்

சொல்லின் பொருண்மையைச் சில பயனுள்ள பொருளில் மொழியிலுள்ள பிற சொற்களின் பொருண்மைகளிலிருந்து தனியாக முற்றுநிலையில் குறிப்பிடலாம் என்பது கூறாய்வு இயலாரின் (componentialists) நம்பிக்கையாகும். மொழி தத்துவ இயலாருக்கு இடையில் இது வட்டார பார்வை (localist approach) என்று அறியப்படும். வட்டார வாதத்தாருக்குச் (localist) சூழல் வேறுபாடு சூழல்களுடன் ஊடாட்ட விதிகளால் விளக்க இயலும். இந்தப் பார்வைக்கு எதிரிடையான நிலை முழுமைப் பார்வையாகும் (Holistic view). இதன்படி ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களின் பொருண்மைகளையும் கணக்கில் எடுக்காமல் ஒரு சொல்லின் பொருண்மையை அறிய இயலாது. முழுமை வாதத்திற்குப் (holism) பல மறு வடிவங்கள் இருக்கின்றன. இரண்டு இங்குச் சுருக்கமாகத் தரப்படும்.

2.2.3.4.1. ஹாஸ்

ஹாஸ் (Hass 1962, 1964) என்பவரின் தன்மனப்போக்கான பொருண்மையின் பார்வை விட்ஜென்ஸ்டன் (Wittgenstein) என்பவரின் ஆய்வின் ஒரு நோக்கிலிருந்து ஆக்கப்பட்டதாகும். அவருடைய பொருண்மைப் பயன்பாட்டுக் கோட்பாடு “பொருண்மையைப் பார்க்காதே, பயன்பாட்டைப் பார்” என்ற கருத்தை உள்ளடக்குகின்றது. அதாவது ஒரு வெளிப்பாட்டின் பொருண்மை அதன் பயன்பாடாகும். இது அவ்வளவு பயனுள்ளதல்ல; குறிப்பாகத் தெரிவிப்பதாகும். ஜெ.ஆர்.ஃபிர்த் (J.R.Firth) என்பவரின் கருத்தான “சொற்கள் இணைந்து வரும் சொற்களால் அறியப்படும்” என்பதால் உந்தப்பட்டு ஹாஸ் தன்னுடைய கொள்கைக்குத் தன்வயமான திருத்தம் கொடுத்தார். ஹாஸ் இதற்கு மேலும் சென்றார். ஒரு சொல்லின் பொருண்மை அதன் பொருண்மைக்களமாகும் அதற்கு இரண்டு பரிமாணங்கள் இருக்கின்றன.

1. உறுப்பமைவுப் பரிமாணம் (syntagmatic dimension): இதில் சொல்லின் எல்லாச் சாத்தியமான (இலக்கண அடிப்படையில் நல் உருவாக்கப்பட்ட= grammatically well formed) சூழல்கள் இயல் நிலையில் வரிசை முறையில் அடுக்கப்பட்டுள்ளன.

2. அடுக்குறவு பரிமாணம் (pragmatic dimension): இதில் சொல்லின் சாத்தியமான பதிலீடுகள் (substitutes) இயல் நிலையில் வரிசைமுறையில் அடுக்கப்பட்டுள்ளன.

ஹாஸைப் பொறுத்தவரையில் ஒத்தறி இயல்நிலை (relative normality) முதன்மையானதாகும் (primitive). கொள்கை அடிப்படையில், சூழல் மொழிக்கு வெளியிலுள்ள சூழலையும் (extralinguistic context) உள்ளடக்கும். ஆனால் எல்லாத் தேவையான மொழிக்கு வெளியிலுள்ள சூழலின் நோக்கையும் மொழி அடிப்படையில் குறியாக்கம் செய்ய இயலும் என்ற காரணத்தால் கவனத்தை மொழிச் சூழலுக்குக் (linguistic context) கட்டுப்படுத்திக் கொண்டால் எந்தவிதத் தீங்கும் ஏற்படாது என்று ஹால் வாதிடுகின்றார். ஹாஸ் தெரிந்துகொண்ட அளவில் சொல்லின் பொருண்மைக்களம் அதன் பொருண்மையை உண்டாக்குகின்றது. எனவே ஒவ்வொரு சொல்லும் மற்றொரு சொல்லின் பொருண்மையில் பங்கெடுப்பதைக் கவனிக்கவும். ஹாஸ் இங்கு லெய்ப்னிஸின் (Leibniz) அறுதி அலகால் (monad) உந்தப்பட்டுள்ளார். எனவே சொற்பொருளுக்கும் களஞ்சிய அறிவுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. ஹாஸின் பார்வையில் ஒரு சொல்லின் பொருண்மைக்களம் சொல்லின் பொருண்மையைக் கொண்டிருக்கின்றது. சொல்லின் பொருண்மைக்களம் அதன் பொருண்மையைப் பிரதிபலிக்கின்றது.

2.2.3.4.2 லையான்ஸ்

முழுமைவாதத்தின் இரண்டாவது வகை லையான்ஸால் (Lyons) உருப்படுத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையின் சாராம்சம் பொருண்மைகள் தனித்திருக்கும்

தன்மையானது அல்ல ஒத்தறித் தன்மையானது என்பதாகும். ஒரே ஒழுங்குமுறைக்குள் வேறுபடுத்தலால் உண்டாக்கப்பட்டது என்ற சசூரியன் நம்பிக்கையாகும். ஒரு சொல் அலகின் பொருண்மை அச்சொல் அலகு ஒரு பொருண்மைக்களத்தில் பங்கெடுக்கும் சொல் அலகுகளுடன் வேறுபடும் பொருண்மை உறவுகளின் குழுமத்தால் ஆனது என்று லையான்ஸ் கூறுகின்றார். பொருண்மை உறவுகள் சுதந்திரமாக நிறுவப்பட்ட பொருண்மைகளுக்கு இடையே உள்ள உறவுகள் அல்ல என்று அவர் வற்புறுத்துகின்றார். பொருண்மைகள் எல்லாம் பொருண்மை உறவுகளால் உண்டாக்கப்பட்டது என்று நாம் கூற வேண்டும். எடுத்துக்காட்டாக குதிரை என்பதன் பொருண்மை கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது போல் விளக்கப்படவேண்டும்:

(10)



இந்த ஒழுங்குமுறையில் “ஒரு வகை ஆகும்” (எ.கா. குதிரை:விலங்கு) “ஒரு வகை ஆகாது” (எ.கா. குதிரை:பசு), “பகுதி ஆகும்” (எ.கா. பிடரிமயிர்:குதிரை), “உண்டாக்கும் சப்தம் ஆகும்” (எ.கா. கனை:குதிரை), “இருப்பிடம் ஆகும்” (எ.கா. லாயம்:குதிரை) போன்றன குறிப்பிட்ட வகையில்படும் தொடர்புகள் ஆகும். எடுத்துக்காட்டப்பட்ட சொற்களும் *குதிரை* அல்லாத பிற சொற்களுடன் தொடர்புகொள்வதால், *குதிரை* என்பதன் முழுப்பொருண்மை முழு அகராதியை உள்ளடக்கும் சாத்தியமான உறவுகளின் கலவைத் தன்மையான வலை போன்ற அமைப்பு (net work) ஆகும்.

2.2.3.5. கருத்துருசார் அணுகுமுறைகள்

கருத்துருசார் அணுகுமுறைகள் (Conceptual approaches) ஒருநிலை/தனிநிலை அணுகுமுறைகள் (single-level approaches) ஆகும். இது புலனறி ஒழுங்குமுறையில் ஒரு சொல்லின் பொருண்மையை அணுகும் சாத்தித்தைத் தரும் கருத்துரு அல்லது கருத்துருக்களுளோடு அடையாளம் காணும். புலனறி மொழியியலார்களிடையே கருத்துரு அமைப்பின் மூலமுதல்வகை மாதிரி முக்கியத்துவம் வகிக்கின்றது.

மூலமுதல்வகை அணுகுமுறையின் தொடக்கத்தை விட்ஜென்ஸ்டைனுக்குக் (Wittgenstein 1972) கொண்டுசெல்லலாம். மரபார்ந்த தேவையான மற்றும் போதுமான இயற்கை வகைபாடுகளை அடிப்படையாகக் கொண்ட அரிஸ்டாடில்சார் கருத்துசாயலைச் சவால்விடும் முதல் நபராக இவரைப் பெரும்பாலும் சிறப்பிப்பர். இவர் தமது வாசகர்களை 'விளையாட்டு' என்பதற்குத் தேவையான மற்றும் போதுமான அளவீடுகளைக் கண்டுபிடிக்கச் சொல்லி சவால்விட்டு 'விளையாட்டு' என்பதன் நன்கு அறியப்பட்ட எடுத்துக்காட்டை முன்வைக்கிறார். பின்வரும் வெளிப்படையான எந்தக் கருத்தையும் மிக முக்கியமானது என்று குறிப்பிட இயலாது.

பௌதிகச் செயல்பாட்டை உட்படுத்தும்

வெல்பவர்களையும் தோற்பவர்களையும் கொண்டிருக்கும்

கேளிக்கைக்காக விளையாடப்படுவது

விதிகள் போன்றன உள்ளன.

மேற்சொன்ன எந்த 'விளையாட்டு' என்பதற்கு மட்டும் உள்ளது என்றோ தேவையானது என்றோ கூற இயலாது. விட்ஜென்ஸ்டைன் 'குடும்ப ஒப்புமை' (family resemblance) என்ற கருத்துச்சாயலை முன்மொழிகின்றார்: ஒரு பெரிய குடும்பத்தின் உறுப்பினர்கள்

ஒருவரை ஒருவர் பல வகை வழிகளில் ஒத்திருப்பர்; ஆனால் எல்லோரும் கொண்டிருக்கின்ற ஓர் பண்புக்கூறு இருப்பதில்லை; எந்தப் பண்புக்கூறையும் பங்கிட்டுக்கொள்ளாத எந்த உறுப்பினரும் இருப்பதில்லை; இருப்பினும் ஒவ்வொருவரும் ஒரு ஒப்புமைச் சங்கிலியால் இணைக்கப்பட்டிருப்பர். அரிஸ்டாட்டில்சார் கோட்பாட்டின் வலுவான பிடிப்பை இது முறித்தாலும் இந்தக் கருத்துச்சாயல் பொருண்மையியல் ஆய்வுக்கு அதிக அளவில் பயனுள்ளது அல்ல. விட்ஜென்ஸ்டைன் குடும்ப ஒப்புமை எதைக் கொண்டுள்ளது என்பதைக் குறிப்பிட வில்லை; குறிப்பாக எவ்வாறு அகக் குடுப்ப ஒப்புமைகள் (in-family resemblaces) வெளிக் குடும்ப ஒப்புமைகளிலிருந்து (out-family resemblances) வேறுபடுகின்றது என்பதைக் கூறவில்லை. வேறு விதமாகக் கூறினால் தன்னிச்சையான நிபந்தனைகள் தவிர இவ்வுலகில் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை என்பதைத் தடைசெய்யும் எதுவும் இல்லை.

அரிஸ்டாட்டில்சார் வகைபாடுகள் அல்லாத கருத்துச்சாயல் (non-Aristotelian categories) புலனறிவு உளவியலார்களால் (cognitive psychologists) மேலும் மேம்படுத்தப்பட்டது. குறிப்பாக ரோச்சும் (Rosch (1973, 1978) அவரது துணைப் பணியாளர்களும் இயற்கை வகைப்பாடுகளைக் கையாள மூலமுன்வகைக் கோட்பாடு (prototype theory) என்பதை நிறுவினர். இதன் படி ஒரு வகைபாட்டின் உறுப்பினர்கள் யாவரும் சமமானவர்கள் அல்ல; அவர்கள் எந்த அளவுக்குக் குறிப்பிட்ட வகைப்பட்டைச் சார்ந்தவர்கள் அல்லது வகைப்பாட்டின் பிரதிநிதிகள் என்ற அளவில் வேறுபடுவர். மிகச் சிறந்தவர்கள் மூலவகைப்பாட்டு உறுப்பினர்கள். வகைப்பாடு முக்கியமாக இவற்றைச் சுற்றி உருவாக்கப்படும். பிற எடுத்துக்காட்டுகள் அவை எந்த அளவுக்கு

மூலமுதல்வகையுடன் ஒப்புமை கொண்டுள்ளன என்பதன் அடிப்படையில் அந்த வகைப்பாட்டுடன் சேர்க்கப்படுவோ வகைபாட்டிலிருந்து விலக்கப்படவோ செய்யப்படும்.

சொல்லின் பொருண்மையைக் கருத்துரு அமைப்பில் (conceptual structure) கண்டுகொண்ட மற்றொரு மொழியியலார் ஜாகெண்டாஃப் (Jackendoff (1983, 1990, 1996) ஆவார். புலனறிவு மொழியியலார்களைப் போன்று அவர் இடைப்பட்ட 'மொழியியல் பொருண்மையியல்' என்பதன் தேவையைக் கண்டுகொள்ளவில்லை. இருப்பினும் பெரும்பாலான புலனறி மொழியியலாரைப் போல அல்லாமல் அவர் வலுவான பொருண்மைக்கூறாய்வாளர் (componentialist). அவர் உள்ளுணர்வு அடிப்படையில் புலனால் உணர்கிற உறவுகள் பங்கிடுக்கொள்ளப்பட்ட பொருண்மையியல் கட்டுமானத் தொகுதிகளால் (building blocks) கணக்கிடப்படவேண்டும் என்று நம்புகிறார்.

2.2.3.6. வடிவுசார் அணுகுமுறைகள்

பொருண்மையியலுக்கு வடிவுசார் அணுகுமுறைகள் (formal approaches) கடுமையான வடிவவாதம் (formalism) வழி பொருண்மை பற்றிய உண்மைகளை வெளிப்படுத்த முயலுகின்றது; முன்னுரிமையாக இது தரமான தர்க்கவியலுடன் (standard logic) தொடர்புடையது. இவ்வணுகுமுறையைப் பின்பற்றுவதால் ஏற்படும் நன்மைகளாகத் தெளிவு, கருதுகோளைப் பரிசோதிக்கவியலும் தன்மை, தொடரியலுடன் எளிதில் தொடர்புபடுத்த இயலுவது, இயந்திரத்தைச் செயல்படுத்த இயலுவது என்பவைகளை உட்படுத்தலாம். இந்த அணுகுமுறையை விரும்பாதவர் தொடர்ந்து

வேறுபடும் பொருண்மையியலின் சிறப்பான அம்சங்கள் இருப்பதையும் இதுவரைப் பெறப்பட்ட குறைவான வருணனை விளைவுகளையும் சுட்டிக்காட்டுகின்றனர்

2.3. புலனறி மொழியியல் பார்வையில் பொருண்மை மாற்றம்

சொற்கள் எவ்வாறு தமது பொருண்மையை மாற்றுகின்றன என்பது பற்றிய நமது புரிந்துகொள்ளலை அதிகரிக்கச் சொற்களின் பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் ஆயும் அண்மைக்காலப் புலனறி மொழியியல் ஆய்வுகள் நமக்கு உதவுகின்றன. இவ்வாய்வுகள் குறிப்பாக மூலமுதல்வகைக் கோட்பாடின் (Prototype Theory) அடிப்படையில் (Geeraerts, 1997; Fernandez, 2007) செய்யப்படுகின்றது. புலனறிவு கோட்பாட்டில் பயன்படுத்தப்படும் இந்த மூலமுதல்வகைக் கோட்பாடு அடிப்படையில் சொற்கள் சொல்வகைப்பாடுகளாக வரையறை விளக்கம் செய்யப்படும்; ஒவ்வொன்றும் அதன் எல்லா அர்த்தங்களும் கொண்ட மூலமுதல்வகை அமைப்பைக் கொண்டிருக்கும். சொல்லின் முதன்மையான பொருண்மை (அல்லது மையப் பொருண்மை) அதன் மூலமுதல்வகைசார் பொருண்மை ஆகும்; இது அதன் இயக்க மையமாகப் செயல்படுகின்றது; அதே நேரத்தில் அதன் பிற அர்த்தங்கள் அதன் வெளிவட்டத்தில்/விளிம்பில் காணப்படும். இந்தக் கருத்து அடிப்படையில் விளிம்புப் பொருண்மைகளில் ஒன்று சொல்லின் மூலமுதல்வகைசார் பொருண்மையாக மாறினால் பொருண்மை மாற்றம் நேரும். சிறிது வேறுபட்ட கருத்து அடிப்படையில் மூலமுதல்வகை அமைப்பிலிருந்து மையமாக்கப்பட்ட பொருண்மை நீக்கப்பட்டாலும் பொருண்மை மாற்றம் ஏற்படும். மூலமுதல்வகைக் கோட்பாடு மூளையில் ஒன்றுக்கொன்று ஒழுங்காகத் தொடர்புபடுத்தப்பட்ட வெளிக் கருத்துருக்களின் வகையைக் கவனஈர்ப்பு செய்து பொருண்மை மாற்றம் பற்றிய நமது புரிந்துகொள்ளலை அதிகப்படுத்தியுள்ளது; இவ்வாறு மூலமுதல்வகைக் கோட்பாடு ஏன் ஒரேபோன்ற/ஒப்புமையான மாற்றங்கள் மொழியைக்

கடந்து காணப்படுகின்றது என்பதை விளக்க உதவுகின்றது. எடுத்துக்காட்டாக 'இதயம்' என்பது 'மனம்' என்ற பொருளை உருவாக்கியுள்ளது மற்றும் கிரேக்கம், டானிஷ், அராபிக், இலத்தீன் மற்றும் பல ரொமான்ஸ் மொழிகளில் 'நினைவுகூர்' என்று பொருள்படும் வினைகளின் அடிப்படையாக உதவிபுரிகின்றது; இது COR 'இதயம்/மனம்' என்ற இலத்தீன் வேரினைக் கொண்ட *recorder* 'நினைவுகூர்' என்ற சொல்லையும் உட்படுத்தும்.

மூலமுதல்வகைக் கோட்பாடு ஒரு சொல்வகைப்பாட்டின் பொருண்மை எவ்வாறு மாறுகின்றது என்பதை முழுவதும் விளக்கத் தவறுகின்றது. இதில் சொல் கள ஆய்வு (lexical field study) (cf. Lehrer 1974; Koch 1999b; Rastier 1999) மூலவகைக் கோட்பாட்டால் விளக்கப்படாத இரண்டு முக்கிய கேள்விகளுக்கு விடைதருகின்றது: (1) ஒரு மாற்றத்தை உந்தும்/இயக்கும் தொடக்கத் தூண்டல் என்ன? மற்றும் (2) ஒரு குறிப்பிட்ட பொருண்மையை (அண்மை ஒருபொருள்பன்மொழி) பங்கிடும் மூலமுதல்வகை அமைப்புகளைக் கொண்ட சொற்கள் எந்தப் பலனை மாற்றத்தின்மீது கொண்டிருக்கின்றது?

கார்பெண்டர் (Carpenter 2003) முன்மொழியும் ஆய்வு உருவகம், ஆகுபெயர் போன்ற புலனறி இயக்கமுறைகள் இரண்டோ அதற்கு மேலோ உள்ள சொற்களின் மூலமுதல்வகை அமைப்புகளை மேலுறல் செய்யுமாறு செய்யும் போது மாற்றம் தூண்டப்படும்; எனவே ஒரு குறிப்பிட்ட பொருண்மையைப் பங்கிடும் சொல்லகுகளின் சொற்களங்களை அல்லது குழுமத்தை ஆய்வது கூடுதல் விளைவாக்கமானது என்ற ஊகத்தின் அடிப்படையிலானது. ஒரு சொல் அலகு ஒன்றுக்கு மேற்பட்ட மையமாக்கப்பட்ட பொருண்மையைக் கொண்டிருக்க இயலும் என்பதைக் கவனிப்பது

முக்கியமாகும்; அப்படியானால் அது இரண்டு தனியான கருத்துருக்களைப் பெயரிடுவதற்குப் பயன்படுத்தப்படும் முதன்மைச் சொல் ஆகும்; இவ்வாறு இரண்டு வேறுபட்ட சொற்களங்களில் சிற்பான பங்களிப்பு செய்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒன்றிற்கும் மேற்பட்ட மையமாக்கப்பட்ட பொருண்மைகளைக் கொண்ட சொல் அலகு பொருண்மை மாற்றம் அடைவது சாத்தியமாகும்; ஒரே மூலமுதல்வகைப் பொருண்மையைக் கொண்ட மற்றொரு சொல் இருந்தால் இவைகளில் ஒன்று விளிம்பிற்கு இடமாற்றம் செய்யப்படும். மூலமுதல்வகையின் கோட்பாட்டுடன் சொல்கள ஆய்வை இணைப்பது இந்த கருதுகோளைப் பரிசோதனை செய்யவும் உட்படுத்தப்பட்ட கொள்கைகளையும் செயன்மைகளையும் விளக்கவும் அனுமதிக்கின்றது.

2.4. வரலாற்று மொழியியல் பார்வையில் மொழி மாற்றம்

எல்லா மொழிகளும் காலப்போக்கில் மாற்றத்திற்கு உள்ளாகும். வரலாற்று மொழியியல் மொழி மாற்றத்தின் விவரணையுடனும் விளக்கத்துடனும் சார்புடையது. மொழி மாற்றம் வெளிப்படையானது என்றாலும் ஓரளவுக்கு மர்மமானது என்று கூறலாம்.

இரு முக்கியமான துணைப் பிரச்சனைகள் உள்ளன. முதலாவது, ஏன் மாற்றம் ஏற்படவேண்டும்? இரண்டாவது, ஏன் மாற்றத்தின் ஒரு குறிப்பிட்ட வகை நேரவேண்டும். ஆய்வு சாதாரணமாகப் பொதுவான மாற்றம் ஏன் ஏற்படுகின்றது? என்ற கேள்வியில் கவனக்குவிப்பு செய்வதில்லை. ஆனால் ஆய்வு ஏன் ஒரு குறிப்பிட்ட மாற்றம் அல்லது மாற்ற வகை நிகழ்ந்தது எனப் பெரும்பாலும் விளக்குகின்றது. இரண்டு துருவ எதிர்நிலைகள் உள்ளன. முதலாவது நிலை, மாற்றத்திற்கான காரணம் செயற்பாடுசாரா நடையில்சார் மாற்றத்திற்கு உள்ளாவது மனித பண்பாட்டு உற்பத்திப்பொருட்களின் பொதுவான போக்காகும் என்பதாகும் (Postal 1968); இதைப் பற்றி கவலை கொள்ளத்

தேவையில்லை; ஏனென்றால் அதை விளக்க ஏதும் இல்லை. இரண்டாவது நிலை, மொழி வழக்கும் மாற்றமும் இயல்திட்டவாத நோக்கு (teleological point of view) அடிப்படையிலேயே முழுவதும் புரிந்துகொள்ள இயலும் (Jakobson 1961); ஒரு ஒழுங்குமுறையிலிருது மற்றொரு ஒழுங்குமுறைக்கு மாறுவது ஒரு மொழியியல் சார் செயற்பாட்டைக் கொண்டிருக்கும்; எல்லாமே விளக்க இயலுவனவாகும்.

மொழி மாற்றம் ஓரளவுக்கு ஒழுங்கானதும் முறையானதுமாகும். எடுத்துக்காட்டாக சொல் இறுதியில் உயிர்+மூக்கொலி > மூக்கின உயிர் (எ.கா. அவன் > அவ~). மொழி ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு கைமாற்றம் செய்யப்படுகின்றது. எல்லா குழந்தைகளும் ஒரே உடலியக்கவியல் (physiological) மற்றும் புலனறிவுசார் (cognitive) திறனைப் பயன்படுத்துகின்றனர். எனவே எல்லா மொழிகளிலும் ஒரே மாதிரியான அமைப்பொழுங்குகளின் மாற்றம் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தப்படுகின்றது. பெரும்பாலான ஒலிமாற்றங்களுக்கு உடலியக்கவியல் அடிப்படை உள்ளது; குறிப்பாக எளிதில் ஒலிப்பதற்காக ஒலி மாற்றம் ஏற்படுகின்றது. எடுத்துக்காட்டாக 'ழ்' ஒலி 'ள்' அல்லது 'ல்' ஆக மாறுவது, 'ற்' ஒலி 'ர்' ஆக மாறுவது எல்லாம் ஒலிப்பு எளிமைக்காகும். எழுத்துக்கூட்டல், உச்சரிப்பு என்ற இரு நிலைகளைக் கையாளும் மொழிகளில் (ஆங்கிலம் போன்ற மொழிகள்) எழுத்துக்கூட்டல் உச்சரிப்பு (spelling pronunciation) காரணமாக ஒலிமாற்றம் ஏற்படலாம். ஆனால் எழுத்துக்கூட்டல் உச்சரிப்பு ஒலி மாற்றத்திற்கான உடலியக்கவியல்சார் தூண்டல் அல்ல. சில நேரங்களில் எழுத்து வடிவம் அதன் உச்சரிப்பிலிருந்து மிகவும் வேறுபட்டு இருக்க இயலும்; இதன் காரணமாக எழுத்துவடிவுக்கு அண்மைப்படுகிற உச்சரிப்பு சொல்லுக்குத் தரப்படலாம்.

எடுத்துக்காட்டாக தமிழர்களின் ஆங்கில உச்சரிப்பில் *often* என்ற சொல் *ஆஃப்டன்* எனவும் *know* என்ற சொல் *குனோ* என உச்சரிக்கப்படுவதைக் காணலாம்.

ஒப்புமை (analogy) மாற்றத்திற்கான புலனறிவு (cognitive) அடிப்படையாகும். ஒழுங்கற்ற அமைப்பொழுங்கிற்குப் (irregular) பதிலாக ஒழுங்கான அமைப்பொழுங்கைப் (regular pattern) பேசுபவர் பின்பற்றும் போதும், ஊகம் அடிப்படையில் ஒழுங்கின்/சீர்மையின் நீட்சியும் பொதுமையாக்கமும் மாற்றத்திற்கு வழி வகுக்கலாம். இது ஒப்புமைசார் மாற்றம் (analogical change) எனக் கூறப்படும். *வா/வரு* என்பதன் இறந்தகால வடிவாக *வருந்தான்* என்பதைப் பயன்படுத்துவது *தா/தரு* என்பதன் இறந்தாகால வடிவமாக *தருந்தான்* என்பதைப் பயன்படுத்துவது என்பன ஒப்புமைசார் மாற்றமாகும்.

மொழிகளுக்கு இடையில் ஏற்படும் தொடர்பு காரணமாக ஏராளமான கடன் சொற்களும் கடன் மொழிபெயர்ப்புகளும் மொழியில் உட்படுத்தப்படுகின்றன. புதிய ஒலியன்களும் மாற்றொலியன்களும் கூட கடன்வாங்கலின் விளைவால் மொழியில் புகுத்தப்படுகின்றன.

வேறுபாடுகளும் மாற்றங்களும் குறிப்பாக மொழியின் ஒலியனியல் நிலையில் வெளிப்படுகின்றன. பல பொதுவான வகையில்படும் ஒலி மாற்றங்களை வேறுபடுத்தலாம்.

ஓரினமாதல் (assimilation): ஒரு ஒலி அடுத்து வரும் ஒலியை தன் இனமாக மாற்றும் செயல்பாடு ஓரினமாதல் எனப்படும். எ.கா. *படித்தான்* > *படிச்சான்* – இதில் அண்ண உயிரான *இ* அதைத் தொடர்ந்து வரும் பல் அடைப்பொலி இடையண்ண

அடைப்பொலியாக மாறுவது ஓரினமாதலாகும். திராவிடத் தாயிலிருந்து வந்த தமிழில் இவ்வித மாற்றங்களைக் காணலாம்.

(11) அ. கெவி > செவி

ஆ. கெய் > செய்

இடம் பெயரல் (metathesis): ஒலிகள் முன்பின் என இடம் மாறுவதை இடம் பெயரல் என்பர். திராவிட மொழியான தெலுங்கில் இடம்பெயரலுற்ற சொற்களைக் காணலாம். பின்வரும் எடுத்துக்காட்டில் *சதை* என்பது *தசை* என மறுவது இடம்பெயரல் ஒலிமாற்றமாகும்.

(12) அ. சதை > தசை

ஆ. அவன் > வாடு (தெலுங்கு)

உருபனியல் மாற்றங்கள் மிகப் பொதுவாகக் காணப்படுவதாகும். தமிழ் பனுவல்கள்/இலக்கியங்கள் கால அடிப்படையில் முன் பழந்தமிழ், பின் பழந்தமிழ், முன் இடைத்தமிழ், பின் இடைத் தமிழ், தற்காலத் தமிழ் எனப் பிரிக்கப்படும். இவ்வேறுபட்ட காலங்களைச் சார்ந்த பனுவல்களை உருபனியல் அடிப்படையில் ஒப்பிட்டால் தமிழ் உருபனியல் அமைப்பில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் வெளிப்படும். தமிழ் வினை அடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வை மேற்கொண்ட இராசேந்திரனும் (இராசேந்திரன், 2008) தமிழ் வினை ஒட்டுக்களின் தமிழ் வினை ஒட்டுகளின் வரலாற்று மொழியியல் ஆய்வை மேற்கொண்ட சித்திரபுத்திரனும் (Chithiraputhran 2005) இத்தகைய மாற்றங்களை விரிவாகப் பட்டியலிட்டு விளக்குகின்றார். எடுத்துக்காட்டாக, பழந்தமிழில் வழக்கிலிருந்த *உழக்கு* 'துன்புறச்செய்', *புகை* 'நுழையச் செய்', *அலர்* 'மலர்', *காற்று* 'போகச் செய்'

போன்ற வினை அடிகள் தற்காலத் தமிழில் இல்லை; பழந்தமிழில் முன்னிலை வினை சார் ஒட்டுக்கள் பல பயன்பாட்டில் இருந்தன: *ஈர்* (*வாரீர்*), ஈர்கள் (*உரையீர்கள்*), *உம்* (*வாரும்*), *உங்கள்* (*கேளுங்கள்*), *மின்* (*கொண்மின்*), *மின்கள்* (கேளுமின்கள்). மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுவந்த *மின்*, *மின்கள்* என்பன தற்கால வழக்கில் இல்லை. கால ஒட்டுக்களை ஒப்பிட்டால் பழத்தமிழில் இறந்தகாலம், இறவாக்காலம் என்ற இரு கால ஒட்டுக்கள் தான் இருந்ததாகத் தெரிகின்றது. நிகழ்கால ஒட்டான *கிற்/கின்று* என்பன பின்னர் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாகும்.

தொடரியல் நிலையிலும் மொழியில் மாற்றங்கள் ஏற்படும். தமிழ்த் தொடரியலின் வரலாற்று மொழியியல் ஆய்வை மேற்கொண்ட சுசீலா அவர்கள் பழங்காலத் தமிழுக்கும் தற்காலத் தமிழுக்கும் இடையிலுள்ள தொடரியல் மாற்றங்களைப் பட்டியலிட்டு விளக்குகின்றார் (Suseela, 2001) ஒகுறிப்பாகச் சொல்லின் வரிசை முறையில் மாற்றங்கள் விளைவதைக் காணலாம். பழந்தமிழுக்கும் தற்காலத் தமிழுக்கும் இடையில் பின்வரும் வேறுபாடுகளைக் காணலாம்.

(13)	**பழந்தமிழ்**	**தற்காலத் தமிழ்**
	கண்டேன் கற்பினுக்கினியாளை	கற்பினுக்கினியாளைக் கண்டேன்
	கற்க கசடற	கசடற கற்க

சொற்கள் ஒரு மொழியில் சேர்க்கப்படுதலும் நீக்கப் படுதலும் வரலாற்று அடிப்படையில் நிகழும். ஒரு மொழியின் ஒரு கால கட்டத்தில் புழக்கத்திலிருந்த சொற்கள் பல பிந்தைய கால கட்டத்தில் வழக்கிழந்து போவது சொல் மாற்றமாகும். எடுத்துக்காட்டாக, யானையைக் குறிக்கும் *கரி* போன்ற சொற்களும் கூறுதலைக் குறிக்கும் *நவில்* போன்ற சொற்களும் தற்காலத் தமிழ் வழக்கில் இல்லை. பண்பாட்டு

மாற்றங்களும் தொழிநுட்ப மாற்றங்களும் புதிய பொருட்களையும் கருத்துச் சாயல்களையும் மொழிக்கு அறிமுகப்படுத்துவதோடு பழைய பொருட்களை நீக்கும். இச்செயல்பாடு சொல்சார் மாற்றங்களை உருவாக்கும். சொல்சார் இடைவெளியை நீக்கப் புதிய சொற்கள் பயன்படுத்தப்படலாம். புதிய சொற்கள் சொல்லாக்கம் வழியாகவும் கடன்வாங்கல் வழியாகவும் மொழியில் சேர்க்கப்படும்.

2.5. பொருண்மை மாற்றத்தின் ஆய்வு

பொருண்மை மாற்றத்தின் ஆய்வு பொருண்மை மாற்றங்களின் விளக்கங்கள்/விவரணைகள், பொருண்மை மாற்றங்களின் வகைப்பாடு இவற்றை உட்படுத்தும். பொருண்மை மாற்றத்தின் காரணங்கள்/ நோக்கங்கள்/விளைவுகள், பொருண்மை மாற்றத்தின் பின்விளைவுகள், விளைவுகள் என்னபன ஆயப்படும். ஆய்வின் பார்வை அடிப்படையில் ஒரே காரணிகள் காரணங்களாகவோ, வகைகளாகவோ, பின்விளைவுகளாகவோ மீண்டும் வரலாம். சொல்வகைப்பாடுகளின் அமைப்பைப் பற்றி ஒருவர் வைத்திருக்கிற கருத்துக்கள் பொருள்கோளின் கோட்பாட்டை மற்றும் வரலாற்றுச் செய்திகளின் பொருள்கோளைத் தீர்மானிக்கும். எது பொருண்மையை உருவாக்கும் என்பதைப் புரிந்துகொள்ளாமல் பொருண்மை மாற்றத்தைப் புரிந்துகொள்வது சாத்தியமில்லை.

ஒரு சொல்லனில் வடிவம்-பொருண்மை இணைத் தரப்படுகையில் பின்வருவது ஆய்வுக்குரிய கேள்விகளாகும்: ஒரு சொல்லனின் பொருண்மையில் என்ன மாற்றங்கள் ஏற்படும்? கருத்துரு அமைப்பு அல்லது பொருண்மை தரப்படுகையில் அது எந்த சொல்லன்களால் வெளிப்படுத்தப்படும்? ஒரு கருத்துரு தரப்படுகையில் பொருண்மையின் எந்த வழிகளைக் காணவோ அல்லது பிற கருத்துருக்களை உருவாக்க இயலும்?

2.6. பொருண்மை மாற்றமும் பொருண்மையியல் கோட்பாடும்

பொருண்மை மாற்றத்தை ஆய்வது பொருண்மையியலின் கூடுதல் பொதுமையான புரிந்துகொள்ளலை முன்மொழிகின்றது. பொருண்மை மாற்றம் என்றால் என்ன என்பதைப் புருந்துகொள்ள பொருண்மை என்றால் என்ன என்பதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். ஒரு சொல்லோ அல்லது அதைவிடப் பெரிய அலகோ பொருண்மையைக் கொண்டிருக்கின்றது என்று குறிப்பிடுகையில் நாம் புரிந்துகொள்வது என்ன? நமது நோக்கத்திற்கு மொழியியல் மற்றும் தத்துவ இயல் மற்றும் உளவியல் பொருண்மையியல் ஆய்வை இரண்டு நிலைகளில் பிரிக்கவேண்டி வரும். மரபாக மொழி வெளிப்பாடுகள் அவை புறவயமான வழியில் உண்மை உலகத்துடன் தொடர்பு படுத்தப்படும்போது பொருண்மையைப் பெறுகின்றன என்று கூறப்படுகின்றது. அதாவது கேள்விக்குரிய தொடர்புகள் இருக்கின்றன அல்லது இல்லை என்பதாகும். நாம் *ஆடவர், பெண்டிர், சிறுவன், சிறுமி* என்ற சொற்களுக்கிடையே உள்ள பொருண்மை வேறுபாட்டை +/- ஆண்மை, +/- முதிர்மை என்ற பண்புக்கூறுகளால் வேறுபடுத்தலாம். இவ்வடிப்படையிலான பொருண்மைப் பார்வையைப் புறவயன்மையாளர் (objectivist) அல்லது உண்மைக் கட்டுப்பாட்டுக் கோட்பாட்டுப் பொருண்மையியல் (truth-conditional theory of semantics) என்று அழைப்பர்.

பலவிதமான சிக்கல்களுள் மொழியியல் பொருண்மையின் புறவயன்மையாளரின் விமர்சகர்கள் இப்பார்வைப் பின்வரும் எடுத்துக்காட்டைப் புரிந்து கொள்ளவியலுமா எனக் கேட்கின்றனர்.

(14) சுந்தர் ஒரு பெண். அவன் நடனம் ஆடுவதற்குத்தான் தகுதியுள்ளவன்; கால்பந்தாட்டத்திற்கு அல்ல.

கால்பந்தாட்ட இரசிகர்கள் இந்த எடுத்துக்காட்டால் சுட்டிக்காட்டப்படும் சிக்கலைப் புரிந்துகொள்வர்; கால்பந்தாட்டத்தைப்பற்றி அதிக அறிவில்லாதவர்கள் சுந்தர் ஒரு வயதுக்குவந்த ஆண் கால்பந்தாட்ட வீரர் என்று அறியவேண்டும். இரு பொருண்மைக்கூறுகள் சுந்தரை விளக்கும் சொல்லுடன் போட்டிபோடுகின்றது. இந்த எடுத்துக்காட்டு சொற்களுக்குப் பொருள்கள் தருவது மரபு அணுகுமுறையைவிட ஒரு அகவயமான பார்வையாகும் (subjective approach) என்பதை உணர்த்துகின்றது. மரபுவழியான புறவயப் பொருண்மையியலுக்கு (objective semantics) எதிரானவர்கள் மேற்சொன்ன படைப்புத்தன்மையான எடுத்துக்காட்டுகள் விதிவிலக்கானவை அல்ல, அவை மொழியின் அன்றாடப் பயன்பாட்டில் அதிகமாகக் காணப்படுபவை ஆகும் என்று எடுத்துக்கூறுகின்றனர். எனவே இம்மாதிரியான அகவயத்தையும் நெகிழ்ச்சியையும் உட்படுத்தும் கோட்பாடு நமக்குத் தேவயாகும்.

புறவயன்மையாளர்களின் அணுகுமுறையை விமர்சிப்பவர்கள் அறிவாற்றல் உளவியலாரான (cognitive psychologist) எலனோர் ரொச் (Eleanor rosch) மற்றும் உடன்பணிபுரிபவர்களின் (e.g. Rosch 1973, 1978; Roch et al 1976) சிறப்புவாய்ந்த ஆய்விலிருந்து குறிப்பைப் பெற்று மேற்கூறிய எடுத்துக்காட்டு சுட்டிக்காட்டிய சிக்கல்களுக்குத் தீர்வாக மூலமுதல்வகை-கோட்பாட்டுப் பொருண்மையியலை எடுத்துக்கொண்டனர். உண்மையுலகின் ஒவ்வொரு நோக்கத்திற்கும் எல்லைக்குட்பட்ட பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் போதுமான விவரணையை உருவாக்குவது இயலாததாகும். மாறாக நேர்த்தியான வகைப்பாட்டு உறுப்பினர் (perfect category member) எவ்வாறு இருப்பார் என்று நமக்குக் கருத்து இருக்கும். எந்த அளவுக்குப் பொருளோ நபரோ மூலமுதல்வகையுடன் ஒற்றுமை கொண்டுள்ளது என்பதன்

அடிப்படையில் நாம் அதை ஒரு வகைப்பாட்டின் பொருத்தமான உறுப்பினராகவோ பொருந்தமற்ற உறுப்பினராகவோ விளிம்பு உறுப்பினராகவோ கருதவியலும்.

ஆடவர், பெண்டிர், சிறுவன், சிறுமி என்ற சொற்களை எடுத்துக்கொண்டால் நாம் எல்லோருக்கும் மூலமுதல்வகை ஆடவர், மூலமுதல்வகைப் பெண்டிர், மூலமுதல்வகைச் சிறுவன், மூலமுதல்வகைச் சிறுவன் என்பன குறித்து ஒரு மனவுரு இருக்கும். ஒவ்வொரு தடவையும் நாம் இவ்வகைப்பாடுகளின் உத்தேசமான உறுப்பினரை சந்திக்கும்போதும் நாம் இவை எந்த அளவுக்கு மூலமுதல்வகையோடு ஒத்திருக்கின்றது என்று தீர்மானிக்கின்றோம். ஒற்றுமை அதிகமாய் இருப்பதைப் பொறுத்து அவற்றைக் கேள்விக்குரிய வகைப்பாட்டுடன் சேர்த்துவிடுவோம்; எனவே பொருத்தமான சொல்லுடன் புலக்குறிப்பு செய்வோம். 1970களில் (எ.கா. Labov 1973) செய்யப்பட்ட முக்கியமான ஆய்வுகளின் அடிப்படையில், மூலமுதல்வகைப் பொருண்மையியலைப் பின்பற்றுபவர்கள் சூழ்நிலையைப் (மொழி அல்லது சூழல்) பொறுத்து வகைப்பாட்டு எல்லைகள் மாறலாம் என்று வாதிடுகின்றனர். இப்போது நம் முந்தைய எடுத்துக்காட்டு வாக்கியத்தின் பொருளைப் புரிந்துகொள்ள இயலும்: கால்பந்தாட்ட வீரர்கள் சூழ்நிலையில் பெண்கள் வகைப்பாடு வயதுவந்த ஆண்களையும் உட்படுத்தும் படிக்கு அதன் எல்லையை மாற்றக்கூடும்.

மேற்சொன்ன எடுத்துக்காட்டுளைக் கையாளுவதில் மூலவகை அடிப்படையிலான பார்வையின் வெளிப்படையிலான வெற்றியுடன் ஒப்பிடுகையில் புறவயன்மையாளர்களின் தோல்வி காரணமாக வரலாற்றுப் பொருண்மையியலார் மூலவகை அணுகுமுறையைப் பயன்படுத்துவதை ஆதரிப்பதில் அதிசயமில்லை.

2.7. பொருண்மை மாற்றம் - மரபு வகைப்பாடு

பொருண்மை மாற்றம் பல கோணங்களில் மரபு அடிப்படையில் பார்க்கப்பட்டது. இவ்வகைப் பாட்டைப் பற்றி பேசும் முன் இரண்டு விசயங்களைப் பற்றி அறிந்துகொள்வது அவசியம்.

1. மரபு வகைப்பாட்டை எல்லா மாற்றங்களுக்கும் பயன்படுத்த இயலாது.
2. இவ்வகைப்பாடு ஒன்றுக்கொன்று தனித்தனியாக இருப்பவையல்ல ஒன்றையொன்று மேலூறல் செய்வன.

மரபு அடிப்படையில் சொற்பொருண்மை மாற்றம் இரண்டாகப் பகுக்கப்பட்டது: ஒன்று நேர் பொருளை விளைவிக்கும் மாற்றம் (melioration), எதிர் பொருளை விளைவிக்கும் மாற்றம் (pejoration). எடுத்துக்காட்டாகப் பின்வரு வாக்கியங்களை எடுத்துக்கொள்வோம்.

(15) அ. அவன் அவளிடம் முரட்டுத்தனமாக நடந்துகொண்டான்.

ஆ. அவனது முரட்டுத்தனம் அவளை அவன் பால் ஈர்த்தது.

முதல் வாக்கியத்தில் எதிர்பொருண்மையை வெளிப்படுத்தும் முரட்டுத்தனம் இரண்டாவது வாக்கியத்தில் நேர்பொருண்மையை வெளிப்படுத்துகின்றது.

பொருண்மை மாற்றத்தின் மரபு அடிப்படையிலான இரண்டாவது வகைப்பாடு பொருள் விரிவடைந்துள்ளதா சுருங்கியுள்ளதா என்பதன் அடிப்படையிலாகும். எடுத்துக்காட்டாக நாயின விலங்குகள், பூனையிய விலங்குகள் என்ற சொற்களை எடுத்துக்கொண்டால் இவற்றில் வரும் *நாய்*, *பூனை* என்பன விரிந்த பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பது தெரியும். இங்கு *நாய்*, *பூனை* என்பன அடைந்துள்ள பொருண்மை மாற்றத்தை பொதுமையாக்கம் (generalization), விரிவாக்கம் (widening) அல்லது நீட்சி (broadening) எனக் கூறலாம். பொதுமையாக்கத்தின் எதிர்மறை

சிறப்பாக்கம் (specialization) ஆகும். எடுத்துக்காட்டாக 'நிலக்கிழார்' எனப் பொருள் கொள்ளப்படும் *கிழவன்* என்ற சொல் 'வயதான ஆண்' எனப் பொருள்படுவதையும் இடையர்குலப் பொண்ணைக் குறிப்பிடும் *ஆய்ச்சி* என்ற சொல் 'வயதான பெண்' அல்லது 'அம்மாவின்/அப்பாவின் தாய்' எனத் தற்காலத்தில் பொருள்படுவதையும் சிறப்பாக்கத்திற்கு எடுத்துக்காட்டாய்க் கூறலாம்.

பொருண்மை மாற்றங்களின் மரபு அடிப்படையிலான மூன்றாவது பரிமாணம் அவை உருவகம் (metaphor) அல்லது ஆகுபெயர் (metonymy) என்பதன் விளைவா என்பதன் அடிப்படையில் அமையும். உருவகம் அடிப்படையிலான பொருண்மை மாற்றங்களில் பேசுபவர்கள் ஒரு கருத்துருவுக்கும் (மூலக் கருத்துருவுக்கும்) மற்றொரு கருத்துருவுக்கும் (இலக்குக் கருத்துருவுக்கும்) இடையில் ஒருவித ஒற்றுமையைக் காண்கின்றனர். எடுத்துக்காட்டாக *முந்திரிக்கொட்டை* என்ற சொல் தற்காலத் தமிழில் 'எந்த விசயத்திலும் அநாவசியமாக முந்திக்கொள்ளும் நபர்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுவது உருவக அடிப்படையிலான பொருண்மை மாற்றத்திற்கு எடுத்துக்காட்டாகும். *கொழுப்பு* என்ற சொல் 'திமிர்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுவதும் உருவக அடிப்படையிலான பொருண்மை மாற்றத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

ஆகுபெயரும் உருவகத்தைப் போன்று கருத்துருக்களுக்கு இடையில் ஒருவகையிலான தொடர்பை உட்படுத்தும்; அனால் அவை வேறு வழியில் நெருக்கமாகத் தொடர்புபடுத்தப்படும்; எடுத்துக்காட்டாக ஒன்று வேறொன்றின் பகுதியாக அமையும். *முரடு* என்ற சொல் தற்காலத்தமிழில் 'கடுமையாக நடந்துகொள்ளும் நபர்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுவதும் ஆகுபெயர் அடிப்படையிலான பொருண்மை

மாற்றத்திற்கு எடுத்துக்காட்டாகும். இது போன்று *குருடு*, *செவிடு*, *ஊமை* என்ற சொற்களை அக்குறைபாடுகளை உடைய நபர்களைக் குறிப்பிடப் பயன்படுத்துவது ஆகுபெயர் அடிப்படையிலான பொருண்மை மாற்றமாகும்.

பொருண்மை மாற்றங்களின் மரபு அடிப்படையிலான நான்காவது பரிமாண வகைப்பாடு அம்மாற்றங்கள் மொழிக்குள்ளான காரணிகள் அடிப்படையில் விளைந்ததா அல்லது வெளிக்காரணிகள் வாயிலாக விளைந்ததா என்பதைப் பொறுத்து அமையும். எடுத்துக்காட்டாக *பரதேசி* 'துறவி' என்ற சொல் 'பிச்சைக்காரன்' என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுவது இவ்வகையில் படும். *திரை* என்ற சொல் 'அலை' என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சொல் காலபோக்கில் துணியால் ஆன அலைவடிவமான திரைச் சீலைகளையும் சினிமாக்கள் காட்டப்படும் திரைகளையும் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது. தற்போது கணினித் திரைகளையும் குறிப்பிட பயன்படுத்தப்படுகின்றது. இத்தகைய பொருண்மை மாற்றங்களையும் சொற்பொருண்மை மாற்றத்தின் நான்காவது பரிமாண வகைப்பாட்டில் அடக்கலாம். *பயங்கரம்* என்ற சொல் 'அச்சுறுத்தக்கூடிய தன்மை' என்று பொருள்படும். இச்சொல் 'மிக அதிகமான' எனப் பொருள்பட *பயங்கர வேகத்தில் ஊர்தி செல்கிறது* என்று பயன்படுத்தப்படும் பொருண்மை மாற்றமும் இவ்வகையிற் படும். மொழிக்குள்ளான காரணிகளுக்கும் மொழிக்கு வெளியிலான கரணிகளுக்கும் வேறுபாட்டைக் காட்டுவது பெரும்பான்மையும் கடினமானதாகும். மொழிக்கு வெளியிலான காரணிகள் சமூகக்கலாச்சாரம் சார்ந்தவையாகும். நமது சமுதாயத்தில் ஏற்பட்ட தொலைக்காட்சி மற்றும் கணினி தொழிநுட்ப வளர்ச்சிகாரணமாக அவற்றின் பகுதிகளைக் குறிப்பிட புதிய சொற்கள் உருவாக்கப்படவேண்டும். பல வேளைகளில் நாம் சொற்களின் பொருள்களை

நீட்சி செய்து பயன்படுத்தத் தொடங்குகின்றோம். சில பொருண்மை மாற்றங்களுக்கு நாம் சமுதாயப்பண்பாட்டுக் காரணிகளைக் காரணமாகக் காட்டலாம். எடுத்துக்காட்டாக, அழகு மற்றும் கவர்ச்சி பற்றிய நமது கருத்து எப்போதும் ஒரு போல இருப்பதில்லை; இவை குறித்த முற்காலக் கருத்து தற்காலக் கருதிலிருந்து மாறுபட்டுள்ளது என்று குறிப்பிட இயலும். ஒரு குறிப்பிட்ட அளவிலான கொச்சைத் தன்மை கவர்ச்சியின் பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் குறிப்பிட இயலும். இந்த அளவில் முரட்டுத்தன்மை 'கவர்ச்சிகரமானது' என்ற பொருண்மையைக்கு மாறியுள்ளதைப் புரிந்துகொள்ளவியலும்.

பொருண்மை மாற்றத்தில் மொழி-உட்படைக்கும் (language internal) மொழி-வெளிப்படைக்கும் (language-external) இடையிலுள்ள வேறுபாட்டை வரையறுப்பது கடினமானதாகும். அலையைக் குறிப்பிடும் *திரை* என்ற சொல் சமூகத்தில் தொலைக்காட்சி, கணினி தொழில்நுட்பங்களின் முன்னேற்றத்தால் வேறுபல பொருட்களைக் குறிப்பிட்டு பொருண்மை நீட்சி அடைந்தது. *முரடு* பெற்றுள்ள பொருண்மை நீட்சி நேர்பொருள் மாற்றத்தையும் (melioration) ஆகுபெயர் அடிப்படையிலான மாற்றத்தையும் ஒரேசமயத்தில் குறிப்பிடும். இதனுடன் நாம் இது பகுதி சமூக-பண்பாட்டுக் காரணிகளால் உண்டானது என்று குறிப்பிடவும் விரும்புவோம். சமூக-பண்பாட்டு வரலாற்றை சமூகப்பண்பாட்டு வரலாற்றியலார்களிடம் விட்டுவிடுவது நல்லது. இருப்பினும் அழகு மற்றும் கவர்ச்சி பற்றிய நமது தற்காலக் கருத்து முற்காலக் கருத்து போல் இல்லை என்று கூறவியலும்.

சமூகக்காரணிகளுடன் தொடர்புபடுத்த இயலும் பொருண்மை மாற்றங்களை விலக்கிவைத்தல் (taboo) என்ற பொருண்மைகளத்தில் காணவியலும். கலவிச் செயல்பாடுகள், கழிபொருள் வெளியேற்றம் போன்ற செயல்களையும் விசயங்களையும் குறிப்பிட இடக்கரடக்கல் வெளிப்பாடுகளைப் (euphemistic expressions) பயன்படுத்துவதைக் காணலாம் (எ.கா. *புணர்தல், புணர்ச்சி, கால்கழுவிவருதல், கொல்லைக்குபோதல், வீட்டுவிலக்கு, மாதவிடாய், மாதவிலக்கு, இறைவனடிசேர்தல், துஞ்சுதல், அம்மைபோடுதல், பெரியம்மை, சின்னம்மை*). ஆபத்தை விளைவிக்கும் விலங்குகளின் பெயர்களும் பக்திக்கும் மரியாதைக்குரிய பெயர்களும் விலக்குப் பெயர்களாகக் கருதப்பட்டு இடக்கரடக்கல் வெளிப்பாடுகளால் குறிப்பிடப்படுவது இயல்பானதாகும். *பாம்பு* என்பது *அரவம்* என்ற சொல்லால் குறிப்பிடப்பெறுவதும் *யானை* என்பது *கரி* என்ற சொல்லால் குறிப்பிடப்படுவதும் இடக்கரடக்கலின் கண்படும்.

2.8. தற்கால முன்னேற்றங்கள்: பொருண்மை மாற்றத்தில் ஒழுங்குகள்

பொருண்மை மாற்றங்களை வகைப்படுத்தும் மரபு வழிகள் பல்வேறு எதிர்மைகளையும் முரண்பாடுகளையும் உட்படுத்தும். மொழிக் கூறுகளின் பொருண்மையை இருவழிகளிலிருந்தும் உருவாகலாம்: அர்த்தங்கள் கூடுதல் நேர்மறையாகவோ எதிமறையாகவோ விரிவானவையாகவோ சுருக்கமானவையாகவோ உருவகம் அடிப்படையிலோ ஆகுபெயர் அடிப்படையிலோ அமையலாம்; மற்றும் மொழிக்கு உள்ளிருக்கும் காரணிகளாலோ மொழிக்கு வெளியிலிருக்கும் காரணிகளாலோ நேரலாம்.

முதல் பார்வையில் இந்தக் கருத்துப்பதிவு பொருண்மை மாற்றத்தில் நிகழ்கின்ற எல்லாம் முக்கியமான அறிவியல் முயற்சியாக மொழியின் மாற்றத்தின் இந்நிலையின்

ஆய்வின் தகுதிநிலைக்குச் சிக்கலானது. அறிவியலில் நாம் கட்டாயமாக ஊகிக்க இயலாவிட்டாலும் ஓரளவுக்கு ஒழுங்கானது என்ற அமைப்பொழுங்குகளைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் காட்டுவோம். அறிவியலார்கள் சாத்தியமான எல்லா இயல்நிகழ்வுகளையும் பட்டியலிடுவதில் முதன்மையான ஆர்வம் காட்டுவதில்லை; ஆனால் அவ்வியல்நிகழ்வுகளின் கட்டுப்பாட்டில் ஆர்வம் காட்டுவார்கள். எல்லாம் சாத்தியம் ஆகின்ற களத்தில் நாம் வரலாற்றுப் பொருண்மை மாற்றத்தின் தனிப்பட்ட நேர்வுகளின் விளக்கங்களை மட்டுமே தரவியலும்; இது எது சாத்தியமானது எது சாத்தியம் இல்லாதது என்பதை எது கட்டுப்படுத்துகின்றது, ஏன் அவ்வாறு நிகழ்கின்றது போன்ற கடுமையான அறிவியல் ஆய்வுகளுக்கு எதிரிடையான துணுக்குகள் போல் அமையும். துணுக்குகள் படிப்பதற்கு ஆர்வமிக்கவாயும் பொழுதுபோக்காகவும் அமையும்; ஆனால் அவை கேள்விக்குரிய இயல்நிகழ்வுகளின் பொதுவான புரிதலுக்குத் துணைபுரிவதல்ல.

முந்தைய நூற்றாண்டில் வரலாற்று மொழியியலில் கருத்தரங்கங்களின் மற்றும் வெளியீடுகளின் மதிப்புரை குறிப்பிடத்தகுந்த காலமாகப் பல வரலாற்று மொழியியலார்களின் கவனத்தை ஈர்க்கும் தகுதி பொருண்மை மாற்றத்திற்கு இல்லாதிருந்தது எனக் காட்டுகின்றது. நல்லகாலமாக எலிசபெத் டிராகோட் (Elizabeth Traugott) போன்ற அறிஞர்கள் இந்த இயல்நிகழ்வுகளை ஆய்வதில் உறுதியாக இருந்தனர்; 1980களில் சில ஒழுங்குகள் வெளிச்சத்திற்கு வந்தன. இந்த ஒழுங்குகள் அகவயமாக்கம் (subjectification) என்ற கலைசொல்லுக்குக் கீழ் வந்தது. அகவயமாக்கத்துடன் தொடர்புடைய பல கேள்விகள் இன்னும் இருப்பினும் இந்த அமைப்பொழுங்கின் (அல்லது அமைபொழுங்கு குழுமத்தின்) கண்டுபிடிப்பு தற்போது மொழியியலார் பொருண்மை மாற்றத்தைக் கடினமான ஆய்வுக்கவனத்திற்கு உட்படுத்தவேண்டிய களமாக எடுத்துக்கொள்ள உதவியது.

நாம் அகவயமாக்கம் என்று கூறுவதைப் புரிந்துகொள்ள இந்தக் கலைச்சொல் நாம் இலக்கண ஆய்வில் ஒரு தொடரின் எழுவாய் என்று குறிப்பிடுதிலிருந்து வேறுபட்டது என்பதை அறிந்துகொள்வது முக்கியமாகும். மாறாக இது (புறவயமான தீர்மானங்களுக்கு எதிரான) அகவயமான தீர்மாங்களின் கருத்துச்சாயலுடன் தொடர்புடையது: அகவயமாக்கம் ஒத்தறி அடிப்படையில் புறவயமான அர்த்தங்களை அகவயமான அர்த்தங்களாக மாற்றுவதாகும்.

மிக என்ற மிகையடையின் உருவாக்கம் அது புறவயமான அர்த்தத்திலிருந்து அகவயமான அர்த்தத்திற்குப் பயணிப்பதை வெளிப்படுத்தும். *மிக* எனபது *மிகு* 'அதிகப்படு' என்ற வினையின் செய்ய வினையெச்ச வடிவாகும். *மிகு* என்பது தற்காலத் தமிழில் அதன் புறவயமான அர்த்தத்திலிருந்து அகவயமான அர்த்தத்திற்கு மாறியுள்ளதை உணராலாம்.

அறிவியல் அடிப்படையில் அகவயமாக்கத்தின் ஆர்வத்திர்குரிய விசயம் இது ஒருதிசையானது என்று கூறப்படுவதாகும். அதாவது காலப்போக்கில் அர்த்தங்கள் கூடுதல் அகவயமாக மாறும். இது எது சாத்தியமானது எது சாத்தியமில்லாதது என்பதன் மீதான தெளிவான கட்டுப்பாடாகும். இருக்கிறதோ இல்லையோ இந்த ஒருதிசைத்தன்மை உண்மையில் விதிவிலக்கற்றது என்பது முரண்பாடானது. *பரதேசி* என்ற சொல்லை 'அயல் நாட்டார்' என்று பயன்படுத்துவது அதிக அகவயமானதா 'பிச்சைக்காரன்' என்ற அர்த்தத்தில் பயன்படுத்துவது அதிக அகவயமானதா என்பதைத் தீர்மானிப்பது கடினம். இம்மாதிரியான விதிவிலக்குகள் அகவயமாக்கம் என்ற கருத்துச்சாயலின் மதிப்பைக் குறைக்கவில்லை: தமிழில் உள்ள பல எடுத்துக்காட்டுகள் பொருண்மை மாற்றங்கள் எதிர்திசையில் போவதை விட எதிர்பார்க்கின்ற திசையில் போகின்றது என்பதைக் காட்டுகின்றன.

பயங்கர என்ற பெயரடை 'பயப்படத்தக்க' என்ற அர்த்தத்திலிருந்து 'மிக அதிகமான' என்ற மிகையடையாக மாறியுள்ளது இங்கு குறிப்பிடத் தகுந்ததாகும். சொற்களின் அர்த்தங்கள் இந்த வரலாற்றுப் பாதையில் மீண்டும் மீண்டும் பயணிக்கின்றன என்ற உண்மை நாம் மனித மனத்தைப் பற்றிய ஒன்றை கண்டுபிடித்துவிட்டோம் என்பதற்குத் தெளிவான எடுத்துக்காட்டாகும்; இது மேலும் உலகப்பொதுமையாகும். எம்மொழியிலும் வரலாற்று மாற்றத்தை (historical change/diachronic change) அதாவது காலப்போக்கில் ஏற்படும் பொருண்மை மாற்றங்களைக் காணலாம்.

மாறாக, சில பொருண்மை மாற்றங்கள் நாம் பேசும் போதே ஏற்படுகின்றன. *முரடு* என்பது 'கவர்ச்சியனது' என்ற பொருண்மையைச் சமீபகாலத்தில் தான் பெற்றது. *திருட்டுப் பயலே* என்று குழந்தையை தாய் அழைக்கும் போது அதன் பொருள் மாறுகின்றது. *கடலை போடு*, *மொக்கை போடு* என்ற சொற்கள் புதிதாய் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. திடீர் எனச் சாதாரணப் பொருள் தரும் சொற்கள் சிறப்புப் பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. இச்சிறப்புப் பொருள்கள் யாவும் நிரந்தரமானது என்று அறுதியிட்டு கூறுவது கடினம். எப்பொழுது நாம் ஒன்றை நியம அடிப்படையில் பொருண்மை மாற்றம் எனக் குறிப்பிட இயலும் என்பது கேள்விக்குரியதாகும். இம்மாதிரியான கருத்துச்சாயலை நாம் சமகால மாற்றம் (synchronic change) எனக் குறிப்பிடலாம்.

இந்தப் பிரச்சனையை நாம் நேரிடுகையில் கிராஃப்டின் (Croft 2000) நிலைபாடான ஒரு மாற்றத்தில் இரு நிலைக்கு இடையிலுள்ள வேறுபாட்டைப் பின்பற்றலாம்: புதிய கண்டுபிடிப்பு (முதல் புதிய பயன்பாடு) (innovation) மற்றும் பரவுதல் (propagation).

இவ்வாறு நாம் பொருண்மை மாற்றத்தையும் பொதுவான மொழி மாற்றத்தையும் சமகால மாற்றமாகவும் வரலாற்று மாற்றமாகும் பார்க்கின்றோம். புது மாற்றுப்பொருளின் பரவல் முழுமையை அடைவதில்லை; பல நேர்வுகளில் பரவல் முழுமை அடைவதில்லை. எடுத்துக்காட்டாக *முரடு* என்பது 'கவர்ச்சியான ஆண்' என்ற பொருளில் எல்லா பேசுபராலும் பயன்படுத்தப்படுவதில்லை. இன்றைய பதின்ம வயதினர் பயன்படுத்தும் சொற்களின் புதிய அர்த்தங்கள் காலப் போக்கில் மறைந்துபோவது சாத்தியமாகும். வரலாற்றும் மொழியியல் (historical linguistics) இம்மாதிரியான புதிய பயன்பாடுகளைப் புத்தாக்கங்கள் (nonce-formation) என்று கூறுகின்றது.

ஒரு பேச்சு சமூகத்தில் சிலரிடம் அல்லது எல்லோரிடமும் பரவும் பொருண்மை புத்தாக்கங்கள் மற்றும் மாற்றங்கள் ஒன்றுபோலவே தொடங்குகின்றன: மொழி பேசுபவர் ஒருவர் தாம் வெளிப்படுத்த விரும்பும் கருத்துக்கும் ஏற்கனவே இருக்கும் சொல் அல்லது வெளிப்பட்டிற்கு இடையில் ஒருவகையிலான படைப்புத்தன்மையான பிணைப்பையோ தொடர்பையோ ஏற்படுத்துகின்றார். இந்தத் தொடர்புகள் ஏற்படும் இயக்கமுறை தெளிவாக உளவியல் அடிப்படையிலானதாகும்.

ஏன் புத்தாக்கங்கள் பிற மொழி பேசுபவர்களிடம் பரவவில்லை என்றும் ஏன் சில மாற்றங்கள் மட்டும் சிலரிடம் பரவுகின்றன, பெருபாலானவர்களிடம் அல்லது எல்லோரிடமும் பரவுகின்றன என ஒருவர் ஆச்சரியப்படலாம். மேலோட்டமாகக் கூறினால் புதிய பயன்பாட்டிற்குச் செல்வாக்கு இருந்தால் அதாவது தாங்கள் பின்பற்ற விரும்புகிற நபரால் பயன்படுத்தப்பட்டால் கண்டுபிடிப்பு பின்பற்றப்பட்டுப் பரவும்.

2.9. பொருண்மை மாற்றத்தின் வகைகள்

பொருண்மை மாற்றத்திற்கு பல்வேறு எண்ணிக்கையிலான வகைப்பட்டுத் திட்டங்கள் கூறப்பட்டன. பின்வருவது ஃப்ளூம்பீல்டிலிருந்து (Bloomfield 1933) ஆங்கில மொழிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமாகும்.

குறுக்கம் (Narrowing): மேல்மட்டத்திலிருந்து கீழ் மட்டத்திற்கு பொருண்மை மாற்றம்: எடுத்துக்காட்டாகத் தொடக்க காலத்தில் விலங்கு என்பதைப் பொதுவாகக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட *மான்* என்ற சொல் பின்னர் மான் என்ற குறிப்பிட்ட இனத்தைக் குறிப்பிட பயன்படுத்தப்படுவதைக் குறுக்கப் பொருண்மை மாற்றம் எனலாம்.

விரிவாக்கம் (Widening): கீழ் மட்டத்திலிருந்து மேல்மட்டத்திற்கு பொருண்மை மாற்றம்: பல வியாரப் பொருட்களின் தனிப்பட்ட பெயர்கள் பொதுவான உற்பத்திப் பொருளைக் குறிப்பிட பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய பொருண்மை மாற்றத்தை விரிவாக்கம் என்கின்றோம். *டால்டா* என்ற தனிப்பட்ட வியாரப் பெயர் பலரால் வனஸ்பதியை அல்லது தாவர நெய்யைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுவது விரிவாகத்தின் கண்படும். சில வியாபாரப் பொருட்களைக் குறிப்பிடும் *ஆவின்*, கோம்பிளான், சர்ஃப் போன்ற சொற்களும் ஒரு சிலரால் முறையே பொதுவான பால், ஊட்டச்சத்து, சோப்புத்தூள் இவற்றைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுவதும் விரிவாக்கம் ஆகும்.

உருவகம் (Metaphor): பொருட்களின் ஒற்றுமை அடிப்படையிலான பொருண்மை மாற்றம்: எடுத்துக்காட்டாக *முந்திரிக்கொட்டை* என்ற சொல் தற்காலத் தமிழில் 'எந்த விசயத்திலும் அநாவசியமாக முந்திக்கொள்ளும் நபர்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுவது உருவக அடிப்படையிலான பொருண்மை மாற்றத்திற்கு எடுத்துக்காட்டாகும். *கொழுப்பு* என்ற சொல் 'திமிர்' என்ற பொருளில்

பயன்படுத்தப்படுவதும் உருவக அடிப்படையிலான பொருண்மை மாற்றத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

ஆகுபெயர் (Metonymy): இடம் அல்லது காலத்தின் அண்மைகாரணமாக ஏற்படும் பொருண்மை மாற்றம்: எடுத்துக்காட்டாகக் *குடுடு*, *செவிடு*, *ஊமை* என்ற சொற்களை அக்குறைபாடுகளை உடைய நபர்களைக் குறிப்பிடப் பயன்படுத்துவது ஆகுபெயர் அடிப்படையிலான பொருண்மை மாற்றமாகும். இதுபோன்று விலங்கின் உறுப்பைக் குறிப்பிடும் *கொம்பு* என்ற சொல்லை 'ஒலி எழுப்பும் கருவி' என்ற அர்த்தத்தில் பயன்படுத்துவது ஆகுபெயர் அடிப்படையிலான பொருண்மை மாற்றமாகும்.

சினையாகுபெயர் (Synecdoche): சினை-முழு உறவு காரணமாக நேரிடும் பொருண்மை மாற்றம். தமிழ்நாட்டைச் சார்ந்தவரை மதராசி எனக் குறிப்பிபிடுவது சினையாகுபெயர் சார்ந்த பொருண்மை மாற்றமாகும். *தலைக்கு ஐந்து ரூபாய் கொடு* என்ற வாக்கியத்தில் *தலை* என்பதை 'நபர்' என்ற பொருளில் பயன்படுத்துவது சினையாகுபெயர் அடிப்படையிலான பொருண்மை மாற்றமாகும்.

மிகைப்படுத்தல் (Hyperbole): வலுவற்ற பொருண்மையிலிருந்து வலுவான பொருண்மைக்கு மாறுவது மிகைப்படுத்தலாகும். 'பறித்தல்' எனப் பொருள்தரும் *கொய்* என்ற சொல்லை *தலையைக் கொய்* எனப் பயன்படுத்துவது மிகைப் படுத்தலாகும். இதுபோன்று 'துன்புறுத்துதல்' எனப் பொருள்தரும் *வதை* என்ற சொல்லை *சிசுவதை*, *பசுவதை* எனப் பயன்படுத்துவது மிகைப்படுத்தலாகும்.

குறைப்படுத்தல் (Meiosis): வலுவான பொருண்மையிலிருந்து வலுவற்ற பொருண்மைக்கு மாறுவது குறைப்படுத்தலாகும். 'மிகுந்த பயத்தை உண்டாக்கும்' எனப் பொருள்படும்

பயங்கர என்ற சொல்லை *பயங்கர மழை, பயங்கர வேகம்* என ஒன்றின் அளவின் மிகுதியைக் குறிப்பிட பயன்படுத்துவது குறைப்படுத்தலாகும்.

சிதைத்தல் (Degeneration): உயர்நிலைப் பொருளிலிருந்து குறைநிலைப் பொருளுக்கு மாறுவது சிதைத்தலாகும். 'வயது முதிர்ந்த பெண்மணி' எனப் பொருள்பட்டுவந்த *ஆயா* என்ற சொல்லைத் தற்காலத் தமிழில் 'பணிப்பெண்', 'கடைநிலைப் பெண் ஊழியர்' என்ற அர்த்தங்களில் பயன்படுத்துவது சிதைத்தலாகும்

உயர்ச்சி (Elevation): 'வீட்டுக்குரியவர்' எனப்பொருள்படும் *வீட்டுக்காரர்* என்ற சொல்லைக் கணவனைக் குறிப்பிட பயன்படுத்துவது உயர்ச்சியாகும். இது போன்று 'ஆதரவாக இருப்பவர்' எனப் பொருள்படும் *துணைவன்* என்ற சொல்லை கணவனைக் குறிப்பிட பயன்படுத்துவது உயர்ச்சியாகும்.

பிளாங்க் (Blank 1998) என்பரின் பின்வரும் வகைப்பாடு கூடுதல் அங்கீகாரம் பெற்றுள்ளது.

உருவகம்: கருத்துருக்களுக்கு இடயேயுள்ள ஒற்றுமை அடிப்படையில் ஏற்படும் பொருண்மை மாற்றம்: எ.கா. *தொட்டால் சுருங்கி* 'ஒருவகைச் செடி' → 'குறைகூறினால் தாங்கவியலாத நபர். மூக்கை உடை → 'அவமானப்படுத்து', மூக்கை நுழை → 'தலையிடு'

ஆகுபெயர்: கருத்துருக்களின் அண்மை காரணமாக ஏற்படும் பொருண்மை மாற்றம்: கொம்பு 'விலங்குகளின் கொம்பு' → 'ஒலியெழுப்பும் கருவி'.

சினையாகுபெயர்: சினை-முழுமையை உறவை உள்ளடக்கும் ஒருவகை ஆகுபெயர். எ.கா. 'தலை' → 'நபர்/ஆள்'

பொருண்மையின் சிறப்பாக்கம்: வகைப்பாட்டியலில் கீழ்நோக்கு மாற்றம். எ.கா. மான் 'விலங்கு' → 'மான் என்ற ஒருவகை விலங்கு'

பொருண்மையின் பொதுமையாக்கம்: வகைப்பாட்டியலில் உயர்நோக்கு மாற்றம்: எ.கா. எண்ணெய் 'எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட நெய்' → 'பொதுவான எண்ணெய்', தண்ணீர் 'குளிர்ந்த நீர் → 'பொதுவான நீர்'.

இணை உள்ளடங்குப் பொருண்மை மாற்றம்: வகைப்பாட்டியலில் கிடைநோக்கு மாற்றம்: எ.கா. சிலர் பெருச்சாளியை எலி எனவும் மூஞ்சுறுவை எலி எனவும் குறிப்பிடுவது. *மைதானத்தில் ஓடினான்* என்பதற்குப் பதிலாக *மைதானத்தில் பறந்தான்* என *ஓடு* என்பதற்குப் பதிலாகப் *பற* என்பதைப் பயன்படுத்துவது. அவனிடம் பணம் கேட்டான் என்பதற்குப் பதிலாக *அவனிடம் பணம் இரந்தான்* என *கேள்* என்பதற்குப் பதிலாக *இர* என்பதைப் பயன்படுத்துவது.

எதிர்மறைப் பொருண்மை மாற்றம்: கருத்துருக்களின் முரண்பாட்டு அடிப்படையிலான மாற்றம். 'கடவுளுக்குத் தொண்டு செய்பவள்' என்ற அர்த்தத்தில் உருவாக்கப்பட *தேவடியாள்* என்ற சொல்லை 'விபச்சாரி' என்ற அர்த்தத்தில் பயன்படுத்துவது.

தானியக்க எதிர்மறை: சொல்லின் அர்த்தமும் கருத்துருவும் துணைநிலை எதிர்மையில் மாறுவது. *நண்பன்* என்ற சொல்லை 'விரோதி' என்ற பொருளில் பயன்படுத்துவது. *நமக்கு மிகவும் வேண்டியவர்* என்ற தொடரில் *வேண்டியவர்* என்பதை 'வேண்டாதவர்' என்ற அர்த்ததில் பயன்படுத்துவது.

தானியக்க மறுதலை: ஒரு உறவின் இரு துருவ எல்லைகளால் ஒரு உறவின் சொல்சார் வெளிப்பாடு: *போய்விட்டு வா* என்ற வினைத்தொடரை 'போ' என்ற அர்த்தத்தில்

பயன்படுத்துவது. *வரட்டுமா* என்ற சொல்லை 'போகிறேன்' என்ற அர்த்தத்தில் பயன்படுத்துவது.

தொக்குநிற்றல்: பெயர்களின் அண்மை அடிப்படையிலான பொருண்மை மாற்றம்: எ.கா. *வண்டி* → 'தானியங்கு ஊர்தி'

நாட்டார் சொற்பிறப்பியல்: பெயர்களின் ஒற்றுமை அடிப்படையிலான பொருண்மை மாற்றம்.

பிளாங் (Blank 1998) நேர் பொருள் விளைவு மாற்றம் (melioration), எதிர் பொருள் விளைவு மாற்றம் (pejoration), பொருண்மை வலுப்படுதல், பொருண்மை வலுவிழத்தல் என்பவைகளை உள்ளடக்குவதைச் சிக்கலாக்கக்கருதினார். பிளாங்கைப் பொறுத்தவரையில் இவை புறவயம் அடிப்படையிலான வகைப்பாடு செய்யவியலும் இயல்புநிகழ்சியல்ல. இத்தலைப்பில் பட்டியலிடப்பட்டுள்ள எல்லா எடுத்துக்காட்டுகளையும் பிற இயல்புநிகழ்ச்சிகளாகக் குழும இயலும்.

பிளாங் பொருண்மை மாற்றத்தின் நோக்கத்தின் முழுப் பட்டியலையும் உருவாக்க முயன்றார். அவற்றைப் பின்வருமாறு சுருங்கக் கூறலாம்.

- மொழியியல் சார் ஆற்றல்
- உளவியல் சார் ஆற்றல்
- சமூகம்-பண்பாடு சார் ஆற்றல்
- பண்பாடு/கலைக்களஞ்சிய ஆற்றல்

இந்த பட்டியல் க்ரெஸ்காவால் (Grzega 2004) மாற்றபட்டு சிறிது பெரிதாக்கப்பட்டது.

- மயக்கம் (அதாவது குறிப்பிடப்படும் பொருளை வகைப்பாடு செய்வதில் உள்ள சிக்கல்கள் அல்லது குறிப்பிடப்படும் பொருளுக்கு சரியான சொல்லைத் தருவது)

- மூலமுதல்வகையின் ஆதிக்கம்: (அதாவது உண்மை உலகில் ஒரு வகைபாட்டின் மூலமுதல்வகையின் உறுப்பினரின் தனியுரிமை காரணமாகக் கீழ்படுத்தும் சொல்லுக்கும் கீழடங்கும் சொல்லுக்கும் இடையில் உள்ள மயக்க வேறுபாடு)
- சமூகக் காரணங்கள்: (அதாவது "வேறுபடுத்தாமை" விளைவுடன் கூடிய தொடர்புச் சூழல்.
- அமைப்பு மூலமான அமைப்பு மூலமல்லாத மொழியியல் சார் முந்தைய அல்லது பிந்தைய வரன்முறை (பாகுபாட்டை நோக்கிய சட்டபூர்வமான மற்றும் இணைக்குழும மொழியியல் சார் வரன்முறை)
- தகாப்பாராட்டு/முகப்புகழ்ச்சி
- நிந்தை
- பொய்த்தோற்றமான மொழி
- விலக்கிவைத்தல் (விலக்கிவைக்கும் கருத்துருக்கள்)
- அழகுணர்ச்சி சார் முறையான காரணங்கள் (எதிர்மறை அடிபடையில் தொடர்புள்ள ஒலிப்பியல் அடிப்படையில் ஒற்றுமையுள்ள அல்லது ஒத்திருக்கிற சொற்களை விலக்குதல்)
- கருத்துப்பரிமாற்ற-முறையான காரணங்கள் (சூழலில் பொருண்மை மயக்கம் தரும் சொற்களை விலக்குதல், முக்கியச் சொல்: ஒப்புரு சொல் முரண்பாடு மற்றும் ஒருசொல்பல்பொருண்மை முரண்பாடு)
- சொல் விளையாட்டு/சிலேடைப் பேச்சு
- சொற்களின் அளவுக்கு மீறிய நீளம்

- உருபனியல் அடிப்படையிலான தவறான புரிதல் (முக்கியச் சொல்: “நாட்டார் சொல்பிறப்பியல்”, சொல்லுக்கிடையில் மாற்றங்களால் தெளிவை/ மறைவின்மையை உருவாக்குதல்)
- தர்க்கவியல்சார்ந்த-முறைசார்ந்த காரணங்கள் (முக்கியச் சொல்: “சொல்சார் ஒழுங்குபடுத்தல்”, கன்சோசியேசன் (consociation) உருவாக்கம்)
- உருமாறும் தன்மைக்கான விருப்பம் (ஒரு பெயருக்கு முக்கிய நோக்கத்தின் உருவாக்கம்)
- ஒரு கருத்துருவின் மானிடவியல் தனிச்சிறப்பு (அதாவது ஒரு கருத்துருவின் மானிடவியல் அடிப்படையில் தரப்பட்ட உணர்ச்சி/மனவெழுச்சி, “இயற்கையான தனிச்சிறப்பு)
- ஒரு கருத்துருவின் பண்பாட்டால் தூண்டப்பட்ட தனிச்சிறப்பு (“பண்பாடுசார் முக்கியத்துவம்)
- குறிப்பிடும் பொருள்களின் மாற்றங்கள் (அதாவது உலகில் மாற்றங்கள்)
- உலகப் பார்வையின் மாற்றம் (அதாவது உலகின் வகைப்பாட்டாக்கத்தில் மாற்றங்கள்)
- செல்வாக்கு (அந்தஸ்து)/புதுப்பாணி (மற்றொரு மொழியின் அல்லது வழக்கின், சில சொல்லாக்கத்தின், அல்லது விரிவாக்கத்தின் பொருண்மையியல் சார் மையங்களின் செல்வாக்கின் அடிப்படையில்)

2.10. கோட்பாட்டு ஆய்வுகள்

பொருண்மை மாற்றம் பழங்காலத்திலிருந்தே அறிவுசார்ந்த வாதங்களைத் தூண்டியது. தற்காலத்தில் ரெய்சிக் (Reisig, 1839) , டார்மெஸ்டர் (Darmesteter (1887), ப்ரெயல் (Breal 1899), பால் (Paul 1880), ஸ்டர்ன் (Stern 1931), ப்ளூம்பீல்ட் (Bloomfield 1933), ஸ்டீபன் உல்மான் (Stephen Ullmann) என்பவர்களின் ஆய்வுகள் முதல் முக்கியமான ஆய்வுகளாகும். தனிச் சொல் ஆய்வைக் கடந்த ஆய்வுகள் டிரையரின் (Trier 1931) சொல்-கள ஆய்விலிருந்து (word-field) தொடங்கப்பட்டது; இவர் ஒரு சொல்லின் ஒவ்வொரு பொருண்மையியல் சார் மாற்றமும் ஒரு சொல் பொருண்மைக் களத்தில் உள்ள பிற சொற்களைப் பாதிக்கும் எனக் கூறினார். இவரது அணுகு முறை கொசெரி (Coseriu 1964) என்பவரால் செப்பனிடப்பட்து, ஃப்ரிட்ஸ் (Fritz 1964) ஆக்கமுறை பொருண்மையிலை (Generative Semantics) அறிமுகப் படுத்தினார். பயன்வழியியல் மற்றும் (pragmatic) புலனறிவுக் (cognitive) கோட்பாடுகளை உள்ளடக்கிய அண்மைக்கால ஆய்வுகள் வாரன் (Warren 1992) , டிர்க் கீரட்ஸ் (Dirk Geeraerts) , டிராட் (Traugott 1990) மற்றும் பிளாங் (Blank 1998) என்போர்களது ஆய்வுகளாகும்.

முன்னர் கூறியபடி அண்மைக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட வகைப்பாட்டியல்கள் முன்னர் விளக்கிய ப்ளூம்பீல்டு (Bloomfield 1933), மற்றும் பிளாங் (Blank, 1998) என்போர்களின் வகைப்பாட்டியல்கள் ஆகும்.

2.10.1 ரெசிக்கின் வகைப்பாட்டியல்

ரெய்சிக்கின் (Reisig, 1839) பொருண்மை மாற்றம் சார் வகைப்பாடு அவர் இறப்புக்குப் பின் வெளியிடப்பட்டது. அவர் உயர்தர இலக்கிய அணியிலை வழிமுறையாகக்கொண்டு பின்வருவனவற்றிற்கு இடையே வேறுபாடு பாராட்டினார்.

- சினையாகுபெயர்: முழுவதற்கும் பகுதிக்கும் இடையிலுள்ள மாற்றம்.

- ஆகுபெயர்: காரணத்திற்கும் விளைவுக்கும் உள்ள மாற்றம்.
- உருவகம்

2.10.2 பாலின் வகைப்பாட்டியல்

பாலின் (Paul 1880) வகைப்பாட்டியல் பின்வருமாறு அமையும்:

- சிறப்பாக்கம்: ஒரு சொல்லின் பொருளின் தனி அர்த்தங்களின் விரிவாக்கம்.
- பொருளடக்கங்களின் குறிப்பிட்ட பகுதி மீதான சிறப்பாக்கம்: ஒரு சொல்லின் பொருளின் தனி அர்த்தங்களின் குறுக்கம்
- இடம், காலம், அல்லது காரணம் இவற்றின் வழியில் அடிப்படைக் கருத்துச் சாயலுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள கருத்துச் சாயலின் மாற்றம்

2.10.3 டார்மெஸ்டரின் வகைப்பாட்டியல்

டார்மெஸ்டரின் (Darmesteter (1887) வகைப்பாட்டியல் பின்வருமாறு அமையும்:

- உருவகம்
- ஆகுபெயர்
- பொருண்மையின் குறுக்கம் (narrowing of meaning)
- பொருண்மையின் விரிவாக்கம் (widening of meaning)

இறுதி இரண்டும் முழுவதற்கும் பகுதிக்கும் இடையிலான மாற்றமாக வரையறைவிளக்கம் செய்யபட்டுள்ளது; இது இன்று சினையாகுபெயர் என்று கூறப்படும்.

2.10.4 ப்ரெயலின் வகைப்பாட்டியல்

ப்ரெயலின் (Breal 1899) வகைப்பாடு கீழே பட்டியலிடப்பட்டுள்ளது:

- அர்த்தத்தின் கட்டுப்பாடு (restriction of sense): பொதுப் பொருண்மையிலிருந்து சிறப்புப் பொருண்மைக்கு மாறுதல்

- அர்த்தத்தின் விரிவாக்கம் (enlargement of sense): சிறப்புப் பொருண்மையிலிருந்து பொதுப் பொருண்மைக்கு மாறுதல்
- உருவகம்
- அர்த்தத்தின் "செறிவு/அடர்த்தி" ("thickening" of sense): அருவப் பொருண்மையிலிருந்து பருப்பொருண்மைக்கு மாறுதல்

2.10.5 ஸ்டர்னின் வகைப்பாட்டியல்

ஸ்டர்னின் (Stern 1931) வகைப்பாட்டியல் பின்வரும் மாற்றங்களை உட்படுத்தும்:

- இடம்பெயர்த்தல் (substitution): ஒரு பொருளின், பொருளைக் குறிப்பிடும் அறிவின், பொருளை நோக்கிய உளப்பாங்கு இவற்றுடன் தொடர்புடைய மாற்றம். எ.கா. *தலை* 'உடலின் மேற்பகுதி' → "நாணயத்தின் ஒரு பகுதி", *கண்ணாடி* "ஒளி ஊடுருவும் ஒரு கண்ணாடிப் பொருள்" → "பார்வையை நேர்செய்யும் கண்ணாடி", பரதேசி "அயல்நாட்டார்" → "பிச்சைக்காரன்"
- ஒப்புமை (analogy): சொல்லுடன் தொடர்புடைய மாற்றத்தால் தூண்டப்பட்ட மாற்றம். எ.கா. *அணு* 'மிகச் சிறிய கூறு" → "வேதியல் தனிமத்தின் சிறிய கூறு", *அரை* "இடுப்பு" → "சரிபாதி".
- குறுக்கம் (shortening): மரக்கட்டை → கட்டை, கால் சுவடு → சுவடு, தினசரி பத்திரிக்கை "நாளேடு" → தினசரி "நாளேடு"
- பெயரிடல் (nomination): ஒரு புதிய அல்லது பழைய பொருளை முன்னர் அதற்குப் பயன்படுத்தப்படாத பெயரால் விருப்பமாகப் பெயரிடுதல். எ.கா. சிங்கம் "ஒரு வகை விலங்கு"→ "வலிமையான நபர்"
- ஒழுங்கான மாற்றம் (regular transfer): அடிமனப் பெயரிடல்.

- வரிசை மாற்றம் (permutation): ஒழு சூழலின் மீள்பொருள்கோள் காரணமாக ஒரு குறிப்பிடும் பொருளிலிருந்து மற்றொரு குறிப்பிடும் பொருளுக்கு விருப்பம்சாரா மாற்றம். எ.கா. இதழ் → பத்திரிக்கை,
- போதியமை (adequation): ஒரு கருத்துருவின் மனப்பான்மையில் மாற்றம்; இடம்பெயர்ப்பிலிருந்து வேறுபாடு தெளிவின்மை

இந்த வகைப்பாடு பொருண்மை மாற்றத்தின் செயற்பாங்குகள் மற்றும் ஆற்றல்கள்/காரணங்கள் இவைகளுக்கிடையில் சரியான வேறுபாடு காட்டவில்லை.

2.10.6 ஸ்டீபன் உல்மானின் வகைப்பாட்டியல்

உல்மான் (Stephen Ullmann) பொருண்மை மாற்றத்தின் இயல்புக்கும் விளைவுக்கும் இடையில் வேறுபாடு பாராட்டுகின்றார். அவரது வகைப்பாடு பின்வருமாறு அமையும்.

- பொருண்மை மாற்றத்தின் இயல்பு
    - உருவகம்: அர்த்தங்களின் ஒற்றுமை அடிப்படையிலான மாற்றம்
    - ஆகுபெயர்: அர்த்தங்களின் அண்மை அடிப்படையிலான மாற்றம்
    - நாட்டார் சொற்பிறப்பியல்: பெயர்களின் ஒற்றுமை அடிப்படையிலான மாற்றம்
    - தொக்குநிற்றல் (ellipsis): பெயர்களின் அண்மை அடிப்படையிலான மாற்றம்
- பொருண்மை மாற்றத்தின் விளைவு
    - பொருண்மையின் விரிவாக்கம் (widening of meaning): அளவின் உயர்வு
    - பொருண்மையின் குறுக்கம் (narrowing of meaning): அளவின் இழப்பு
    - பொருண்மையின் நேர்மறைவிளைவு மாற்றம் (amelioration of meaning)

- பொருண்மையின் எதிர்மறைவிளைவு மாற்றம் (pejoration of meaning): குணத்தின் இழப்பு

2.11. பொருண்மை மாற்றத்தில் களப்பொருண்மையிலின் தாக்கம்

லேரர் (Lehrer 1985) "The influence of Semantic fields on semantic change" என்ற தமது கட்டுரையில் எவ்வாறு பொருண்மை மாற்றத்தின் கோட்பாடுகளின் ஆழ்ந்த அறிவை அல்லது நுண்ணறிவை முழு அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றின் வெளிப்பாடகக் கருதாமல் ஒரு பொருண்மைக் களத்தைச் சார்ந்த சொற்களின் மொத்த வெளிப்பாடகக் கருதுவது சிறப்பாக அமையும் என்று கூறி தமது வாதங்களை முன் வைக்கின்றார்.

பொருண்மைக் களம் என்பது ஒரு கருத்துருக் களத்தை உள்ளடக்கிய ஒன்றுடன் ஒன்றுக்கொன்று உறவுகொண்டுள்ள சொல்லன்களின் ஒரு குழுமம் ஆகும். எடுத்துக்காடாக, *சமை, வறு, வேகவை, பொரி* போன்ற சொல்லன்கள் சமையல் என்ற பொருண்மைக் களத்தில் அடங்கும். பொருண்மை களக் கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கை ஒரு சொற் பொருண்மையைப் புரிந்துகொள்ளத் தனித்தனியாகச் சொற்களைப் பார்க்காமல் சொற்பொருண்மை அடிப்படையில் உறவுள்ள சொற்களின் குழுமத்தைப் பார்ப்பது தேவையாகும். நாம் "பொருண்மை அடிப்படையில் உறவுள்ள" என்றால் சொற்களுக்கு இடையே உறவுள்ள உறவுகளான ஒருபொருள்பன்மொழியம், எதிர்மொழியம் (anonymy), உள்ளடங்கு மொழியம் (hyponymy), மறுதலை (converseness), இயையாமை (incompatibility) என்பனவற்றைக் கருத்தில் கொள்கின்றோம். இந்தச் சொல்லுறவுகளின் பட்டியல் மற்றும் அவற்றின் உட்படுத்தங்களையும்/விளைவுகளையும் லையான்ஸ் அல்லது லேரில் காணலாம்.

பொருண்மை மாற்றத்தின் நமது புரிந்துகொள்ளல் பொருண்மை அடிப்படையில் தொடர்புள்ள சொற்களின் வரலாறுகளை உற்றுநோக்கி விரிவுபடுத்தலாம்.

2.11.1 பொருண்மைக் களங்களும் பொருண்மை மாற்றங்களும்

பொருண்மை மாற்றங்களுக்கும் பொருண்மைக் களங்களுக்குமிடையில் உள்ள உறவு பொருண்மைக் களக் கோட்பாட்டை முதலில் உருவாக்கிய டிரையரால் வலியுறுத்தப்பட்டது. டிரையர் பொருண்மை மாற்றம் பொருண்மைக் களங்களின் அமைப்பைப் பாதிக்கின்றது என்று காட்டினார். இடைக்கால ஜெர்மன் மொழியில் அறிவைக் கையாளும் சொற்களின் பொருண்மையை விளக்கும் அவருடைய புகழ்பெற்ற எடுத்துக்காட்டு, சொற்பட்டியலும் பொருண்மை அமைப்பும் 1200-க்கும் 1300-க்கும் இடையில் மாறிவிட்டதைக் காட்டுகின்றது. மொழியில் தக்கவைக்கப்பட்ட சொற்கள் வேறு பொருண்மைகளைத் தந்தன.

(16)அ.

1200

wisheit	
Kunst	List

ஆ.

1300

wisheit	Kunst	wizzen

1200-இல் அறிவின் முழுக் களத்தையும் உட்படுத்தும் பொதுவான சொல் *wisheitv* ஆகும். ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு அதன் பொருள் ‘மதம் சார்ந்த அல்லது ஞானம் சார்ந்த அறிவு’

எனச் சுருங்கி விட்டது. *Kunst* முந்தையகாலத்தில் அரசவைக்குரிய அறிவையும் பின்னர் இம்மைக்குரிய திறன்களையும் அறிவையும் குறித்து நின்றது. தொழில்நுட்ப திறன்களைக் குறிப்பிட பயன்படுத்தப்பட்ட *List* இந்தப் பொருண்மைக் களத்திலிருந்து வெளியேறியது மற்றும் கலையோடு தொடர்புடைய *wizzen* உள்ளே நுழைந்தது. மேற்காட்டிய இரண்டு படங்களும் "பொருண்மை வெளி" 1200-இல் இரண்டாகப் பிரிக்கப்பட்டதையும் 1300-இல் பொருண்மை வெளி மூன்றாகப் பிரிக்கப்பட்டதையும் காட்டுகின்றது.

டிரையர், ஒரு பொருண்மைக் களத்தில் ஒரு சொல்லில் ஏற்படும் பொருண்மை மாற்றம் அவர் செய்யும் பின்வரும் இரு ஊகங்களின் காரணமாகப் பிற சொற்களின் பொருண்மையில் மாற்றங்களை ஏற்படுத்தும் என்ற முடிவுக்கு வருகின்றார்:

1. ஒரு பொருண்மைக் களத்தில் பொருண்மையின் மேலுறல்கள் இல்லை.
2. இடைவெளிகள் இல்லை

இருப்பினும் இரு ஊகங்களும் தவறாகும் (Lehrer, 1985). மிகப் பொதுவான இயல்நிகழ்ச்சியான பகுதி பல்பொருமொழிகள் இருப்பது என்பது முதல் ஊகத்தைத் தவறு எனக் காட்டுகின்றது. லேரரின் சொல் இடைவெளி (lexical gaps) (Lehrer 1974) டிரையரின் இரண்டாவது ஊகத்திற்கு எதிரான எடுத்துக்காட்டுகளைத் தருகின்றது.

லேரரின் (Lehrer 1985) இந்த ஆய்வு வேறு பரிமாணத்தை எடுக்கும். இது எவ்வாறு பொருண்மை அடிப்படையில் உறவுள்ள சொற்கள் இணையான பொருண்மை மாற்றங்களைக் காட்டுகின்றது என்று வெளிப்படுத்தும். இந்த இயல்நிகழ்வை நிரூபிக்கும் முந்தைய ஆய்வு ஸ்டெர்னின் ஆய்வாகும் (Stern 1931, 1968); இவர் ஆங்கிலத்திலுள்ள ஒரு குழும சொற்கள் நிலை 1-இல் 'rapidly' என்ற பொருண்மையிலிருந்து நிலை 2-இல் 'rapidly' மற்றும் 'immediately' என்றும் நிலை 3-இல் 'immediately' என்று மாறும்

பொருண்மை மற்றங்களைப் பின் தொடர்ந்து கூறுகிறார். பின்வரும் அட்டவணையிலுள்ள பொருண்மை வேறுபாடுகள் ஸ்டெர்னால் பழங்கால ஆங்கிலத்திற்கும் இடைக்கால ஆங்கிலத்திற்கும் உரிய பனுவல்களின் குறைவால் ஏற்பட்டது என ஸ்டெர்னால் விளக்கப்படுகின்றது.

	Sense I 'Rapidly'	Sense II 'Rapidly, Immediately'	Sense III 'Immediately'
Hrœdlice	OE	OE	OE
Hraþe (Raþe)	OE	OE	OE
Ardlice	OE	OE	OE
Lungre	OE	OE	OE
Ofstlice	OE	OE	OE
Sneome	OE	OE	OE
Swiþe	OE	OE	1175
Swiftly	OE	OE	1200
Caflice	OE	OE	1370
Swift	OE	1360	1300? 1400?
Georne	OE	1290	1300
Hiȝendliche	1200	1200	1200
Quickly	1200	1200	1200
Smartly	1290	1300	1300
Snelle	1300	1275	1300
Quick	1300	1290	1300
Belife	1200	1200	1200
Nimbly	1430	1470	1400
Rapely	1225	1300	1325
Skete	1300	1300	1200
Tite	1300	1350	1300
Wight	1300	1360	14th cent.
Wightly	1350	1350	1300

கிட்டத்தட்ட 1300-இல் தான் மொழியின் நிலையைத் எடுத்துக்காட்டப் பனுவல்கள் திருப்திகரமாகக் கிடைத்தது. பிற நேர்வுகளில் பேச்சுவழக்கில் ஒருபொருண்மை தோன்றலாம்; இது நமது பனுவல்களில் மிக அரிதாகத்தான் உருப்படுத்தம் செய்யப்படுகின்றது. மட்டுமன்றி வேறு சில நேர்வுகளில் சொற்கள் ஒத்தறி அடிப்படையில் அரிதாக இருக்கலாம். இந்தச் சூழல்களில் ஒரு பொருண்மை முந்தைய பாதுகாக்கப்பட்ட ஆவணத்தைக் காட்டிலும் அதிக அளவில் பழமையானதாய் இருக்கவியலும் (Stern 1968:187). எந்தச் சொற்களின் பொருண்மை மற்றமும் மிகச் சாதாரணமாகும்/வழக்கமானதாகும். இதை இரண்டு வழிகளில் பார்க்கவியலும்.

1. நிலை 1-> விரியும் நிலை 2 -> குறுகும் நிலை 3

   அல்லது

2. 

இந்த மாதிரி ‘rapidly’ மற்றும் ‘immediately’ என்ற நிலை 2-ஐ தெளிவின்மையின் நேர்வாகக் கருதுகின்றது; இரண்டாவது இதைப் பொருண்மை மயக்கமாகக் கருதுகின்றது (இது ஸ்டெர்ன் இதை எவ்வாறு கையாளுகின்றார் எனக் காட்டுகின்றது). ஒரே மாற்றம் இந்த ஒருபொருள்பன்மொழிய அல்லது பகுதி ஒருபொருள்பன்மொழியக் குழுமச் சொற்களில் நிகழ்ந்துள்ளது என்பது இந்தத் தரவு குறித்த முனைப்பான பண்புகூறு ஆகும். ‘rapidly’ என்று பொருள்படும் சொற்கள் ஆங்கிலத்தில் 1400-க்குப் பிறகு இந்தப் பொருண்மை மாற்றத்தை அடைந்தன (Stern 1968:189).

காலம் குறித்த நிச்சயமின்மை காரணமாக இச்சொற்களின் பழைய நேர்வுகளையும் அவற்றின் பொருண்மைகளையும் பார்க்கும் போது இந்தக் குறிப்பிட்ட நேர்வு குறித்த ஸ்டெர்னின் வாதங்களும் முடிவுகளும் நம்பத்தகுந்ததாய் இல்லை (Lehrer 1985). இருப்பினும் அவர் ஒரு முக்கியமான கருதுகோளை முன்மொழிகின்றார்: பொருண்மை அடிப்படையில் உறவுள்ள சொற்கள் இணைப் பொருண்மை மாற்றங்களுக்கு (parallel semantic changes) உள்ளாகும். இது மேலும் ஆய்வதற்கு உரியதாகும். லேரர் இதைவிட வலுவான கருதுகோளை முன்மொழிய விரும்புகின்றார்: பொருண்மை அடிப்படையில் உறவுள்ள சொற்கள் அவற்றின் உறவுகள் காரணமாகப் பொருண்மை அடிப்படையில் உறவில்லாத சொற்களைவிட இணைப் பொருண்மை மற்றங்களுக்கு உள்ளாகும். பொருண்மை உறவுகள் நிலையாக இருக்கும் போக்கு காணப்படும்; இதனால் ஒரு சொல் பொருண்மை மாற்றம் அடைந்தால் அது அந்த பொருண்மை களத்திலுள்ள பிற சொற்களைத் தன்னை நோக்கி இழுக்கும்.

2.11.2 விலங்கு உருவகங்கள்

லேரர் தமது கட்டுரையில் பொருண்மைக் களங்களின் முதல் குழுமமாக மரபாக்கம் செய்யப்பட்ட விலங்கு உருவகங்களை (animal metaphors) ஆய்கின்றார்; இது பாட்டனின் (Battan 1978) ஆய்வு அடிப்படையில் அமைந்துள்ளது. விலங்குகளைக் குறிப்பிடும் சொற்களை மனிதர்களைக் குறிப்பிட பயன்படுத்தலாம்.

(17) John is a wolf (mouse, turkey)

ஜாண் ஒரு ஓநாய் (எலி, வான்கோழி)

இந்த நீட்சியடைந்த பொருண்மைகள் யாவும் மரபாக்கம் செய்யப்பட்டது. எனவே முதிர்ந்த பேசுவோர்-கேட்போர் சொற்களின் நீட்சி அடைந்த பொருண்மைகளை

கற்றுக்கொள்கின்றனர்; உண்மையிலேயே புதிய உருவகத்துக்கு அவர்கள் செய்வது போன்று பொருள்கோண்மையைச் செய்யவேண்டியத் தேவையில்லை. மனிதனுக்கு பயன்படுத்தப்படும் இச்சொற்கள் உருவகங்களாகத் தொடங்குகின்றது; நேரடியான பொருண்மை அதாவது விலங்கைக் குறிப்பிடும் பொருண்மை மொழியில் தக்கவைக்கப்படுவதால் விலங்கிற்கும் இடமாற்றப்பட்ட பொருண்மைக்கும் இடையிலுள்ள தொடர்பு/உறவு பேசுவோருக்கு முக்கியமானதாகும். இடமாற்றப்பட்ட பொருண்மை மரபானது என்பதால் கேட்போர் பொருண்மையைக் கணிக்கத் தேவையில்லை என்பது இங்கு முக்கியமான செய்தியாகும்.

விலங்கு உருவகங்கள் உட்படையாக ஒப்பிடப்படும் பொருள்களுக்கிடையே சில ஒற்றுமைகளை உட்படுத்தும் உருவகங்களின் எடுத்துக்காட்டு நேர்வுகளாகத் தரப்படுவதால் கருத்துவதற்கு ஆர்வமூட்டுவன ஆகும். பிளாக் (1954) நமது மாறாத மாதிரிகள் முக்கியமானது என்கிறார். விலங்குச் சொற்களின் பொருண்மைக் களம் அந்தக் களத்தில் உள்ள பிற சொற்களின் மீது ஒருசொல்லின் பொருண்மை மாற்றத்தின் விளைவைப் பரிசோதிக்க நல்ல நேர்வாக அமைகின்றது; ஏனென்றால் ஒவ்வொரு சொல்லின் பொருண்மையும், குறைந்தது அவற்றின் நேரடிப் பொருண்மை, அவைகளின் குறிபொருளால் (denotation) பாதிக்கப்படவும் வரையறுக்கப்படவும் செய்யப்பட்டது. நாம் *புலி* என்பதன் பொருண்மை அதன் இணை உள்ளடங்கு மொழிகளான *சிங்கம், சிறுத்தை, கடுவாய், சிறுத்தைப் புலி* இவற்றின் இருப்பாலோ இல்லாமையாலோ *புலி* என்பதன் பொருண்மை பாதிக்கப்படும் என்பதை எதிர்பார்க்கலாகாது. சிறுத்தைகள் அழிந்து போய் *சிறுத்தை* என்ற சொல் பேசுவோரின் செயல்படுச் சொற்றொகைகளிலிருந்து (active vocabularies) மறைந்தாலும் *புலி* என்பதன் பொருண்மை பாதிக்கப்படலாகாது. பூனை

இனத்தின் புதிய வகைகள் கண்டுபிடிக்கப்பட்டு பெயரிடப்பட்டாலும் *புலி* என்பதன் பொருண்மை பாதிக்கப்படலாகாது. பொருண்மை அமைப்பை மாற்றுவது வகைப்பாட்டியல் விலங்கியலார்களின் (taxonomic zoologists) மறுவகைப்படுத்தலாகும் (reclassification); எடுத்துக்காட்டாக, புலிகளும் சிங்கங்களும் உண்மையில் ஒரே விலங்குகளாகும் என்ற தீர்மானம். இருப்பினும் இம்மாதிரியான வகைப்பாடியல்களின் தற்போதைய நிலையும் விலங்குகளின் வகுப்புகளின் சொற்களும் தரப்படுகையில் ஒரு சொல்லின் பொருண்மையில் மற்றொன்றின் தாக்கத்தில் எந்த பாதிப்பையும் எதிர்பாக்கவியலாது.

லேரர் விலங்கியல் வகுப்புகளுடன்பொருந்தும் வகைகளாகக் குழும இயலும் பொருண்மை நீட்சியில் ஒற்றுமை காட்டும் பதினான்கு சொற்களைத் தேர்ந்தெடுத்து ஆய்கின்றார். தற்கால/தற்போதைய பொருண்மைகள் Ameircan Heritage Dictionary-இலிருந்தும் பழைய பொருண்மைகள் Oxford English Dictionary-இலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன. பின்வரும் படங்கள் பின்வருமாறு பொருகோள் செய்யப்படவேண்டும் (Lehrer 1985: 287):

- ———— (நேர்கோடு) சொல் அதன் விலங்கியல் பொருண்மையுடன் பதிவு செய்யப்பட்ட காலகட்டத்தைக் காட்டும்.
- ..... (புள்ளிகளின் கோடு) ஒரு சொல் அதன் உருவகப் பொருண்மையுடன் இருந்த காலகட்டத்தைக் காட்டும்; உருவகப் பொருண்மை வழக்கொழிந்ததாகவோ பழைமையானதாகவோ அல்லது தற்போதைய உருவகப் பொருண்மையை விட முக்கியத்துவம் குறைந்ததாகவோ இருக்கலாம்.

- xxxxxxxxxxxx (x-களால் ஆன கோடு) சொல் அதன் தற்போதைய மற்றும் மிக முக்கியத்துவமான உருவகப் பொருண்மையுடன் மொழியில் இருக்கும் காலகட்டத்தைக் காட்டும்.
- மேலேயுள்ள எண்கள் கால அளவைக் காட்டும்.

மூன்று காட்டு விலங்குகளின் பெயர்களின் பொருண்மை இடமாற்றத்தைக் காட்டும் பின்வரும் படத்தை ஆய்வோம் (Lehrer 1985: 287). இச்சொற்கள் மொழியில் அவற்றின் கால நீட்சி அடிப்படையில் வரலாற்று அடிப்படையில் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. படம் 3 *ape* என்பதன் 'முட்டாள்' என்ற உருவகப் பொருண்மை முன்னரே உருவானது மற்றும் *baboon* என்பதன் பொருண்மையான 'அவதூறின் பொதுவான சொல்' என்ற பொருண்மை பின்னர் உருவானது. 'விலங்குப் பண்புள்ள நபர்' என்ற பொருண்மை இம்மூன்று சொற்களுக்கும் மிக அண்மையில் தோன்றியது – முதலில் *gorilla* என்பதற்கும் பின்னர் *ape* மற்றும் *baboon* என்பவைகளுக்குத் தோன்றியது. OED-யின் படி *ape* என்பதற்கு 'முட்டாள்' என்ற பொருண்மை பழமையானதாக (archaic) மாறிவிட்டது.

இந்த ஒழுங்கமைப்பு பிற படங்களிலும் திரும்ப வரும்: இப்பொருண்மை களத்தில் அண்மையில் நுழைந்த விலங்குச் சொல் தான் (இந்நேர்வில் *gorilla*) 'விலங்கு, விலங்குப் பண்புள்ள நபர்' என்ற நீட்சிப் பொருண்மைகளைப் பெற்ற சொல்லாகும். பின்னர் இரண்டு விலங்குப் பெயர்கள் இப்பொருண்மையைப் பெற்றன. *ape* என்பதன் நேர்வில் 'முட்டாள்' என்ற உருவகப் பொருண்மை அழிந்துவிட்டது. ஒரு தூண்டல் நுட்பம் இருப்பதாகத் தோன்றுகின்றது. ஒரு விலங்குச் சொல் குழுமம் ஒரு உருவகப் பொருண்மையைப் பெறும்போது இது அக்குழுமத்தின் பிற உறுப்பினர்களில் ஒப்பிடத்தக்க மாற்றதை ஏற்படுத்துகின்றது.



இதுபோலவே லேரர் பறவைகளைக் குறிப்பிடும் ஐந்து சொற்களை எடுத்துக்கொண்டு அவை 'முட்டாள்' என்ற தற்போதைய உருவகப் பொருண்மை பெற்றுள்ளதைக் குறிப்பிட்டு அவற்றின் பொருண்மை மாற்றதைக் கால அடிப்படையில் விளக்குகின்றார். மேலும் லேரர் mule மற்றும் donkey என்ற சொற்களை எடுத்துக்கொண்டு அவை உருவகப் பொருளில் விரிவடைவதைக் காட்டுகின்றார்.

இவ்வெடுத்துக்காட்டுகள் காட்டும் பொருண்மை மாற்றங்கள் அடிபடையில் அவர் சில முடிவுகளை எய்துகின்றார் (Lehrer 1985: 291). இந்த எடுத்துக்காட்டுகள் பின்வரும் அமைப்பொழுங்கைக் காட்டுகின்றன: விலங்கியல்சார் துணைவகுப்புகளுடன் பொருந்தும் துணைவகுப்புகள் இருக்கும் விலங்குப் பெயர்களின் பொருண்மைக் களம் இருக்கின்றது. சொற்களில் ஒன்று ஒரு உருவகப் பொருண்மையைப் பெறுகின்றது; அது

பின்னர் அத்துணைவகுப்பில் உள்ள பிற சொல்லன்களுக்கிடையில் ஒத்திசைவான மாற்றல்களை ஏற்படுத்துகின்றது. மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் பதிவு செய்யப்படவேண்டிய புதிய சொல் அத்துணைவகுப்புக்குச் சொற்களின் உருவகப் பொருண்மையைத் தீர்மானிக்கும் ஒரு சொல்லாகும்; பெரும்பாலும் பழைய சொற்கள் கொண்டிருந்த உருவகப் பொருண்மைகளைப் பெரும்பாலும் இடம்பெயர்க்கின்றது. இந்த இறுதி உற்றுநோக்கு தற்செயலா அல்லது தீர்மானிக்கப்படவேண்டிய பொருண்மை மாற்றத்தின் செயற்பாங்குகளைப் பற்றிய ஏதோ முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றதா என்று லேரர் தமது ஐயத்தை வெளிப்படுத்துகின்றார் (Lehrer 1985: 291).

மேலும் அவர் இதே போன்ற இயல்நிகழ்வு சூதாட்ட சொற்றொகையிலிருந்து (Teske 1983) எடுக்கப்பட்ட ஒரு குழுமச் சொற்களிலும் காணவியலும் என்கின்றார் (Lehrer 1985: 292).

2.11.3. உருவக மாற்றலும் பொருண்மை மாற்றமும்

உருவக மாற்றத்திற்கும் பொருண்மை மாற்றத்திற்கும் இடையில் உள்ள உறவைப் பல அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பேசுபவரோ எழுதுபவரோ (அல்லது பேசுபவர்களோ எழுதுபவர்களோ) ஒரு சொல்லை உருவக அடிப்படையில் பயன்படுத்துவர்; அப்பயன்பாடு அச்சமூகத்தில் உள்ள மொழி பேசுபவர்களிடன் பரவினால் அச்சொல் ஒரு புதிய அர்த்தத்தைப் பெற்றுவிட்டது என்று கூறலாம். (பழைய பொருண்மை தக்கவைக்கப்படவோ மறைந்துவிடவோ செய்யலாம்.)

ஆர்வமூட்டக்கூடிய ஒரு குறிப்பிட்ட நேர்வு புலனுணர்வையும் கட்புலனுணர்வையும் குறிப்பிடும் சொற்களுக்கு இடையில் காணப்படுகின்றது.வில்லியம்

(Williams 1976) மாற்றல்கள் ஒரு திசையில் இருக்கும் பெயரடைகளுக்கு இடையில் காணப்படும் பொருண்மை மாற்றத்தின் விதியை முன்மொழிந்துள்ளார்

(18)



லேரர் (Lehrer 1978:96) இத்தரவுக்கு மாற்று ஆய்வை முன்மொழிகின்றார்: "ஒரு பொருண்மைக் களத்தில் ஒரு குழுமச் சொற்களுக்கு பொருண்மை உறவுகள் இருந்தால் மற்றும் மற்றொரு பொருண்மைக் களத்தில் ஒன்றோ அதற்கு மேற்பட்ட சொற்கள் அமைப்பொழுங்கை வெளிப்படுத்தினால் முதல் பொருண்மைக் களத்தைச் சார்ந்த பிற சொற்கள் இரண்டாவது பொருண்மைக் களதிற்குப் பொருண்மை நீட்சிசெய்யத் தயாராய் இருக்கும். லேரர் (Lehrer 1983) பரிமாணச் சொற்கள் (dimension words) சுவைப் பொருண்மைக் களத்திற்கு மாற்றல் பெறுவதை சான்றாகக் காட்டுகின்றார்.

லேரர் பொருண்மைக் களங்களாக ஒழுங்படுத்தப்பட்ட அகராதியை/ சொற்களஞ்சியதை மெய்ப்படுத்தம் செய்யும் பொருண்மைக் களக் கோட்பாடு பெருண்மை மாற்றம் பற்றிய நமது புரிந்துகொள்ளலுக்குப் பங்களிக்க இயலும் என்று காட்டுகின்றார்.

2.12. பொருண்மை நீட்சி

ஒரு சொல் அது கொண்டுள்ள பொருண்மையிலிருந்து புதிய பொருண்மைக்கு பொருண்மை நீட்சி அடைவது பழைய பொருண்மைக்கும் புதிய பொருண்மைக்கும் இடையில் அம்மொழியைப் பேசுபவர் உணரும் ஒரு உறவால் அல்லது சில ஒற்றுமைகளால் ஊக்குவிக்கப்படுகின்றது (Lichtenberk 1991). லேகோஃப் (Lakoff 1987) பொருண்மை மற்றும் செயல்பாட்டு நீட்சிகள் முழுவதும் தன்னிச்சையானது என்கிறார்.

ஒரு நீட்சி நடந்தால் அது பெரும்பாலும் புரிந்துகொள்ளப்படும். லாங்கேகர் (Langacker, 1987) ஒரு மொழி அலகின் எல்லாப் பகுதிகளும் ஒன்றுபோல் முக்கியத்துவமானதல்ல. ஒரு சொல்லின் முழுப் பொருண்மையின் சில நோக்குகள்/நேர்வுகள் பிறவற்றைவிட மையத்தன்மை உடையதாய் இருக்கும். ஒத்தறி அடிப்படையில் மைய நோக்குகள்/ நேர்வுகள் அச்சொல்லின் பொருண்மையாக பெரும்பாலும் எண்ணப்படுவன ஆகும். இருப்பினும் அம்மாதிரியான பகுதிகள் முழு பொருண்மையையும் தீர்த்துவிடாது. பொருண்மையின் முக்கிய நேர்வுகள் அடிப்படையிலான விளைவுகள் தரப்பட்டுள்ள சொல்லின் முழுப் பொருண்மையில் உட்படுத்தப்பட்டுள்ளது (Lichtenberk 1991). பொருண்மையின் முக்கிய நோக்குகளும்/நேர்வுகளும் மற்றும் அவற்றின் அடிப்படையிலான விளைவுகளும் ஒரு பொருண்மை அல்லது செயற்பாடு நீட்சியை உட்படுத்தலாம். வேறுபட்ட கூறுகள் (components) அல்லது துணை அமைப்புகள் (substructures) ஒரு அடிப்படையில் வற்புறுத்தப்படுகையில் ஒரு சொல் அலகின் அல்லது கட்டுமானத்தின் வேறுபட்ட அர்த்தங்கள் வெளிக்கொணரப்படும்.

பொருண்மையின் அகவயமான (subjective) மற்றும் திறந்த-இறுதி இயல்பு (open-ended nature) செயல்பாட்டு மொழியியலார்களால் (functional linguists) மேம்படுத்தப்பட்டுள்ளது (e.g. Jakendoff, 1983; Lakoff, 1987; Langacker, 1987 and 1988); Lichtenberk, 1991). லிச்சன்பெர்க் (Lichtenberk, 1991) மொழியியல் வெளிப்பாடுகளின் பொருண்மைகள் இந்த இயல்நிகழ்வுகளின் பண்புகளின் வெறும் பிரதிபலிப்புகள் அல்ல என்று கூறுகின்றார். மாறாக அவை இயல்நிகழ்வின் நமது கருத்துவாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது மற்றும் இந்த அர்த்தத்தில் அவை அகவயமானதாகும். பொருண்மைகளின் இந்த அகவயமான மற்றும் திறந்த-இறுதி

இயல்பு இயல்நிகழ்வுகளுக்கு இடையே புதிதாக உணரப்படும் உறவுகளை வெளிப்படுத்த புதிய அனுபவங்களுக்கு மொழி அலகுகளைப் பயன்படுத்த இயலச்செய்கின்றது. புதிய வகைபாடுகளை உருவாக்க அல்லது இருக்கின்ற வகைபாடுகளின் ஒப்பனையை மாற்றவும் வேறுபட்ட புலனறிவு பொருண்மைகளங்களில் இருந்து ஒவ்வொரு இயல்நிகழ்வுகளையும் தொடர்பு படுத்தவும் செய்கின்றது (Lichtenberk, 1991:477).

மனித கருத்துருவாக்கம் தான் (அதாவது உருவகம் மற்றும் ஆகுபெயர்) அனுபவத்தின் ஒரு புலனறிவு பொருண்மைக் களத்திலிருந்து அனுபவத்தின் மற்றொரு புலனறிவு பொருண்மைக்களத்திற்குக் கருத்துருக்களைப் பயன்படுத்த புலனுணர்வு கருவிகளை மொழி பயன்படுத்துவோர்களுக்குத் தருகின்றது (Black, 1979; Reddy, 1979; Lakoff & Johnson 1980; Lakoff 1987; Lichtenberk, 1991). மனிதக் கருத்துருவாக்கம் வழியாகப் பொருண்மை அல்லது செயல்பாட்டு நீட்சி நிகழ வேறுபட்ட புலனறி பொருண்மைக்களத்திலிருந்து இயல்புநிகழ்வுகளுக்கு இடையில் ஒரு ஒற்றுமையின் முந்தைய புலனுணர்வின் எதாவது ஒரு வகை இருக்கவேண்டும் (Lichtenberk, 1991). தரப்பட்ட கருத்துருசார் பொருண்மைக்களம் மற்றொரு பொருண்மைக் களம் அடிப்படையில் அமைக்கப்படவேண்டியதன் காரணம் பிந்தையது அடிப்படையில் மனிதவினம் முந்தையதைக் கருத்துவாக்கம் செய்கிறது என்பதல்ல; பேசுபவர்கள் வேறுபட்ட புலனறிவு பொருண்மைக் களங்களில் ஒற்றுமையுள்ள பொருளடக்கத்தைக் கருத்துருவாக்கம் செய்ய உருவம்சார் செயல்திறனைக் கொண்டிருக்கின்றனர் (Jackendoff 1983; Langacker, 1987; Shen 1995). பொருண்மைக்களத் தேர்வோ அல்லது மாற்றமோ (எ.கா. சில புலனுணரப்பட்ட ஒற்றுமைகள் அடிப்படையில் இடப் பொருண்மைக் களத்திலிருந்து காலப் பொருண்மைக் களத்திற்கு நீட்டுதல்) மொழி அலகுகளின்

பொருண்மைசார் அல்லது செயற்பாடுசார் நீட்சிகளை ஊக்குவிப்பதில் ஒரு முக்கியப் பங்களிப்பு செய்கின்றது.

2.13. வினைகளில் அர்த்த நீட்சி

இங்கு வினைகளின் அர்த்தநீட்சிக்குக் காரணமாய் இருக்கும் இயங்குமுறையை (mechanism) விளக்கும் புஸ்தெஜோவ்ஸ்கி மற்றும் ரம்ஷிஸ்கி என்போரின் கட்டுரையில் கூறியுள்ள செய்திகள் பேசப்படுகின்றன (Pustejovsky and Rumshisky 2010). சொல் பொருளடக்கத்தைப் படைபாக்கமாகக் கையாளுவது மொழிப் பயன்பாட்டின் தரக் குறியீடாகத் தெரிகின்றது. சூழலில் சொற்களின் பொருண்மைகளைப் பயனிலையால் எதிர்பார்க்கப்படும் தேர்வு விருப்பத்தின் (selectional preference) சிறிய இணக்கங்களிலிருந்து பயனிலையின் மையப் பொருண்மை மதிப்புடன் தொடர்புடைய முக்கியத்துவமுள்ள கருத்துப்பொருள்கள் வரை பல வேறுபட்ட வழிகளில் மாற்றியமைக்க இயலும் (Pustejovsky and Rumshisky 2010). இந்த உபாயங்கள் பங்கெடுப்பாளர் தேர்வில் அடிக்கடி நேரும் வகைப் பொருத்தமின்மைகளைக் கணிக்கும் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டில் (generative lexicon theory) அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வகையைத் தக்கவைக்கும் கட்டாய இயங்குமுறைகளிலிருந்து (type-preserving coercion mechanisms) வேறுபடும் (Pustejovsky 1995). புஸ்தெஜோவ்ஸ்கியும் ரம்ஷிஸ்கியும் (Pustejovsky and Rumshisky 2010) பொருண்மையின் வேறுபட்ட அளபுகள் பயனிலையின் செயன்மை செய்யும் முறையான செயற்பாங்குகளிலிருந்து விளைகின்றது என்று கருதுகின்றனர். அவர்கள் அடையாளம் கண்டுள்ளவைப் பின்வருவனவற்றை உட்படுத்தும்:

அ. ஒரு பயனிலையின் பங்கெடுப்பாளரின் வகையைப் பொதுமைப்படுத்துதல்

ஆ.பங்கெடுப்பாளர் அமைப்பையும் பங்கெடுப்பாளரின் ஒத்தறி அடிப்படையிலான முக்கியத்துவத்தையும் மாற்றுவது.

இ. இறுதியாக, வினையின் மையப் பொருண்மையைப் பிரித்தெடுப்பது.

அவர்கள் அம்மாதிரியான சலனப் பயனிலைகள், இட (locative) மற்றும் வெளியிட (spatial) உறவுகள், நிலைமாற்றப் பயநிலைகள் (change-of-state predicates) என்பனவற்றையும் உட்படுத்தி பல வினை வகுப்புகளில் அளவன் போன்ற அர்த்த நீட்சிகளை நிரூபிக்கின்றனர். மேலும் அவர்கள் உருவகப் பொருள்கோள்கள் அமைப்பாக்கம் செய்யப்பட்டவை மற்றும் அளவன் அடிப்படையிலானவை என்ற கருதுகோளைப் பரிசோதனை செய்கின்றனர். பருமைத்தன்மையான பயனிலைகளுக்கு அருவத்தன்மையான உருவகப் பொருகோள்கள் குறைந்த அளவு உருவகத்தன்மையை வெளிப்படுத்தும் உடனடியான அர்த்தங்களால் பின் தொடரப்படவேண்டும் என்ற பின்விளைவை ஏற்படுத்தும் என்று கருதுகின்றனர்.

2.13.1 அர்த்தங்களுக்கு இடையேயுள்ள உறவுகள்

ஒரு சொல்லுக்கு இருக்கும் ஒரு குழும அர்த்தங்களை விளக்குவது சொற்பொருண்மையியலின் செயல்பாடுகளில் ஒன்றாகும்; இது கோட்பாட்டு மொழியியலில் இருந்து அகராதியியல் வரை, அகராதியியலில் இருந்து சொல் அர்த்த அறிமுகம் மற்றும் பொருண்மை மயக்கம் பற்றிய கணினிசார் செயல்பாடுவரை எல்லாத் தாக்கமுள்ள களங்களிலும் பயிற்சி செய்பவர்களை நழுவவிட்டுள்ளது. குறிப்பாகப் பல்பொருளொருமொழியத் தன்மையுள்ள வினைகளுக்கு தொடர்புள்ள பொருண்மைகளின் குழுமங்கள் இச்செயல்பாட்டை மேலும் கடினமாக மாற்றுகின்றது.

அகராதியலில் அகராதி உருவாக்கத்தின் போது அர்த்தங்களை “சேர்க்கும் மற்றும் பிரிக்கும்” அதாவது எப்போது ஒரு குழுமப் வழக்காறுகளை/பயன்பாடுகளைத் தனி

அர்த்தமாக விளக்கவேண்டும் என்பதைத் தீர்மானிப்பது மிகவும் அறியப்பட்ட சிக்கலாகும் (Hanks and Pustejovsky, 2005; Kilgarriff,1997; Apresjan, 1973). இது பெரும்பாலும் தற்காலிக அடிப்படையில் தெளிவிக்கப்படும்; இது பல "மேலுறல் செய்யும் அர்த்தங்களில்" விளையும்; அதாவது ஒரே நிகழ்ச்சி ஒன்றுக்கும் மேற்பட்ட அர்த்த வகைப்பாட்டில் ஒரேசமயத்தில் இருக்கும் நேர்வுளில் விளையும். இந்தச் சிக்கலும் சொல் பொருண்மையியலில் ஆழ்ந்த ஆய்வின் விவாதப்பொருளாக அமைந்து பின்வரும் கேள்விகளை எதிர்கொள்கின்றது: எப்போது சூழல் ஒரு தனித்தன்மையான/வேறுபட்ட அர்த்தத்தைத் தெரிந்தெடுக்கின்றது மற்றும் எப்போது அது பொருண்மையை மாற்றியமைக்கின்றது?, தொடர்புள்ள அர்த்தங்களுக்கு இடையிலுள்ள முறையான உறவு என்ன?, அர்த்தத் தெரிந்தெடுப்பில் எந்தக் கூட்டமைப்பு/இணைப்பாகச் செயல்பாடு சம்பந்தப்பட்டிருக்கின்றது? (Pustejovsky, 1995; Cruse,1995; Apresjan, 1973). மரபாகப் பல தொடரியல் மற்றும் பொருண்மையியல் பரிசோதனைகள் அர்த்தத்தை அடையாளம் காண்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன: ஒருபொருள்பன்மொழிகளின் தொகுதியைப் பரிசோதிப்பது, இயைபுள்ள தொடரியல் சூழல்கள் (compatible syntactic environment), குறுக்குப் புரிந்துகொள்கை (cross-understanding) அல்லது சிலேடைப் பரிசோதனை (zeugma test); ஆனால் இவைகளில் எந்தப் பரிசோதனையும் அறுதியானதோ உலகப்பொதுவாகப் பயன்படுத்தத் தக்கதோ அல்ல.

வினைகளைப் பொறுத்தமட்டில் குழப்பம் ஊட்டும் காரணிகளில் ஒன்று இணை-இணைப்பாக்கம் ஆகும்; ஏனென்றால் பல நேர்வுகளில் வினையின் ஒட்டுமொத்தமான பொருண்மையை நிர்ணயிக்கப் பங்கெடுப்பாளர்களின் பொருண்மையியல் சிறப்பாகப் பங்களிப்பு செய்கின்றது. பல்வேறு தற்கால அடையாளப்படுத்தும் முயற்சிகள்

பல்பொருளொருமொழியப் பயனிலைகளின் வேறுபட்ட அர்த்தங்களுடன் வரும் சூழல் தனிமங்களைப் பட்டியலிட/கணக்கிட முயல்கின்றன. குறிப்பாக, பிரேம்நெட் (FrameNet) மற்றும் ப்ராப்பாங் (Propbank) என்பன பொருண்மைப் பங்களிப்பு புலக்குறிப்புகள் (semantic role labels) அடிப்படையில் வினைகளின் பங்கெடுப்பாளர்களுக்கு உரியதாகக் கூறப்படும் பொருண்மைப் பொருள்கோளை குறிப்பிடும் இரு சொல்சார் மூலவளங்கள் ஆகும். இருப்பினும் இரண்டும் பங்கெடுப்பாளருக்கு உரியதாகக் கூறப்படும் பொருண்மைப் பொருள்கோளின் அடிப்படையிலோ அல்லது வினையின் உண்மையான அர்த்தத்தின் அடிப்படையிலோ வேறுபட்ட அர்த்தங்களுக்கு இடையிலுள்ள உறவுகளைப் பற்றிய தகவலைப் பதிவு செய்யவில்லை (Pustejovsky and Rumshisky 2010).

ப்ராப்பாங் (Propbank) (Palmer et al, 2005) சட்டகக் குழுமங்கள் (frame-sets) அடிப்படையில் வினையின் அர்த்தங்களை விளக்குகின்றன; இங்கு ஒவ்வொரு சட்டக் குழுமமும் வினையின் பங்கெடுப்பாளர்களுக்கு (arguments) உரிய பொருண்மைப் பங்களிப்புகளின் (semantic roles) ஒரு குழுமத்தைக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு அர்த்தத்திற்கும் ஒரு தனிப்பட்ட பங்களிப்புகளின் குழுமம் குறிப்பிடப்பட்டு ஒவ்வொரு வினைக்கும் என்ற அடிப்படையில் பொருண்மைப் பங்களிப்புகள் வரையறைவிளக்கம் செய்யப்படுகின்றது. முறையே பங்கெடுப்பாளர் 0 (Arg0) மற்றும் பங்கெடுப்பாளர்1 (Arg1) என்பவைகளுக்குத் தரப்பட்டுள்ள தரமான வினைமுதல்/செயலி (Agent) மற்றும் பாதிக்கப்படுபவர் (ஆளாபவர்)/கருப்பொருள் (Patient/Theme) என்பன தவிர வேறுபட்ட அர்த்தங்களுக்குப் பங்களிப்புகளுக்கு இடையில் எந்த உறவும் அனுமானிக்கப்படவில்லை.

சட்டகவலை (FrameNet) (Ruppenhofer et al., 2006) ஒவ்வொரு அர்த்தத்திற்கும் (சட்டகத்தைத் தருவிக்கும் சொல்சார் அலகு (frame-evoking lexical unit) குறிப்பிடப்பட்ட

பொருண்மையியல் மற்றும் தொடரியல் சேர்க்கைகளின் சாத்தியங்களுடன் ஆவணமூலம்-போன்ற (script-like) சட்டகங்களின் அடிப்படையில் சொல்சார் தகவல்கள் எல்லாம் ஒழுங்குபடுத்துகின்றது. சட்டகவலை பங்கெடுப்பாளர்களின் பொருண்மையியலை உருப்படுத்தம் செய்ய பில்மோரின் வேற்றுமைப் பங்களிப்புகளை (case roles) பயன்படுத்துகின்றது. ஒவ்வொரு சொல் அலகிற்கும் உரிய சூழல் விவரக்குறிப்பீடு வேற்றுமை பங்களிப்புகள் (எ.கா. பழிவாக்குதல்/Revenge சட்டகத்திற்கு பழிவாங்குபவர்/avenger, தண்டனை/punishment, குற்றவாளி/offender, ஊறு/injury போன்றவை) மற்றும் இலக்கணச் செயற்பாடையும்/grammatical function (செயப்படுபொருள்/object, சார்ந்திருப்பவர்/dependent, வெளிப் பங்கெடுப்பாளர்/external argument (=எழுவாய்/subject) போன்றவை) தொடர் வகையும்/phrase type (எ.கா. NP, PP, PPto, VPfin, VPing, VPto போன்றன) உள்ளடக்கிய அவற்றின் தொடரியல் மெய்படுத்தங்கள்.

சட்டகவலையில் வேற்றுமை பங்களிப்புகள் (சட்டகத் தனிமங்கள்) ஒவ்வொரு சட்டகத்திற்கும் தற்காலிக அடிப்படையில் ஆக்கப்படுகின்றது; மற்றும் ஆய்வு ஒவ்வொரு சட்டகமாகத் தொடர்வதால், பெரும்பாலும் பல்பொருளொருமொழிய வினையின் ஒன்றோ இரண்டோ அர்த்தங்கள் மட்டும் அவற்றுடன் தொடர்புடைய சட்டகப் பொருள்கோளைக் கொண்டிருக்கும். வேறுபட்ட அர்த்தங்களுக்கு இடையில் உள்ள உறவுகளின் ஆய்வுக்குப் பொருத்தமான ஒரு சட்டகவலை இயக்கமுறை இடைநிலை-சட்டகங்களின் உறவுகளின் இயக்கமுறையாகும். எடுத்துக்காட்டாக, சட்டகவலை ஓட்டு/drive என்ற வினக்கு மூன்று அர்தங்களையே கொண்டுள்ளது. ”காரில் போதல்”

என்ற முதல் அர்த்தம் இயக்க சட்டகத்தைப் பயன்படுத்தும் கொண்டுவருதல் சட்டகத்துடன் தொடர்புடையது. "தன் சொந்த ஆற்றலால் அல்லது (ஒரு ஊர்தியின்) ஓட்டுபவரால் இயக்கப்பட்டு இயங்கு" என்ற இரண்டாவது அர்த்தம் இயக்கச் சட்டகத்திலிருந்து மரபுரிமையாகப் பெற்ற தற்சார்பு-இயக்கத்துடன் தொடர்புடையது. இருப்பினும் இவ்வகை விவரக்குறிப்பீடு எளிய பொருத்தத்திற்கு அப்பால் வேறுபட்ட அர்த்தங்களுக்குப் பங்கெடுப்பாளர் நிலைகளை நிரப்பும் தனிமங்களுக்கு இடையிலுள்ள உறவுகளைப் பற்றிய தெளிவான அறிவைத் தருவதில்லை.

புஸ்த்ஜொவிஸ்கியும் ரும்ஷிஸ்கியும் (Pustejovsky, James & Rumshisky) தமது கட்டுரையில் வினைகளின் அர்த்த நீட்சிக்குப் பங்களிக்கும் இருகாரணிகளை அதிக அளவில் முறையாக ஆகின்றனர்: (அ) பங்கெடுப்பாளர்களின் பொருண்மை வகையில் மாற்றங்கள் (changes in the semantic type of arguments) (ஆ) பங்கெடுப்பாளர் அமைப்பில் மாற்றங்கள் (changes in the argument structure). பயனிலை அர்த்தங்களை உறவுபடுத்தும் இயக்கமுறைகளை ஒரு பயனிலையின் பொருண்மையை நீட்சிசெய்வதற்கு மொழியில் பயன்படுத்தப்படும் செயற்திட்டங்களாக அல்லது ஒரு அர்த்தத்திலிருந்து மற்றொரு அர்த்தத்திற்கான நிலையான முறையான பொருத்தங்களாகக் காணலாம்.

2.13.2 உருவகத்தைக் கையாளல்

மொழியில் அர்த்த நீட்சியின் இயக்கமுறைகளாக உருவகமும் ஆகுபெயரும் வரலாற்றுப் பொருண்மை மாற்றத்தின் சூழலில் விரிவாக ஆயப்படுள்ளது. கழிந்த நூற்றண்டுகளில் புளூம்ஃபீல்டு, ஸ்டெர்ன், உல்மான் மொழியியலார்கள்களும் அதற்கு முன்னர் ஜெஸ்பர்சன், ப்ரெயல் போன்றோரும் பல பொருண்மை பிறழ்வின்/அகற்சியின் வகைபாட்டியகளை முன்மொழிந்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக புளூம்ஃபீல்டு இந்த

இயக்கமுறைகளுக்குப் பின்வரும் எடுத்துக்காட்டுகளைத் தந்துள்ளார்: Germanic 'biting' > 'bitter' (metaphor, based on similarity/ஒற்றுமை அடிபடையிலான உருவகம்); Old French 'joue' > jaw (metonymy, based on spatial or temporal contiguity/இட அல்லது கால அண்மை அடிப்படையிலான ஆகுபெயர்).

மிக அண்மைக்காலத்தில் சாரிகோவ் மற்றும் ஜெண்ட்னர் (Zharikov and Gentner, 2002) என்போர் ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியிலிருந்து தரவைப் பயன்படுத்தி தொடக்க நேரடிப் பொருண்மை பெரும்பாலும் உருவக பயன்பாட்டால் உவமைகளாலும் பிற ஒப்பீடுகளாலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காட்ட பெயர்களின் உருவகப் பொருண்மைகளின் வரலாற்று அடிப்படையிலான வளர்ச்சியை ஆய்கின்றார்; அவை காலத்தால் கண்டிப்பான உருவகப் பயன்பாட்டால் இடப்பெயர்ச்சி செய்யப்பட்டு முடிவில் இரண்டாம்நிலைப் பொருண்மைகளாக மாறியுள்ளன.

மற்றொரு அண்மையிலுள்ள ஆய்வு ஹாங்ஸ் (Hanks, P. 2006) என்பவரால் செயப்பட்ட ஆய்வாகும். அவர் பெரும்பாலும் பெயர் சார் உருவகங்களை ஆய்ந்து உருவக வெளிப்பாடுகள் உள்ளடங்கியிருக்கின்ற 'சட்டகம்' அடிப்படையில் உருவகத்தன்மையின் வேறுபட்ட அளகைகள் இருக்கும் என்று முன்மொழிகின்றார். மூல மற்றும் இலக்கு பொருண்மைக் களங்களுக்கு இடையிலுள்ள ஒத்திசைவின் ஒத்தறி வலுவின் கருத்துச்சாயலைத் தான் அவர் நிரலாக்கம் செய்யவியலும் உருவகத்தன்மை (gradable metaphoricity) என்கின்றார். உருவகத்தன்மையின் வேறுபட்ட அளகைகள் இருக்கின்றன அல்லது அவர் கூறுவதுபோல் "சில உருவகங்கள் பிறவற்றைவிட அதிக உருவகத்தன்மையுடன் உள்ளன' என்ற கருத்துச்சாயல் பெயர் அடிப்படையிலான உருவகத்தின் சூழலில் ஹாங்சால் ஆயப்படுகின்றது. இலக்குப்

பொருண்மைக்களத்திற்கும் (target domain) மூலப் பொருண்மைக் களத்திற்கும் (source domain) இடையில் பங்கிடப்பட்டுள்ள பண்புகள் அதிகப்படுவதைப் பொறுத்து உருவகம் குறைந்த உருவகத்தன்மை கொண்டிருக்கும் என்று கூறுகின்றார். *sea* என்ற பெயரின் உருவகப் பயன்பாட்டில் உருவகத்தன்மையின் வேறுபட்ட அளகைகள் இருக்கும் என்பதற்கான எடுத்துக்காட்டு கீழே தரப்பட்டுள்ளது (Pustejovsky and Rumshisky 2010).

(19) a. sea of [[Substance]]: mud, acid, snow, fire, foliage

b. sea of [N-Plural[Physical Object]]: faces, hats, umbrellas, hands

c. sea of [[Color—Light]]: light, darkness, blue, green, red and white

d. sea of [[Abstract]]: sensation, data, debt, misery, uncertainty, heartbreak, poverty, pleasure

e. sea of [N-Plural[Event]]: market transactions, activity, lies, troubles

உருவகங்களை நீட்சிசெய்ய இயலும்; எனவே "இரண்டாம் நிலை எழுவாயின்" பிற தொடர்புள்ள சொற்களும் கருத்துருக்களும் தலையிடும்படி செய்யப்பட்டால் இலக்கு மற்றும் மூலத்திற்கு இடையிலுள்ள ஒத்திசைவு அதிகரிக்கப்படவும் நீட்சி செய்யப்படவும் செய்யப்படும். ஹாங்ஸ் குறைந்த உருவகத்தன்மையான நேர்வுகள் பனுவலில் மேலும் நீட்சி செய்யப்படும் சாத்தியம் குறைவாகும் என்று முன்மொழிகின்றார்.

மொழியில் உருவகத்தைப் பற்றிய பல ஆய்வுகள் வினைசார் அர்த்த நீட்சியை உருவாக்குவதற்கு ஆக்கமுறை இயக்கமுறையாக உருவக இடமாற்றத்துடன் கையாளப்படவில்லை; மற்றும் போதுமான விளக்கங்களுடன் பொருத்தமான இயல்நிகழ்ச்சியை நேரிடவில்லை. 'இலக்கு' மற்றும் 'மூல' கருத்துருப் பொருண்மைக் களங்களுக்கு இடையிலுள்ள பொருத்தத்தின் அடிப்படையில் உருவகம் ஆயப்பட்டுள்ளது;

இதில் இலக்குப் பொருண்மைகளத்தின் தனிமங்கள் மூலப் பொருண்மைக்களத்தின் தனிமங்கள் அடிப்படையில் மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

உருவக இடமாற்றம் பற்றிய முக்கியமான சில ஆய்வு, அது பயனிலை அர்த்த நீட்சியுடன் தொடர்புகொள்வதால் இந்தப் பொதுவான பொருத்தமான உபாயத்தை அதிக விரிவாகப் பயன்படுத்துவதாகத் தெரிகின்றது. எடுத்துக்காட்டாகக் கீழே தரப்பட்டுள்ள பொருத்தமான தரவில் லாகோஃபின் (Lakoff, 1993). ஆய்வைக் கருத்தில் கொள்ளவும். இரண்டு உருவகம்சார் பொருத்தங்கள் முற்கோள் செய்யப்படுகின்றன; ஒவ்வொன்றையும் எடுத்துரைக்கப் பல எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன (Pustejovsky and Rumshisky 2010).

(20) அ. Starting an Action is Starting out on a Path

ஒரு செயலைத் தொடங்குவது என்பது ஒரு பாதையில் தொடங்குவதாகும்

We are just starting out.

நாங்கள் புறப்பட்டுவிட்டோம்

We have taken the first step.

நாங்கள் முக்கியமான நடவடிக்கை எடுத்துவிட்டோம்.

ஆ. Success Is Reaching The End of the Path

வெற்றி பாதையின் இறுதியை அடைவதாகும்.

We’ve reached the end.

We are seeing the light at the end of the tunnel.

We only have a short way to go.

The end is in sight.

The end is a long way off.

இருப்பினும் இந்த நேர்வுகளில் வலுவான உருவகப் பொருகோள் இணைப்பாக்க வினையாற்றுவகை பொருகோள்கள் (compositional aspectual interpretations) எனத் தோன்றுவதுடன் குழப்பப்படுகின்றது. இந்த எடுத்துக்காட்டுகளைப் பற்றி இரண்டு விசயங்கள் கவனிக்கப்படவேண்டும்: முதலாவது அவை தொடங்கும் மற்றும் முடியும் செயல்பாடுகளை உட்படுத்துகின்றன. இரண்டாவது பெயர்கள் பொதுவான செயற்பாடுசார் வெளிப்பாடுகள் ஆகும்; அவை பாதையைக் குறிப்பிடும் வெளிப்பாடுகள் கூட அல்ல. இறுதியாக “The end is in sight” என்பதில் உருவகக் கலவையின் நேர்வு இருந்தால் ஒழிய இது ஒரு பாதை உருவகமே அல்ல; மாறாக புலனுணர்வுசார் உருவக நீட்சியாகும்.

இலக்கு மற்றும் மூல பொருண்மைக்களங்களுக்கு இடையில் உள்ள உருவக இடமாற்றத்தின் இக்கருத்து சிலவேளைகளில் சூழலின் ஆய்வால் துணைநிறைவு செய்யப்படுகின்றது; இங்குச் சூழல் உருவகத்தின் கவனக்குவிப்பாகச் செயல்படும் சொல்லில் உட்படுத்தப்பட்டுள்ள ‘சட்டகம்’-ஆகப் (Black, 1962) பார்க்கப்படுகின்றது. சான்றாகக் கீழே தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டில் plow/உழு என்ற வினை உருவகத்தின் கவனக்குவிப்பாகப் பார்க்கப்படுகின்றது; ஏனென்றால் இச்சொல் ஒன்றுதான் உருவகமாகப் பயன்படுத்தப்படுகின்றது; அதே சமயம் உருவகத்தின் சட்டகத்தை உருவாக்கும் வாக்கியத்திலுள்ள பிற சொற்கள் அதன் நேரடி அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது (Pustejovsky and Rumshisky 2010).

(21) அ. The chairman plowed through the discussion.

ஆ. I like to plow my memories regularly.

பிளாக் மேலேயுள்ள இரு வாக்கியங்களில் உள்ள plow/உழு என்பதன் உருவகப் பயன்பாடு ஒரே உருவகத்தின் நேர்வுகளாகக் கருதப்படவோ கருதப்படாமலோ இருக்கலாம்; இருப்பினும் இந்தக் கேள்வியைத் தீர்த்துவைப்பதற்கு முறையான இயக்கமுறையைத் தரவில்லை என்று சுட்டிக்காட்டுகின்றார்.

பங்கெடுப்பாளர் வகையை உட்படுத்தும் இயக்கமுறைகளின் சில வாதங்கள் பொருத்தமின்றி இருக்கின்றது என்பது ஃபாசின் (Fass, 1988) ஆய்வில் தரப்பட்டுள்ளது; இது வாகனத்திற்கும் உருவகத்தின் தலைப்புக்கும் இடையில் பண்பு பொருத்தம் வழி தீர்க்கப்படவேண்டிய இறுக்கத்தின் மூலமாக ஒரு குறிப்பிட்ட பங்கெடுப்பாளர் வகைக்கு வினையின் விருப்பத்தின் பொருத்தமின்மையை முன்மொழிகின்றது. எடுத்துக்காட்டாகப் பின்வருவதில் *drink* என்பதற்கு விலங்குச் செயலி விருப்பம் இருக்கின்றது; இது வகைப் பொருத்தம் இன்மையின் (a car is not an animal) காரணமாக இறுக்கத்தை உருவாக்குகின்றது.

(22) The car drank gasoline.

இந்த இறுக்கம் மூல பொருண்மைக்களத்திலிருந்து ஒரு தனிமத்தின் முக்கியமான பண்பிற்கும் இலக்குப் பொருண்மைகளத்திலிருந்து ஒரு தனிமத்தின் பண்பிற்கும் இடையில் ஒப்புமைசார் பொருத்தம் கண்டுபிடிக்கப்படுகையில் தீர்த்துவைக்கப்படுகின்றது: கார் காசொலினை உட்கொள்கின்றது போன்று விலங்குகள் குடிக்க இயலும் நீர்மங்களை உட்கொள்கின்றது. இந்த முக்கியமான பண்பு உருவகத்திற்கு அடிப்படையாகப் பயன்படுகின்றது. இந்த இரண்டு பொருண்மைக்களத்திற்கும் பிற பொருத்தமுள்ள (விலங்குகளும் கார்களும்/ஊர்திகளும் முப்பரிமாணக் கடினப்பொருள்களாகும் போன்ற) பண்புக்கூறுகளைப் பயன்படுத்தி

பொருத்தம் உருவாக்கப்பட்டுள்ளது. தலைப்புக்கும் ஊர்திக்கும் இடையிலுள்ள ஒற்றுமைகள் அதிகமாக இருப்பதைப் பொறுத்து உருவகமும் செம்மையாய் அமையும்.

கிருஷ்ணகுமரன் மற்றும் சூ (Krishnakumaran and Zhu, 2007) வினியோக/பகிர்வுசார் தகவலைப் பயன்படுத்தி பனுவலில் உள்ள சாத்தியமான உருவகம்சார் பயன்பாடுகளை அடையாளம் காண இதே கருதுதல்களைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் ஒரு குறிப்பிட்ட வினை தரப்படுகையில் ஒரு பெயரின் சொல்வலை உள்ளடங்குச் சொல்லின் கட்டுப்பாட்டுச் சாத்தியங்களை நோக்கி கீழே தரப்பட்டுள்ளது போன்ற உருவகப் பயன்பாட்டை அடையாளம்காண முன்மொழிகின்றனர் (Pustejovsky and Rumshisky 2010).

(23) He planted good ideas in their minds.

இருப்பினும் இந்நேர்வில் இலக்கு மற்றும் மூலப் பொருண்மைக்களங்களுக்கு இடையில் முக்கியமான பொருத்தத்திற்கான பண்புக்கூறுகளை பயனிலை தருகின்றது என்ற உண்மைக்குப் புறம்பாக அவர்கள் இம்மாதிரியான எடுத்துக்காட்டுகளைப் பெயர்களின் உருவகப் பயன்பாடுகள் என்று கருதுகின்றனர்.

2.13.3 அர்த்த நீட்சி இயக்கமுறை

ஒரு வழக்கு மொழியில் ஒரு குறிப்பிட்ட சொல்லுக்கு எத்தனைப் பொருண்மைகளை நாம் உருவாகுகின்றோம் என்ற கேள்விக்குப் பதில் தருவது சாத்தியமல்லாதது என்றாலும், நாம் நமது மன அகராதியில் (mental lexicon) அந்தச் சொல்லுக்கு எத்தனைப் பொருண்மைகளைச் சேகரித்து வைத்துள்ளோம் என்ற கேள்வியை நாம் நியாயமாகக் கேட்கவியலும். இங்குதான் மொழியியலார் பொருண்மைப் பிறழ்வு நிகழ்கின்றதா, அப்படி என்றால் எவ்வாறு நிகழ்கின்றது என்பதைப் பற்றிய பொறுப்பை ஒப்படைப்பதில் பொதுவாக வேறுபடுகின்றார்கள்.

எடுத்துக்காட்டாக மொழிப் பொருண்மையின் மரபுவழி மாதிரிகளில் பொருண்மை மயக்கமுள்ள ஒரு வினை முற்றிலும் வேறுபட்ட சொல் அர்த்தங்களைக் கொண்டிருப்பதாக எண்ணப்படுகின்றது. ஒவ்வொரு அர்த்த்திற்கும் வினை ஒரு இணைப்பாக்க முறையில் (compositional manner) அதன் அளகைகள் (தொடரியலில் அதன் பங்கெடுப்பாளர்கள்) மீது செயல்படுகின்றது. இதன் பொருள் என்னவென்றால் வினையின் பங்கெடுப்பாளர்களுக்கு வினையின் செயல்பாட்டின் பயன்பாட்டின் விளைவின் பொருண்மையியல் செயல்பாட்டின் பொருண்மையிலால் நிர்ணயிக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக *throw* மற்றும் *kill* என்ற வினைகள் பல வேறுபட்ட அர்த்தங்களைக் கொண்டிருகின்றன (Pustejovsky and Rumshisky 2010).

(24) அ. Mary threw the ball to John.

PROPEL (HUMAN, THING)/ உந்து (மனிதன், பொருள்)

ஆ. They threw a party for Bill.

ORGANIZE (HUMAN, EVENT)

ஏற்பாடுசெய் (மனிதன், நிகழ்ச்சி)

இ. Mary threw breakfast together quickly.

CREATE(HUMAN, THING)/ உருவாக்கு(மனிதன், பொருள்)

ஒவ்வொரு வாக்கியத்திலும் *throw* என்பதன் பயன்பாடு உண்மையான வினைசார் பொருண்மை மயக்கத்தை (verbal ambiguity) எடுத்துக்காட்டுகின்றது; எடுத்துக்காட்டியுள்ளது போன்று ஒவ்வொன்றும் தனித்தனியான அர்த்தங்களை வேண்டும்; குறிப்பிட்ட துணைவகைப்பாட்டையும் (subcategorization) பொருண்மைத் தேர்வையும் (semantic selection) கொண்டிருக்கும். இதுபோல் *kill* என்ற வினையும் கீழே

காட்டியுள்ளது போன்று ஒழுங்கு முறையான அர்த்த வேறுபாடுகளை நிரூபிக்கும் (Pustejovsky and Rumshisky 2010) .

(25) அ. John killed the plant.

CAUSE-TO-DIE (THING, ANIMATE)/ இறக்கச்செய்(பொருள், விலங்கு)

ஆ. Mary killed the conversation.

TERMINATE (HUMAN, EVENT) /முடிவுகட்டு (மனிதன், நிகழ்ச்சி)

இ. John killed the evening watching TV.

SPEND (HUMAN, TIME) /செலவழி (மனிதன், காலம்)

throw என்ற வினையைப் போன்று இந்த அர்த்தங்கள் ஒவ்வொன்றும் கீழே எடுத்துக்காட்டியுள்ளது போல் முறையான மற்றும் விளைவாக்கமான விநியோகத்தை/பகிர்வைக் (productive distribution) கொண்டிருக்கும் (Pustejovsky and Rumshisky 2010).

(26) அ. Mary killed the fish.

ஆ. The President killed any attempt at dialogue with Cuba.

இ. John killed the time reading.

இம்மாதிரியான வினை அர்த்தங்கள் வேறுபட்டவை; பொருண்மை அலகுகள் ஒறுக்கொன்று தொடர்புள்ளனவாய் இருக்கலாம்; இருப்பினும் அகராதியில் தனித்தனியாகச் சேகரிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குத் தனிப்பட்ட துணை வகைப்பாடும் வகைத் தேர்வு சட்டகங்களும் (type selection frames) இருப்பதால் தொடரியலில் இந்த அர்த்தங்களை உள்ளடக்கிய பொருண்மைக் கணிப்பு இணைப்பாக்கமாக நடைபெறவியலும். *throw* மற்றும் *kill* என்ற வினைகளைக் கொண்ட இந்த

எடுத்துக்காட்டுகள், சொல்வடிவுகள் உண்மையில் பொருண்மை மயக்கம் உள்ளனவாய் இருக்கலாம் மற்றும் இதை அவ்வாறே அர்த்தத்தை கணக்கிடும்/பட்டியலிடும் சொல் (sense enumerative lexical (SEL)) மாதிரியால் போதுமான அளவு மாதிரிப்படுத்தலாம் (Pustejovsky, 1995) என்று எடுத்துக்காட்டுகின்றன.

இருப்பினும் ஒரு தனிநிலை அர்த்தத்தின் கணிப்புசார் நீட்சிகளான நெருங்கிய தொடர்புள்ள அர்த்தங்களுடன் இது அப்படிப்பட்டதல்ல. கீழே எடுத்துக்காட்டியுள்ளது போன்று *arrive* என்ற வினையின் வேறுபட்ட பயன்பாடுகளுடன் அது அப்படிபட்ட நேர்வாகத் தோன்றுகின்றது (Pustejovsky and Rumshisky 2010).

(27) அ. The car arrived at the store.

ஆ. The plane arrived at a cruising altitude of 30,000 feet.

இ. Mary has not arrived at her goal weight of 125 lbs. yet.

ஈ. The scientist finally arrived at a solution to the problem.

இந்த அர்த்தங்கள் ஒரு அர்த்த நீட்சித் தொடர்ச்சியை (sense extension cline) வெளிப்படுத்துகின்றது; இது *arrive* என்பதன் நேரடி அத்தத்திலிருந்து அவ்வினையின் உருவக அடிப்படையில் நீட்சிசெய்யப்பட்ட அர்த்தங்களின் வேறுபட்ட அளபுகளுக்கு எடுத்துச் செல்கின்றது.

அர்த்த நீட்சி இயக்குமுறைகளை (sense extension mechanisms) விளக்குவதற்காக நாம் ஒரு பயனிலையின் ஒரு குழும அர்த்தங்களில் ஒரு அர்த்தம் ஆதாரமானது (anchor) என்றும் பிற அர்த்தங்கள் எதோ மாற்றங்களால் (transformation(s)) உறவுபடுத்தப்பட்டுள்ளன அல்லது உறவு படுத்தப்படவில்லை என்றும் அனுமானம் செய்யவேண்டும் (Pustejovsky and Rumshisky 2010). உண்மையான பொருள்மயக்கம்

இருக்கின்றது; மற்றும் ஒரு பயனிலையின் எல்லா அர்த்தங்களும் தொடர்புபடுத்தப்படவில்லை; உறவில்லாத அர்த்தங்களை ஒருசொல்போலிகளாக கையாளவியலும்/கருதவியலும். இருப்பினும் புஸ்த்ஜோவிஸ்கியும் ரும்ஷிஸ்கியும் முறையான செயற்பாங்குகள் வழி ஆதார அர்த்தம்(கள்) தொடர்புள்ள அர்த்தங்களை உருவாக்க நீட்சி செய்யப்படுவதை அடையாளம் காணுவதில் ஆர்வம்காட்டுகின்றன.

தரவுத்தொகுதிகளிலிருந்துள்ள தரவைப் பயன்படுத்தி அவர்கள் வேறுபட்டபல பயனிலைகளின் அர்த்தங்களுக்கு இடையிலுள்ள உறவுகளை எடுத்துக்காட்டுகின்றனர். அவர்கள் ஆதார அர்த்த்திலிருந்து சுத்தத் தேர்வின் இயக்கமுறைகளிலிருந்து தொடங்குகின்றனர்; பின்னர் பயனிலைக்குப் பொருண்மையியல் அமைப்புமாற்றங்களை (transformations) ஈடுபடுத்தி முற்றிலும் புதிய வழிக்கு முன்னேறுகின்றனர். இது பின்வருவனவற்றை உட்படுத்தும்: துணைவகைபடுத்தல் (subtyping), பலவகைகள் (several Types), கட்டாயத்தின் நிலைகள்/மட்டங்கள் (levels of coercion); உருவகமல்லா நீட்சிகள் (non-metaphoric sense extensions); “வலுவற்ற உருவகங்கள்” (“weak metaphors”); இறுதியாக “வலுவுள்ள உருவக” பொருள்கோள்கள் (“strong metaphor” readings).

வினைப் பொருண்மைகளுக்குக் குறிப்பிட்ட அர்த்த நீட்சி இயக்கமுறைகளை அடையாளங்கண்டுகொண்டு அவர்கள் ஒரு பயனிலையின் அர்த்த மாற்றியமைப்பின் (sense modulation) பண்புசார் புரிந்துகொள்ளலையும் (qualitative understanding) “உருவகத்தன்மையின் அளபின்” கருத்துச்சாயலின் அளவுசார் மதிப்பீட்டையும் (quantitative assessment) அடைய இயலும் என நம்புகின்றனர்.

அவர்கள் பொருண்மைப் பண்புக்கூறு வார்ப்பாக (semantic feature matrix) ஒரு பயனிலையின் அர்த்தத்தின் கருத்துச்சாயல் தரப்படுகையில் நாம் ஆதார அர்த்தத்தின் மீதான மாறுபாடுகளாக (mutations) அர்த்த நீட்சிகளைக் கற்பனை செய்யவியலும் என்கின்றனர். சிறிய திருத்தங்கள் (modifications) சிறிய எண்ணிக்கையிலான வரிசைமாற்றங்களுடன் (permutations) இயைபுறும்; அதே நேர்த்தில் அர்த்ததில் முக்கிய பிறழ்வு (shift) முக்கிய பண்புக்கூறு திருத்தங்களுடன் இயைபுறும். அவர்களின் ஆய்வின் நோக்கம் முதலாவது எந்தப் பண்புக்கூறுகள் மாறுபாடுகளை அனுமதிக்கின்றது என்று பார்ப்பது; இரண்டாவது இந்த மாற்றங்களுக்கு இடையில் சார்புகள் (dependencies) இருக்கின்றதா என்று பார்ப்பது.

தொடக்க கால ஆய்வுகளிலிருந்து "நீட்சியுற்ற அர்த்தங்களில்" சில உண்மையில் பயனிலைப் பாகத்தில் சிறிய திருத்தங்களுடன் தொடர்புடையது என்று தோன்றுகின்றது என்கின்றனர். குறிப்பாக நாம் 'அர்த்தம் தக்கவைப்பு வகை நலிவுறல்' (sense-preserving type weakening) என்பதை அடையாளம் காண இயலும்; இதில் பங்கெடுப்பாளர்கள் மீதான திருத்தப்பட்ட வகைபடுத்தல் (modified typing) குண அமைப்பில் (qualia structure) பயனிலை கட்டாயப்படுத்தும் கட்டுப்பாடுகளை இன்னும் திருப்திப்படுத்துகின்றது. இந்தச் செயன்மையிலிருந்து விளையும் அர்த்தத்தை நாம் "உருவகமல்லாத அர்த்த நீட்சி" ("non-metaphoric sense extension") என்கின்றோம். இதைப் பங்கெடுப்பாளரில் கூடுதல் கணிசமான வகை திருத்தங்களுடன் முரண்பாடு செய்யவியலும்; இதனால் பங்கெடுப்பாளர்களுக்கு இடையில் உள்ள உறவுகளின் அதிக அளவிலான பொதுமையாக்கம் செய்யப்பட்ட பொருகோள்கள் கிடைக்கும். இக்காரணத்தால் நாம் இச்செயன்மைகளை 'அர்த்தம் நீட்சிசெய்யும் வகை நலிவுறல்' (sense-extending type

weakening) என்கின்றோம். பயனிலையின் மையப் பொருண்மை (core meaning) பங்கெடுப்பாளர் வகைபடுத்தல் மீதான சுருக்குதலின் விளைவாகப் பொதுமையாக்கம் (generalization) அடைகின்றதா என்பதைப் பொறுத்து இந்த வகுப்பு "நலிவான உருவகங்கள்" (weak metaphors) என்றும் "வலுவான உருவகங்கள்" (strong metaphor) என்றும் மேலும் வேறுபடுத்தப்படும்.

அவர்கள் தமது தொடக்கத் தரவு ஆய்விலிருந்து அர்த்த நீட்சிகளை இவ்வகையிலான செயன்மைகளின் அடிப்படையில் ஒழுங்குமுறை செய்யவியலும் என்று தோன்றுகின்றது என்கின்றனர்; இது அர்த்த நீட்சிமையின் அடிப்படை அளவெண் கருத்துச்சாயலைத் தருகின்றது. இது உருவகப் பொருகோண்மை உருவகத்தன்மையின் அளபு அடிப்படையில் ஆயப்படுத்தப்படுகின்றது என்ற கருத்தை உறுதிப்படுத்தும் (Hanks, 2006).

2.14 முடிவுரை

பொருண்மை மாற்றம் சொற்களுடன் மட்டும் தொடர்புடையதல்ல. இலக்கணக் கட்டுமானங்கள் பொருண்மைகளைக் கொண்டிருக்கின்றன. அவை காலப் போக்கில் அவ்வாறே இருப்பதில்லை; அவை மாறும் வழிகள் சொல்லடிப்படையிலான பொருண்மை மாற்றத்தின் குறிப்பிட்ட வகைகளுடன் மேலூறல் செய்யும்.

மரபு அடிப்படையிலான புறவயன்மையாளர் அல்லது உண்மை-கட்டுப்பாடு பொருண்மையியல் கோட்பாடு பொருண்மை மாற்றத்தின் நுணுக்கங்களை விளக்குவதற்கு திணறியது. கூடுதல் அண்மையான மூலமுதல்வகை அடிப்படையிலான பொருண்மையின் பார்வை அதிக நெகிழ்வை அனுமதிக்கின்றது; இதனால் அது தகுதி பெறுகின்றது.

பொருண்மை மாற்றத்தை வகைப்படுத்தும் வழிகளைப் பார்த்தால் மரபு வகைப்பாட்டியல்கள் பல்வேறுபட்ட வகைகளை விளக்கப் பயன்படுத்தவியலும் கலைச்சொற்களைத் தருகின்றன. ஆனால் இவ்வகைப்பாடுகளின் பொருண்மை மாற்றங்கள் ஊகிக்க இயலாதது; பல எதிர்திசைகள் சாத்தியம் ஆகும். இருப்பினும் அண்மைக்கால ஆய்வு, குறிப்பாக அகவயமாக்கம் பற்றிய ஆய்வு பொருண்மை மாற்றத்தில் ஒழுங்குமுறை இருக்கின்றது என்று காட்டுகின்றது; இந்த ஒழுங்குமுறையை மனிதப் புலனறிவின் குறிப்பிட்ட தன்முனைப்பான போக்குடன் தொடர்புபடுத்தலாம்.

இறுதியாகப் பொருண்மை மாற்றம் யாரோ ஒரு படைப்பு முனைப்புள்ள மொழிபேசுபவரால் தொடங்கப்படுகின்றது என்றும் எனவே அது சமகாலக் கருத்துச்சாயல் என்றும் பார்த்தோம். அங்கிருந்து அம்மாற்றம் பிற மொழிபேசுபவர்களுக்குப் பரவவோ பரவாமலோ இருக்கலாம். பரவலின் இந்தச் செயற்பாடு நிச்சயமாகக் காலம் எடுக்கும்; எனவே பொருண்மை மாற்றம் வரலாற்று மாற்றம் அடிப்படையில் உருப்படுத்தம் செய்யப்படுகின்றது. புதிய கண்டுபிடிப்பு, புலனறி செயல்முறையாக இருக்கையில் அது உளவியல் அடிப்படையிலான விளக்கத்தை வேண்டுகின்றது; பரவல் சமூக காரணிகளைச் சார்ந்து இருக்கின்றது; எனவே சமூகமொழியியல் கோட்பாடு அடிப்படையில் விளக்கப்படவேண்டும்.

இயல் 3

பல்பொருள் ஒருமொழியமும் பொருண்மை மாற்றமும்

3.1 அறிமுகம்

பொருண்மை மாற்றத்திற்கும் பல்பொருள் ஒருமொழியத்திற்கும் இடையிலுள்ள உறவு பொருண்மைக் கோட்பாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பாலிசெமி 'பல்பொருளொருமொழியம்' என்ற சொல் மைக்கேல் ப்ரெயல்ஸ்சின் (Michel Bréals) அடிப்படையான *Essai de sémantique* என்பதில் முதல் முறையாகத் தோன்றியது. ப்ரெயல்சின் ஒருபொருள்பன்மொழி பொருண்மை மாற்றத்தின் விளைவாக ஏற்பட்டது; அது சொல்சார் பொருண்மை மாற்றத்தின் சமகாலம்சார் விசயமாகும்; இது பழைய அர்த்ததிற்கும் அதிலிருந்து உருவாக்கப் பட்ட புதிய அர்த்தத்திற்கும் இடையில் உள்ள பொருண்மை உறவின் அடிப்படையில் வேறுபட்ட முகங்களைக் காட்டலாம். உருவகம் தவிர பெரும்பான்மையும் இந்த விசயங்களுக்கு அவற்றிற்கான முக்கியத்துவம் தரப்படவில்லை. ஒருபொருள் பன்மொழியின் வரையறை விளக்கங்கள் ஒரு சொல்லின் அகராதியாக்கப்பட்ட அர்த்தங்கங்களின் இயல்பைக் கூடுதலாக விளக்காமல் அவைகளுக்கு இடையேயுள்ள பொருண்மை உறவுகளின் இருப்பாகவே விளக்குகின்றன (Blank, 1999a:12). இவ்வியல் ஒருபொருள் பன்மொழியம் பற்றியும் அதனோடு தொடர்புடைய பொருண்மை மாற்றம் பற்றியும் விரிவாக ஆய்கின்றது. இதற்கு பிளாங்கின் "Polysemy in the Lexicon" (Blank, 1999a) என்ற கட்டுரை முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் இவ்வாய்வுக்குப் அடிப்படையாய் அமையும் கோட்பாடுகள் பொருண்மை மாற்றம், பல்பொருள் ஒருமொழியத்தின் வகைகள், சூழல்

மாறுபாடும் பல்பொருள் ஒருமொழியமும், பல்பொருள் ஒருமொழியமும் ஒருசொல்போலியும், பல்பொருள் ஒருமொழியத்தின் நிலைகள், இருநிலை பொருண்மையியல் மற்றும் பல்பொருள் ஒருமொழியம், கருத்தாடல் விதிகள் மற்றும் பல்பொருள் ஒருமொழியம், பல்பொருள் ஒருமொழியின் நான்கு மட்டங்கள்/நிலைகள் ஆகிய தலைப்புகளில் தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் தரப்பட்டுள்ளதன் காரணமாக இக்கட்டுரை இவ்வியலில் அவ்வாறே விளக்கப்பட்டுள்ளது.

3.2 பொருண்மை மாற்றம்: பல்பொருளொருமொழியத்தின் வகைகள்

சொல்சார் பல்பொருளொருமொழியத்தின் வரலாறுசார் பின்னணியைப் புரிந்துகொள்ள முதலாவதாகப் பொருண்மை மயக்கத்தின் வகைப்பாட்டியல் தேவை; இது ஒரு பொருண்மைசார் புதுமையை ஒரு அகராதியாக்கப்பட்ட அர்த்தத்துடன் உறவு படுத்த இயலும் என்பதைப் புரிந்துகொள்ள உதவும். கருத்துருக்களுக்கும் அல்லது கருத்துருக்களுக்கும் மொழிசார் குறிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு அடிப்படையில் அமைந்த இம்மாதிரியான வகைப்பாட்டியல் பிளாங்கால் பரிந்துரைக்கப்பட்டது (Blank 1999a) (பார்க்க அட்டவணை 1). இந்த வகைப்பாட்டியல் சமகாலத்தில் இந்த தொடர்புள்ள உறவுகளின் தொடர்ச்சியாகப் பல்பொருள்ஒருமொழியத்தின் விரிவான விளக்கத்திற்கு அடிப்படையாக பயன்படுகின்றது.

அட்டவணை 1 (Blank 1999a:13)

பொருண்மை மாற்றத்தின் வகைகள்	**மரபாக்கம் செய்யப்படும் போது சமகாலம்சார் உறவு**
1.உருவகம் (metaphor) E *mouse* ‘small rodent’ > ‘computer device’	A. உருவக பல்பொருள்ஒருமொழி (metaphoric polysemy)

It *afferrare* 'to grasp' > 'to understand' L *brevis* 'short (spatial)' > 'short (temporal)'	E *mouse* 'small rodent', 'computer device' It *afferrare* 'to grasp', 'to understand' L *brevis* 'short (spatial)', 'short (temporal)'
2.இணை உள்ளடங்குமொழிய இடமாற்றம் (co-hyponymous transfer) ? *ratt-* 'rat' > F (reg.), It (reg.) 'mouse' Pt *aborrecer* 'to annoy s.o.' > 'to bore s.o.'	**B.** இணை உள்ளடங்குமொழிய பல்பொருள்ஒருமொழி (co-hyponymous polysemy) F (reg.) *rat*, It (reg.) *rat, ratta, ratto* 'rat', 'mouse' Pt *aborrecer* 'to annoy s.o.', 'to bore s.o.'
3.பொருண்மை நீட்சி MF *pigeon* 'pigeon raised for eating' > 'any kind of pigeon' Sp *tener* 'to hold' > 'to have'	C. வகைப்பாட்டியல் பல்பொருள்ஒருமொழி (taxonomic polysemy) F *pigeon* 'pigeon raised for eating', 'any kind of pigeon' Sp *tener* 'to hold', 'to have'
4. பொருண்மைக் கட்டுப்பாடு VulgL *homo* 'human being' > 'man' F *blé* 'corn' > 'wheat'	F *homme*, It *uomo*, Sp *hombre* etc. 'human being', 'man' F *blé* 'corn', 'wheat'
5. சொல் தொக்கிநிற்றல் (உட்கவர்தல்) (lexical ellipsis (absorption))	

a) வரையறுக்கும் பகுதியில் உட்கவர்தல் absorption into the determinatum Sp *coche* 'coach' > 'car' (< *coche automóvil*) G *Schirm* 'shelter' > 'umbrella' (< *Regenschirm*	Sp *coche* 'coach', 'car' G *Schirm* 'shelter', 'umbrella'
b) வரையறுப்பான்களில் உட்கிரகித்தல் absorption into the determinans F *diligence* 'velocity' > 'stage-coach' (< *carosse de diligence*) G *Weizen* 'wheat' > 'beer made of wheat' (< *Weizenbier*)	D. ஆகுபெயர்சார் பல்பொருள்ஒருமொழி (metonymic polysemy) F *diligence* 'velocity', 'stage-coach' G *(der) Weizen* 'wheat', *(das) Weizen* 'beer made of wheat'
6. ஆகுபெயர் (metonymy) L *lingua* 'tongue' > 'language' L *defendere* 'to defend' > F *défendre* 'to forbid' G *während* 'while (temp.)' > 'whereas (advers.)	L *lingua* 'tongue', 'language' F *défendre* 'to defend', 'to forbid' G *während* 'while (temp.)', 'whereas (advers.)
7. பிரபலமான சொற்பிறப்பியல் (popular	F *forain* 'non-resident', 'belonging to the

etymology) F *forain* 'non-resident' > 'belonging to the fair' (< *foire*) Lat *somnium* 'dream' > Sp 'sleep' (< *somnus*)	fair' Sp *sueño* 'dream', 'sleep'
8. தானியங்கு-மறுதலை மாற்றம் (auto-converse change) It *noleggiare* 'to lend' > 'to borrow' L *hospes* 'host' > 'guest'	E. தானியங்கு-மறுதலை ஒருபொருள்பன்மொழி (auto-converse polysemy) It *noleggiare* 'to lend', 'to borrow' F *hôte*, It *ospite*, Cat *hoste*, Occ *oste* 'host', 'guest'
9. முரண்படல் (antiphrasis) F *villa* 'country house' > F (argot) 'prison' It *brava donna* 'honorable lady' > It (gergo) 'prostitute'	F. முரண்படு ஒருபொருள்பன்மொழி (antiphrastic polysemy) F *villa* 'country house', F (argot) 'prison' It *brava donna* 'honorable lady', It (gergo) 'prostitute'
10. தானியங்கு-எதிர்மொழியம் (auto-antonymy) E *bad* 'not good' > E (slang) 'excellent'	G. தானியங்கு-எதிர்மொழியம் (auto-antonymic polysemy) E *bad* 'not good', (slang) 'excellent'

sard. *masetu* 'gentle' > 'irascible'	sard. *masetu* 'gentle', 'irascible'
11. ஒத்த பொருண்மைசார் மாற்றம் (analogous semantic change) F *polir* 'to polish', 'to steal' _ *fourbir* 'to polish' > 'to steal', *nettoyer* 'to clean' > 'to steal' etc. L *levare* 'to lift up', 'to erect' _ Sp *alzar*, It *alzare* 'to lift up' > 'to erect'	all relations possible, e.g. metaphoric polysemy: F *fourbir* 'to polish', 'to steal' metonymic polysemy: Sp *alzar*, It *alzare* 'to lift up', 'to erect'

நாம் வரலாறுசார் செயற்பாடுகளுக்கும் (diachronic processes) சமகால நிலைகளுக்கும் (synchronic states) இடையில் முழு ஓனச் சார்பைக் (isomorphy) காண இயலாது. நாம் பொருண்மை மாற்றத்தின் அவற்றின் சமகால இணைகளின் வகைகளின் சேரும் தன்மையின் பின்னணியைப் பற்றி சுருக்கமாக பிளாங் தருகின்றார் (Blank, 1999a).

பல்பொருள்ஒருமொழியின் மிக அறியப்படுகின்ற வகை உருவகம்சார் பல்பொருள்ஒருமொழியாகும் (metaphoric polysemy); இது பெரும்பாலும் வரலாறுசார் செயற்பாங்காக உருவகம் செயல்படுவதன் காரணமாகும். இரண்டும் வேறுபட்ட அல்லது தூரமான இரு கருத்துருசார் பொருண்மைக் களத்தைச் சார்ந்த இரு கருத்துருக்களுக்கு இடையில் ஏறக்குறைய உள்ள முக்கிய ஒற்றுமை அடிப்படியில் அமைந்ததாகும்.

ஒற்றுமை ஒரே கருத்துரு பொருண்மைக் களத்தில் அல்லது நாட்டுப்புற வகைப்பாட்டியலில் இருப்பது இணை-உள்ளடங்குமொழிய மாற்றத்திற்கு அடிப்படையாகும்; இது இணை-உள்ளடங்குமொழிய பல்பொருள்ஒருமொழியத்திற்கு (co-hyponymous polysemy) வழிவகுக்கும். இவ்வகையிலான மாற்றத்திற்குக் காரணம் சம்பந்தப்பட்ட கருத்துருக்களால் குறிக்கப்படுகின்ற எல்லைகள் பற்றிய பேசுபவரின் அறிவு தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக மங்குகின்றது என்ற என்ற உண்மையாகும். ஒரே கிளைமொழி (dialect) அல்லது சிறப்புவழக்குக்கு (register) உள்ளேயுள்ள பல்பொருள்ஒருமொழி நிலையில்லாதது மற்றும் மங்கக்கூடியது (Blank, 1999a:12).

வகை 3-உம் 4-உம் ஒரே பொருண்மைகளத்திற்குள் கருத்துருக்களின் ஒற்றுமை அடிப்படையில் ஆகும்; பெரும்பாலான நேர்வுகளைப் போன்று பொருண்மை மாற்றத்திற்கு உள்ளாகும் இரு கருத்துருக்களில் ஒன்று முழு வகைப்பாட்டின் மூலவகை நேர்வாகக் கருதப்படுகின்றது. சமகாலத்தில் நாம் இரு அர்த்தங்களுக்கு இடையேயுள்ள உடன்நிகழ் வகைப்பாட்டியல் உறவுவின் (taxonomic relation) மேல் கவனக்குவிப்பு செய்கின்றோம். இந்தப் பார்வையில் பொருண்மைமாற்றத்தை உட்படுத்தும் கூடுச்சேரும் உறவு (associative relation) பின்னணிக்கு மாறுகின்றது; அதே சமயம் குறிப்பிடுகிற வகுப்புகளின் (referential classes) வகைப்பாட்டு உட்படுத்தல் (taxonomic inclusion) ஆதிக்கம்பெறும்.

சொல் தொக்கிநிற்றல் (lexical ellipsis) அல்லது உட்கிரகித்தல் (absorption) என அழைக்கப்படும் வகை 5, இந்தக் கலவைத்தன்மையான சொல்லின் அர்த்தத்தை எந்தப் பகுதி உட்கிரக்கின்றது என்பதைப் பொறுத்து இரண்டு துணைவகைகளைக் காட்டுகின்றது. இருப்பினும் சமகால அடிப்படையில் உட்கிரகித்தல் பொருண்மை

கட்டுப்பாட்டின் விளைவுடன் அதாவது வகைபாட்டியல் ஒருபொருள்பன்மொழியுடன் அல்லது உருவகத்தின் சமகால பலனுடன்/விளைவுடன் (synchronic effect) ஒற்றுமை காட்டுகின்றது. இவ்வாறு வரலாறுசார் செயற்பாங்காக (diachronic process) உட்கிரகித்தலுக்குச் சரியான சமகால யதார்த்தம் (synchronic relatity) இல்லை.

இது நம்மை (உருவகத்தை உட்படுத்தி) ஆகுபெயருக்கும் அதன் ஒத்த சமகால இணைக்கும் கொண்டுசெல்லும். இரண்டும் கருத்துசார் அண்மை (conceptual contiguity) அடிப்படையிலானதாகும்; அதாவது எடுத்துக்காட்டான அல்லது சிறப்பான/முக்கியமான சேர்ந்துவருகை (co-occurrence) அல்லது சட்டகங்களில் (frames) அல்லது காட்சிகளில் (scenarios) தனிமங்களின் தொடர்ச்சி அல்லது சட்டகங்கள் தாமே. ஒரே சமகால விளைவு பிரசிதிபெற்ற சொல்பிறப்பியல் (சில விதிவிலக்குகளுடன்) வழி பொருண்மை மாற்றத்தால் உருவாக்கப்படும். வரலாறு அடிப்படையில் பிரசித்திபெற்ற சொற்பிறப்பியல் முறையான ஒற்றுமையுடன் கருத்துருசார் அண்மையை வேண்டுமென்றே இணைக்கின்றது.

வகை 8 சட்டகத்தில் “விருந்தாளிகளை வரவேற்றல்” சட்டகத்தில் விருந்தளிப்பவர் மற்றும் விருந்தாளி போன்ற பங்கெடுப்பாளர்களின் பரஸ்பரப் பிணைப்பைக் (reciprocal interconnection) கையாளுகின்றது. ஒரே சொல்லுக்குள் அம்மாதிரியான மறுதலையான உறவு உருவானால் நாம் இதை தானியங்கு மறுதலை பல்பொருள்ஒருமொழிக்குக் (auto-converse polysemy) கொண்டுசெல்லும் தானியங்கு மறுதலை மாற்றம் (auto-converse change) என அழைக்கின்றோம். எதிர்நிலையின் தரமான நேர்வாக இருப்பினும் இது ஆகுபெயருக்குள் ஒருவர் பட்டியலிட இயலும் அண்மையின் சிறப்பு நேர்வாகும்.

வகைகள் 9-இலும் 10-இலும் ஒரு சொல்லுக்குள் எதிர்நிலை அர்த்தங்கள் உருவாக இயலும். இருப்பினும் இங்கு அக எதிர்மொழியத்தின் ஒருவகையைத் தரும் உணர்பொருள்நிலை மீதோ அல்லது மைய பொருளடக்க நிலை மீதோ உள்ள அடிப்படையான தொடர்பு முரணாகும். இரண்டு நேர்வுகளும் மிக அரிதாக வழக்காறாக ஆகும்; பல்பொருள்ஒருமொழி ஒரே சிறப்பு வழக்கில் செயல்படாததன் காரணமாக அது பெரும்பாலும் "சமசீரற்றது" (asymetric) ஆகும்.

ஒத்த பொருண்மை மாற்றம் (analogous semantic change), அது ஒரு சொல்லின் பழைய அர்த்தம் மாதிரியாக பயன்படும் மற்றொரு சொல்லுக்கு உருவகம் சார்ந்ததாயினும் வகைப்பாட்டியல் சார்ந்ததாயினும் அல்லது ஆகுபெயர் சார்ந்ததாயினும் (அல்லது மிக அரிதாக துணை-உள்ளடங்குமொழி (co-hyponymous) சார்ந்ததாயினும் அல்லது எதிர்மொழியம் (antonymic) சார்ந்ததாயினும்), ஏற்கனவே இருக்கின்ற பல்பொருள்ஒருமொழியின் நகலாகும்: இவ்வாறு ரொமான்ஸ் மொழிகளின் (Romance languages) வரலாற்றில் ஒருபொருள்பன்மொழிகள் என்ற காரணத்தால் **altiare* என்பது *levare* போலவே கிட்டத்தட்ட அர்த்தங்களின் ஒரே கற்றைக் கொண்டிருந்தது. பின்னர் கூறப்பட்டுள்ளது போல் பொருண்மை மாற்றத்தின் பின்விளைவு அல்லாத பல்பொருளொருமொழியின் நேர்வுகளில் ஒப்புமை (analogy) முக்கியப் பங்கு வகிக்க இயலும்.

அட்டவணை 1-இன் வலப்புறத்திலுள்ள செங்குத்தான பத்தி/நெடுவரிசை வகைகள் A–G ஒரு சொல்லின் இரு அர்த்தங்களுக்கு இடையே உள்ள சமகாலம் சார் உறவுகளாகும்; இதுவரை "உருவகம் சார் பல்பொருளொருமொழி" (metaphoric polysemy) போன்ற புலக்குறிப்புகள், அவை ஒரு சொல்லின் முழு பல்பொருளொருமொழியத்தை

விளக்காததன் காரணமாக, அவ்வளவு சரியானது அல்ல. இரண்டு தொடர்புள்ள அர்த்தங்களின் ஒவ்வொரு இணையும் கேள்விக்குரிய சொல்லின் பிற அர்த்தங்களுடன் பொருண்மைத் தொடர்புகளை நிறுவும். நாம் ஒரு சொல் பல்பொருளொருமொழி எனக் கூறுகையில் ஒரு சொல்லின் எல்லா அர்த்தங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பானவை அல்லது "பொதுவான ஒன்றை" கொண்டிருகின்றன என்று அர்த்தமல்ல. மாறாக பல்பொருளொருமொழி அர்த்தங்களின் சங்கலி அல்லது வலைப்பின்னல் என்று கருதப்படவேண்டும். அகராதி இயல் பயன்பாடு தவிர்க்க இயலாமல் ஒரு கலவைத் தன்மையான உருப்படுத்தத்திற்குக் கொண்டு செல்லும்; ஆனால் பின்வரும் படத்தில் (Blank 1999a: 15) காட்டியுள்ளது போன்று ஒரு சொல்லின் அர்த்தங்களுக்கு இடையில் உள்ள உறவுகளின் துல்லியமான பண்பாக்கத்தை அனுமதிக்கும் .

படம் 1: E *man*N



3.3 சூழல் மாறுபாடு: பல்பொருளொருமொழியம், ஒருசொல்போலியியல்

பல்பொருளுருமொழியம் என்பது சூழல் மாறுபாட்டுடனும் ("தெளிவின்மை") ஒருசொல்போலியியலுடனும் ("பொருண்மை மயக்கம்") ஊடாட்டம் செய்யும் பொருண்மையியல்சார் வருணனையாகும். பொதுவாக இந்த சிக்கல்களுக்கு/விசயங்களுக்கு இடையேயுள்ள தெளிவான வேறுபாடு கடினமானதாகும் (Geeraerts 1993: 263). இயல்பான வாழ்க்கைச் சூழலில் சொற்கள் திடமான கூற்றுக்களிலேயே வரும்; அவற்றின் அருவமான சூழலிலோ சீர்மையாக்கப்பட்ட அகராதி வரையறை விளக்கத்திலோ வருவதில்லை. நாம் ஒரு அர்த்ததின் சூழல் மாறுபாடு எங்கு முடிவுறுகின்றது மற்றும் மற்றொரு அர்த்தத்தின் பொருண்மை பரப்பெல்லை எங்கு தொடங்குகின்றது என வரையறைவிளக்கம் தரவேண்டும். இதுதான் தெளிவின்மைக்கும் பல்பொருளொருமொழியத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு. நாம் அர்த்தங்கள்

ஒன்றுக்கொன்று உறவுகொண்டுள்ள பல்பொருளொருமொழிய சொற்களை ஒருசொல்போலிகளிடமிருந்து (homonyms) (அதாவது சரியான பொருண்மை உறவு இல்லாத இரண்டு சொல்லன்களிடமிருந்து (lexemes)) வேறுபடுத்தும் அளவுகோலைக் கண்டுபிடிக்கவேண்டும்.

3.3.1 சூழல் மாறுபாடும் பல்பொருளொருமொழியமும்

பால் டேன் (Paul Deane 1988) "பல்பொருளொருமொழியமும் புலனறிவும்" ("Polysemy and cognition") என்ற தமது கட்டுரையில் பொரும்பான்மை புலனறி மொழியிலில் (Cognitive Linguistics) கைவிடப்பட்ட மூலவகை-கோட்பாட்டின் (prototype-theory) "நிலைபெறு/தரமான பதிப்பு" (standard version) (Kleiber 1990) என்று அழைக்கப்படும் கருத்துச்சாயலைப் பின்பற்றுகின்றார். டேனின் கருத்துப்படி வகைபாடுகளின் மூலவகைசார் அமைப்பு பின்வரும் வாக்கியங்களைக் கூற அனுமதிக்கின்றது (Blank 1999a:16).

a. My *arm* hurts. 'எனது கை வலிக்கின்றது'

b. Look at the *arm* of the statue. 'சிலையின் கையைப் பார்'

c. My mother was overdosed on LSD, so my *arm* is this little thing on my stomach. என் 'தாய்க்கு எல்.எஸ்.டி. கூடுதாலாக தரப்பட்டது, எனவே என் கை வயிற்றுக்கு மேலுள்ள இந்தப் பொருளதான்'

d. A robotic *arm* reached out and grabbed me. 'ரபோட் கை நீண்டு என்னைப் பற்றியது'

(all ex. cf. Deane 1988: 347)

(3) a-இல் *arm* 'கை' என்பதன் மூலவகை நேர்வு உள்ளது; அதே சமயம் பிற எடுத்துக்காட்டுகளில் *arm* 'கை' என்பதன் எடுத்துக்காட்டான பண்புக்கூறுகள் குறைவு: (3) d ஒரு மனிதக் கையின் தேவையான செயல்பாடுகளைப் பங்கிடுகின்றது; ஆனால் *arm* 'கை' (3) b போன்று விலங்கல்லாதது ஆகும். இருப்பினும் இந்த விளிம்பில்வரும் மூன்று நேர்வுகளையும் "மனிதக் கை" என்ற வகுப்பில் அடக்க இயலும். பொருத்தமான மைய அர்த்தம் ஒரு கற்றைப் பண்புகளைக் கொண்டிருக்கும்; அவற்றில் சிலவற்றை அடக்கி இயலும் (3)-இல் காணும் வேறுபாடுகளைக் உருவாக்க இயலும். டேன் இந்தக் கருத்துச் சாயலை மாற்றுபொருண்மை (allosemy) என்று அழைக்கின்றார்; மற்றும் ஒரு சில சோதனைகளால் பல்பொருளொருமொழியிலிருந்து இந்த "ஒரு சொல்லின் பொருண்மையில் உடனடி-தனித்தன்மை மாறுபாட்டை" வேறுபடுத்துகின்றார் (cf. Deane 1988: 347-350).

மாறாகக் குறிப்பீடுசார் (referential) அல்லது நீட்சிசார் (extensional) மட்டத்திற்கும் பொருண்மை விளக்க மட்டத்திற்கும் இடையில் தெளிவான வேறுபாட்டை நிறுவுவது முக்கியமாகும்: குறிப்பீடுசார் பார்வையில்/கருத்தில் தெளிவின்மை குறிப்பிடும் பொருள் ஒரு வகைப்பாட்டின் விளிம்பில் வரும் நேர்வாக வகைப்படுத்தப்படுகின்றது; இருப்பினும் இந்த வகைப்பாட்டின் உறுப்பினராகக் கருதப்படுகின்றது. நாம் தெளிவின்மையை அல்லது பொருண்மை அடிப்படையில் சூழல் வேறுபாட்டை அணுக எண்ணினால், ஒரு தரப்பட்ட கூற்றில் ஒரு சொல்லின் சூழல் பொருண்மை, இச்சூழலுக்கு எல்லா வரையறை விளக்கம் செய்யும் பண்புக்கூறுகளும் பயன்படுத்தத் தக்கதாக இல்லாவிடினும், அச்சொல்லின் அகராதியாக்கப்பட்ட அர்த்ததின் இயல்பாக்கமாகக் கருதப்படும் என்று பெருள்படலாம். எடுத்துக்காட்டாக [விலங்கினம்] அல்லது

[மனிதவினம்] என்பதிலிருந்து (3) b மற்றும் (3) d. இந்த தனிநபர் உள்ளுணர்வு இடை அகவய பொருத்தத்தின் பரிசோசதனைக்குச் சமர்ப்பிக்க உகந்தது; (3)-இல் உள்ள *arm* 'கை' போன்று இரு சூழல் பொருண்மைகள் தெளிவான பொருண்மை மேலுறலை காட்டினால், ஆனால் A-G-இல் உள்ள ஏழு பொருண்மை உறவுகளில் ஒன்றால் சரியாக தொடர்புபடுத்த இயலவில்லை என்றால் நமக்கு ஒரு அர்த்தத்தின் சூழல் வேறுபாடு இருக்கும் (Blank 1999a:16).

மாறாக இரு குறிப்பிடு பொருள்கள் (referents) இரு வேறுபட்ட நீட்சிசார் வகுப்புகளின் நேர்வுகளாகக் கருதப்பட்ட வேண்டும் என்றால் நாம் குறிப்பீடுசார் தெளிவின்மையின் எல்லையிலிருந்து தூரத்தில் இருக்கின்றோம். இந்தச் சூழல் பொருண்மைகள் மேற்சொன்ன சமகாலம்சார் பொருண்மை உறவுகளில் ஒன்றுடன் தொடர்புபடுத்தப்பட்ட இரு அகராதியாக்கப்பட்ட அர்த்தங்களின் இரண்டு நேர்வுகள் என்றால் நமக்கு பல்பொருளொருமொழியம் இருக்கிறது (Blank 1999a:17).

(4) a. The *arm* of a coat. 'கோடின் கை'

b. The *arm* of a record player. 'இசைத்தட்டு இயக்கியின் கை'

c. An *arm* of the sea. 'கடலின் கை'

(all ex. cf. WEUD, s.v. "arm1")

(4) a-இல் உள்ள *arm* 'கை' கொள்கலன் – கொள்பொருள் ஆகுபெயரின் (CONTAINER–CONTENT–metonymy) நேர்வாகும்; (4) b மற்றும் (4) c என்பன உருவகத்தின் வேறுபட்ட வகைகளாகும். (4) b தெளிவாக மனிதக் கையின் முறையான தன்மைகளை பங்கிடுகின்றது; (4) c ஒருவகை "நிலத்தோற்ற இறுதி" ("landscape extremity") ஆகும். (3)-க்கு முரணாக, இந்தக் குறிப்பிடு பொருள்கள் (referents) எதுவும் மனித மாதிரியைப்

பின்பற்றி உருவாக்கப்பட்ட மனித உடலின் அல்லது உடலின் மேல் பகுதியின் இருப்பிடத்தைக் காட்டவில்லை: கைகள் இல்லை, ஆனால் அம்மாதிரி கருத்துருவாக்கம் செய்யலாம். இந்தப் பார்வையில்/கருத்தில் வேறுபட்ட நீட்சிசார் வகுப்புகள் வேறுபட்ட கருத்துருக்களுடனும் மற்றும் ஒரு குறிப்பானுடன் (signifier) தொடர்புபடுத்த இயலும் அர்த்தங்களுடனும் பொருந்தும் என்பது தெளிவாகும். உருவகங்கள், ஆகுபெயர்கள் போன்றன நீட்சிசார் அல்லது கருத்துருசார் வகைப்பாட்டை விரிவுபடுத்தவில்லை; ஆனால் ஒரு புதிய நீட்சிசார் வகைப்பாட்டையும் அதன் கருத்துருவையும் தரப்பட்ட சொல்லுடன் தொடர்புபடுத்துகின்றது. இந்த உருவகமோ அல்லது ஆகுபெயரோ ஒரு தனிப்பட்ட சூழல்சார் விளைவாக இருதால் அதாவது புதுமையாக இருந்தால் ஒன்றும் நடைபெறாது; ஆனால் அது பிற மொழிபேசுபரகளால் ஏற்கப்பட்டால், இவ்வாறு மரபுவழிபடுத்தப்பட்டால் (conventionalized) ஒரு சொல்லின் சொல் பரப்பெல்லைக்குள் ஒரு புதிய அர்த்தம் உருவாக்கப்படுகின்றது (Blank, 1999a:17).

3.3.2 பல்பொருளொருமொழியமும் ஒருசொல்போலியமும்

குறிபீடுசார் மற்றும் பொருண்மைசார் அளவீட்டின் சேர்க்கை பல்பொருளொருமொழியத்தை ஒருசொல்போலியத்திலிருந்து வேறுபடுத்த இயலச்செய்கின்றது. பின்வரும் எடுத்துக்காட்டைக் கருத்தில் கொள்ளவும். (Blank 1999a:17)

(5) a. The *arm* on that statue looks better than yours. (cf. Deane 1988: 347)

சிலையிலுள்ள கை உன்னுடையதைக் காட்டிலும் நன்றாக இருக்கின்றது.

b. A special *arm* of the government is to investigate the matter.

(cf. WEUD, s.v. “arm2”)

அரசாங்கத்தின் ஒரு சிறப்பான கை அந்த விஷயத்தைப் புலன்விசாரணை செய்ய இருக்கிறது.

c. His religious convictions kept him from bearing *arms*, but he served as an ambulance driver with the Red Cross. (cf. WEUD, s.v. “arm2”)

d. Three lions passant gardant ... the Royal *Arms* of England. (Porny, Heraldry [1787], cf. OED, s.v. “arm2, IV014”)

குறிப்பீடுசார் அடிப்படையில் இந்த நான்கு எடுத்துக்காட்டுகளும் வேறுபட்ட நீட்சிசார் வகுப்புகளைச் சாரும். இப்போது (5)b என்பது (5)a-உடன் தொடர்புடைய மற்றொரு அகராதியாக்கம் செய்யப்பட்ட உருவகமாக (lexicalized metaphor) இருக்கையில், (5) a அல்லது (5)b என்பவைகளுடன் பொருண்மைசார் உறவை அனுமதிக்கும் (5) c-இன் பொருத்தமான/சரியான அர்த்தம் இல்லை. இங்கு *arm* என்பது ‘ஆயுதம்’ என அர்த்தம் தரும். (5)d என்பது (5)c-உடன் உருவக அடிப்படையில் தொடர்புகொண்டுள்ளது. இதிலிருந்து நாம் முதல் இணைக்கும் இரண்டவது இணக்கும் தொடர்பு இல்லை என்றாலும் (5)a-யும் (5)b-யும் ஒரு பல்பொருளொருமைசார் சொல்லுக்கு ஒதுக்க இயலும்; மற்றும் (5)c-ஐயும் (5)d-ஐயும் மற்றொன்றுக்கு ஒதுக்க இயலும்.

பல்பொருளொருமொழியம் ஒரு தொடர்புபடுத்தும் செயற்பாங்கின் சொல்லனாக்கத்தின் (lexicalization) விளைவாகும்; எனவே அது பொருண்மையியல்சார் இயல்புடையாதாகும்; மாறாக ஒருசொல்போலியம் (homonymy) ஒலியியல் மோதலால் உருவானதாகும்; நமது எடுத்துக்காட்டில் *arm1* ‘மனித உடலின் மேற் கை’ மற்றும் *arm2* ‘ஆயுதம்’ (Blank 1999a:18)

(6) a. OE *earm* ‘upper limb of the body’ > ModE *arm*1

b. OF *arme* 'weapon' > ME *arme* > ModE *arm*2

வேறுபட்ட சொற்பிறப்பு அகராதியிலாருக்கு முக்கியமான குறிப்பாகும்; இது அவர்களுக்கு சமகாலத்தை புரிந்துகொள்ளவும் உதவுகின்றது. சொற்பிறப்பியல் சமகாலத்தை விளக்க எடுத்துக்கொள்ளப்படலாகாது. இது ஆய்வுமுறைசார் நேர்மை மட்டுமன்றி இந்த அளவீடு அடிப்படையிலான விளக்கம்/வருணனை பின்வரும் நேர்வுகளை விளக்குவதில் வெற்றிபெறுவதில்லை (Blank 1999:18).

(7) a. OF *voler* 'to fly (itr.)' [>METON> 'to hunt with falcons (tr.)' >METON> 'to catch the prey' >META>] 'to steal' (hence ModFr. *voler*1 'to fly' – *voler*2 'to steal')

b. MHG *sloz* 'lock' [>META> 'castle locking a valley or a pass' >EXTENSION>] 'castle, palace' (hence ModG *Schloss*1 'lock' – *Schloss*2 'castle')

(8) a. Lat *somnus* 'sleep' > Sp *sueño* – *somnium* 'dream' > Sp *sueño* (hence > Sp *sueño* 'sleep' –METON– 'dream')

b. OE *corn* 'grain' > ModE *corn* – OF *corn* 'horny induration on the foot' > ModE *corn* (hence ModE *corn* 'grain' –META– 'corn on the foot')

(7)-இல் நமக்கு வரலாற்று அடிப்படையில் பல்பொருளொருமொழியம் இருக்கவேண்டும்; ஆனால் முதலாவது மற்றும் இறுதி ஏற்புடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள அர்த்தங்கள் வழக்கிலிருந்து மறைந்துவிட்டன; எனவே எஞ்சிய அர்த்தங்களுக்கிடையில் பொருண்மை

உறவு இல்லை: இது இரண்டாம் நிலை ஒருசொல்போலியியல் ஆகும். (8)-இல் மூல கேள்விக்குரிய அர்த்தங்களுக்கிடையே பொருண்மை உறவு இருப்பதாகக் கருதுகின்ற மொழிபேசுபவர்களால் ஒருசொல்போலியியல் பல்பொருளொருமொழியமாக மறுபொருள்கோண்மை செய்யப்பட்டுள்ளது: இது இரண்டாம் நிலை பல்பொருளொருமொழியமாகும்.

3.3.3 குறிப்பிடும் வகுப்பு மற்றும் பொருண்மை உறவு: பல்பொருளொருமொழியத்திற்கு இரட்டைப் பரிசோதனை

இறுதி நான்கு எடுத்துக்காட்டுகள் நமக்குச் சமகாலத்தில் மட்டும் செயல்படும் அளவுகோல்கள் தேவை என்பதை வலியுறுத்துகின்றன. குறிப்பிடும் வகுப்பின் பண்புக்கூறுகள் மற்றும் பொருண்மை உறவுகள் அடிப்படையிலான வகைப்பாட்டியல் இந்த உரிமையை/கோரிக்கையை நிறைவேற்றுகின்றது மற்றும் ஒருசொல்போலியியலை பல்பொருளொருமொழியத்திலிருந்து வேறுபடுத்துகின்றது; பிந்தயதையது சூழல் மாறுபாட்டிலிருந்து வேறுபடுத்துகின்றது.

அட்டவணை 2 (Blank 1999a:18)

	சொல் வடிவம்	**குறிப்பிடும் வகுப்பு**	**பொருண்மை உறவுகள்** A-G
சூழல் வேறுபாடு (“தெளிவின்மை”)	ஒரேமாதிரியானது	ஒரேமாதிரியானது	இல்லை (பொருண்மை உறவு நிலைக்குக் கீழ்)
பல்பொருளொரு மொழியம்	ஒரேமாதிரியானது	வேறுபட்டது	இல்லை (பொருண்மைஉற

			வு நிலைக்கு அப்பால்)
ஒருசொல்போலியியல் ("பொருண்மை மயக்கம்")	ஒரேமாதிரியானது	வேறுபட்டது	

சூழல் வேறுபாடு ஒரு சொல்லனாக்கம் செய்யப்பட்ட அர்த்தத்தின் (lexicalized sense) பொருண்மைப் பரப்பை வர்ணனை செய்கின்றது; ஏதாவது பொருண்மை வேறுபாடு இருந்தால், அது முன்னர் கூறப்பட்ட பொருண்மை உறவுகளின் நிலைக்குக் கீழானது. பல்பொருளொருமொழியம் ஒரு சொல்லின் பொருண்மை அந்தஸ்தின் உடைமை ஆகும்; மற்றும் முன்னர் எடுத்துக்காட்டப்பட்டது போல் தொடர்புள்ள அர்த்தங்களின் வலைப்பின்னலை வர்ணனை செய்கின்றது. இருசொற்கள் ஒலியியல் அடிப்படையில் மட்டும் ஒன்றுபோல் இருந்தால் அது ஒருசொல்போலியியல் ஆகும்; இங்கு நாம் பொருண்மை உறவுக்கு அப்பால் இருக்கின்றோம். இந்த வகைப்பாட்டியியல் வரலாறுசார் செயற்பாங்குகளால் விளைந்திருக்கலாம்; ஆனால் இது சமகாலம்சார் உறவுகளின் வர்ணனை ஆகும்.

இறுதியில் "தெளிவின்மை" ("vagueness") மற்றும் "பொருண்மை மயக்கம்" ("ambiguity") என்ற கலைச்சொற்களைக் கருத்தில்கொள்வதால் சொற்களின் அர்த்தங்கள் தெளிவற்றன என்பதில்லை; ஆனால் சிலநேரங்களில் சூழல்கள் வேறுபட்ட செய்திகளை அனுமத்தித்தால் அவை தெளிவற்றிருக்கும்; மற்றும் பெரும்பாலும் குறிப்பிடும் பொருள்கள் (referents) அவை ஒரு நீட்சிசார் வகைப்பாட்டை அடைசெய்ய

கடினமானதாக இருப்பதுவரை தெளிவற்றனவாகும். “நாம் ஒருவர் வயிற்றின் மேலுள்ள பரிதாபத்திற்குரிய சிறிய பொருள்” என்பதை மனித மேற்கையை அடைசெய்யத் தீர்மானித்தால் அச்சொல் தொடர்புள்ள கருத்துருவுடனும் பொருளடக்கத்துடனும் முழுவதுமாய்த் தொடர்புபடுத்தப்படும்.

3.4 கருத்தாடல் விதிகள், தனிப்போக்கு, சொல்லனாக்கம்: பல்பொருளொருமொழியத்தின் நிலைகள்

3.4.1 வழமையாக மீண்டும் மீண்டும் வரும் பல்பொருளொருமொழியங்கள்

இது வரை, நாம் பல்பொருளொருமொழி என்பது பொருண்மை மாற்றத்தின் சமகாலம்சார் பக்கம் ஆகும் என்ற ப்ரெயலின் கொள்கையைப் பின்பற்றினோம். பல எண்ணிக்கையிலான சொல்லனாக்கம் செய்யப்பட்ட பொருண்மை மாற்றங்கள் (lexicalized semantic changes) இந்தக் கருத்துக்கு ஆதரவு தருகின்றன. இருப்பினும் இது வேறுபட்ட மொழிகளில் வழமையாக மீண்டும் மீண்டும் சம்பவிக்கின்ற பல்பொருளொருமொழியங்களால் சாவாலிடப்பட்டுள்ளது. பின்வரும்வாக்கியங்களை எடுத்துக்கொண்டால், *school* என்ற சொல் அது பயன்படுத்தப்படுகின்ற சூழல் அடிப்படையில் (9)a-இல் “கட்டிடம்” என்ற அர்த்தத்தையும் , (9)b-இல் “கல்வியின் காலகட்டம்” என்ற அர்த்தத்தையும் (9)c-இல் “மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்த குழு” என்ற அர்த்தத்தையும் (9)d-இல் “ஒரு அல்லது ஒருசில பாடப்பிரிவுகள்” என்ற அர்த்த்த்தையும் தரும் (Blank 1999a:19).

(9) a. The children are now at the *school*.

குழந்தைகள் இபோது பள்ளியில் இருக்கின்றன.

b. *School* starts at the age of six.

பள்ளி ஆறு வயதில் தொடங்கும்.

c. The entire *school* rose when the headmaster entered the auditorium.

கலையரங்கத்தில் தலைமை ஆசிரியர் நுழைந்த போது மொத்தப் பள்ளியும் எழுந்து நின்றது.

d. After *school* the children rush home.

பள்ளிக்குப் பின் குழந்தைகள் வீட்டுக்கு விரைந்தன.

e. John now teaches at Harvard Medical *School*.

ஜாண் தற்போது ஹார்வர்டு மெடிக்கல் பள்ளியில் கற்பிக்கின்றார்.

கூடுதல் உலகப்பொதுமையாக (10)-இலும் (11)-இலும் வரும் கொள்கலன்– கொள்பொருள் மற்றும் காரணம்-விளைவு ஆகுபெயர்களைக் குறிப்பிடலாம் (Blank 1999a:19).

(10) a. I just bought Chomsky's latest *book*. (= CONTAINER/கொள்கலன்)

இப்போது தான் நான் சாம்ஸ்கியின் அண்மைக்கால புத்தகத்தை வாங்கினேன்.

b. Chomsky's latest *book* is awful. (= CONTENT/கொள்பொருள்)

சாம்கியின் அண்மைக்கால புத்தகம் மிக மோசமானதாகும்

(11) a. Mary is *sad.* (= STATE [AS RESULTING FROM STH.])

மேரி வருத்தமாக இருக்கிறாள்

d. Mary brings *sad* news. (= CAUSE/காரணம்)

மேரி வருத்தமான செய்தியைக் கொண்டுவருகிறாள்.

இவ்வகையிலான பல்பொருளொருமொழியம் மிக வழக்கமான இயல்நிகழ்ச்சியாகும்: கொள்கலன்– கொள்பொருள் ஆகுபெயர் எல்லாக் கொள்கலன்களுக்கும் பயன்படுத்தலாம்

(Copestake/Briscoe-இல் உள்ள பொருண்மையியல்சார் வர்ணனையுடன் ஒப்பிடவும் 1996: 30s.); காரணம்-விளைவு உறவு உணர்ச்சிசார் பெயரடைகளில் பொதுவாகக் காணப்படும்; (9)-இல் உள்ள பல்வேறான ஆகுபெயர்கள் கட்டிடத்திலுள்ள உறுப்பினர்களுடன் கூடிய நிறுவனங்களை அல்லது அவை போன்றவற்றைக் (எ.கா. நாடாளுமன்றம், காவல் நிலையம், சர்ச், மன்றம்/கழகம்) குறிப்பிடும் சில சொற்களில் பொதுவாகக்காணப்படும்; எனவே அவற்றை மிக எளிதாக ஊகம் செய்யலாம் (ஒப்பிடுக: Bierwisch 1983: 82). இவ்வகையிலான ஓரளவுக்கு "சீரான" உறவை விளக்க இரண்டு வழிகள் உள்ளன: ஒற்றைப் பொருண்மை (monosemy) (ஒப்பிடுக: பகுதி 3.4.2.) அல்லது "விதி அடிப்படையிலான பல்பொருளொருமொழியம்" என பிளாங்கால் (Blank 1999:20) அழைக்கப்படும் ஒரு சிறப்பு வகையிலான பல்பொருளொருமொழியம் (ஒப்பிடுக: பகுதி 3.4.3.).

3.4.2 இருநிலை பொருண்மையியல் மற்றும் பல்பொருளொருமொழியம்

நாம் (9)-க்கும் (10)-க்கும் மிகவும் அறியப்படுகின்ற ஒற்றைப் பொருண்மைசார் அணுகுமுறையை (monosemous approach) ஆய்வோம்: பீர்விச் (Bierwisch 1983) *school* போன்ற எடுத்துக்காட்டுகளை அருவத்தன்மையான பொருண்மை உருப்படுத்தத்திலிருந்து ஏற்பட்ட கருத்துருசார் பிறழ்வுகள் (conceptual shifts), குறிப்பிட்ட வருகைசூழல்களில் மைய அர்த்தத்தின் பொருண்மைசார் நீட்சியால் வழிகாட்டப்பட்ட ஒருவகை உலக அறிவு (world-knowledge) என்று கையாளுகின்றார் (Bierwisch 1983: 85-88). பீர்விச்சின் அடிப்படையான ஒற்றைப் பொருண்மை பொருள்கோண்மை மிகக் கலவைத் தன்மையான அல்லது மிக அருவத்தன்மையான சொல்சார் பதிவுகளுக்கு (ஒப்பிடுக அவரது முறைப்படுத்தப்பட்ட குறிமானம்) வழிவகுக்கின்றது: கருவிமொழி

(metalanguage) நிலையில் இது சிக்கலாகும்; ஆனால் ஒற்றைப் பொருண்மையுடன் (monosemy) முரண்படாது. ஒற்றைப் பொருண்மையுடனான "கடினமான" சிக்கல் கருத்துசார் தகவலால் நீட்சிசெய்யப்படும் ஒரு மைய அர்த்தம் இருந்தால் அந்த நீட்சி ஒரு மொழியில் எல்லா ஒற்றுமையுள்ள நேர்வுகளிலும் செயல்பாடு செய்யவேண்டும்; அது உலகப்பொதுமையாகக் கூட செயல்படவேண்டும். இது அவ்வாறல்ல; ஏனென்றால் (9)c ஜெர்மன் மொழியில் சாத்தியம் அல்ல; மட்டுமன்றி E *police-station* அர்த்தத்தில் 'duty hours/வேலை நேரம்" என்பதை நுழைக்க அனுமதிக்காது (Blank 1999a:20).

(12) a. G *Hans lehrt jetzt an der Medizinischen *Schule* der Harvard-Universität.

b. *After *police-station* the policemen rushed home.

*காவல் நிலையத்திற்குப் பிறகு காவலர் வீட்டுக்கு விரைந்தார்

உலகப்பொதுமை செயல்படாத ஒரு நேர்வு செயப்படுபொருண்மையாக்கம் (transitivation) ஆகும் (Blank 1999:20).

(13) a. E John *sleeps* in this hotel. – This hotel *sleeps* 100 guests.

ஜாண் ஹோட்டலில் உறங்குகின்றான் - *இந்த ஹோட்டல் 100 விருந்தாளிகளை உறக்குகின்றது'

b. F Jean *dort* dans cet hôtel. – *Cet hôtel *dort* 100 clients.

c. G Hans *schläft* in diesem Hotel.– *Dieses Hotel *schläft* 100 Gäste.

(14) a. F Marie *sort* de la maison. – Marie *sort* un pistolet de son sac.

b. E Mary *comes* out of the house. – *Mary *comes* a pistol out of her hand-bag.

மேரி வீட்டிலிருந்து வெளியே வந்தாள் - *மேரி அவள் கைப்பையிலிருந்து ஒரு துப்பாக்கியை வெளியே வந்தாள்

c. G Maria *kommt* aus dem Haus.– ???Maria *kommt* eine Pistole aus der Handtasche.

(13)-உம் (14)-உம் செயப்படுபொருண்மையாக்கம் ஒரு பொது கருத்துருசார் செயற்பாங்கு எனக் காட்டுகின்றது; இருப்பினும் அது மிகவும் தனித்தன்மையானதாகும்: எ.கா. இயக்கத்தின் திசையைக் (DIRECTION OF MOVEMENT) குறிப்பிடும் செயப்படுகுன்றிய பிரஞ்சு வினைகள் (*sortir*, *entrer*, *monter*, *descendre* என்பன.) பொதுவாக காரண (causative sense) அர்த்தத்தை உருவாக்குகின்றது; ஆங்கிலமும் ஜெர்மனும் இவ்வாறு செய்வதில்லை. ஒரு அல்லது ஒரே மொழியில் கூட ஒரு விதி எப்போதும் செயல்படக்கூடியதல்ல; சில இடங்களில் புஸ்தெஜோவிஸ்கி/பொகுரெவிலிருந்து (Pustejovsky/Boguraev 1996:3s.) எடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகள் காட்டுவது போன்று தனிதன்மையாகச் செயல்படும் (Blank 1999:21).

(15) a. Sam enjoyed the *lamb*.

?சாம் செம்மறியாட்டுக்குட்டியை (உண்டு) மகிழ்ந்தான்

b. The *lamb* is running out in the field.

செம்மறியாட்டுக்குட்டி வயலில் ஓடுகின்றது

(16) a. *We ordered *cow* for dinner.

*அவன் டின்னருக்கு பசுவை ஆர்டர் செய்தான்

b. *The *frog* here is excellent.

* இங்குள்ள தவளை மிகவும் நன்று

E *lamb* என்பது 'விலங்கு', 'இறைச்சி', 'சமைப்பதற்கு/உண்பதற்கு தயார்செய்யப்பட்ட இறைச்சி' என்ற பல்பொருண்மைகளை அனுமதிக்கையில் *cow/beef* மாடு/மாட்டிறைச்சி என்பது அனுமதிக்கப்படவில்லை; (16b)-இல் தவளையின் பின்னங் கால்கள் மட்டுமே உண்ணப்படுவதால் முழு விலங்கு விலக்கி வைக்கப்படுகின்றது. இந்தச் சொற்கள் யாவும் கலைக்களஞ்சிய, மொழிக்கு வெளியிலான அறிவால் (encyclopedic, extralinguistic knowledge) உந்தப்பட்ட பொருண்மை நீட்சியை அனுமதிக்கும் அருவத்தன்மையான மைய அர்த்தத்தைக் கொண்டிருந்தால் வேறுபட்ட தனித்தன்மைகளை விளக்குவது மிகக் கடினமானதாகும். ஒற்றைப் பொருண்மை ஆய்வுநெறிச் சிக்கல்களை உருவாக்கும்; எனவே அது விலக்கிவைக்கப்படவேண்டும்.

முதலாவதாக நாம் (9)– (15)-இல் விளக்கப்பட்டுள்ள பல்பொருள் ஒருமொழியத்தின் வகைகள் ஒரு புலனறிவுசார் பின்னணிக்கு மாறாக சுருக்க வருணனை செய்யப்படுவதிலிருந்து விளைந்ததாகும் என்று முடிவுசெய்யலாம்; இதை இதுபோன்று உய்த்துணரப்படும் பொருண்மைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யலாம்; இருப்பினும் இந்தப் பண்பாட்டிற்குரிய விதிகள் ஒரு மொழியின் நிலையில் மெய்ப்படுத்தம் செய்யப்படுகின்றது; எனவே அவை அல்லது அவற்றின் திட்டவட்டமான கட்டுப்பாடுகள் மற்றும் தனிப்பட்ட "பயன்படாத இடங்கள்" ஒன்றன்பின் ஒன்றாகக் கற்கப்படவேண்டும் (Schwarze/Schepping 1995).

3.4.3 கருத்தாடல் விதிகள் மற்றும் பல்பொருளொருமொழியம்

இந்தப் பின்னணிக்கு மாறாக ஏன் ப்ரெயலின் அர்த்தில் பல்பொருளொருமொழியம் இவ்வகையிலான பல்பொருளொருமொழியத்திற்கு

திருப்தியான விளக்கம் தரவில்லை என்பது தெளிவானதாகும்; பல எண்ணிக்கையிலான இணையான பொருண்மை மாற்றங்களுடன் வெளிப்படையான ஒழுங்குமுறையை விளக்குவது கடினமாகும். டீனில் (Deane 1988) ஆர்வமுள்ள ஒரு வேறுபாடு காணப்படுகின்றது: டீன் ஊகிக்கவியலாத, தனித்தன்மையான பல்பொருளொருமொழியத்தை "சொன்மைசார் பல்பொருளொருமொழி" என்று அழைக்கின்றார்; அதே நேரத்தில் இப்பகுதியில் விவாதிக்கப்பட்ட மாதிரியான பொருண்மை உறவுகள் யாவும் "சீரான/ஒழுங்குமுறையான பல்பொருளொருமொழியம்" (Deane 1988: 349s.). எனப் புலக்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. டீனின் வேறுபாடு அறிவுநுட்பமானதாகும்; இருப்பினும் அவரது கலைச்சொல் சிக்கலானதாகும்; ஏனென்றால் இங்கு கையாளப்பட்டுள்ள எல்லா பல்பொருளொருமொழியங்களும் இயல்பாகவே "சொன்மை" சார்ந்தனவாகும்.

இந்த கருத்துக்கு மாறாக டீன் சரியான பாதையில் சென்றுகொண்டிருந்தார்; அவரது "சொன்மைசார் பல்பொருளொருமொழியம்" 2-ஆவது பகுதியில் வர்ணனை செய்யப்பட்டுள்ளது போன்று சொல்லனாக்கம் செய்யப்பட்ட பொருண்மை மாற்றத்தின் சமகாலம்சார் விளைவாகும்; அதே சமயம் "ஒழுங்குமுறையான/சீரான பல்பொருளொருமொழியம்" தெளிவாக வேறுபட்டதாகும். முதல் வகை E *mouse* 'small rodent', 'computer mouse' or G *Schirm* 'shelter', 'umbrella' என்ற எடுத்துக்காட்டுகளால் பண்பாக்கம் செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது வகை E *book* 'printed work', 'contents of this work' என்ற எடுத்துக்காட்டுகளால் பண்பாக்கம் செய்யப்பட்டுள்ளது; அது "விதி அடிப்படையிலான பல்பொருளொருமொழியம்" என்று அழைக்கப்படும்; ஏனென்றால் *book* என்பதன் பல்பொருளொருமொழியம், கொள்கலனிலிருந்து கொள்பொருளுக்கு

ஆகுபெயர் இடமாற்றங்கள் கருத்தாடலில் அதிகமாக அனுமதிக்கப்படுகின்றது என்ற விதியிலிருந்து கிடைக்கின்றது. லாக்கோஃப்/ஜாண்சன் (Lakoff/Johnson 1980) என்போரால் இரு பதின்ம ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட "கருத்துருசார் உருவகம்" என்பதன் அடிப்படையில் நாம் கொள்கலன்–கொள்பொருள் உறவை "கருத்துருசார் பல்பொருளொருமொழியம்" அல்லது "அண்மை-திட்டம்" ("contiguity-schema") (ஒப்பிடுக Blank 1999b) என அழைக்க இயலும். உண்மையில் இந்தப் பகுதியில் தரப்பட்ட எல்லா எடுத்துக்காட்டுகளும் வேறுபட்ட கருத்துருசார் ஆகுபெயர்களின் நேர்வுகளாகும். எ.கா. BUILDING – FUNCTION/GOAL கட்டிடம் – செயல்பாடு-இலக்கு (9b), BUILDING – AFFECTED PERSONS கட்டிடம் – பாதிக்கப்பட்ட நபர்கள் (9c), CAUSE – RESULT காரணம்-விளைவு (11), CONTAINER – CONTENT கொள்கலன் – கொள்பொருள் (10; 13a), OBJECT – ACTOR பொருள்-செயல்புரிபவர் (14a), ANIMAL – MEAT OF THIS ANIMAL விலங்கு- இவ்விலங்குகளின் இறைச்சி (15).

இதுவரை நாம் பல்பொருளொருமொழியத்தின் வகைப்பாட்டியலை புலனறிவுசார் பொருண்மையியலின் பெரிய வருகை சூழல்களில் நுழைக்க இயலும்; மற்றும் கருத்துருசார் ஆகுபெயர்கள் விதி அடிப்படையிலான பல்பொருளொருமொழியத்திற்கு வழிவகுப்பதோடு மட்டுமன்றி கருத்துருசார் உருவகங்கள் பின்வருவது போன்று கட்டிடம்-கோட்பாடு-உருவகத்தின் (BUILDING–THEORY–metaphor) நீட்சியைக் ("extension") ஏற்படுத்துகின்றன (Blank 1999:22).

(17) a. Is that the *foundation* of your theory?

இது தான் உனது கோட்பாட்டின் அஸ்திவாரமா?

b. His theory has thousands of little rooms and long, winding corridors.

*அவனது கோட்பாடு ஆயிரக்கணக்கான அறைகளையும் நீண்ட தாழ்வாரங்களையும் கொண்டுள்ளது

(ex. cf. Lakoff/Johnson 1980: 46, 53)

Metaphors we live by/ நாம் சார்ந்து வாழும் உருவகங்கள் என்ற நூலின் மையக் கருத்து "நாம் எண்ணவும் செயல்படவும் செய்யும் நமது சாதாரண கருத்துருசார் ஒழுங்குமுறை அடிப்படையில் உருவக இயல்புள்ளதாகும்." (Lakoff/Johnson 1980: 3) என்பதாகும்; இதை ஆகுபெயருக்கு விரிவுபடுத்தும் போது அது அதன் கவர்ச்சியை இழப்பதில்லை. கருத்துருசார் உருவகங்கள் மொழிவழி உலகை அமைப்பாக்கம் செய்யும் ஒரு வழியாகும்; கருத்துருசார் ஆகுபெயர்கள் கூடுதல் முக்கியத்துவத்துடன் மற்றொன்றை உருப்படுத்தம் செய்கின்றது. சிலநேரங்களில் ஒரு வகைபாட்டின் மூலவகை நேர்வுக்கும் வகைபாட்டிற்கும் இடையில் உள்ள உறவிலிருந்து வகைப்பாட்டியல் உறவுகளை உருவாக்கிப் பயன்படுத்துகின்றோம். நாம் எல்லா முக்கியமான உபாயங்களையும் அதாவது உருவகத்தையும் ஆகுபெயரையும் ஒருசொல்போலியத்தையும் பயன்படுத்தி உலகைப் பிரதிபலிக்கின்றோம் என்பது முழுவதும் நம்பத்தகுந்ததாகும். கருத்தாடல் நிலையில், இந்த உண்மை மரபுசார் உருவகங்கள், ஆகுபெயர்கள் (மற்றும் வகைப்பாட்டியல்கள்) இவற்றைப் பயன்படுத்துவதாலும், இவை தவிர மரபுசார் கருத்துருசார் உருவகங்கள் மற்றும் ஆகுபெயர்கள் மற்றும் மூலவகை-வகைப்பாட்டு உறவுகள் இவற்றின் அடிப்படையிலான புதுமைகள் அடிப்படையிலும் பிரதிபலிக்கப்படுகின்றது. ஆகுபெயர்கள் அடிப்படையான அண்மைகளைச் சார்ந்துள்ளது என்பதும் பெரும்பாலும் இது சட்டகங்களிலும் காட்சிகளிலும் (frames and scenarios)

நிலைபெற்றுள்ளது என்பதும் உருவகங்கள் நேரிடையாக தொடர்பில்லாத கருத்துருக்கள் அல்லது பொருண்மைக்களங்கள் இவற்றிற்கு இடையிலுள்ள காட்சி அடிப்படையிலான மற்றும் செயல்பாடு அடிப்படையிலான ஒற்றுமைகளிலிருந்து விளைகின்றது என்பதும் சர்ச்சைக்கு அப்பாற்பட்டதாகும் (ஒப்பிடுக: Croft 1993; Koch 1995; Blank 1997).

அறிவின் எந்த நிலையில் இந்தக் கருத்துருசார் உருவகங்களும் ஆகுபெயர்களும் நம் மனதில் சேகரிக்கப்பட்டுள்ளன என்பதும் ஒரே கருத்துருசார் பின்னணியைக் காட்டினாலும் ஏன் சில சொற்களின் பயன்பாட்டிற்கு மொழிச் சிறப்பான கட்டுப்பாடுகள் இருக்கின்றன அதே நேரத்தில் வேறு சில சொற்களில் இந்தக் கட்டுப்பாடுகள் இல்லை என்பதும் தெளிவாக இல்லை. முதலாவது கலைக்களஞ்சியம்சார் அறிவு (encyclopedic knowledge) என்று கூறுவதும் பிந்தையது ஓரளவுக்குத் தனித்தன்மையானது (idiosyncratic) என்று கூறுவதும் போதுமானதல்ல/திருப்தியானதல்ல. இந்த இடத்தில் மொழியியல் அடிப்படையில் பொருத்தமான விதிகளின் இரண்டு நிலைகளைச் சேர்ப்பது அவசியமாகும்; அதாவது “கருத்தாடல் வகைகள்” (“discourse types”) அல்லது “கருத்தாடல் மரபுகள்” (“discourse traditions”) என்று கூறப்படும் விதிகளின் நிலை மற்றும் ஒரு மொழிக்குச் சிறப்பான மொழி விதிகளின் நிலை. குறிப்பிட்ட கருத்தாடலின் சரியான உருவாக்கத்திற்கு ஒரு குழும விதிகள் கருத்தாடல் மரபுகள் ஆகும். எ.கா. உருவகங்கள் மற்றும் அடிபடு வழக்குகள் (clichés) இவற்றின் ஒரு குழுமம் மற்றும் ஒரு பயன்படுத்தப்பட்ட காரை வாங்கும் போதும் ஒரு கருத்தரங்கில் ஒரு கட்டுரையைச் சமர்ப்பிக்கும் போதும் பயன்படுத்தும் உத்திகள் (விளக்கத்திற்குப் பார்க்க Koch 1997). ஒரு திடமான மொழியில் மெய்படுத்தம் செய்யப்பட்டாலும் கருத்தாடல் விதி மொழிச் சிறப்புவாய்ந்தது அல்ல: அது ஒரு வகை கருத்தாடலைப் பண்பாக்கம் செய்கின்றது; எனவே ஒரு தீர்மானிக்கப்பட்ட வழியில் கருத்தாடல் வகையைப் பயன்படுத்தும் எல்லா

மொழிகளின் பேசுவோர்களுக்கும் பொதுவானதாகும். மாறாக மொழி விதிகள் முழு பேச்சு சமூகத்திற்கோ அல்லது புவியல் அடிப்படையில் அல்லது சமூக அடிப்படையில் வரையறுக்கப்பட்ட குழுவிற்கோ தனித்தன்மைவாய்ந்ததாகும்.

இந்த இரு நிலைகளும் கீழ்வரும் படத்தில் (Blank 1999a: 23) உருப்படுத்தம் செய்யப்பட்டுள்ளது போன்று ஒரு பக்கத்தில் களஞ்சியம் சார் அல்லது கருத்துரு சார் அறிவுடன் ஊடாட்டம் செய்கின்றது மற்றொரு பக்கத்தில் உண்மையான கருத்தாடலுடன் ஊடாட்டம் செய்கின்றது.



இந்த மாதிரி அடிப்படையில் புனைவுகள்/புதுமைகள் (innovations) முக்கியமான தொடர்புகளில் உளவியல் சார் அடிப்படையுடன் மேன்மையான களஞ்சியம்சார் அறிவின் மீது மெய்ப்படுத்தம் செய்யப்படுகிறது (எ.கா. முக்கியமான ஒற்றுமை, அண்மை அல்லது முரண்பாடு) அல்லது மொழிபேசுவோர்கள் ஒப்புமையால் புலனறிவு அடிப்படையில் நிரப்பப்பட்டுள்ள அடித்தளங்கள்/அஸ்திராரங்கள் கொண்ட ஏற்கனவே உள்ள

உருவகங்களுக்கு, ஆகுபெயர்களுக்கு அல்லது வகைபாட்டியல்களுக்கு அவற்றைச் செலுத்துகின்றனர். புனைவுகள்/புதுமைகள் ஒரு குறிப்பிட்ட மொழி விதியாக சொல்லனாக்கம் (lexicalization) செய்யப்படலாம் (தனித்தன்மையான உருவகம், ஆகுபெயர் போன்றன) (இது உடைந்த அம்புக்குறியால் உருப்படுத்தம் செய்யப்பட்டுள்ளது.); அல்லது புதுமை முதல்முறையாக பயன்படுத்தப்பட்ட குறிப்பிட்ட கருத்தாடலின் விதியாக உருப்படுத்தம் செய்யப்படலாம். இந்தப் புதுமை பொருத்தமான/சரியான மொழி விதியாக சொல்லனாக்கம் செய்யப்படலாம் (lexicalized).

எடுத்துக்காட்டாகப் பல கருத்துருசார் அண்மைகள் (conceptual contiguities) நிரந்தரமாகக் கவனயீர்ப்பு செய்யப்பட்டுள்ளது; மற்றும் ஒரே அல்லது இணையாகக் கட்டப்பட்ட சட்டகங்கள் அல்லது ஒரே கருத்தாடல் வகை இவற்றை அணுகும் சொற்களின் ஒத்த ஆகுபெயர்களை அனுமதிக்கும். நாம் இந்த எல்லா ஆற்றல்வாய்ந்த ஆகுபெயர்களைப் பற்றி அறிந்திராததால் நாம் அவற்றை உட்படுத்தும் விதிகளையும் அவற்றின் சிறப்பு கட்டுப்பாடுகளையும் கற்றிருக்கவேண்டும். வால்டெரைட் (Waltereit 1998: 14-19, 26ff.) தெளிவாக இவை கருத்தாடல் விதிகள் என்று சுட்டிக்காட்டுகின்றார்: ஒவ்வொரு கருத்தாடல் வகையும் திட சொல்சார் ஆகுபெயர்களால் (concrete lexical metonymies) நிரப்ப இயலும் ஒரு குழும "கருத்துருசார் ஆகுபெயர்களை" ("conceptual metonymies") தூண்டுகின்றது. இது ஏன் (10)-உம் (11)-உம் பல எண்ணிக்கையிலான கருத்தாடல் வகைகளில் உள்ள ஒரு விதியுடன் ஒத்திருக்கின்ற/பொருந்தியிருக்கின்ற அண்மையின் (contiguity) வகைகள் மிகவும் பரவலானது என்பதை விளக்கும். பின்வரும் எடுத்துக்காட்டில் காட்டியுள்ளது போன்று ஒரு கருத்துருசார் ஆகுபெயரின் பரப்பெல்லை

அதன் கருத்தாடல் வகையின்/வகைகளின் பரப்பெல்லையால் வரையறை செய்யப்பட்டுள்ளது (Blank 1999a: 24).

(18) a. The *ham sandwich* is waiting for his check.

பன்றி இறைச்சி ஸாண்விச் அவன் சரிபார்ப்புக்கு வேண்டி காத்திருக்கின்றது.

(ORDERED DISH–CUSTOMER in waiters' discourse)

(பணியாளர் கருத்தாடலில் உத்திரவிடப்பட்ட உணவு-வாடிக்கையாளர் ஆகுபெயர் வகை)

b. G *Ich* werde verlängert

(EMPLOYEE–CONTRACT in discourses concerning work)

(வேலை தொடர்பான கருத்தாடலில் வேலையாள்-ஒப்பந்தம் ஆகுபெயர்)

இந்த புதிய பார்வையில் இப்போது நாம் ஏன் (12b) விசித்திரமானது என்று புரிந்துகொள்ள இயலும்: அண்மை-திட்டமான வேலையிடம்-வேலை நேரம் (PLACE OF WORK–TIME OF WORK) என்பதை முழுவதுமாகப் புரிந்த்துகொள்ள இயலும் என்றாலும் இது வழக்காமான கருத்தாடல் விதியல்ல. இந்தக் கருத்துருசார் ஆகுபெயர் ஒத்த ஆகுபெயர்களை (analogous metonymies) உருவாக்க ஆக்கபூர்வமாக பயன்படுத்த இயலும்; ஆனால் தூண்டப்பட்ட கருத்தாடல் வகையின் (activated discourse type) அடிப்படையிலேயே இதைச் செய்யவியலும். இது மாதிரியான கருத்துருசார் உருவகங்களுக்கும் பொருந்தும்: (19)-இல் எடுத்துக்காட்டியுள்ளது போல் ஒரு ஒற்றுமைத் திட்டம் கருத்தாடல் வகையின் ஒரு விதியாக மனதில் நிலைநிறுத்தப்பட்டால் அதை ஒத்த உருவகங்களால் விளைவாக்கமாக நிரப்ப இயலும் (Blank 1999a: 24).

(19) a. E The trigger word opens a *mental space.*

தூண்டல் சொல் ஒரு மன இடத்தைத் திறந்தது.

(CONCEPTS – CONTAINERS in linguistics)

(மொழியியலில் கருத்துருக்கள்-கொள்கலன்கள் ஆகுபெயர்)

b. F Je paragonne à ta jeune beaulté, Qui toujours dure en son printemps nouvelle, Ce moys *d'Avril*, qui ses fleurs renouvelle [...]

(Ronsard, *Les amours* CIII [1552])

c. Thou art thy mother's glass and she in thee

Calls back the lovely *April* of her prime.

(Shakespeare, *Sonnets* III)

F *avril*-ஐயும் E april-ஐயும் 'youth' என்ற அர்த்தத்தில் பயன்படுத்துவது மறுமலர்ச்சி செய்யுளுக்கு (Renaissance poetry) வரையறைப் படுத்தப்பட்டுள்ளது; இங்கும் ஒத்த இடமாற்றங்கள் (analogous transfer) சாத்தியமாகும் (Blank 1999a: 24):

(19) d. For since mad *March* great promise made of me; If now the *May* of my years much decline, What can be hoped my harvest time will be?

(Sidney, *Astrophel and Stella* [~ 1580]; cited after: Shakespeare, *Sonnets*, ed. by C. Knox, London: Methuen 1918: 6fn.)

குறிப்பிட்ட கருத்தாடல் அடிப்படையிலான கட்டுப்பாடுகள்/வரையறைகள் மாதிரி வரைபாட்டியல்களுக்கும் செயல்படும்; ஆனால் உருவகம் அல்லது ஆகுபெயர்களின்

நேர்வுகளைவிட இங்கு சூழல் குறைவாகவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது மட்டுமன்றி அது கூடுதல் புலனாய்வை வேண்டும் (Blank 1999a: 24):

(20) I apprehended a *vehicle* on the *premises*.

நான் வளாகத்தில் ஒரு வண்டியைக் கைப்பற்றினேன்.

(BASIC LEVEL CONCEPT–SUPERORDINATE LEVEL CONCEPT in "police-speak"; Ex. cf. Nerlich/Clarke, in press)

காவலர் பேச்சில் அடிப்படைநிலைக் கருத்துரு–துணைநிலைக் கருத்துரு ஆகுபெயர்

திடமான/பருமைத்தன்மையான உருவகங்கள் (concrete metaphors), ஆகுபெயர்கள் அல்லது வரைபாட்டியல்கள் குறிப்பிட்ட கருத்தாடல்களின் விதிகளாகும்; மற்றும் இது அவற்றின் பின்னால் நிற்கும் கருத்துருசார் உருவகங்கள், ஆகுபெயர்கள் மற்றும் வரைபாட்டியல்களுக்கும் சரியாகப் பொருந்தும். இவற்றை "சிறிய" கருத்தாடல் வகைக்கு வரையறை செய்யலாம் அல்லது கருத்தாடல் வகைகளின் பெரிய குழுமத்திற்கு ஒரு விதியாகச் செயல்படலாம். ஒரு கருத்துருசார் உருவகமோ ஆகுபெயரோ ஒப்புவிக்கப்பட்ட கருத்தாடல் வகையின் திட்டவட்டம் பிற சொற்களுக்கு இந்தக் கருத்துருசார் உருவகம் அல்லது ஆகுபெயரின் இடமாற்றத்தை உறுதிசெய்யும்: நாம் இந்த விதி இயங்கும் கருத்தாடல்களில் பயன்படுத்தப்படாத ஒரு சொல்லுக்கு ஒரு கருத்துருசார் உருவகம் அல்லது ஆகுபெயருரை நீட்சி செய்ய இயலாது. இந்த ஆகுபெயர்கள் மற்றும் உருவகங்களின் பரப்பெல்லை பண்பாடு அடிப்படையில் தூண்டப்பட்ட சட்டகங்களாலும் கருத்தாடல் விதிகளாலும் சிறப்பாக வரையறுக்கப்பட்டுள்ளது; எனவே சமூகத்திற்கு சமூகத்திற்கு வேறுபடும்.

மேலும் ஒரு ஆகுபெயர், உருவகம் அல்லது புதிய உள்ளடங்குமொழிய (hyponymous) அல்லது உள்ளடக்குமொழிய (hyperonymous) அர்த்தம் ஒரு தீர்மானிக்கப்பட்ட மொழியின் நிலையில் ஒரு குறிப்பிட்ட மொழி விதியாகச் சொல்லனாக்கம் அடைவது சாத்தியமாகும். இந்த இடத்தில் நம்மிடம் ஒரு கருத்தாடல் விதியின் தனித்தன்மையான சொல்லனாக்கம் இருக்கும் (இது தொடக்கத்தில் ஒரு புலனறி பின்னணிக்கு எதிராகச் சுருக்கவர்ணனை செய்யப்பட்டுள்ளது). அம்மாதிரியான விதிகளிலிருந்து உருவான இணையான சொல்லனாக்கம் செய்யப்பட்ட உருவகங்களையும் ஆகுபெயர்களையும் ஒப்புமைசார் பொருண்மை மாற்றத்தின் (*analogous semantic change*) நேர்வுகளாகப் பொருள்கோள் செய்யலாம்.

3.4.4 பல்பொருளொருமொழியின் நான்கு மட்டங்கள்/நிலைகள்

நாம் (9)-இலிருந்து (20) வரையுள்ள பல்பொருளொருமொழியின் எடுத்துக்காட்டுகளைத் திருபப்பார்ப்போம். பிளாங்க் உருவாக்கிய மாதிரி அவற்றின் தனிப்பட்ட பண்பைத் தீர்மானிக்கின்றது. இது பல்பொருளொருமொழியின் நிலைகளின் நான்குமடங்கு வகைப்பாட்டியலுக்கு (typology) வழிவகுக்கின்றது (Blank, 1999a:25-26).

1 விதி அடிப்படையிலான சொல்லனாக்கம் அடையாத பல்பொருளொருமொழியம் (Rule-based non-lexicalized polysemy):

Ham sandwich ‘ஹாம் ஸாண்விச் கொண்டுவரப் பணித்த வாடிக்கையாளர்’ என்பது மிகத் திட்டவட்டமான கருத்தாடல் வகைக்குக் கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் எல்லைக்குட்பட்ட எண்ணிக்கையிலான வருகைச் சூழல்களுக்குப் பயன்படுத்தப்படும் கருத்தாடல் விதியைப் பின்பற்றுகின்றது. இருப்பினும் இந்தக் கருத்தாடல் வகையின் சட்டகத்திற்குள் இது பிற உணவு வகைகளுக்கு முழுவதும் இடமாற்றம்

செய்யவியலும். இந்தக் கருத்தாடல் விதியின் கூடுதலான சொல்லனாக்கம் அல்லது ஒரு குறிப்பிட்ட மொழியின் நிலையில் இந்த ஆகுபெயரின் ஒரு தனிப்பட்ட நேர்வு இல்லை என்று தெரிகின்றது. இது உணவுப் பரிமாறுபவரின் கருத்தாடலில் கருத்தாடல் விதியாகும் என்பதில் ஐயம் இல்லை; ஒருவேளை உலகம் முழுவதும் இது உண்மையாக இருக்கலாம். ஓரளவுக்கு இதே விதி (18b), (19a) - (19d) என்பனவற்றிற்கும் உண்மையாகும்.

2 கட்டுப்பாடு இல்லாத அல்லது சில தனித்தன்மையான கட்டுப்பாடுகள் கொண்ட விதி அடிப்படையிலான மற்றும் சொல்லனாக்கம் அடைந்த பல்பொருளொருமொழியம் (Rule-based and lexicalized polysemy with no or few idiosyncratic restrictions).

E *book* மற்றும் E *sad* என்பதன் பல்பொருளொருமொழியங்கள் கலைக்களஞ்சியப் (உலகப்பொதுவானதாகவும் இருக்கலாம்) புலனறிவு சார் பின்னணியிலிருந்து உருவாக்கப்பட்டதாகும் மற்றும் அவை திட்டவட்டமல்லாத கருத்தாடல் விதிகளின் நேர்வுகளாகும். கொள்கலன் வழி கொள்பொருளைக் குறிப்பிடுவது அல்லது விளைவு வழி காரணத்தைக் குறிப்பிடுவது என்பன பல சூழல்களில் அனுமதிக்கப்படுகின்றது. இந்த எடுத்துக்காட்டுகள் யாவும் அவற்றின் குறிப்பிட்ட மொழிகளில் மொழி விதிகளாக சொல்லனாக்கம் அடைந்துள்ளன; ஆனால் பின்வரும் வகைகளுக்கு முரணாக அவை பயன்பாட்டின் தனித்தன்மையான எந்த கட்டுப்பாடுகளையும் மற்றும் ஒப்புமையுள்ள கருத்துருக்களுக்கு இடமாற்றத்தையும் காட்டவில்லை.

3 தற்போக்குக் கட்டுப்பாடுகள் கொண்ட விதி அடிப்படையிலான மற்றும் சொல்லனாக்கம் அடைந்த பல்பொருளொருமொழியம் (Rule-based and lexicalized polysemy with idiosyncratic restrictions):

அ. E *school*, *to sleep*, *lamb*, *to operate மற்றும்* F *sortir* என்பனவற்றின் வேறுபட்ட பல்பொருளொருமொழியங்கள் எல்லாம் உலகப்பொதுமையான புலனறிவுசார் பின்னணியிலிருந்து ஆக்கப்பட்டதாகும்; மற்றும் 2-இல் உள்ள எடுத்துக்காட்டுகள் போன்று அவை மிக விரிந்த கருத்தாடல் விதிகளின் நேர்வுகளாகும் மற்றும் ஆங்கில அகராதியின் விதிகளாகச் சொல்லனாக்கம் அடைந்துள்ளன. மேலும் அவை கிட்டத்தட்ட வலுவான தற்போக்குக் கட்டுப்பாடுகளுக்குச் (idiosyncratic restrictions) சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது ஒப்புமையுள்ள நேர்வுகளுக்கு (analogous cases) முழு இடமாற்றத்தைத் தடைசெய்கின்றது; இது ஒழுங்குமுறையானதாகவும் புரியக்கூடியதாகவும் இருந்தாலும் ஒரு வேளை மொழி பேசுவோரார்களால் மொழியின் நியமத்தின் அத்துமீறலாகக் கருதப்படலாம்.

ஆ. E *mental space*, *vehicle* மற்றும் (9e)-இல் உள்ள *school* கூட 3a-இல் விளக்கப்பட்ட அதே வகையைச் சார்ந்த்தாகும்; ஆனால் அவை ஒரு குறிப்பிட்ட/திட்டவட்டமான நடைசார் அல்லது சமூகமொழியியல்சார் நிலைக்கு கூடுதல் கட்டுப்பாட்டைக் காட்டுகின்றது.

4. தற்போக்குச் சொல்லனாக்கமுற்ற பல்பொருளொருமொழி (Idiosyncratic lexicalized polysemy):

மரபுசார் அமைப்பொழுங்கின் வெளிப்படையான பிரயோகம் இல்லாமல் உருவான பல்பொருளொருமொழியத்தின் நேர்வுகளை இறுதி வகை உட்படுத்துகின்றது;

அதாவது ஒரு கருத்துருசார் உருவகம், ஆகுபெயர் அல்லது வகைப்பாட்டியல். இவ்வகையின் நேர்வுகள்/நிகழ்வுகள் It *rat* 'mouse', 'rat'; Sp *coche* 'coach', 'car'; Sp *sueño* 'dream', 'sleep'; F *hôte* 'host', 'guest' or Sard *masetu* 'gentle', 'irascible' என்பனவாகும் (Blank 1999a: 26). இருப்பினும் கருத்தாடல் விதியாக மரபொழுக்கமாகத்தின் (conventionalization) இடைப்பட்ட நிலையை விட்டுவிட இயலாது. இவ்வகையிலான தற்போக்குப் பல்பொருள் ஒருமொழி பொது மொழிக்குப் பொருத்தமான விதிகளால் விளையும் பொருண்மைமாற்றத்தின் வகைகளான உட்கிரகித்தல் (absorption), பொருண்மை நீட்சி (semantic extension), பிரபலமான சொற்பிறப்பியல் (etymology), தானியக்க மறுதலை மாற்றம் (auto-converse change), முரண் அடிப்படையிலான பொருண்மை மாற்றம் (contrast-based semantic change) என்பனவற்றின் பின்விளைவாக நேர்ந்ததாகத் தோன்றுகின்றது (எ.கா. வெளியிடும் திறம் அல்லது செயல்திறன்); ஆனால் அவை பெரும்பாலும் உருவகம், ஆகுபெயர், பொருண்மைக் கட்டுப்பாடு (semantic restriction) என்பன பிரயோகிப்பது போன்று கருத்துரு அமைப்பொழுங்கைப் பிரயோகிப்பதில்லை.

மரபொழுக்கமாக்கத்தின் (வழக்குமுறைமையாக்கம்) (conventionalization) இந்த வேறுபட்ட நிலைகள் மற்றும் தற்போக்கு கட்டுப்பாடுகள் (idiosyncratic restrictions) ஓரளவுக்குப் பல்பொருளொருமொழி பற்றிய பேசுவோரின் விழிப்புணர்வை அடையாளப்படுத்துகின்றது. வகை 1 இந்தச் சூழலில் முழுவதும் இயல்பானதாகும்; ஆனால் பொருந்தாத கருத்தாடல் சூழலில் பயன்படுத்தினால் அது மக்களை மகிழ்விக்கவோ அவதூறுசெய்யவோ செய்யும். வகை 3b-ஐ பல கருத்தாடல்

வகைகளுக்குப் பயன்படுத்த இயலும்; ஆனால் பொருத்தமற்ற அடையாள வழக்காகும் (register). வகை 3a பொதுவாகக் காணப்படாதது; ஆனால் சொல்லனாக்கம் அடையாத இடங்களில் விளைவாக்கமாக இடமாற்றப்பட்டால் அதிர்ச்சியையும் கண்டனத்தையும் விளைவிக்கும். இந்த விளைவில் ஒரு கருத்துப்பரிமாற்ற விளைவை/தாக்கத்தை வெளிப்படுத்துவதற்கு புதுமையாக்கம் செய்யும் பேசுவோரின் சந்தர்ப்பங்களைச் சாந்திருக்கின்றது. கருத்துப்பரிமாற்ற விளைவுக்கான சந்தர்ப்பங்கள் இடமாற்றதிற்கு வெளிப்படுத்தப்பட்ட வகை 2க்கு குறைவான நன்மை பயக்கும்; ஏனென்றால். வகை 2 பேசுவோர்கள் உண்மையில் பல்பொருள் ஒருமொழிய அர்த்தங்களை வேறுபடுத்திக்காண்பதில் சிரமப்படுகின்றார்கள் என்பதற்கு சான்று இருக்கின்றது. வகை 4 பொதுமையாக்கதிற்குப் பலபடித்தானது (heterogenous): இங்கு எல்லாம் பல்பொருளொருமொழியத்தின் தனிப்பட்ட நேர்வுகளைப் பொறுத்து அமையும்.

3.5 முடிவுரை

இறுதிப் பகுதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது போன்று பல்பொருள் ஒருமொழியத்தை பொருண்மை மாற்றத்திலிருந்து முழுவதும் ஆக்கவியலாதது (Blank 1999a:26). இந்த இடத்தில் நாம் ப்ரெயலின் கருத்தை மாற்றவேண்டிவரும். பொருண்மை புதுமையாக்கத்தின் நேரடியான சொல்லனாக்கம் செய்யப்பட்ட விளைவாகப் பல்பொருள் ஒருமொழி ஒரு குழும சாத்தியங்களின் ஒரு வழி மட்டுமேயாகும். உண்மையில் பேசுவோர் வெளிப்படையாக கருத்தாடல் மரபில் நிறுவப்பட்டுள்ள கருத்துருசார் அமைப்பொழுங்கைப் பிரயோகிப்பதை விரும்புகின்றனர். புதுமையாக்கங்கள் ஒரு கருத்தாடல் வகையின் நிலையில் மரபொழுக்கமாக மாற இயலும்; மற்றும் அவை பயன்பாடு மற்றும் மாற்றவியலுவதன் திட்டவட்டமான தற்போக்கு கட்டுப்பாடுகள்

இருந்தும் இல்லாமலும் மொழியின் விதியாக சொல்லனாகத்திற்கு மேலும் சமர்ப்பிக்கப்படுகின்றது (Blank 1999a:26).

சாதாரண மனிதர்கூட ஒரு பொருண்மை உறவு இருக்கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க இயலுகையில், பல்பொருளொருமொழி நீண்ட காலமாக வல்லுனர்களுக்குத் திகைப்பூட்டும் ஒன்றாக இருக்கின்றது. பிளாங் தமது கட்டுரையில் பல்பொருளொருமொழியத்தை வருகைசூழல் வேறுபாடு மற்றும் ஒருசொல்போலியல் இவற்றிலிருந்து வேறுபடுத்த ஒரு நோக்கீட்டு மற்றும் பொருண்மை பரிசோதனையை உருவாக்கியுள்ளார்; மற்றும் ஒரு சொல்லின் சொல்லனாக்கம் செய்யப்பட்ட அர்த்தங்களின் இடையில் ஏழுவகை பொருண்மை உறவுகளை தந்துள்ளார். பொருண்மையியலின் கோட்பாட்டுக் கருத்துருவாகச் சொல்சார் பல்பொருள் ஒருமொழியம் தற்போது நேர்மறையில் விவரணை செய்யப்பட்டுள்ளது; பொருண்மையியல்சார் மற்றும் அகராதியல்சார் வருணனையின் கருவியாக நாம் அதை கூடுதல் துல்லியமாகப் பயன்படுத்த இயலும். பொருண்மை உறவுகளின் ஏழுவகைகளும் தெளிவின்மை மற்றும் பொருண்மை மயக்கம் இவற்றிலிருந்து வேறுபடுத்துதல் பாடப்பொருள்களுக்கு இடையிலான தீர்மானத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது; மற்றும் அவை எல்லா திடமான நேர்வுகளையும் ஒருமனதாக விளக்குவதில் வெற்றி பெறாது. இது உண்மையில் “மொழியியல் பொருண்மையியலின் பொருள்கோண்மை இயல்பாகும்” (Geeraerts 1993: 263).

இயல் 4

தமிழில் சொற்பொருண்மையியல் மற்றும் பொருண்மை மாற்றம் பற்றிய முந்தைய ஆய்வுகள்

4.1 அறிமுகம்

வினைகளின் பொருண்மை பற்றிய விரிவான ஆய்வு இராசேந்திரன் அவர்களால் செய்யப்பட்ட முனைவர் பட்ட ஆய்வும் (Rajendran 1978) முதுமுனைவர் ஆய்வுமாகும் (Rajendran 1983). துரதிஷ்ட வசமாக இவ்விரு ஆய்வேடுகளும் புத்தக வடிவில் வெளிவரவில்லை. அவரது தற்காலச் சொற்களஞ்சியம் (இராசேந்திரன் 2001) தமிழ் சொற்களைப் சொற்பொருண்மையியல் அடிப்படையிலும் நைடாவின் பொருண்மைகூறாய்வு (Nida, 1975) அடிப்படையிலும் ஆய்ந்த ஆய்வின் விளைவாகும். இருப்பினும் வினைகளின் பொருண்மை மாற்றதையும் நீட்சியையும் புலனறிவு மொழியியல் கோட்பாடு அடிப்படையிலும் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையிலும் அமைந்த முழுமையான ஆய்வு வெளியீடுகள் இதுவரை வெளிவரவில்லை. தற்போதைய ஆய்வு வினைகளின் பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் பல்பொருள் ஒருமொழியத்துடன் களப்பொருண்மையியலுடன் தொடர்புபடுத்தியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வியலில் தமிழில் சொற்பொருண்மையியல் மற்றும் பொருண்மை மாற்றம் பற்றி நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளும் வெளிவந்த கட்டுரைகளும் நூல்களும் பட்டியலிடப்பட்டு சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

4.2 தமிழ் வினைகளின் பொருண்மையியலும் தொடரியலும்

"Syntax and Semantics of Tamil verbs" (தமிழ் வினைகளின் பொருண்மையியலும் தொடரியலும்) என்ற முனைவர்பட்ட ஆய்வு (Rajendran 1978) இராஜேந்திரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு (1973-1978) பூனா பல்கலைக்கழகத்தில் ஆய்வேடாகச் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாய்வேடு தமிழ் வினைகளைப் பில்மோரின் வேற்றுமை இலக்கணம் அடிப்படையிலும் நைடாவின் பொருண்மைகூறாய்வு அடிப்படியிலும் ஆய்ந்துள்ளது. இவ்வாய்வேட்டில் தமிழ் வினைகளுக்கு வேற்றுமைச் சட்டங்கள் அமைத்துத் தரப்பட்டுள்ளது. நைடாவின் பொருண்மைகூறாய்வு அடிப்படையில் தமிழ் வினைகள் பொருண்மைக் களங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பொருண்மைக் களங்களிலும் வரும் வினைகளுக்கு இடையிலான பொருண்மைக் கூறு வேறுபாடுகளும் ஒற்றுமைகளும் கண்டுபிடிக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. தமிழ் வினைகள் பொருண்மைக் கூறு அடிப்படையில் சலன வினைகள் (இயக்க வினைகள்/இடமாற்றவினைகள்), கைமாற்ற மாற்றவினைகள் (உரிமைமாற்ற வினைகள்), நிலைமாற்றவினைகள், தாக்கவினைகள், புலனுணர்வு வினைகள், உணர்ச்சிவினகள், அறிவுசார் வினைகள், கருத்துப்பரிமாற்ற வினைகள், சேர்க்கை வினைகள், பிற கலவைத்தன்மையான வினைகள் எனப் பகுக்கப்பட்டு ஆயப்பட்டுள்ளன. ஒரு பொருண்மைக் களத்தில் வரும் வினைகள் பொருண்மை அடிப்படையிலும் பயன்பாட்டு அடிப்படையிலும் எவ்வாறு வேறுபட்டும் ஒற்றுமையாகவும் நிற்கின்றன என்பது எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளது. ஒரு பொருண்மைக் களத்தில் அடக்கப்பட்டுள்ள வினைகளுக்கிடையே உள்ள பல்பொருமொழிய உறவும் முரண்பாடுகளும் பொருண்மைக் கூறாய்வு அடிப்படையில் எடுத்துக்காட்டுளுடன் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினைகளுக்கும் அவற்றின் பல்பொருளொருமொழிய அமைப்பு எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளது. இவ்விளக்கம் தற்போதைய

ஆய்விற்கான தகவல்களைத் திரட்டப் பயனுள்ளதாக அமைகின்றது; குறிப்பாக வினைகளின் அடிப்படை பொருண்மைகளையும் பொருண்மை மாற்றங்களையும் பொருண்மை நீட்சிகளையும் ஆய்வதற்கு உதவும் பயனுள்ள தகவல்கள் இதில் உள்ளன. தற்போதைய ஆய்வுக்கு இது ஒரு அடித்தளமாக அமைகின்றது.

இவ்வாய்வின் அடிப்படையில் இவர் வெளியிட்ட Verbs of Cooking in Tamil (Rajendran 1976), Semantic Structure of Tamil Verbs (Rajendran 1981), Verbs of 'Seeing' in Tamil (Rajendran 1982), Coming and Going in Tamil (1983), Semantic Structure of Directional Verbs of Movement (Rajendran 1983), Componential Analysis of 'Eating' in Tamil (Rajendran 1995), வாருங்கள் போங்கள் (Rajendran 2001), Syntax and Semantics of Verbs of Transfer in Tamil (Rajendran 2002) என்ற கட்டுரைகளும் முன்னோடி ஆய்வுகளாகக் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

4.3 தமிழ்ச் சொற்றொகையின் பொருண்மையியல் ஆய்வு

மேற்கண்ட ஆய்வுக்குப் பின்னர் இராஜேந்திரன் அவர்களால் பல்கலைக் கழக மானியக்குழுவின் நிதிநல்கையில் "Semantics of Tamil vocabulary" என்ற முதுமுனைவர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் நைடாவின் பொருண்மைக்கூறு ஆய்வு அடிப்படையில் தமிழ்ச் சொற்கள் பருமைப்பொருள்கள், நிகழ்வுகள், அருவப்பொருட்கள், தொடர்பன்கள் எனப் பகுக்கப்பட்டு ஆயப்பட்டு ஆய்வேடாக பூனாபல்கழகத்தில் 1983-இல் சமர்ப்பிக்கப்பட்டது (Rajendran 1983). இவ்வாய்வு தமிழ்ப் பல்கலைக்கழகத்தால்

வெளியிடப்பட்ட "தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம்' என்ற அவரது நூலுக்கு அடித்தளமாக அமைந்தது.

4.4. தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம்

தற்காலத் தமிழுக்கு ஒரு சொற்களஞ்சியம் உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் என்ற ஆய்வு இராசேந்திரன் அவர்களால் 1989-91களில் மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு 2001-இல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டது (இராசேந்திரன் 2001). இது நைடாவின் பொருண்மைக்கூறு கோட்பாடு அடிப்படையில் அமைந்துள்ளது. தமிழ்ச் சொற்றொகை பருப்பொருட்கள், நிகழ்வுகள், அருவங்கள், தொடர்பன்கள் என நான்கப் பகுக்கப்பட்டுத் தமிழ்ச் சொற்கள் நைடாவின் பொருண்மைக்கூறாய்வு கோட்பாடு அடிப்படையில் ஆயப்பட்டுப் படிநிலையில் பொருண்மைக் களங்களாகப் பகுக்கப்பட்டுப் பொருண்மைத் தலைப்புகளில் வகைப் படுத்தப்பட்டுத் தரப்பட்டுள்ளன. இச்சொற்களஞ்சிய அமைப்பில் தமிழ்ச் சொற்கள் அவைகளுக்கு இடையேயுள்ள ஒருபொருள்பன்மொழியம் (synonymy), உள்ளடங்கு மொழியம் (hyponymy), உள்ளடக்கு மொழியம் (hypronymy), சினைமொழியம் (meronymy), எதிர்மொழியம் (antonymy) போன்ற பொருண்மை உறவுகளை வெளிப்படுத்தி நிற்குமாறு தரப்பட்டுள்ளன. இந்நூலும் தற்போதைய ஆய்வுக்குத் தரவுகளையும் தகவல்களையும் தந்து உதவுகின்றது.

4.5 தமிழ் மின்சொற்களஞ்சியம்

தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் என்ற ஆய்வுக்குப் பின் தமிழ் மின்சொற்களஞ்சியம் என்ற ஆய்வு இரஜேந்திரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் 2005-இல் வெளியிடப்பட்டது (இராசேந்திரன், பாஸ்கரன் 2005). இது தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் என்ற இராஜேந்திரனின் நூலைக் கணினிப் பயன்பாட்டிற்கு உட்படுத்துவதாக அமைந்தது.

இராசேந்திரனில் (2001) தரப்பட்ட தமிழ்சொற்றொகையின் பொருண்மை அமைப்பு (அதாவது படிநிலைப் பாகுபாட்டு ஒழுங்கமைப்பு) வழியமைப்புமுறைகளால் (programs) மின்சொற்களஞ்சியத்திற்கான தரவுத்தளமாக மாற்றப்பட்டுள்ளது. இதிலிருந்துதான் பயன்படுத்துபவர் கேட்கும் கேள்விகளுக்கான தகவல் தரப்படும். சொற்களஞ்சியச் சொற்றொகை தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் தரப்பட்டுள்ளது போன்று பொருண்மைப் புலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது (semantic fields). ஒவ்வொரு பொருட்புலனுக்கும் படிநிலை அடிப்படையிலும் முன்நிலை அடிப்படையிலும் எண்கள் தரப்பட்டுள்ளன. இவ்வெண்களின் வரிசை சொற்றொகைப் பாகுபாட்டின் பொருண்மை அமைப்பை விளக்குவதாய் அமையும். எதிர்காலத்தில் தரவுத்தளத்தில் புதிய சொற்களைச் சேர்க்கவும் புதிய பாகுபாடுகளை உருவாக்கவும் இத்தகைய அமைப்பு பயனுள்ளதாக அமைகின்றது. இம்மாற்றங்களுக்கும் மேம்பாடுகளுக்கும் ஏற்ற வகையில் வரிசைச் சொற்றொகைப் பாகுபாட்டு எண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலையில் தரப்படும் புதிய செய்திகள் தற்போதைய தரவுடிப்படையுடன் உறவுபடுத்தப்படும். சொற்றொகைப் பாகுபாடு மின்சொற்களஞ்சியத்தின் முதன்நிலை தரவு அடிப்படையை உருப்படுத்தம் செய்யும்.

4.6. தமிழ்ச் சொல்வலை ஆய்வுத்திட்டம்

தமிழக அரசின் தமிழ் இணையப் பல்கலைக் கழத்தின் (தற்போது தமிழ் இணையக் கல்விக்கழகம் நிறுவனம் என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது) நிதி நல்கையின் கீழும் இந்திய அரசின் மனித மேம்பாட்டு வளத் துறையின் நிதி நல்கையின் கீழும் இராசேந்திரனால் மேற்கொள்ளப்பட்ட "தமிழ்சொல்வலை" என்ற ஆய்வுத்திட்டத்தின் கீழ் தமிழ்சொற்கள் அவற்றிற்கிடையேயுள்ள பொருண்மை உறவுகள் அடிப்படையில் இணைக்கப்பட்டு தரவுதளமாகத் தரப்பட்டுள்ளன. ஒருபொருள் பன்மொழியம் தான் தமிழ்ச் சொல்வலையின் அடிப்படை உறவாகும். உள்ளடங்கு மொழிய-உள்ளடக்கு மொழிய உறவு, சினைமொழிய-முழுமொழிய உறவு, எதிர்மறை உறவு என்பன சொற்களுக்கிடையே உள்ள பிற உறவுகளாகும். இவ்வகைப்படுத்தலின் பின்னணியில் தமிழ்ச் சொல்வலை சொற்றொகையை மூலப்பொருண்மையியல் ஆய்வு அடிப்படையில் ஒருவித பாகுபாடு செய்கின்றது. இவ்வாய்வுத் தரவு தற்போதைய ஆய்வுக்குத் தேவையான தகவல்களையும் தரவுகளையும் தந்து உதவியுள்ளது.

4.7. இயந்திரம்படிக்கவியலும் தமிழ் அகராதிகளைப் பயன்படுத்தி ஆக்கமுறை அகராதி உருவாக்குதல்

Building Generative lexicon from MRDs in Tamil (இயந்திரம்படிக்கவியலும் தமிழ் அகராதிகளைப் பயன்படுத்தி ஆக்கமுறை அகராதி உருவாக்குதல்) என்ற உயராய்வு பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதிநல்கையின் கீழ் இராசேந்திரனால் தமிழ்ப் பல்கலைகழக மொழியியல் துறையில் மேற்கொள்ளப்பட்டு (2006-2009) ஆய்வேடாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது (இராசேந்திரன், 2010). இவ்வாய்வு புஸ்தெஜோவ்ஸ்கியின்

‘ஆக்கமுறை அகராதிக்கோட்பாடு’ (Pustejovsky 1995) நெறிமுறை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும்.

4.8. தமிழ்ப் பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச் சொற்களின் ஆக்கமுறை அகராதி உருவாக்கம்

புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையில் அமையும் ”தமிழ்ப் பெயர்ச்சொற்களின் ஆக்கமுறை அகராதி உருவாக்கம்” மற்றும் ”தமிழ்ப் வினைச்சொற்களின் ஆக்கமுறை அகராதி உருவாக்கம்” என்ற ஆய்வேடுகள் (academia.edu மற்றும் ResearchGate என்ற இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன) மேற்சொன்ன ”இயந்திரம்படிக்கவியலும் தமிழ் அகராதிகளைப் பயன்படுத்தி ஆக்கமுறை அகராதி உருவாக்குதல்” என்ற ஆய்வின் விளைவுகளாகும். இவ்வாய்வேடுகள் புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டை முற்றிலுமாகத் தமிழாக்கம் செய்து முறையே தமிழ்ப் பெயர்சொற்களையும் வினைச்சொற்களையும் எடுத்துக்காட்டுகளாகத் தந்து ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைத் தமிழ் மொழியியலுக்கு அறிமுகப்படுத்துகின்றன. தமிழ்ப் பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச் சொற்களின் பல்பொருண்மை பல ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்ப் பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச் சொற்களின் பல்பொருண்மையை விளக்கும் ஆக்கமுறைக் கொள்கை அடிப்படையிலான முதன்மையான ஆய்வேடுகளாக இவை அமைகின்றன. தமிழ்ப் பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச் சொற்களின் பல்பொருண்மையைப் பட்டியலிடும் முயற்சியில் ஈடுபடாமல் பல்பொருண்மையை அவை சேர்ந்துவரும் சொற்களிலிருந்து ஆக்கும் சாத்தியம் பற்றி இவ்வாய்வேடுகளில் கூறப்பட்டுள்ளது. இவ்வாய்வேடுகள் தமிழ்ப் பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச்சொற்களின் பல்பொருண்மையை ஆய்வதோடு அல்லாமல் எவ்வாறு இப்பல்பொருண்மையை அல்லது பொருண்மை நீட்சியை ஆக்கபூர்வமாக விளக்கலாம் என்ற நோக்கிலும் கவனத்தைச் செலுத்தியுள்ளன. இதற்கு உறுதுணையாக

புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு கையாளப்பட்டுள்ளது. இக்கோட்பாடு இன்றைய காலகட்டத்தில் அர்தங்களைப் பட்டியலிடும் அகராதியின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி சொற்பொருண்மையை ஆக்கமுறையாக ஆய்வதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. இதன் அடிப்படையில் தான் தமிழ்ப் பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச்சொற்களின் அர்த்தங்களை ஆக்கபூர்வமாக ஆயும் இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புஸ்தெஜோவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைத் தமிழ் எடுத்துக்காட்டுகளின் உதவியால் புரிந்துகொள்ளும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச்சொற்களின் பல்பொருண்மையை (பல்பொருளொருமொழியம்) விளக்க புஸ்தெஜோவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக்கோட்பாடு எந்த அளவுக்குப் பொருத்தமானது என்பதை அறியும் முயற்சியும் இவ்வாய்வேடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.9 தமிழ்ச் சொல்வலை

'தமிழ்சொல்வலை' என்ற ஆய்வேடு மத்திய அரசிசின் மனிதவளமேம்பாட்டு நிறுவன நிதி நல்கையின் கீழ் இராசேந்திரன் அவர்களால் தமிப்பல்கலைக்கழக் மொழியியல் துறையில் மேற்கொள்ளப்பட ஆய்வு அடிப்படையிலான ஆய்வேடாகும் (இராசேந்திரன், 2009. academia.edu மற்றும் ResearchGate என்ற இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது). சொல்வலை என்பது சொற்களைக் கருத்துக்கள் (Concepts), தலைப்புகள் (Topics) அல்லது விஷயங்கள் (Subjects) ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு செய்வதாகும். கால வளர்ச்சிக்கேற்பச் சொற்கள் கணினி மயமாக்கப்பட்டு சொல்வலை என்ற புதிய வடிவைப் பெற்றுள்ளன. சொல்வலை சொற்களைப் பற்றிய உறவுகளை உள்ளடக்கிப் பயன்படுத்துவோர் சொற்களைப் பற்றிய தேவையான தகவல்களைக் கணினி வழி எளிதாகப் பெறவேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்படுகின்றன. தமிழ்ச் சொல்வலை என்ற இவ்வாய்வில் தமிழ்ச் சொற்றொகை

பெயர், வினை, பெயரடை, வினையடை என்ற சொற்பாகுபாடுகளில் பிரிக்கப்பட்டுப் பயன்படுத்துவோருக்கு எளிமையான முறையில் கணினிமயமாக்கப்பட்டு தருவதை விளக்குவதாக அமைந்துள்ளது. இராசேந்திரன் அவர்களின் (இராசேந்திரன், 2000) தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியங்கஞ்சியம் இவ்வாய்விற்கான முக்கிய மூலவளமாக அமைகின்றது.

தமிழ்ச் சொற்களில் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், பெயரடைச்சொற்கள், வினையடைச்சொற்கள் ஆகியவை அடங்குகின்றன. பெயரும் வினையும் தலைமை இலக்கணக்கூறு என்றும் பெயரடையும், வினையடையும் துணைமை இலக்கணக்கூறு என்றும் அழைக்கப்படுகின்றது. இவற்றை சொல்வலையில் வகைப்படுத்தப்பட்டு பயன்படுத்துவோருக்கு தேவையான செய்திகளை எளிதாகப் பெற ஒரு மென்பொருளை உருவாக்குவதே இவ்வாய்வேட்டின் நோக்கமாகும்.

ஒரு பொருண்மை களத்தில் அடங்கும் சொற்களின் உறவுகளைத் தருவது சொல்வலையாகும். அதாவது ஒருபொருள் பன்மொழியம், தொடர்புடையச் சொற்கள், எதிர்மொழியம், உள்ளடக்கு, உள்ளடங்கு மொழியம், சினைமொழியம் போன்ற பல்வேறு உறவுகள் வழி ஒரு சொல்லுடன் பொருண்மை அடிப்படையில் தொடர்பு கொண்டுள்ள பல்வேறு சொற்களை நாம் தேவைக்கு தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சொல்வலையில் பொருண்மை உறவுகள் அடிப்படையிலான மற்றும் பொருண்மை அடிப்படையிலான செய்திகளைப் பெற முடியும்.

இவ்வாய்வேடு தமிழ்ச் சொல்வலைக் குறித்த பயனுள்ள முயற்சியாகும். இதில் பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடைச்சொல், வினையடைச்சொல் குறித்த செய்திகளின் பொருண்மை அடிப்படையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இதில் தமிழ்ச் சொற்கள் சொல்வலையாக மாற்றப்பட்டுள்ளது. இத்தரவுத்தளம் ஜாவா என்ற

மென்பொருளில் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சொல்வலையில் பெயர், வினை, பெயரடை, வினையடை பற்றிய செய்திகள் தனித்தனியே பொருண்மை அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது.

தமிழ் சொல்வலை பற்றி இராசேந்திரன் அவர்கள் வெளியிட்டுள்ள பின்வரும்கட்டுரைகள் இவ்வாய்வேட்டிற்கு முன்னோடி ஆய்வுகளாக அமைகின்றது:

1. Dravidian WordNet: A Proposal (Rajendran, S. 2003)
1. Tamil WordNet (Rajendran et al)
2. Preliminaries to the preparation of a WordNet for Tamil (Rajendran, 2002)

4.10. வைரமுத்துக்கவிதைகளில் வரும் உவமை மற்றும் உருவகங்களின் பொருண்மையியல் ஆய்வு

இராசேந்திரன் அவர்களின் மேற்பார்வையில் தாமோதரக் கண்ணனால் (2005) மேற்கொள்ளப்பட்ட வைரமுத்துக்கவிதைகளில் வரும் உவமை மற்றும் உருவகங்களின் பொருண்மையியல் ஆய்வு என்ற முனைவர் பட்ட ஆய்வும் சொற்பொருண்மையியல் கோட்பாடு தழுவியதாகும். இதில் இவ்வாய்வாளர் கவிஞர் வைரமுத்துவின் கவிதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் மற்றும் தொடர்களின் உவமைகளையும் உருவகங்களையும் பொருண்மையியல் கோட்பாடு அடிப்படையில் ஆய்ந்துள்ளார்.

4.11 தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு

இராசேந்திரனின் “தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு” என்ற ஆய்வேடு (இராசேந்திரன், 2015) academia.edu மற்றும் ResearchGate என்ற இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வு தமிழ்

பொருண்மையில் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் குறிப்பிடத் தகுந்த ஆய்வாகும். தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு குறித்த ஆய்வுகள் வெளிவராத நிலையில் இவ்வாய்வேடு தமிழ்ப் பொருண்மையிலுக்கு முக்கியமான வரவாகும். ஆங்கில மொழிக்கு லீச் என்பவரால் ஆங்கில வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வெளிவந்துள்ளன (Leech 1971-81). தமிழுக்கு இத்தகைய ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

ஆங்கில வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு குறித்து லீச் என்பவர் ஆய்வு செய்து நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளியிட்டுள்ளார். இவர் சொற்களைப் பொருண்மைக் கூறு அடிப்படையில் ஆய்ந்து அவைகளுக்கிடையே வரும் உறவுகளைத் தர்க்க உறவுகளாக உருப்படுத்தம் செய்து விளக்குகிறார். வாக்கியங்களைத் தேற்றக்கூற்றுகளாகப் (propositions) பகுத்து ஒரு வினைப்பாடு பயனிலையையும் பங்கெடுப்பாளர்களையும் கொண்டிருப்பதாக ஆய்ந்து வாக்கியத்தின் பொருண்மை அமைப்பை விளக்குகிறார். சொவா (Sowa, 1984) என்பவர் கருத்துரு சார்ந்த அமைப்பு அடிப்படையில் அமைந்த கருத்து வரைபடக் (Conceptual Graph) கோட்பாட்டை வாக்கியங்களின் பொருண்மை அமைப்பை மெய்ப்படுத்தம் செய்து விளக்குகிறார். இவ்விரு கோட்பாடுகளையும் பின்பற்றி தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு குறித்த இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தமிழ் வாக்கிய அமைப்பைப் பொருண்மையியல் அமைப்பில் தரும் முன்னோடியான ஆய்வாகும். இத்தகைய வாக்கிய பொருண்மை அமைப்புகள் அறிவு பரிமாற்றத்திற்கும் செயற்கை அறிவு உருப்படுத்தத்திற்கும் அறிவுவள மேம்பாட்டிற்கும்

கருத்துசார் அகராதி உருவாக்கத்திற்கும் இயந்திர மொழிபெயர்ப்புக்கும் பயனுள்ளதாக அமைகின்றது. தகவல் மீட்பு அமைப்பொழுங்குகளிலும் செயற்கை அறிவு அமைப்பொழுங்குகளிலும் பயன்படும். இடைமொழி சார்ந்த இயந்திர மொழிபெயர்ப்புக்கு இது இன்றியமையாத இடைமுகமாக அமைகின்றாது.

4.12. மூலப்பொருண்மையியல் ஆய்வு (மெய்ப்பொருள் மூல ஆய்வு,Ontology)

இராசேந்திரனின் "மூலப்பொருண்மையியல் ஆய்வு/ மெய்ப்பொருள் மூல ஆய்வு (Ontology)" என்ற ஆய்வேடு (இராசேந்திரன், 2009) academia.edu மற்றும் ResearchGate என்ற இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வுலகில் மனிதனால் நிர்ணயிக்கப்பட்ட இருப்புப் பொருள்களை (பருப் பொருள்களும் அருவப் பொருள்களும்) மெய்ப்படுத்தம் செய்யும் கருத்துருக்கள் (concepts) எவ்வாறு பெயரிடப்பட்டுச் சொற்களாக உருப்படுத்தப்பட்டுக் கருத்துப்பரிமாற்றத்திற்காகவும் அறிவுப் பரிமாற்றத்திற்காகவும் வகைப்படுத்தப்படுகின்றன, எவ்வாறு மூலப்பொருண்மையியலும் களப்பொருண்மையியலும் வகைப்பாட்டியலும் ஒன்றையொன்று சார்ந்து அறிவை உருப்படுத்தம் செய்கின்றன, அவ்வறிவு உருப்படுத்தத்தை எவ்வாறு தகவல் மீட்பு ஒழுங்குமுறையாகப் பயன்படுத்தவியலும் போன்ற செய்திகளை இவ்வாய்வேடு விளக்குகின்றது. மேலும் களப்பொருண்மையியல் ஆய்வுகளும் வகைப்பாட்டியல் ஆய்வுகளும் மூலப்பொருண்மையியல் ஆய்வுகளும் சொற்களஞ்சியம், சொல்வலைகள் போன்ற மொழிக் கருவிகளை உருவாக்க உறுதுணையாய் அமைகின்றது என்பதும் இவ்வாய்வின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. இத்தகைய வகைப்பாட்டியலும் (taxonomy) அதற்குப் பின்னணியாய் அமையும் மூலப்பொருண்மையியல் ஆய்வும்

(மெய்ப்பொருள் மூலாய்வும்) (ontology) களப்பொருண்மையியல் ஆய்வும் இவ்வாய்வேட்டின் அடித்தளமாக அமைகின்றது.

சொல்வலைகள் மூலப்பொருண்மையியல் ஆய்வுகளைப் பயன்படுத்துகின்றன. சொல்வலைகள் சொற்களை அவற்றிற்கிடையேயுள்ள பொருண்மை உறவுகள் அடிப்படையில் இணைக்கின்றன. ஒருபொருள் பன்மொழியம் தான் சொல்வலைகளின் அடிப்படை உறவாகும். உள்ளடங்குமொழிய-உள்ளடக்குமொழிய உறவு, சினைமொழிய-முழுமொழிய உறவு, எதிர்மறை உறவு என்பன சொற்களுக்கிடையே உள்ள பிற உறவுகளாகும், இவ்வகைப்படுத்தலின் பின்னணியில் சொல்வலை சொற்றொகையை மூலப்பொருண்மையியல் ஆய்வு அடிப்படையில் ஒருவித பாகுபாடு செய்கின்றது. சொல்வலைப் பயன்படுத்தும் மூலப்பொருண்மையியல் ஆய்வு பற்றியும் இவ்வாய்வேட்டில் விளக்கப்பட்டுள்ளது.

4.13. தமிழ் வினைகளின் சொற்பொருண்மையியல் ஆய்வுகள்

இராசேந்திரனின் இயக்க/சலன வினைகளின் பொருண்மையில் ஆய்வு (Rajendran, August 2002), கைமாற்ற வினைகளின் பொருண்மையியல் ஆய்வு (Rajendran, November 2002), கருத்துப்பரிமாற்ற வினைகளின் பொருண்மையியல் ஆய்வு (Rajendran, Februar 2006), காண்டல் வினைகளின் பொருண்மையியல் ஆய்வு (Rajendran, 1982) உண்ணல் வினைகளின் பொருண்மையியல் ஆய்வு (Rajendran, 1995), சமையல் வினைகளின் பொருண்மையியல ஆய்வு (Rajendran, 1976) என்ற ஆய்வுகளும் இவ்வாய்விற்கு மூலவளமாகவும் முன்னோடியாகவும் அமைகின்றன.

4.14. தமிழ்வினைகளின் வரலாற்று மொழியியல் ஆய்வுகள்

தமிழ் வினைகளை வரலாற்று மொழியியல் அடிப்படையில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றில் சில நூல்களாகவும் கட்டுரைகளாகவும் ஆய்வேடுகளாகவும் வெளிவந்துள்ளன (Ramaswami Ayyar, 1939; Mancikam, 1972; Sivathanu, 1990; இராசேந்திரன், 2008). இவ்வாய்வுகள் சொற்பொருண்மையியல் தொடர்பான ஆய்வுகள் அல்ல என்றாலும் தமிழ் வினைச் சொற்களை வரலாற்றும் மொழியியல் கோட்பாடு அடிப்படையில் ஆயும் ஆய்வு என்ற நிலையில் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. இவற்றில் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியது சிவதாணு மற்றும் இரசேந்திரன் அவர்களின் வினையடிகள் குறித்த ஆய்வுகளாகும். இவ்வாய்வுகள் தமிழ் வினை அடிகள் குறிப்பாக அவற்றின் வடிவங்கள் காலப்போக்கில் (குறிப்பாக சங்ககால நூல்களில் மற்றும் சங்காலத்திலிருந்து தற்கால வரை) மாற்றம் அடைந்துள்ளன, எவை வழக்கிழந்துள்ளன எவை புதிதாக ஆக்கப்பட்டுள்ளன என்பன பற்றி விளக்குகின்றன. தமிழ் வினைகளை வரலாற்று நோக்கில் ஆயும் போது ஆங்காங்கே இவ்வினைகள் அடைந்துள்ள பொருண்மையியல் மாற்றங்கள் குறிபிடப்பட்டுள்ளன.

4.15. தமிழ்ப்பெயர்ச்சொற்களின் வரலாற்று மொழியியல் ஆய்வு

"வரலாற்று மொழியியல் அடிப்படையில் தமிழ்ப் பெயர்ச் சொற்கள் ஆய்வு (A Historical Linguistic Study of Tamil Nouns)" என்ற ஆய்வு (இராசேந்திரன் 2008) "தமிழ் வினையடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு (A Historical Linguistic Analysis Of Tamil Verbal Bases)" என்ற ஆய்வைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். தமிழ்ப் பெயர்ச் சொற்களுக்கு ஒரு வரலாற்று மொழியியல் ஆய்வை முழுமையாகச்

செய்வதுதான் இதன் முக்கிய நோக்கமாகும். இவ்வாய்வு தமிழ்த் தரவுகளைப் பழந்தமிழ் தரவு, இடைக்காலத் தமிழ் தரவு, தற்காலத் தமிழ் தரவு என்று காலவாரியாகப் பகுத்துக்கொண்டு வரலாற்று அடிப்படையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்பட்ட மாற்றங்களைத் தர முயலவில்லை. மாறாகச் சங்ககாலத் தமிழ்த் தரவை வைத்துக் கொண்டு பெயர்ச் சொற்களின் திரிபையும் ஆக்கத்தையும் ஆய்ந்து பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பை அறிந்து கொண்டு அதைத் தற்காலத் தமிழ் தரவு அடிப்படையில் பெறப்பட்ட பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்புடன் ஒப்பிட்டு மாற்றங்களையும் இழப்புகளையும் புதுமைகளையும் வெளிக்கொணரும் அடிப்படையில் தான் இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

இவ்வாய்வும் சொற்பொருண்மையியல் மாற்றத்துடன் நேரடித்தொடர்பு உடையது அல்ல என்றாலும் பெயர்ச்சொற்களை வரலாற்று அடிப்படையில் ஆய்கையில் பெயர்ச் சொற்களின் பொருண்மை மாற்றத்தையும் கணக்கில் கொள்ளவேண்டும் என்ற நிலையில் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

4.16. சுருக்கவுரை

இவ்வியலில் தமிழ்ச் சொற்பொருண்மையியல் குறித்த ஆய்வுகளும் நூல்களும் முன்னோடியான ஆய்வுகள் என்ற நிலையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. தற்பொதைய ஆய்வு இவ்வாய்வுகளின் அடித்தளத்தில் தான் அமைகின்றது.

இயல் 5

தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்

5.1. அறிமுகம்

தற்காலப் சொற்பொருண்மையியலில் முக்கியமான கவனக்குவிப்பு பல்பொருளொருமொழியத்தையும் பொருண்மை நெகிழ்வையும் ஆய்வதில் திரும்பியுள்ளது. ஒரு மொழியை மற்றொரு மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்கையில் குறிப்பாக இயந்திர மொழிபெயர்ப்பு செய்கையில் பல்பொருளொருமொழியம் சிக்கல்களை உருவாக்குகின்றது. இதனால் மொழியைக் கடைந்து சொற்களுக்கு இடையேயுள்ள பல்பொருளொருமொழியம் அல்லது பொருண்மை நீட்சியின் பொதுமைத் தன்மைகளையும் வேறுபாடுகளையும் ஆய்ந்து அறிவது தேவையாகின்றது. சொற்களின் பல்பொருண்மையால் அல்லது பல்பொருளொருமொழியத்தால் சொற்பொருண்மை மயக்கம் ஏற்படுகின்றது. இது மொழிகளுக்கிடையிலான மொழிபெயர்பைச் சிக்கலாக்குகின்றது. சொற்கள் எவ்வாறு பல்பொருளொருமொழியத்தன்மை அடைகின்றது, அவ்வாறு பொருண்மை நீட்சி செய்வதை அல்லது பொருண்மை மாற்றம் செய்வதை வரையறை செய்ய இயலுமா மற்றும் மொழிகளைக் கடந்து இத்தகைய பொருண்மை நீட்சி அல்லது மாற்றம் பொதுமைத்தன்மை காட்டுகின்றதா என்பது பற்றி ஆய்வது இன்றையத் தேவை ஆகின்றது. இத்தகைய அணுகுமுறையும் ஆய்வும் தமிழுக்குத் தேவை என்ற எண்ணத்தோடுதான் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வியல் தான் இவ்வாய்வேட்டின் தலையாய இயலாகும். கழிந்த நூற்றாண்டில் தமிழ் வினையைப் பற்றிய ஆரம்ப கட்ட ஆய்வுகள் யாவும் வினையடிகளைப் பற்றியும் அவற்றின் வரலாற்று அடிப்படையிலான மாற்றம் பற்றியும் வினையுடன் சேரும் ஒட்டுகள்

பற்றியும், திராவிட மொழிகளை அவற்றை ஒப்பிட்டு வரலாற்று மொழியியல் அடிப்படையில் ஆய்வதையும் நோக்கமாகக் கொண்டு அமைந்துள்ளது. தமிழ் பொருண்மையில் பற்றிய விரிவான ஆய்வு இராசேந்திரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக அவரது தமிழ் வினைகளின் தொடரியல் மற்றும் பொருண்மையியல் ஆய்வு (Rajendran 1978) முக்கியமானதாகும். மேலும் அவரது தமிழ்ச் சொற்றொகையின் பொருண்மையியல் என்ற முது முனைவர் ஆய்வும் (Rajendran 1983) முக்கிய ஆய்வாக அமைகின்றது. அவரது "தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம்" என்ற நூலும் (இராசேந்திரன் 2001) குறிப்பிடத்தக்க முக்கியமான பொருண்மையியல் ஆய்வாகும். இவ்வாய்வுகளின் பின்னணியில் தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருன்மை நீட்சியும் ஆயப்பட்டுள்ளன. இவ்வியலில் தமிழ் வினைகள் பொருண்மைகூறு அடிப்படையில் பொருண்மைக் களங்களாகப் பகுக்கபட்டு அவற்றின் அடங்கும் சொற்களின் பொருண்மை நீட்சிகளும் மாற்றங்களும் விளக்கப்படும்.

பொருண்மை மாற்றத்திற்கும் பொருண்மை நீட்சிக்கும் உள்ள எல்லைக் கோடு மிகவும் மெல்லியது. இவை பொருண்மை மாற்றத்திற்கு எடுத்துக்காட்டுகளாகும் அல்லது இவை பொருண்மை நீட்சிக்கு எடுத்துக்காட்டுகளாகும் என அறிதியிட்டுக் கூறுவது கடினமாகும். நாம் வரலாற்று அடிப்படையில் இரண்டு பதிவுகள் ஒன்றக இருந்தவை எனவும் காலப்போக்கில் அவை இரண்டு அல்லது மூன்று பதிவுகளாகக் குறிப்பிடுமாறு வேறுபட்டு மாற்றம் அடைந்துள்ளன எனவும் கூற இயலும். நாம் ஒன்றாக இருத்து காலப்போக்கில் ஒன்றுக்கும் மேற்பட்ட பதிவுகளாக அகராதியில் தரப்பட்டுள்ள சொற்களின் பொருண்மைகளை பொருண்மை மாற்றமாகவும் ஒரு பதிவின் கீழ் வரும் வேறுபட்ட பொருண்மைகளை பொருண்மை நீட்சிகளாகவும் கருதலாம்.

எடுத்துக்காட்டாக *நட* என்பது அகராதியில் காலால் நடக்கும் செயலையும் நிகழ்தலையும் குறித்து நின்று இரண்டு பதிவுகளாகக் கருதப்படும். இது பொருண்மை மாற்றத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

வினைகளைப் பொறுத்தவரையில் அவற்றின் பொருண் மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் முன்னர் விளக்கியவாறு களப்பொருண்மையியல் அடிப்படையில் ஆய்ந்து விளக்க இயலும். ஒரு பொருண்மைக் களத்தைச் சார்ந்த வினைகள் எவ்வாறு மற்றொரு பொருண்மைக் களத்திற்கு நகர்கின்றது அல்லது விரிவடைகின்றது, வினைகளின் மாற்றத்திற்கும் நீட்சிக்கும் அவற்றின் சூழல் எவ்வாறு காரணிகளாக அமைகின்றது என்பதன் அடிப்படையில் நமது ஆய்வு அமைய இயலும். எடுத்துக்காட்டாக *கேள்* என்ற கட்புல உணர்வு தொடர்பான பொருண்மை '(கேள்வி) கேள்' என்ற கருத்துப் பரிமாற்றம் தொடர்பான வினையாக பொருண்மை மாற்றம் அடைந்துள்ளதைக் குறிப்பிடலாம்.

(1அ) அவள் அவன் விரிவுரையாற்றுவதைக் கேட்டாள்.

(1ஆ) ஆசிரியர் அவளிடம் கேள்வி கேட்டார்.

இது போன்று *நட* என்று காலால் நடத்தலாகிய செயல்பாட்டைக் குறிப்பிடும் சலனப் பொருண்மைக் களத்தைச் சார்ந்த வினை 'நிகழ்' என்ற விரிந்த பொருண்மையைக் குறிப்பிடும் மாற்றத்தையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

(2அ) குழந்தை நன்றாக நடக்கின்றது.

(2ஆ) அந்த ஊரில் திருவிழா நடக்கின்றது.

ஒரு பொருண்மைக் களத்தைச் சார்ந்த வினைகள் எதிர்பார்க்கத்தக்க அல்லது எதிர்பார்க்க (ஊகிக்க) இயலாத பொருண்மை மாற்றத்தையோ பொருண்மை நீட்சியோ

அடைவதையும் ஒரு மூலமுதன்மைப் பொருண்மையிலிருந்து குறிப்பிட்ட மற்றொரு பொருண்மைக்கு மாறுவதையோ நீட்சி அடைவதையோ காணலாம். எடுத்துக்காட்டாக 'சுழல்' என அடிப்படையாகப் பொருள் தரும் *சுற்று* என்ற வினை 'அலைந்து திரிதல்' என பொருண்மை நீட்சிசெய்வதோடு '(தலை) *சுற்று'* என உருவகத்தன்மையான ஒருவித மயக்க உணர்வைக் குறிப்பிட்டு வேறு ஒரு பொருண்மைக் களத்திற்குப் பொருண்மை நீட்சிசெய்வதைக் குறிப்பிடலாம்.

(3அ) அவன் வீட்டைச் சுற்றிவந்தான்.

(3ஆ) அவள் இராட்டினத்தில் சுற்றி மகிழ்ந்தாள்.

(4இ) அவன் படிக்காமல் ஊரைச் சுற்றுகின்றான்.

(4ஈ) பஸ்சில் செல்லுகையில் பிராயாணம் பிடிக்காமல் அவளுக்குத் தலை சுற்றியது

பல சலனப் பொருண்மைகளின் பொருண்மை நீட்சிகளை இத்தகைய வகையில் அடக்கலாம். சலனவினைகளின் எழுவாயாகக் காலக் கூறுகள் வருவதை ஒரு உலகப் பொதுமையாகக் கூறலாம்.

(5) அவள் வீட்டிலிருந்து போய் ஐந்துமாதங்கள் கடந்துவிட்டன.

(6) அவள் ஒரு வருடம் சென்று வீட்டிற்குத் திரும்பினாள்.

இவ்வியலில் வினைகளைப் இராசேந்திரனினின் (1978) பொருண்மைக்கள வகைப்பாட்டைப் பின்பற்றி பொருண்மைக் களங்களாகப் பகுத்து எவ்வாறு இப்பொருண்மைக்களங்களில் வரும் முக்கிய வினைகள் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் அடைகின்றன என்றும் இத்தகைய பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் ஒரு வகைப்பாட்டின் கீழ் அடக்க இயலுமா என்றும் ஆயப்படும்.

சில சூழல்களில் ஒருபொருள்பன்மொழிகளாகச் செயல்படும் சில வினைகள் பொருண்மை நீட்சியால் வேறுபடுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக *நினை*, *எண்ணு* என்பன 'நடந்ததை நினைவுக்குக் கொண்டுவருதல்' என மூலமுதன்மை அடிப்படையில் பொருள்படும். இச்சூழலில் இரண்டும் ஒருபொருள் பன்மொழிகளாகும். ஆனால் *எண்ணு* என்பது 'கணக்கிடுதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்போது *நினை* என்பது இத்தகைய பொருண்மை நீட்சிசெய்யாது. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதை விளக்கும்.

(7அ) அவன் நேற்று நடந்ததை நினைத்துப் பார்த்தான்.

(7ஆ) அவன் நேற்று நடந்ததை எண்ணிப்பார்த்தான்.

(8) அவன் உண்டியலை உடைத்துப் பணத்தை எண்ணினான்.

(க்ரியா இந்த வேறுபாடு கருதி *எண்ணு* என்பதற்கு இரண்டு தனிப் பதிவுகள் தந்துள்ளது. ஆனால் திரவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதி இரண்டையும் ஒரே பதிவாகத்தான் தந்துள்ளது.)

தமிழ் வினைகளை அவற்றின் பொருண்மையியல் சார் இலக்கணப் பயன்பாடு அடிப்படையில் மூன்று குழுக்களாகப் பிரிக்கலாம்: பொருளடக்க வினைகள் (முதன்மை வினைகள்), வினைப்பாங்கையும் வினையாற்றலையும் உருப்படுத்தம் செய்யும் துணை வினைகள், பெயர்களுடன் இணைந்து வினைகளை ஆக்கும் வினையாக்க வினைகள். இவ்வாறு வினைகள் பொருண்மை மாற்றம் அடைந்து தமது செயல்பாடுகளை மாற்றிக்கொண்டுள்ளன. வினைச் சொற்களும் உருவகம் மற்றும் ஆகுபெயர் அடிப்படையில் பொருண்மை மாற்றங்களையோ நீட்சிகளையோ செய்யும். இத்தகையச்

செயல்பாடுகளின் பொதுமைத் தன்மையைப் புரிந்துகொள்வதும் இன்றியமையாத தேவையாகின்றது.

நாம் ஒவ்வொரு சொற்களையும் எடுத்துக்கொண்டு அவற்றின் பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் ஆய இயலும். ஆனால் இத்தகைய ஆய்வு இச்செயல்பாடுகளின் பொதுவான போக்குகளையும் அவை அடிப்படையிலான விதி விளக்கங்களையும் சுருக்கமாகத் தருவதற்குப் பயன்படாது. எனவே நாம் களப்பொருண்மையியல் (field semantics) பின்னணியில் பொருண்மை மாற்றங்களையும் பொருண்மை நீட்சிகளையும் வகைப்படுத்தவும் விளக்கவும் ஒருசில பொருண்மைக் களங்களையும் அவற்றை உருப்படுத்தம் செய்யும் சில முக்கியமான வினைகளை எடுக்காட்டாடக் கொண்டு பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் விளக்க முன்வந்துள்ளோம்.

5.2. தமிழ் வினைகளை முக்கியப் பொருண்மைக் களங்களாகப் பிரித்தல்

இராசேந்திரன் (1978, 2001) தமிழ் வினைகளை நைடாவின் பொருண்மைக் கூறாய்வு அடிப்படையில் பின்வரும் பொருண்மைக் களங்களாகப் பகுத்து ஆய்கின்றார்: சலன வினைகள் (இடமாற்ற வினைகள்), கைமாற்ற வினைகள், நிலை மாற்ற வினைகள், தாக்க வினைகள், புலனனுணர்வு வினைகள், உணர்ச்சி வினைகள், அறிவுசார் வினைகள், கருத்துப்பரிமாற்ற வினைகள், மற்றும் பிற வினைகள். நாம் இவ்வியலில் வினைகளின் பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் புரிந்துகொள்ள முக்கியமான பொண்மைக் களங்களிலிருந்து ஒரு சில எடுத்துக்காட்டான வினைகளை மட்டும் எடுத்துக்கொண்டு ஆய இருக்கின்றோம்.

வினைகளின் பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் வகைப்பாட்டை இரண்டு கோணங்களில் செய்யலாம்:

1) தொடரியல் அமைப்புசார் மாற்றம் அல்லது நீட்சி
2) பொருண்மையில் சார் மாற்றம்

தொடரியல் அமைப்புசார் மாற்றதைப் பொறுத்த வரை வினைகள் அவைகள் ஏற்கும் பங்கெடுப்பாளர்கள் அடிப்படையில் மாற்றம் பெறுகின்றதா என்பது கவனத்திற்குரியதாகும். இது தவிர வேறு தொடரியல் பண்புக்கூறு மாற்றங்கள் வினைகளின் பொருண்மை மாற்றத்திற்கோ பொருண்மை நீட்சிக்கோ காரணமாக அமைகின்றதா என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இதன் அடிப்படையில் வினைகளின் பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் வகைப்படுத்த இயலும். எடுத்துக்காட்டாகக் *கேள்* என்ற வினையை எடுத்துக்கொள்வோம். இவ்வினையின் பொருண்மை மாற்றத்தை இவை ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் அடிப்படையில் கண்டுகொள்ளலாம்.

(9அ) அவன் அவள் சொல்வதைக் கேட்டான்.

(9ஆ) அவள் அவளிடம் கேள்வி கேட்டான்.

முதல் வாக்கியத்தில் கேள் என்ற வினை பெறும் பங்கெடுப்பாளர்கள் அமைப்பிலிருந்து கேள் என்பது ‘hear’ பொருள் தரும் என்றும், இரண்டாவது வாக்கியத்தில் ‘ask’ பொருள்தரும் என்றும் அறியலாம். இது தவிர பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக் கூறுகளின் அடிப்படையில் பொருண்மை நீட்சியை வகை செய்ய இயலும். இத்தகைய

வகைப்பாட்டின் பட்டியலை அகராதியில் காணலாம். ஆறாவது இயலில் இத்தகைய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

பெத் லெவின் (Levin 1993) வினைகளை அவை பெறும் பங்கெடுப்பாளர் அடிப்படையிலும் வெளியமைப்பில் அவற்றின் உருப்படுத்தம் அடிப்படையிலும் பாகுபாடு செய்வார். எடுத்துக்காட்டாக, *வில்* என்பது விற்பவர், விற்கப்படும் பெருள், பெறுபவர் என்ற குறைந்தது மூன்று பங்கெடுப்பாளர்களை பெற்று வாக்கியங்களில் பயன்படுத்தப்படும். ஆனால் இவ்வினை தமிழில் விற்கப்படும் பொருள் எழுவாயாக வருமாறு பிறழ்ந்துவரும்.

(10அ) அவள் காய்கறி விற்றாள்

(10ஆ) காய்கறி விற்றது

இதை பெத் லெவின் வினைப் பிறழ்வு (verb alternation) என்பார். இது போன்று ஆங்கிலத்தில் give என்றவி னை பின்வருமாறு பிறழ்வுற்று வருதை பெத் லெவின் வினைப் பிறழ்வுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டுவார்.

(11அ) He gave a book to her.

(11ஆ) He gave a book to her.

நாம் இத்தகைய வகைப்பாட்டை நோக்கி இவ்வியலை அமைக்கவில்லை.

இரண்டாவதாகப் பொருண்மையியல் அடிப்படையில் வினைகளின் பொருண்மை நீட்சியையும் பொருண்மை மாற்றத்தையும் வகைப்படுத்த இயலும். இது குறித்த பல

ஆய்வுகள் இம்மாதிரியான வகைப்பாட்டை புலனறி மொழியியல் அல்லாது புலனறி பொருண்மையியல் அடிப்படையில் செய்வது சாலச் சிறந்தது என வழிகாட்டுகின்றன. அத்தகைய ஆய்வு நெறிதான் இங்குக் கையாளப்பட்டுள்ளது.

பொருண்மை மாற்றத்தின் வகைகள் பற்றி இரண்டாவது இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. புளூம்ஃபீல்டு (Bloomfield 1933) பொருண்மை மாற்றத்தைப் பின்வருமாறு வகைப் படுத்துகின்றார் எனப் பார்த்தோம்: குறுக்கம் (Narrowing), உருவகம் (Metaphor), ஆகுபெயர் (Metonymy), சினையாகுபெயர் (Synecdoche), மிகைப்படுத்தல் (Hyperbole), குறைப்படுத்தல் (Meiosis), சிதைத்தல் (Degeneration), உயர்ச்சி (Elevation)

பிளாங்க் (Blank 1998) பொருண்மை மாற்றத்தின் வகைகளைப் பின்வருமாறு வகைப்பாடு செய்வதைப் பார்த்தோம்: உருவகம், ஆகுபெயர், பொருண்மையின் சிறப்பாக்கம், பொருண்மையின் பொதுமையாக்கம், இணை உள்ளடங்குப் பொருண்மை மாற்றம், எதிர்மறைப் பொருண்மை மாற்றம், தானியக்க எதிர்மறை, தானியக்க மறுதலை, தொக்குநிற்றல், நாட்டார் சொற்பிறப்பியல். இது க்ரெஸ்காவால் (Grzega 2004) மாற்றபட்டு சிறிது பெரிதாக்கப்பட்டதைப் பற்றியும் பார்தோம். இவ்வாறு பலரது வகைப்பாடுகளைப் பற்றிப் பார்த்தோம்.

நாம் இதுவரைப் பார்த்த வகைப்பாட்டின் அடிபடையிலேயே தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் இவ்வியலில் ஆயப்பட்டுள்ளன.

சொல்வலை மிகப்பெரிய அளவில் சொல் தரவு மூலமாகச் செயல்பட்டுவருகின்றது. இது மொழிகளுக்கு இடையிலான தகவல் பரிமாற்றத்திற்கும் மொழிபெயர்ப்புக்கும் உதவுமாறு கட்டமைக்கப்பட்டுள்ளது. திராவிட மொழிகளுக்கான சொல்வலை

உருவாக்கம் நடைபெற்று வருகின்றது. சொல்வலையில் சொற்களின் வேறுபட்ட அர்த்தங்கள் தரவுத்தொகுதிகளைப் பயன்படுத்தி கண்டுபிடிக்கப்பட்டு பட்டியலிடப்படுவதுடன் அவற்றிற்கு இடையிலான பொருண்மை உறவுகள் அடிப்படையில் அவை ஒன்றிற்கொன்று இணைக்கப்பட்டுள்ளன. இங்கு சிக்கல் என்னவென்றால் ஒவ்வொரு சொல்லுக்கும் அர்த்தங்களின் பட்டியல்கள் நீண்டிருக்கும். வினைகளைப் பொறுத்தவரையில் இப்பட்டியல் பக்கக்கணக்கில் நீளும். இத்தகைய பட்டியலைப் பயன்படுத்தி மொழியைக் கடந்து மொழிபெயர்ப்பதற்கும் தகவல் பரிமாற்றத்திற்கும் தகவல் பெறுதலும் கடினமாகும். இப்பட்டியலுக்குப் பதிலாக இப்பட்டியமூலம் வெளிப்படும் சொற்களின் பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சிகளையும் விதிகளாகவோ அல்லது வகைப்பாடுகளாகவோ வகைப்படுத்தித் தந்தால் மேற்சொன்ன செயல்பாட்டை செம்மையாகவும் எளிமையாகவும் செய்யவியலும் என்பது வெளிப்படை. இத்தகைய நோக்கில் தான் இவ்வியலில் தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் ஆயப்பட்டுள்ளன.

மேலும் தனித்தனியாக வினைகளின் பொருண்மை பொருண்மை மாற்றத்தையும் நீட்சியையும் ஆய்வதற்குப் பதிலாக வினைகளைப் பொருண்மைக் களங்களாகப் பகுத்துக்கொண்டு பொருண்மை பொருண்மை மாற்றத்தையும் ஆய்வது இச்செயல்பாடுகளின் பொதுமைத் தன்மையும் ஊகிக்கவியலும் தன்மையையும் விளக்கவுவது எளிதாகவும் சிக்கனமாகவும் அமையும் என்பது நாம் எடுத்துக்கொள்ளும் முக்கிய கருதுகோளாகும்.

5.3 சலன வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்

ஆங்கிலம் போன்ற மொழிகளில் சலன வினைகளின் பொருண்மை மாற்றமும் நீட்சியும் குறித்து பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கட்டுரை வடிவிலும் புத்தகவடிவிலும் வெளிவந்துள்ளன. சில முக்கியமான ஆய்வுகளை நாம் பார்ப்போம்

5.3.1. **சில முந்தைய முக்கிய ஆய்வுகள்**

இயக்கவினைகளின் பொருண்மையியல் மாற்றம் மற்றும் நீட்சி பற்றி ஆங்கிலம் போன்ற மொழிகளில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவை கட்டுரை வடிவிலும் புத்தக வடிவிலும் வெளிவந்துள்ளன (Rajendran 1978; Yu 1997, Pederson 1999; Matlock 2001; Koga 2001; Yin 2002, 2011). இவ்வாய்வுடன் தொடர்புள்ள சில முக்கிய ஆய்வுகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

5.3.1.1 மனவியக்கத்தின் கருத்துருசார் செயல்நோக்கம்

டீனி மாட்லாக் (Matlock 2001) “The Conceptual motivation of factitive motion” என்ற தமது கட்டுரையில் எவ்வாறு மனவியக்கம் (fictive motion) என்ற கருத்துச்சாயல் இயக்கவினைகளின் பயன்பாட்டையும் நடத்தையும் புரிந்துகொள்ளப் பயன்படுகின்றது என்று விளக்குகின்றார். 1970களில் மற்றும் 1980களின் தொடக்கத்தில் டால்மியின் ஆய்வைத்தொடர்ந்து புலனறி மொழியிலார் மனவியக்கம் அதாவது மன அடிப்படையில் ஒரு வழியாக அல்லது கோடுசார் ஒழுங்குமுறை வழியாகப் போலச்செய்யப்படும் இயக்கம், இயக்கவினைகளின் உருவகப் பயன்பாட்டின் வகுப்பின் பயன்பாட்டையும் அமைப்பையும் ஊக்குவிக்கின்றது என்று வாதிடுகின்றனர். இந்தப் பார்வையில், ஒரு இயக்க வினை மரபுரிமை அடிப்படையில் பின்வருவன போன்று ஒரு இயக்கமற்ற காட்சியை விளக்குகின்றது.

(12) அந்த ரோடு கடற்கரை வழியாகப் போகின்றது.

(13) அந்த வண்டித் தடம் தோட்டம் வழியாகச் செல்கின்றது.

இருப்பினும் ஒரு கற்பனை வெளியில் ரோடும் தோட்டமும் "இயக்கத்தை" போலச்செய்வதாகவே எண்ணப்படுகின்றது. இங்கு நாம் மனவியக்கக் கட்டுமானங்களின் மொழியியல் நடத்தையை ஆயவும் போலச்செய்யும் இயக்கம் மன இயக்கக் கட்டுமானங்களின் பயன்பாட்டையும் புரிந்துகொள்ளலையும் ஊக்குவிக்கின்றதா என்றும் விவாதிக்கப்படும்.

போ, ஓடு என்ற இயக்க வினைகள் எங்கும் நிறைந்திருப்பது. மூலப்பொருண்மையியல் அடிப்படையில் முதன்மையானதாகவும் பிரதிபலிப்பதாகவும் இருக்கின்ற அடிப்படை மனிதச் செயல்பாடான இயக்க வினைகள் எல்லா மொழிகளிலும் இருக்கின்றது மற்றும் மொழியைக் கடந்து பொருண்மை நீட்சியின் ஒற்றுமையான அமைப்பொழுங்குகளைக் காட்டுகின்றது. நேரடியாகப் பயன்படுத்தப்படுகையில் இயக்க வினைகள் எவ்வாறு இயல் இருப்புப் பொருள் இடவெளியில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்கின்றது என்பதை விளக்குகின்றது. இந்நிகழ்வில் காலம் கடந்து செல்வதும் தொடக்க இடத்திலிருந்து இறுதி இடத்திற்கு இயக்கத்தின் தொடர்ச்சியும் உள்ளார்ந்ததாகும் (Miller and John-Liard 1976). பின்வரும் எடுத்துக்காட்டு இக்கூற்றைத் தெளிவுபடுத்தும்.

(14) அவர் சென்னையிலிருந்து தஞ்சாவூர் வரை ஓட்டினார்; ஓட்டுபவர்சென்னையில் தொடங்கி தஞ்சாவூரில் பயணத்தை முடித்தார்; போகிற வழியில் அவர் விழுப்புரம், சிதம்பரம், மயிலாடுதுறை, கும்பகோணம் ஆகிய நகர்களையும் வேறு பல நகர்களையும் கடந்து சென்றார்.

நேரடியாகப் பயன்படுத்தாத போது இயக்க வினைகள் இயல்பு இயக்கத்துடன் தொடர்பின்றி இருக்கும். பின்வருவன இதை எடுத்துக்காட்டும்.

(15) தீபாவளி வருகின்றது.

(16) தஞ்சாவூர் இப்போது வந்துவிடும்

(17) அவன் கோபமான மன நிலையிலிருந்து சாந்தமான மன நிலைக்குச் சென்றான்.

முதல் எடுத்துக்காட்டில் காலத்தைச் சார்ந்து *தீபாவளி* பேசுபவரை நோக்கி சலனிப்பதாகத் தோன்றுகின்றது; இரண்டாவது மூன்றாவது வாக்கியங்களில் இடம் சார்ந்த தஞ்சாவூர் நகர்வதாகத் தோன்றுகின்றது; மூன்றாவது வாக்கியத்தில் ஒரு மனநிலை மற்றொரு மனநிலைக்குச் செல்வதாகப் புரிந்துகொள்ளப்படும். சில நேர்வுகளில் புதிய இலக்கணச் செயல்பாட்டைப் பெற்று இயக்க வினை இலக்கணவாக்கம் செய்யும். எடுத்துக்காட்டாக *போ* பின்வருமாறு வருங்காலத்தைக் குறித்து நிற்கும்.

(18) அவன் தூங்கப் போகின்றான்.

இயக்க வினைகளின் நீட்சிகள் கருத்துரு உருவகத்தால் ஊக்கப்படுத்தப்படும்.

எ.கா

(19) காலம் இடவெளி ஆகும்

(20) மாற்றம் சலனம்/இயக்கம் ஆகும்.

செயல்நோக்கம் (motivation) புலனறி மொழியியலில் பரவலாக அறியப்படுகின்ற கருத்தாகும். தோராயமாகக் கூறினால் அது எந்த அளவுக்கு மொழி வடிவம் அல்லது ஒரு குழும மொழிவடிவங்கள் ஒரு மொழிக்குள் அல்லது பல மொழிகளைக் கடந்து அர்த்தம்

செய்கின்றது அல்லது விளக்கத்தக்கது என்பதைக் கருத்தில் கொள்ளும். செயல்நோக்கம் மொழி பயன்படுத்தப்படும் வழி அல்லது அது அமைப்பாக்கம் செய்யப்பட்டிருக்கும் வழி இவற்றை உட்படுத்தும். இது வெளித்தூண்டல்களான (external influences) பண்பாடு (culture), சமூகச் சூழல் (social context) என்பனவற்றையும் உள் துண்டல்களான (internal influences), புலனுணர்வு (perception), உயர்நிலை புலனறி செயற்பாங்கு (cognitive processes) (வகைப்பாடு செய்தல்) என்பனவற்றையும் உட்படுத்தும். எவ்வாறு மொழி செயல்படுகின்றது மற்றும் அது காலப்போக்கில் எவ்வாறு மாறுபடுகின்றது என்பதற்கு செயல்நோக்கம் விளக்கம் வேண்டினாலும் இது மொழி நடத்தைக்கு ஆக்கமுறை விளக்கங்களிலிருந்து (generative explanations) தெளிவாக முரண்பட்ட நிலையில் இருக்கின்றது. அக அமைப்பிலிருந்து புற அமைப்பை ஆக்கவேண்டியதில்லை என்பதால் எந்த விதியும் உருவாக்கப்படவேண்டியது இல்லை (Langacker, 1987). புலனறிவு மொழியியலார்கள் காலங்காலமாக வினைகளின் பொருண்மை நீட்சியை உள்ளடக்கிய மொழி அமைப்பொழுங்குகளை விளக்குவதற்கும் கணிப்பதற்கும் மிகச்சிறந்த நியாயமான வழி செயல்நோக்கமாகும் என்று காட்டியுள்ளனர்.

நாம் முதலில் கீழ்காணும் எடுத்துக்காட்டில் தந்துள்ள ஒரு வகையிலான இயக்க வினை நீட்சியைக் காண்போம்.

(22) அந்தச் சாலை கடலோரமாகப் போகின்றது.

(23) அந்த வண்டித்தடம் தோப்பு வழியாகச் செல்கின்றது.

(24) அந்த அடிச்சுவடுகள் வண்டித் தடத்தைப் பின் தொடர்கின்றது.

மேற்கண்ட வாக்கியங்களில் இயக்க/சலன வினைகள் இருந்தாலும் எந்த வெளிப்படையான இயக்கமோ சலனமோ வெளிப்படுத்தப்படவில்லை. முதலாவது

வாக்கியத்தை எடுத்துகொண்டால் *போ* என்ற வினை பயன்படுத்தப்பட்டாலும் அது ஒரு நிலையான சூழலையே விளக்குகின்றது (சாலையோ கடலோரமோ நகரவில்லை).

இவ்வகையிலான வினை நீட்சியில் உள்ள செயல்நோக்கக் குறைவு பின்வரும் வாக்கியங்களுடன் ஒப்பிடுகையில் வெளிப்படும்.

(25) அவள் கடற்கரையோரமாகச் போனாள்.

(26) அந்த நாய் தோப்பு வழியாகச் சென்றது.

(27) அந்தகார் பஸ்சை தஞ்சையிலிருந்து சென்னைவரைப் பின் தொடர்கின்றது.

இயக்க வினைகளின் பொருண்மை நீட்சி தமிழுக்கு மட்டும் எல்லைப் படுத்தப்படவில்லை. ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கும் இது பொருந்தும்.

(28அ) The road runs along the coast.

(28ஆ) A trail goes through the desert.

(28இ) The railroad tracks follow the river from Thanjavur to Trichi.

முன்னால் கண்ட வாக்கியங்களில் இயல் இயக்கம் அல்லது சலனம் காணப்படவில்லை என்றாலும் புலனறி மொழியியலார்கள் அம்மாதிரியான வாக்கியங்களின் கருத்துருவாக்கமும் பொருள்கோளும் உள்ளார்ந்த வகை இயக்கத்தை (implicit type of motion) உட்படுத்துகின்றது எனக் கொள்கின்றனர். இந்த உள்ளார்ந்த வகை இயக்கம் டால்மியால் (Talmy 1983, 1996, 2000) மனவியக்கம் என்றும் லாங்கேக்கரால் (Langacker, 1986) அருவத்தன்மையான இயக்கம் (abstract motion) என்றும் மத்சுமோட்டோவால் (Matsumoto, 1996) அகவய இயக்கம் (subjective motion) என்றும் அழைக்கப்படுகின்றது. புலனறி மொழியியல் பார்வை அடிப்படையில் 28அ போன்ற வாக்கியங்களைப் புரிந்துகொள்ள ஒரு கருத்துருவாக்கி (conceptualizer) (மொழி

பயன்படுத்துபவர் அல்லது கருத்துருவாக்கம் செய்பவர்) தேவை. கருத்துருவாக்கி அதைச் செய்கையில் உண்மையான இயக்கத்திற்கு அல்லது சலனத்திற்கு இணையான ஒன்றை அனுபவிக்கின்றார். கருத்துருவாக்கி ஒரு வெளிப்படையான செயலி (வினைமுதல்) இல்லாமல் இருந்தாலும் இயக்கத்தை அல்லது சலனத்தை ஊக்குவிக்கவோ அனுபவிக்கவோ செய்வதன் காரணமாக "இயக்கம்" அகவயமானது (subjective) என்று நம்பப்படுகின்றது.

5.3.1.2 சட்டகப் பொருண்மையில் அடிப்படையிலான ஆய்வு

'Systematic Verb polysemy in MT: A study of Danish Motion verbs with comparison with Spanish' என்ற தமது கட்டுரையில் பெடர்சன் (Pederson 1999) சட்டகப் பொருண்மையில் (Frame Semantics) அடிப்படையிலான ஒரு பொருண்மைக் கருவியை முன்மொழிகின்றார். இது இயந்திர மொழிபெயர்ப்புடன் தொடர்புபடுத்தி திருப்திகரமாக டானிஷ் சலன/இயக்க வினைகளின் முறையான பல்பொருள் ஒருமொழியைக் கையாளுவதற்கு உதவுகின்றது. அதிக மரபு அடிப்படையிலான இயந்திர மொழிபெயர்ப்பு ஒழுங்கமைப்புகளில் பயன்படுத்தப்படும் உறவுள்ள மற்றும் உறவற்ற பொருண்மைகளை ஒன்றுபோல் கையாளும் அதாவது உறவற்றதாகக் கையாளும் உத்தியை விட்டுவிட்டு பொருண்மையிலுள்ள உறவைச் சட்டகத் தனிம ஒப்படைப்புகள் வழி வெளிப்படுத்தும் மற்றும் முறையாக ஆக்கப்படும் அர்த்தங்கள் மூலமுன்வகைசார் அர்த்தங்கள் அடிப்படையில் ஆக்கப்படும் அணுகுமுறை பரிந்துரைக்கப்படுகின்றது. டானிஷ் தரவை ஸ்பானிஷ் தரவுடன் முரண்படுத்தி டானிஷ் சலன வினகளின் பொருண்மை வேறுபாடுகள் பகுப்பாய்வுக்கு மட்டுமன்றி மாற்றக் கட்டத்திலும்/தறுவாயிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; இதில் துண்டப்பட்ட சட்டகத் தனிமங்களில் உள்ள மாறுபாடுகள்/விலக்கங்கள் பொருத்தமான/இயைபுடைய வினைகளின் 'மூலமுன்வகை'

மொழிபெயர்ப்புகளிலிருந்து வேறுபடும் மொழிபெயர்ப்புகளைத் துண்டுகின்றது. இவ்வாய்வு ஊகிக்க இயலும் பல்பொருளொருமொழிக்கும் ஊகிக்க இயலாத பல்பொருளொருமொழிக்கும் வேறுபாடு பாராட்டுவதைப் பரிந்துரைக்கின்றது. பெடர்சன் (Pederson 1999) இவ்வேறுபாட்டைச் சீரான மற்றும் சீரற்ற பல்பொருண்மை (systematic and unsystematic polysemy) என்று குறிப்பிடுகின்றார். வினையின் சீருள்ள பல்பொருண்மைகளை அதன் கூட்டமைவிலிருந்து ஆக்கலாம்; ஆனால் வினையின் சீரற்ற பல்பொருண்மைகளை அதன் கூட்டமைவிலிருந்து ஆக இயலாது.

5.3.2. சலன வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்

5.3.2.1 சலன/இயக்க வினைகளின் பொருண்மைகளப் பாகுபாடு

இராசேந்திரன் சலனவினைகளை பொருண்மைக்கூறு ஆய்வு அடிப்படையில் ஆய்ந்து இயக்க வினகளைப் பொருண்மைக் களங்களாகவும் துணைப் பொருண்மைக் களங்களாகவும் பகுத்துத் தருகின்றார் (Rajendran 1978, இராசேந்திரன் 2001). இவர் இயக்க வினைகளை இயக்கம் நடைபெறுகிற இடத்தைப் பொறுத்து மூன்றாகப் பிரிக்கின்றார்: நிலத்தில் இயக்கம், நீரில் இயக்கம், விண்ணில் இயக்கம். *நட, ஓடு, ஊர், இழை, தவழ், நெளி, நகர்* என்பன நிலத்தில் நடக்கும் இயக்கங்கள் ஆகும். *நீந்து* என்பது நீரில் நடக்கும் இயக்கம் ஆகும். *பற* என்பது விண்ணில்/காற்றில் நடக்கும் இயக்கம் ஆகும்.

ஃபாபர் மற்றும் மைரல் (Faber and Mairal 1999) ஆகியோரைப் பின்பற்றி நாம் “இயக்கம்/சலனம்” என்ற பொருட்புலத்தை நான்கு துணைப் பொருண்மைக் களங்களாகப் பிரிக்கலாம். முதல் துணை பொருண்மைக் களம் இனப்பொது சலனத்தை விளக்கும்; பிற துணைக் களங்கள் பல சூழல்களில் சலனத்தைக் குறிப்பிடும் சொல்லன்களை

உட்படுத்தும்: திரவம்/நீர்மம், காற்றுமண்டலம் மற்றும் திசை. இந்த முக்கிய அமைப்பைக் குறுக்கே கடந்து முறை மற்றும் திசை இவற்றின் அளகைகள் ஒவ்வொரு துணைப் பொருண்மைக் களத்திலும் மேலும் பாகுபாட்டை அறிமுகப்படுத்தும். எடுத்துக்காட்டாக இந்த அளகைகள் பொதுச் சலனத்தைச் சொல்லனாக்கம் செய்யும் துணைப் பொருண்மைக் களத்திற்குள் பின்வரும் துணைப் பொருண்மைக் களங்களுக்குக் குறுக்காகச் செல்லும்.

1. திசை

   ஒரு இடம்/நபர்/பொருள் நோக்கிச் சலனிப்பது

   பின்னோக்கிச் சலனிப்பது

   மேல் நோக்கிச் சலனிப்பது

   கீழ் நோக்கிச் சலனிப்பது

2. முறை

   விரைவாகச் சலனிப்பது

   மெதுவாகச் சலனிப்பது

   சீராகச் சலனிப்பது

   வட்டமாகச் சலனிப்பது

5.3.2.2 முன்னோக்குச் சலனம்

நட, ஓடு, ஊர், இழை, தவழ், நெளி, நகர், பற, நீந்து என்பன முன்னோக்குச் சலனக்களில் அடங்கும். *நட* என்ற வினை குறிப்பிடும் ஒரு எடுத்துக்காட்டான அர்த்தத்தை எடுத்துக்கொண்டால் மனிதர்கள் காலைப் பயன்படுத்தி நிலத்தில் குறைந்தது ஒரு காலாவது நிலத்தில் ஊன்றியிருக்கும் படி இயங்குவதைக் குறிப்பிடும். *ஓடு* என்பதன் ஒரு எடுத்துக்காட்டான அர்த்தத்தை எடுத்துக்கொண்டால் மனிதர்கள் கால்களைப் பயன்படுத்தி இச்சலனித்தின் போது ஒரு நிலையில் இரு கால்களும் நிலத்தில் பதியாமல்

இருப்பதைக் குறிப்பிடும். இவ்வாறு எடுத்துக்காட்டான *நட* எடுத்துக்காட்டான *ஓடு* என்பதில் இருந்து வேறுபடும். மனிதரல்லாத நான்குகால் விலங்குகளுக்கு இவ்விளக்கம் வேறுபடும். முன்னர் கூறியது போன்று கால்களின் இரு வகையிலான அல்லது இரு முறையான இயக்கங்கள் *நட* என்பதையும் *ஓடு* என்ற வினைகளையும் வேறுபடுத்துகின்றன.

(29) அவன் பள்ளிக்கு நடந்து சென்றான்.

(30) அவன் ஓடிச் சென்று பஸ்சைப் பிடித்தான்.

(32) குதிரை மெதுவாக நடக்கிறது

(32) குதிரை விரைவாக ஓடுகிறது

'விரைவு' என்ற பொருண்மைப் பண்புக்கூறு *நட* என்பதையும் *ஓடு* என்பதையும் வேறுபடுத்தும் என்றாலும் முன்னர் கூறிய கால்களின் செயல்பாட்டு வேற்றுமை இரண்டையும் வேறுபடுத்தும் என்றும் கூறவியலும். சில வேளைகளில் 'வேகமாக நடப்பது' என்பதை ஓடுவதாகவும் 'மெதுவாக ஓடுவது' என்பதை நடப்பதாகவும் எடுத்துக் கொள்ளவியலும்.

வலுவான கால்கள் இல்லாத உயிர்கள் நடப்பதில்லை; அவற்றின் சலனம் *ஊர்* என்ற வினையால் குறிப்பிடப்படும். அவைகள் விரைவாக ஊர்ந்தால் அது *ஓடு* என்று குறிப்பிடப்படும். கால்கள் இல்லாத உடலால் நகர்ந்து செல்லும் பாம்பு போன்ற உயிர்களின் சலனமு *ஊர்* என்ற வினையால் தான் குறிப்பிடப்படும்.

(33) எறுப்பு வரிசையாக ஊர்ந்து செல்கின்றன.

(34) பாம்பு ஊர்ந்து செல்கின்றது.

வலுவான (எலும்புகளால் ஆன) கால்கள் உள்ள சில விலங்குகளின் சலனமும் *ஊர்* என்ற வினையால் தான் குறிப்பிடப்படும். பல்லி, முதலை என்பனவறின் சலனம் *நட* என்பதால் குறிப்பிடுவதில்லை. அவைகள் தமது உடலின் முன்பகுதி நிலத்தில் பட நகர்வதால் (?நடப்பதால்) அவற்றின் சலனம் *ஊர்* என்ற வினையால் குறிப்பிடப்படுகின்றது எனலாம்.

(33) பல்லி சுவரில் ஊர்ந்து செல்கின்றது.

(34) முதலை ஊர்ந்து கரைக்கு வந்தது.

மூலமுன்வகைக் கோட்பாடு அடிப்படையில் பெரும்பாலான இயக்க வினைகளின் செயலியாக (எழுவாயாக) மனிதனைக் கூறலாம். விலங்குகளின் இயக்கங்களை இம்மூலமுன்வகைப் பொருண்மையின் நீட்சியாகக் கருதலாம். எடுத்துக்காட்டாக விலங்குகள் கால்களால் நடப்பதையும் ஓடுவதையும் மனித இயக்கத்தின் நீட்சியாகக் கருதவியலும். மனிதனையும் விலங்குகளையும் சமமாகக் கருதினால் ஒன்றின் நீட்சியாக மற்றதைக் கருத இயலாது.

எல்லாச் சலன வினைகளும் எல்லா உயிரற்றப் பொருட்களின் சலனத்தை நீட்சி செய்வதில்லை. *நட* கால்லகளால் நடப்பதை மட்டும் குறிப்பிடுவதால் கால்களற்ற உயிரற்றப் பொருட்களின் சலனத்திற்கு அது பொருண்மை நீட்சி செய்வதில்லை. *ஊர்* மெதுவாக நகர்வதைக் குறிப்பிடவும் *நகர்* பொதுவாக இயங்குவதைக் குறிப்பிடவும் நீட்சியடையும்.

(35) *பஸ் ரோட்டில் மெதுவாக நடக்கின்றது.

(36) பஸ் ரோட்டில் மெதுவாக ஊர்கின்றது.

(37) பஸ் ரோட்டில் மெதுவாக நகர்கின்றது.

சில சலன வினைகள் உருவ நீட்சி செய்து உயிரற்ற பொருட்களின் சலனத்தைக் குறிப்பிடும். எடுத்துக்காட்டாக, *தவழ்* என்பது குழந்தைகள் கைகளையும் கால்களையும் வயிற்றுபகுதியையும் பயன்படுத்தி நகர்வதைக் குறிப்பிடும். இவ்வினையானது உருவக நீட்சி செய்து மேகங்கள் வானத்தில் காற்றால் உந்தப்பட்டு நகர்வதைக் குறிப்பிடும்.

(38) வானத்தில் மேகங்கள் தவழ்கின்றன.

5.3.2.2.1 *நட* என்ற வினையின் பொருண்மை நீட்சி

க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி (சுருக்கமாகக் கிரியா) *நட* என்பதன் பொருண்மையை 9 அர்த்தங்களாகப் பகுத்துத் தந்துள்ளது.

- இயல்பான வேகத்தில் கால்களை மாற்றி மாற்றி முன்வைத்து இடம்பெயர்தல்.
- (விண்வெளி வீரர் விண்கலத்திற்கு வெளியில் வந்து) மிதந்தபடி நடத்தல்.
- (ஒரு சம்பவம் அல்லது நன்மை, தீமை போன்றவை) நிகழ்தல்; ஏற்படுதல்
- (ஒன்றுக்கு அல்லது ஒருவருக்கு ஒன்று) நேர்தல்
- (குடும்பம், ஆட்சி, அலுவலகம் முதலின) இயங்குதல், செயல்படுதல்
- (நாடகம் முதலியனவை) நிகழ்த்தப்படுதல்/(திரைப்படம்) காட்டப்படுதல்
- (ஒரு நிகழ்ச்சி அல்லது வழக்கு, ஆராய்ச்சி, பேச்சுவார்த்தை முதலியவை) நடத்தப்படுதல்; நடைபெறுதல்
- (குறிப்பிட்ட பண்பு, தன்மை போன்றவை வெளிப்படும் முறையில் அல்லது பண்பு, தன்மை, போன்றவை வெளிப்படுத்தும் முறையில்) ஒருவர் செயல்படுதல்.
- (குறிப்பிட்ட வயது) உடையதாக இருத்தல்.

இந்த 9 அர்தங்களில் முதல் இரண்டு அர்தங்கள் தான் கால்களால் சலனிப்பதை குறிப்பிடும். இரண்டாவது அர்த்தம் *நட* எதிர்பார்க்கும் 'நிலத்தில் நிகழ்தல்' என்ற பொருண்மைப் பண்புக்கூறை இழந்து 'கால்களைப் பயன்படுத்துவது' என்ற பொருண்மைப் பண்புக்கூறுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு இயங்குவதைக் குறிப்பிடுகின்றது. பிற அர்த்தங்கள் உண்மையான சலனத்தைக் குறிப்பிடாமல் அருவத்தன்மையான சலனத்தை அல்லது இயக்கத்தை குறித்து இருக்கின்றன. இங்கு எடுத்துக்காட்டுப் பொருண்மைப் பண்புக்கூறுகளான 'நிலத்தில் நிகழ்தல்' மற்றும் 'கால்களைப் பயன்படுத்துதல்' என்பன முக்கியத்துவம் இழக்கின்றன. காலால் நடத்தலாகிய ஒரு குறிப்பிட்ட சலனத்தை/இயக்கத்தைக் குறிப்பிட்ட இவ்வினை அதன் சிறப்பான பொருண்மை கூறுகளை இழந்து அதனுடன் உள்ளடக்குப் பொருண்மை உறவுகொள்ளும் நிகழ்தல், நடத்தல், ஏற்படுதல், இயங்குதல், செயல்படுதல், நடைபெறுதல் என்ற அர்த்தங்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். இச்சாத்தியங்களைப் பொதவாகப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. உண்மை இயக்கம் > அருவ இயக்கம்
2. உள்ளடங்கு பொருண்மை > உள்ளடக்குப் பொருண்மை
3. சிறப்புப் பொருண்மை கூறுகள் > சிறப்புப் பொருண்மை கூறுகளின் இழப்பு

1. நிகழ்தல், ஏற்படுதல்

ஒரு சம்பவம் அல்லது நன்மை, தீமை போன்றவை நிகழ்வதையும் ஏற்படுவதையும் குறிப்பிடும்படி நட பொருண்மை நீட்சி செய்யும்.

38. இன்று வரும் வழியில் சாலையில் ஒரு கோரமான விபத்து நடந்தது.

2. நேர்தல்

ஒன்றுக்கு அல்லது ஒருவருக்கு ஒன்று நேர்தல் என *நட* பொருண்மை நீட்சி செய்யும்.

39. அவளுக்குத் துன்பமாகவே நடந்துகொண்டிருக்கின்றது.

3. இயங்குதல், செயல்படுதல்

குடும்பம், ஆட்சி, அலுவலகம் முதலின இயங்குவதையும் செயல்படுவதையும் குறிப்பிடும்படி நட பொருண்மை நீட்சி செய்யும்.

40அ. அவருடைய சொற்ப வருமானத்தில் தான் குடும்பம் நடக்கின்றது.

40ஆ. அங்கு இராணுவ ஆட்சிதான் நடக்கின்றது.

40இ. அலுவலகம் நன்றாக நடக்கின்றது.

4. நிகழ்த்தப்படுதல், காட்டப்படுதல்

நாடகம் முதலியனவை நிகழ்த்தப்படுவதையும் திரைப்படம் காட்டப்படுவதையும் குறிப்பிட்டு *நட* பொருண்மை நீட்சி செய்யும்.

41அ. அந்த சபாவில் ஒரு நல்ல நாடகம் நடக்கின்றது.

41ஆ. அந்த திரையரங்கில் விஜய் நடிக்கும் சினிமா நடக்கின்றது.

5. நடத்தப்படுதல் அல்லது நடைபெறுதல்

ஒரு நிகழ்ச்சி அல்லது வழக்கு, ஆராய்ச்சி, பேச்சுவார்த்தை முதலியவை நடத்தப்படுவதையும் நடைபெறுவதையும் குறிப்பிடும் படி பொருண்மை நீட்சி செய்யும்.

42அ. அந்த நீதிமன்றத்தில் மிக முக்கியமான வழக்கு நடக்கின்றது.

42ஆ. மைதானத்தில் கால்பந்தாட்டப் போட்டி நடக்கின்றது.

42இ. அந்த ஆய்வுக்கூடத்தில் மரபணு பற்றிய ஆராய்ச்சி நடக்கின்றது.

42ஈ. அந்த இரு நாடுகளுக்கிடையே சமாதனப் பேச்சுவார்த்தை நடக்கின்றது.

6. செயல்படுதல்

குறிப்பிட்ட பண்பு, தன்மை போன்றவை வெளிப்படும் முறையில் அல்லது பண்பு, தன்மை, போன்றவை வெளிப்படுத்தும் முறையில்) ஒருவர் செயல்படுவதைக் குறிப்பிட்டு நட பொருண்மை நீட்சி செய்யும்.

43. அவன் அவளிடம் முரட்டுத்தனமாக நடந்துகொண்டான்.

5.3.2.2.2. ஓடு என்ற வினையின் பொருண்மை நீட்சி

முன்னர் கூறியது போன்று கால்களைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இரண்டு கால்களும் மேலே இருக்கும் படி சலனிப்பதை நாம் *ஓடு* என்ற வினையின் மூலமுதன்மை வகைப் பொருண்மையாகக் கருதவியலும். *ஓடு* குறிப்பிடும் பிற சலங்களை அதன் பொருண்மை நீட்சியாகக் கருதவியலும்.

க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி (சுருக்கமாக கிரியா) *ஓடு* என்பதன் பொருண்மையை 20 அர்த்தங்களாகப் பகுத்துத் தந்துள்ளது.

1) (மனிதன், விலங்கு ஆகியவை கால்களை வேகமாக முன்னோக்கி எடுத்து வைப்பதன் மூலம்) நடப்பதைவிட விரைந்து செல்லுதல்/(மீன் போன்றவை நீரில்) வேகமாக ஊர்ந்து செல்லுதல்.
2) (இயந்திரவிசையால் இயங்கும் பேருந்து போன்ற வாகனங்கள்) ஓர் இடத்திலிருந்து மற்றோரு இடத்திற்குச் செல்லுதல்
3) (உருண்டையான பொருள்கள் வேகமாக) உருள்தல்
4) (நீர், இரத்தம் போன்ற திரவங்கள்) பாய்தல்/மின்சாரம் கம்பியில் பாய்தல்

5) (துரத்தப்படும் அல்லது பிடிபட்டிருக்கும் நிலையிலிருந்து) விரைவகத் தப்பி செல்லுதல்

6) (வீடு, நாடு முதலியவற்றிலிருந்து வெளியேறி) வேறிடம் செல்லுதல்

7) (கவர்ச்சி காரணமாகவோ தேவை அல்லது அவசரம் கருதியோ ஒருவரை) நாடிச் செல்லுதல்

8) (விளையாட்டு, பந்தயம் போன்றவற்றில் புள்ளிகள் பெறுவதற்காகவோ) (ஓட்டமாக) விரைதல்

9) (படச் சுருள் அல்லது தையல் இயந்திரம், தறி போன்றவற்றில் நூல் முதலியவை) ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குச் செல்லுதல்

10) (இயந்திரங்கள்) இயங்குதல்; செயல்படுதல்

11) (சுவாசக் காற்று) உள்ளே போய் வெளியே வருதல்

12) (இதயம்) இயங்குதல்; (நாடி) தொடர்ந்து துடிதல்

13) (கையில் ரேகை, ஒரு பரப்பில் கோடு போன்றவை) காணப்படுதல்; அமைந்திருதல்

14) (உடம்பில் நரம்பு, நாளம் போன்றவை அல்லது மண்ணில் வேர் போன்றவை) பரவுதல்

15) (ஒரு பொருளின் மீது மேலும் கீழுமாகப் பார்வையை) செலுத்துதல்

16) (முகத்தில் புன்னகை, மனத்தில் சிந்தனை போன்றவை) தோன்றுதல்

17) (தலையில் நரை) பரவுதல்

18) (திரைப்படம், நாடகம் முதலியவை அரங்குகளில் தொடர்ச்சியாக) நடைபெறுதல்

19) (ஒரு பொருள்) விற்பனையாதல்

20) (காலம் வரைவாக) கழிதல்; கடத்தல்

21) (எதிர்மறை வடிவங்களி அல்லது எதிர்மறைச் சொற்களோடு வரும்போது) செயல்படத் தோன்றுதல்

முதல் அர்த்தம் மனிதன் காலால் ஓடுவதிலிருந்து மீன் தண்ணீரில் ஓடுவதையும் சேத்துக் குறிப்பிடுகின்றது. மனிதனின் ஓட்டத்தை எடுத்துக்காட்டான ஓடும் சலனமாகக் கொண்டால் *ஓடு* என்பது *நட* என்பதிலிருந்து வேறுபடுவதைப் பின்வருமாறு குறிப்பிடலாம்: ஓடும் போது ஒரு கணத்தில் கால்கள் இரண்டும் தரையிலிருந்து மேலே இருக்கும் ஆனால் நடக்கும் போது எப்போதும் ஒரு கால் தரையில் ஊன்றியே இருக்கும். விலங்குகளின் எடுத்துக்கட்டான ஓடுதல் அவை வேகமாகக் கால்களைப் பயன்படுத்திச் சலனிப்பதைக் குறிப்பிடும். முதல் பன்னிரண்டு அத்தங்கள் உண்மையான சலனத்தைக் குறிப்பிடும். 13-இலிருந்து 21-வரை உள்ள அத்தங்கள் அருவத்தன்மையான சலனத்தைக் குறிப்பிடும்.

2-முதல் 12-வரையிலான ஓட்ட சலனங்களை அர்த்தம் ஒன்றின் நீட்சியாகக் கொள்ள இயலும். 13-இலிருந்து 21-வரையிலான அர்தங்களை உருவகப் பொருண்மை மாற்றங்களாகக் கொள்ள இயலும். அடிப்படையில் *ஓடு* ஒரு விலங்கின் அல்லது நகரும் பொருளின் இடமாற்றத்தைக் குறிப்பிடுவதாய் அமையும் இடமாற்ற சலன வினையாகும். இதன் அடுத்த நீட்சியாக இயங்கும் இயந்திரங்களின் சலனத்தைக் குறிப்பிட ஓடு பயன்படுத்தப்படுகின்றது. திரவங்களும் சலனிப்பதால் அவற்றின் சலனத்தைக் குறிப்பிடவும் ஓடு பயன்படுத்தப்படுகின்றது.

1. கால்களிலான மனித சலனம்
2. கால்களிலான விலங்குகளின் சலனம்
3. கால்களிலில்லாத விலங்குகளின் சலனம்
4. கால்களில்லாத நகரும் பொருள்களின் சலனம்

5. கால்களிலில்லாத இயந்திரங்களின் சலனம்

6. கால்களில்லாத திரவங்களின் சலனம்

7. இடம்பெயரா அருவப் பொருள்களின் சலனம்

ஓடும் ஒரு குறிப்பிட்ட சலனத்தைக் குறிப்பிட பயன்பட்ட *ஓடு* அதன் உள்ளடக்கு மொழிகளான 'நடைபெறுதல்', 'இயங்குதல்', 'கழிதல்' என்பனவற்றையும் குறிப்பிட பயன்படுத்தப்படுகின்றது. இது சிறப்புப் பொருண்மையிலிருந்து பொதுப்பொருண்மைக்கு அர்த்தங்கள் மாறுவதைச் சுட்டிக்காட்டும். பொருண்மைப் படிநிலை அமைப்பில் இப்பொருண்மை மாற்றம் மேல்நோக்கிப் பொருண்மை நீட்சி அல்லது மாற்றம் அடைவதைக் காட்டும்.

1. தப்பிச்செல்லுதல்

மனிதவினமும் துரத்தப்படும் அல்லது பிடிபடும் நிலையிலிருந்து விரைவாகத் தப்பிச் செல்லுதலைக் குறிப்பிட *ஓடு* என்ற வினை பொருண்மை நீட்சியடையும்.

44அ. அவர்கள் எதிரிகளிடமிருந்து தப்பி ஓடிவிட்டார்கள்

44ஆ. வண்ணத்திப் பூச்சியைப் பிடிக்கப் போனேன். அது பறந்து ஓடிவிட்டது.

2.உடன்போதல்

திருட்டுத்தனமாய்ப் போவதை அல்லது உடன்போவதைக் குறிப்பிட *ஓடு* என்பது பொருண்மை நீட்சி அடையும்.

45. சுமதி ராஜனுடன் ஓடிவிட்டாள்.

3.அவசரம் காரணமாய் ஒருவரை அணுகுதல்

கவர்ச்சி அல்லது தேவை காரணமாக ஒருவரை நடிச் செல்வதைக் குறிபிடவும் ஓடு பயன்படுத்தப்படுகின்றது.

46. அவள் குழந்தைக்குக் காய்ச்சல் வந்தால் மருத்துவரிடம் ஓடினாள்.

மனிதன் செய்யும் எல்லா சலனங்களையும் பெரும்பாலும் எல்லா விலக்கினங்களும் (உயிரினங்களும்) செய்ய இயலும் ஆகையால் மனிதவியக்க-விலங்கினவியக்கப் பொருண்மை நீட்சி தமிழைப் பொறுத்தவரையில் பொதுவானதாகும்.

4.வாகனங்கள் சலனித்தல்

உயிரற்ற பொருட்கள் இயந்திர சக்தியாலோ அல்லது பிற உந்து சக்தியாலோ ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சலனிக்கும். இத்தகைய சலங்களைக் குறிப்பிட சலன வினைகள் பொருண்மை நீட்சி செய்யும். இத்தகைய பொருண்மை நீட்சி தரையில் மட்டுமன்றி நீரில் மிதந்து சலனிக்கும் வாகனங்களுக்கும் பொருந்தும்

47அ. பஸ் ரோட்டில் ஓடிக்கொண்டிகுக்கின்றது.

47ஆ. ஆற்றில் படகு ஓடுகின்றது

5. பாய்தல்

ஓடு என்ற வினை நீர், இரத்தம் போன்ற திரவங்கள் பாய்தலையும் மின்சாரம் கம்பியில் பாய்தலையும் குறிப்பிடும் படி நீட்சியடையும்.

48அ. ஆற்றில் தண்ணீர் ஓடுகின்றது

48ஆ. உடம்பில் இரத்தம் ஓடுகின்றது

48இ. மின்சாரம் கம்பியில் ஓடுகின்றது.

6. இயந்திரம் இயங்குதல்

ஓடு என்ற வினை இயந்திரங்களின் இயக்கத்தைக் குறிப்பிடும் படி பொருண்மை நீட்சி அடைந்துள்ளது. எந்த ஒரு இயந்திரமும் அது ஒரு மின் விசிறியாகட்டும் அல்லது கைக்கடிகாரமாகட்டும், அவற்றின் இயக்கத்தைக் குறிப்பிட *ஓடு* பயன்படுத்தப்படலாம்.

49அ. மின்சாரம் இல்லாத்தால் மின் விசிறி ஓடவில்லை.

49ஆ. கடிகாரம் ஓடுகின்றதா நிற்கின்றதா என்று தெரியவில்லை.

இதயமும் இயந்திரமாகக் கருதப்பட்டு அதன் இயக்கமும் *ஓடு* என்பதன் பொருண்மை நீட்சியாய்க் கருதப்படும்.

49இ. அவனது இதையம் இப்போது சீராக ஓடிக்கொண்டிருக்கின்றது.

7. நிகழ்ச்சிகள், செயல்பாடுகள் என்பன நிகழ்தல், சம்பவித்தல், நிறைவேறுதல் எனப் பொதுப் பொருண்மைக் களத்திற்குப் பொருண்மை நீட்சி செய்தல்

குடுப்பம், வாழ்க்கை, ஆட்சி, அலுவலகம், நிர்வாகம் வியாபாரம் முதலியன இயங்குவதைக் குறிப்பிட *நட*, *ஓடு* என்பன பயன்படுத்தப்படுகின்றன. இப்பொருண்மை நீட்சி சிறப்புப் பொருண்மைக் கூறிலிருந்து பொதுமைப் பொருண்மை கூறுக்கு விரிவாக்கம் செய்வதாகும். பொருண்மைகூறு அடிப்படையிலான படிநிலை அமைப்பில் இது மேல் நோக்கிய பயணமாகும்.

50அ. அதிக துன்பம் இல்லாமல் அவனது வாழ்க்கை நடந்துகொண்டிருக்கின்றது/ ஓடிக்கொண்டிருக்கின்றது.

50ஆ. அந்த நிறுவனம் நன்றாக நடந்துக்கொண்டிருக்கின்றது/ ஓடிக்கொண்டிருக்கின்றது.

சினிமா நடைபெறுவதைக் குறிப்பிட *ஓடு* என்ற வினையும் பயன்படுத்தப்படுகின்றது.

50இ. அந்த திரையரங்கில் விஜய் நடிக்கும் சினிமா ஓடுகின்றது.

ஓடு என்ற வினை சினிமா, நாடகம், தொலைக்காட்சி நிகழ்ச்சி போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுவதைக் குறிப்பிட்டுக்கூற பொருண்மை நீட்சி செய்கின்றது.

50ஈ. அந்த நடிகரின் திரைப்படம் அதிகம் ஓடவில்லை.

50உ. அந்த டிவி நிகழ்ச்சி நூறுநட்களாக ஓடுகின்றது.

இங்கு *ஓடு* என்ற வினை 'விரைவாக' என்பதற்குப் பதிலாக 'தொடர்ச்சியாக' என்ற பொருண்மைகூறை நீட்சியாகப் பெறுகின்றது.

5.3.2.3 மேல்நோக்குச் சலனம்

ஏறு, எழுந்திரு, எழு, எழும்பு, உயர், கிளம்பு, பொங்கு, கொந்தளி என்பன மேல்நோக்கிய சலனத்தின் பாற்படும். மேல் நோக்கிய சலனத்தைக் கைகால்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மேல்நோக்குச் சலனம், கைகால்களைப் பயன்படுத்தா மேல்நோக்குச் சலனம் சலனம் என இருவகையாகப் பிரிக்கலாம். *ஏறு, எழுந்திரு, எழு1* என்பன முதல் வகை மேல்நோக்கு சலனத்தின் கண்படும். *உயர், எழு2, எழும்பு, கிளம்பு, பொங்கு, கொந்தளி* என்பன இரண்டாம் வகை மேல்நோக்கு சலனத்தின் கண்படும். கால்களைப் பயன்படுத்தி அல்லது கைகால்களைப் பயன்படுத்தி மேல் நோக்கி சலனிப்பது *ஏறு* என்பதால் குறிப்பிடப்படும். கிடப்பு நிலையிலிருந்து இருக்கும் நிலைக்கு வருவதையோ, இருக்கும் அல்லது முட்டுக்காலிட்ட நிலையிலிருந்து நிற்கும் நிலைக்கு வருவது *எழுந்திரு, எழு1* என்ற வினைகளால் குறிப்பிடப்படும். *உயர், எழு2, கிளம்பு* என்பது மேற்கூறிய இரண்டிலிருந்தும் வேறுபட்டு வெளியிருந்து கிடைத்த உந்தலால் மேல் நோக்கிச் செல்வதைக் குறிப்பிடும். அடிப்படையில் 'புறப்படு' எனப் பொருள்படும் கிளம்பு புகை போன்றவை மேலெழுதலைக் குறிப்பிட்டு மேல்நோக்கு சலனப் பொருண்மைகளத்திற்கு விரியும். *பொங்கு* என்பது 'சூடு படுத்துவதால், இரசாயன மாற்றத்தால் பால், நீர், மாவு முதலியன நுரைத்து மேலெழுவதைக் குறிப்பிடும்.

51. அவள் மலையில் ஏறினாள்

52. அவன் படுக்கையிலிருந்து எழுத்திருந்தான்/எழுந்தான்

53. விமானம் தரையிலிருந்து கிளம்பு மேல் நோக்கி உயரத்தொடங்கியது.

54. அடுப்பில் வைத்தப் பால் பொங்கி வழிந்தது.

55. கடல் கொந்தளித்ததால் மீனவர்கள் மீன்பிடிக்கப் போகவில்லை.

பின்வரும் அட்டவணை இவ்வினைகளுக்கு இடையிலுள்ள பொருண்மை வேறுபாட்டை வெளிப்படுத்தும்.

	ஏறு	**எழுந்திரு**	**எழு1**	**எழு2**	**உயர்**
தன்முனைப்பு	+	+	+	+	-
கால்கள், கைகால்கள் கருவியாகப் பயன்படல்	+	0			
படுக்கை நிலையிலிருந்து இருப்பு நிலக்கு அல்லது இருப்பு நிலையிலிருந்து நிற்பு நிலைக்கு மாறுதல்	-	+	+	-	-

5.3.2.3.1 *ஏறு* என்பதன் பொருண்மை நீட்சி

ஏறு என்பதற்கு கிரியா 16 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது. இதனது முதன்மையான அல்லது மூலத்தன்மையான பொருள் 'கால்களைப் பயன்படுத்தி உயரத்திலுள்ள இடத்திற்குச் சலனித்தல்' என்பதாகும்.

56அ. அவன் மலையில் ஏறிக்கொண்டிருக்கின்றான்.

சில நேரங்களில் உயரே சலனிப்பதற்கு (அதாவது ஏறுவதற்கு) கைகளும் கால்களும் தேவைப்படலாம்.

56ஆ. அவன் மரத்தில் மேல் ஏறினான்.

56இ. அவர் மதில் மேல் ஏறினான்.

சில நேரங்களில் உயரே சலனிப்பதற்குப் படிக்கட்டுகள் தேவைப்படலாம்.

56ஈ. அவர் மாடிப்படிகளில் ஏறி மேலே சென்றார்.

ஏறு என்ற வினையின் பொருள் பயணம் செய்வதற்காக குதிரையின் மேலிருக்குமாறு சலனிப்பதையும் வண்டி, கார், பஸ், இரயில், விமானம் போன்ற ஊர்திகளில் நுழையுமாறு சலனிப்பதையும் குறிப்பிடப்படும் படி நீட்சியுறும்.

57அ. அவன் குதிரையின் மேல் ஏறினான்.

57ஆ. அவன் ஆறுமணிக்கு விமானம் ஏறினான்.

57இ. அவன் இதுவரை இரயிலில் ஏறவில்லை.

57ஈ. அவள் ஓடிச் சென்று பஸ்சில் ஏறினாள்.

நீர்நிலைகளிருந்து கரைக்குச் செல்வதைக் குறிப்பிடுமாறு ஏறு நீட்சியுறும்.

58. அவள் ஆற்றில் முங்கி குளித்துவிட்டு கரையில் ஏறினாள்.

1. ஊர்திகள் மேல் நோக்கிச் சலனத்தல்

ஊர்திகள் உந்து சக்தியால் மேல் நோக்கிச் செல்வதைக் குறிப்பிடவும் *ஏறு* என்பதன் பொருள் விரிவடையும்.

59. பஸ் மிகச் சிரமத்துடன் மலையில் ஏறிக்கொண்டிருக்கின்றது.

2. மேல்நோக்கி உயர்தல்

'மேல்நோக்கி உயர்' என்ற பொருளில் விமானம், பட்டம், கொடி என்பனவற்றைக் குறிப்பிடும் படியும் *ஏறு* என்பதன் பொருள் நீட்சியுரும்.

60அ. பள்ளியில் உள்ள கம்பத்தில் கொடி ஏறிவிட்டது.

60ஆ. பட்டம் மேலே ஏறிவிட்டது.

60இ. விமானம் தளத்தில் ஓடி மேலே ஏறிவிட்டது.

3. கீழே கிடக்கும் பொருளின் மேல் சலனி

'கீழே கிடக்கும் பொருளின் மேல் சலனி' என்ற பொருளில் *ஏறு* என்ற வினையின் பொருண்மை நீட்சியடையும்.

61. பஸ் அவள் மேல் ஏறி அவள் மரணம் அடைந்தாள்.

4. பொருட்கள் வாகனங்களில் கொண்டு வைக்கப்படுதல்

பொருட்கள் வாகனங்களில் கொண்டு வைக்கப்படுதலைக் குறிப்பிடவும் *ஏறு* பயன்படுத்தப்படும்.

62. மூட்டைகள் கப்பல் ஏறின.

5. அரியணையணையில் அமர்தல்

அரியணை மேல் அமர்வதையும் அத்தகைய நிலையை அடைவதையும் குறிப்பிடும்படி ஏறு என்பதன் பொருண்மை நீட்சி அடையும்.

63. அவன் அரியணை ஏறினான்.

6. நுழைதல்

‘உள்ளே நுழை’ என்ற பொருளில் ஆணி, குச்சி, முள் போன்றவை உடலிலோ வேறு பொருளிலோ உள்ளே செல்வதையும், படகு போன்றவற்றில் வெடிப்பு வழியாக நீர் புகுவதையும், பிளவுகளிலோ இடைவெளிகளிலோ இடுக்கிலோ துளைகளிலோ துவாரங்களிலோ எதாவது புகுந்துவிடுவதையோ, காற்று டயர் போன்றவற்றின் உட்செல்வதையோ, விஷம் போன்றன உடலுக்குள் புகுவதையோ குறிப்பிடும் படி ஏறு என்பதன் பொருண்மை நீட்சி அடையும்.

64அ.காலில் முள் ஏறி அவள் வலியால் துடிக்கின்றாள்.

64ஆ.படகில் நீர் ஏறி படகு முழ்கத் தொடங்கியது.

64இ. பல்லின் இடுக்கில் உணவுத் துகள் ஏறி உறுத்துகின்றது.

64ஈ. டயரில் காற்று மெதுவாகத்தான் ஏறுகின்றது.

64உ. பாம்பு கடித்து விஷம் உடலில் ஏறத்தொடங்கியது.

ஏறு ‘நுழை’ என பொருண்மை நீட்சியடைந்து வேலையில் நுழைவதையும் குறிப்பிடும்.

65. அவன் படித்து முடித்ததும் நல்ல ஒரு வேலையில் ஏறினான்.

7. அதிகரித்தல்

‘அதிகரி’ என்ற பொருளில் *ஏறு* என்பது நீர்மட்டம் உயர்வதைக் குறிப்பிடும்படி பொருண்மை நீட்சியுறும். உயர் என்பதும் இவ்வாறு பொருண்மை நீட்சி அடையும்.

66. மழை நீரால் அணையில் நீர்மட்டம் ஏறத்/உயரத் தொடங்கியது.

மேலும் ‘அதிகரி’ என்ற பொருளில் *ஏறு* என்பது விலை, சூடு, வயது போன்ற அருவப் பண்புகளும்/பொருட்களும் கோபம், கர்வம், அகங்காரம் போன்ற உணர்ச்சிகள்

அதிகரிப்பதையும் குறிப்பிடப் பொருண்மை நீட்சி அடையும். உயர் என்பது விலை உயர்வைக் குறிப்பிட மட்டும் பொருண்மை நீட்சி அடையும்.

67அ. தங்கத்தின் விலை சிலகாலமாக ஏறிக்கொண்டே/உயர்ந்துகொண்டே போகின்றது.

67ஆ. தோசைக்கல்லை இப்போதுதான் அடுப்பில் போட்டேன். சூடு ஏற சிறிது நேரம் ஆகும்.

67இ. அவளுக்கு வயது ஏறிக்கொண்டே போகிறது. விரைவில் திருமணம் செய்யவேண்டும்.

67ஈ. அவள் பேசப் பேச அவனுக்குக் கோபம் ஏறிக்கொண்டே போகின்றது.

67உ. அவளுக்குக் கர்வம் ஏறிக்கொண்டு போவதால், இவ்வறு நடக்கின்றாள்.

8. படிதல்

'துரு, அழுக்கு, கறை, பழுப்பு என்பன தொடர்புள்ள பொருட்களில் படிதல்' என்ற பொருண்மை நீட்சிஅடைகின்றது.

68அ. கத்தியில் துரும்பு ஏறி வெட்ட இயலவில்லை.

68ஆ. துணியில் மஞ்சள் கறை ஏறிவிட்டது.

68இ.துணியில் அழுக்கேறி அசிங்கமாய்த் தெரிகின்றது.

68ஈ. மோதிரத்தில் பழுபேறி புதுமை கெட்டுவிட்டது.

9. 'புரிதல்' எனப் பொருண்மை நீட்சி அடைதல்

நுழை என்ற வினை 'புரி' என்ற பொருண்மை நீட்சி அடைவது எதிர்ப்பாக்கவியலும் பொருண்மை விரிவாகும். *ஏறு* என்பது 'நுழை' எனப் பொருண்மை நீட்சி அடைவதால் அது மேலும் 'புரிதல்' எனப் பொருண்மை நீட்சி அடைகின்றது.

69அ. அவனுக்கு எவ்வனுக்கு எவ்வளவு படித்தாலும் ஒன்றும் ஏறவில்லை.

69ஆ. ஆழ்ந்து படித்தால் எல்லாம் தலையில் ஏறும்.

69இ. எவ்வளவு உரக்கச் சொன்னாலும் அவனுக்குக் காதில் ஏறாது.

தலையில் ஏறு, காதில் ஏறு என்ற தொடர்களிலும் *ஏறு* என்பது 'புரிதல்' என உருவக நீட்சி அடைகின்றது

10. இலக்கணம் சார் பொருண்மை நீட்சி

ஏறு வினையாக்கியாக சில பெயர்ச்சொற்களுடன் சேர்து புதியவினைகளை ஆக்கும். இதை இலக்கணவகைப் பொருண்மை நீட்சி எனலாம். பின்வருவன சில எடுத்துக்காட்டுகளாகும்.

1. முறுக்கு+ ஏறு > முறுக்கேறு 'நூல் முதலியன முறுக்கப்படுவதால் கெட்டியாதல்'

   நூல் நன்றாக முறுக்கேறிவிட்டது.

2. அரங்கு + ஏறு> அரங்கேறு 'அரங்கில் நிகழ்த்தப்படுதல்'

   அந்த நாடகம் திருவள்ளுவர் தியேட்டரில் அரங்கேறியது.

3. வெளி+ஏறு>வெளியேறு 'வெளியே போ'

   அவள் வீட்டைவிட்டு வெளியேறினாள்.

4. முன்+ஏறு>முன்னேறு 'நிலையில் உயர்தல்'

   அவர் வாழ்க்கையில் கஷ்டப்பட்டு முன்னேறினார்.

5. குடி+ஏறு>குடியேறு 'குடிபுகுதல்'

   அவர்கள் அமேரிக்காவில் குடியேறினார்கள்.

6. அச்சு+ஏறு>அச்சேறு 'அச்சடிக்கப்படுதல்'

   அந்த புத்தகம் இறுதியில் அச்சேறியது.

7. தாலி+ஏறு>தாலியேறு 'திருமணம் நிகழ்தல்'

   அவள் கழுத்தில் தாலியேறியதும், அவளது தந்தை ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

8. பழுப்பு+ஏறு>பழுப்பேறு 'பழுப்பு உண்டாதல்'

   காயம் பட்ட இடத்தில் பழுப்பேறி விட்டது.

5.3.2.3.2 *எழு* என்பதன் பொருண்மை நீட்சி

கிடப்பு நிலையிலிருந்து இருக்கும் நிலைக்கு வருவதையோ, இருக்கும் அல்லது முட்டுக்காலிட்ட நிலையிலிருந்து நிற்கும் நிலைக்கு வருவதைக் குறிப்பிடுவது *எழு* என்பதன் மூலமுதன்மைவகைப் பொருண்மையாகும்.

61அ. அவன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான்.

61ஆ. அவன் இருக்கையிலிருந்து எழுந்து நின்றான்.

1. காற்றில் மேல்நோக்கிச் சலனித்தல்

எழு என்பது எடைகுறைந்த பொருட்கள் காற்றால் மேல்நோக்கி எடுத்து செல்லப்படுவதைக் குறிக்கும் படி பொருண்மை நீட்சிசெய்யும். *எழும்பு, கிளம்பு* என்ற வினையும் இப்பொருளில் பயன்படுத்தப்படுகின்றன.

62அ. நெருப்பிலிருந்து புகை எழுகின்றது/எழும்புகின்றது'கிளம்புகின்றது.

62ஆ. பலூன் மேலே எழுந்து/எழும்பி/கிளம்பி வானத்தை நோக்கிப் பறந்தது.

2. துள்ளி மேல்நோக்கிச் சலனித்தல்

எழு என்பது தரையில் விழுந்து துள்ளி மேலே வருவதையும் குறிப்பிடும்படி பொருண்மை நீட்சி செய்யும். *எழும்பு* என்னும் வினையும் இவ்வியக்கத்தைக் குறிப்பிடும்.

63. பந்து தரையில் பட்டு எழுந்தது/எழும்பியது

3. கடலில் அலைகள் உயர்தல்

கடலில் அலைகள் உயர்வதைக் குறிப்பிடவும் *எழு, எழும்பு* என்ற வினைகள் பொருண்மை நீட்சியடையும்.

கட்டிங்கள் உயர்வதை அதாவது கட்டப்படுவதைக் குறிப்பிட *எழு, எழும்பு* என்ற வினைகள் பொருண்மை நீட்சி அடையும்.

64. அங்கே ஒரு அடுக்கு மாடிக் கட்டிடம் எழுகின்றது/எழும்புகின்றது.

4. ஒலி போன்றன உருவாதல்

ஒலி, ஓசை, நாதம், கோஷம், கரகோஷம் என்பன உருவாகுவதைக் குறிப்பிட *எழு, எழும்பு* என்ற வினைகள் பொருண்மை நீட்சி செய்யும்.

65அ. அவர் பேசி முடித்ததும் கரகோஷம் எழுந்தது/எழும்பியது.

65ஆ. அவள் பேச முயன்றால் ஆனால் ஒலி எழவில்லை/எழும்பவில்லை.

65இ. *எழு* என்பது தோன்றுதல், உருவாதல் என பொருண்மை நீட்சி செய்யும்.

65உ. காலையில் சூரியன் கிழக்கில் எழுந்து வெளிச்சதைப் பரப்பினான்.

5. எண்ணம் கருத்து போன்றன உருவாதல்

எழு என்பது 'தோன்று' அல்லது 'உருவாகு' என்ற பொருளில் எண்ணம், கருத்து, நம்பிக்கை, கேள்வி, வெறுப்பு, பொறாமை, காமம், கோபம் என்பன மனத்தில் உருவாகுவதைக் குறிப்பிடும்படி பொருண்மை நீட்சி செய்யும்.

66அ. அவள் மனதில் ஒரு எண்ணம் எழுந்தது.

66ஆ. அவன் மனதில் காம இச்சை எழுந்தது.

5.3.2.4 கீழ்நோக்குச் சலனம்

இறங்கு, தாழ், விழு, உதிர், முங்கு, மூழ்கு, அமிழ், ஆழ், அமர், உட்கார், குனி, வடி, வழி, கொட்டு, பெய் என்பன கீழ்நோக்கிய சலனத்தைக் குறிப்பிடும் வினைகளாகும். பின்வரும் பொருண்மைப் பண்புக்கூறுகள் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்தும்.

1. +/-திரவப் பொருள் செயலியாய் வருதல்
2. நிற்கும் நிலையிலிருந்து மாறுதல்
3. காற்று, பூமி, நீர் என்பன சலன இடமாக/ஊடகமாக அமைதல்
4. ஒத்தறி சலனம் அல்லது சார்பற்ற சலனம்
5. தன்னிச்சையான சலனம் அல்லது தன்னிச்சையற்ற சலனம்
6. கைகால்களைப் பயன்படுத்துதல்

வடி, வழி, கொட்டு, பெய் என்பன நீர்மப் பொருள்களின் கீழ்நோக்கியச் சலனத்தைக் குறிப்பிடும். *இரு, அமர், உட்கார், குனி* என்பன நிற்கும் நிலையிலிருந்து கீழ்நோக்கிய சலனத்தைக் குறிப்பிடும். *இறங்கு, தாழ், விழு, உதிர்* என்ற வினைகள் காற்றிலோ, நிலத்திலோ கீழ்நோக்கிய சலனத்தைக் குறிப்பிடும். *இறங்கு, தாழ்* என்பன சலனிக்கும் பொருள் ஒரு கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு கீழ்நோக்கிச் சலனிப்பதைக் குறிப்பிடும். மாறாக *விழு, உதிர்* என்பன சலனிக்கும் பொருள் கட்டுப்பாடின்றி புவியீர்ப்பு விசையால்

கீழ்நோக்கிச் சலனிப்பதைக் குறிப்பிடும். *இறங்கு* என்பதன் மூலவகைப் பொருண்மையாக மனிதர் கால்களைப் பயன்படுத்தி கிழ்நோக்கிச் சலனிப்பதைக் குறிப்பிடலாம்; சில சூழல்களில் கையும் காலும் பயன்படுத்தப்படலாம். எடுத்துக்காட்டாக மரத்திலிருந்து இறங்குகையில் கால்களும் கைகளும் பயன்படுத்தப்படலாம். வாகனங்கள் அல்லது ஊர்திகள் கீழ்நோக்கிப் பயணிப்பதும் (சலனிப்பதும்) இறங்கு என்றே குறிப்பிடப்படும். *இறங்கு* சில சூழல்களில் சார்பற்றதாகும்; *தாழ்* சார்புடையதாகும் (ஒத்தறித் தன்மையுடையதாகும்). எடுத்துக்காட்டாக *அவன் குதிரையிலிருந்து இறங்கினான்* என்பது சார்பற்ற முழு விளைவு நோக்கிய சலனமாகும்; ஆனால் *அது கீழ்நோக்கித் தாழ்ந்தது* என்பது சார்புடையதாகும்; அதாவது ஒத்தறி அடிப்படையில் கீழ்நோக்கிச் சலனம் முழுமை பெறவில்லை. சில சூழல்களில் *இறங்கு* என்பதும் *தாழ்* என்பது போன்று சார்புடையதாய் இருக்கும் அதாவது ஒத்தறி அடிப்படையிலானதாய் இருக்கும். எனவே *இறங்கு* என்பதும் *தாழ்* என்பதும் சில சூழல்களில் ஒன்றையொன்று மேலுறல் செய்யும். *உதிர்* என்பது கீழ்நோக்கிச் சலனிக்கும் பொருள் ஒன்றுடன் ஒட்டியோ சேர்ந்து இருந்ததையோ முன்னூகம் செய்யும். எடுத்துக்காட்டாக *பூக்கள் உதிர்கின்றன* எனும் போது *உதிர்* பூக்கள் மரத்தில் ஒட்டியிருந்ததை முன்னூகம் செய்யும்; *விண்கற்கள் வானத்திலிருந்து விழுகின்றன* என்னும் போது *விழு* விண்கற்கள் வானத்தில் ஒட்டியிருந்ததை முன்னூகம் செய்யாது. *முங்கு, மூழ்கு, அமிழ், ஆழ்* என்பன நீர்ம ஊடகத்தில் கீழ்நோக்கிச் சலனிப்பதை உருப்படுத்தம் செய்யும். சில சூழல்களில் *தாழ் (தாழ்2)* என்பதும் நீர்ம ஊடகத்தில் கீழ்நோக்கிச் சலனிப்பதை உருப்படுத்தம் செய்யும். *முங்கு, மூழ்கு, தாழ்2, அமிழ், ஆழ்* என்பன சலனிக்கும் பொருள் நீருக்குள் போவதைக் குறிப்பிடும்.

5.3.2.4.1 *இறங்கு* என்பதன் பொருண்மை நீட்சி

முன்னர் கூறியது போல் கால்களைப் பயன்படுத்தி அல்லது கைகால்களைப் பயன்படுத்தி உயர்ந்த இடத்திலிருந்து தாழ்ந்த இடத்திற்குச் சலனிப்பதைக் குறிப்பிடுவது தான் *இறங்கு* என்பதன் மூலமுதன்மைவகைப் பொருண்மை ஆகும்.

67அ. அவள் மலையிலிருந்து மெதுவாகக் கீழே இறங்கினாள்.

67ஆ. அவன் மரத்திலிருந்து இறங்கினான்.

இறங்கு என்பதற்கு கிரியா 16 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது. இதனது முதன்மையான அல்லது மூலத்தன்மையான பொருள் 'கால்களைப் பயன்படுத்தி உயரத்திலுள்ள இடத்திலிருந்து கீழ்நோக்கிச் சலனித்தல்' என்பதாகும். பிற பொருண்மைகளை *இறங்கு* என்பதன் பொருண்மை நீட்சியாகக் கருத இயலும்.

67இ. அவன் மலையிலிருந்து கீழே இறங்கிக்கொண்டிருக்கின்றான்.

சில நேரங்களில் கீழ்நோக்கிச் சலனிப்பதற்கு (அதாவது இறங்குவதற்கு) கைகளும் கால்களும் தேவைப்படலாம்.

67ஈ. அவன் மரத்திலிருந்து கீழே இறங்கினான்.

67உ. அவர் மதில் மேலிருந்து கீழே இறங்கினான்.

சில நேரங்களில் கீழ்நோக்கிச் சலனிப்பதற்குப் படிக்கட்டுகள் தேவைப்படலாம்.

67ஊ. அவர் மாடிப்படிகள் வழியாக கீழே இறங்கினார்.

இறங்கு என்ற வினையின் பொருள் குதிரையின் மேலிருந்து கீழேவருமாறு சலனிப்பதையும் வண்டி, கார், பஸ், இரயில், விமானம் போன்ற ஊர்திகளிலிருந்து கீழே வருமாறு சலனிப்பதையும் குறிப்பிடும் படி நீட்சியுறும்.

68அ. அவன் குதிரையிலிருந்து கீழே இறங்கினான்.

68ஆ. அவன் இரயிலிலிருந்து இறங்கியதும், அவனுக்கு மாலை அணவித்தனர்.

68இ. அவள் ஓடுகின்ற பஸ்சிலிருந்து இறங்கினாள்.

கரையிலிருந்து நீர்நிலைக்குச் செல்லுமாறு சலனிப்பதைக் குறிப்பிடுமாறு *இறங்கு* பொருண்மை நீட்சியுறும்.

68உ. அவள் முங்கிக் குளிப்பதற்காக்க ஆற்றில் இறங்கினாள்.

1. நீரோட்டங்கள், அருவி போன்றன கீழ்நோக்கி சலனித்தல்

இறங்கு என்பது நீரோடங்கள், அருவி போன்றன கீழ்நோக்கிச் சலனிப்பதைக் குறிப்பிடும்படி பொருண்மை நீட்சி செய்யும்.

69. மலையிலிருந்து அருவி இறங்குகின்றது.

2. விமானம், பறவை, பட்டம், கொடி போன்றன தரையை அடைதல்

70அ. ஆகாயவிமானம் தரையில் இறங்கியது.

70ஆ. பறவை தரையில் இறங்கியது.

71இ. பட்டம் காற்று இல்லாததால் தரையில் இறங்கியது.

72ஈ. கொடி இறங்கியது.

3. வந்து சேர்தல்

73அ. கலவரம் நடந்த இடத்தில் காவல்படையினர் வந்து இறங்கினர்

73ஆ. கோதுமை மூட்டைகள் கப்பலில் வந்து இறங்கின.

4. குறைதல்

இறங்கு என்பது 'குறைதல்' எனப் பொருண்மை நீட்சி அடைவது முக்கியமானதாகும். இது *இறங்கு* போன்ற வினைகளிலிருந்து எதிர்பார்க்கப்படும்

பொருண்மை நீட்சியாகும். விலை, காய்ச்சல், ஜுரம், வெயில், எடை என்பன குறைவது *இறங்கு* என்ற வினையால் குறிப்பிப்படலாம்.

74அ. காய்கறி விலை இம்மாதம் நன்றாக இறங்கிவிட்டது.

74ஆ. அவளுக்குக் காய்ச்சல் இறங்கிவிட்டது.

74இ. மாலை நாலுமணிக்கு வெயில் இறங்கிவிடும்.

5. தாழ்தல்

ஒரு நிலையிலிருந்து அல்லது மட்டத்திலிருந்து தாழ்வதைக் குறிப்பிட *இறங்கு* பொருண்மை நீட்சி செய்யும்.

75அ. அவன் தன் நிலையிலிருந்து இறங்கி வந்து அவளிடம் பேசினான்.

75ஆ. அணைக்கட்டில் நீர் மட்டம் இறங்கிவிட்டது.

6.உட்செல்லுதல்

மரம் போன்றவற்றில் ஆணி போன்றவை உட்செல்வதைக் குறிப்பிட *இறங்கு* பொருண்மை நீட்சி செய்யும்.

7.முனைப்புடன் ஈடுபடல்

இறங்கு என்பதன் பொருண்மை முனைப்புடன் ஈடுபடுத் தொடங்குதல் எனப் பொருண்மை நீட்சி செய்வது முக்கியமான பொருண்மை நீட்சியாகும்.

46அ. அவன் தீவிரமாக அந்த காரியத்தில் இறங்கினான்.

76ஆ. அவன் துணிந்து அந்த தொழிலில் இறங்கினான்.

8. நீங்குதல்

'உடலிலிருந்து விஷம் நீங்குதல்' என *இறங்கு* பின்வருமாறு பொருண்மை நீட்சி செய்யும்.

77. நாட்டு வைத்தியர் கொடுத்த பச்சிலை மருந்தால் விஷம் இறங்கி அவன் பிழைத்து விட்டான்.

8. வெளியேறுதல்

டயர், பலூன் போன்றவற்றில் அடைக்கப்பட்ட காற்று வெளியேறுவதைக் குறிப்பிட *இறங்கு* என்பது பொருண்மை நீட்சி செய்யும்.

78. டயரில் காற்று நன்றாக இறங்கிவிட்டது.

9. உட்கொள்ளுதல்

உணவுக்குழலில் உணவானது கீழ்நோக்கிச் செல்வது இயல்பு. இச்செயல்பாடு *இறங்கு* என்ற வினையால் குறிப்பிடப்படலாம். *உணவு இறங்கு* என்ற தொடர் 'உணவு உட்கொள்' அல்லது 'உண்' என உருவக அடிப்படையில் பின்வருமாறு பொருண்மை நீட்சி செய்யும்.

79அ பசி இல்லாததால் அவனுக்குச் சாப்பாடு இறங்கவில்லை.

79ஆ. தண்ணீர் உட்கொண்டு அந்த மாத்திரையை இறக்கினான்.

5.3.2.5. சலனவினைகள் உணர்ச்சி நிலைகளை உருப்படுத்தம் செய்தல்

போண்டெரோட்டோ (Ponterotto, 2014) தம்முடைய 'Happiness is moving up: Conceputalizing emotions through motion verbs' என்ற கட்டுரையில் ஆங்கிலம்-இத்தாலிய மொழிகளைத் தாண்டிய மொழியியல் பார்வை அடிப்படையில் உணர்ச்சி நிலைகளை உருப்படுத்தம் செய்வதில் சலன வினைகளின் பங்களிப்பு குறித்து ஆய்கின்றார். அவரது ஆய்வு உணர்ச்சிகளை கருத்துருவாக்கம் செய்யக் சலனக் கட்டுமானங்களின் உருவக அடிப்படையிலான நீட்சியை வெளிப்படுத்தும் அனுபவவாதம் சார் தரவுகளை முன்னிருத்த 'மகிழ்ச்சி' என்ற உணர்ச்சியைத் தேர்ந்தெடுத்துள்ளது. இது

புலனறிசார்/உளவியல்சார் உணர்ச்சியின் நிலையைக் கருத்துருவாக்கம் செய்ய இயல்பு சலனத்தின் முறையைக் குறியாக்கம் செய்ய வினையின் பயன்பாட்டைக் கணிப்பதற்கு கருத்துருசார் உருவகக் கோட்பாட்டை (Conceptual Metaphor Theory (CMT)) நிலைநிறுத்துகின்றது.

இவருடைய கருத்தின் அடிப்படையில் தமிழ் சலன வினகள் எவ்வாறு உணர்ச்சிகளை உருப்படுத்தம் செய்யப் பொருண்மை நீட்சி அடைகின்றது என நாம் பார்க்கலாம்.

வா, *போ* என்ற வினைகள் ஒருவர் சில உணர்ச்சிகள் அடைவதையோ இழப்பதையோ குறிப்பிட்டு பொருண்மை நீட்சி செய்யும்.

80. அவனுக்கு அவளிடம் கோபம் வந்து.

81. அவளைப் பார்த்ததும் அவனுக்கு கோபமெல்லாம் போய்விட்டது.

82. கோமாளியைப் பார்த்த்தும் அவனுக்குச் சிரிப்பாய் வந்தது.

ஏறு என்ற மேல்நோக்குச் சலன வினை கோபம் போன்ற உணர்ச்சி அதிகரிப்பதைக் குறிப்பிட்டு பொருண்மை நீட்சி செய்வதை முன்னர் பார்த்தோம்.

83. அவளது பழிச்சொல் கேட்டதும் அவனுக்குக் கோபம் தலைக்கு ஏறியது.

தலைக்கு ஏறு என்பது இச்சூழலில் 'கோபம் அடைதல்' என உருவக நீட்சி செய்வது இங்கு கவனத்திற்கு உரியது. மேல்நோக்கிச் சலனிப்பதை அடிப்படையாகக் குறிப்பிடும் *ஏறு* என்ற வினை கோபம், வெறி என்ற உணர்ச்சிகள் அதிகரிப்பதைக் குறிப்பிடும்படி பொருண்மை நீட்சியுறும்.

84. அவனுக்குக் கோபம்/வெறி ஏறியது.

படுக்கை நிலையிருந்து இருப்பு நிலைக்கும் இருப்பு நிலையிலிருந்து நிற்கும் நிலைக்கு வருவதைக் குறிப்பிடும் *எழு* என்ற வினை கோபம், பசி என்ற உணர்வுகள் தோன்றுவதைக் குறிப்பிடும்படி பொருண்மை நீட்சி செய்யும்.

85. அருவியில் குளித்து முடித்ததும் அவனுக்குப் பசி எழுந்தது.

86. அதைப் பார்த்ததும் அவனுக்குக் கோபம் எழுந்தது.

ஓரிடத்திலிருந்து புறப்படுவதையும் வெளிப்படுதலையும் முதன்மையாகக் குறிப்பிடும் *கிளம்பு* என்ற வினை கோபம், ஐயம், ஆசை, காம இச்சை ஆகிய உணர்ச்சிகள் வெளிப்படுவதையும் குறிப்பிடும்படி பொருண்மை நீட்சி செய்யும்.

87. அவள் அழகைப் பார்த்ததும் அவனுக்குக் காம இச்சை கிளம்பியது.

'நுரைத்து மேலெழுதல்' எனப் பொருள்படும் *பொங்கு* என்ற மேல்நோக்குச் சலன வினை 'உணர்ச்சி பொருமளவில் வெளிப்படுதல்' என பொருண்மை நீட்சி செய்யும்.

88. வெளிநாட்டிலிருந்து வந்த தன் மகளைப் பார்த்ததும் அவனுக்கு மகிழ்ச்சி பொங்கியது.

'கடல் நீர் காற்றால் அலைக்கப்பட்டு பொங்குதல் அல்லது மேல்நோக்கி வருதல்' எனப் பொருள்படும் *கொந்தளி* எனப்படும் மேநோக்குச் சலன வினை 'உணர்ச்சியால் மனக்கிளர்ச்சி அடைதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

89. அவர் நாட்டில் நடக்கும் அநியாயங்களைப் பார்த்து உணர்ச்சியால் கொந்தளித்தார்.

மேலிருந்து கீழ்நோக்கி வருவதைக் குறிப்பிடும் *விழு* என்பது 'கோபத்தை வெளிபடுத்தல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும். *எழுந்து விழு* ஒரு கூட்டாகச் செயல்படும்.

90. அவன் எப்பொழுதும் தன் மனைவிமேல் எரிந்து விழுகின்றான்.

மேலே எழும்பிக் கீழே வருதலைக் குறிப்பிடும் *குதி* என்ற வினை 'கோபத்தை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டம் செய்தல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

91. அவன் தன் பர்சிலிருந்த பணதைக் காணோம் எனக் குதிகுதி என்று குதித்தான்.

விரைவாக மேலெழும்பி கீழ்வருவதைக் குறிப்பிடும் *துள்ளு* என்ற வினை மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதைக் குறிப்பிடும்படி பொருண்மை நீட்சி செய்யும்.

92. அவள் மகிழ்ச்சியால் துள்ளினாள்.

கீழ்நோக்குச் சலனத்தைக் குறிப்பிடும் *இறங்கு* என்ற வினை கோபம உணர்ச்சி குறைவதைக் குறிப்பிட்டு பொருண்மை நீட்சி செய்யும்.

93. அவளுக்கு கோபம் இறங்கச் சிறிது நேரம் பிடிக்கும்.

'நீரில் தாழ்தல்' எனப் பொருள்படும் *மூழ்கு* சில சூழல்களில் கோபம் போன்ற உணர்ச்சியில் 'அதிக அளவில் உட்படுதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

94. அவன் துயரத்தில் மூழ்கினான்.

'நீரில் மூழ்குதல்' எனப் முதன்மைப் பொருள் தரும் *ஆழ்* 'மகிழ்ச்சி, துயரம் போன்ற உணர்ச்சிகளில் உட்படுதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

95. அவள் தன் மனைவி இறந்த செய்தி கேள்விப்பட்டு துயரத்தில் ஆழ்ந்தார்.

'அசை' என முதன்மைப் பொருள்படும் *அலை* என்பது ஒன்றைத் தேடி பல இடங்களுக்குப் போவதையும் சுற்றித்திரிதலையும் குறிப்பிடும். இது 'மனம் நிலைகொள்ளாமல் இருத்தல்', 'அளவுக்கு மீறி ஆசைப்படுதல்' என்ற உணர்வுகளைக் குறிப்பிடும்படி பொருண்மை நீட்சி செய்யும்.

96. அவன் வேலை தேடி அலைந்து கொண்டிருக்கின்றான்.

97. அவள் மனம் நிலைகொள்ளாமல் அலைகின்றது.

98. அவர் பணம் பணம் என்று அலைகின்றாள்.

அலைக்கழி என்ற கூட்டு வினை 'பிரச்சனைகளால் துன்புறு' எனப் பொருள்படும்.

அவர் நிரந்தர வேலையில்லமல் அலக்கழிந்து கொண்டிருக்கின்றார்.

அலைபாய் என்ற கூட்டு வினை 'நிலைகொள்ளாமல் தவி' எனப் பொருள்படும்.

99. என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்க இயலாது மனம் அலைபாய்கின்றது.

இப்படியும் அப்படியும் அசைதலைக் குறிப்பிடும் *ஆடு* என்ற வினை 'பயத்தால் அல்லது குளிரால் நடுங்குதல்' எனப் பொருள்பட பொருண்மை நீட்சி செய்யும்.

100. இருட்டில் ஏதோ ஒன்றைப் பார்த்து அவள் உடபெல்லாம் ஆடியது.

ஆடு சூழ்நிலைக்குப் பொருந்தாத விதத்தில் ஆர்ப்பாட்டம் செய்வதைக் குறிப்பிட்டுப் பொருண்மை நீட்சி செய்யும்.

101. அவன் சந்தர்ப்பம் தெரியாமல் ஆடுகின்றான்.

'தொடர்ந்து வேகமாக அசைதல்' எனப் பொருள்படும் *அதிர்* என்ற வினை 'அதிக அளவில் பயப்படுதல் அல்லது நடுங்குதல்' எனப் பொருண்மை நீட்சிசெயும். பொருட்களில் ஏற்படும் அதிர்வு உள்ளத்தில் ஏற்படும் அதிர்வாக உருவக் நீட்சியடைகின்றது.

102. அவன் அவளது மரணச் செய்தியைக் கேள்விப்பட்டு அதிர்ந்தான்.

5.3.2.6. சலனவினைகள் சில புலனுணர்வுகளை உருப்படுத்தம் செய்தல்

புலனுணர்வுகள் சில வேளைகளில் இயக்கமாகவோ சலனமாகவோ கருதப்படுவதால் சில சலனவினைகள் புலனுணர்வுப் பொருண்மைக் களத்திற்கு விரிவடையும்.

வா, போ என்ற வினைகள் சில புலனுணர்வுகள் அடைவதையோ இழப்பதையோ குறிப்பிட்டு பொருண்மை நீட்சி செய்யும்.

103. அவனுக்குப் பார்வை வந்துவிட்டது.

104. அவளிக்குப் பார்வை போய்விட்டது.

'கால்களால் வேகமாக சலனித்தல்' என அடிப்படையான பொருள்தரும் *ஓடு* என்ற வினை 'சிந்தனை மனத்தில் தோன்றுதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

105. அவன் மனதில் சிந்தனைகள் ஓடின.

5.4. கைமாற்ற வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்

எடுத்துக்காட்டான கைமாற்ற வினைகள் ஒரு பொருள் ஒருவர் உரிமையிலிருந்து விலகி மற்றொருவரின் உரிமைக்கு செல்வதைக் குறிப்பிடும்; ஒருவர் உரிமையிலிருந்து வேறோர் இடத்திற்கு விலகுவதும் கைமாற்ற வினைகளின் பொருண்மையின்கண் படும். கைமாற்ற வினைகள் பின்வரும் கைமாற்றங்களை உள்ளடக்கும்: கொடுப்பது, அனுப்புவது, இடுவது, போடுவது, அடகுவைப்பது, விற்பது, செலவுசெய்வது, எறிவது, ஒழிப்பது, விட்டுவிலகுவது.

5.4.1 கைமாற்ற வினைகளின் பொருண்மைக்களப் பாகுபடு

இராசேந்திரன் அவர்கள் கைமாற்ற வினைகளைப் பொருண்மைக் களங்களாகப் பிரித்து ஆய்துள்ளார் (Rajendran, 1978, இராசேந்திரன் 2001). அவர் *கொடு, வாங்கு, பெறு, வில், அனுப்பு, போடு, இடு, எடு* என்ற வினைகளைக் கைமாற்ற வினைகள் (verbs of transfer) என்று குறிப்பிடுகின்றார். (இவற்றை உரிமைமாற்ற வினைகள் என்று

கூறவியலும்.) அவர் கைமாற்ற வினைகளை முதலில் இரு துணை வகைகளாகப் பகுக்கின்றார்.

- கையிலிருந்து பொருள் போதல் அல்லது இழத்தல் வினைகள்
- கைக்குப் பொருள் வருதல் அல்லது பெறுதல் வினைகள்

கொடுத்தல், வழங்குதல், செலுத்துதல், அடகுவைத்தல், இடுதல், செலவழித்தல், எறிதல், கொட்டுதல் என்பன குறித்த வினைகள் கையிலிந்து பொருள் போதல் அல்லது பொருளை இழத்தல் வினைகளாகும். இங்கு கையில் இருக்கிற பொருளானது எழுவாயிலிருந்து கைமாற்றம் செய்யப்படுகின்றது. பெறுதல், வாங்குதல், திருடுதல், பறித்தல், சம்பாதித்தல், எடுத்தல், பொறுக்குதல் போன்றன குறித்த வினைகள் கைக்குப் பொருள் வருதல் அல்லது பொருளைப் பெறுதல் வினைகளாகும். இங்கு வேறு ஒருவரிடம் அல்லது வேறு இடத்தில் உள்ள பொருள் எழுவாயை நோக்கிக் கைமாற்றம் செய்யப்படுகின்றது.

5.4.2. கைமாற்ற வினைகளின் பொருண்மை மாற்றம் மற்றும் பொருண்மை நீட்சி

5.4.2.1 கையிலிருந்து பொருள் போதல் அல்லது இழத்தல்

இந்த துணைப் பொருண்மைக் கலத்தில் கொடுத்தல், அனுப்புதல், கட்டுதல், போடுதல், அடகுவைத்தல், செலவழித்தல், எறிதல், ஒழித்தல், வைத்தல், விடுதல், இழத்தல் ஆகிய செயல்பாடுகளைக் குறிக்கும் வினைகள் குழுமப்பட்டுள்ளன.

கொடு, தா, ஒப்படை, ஒப்புவி, அளி, ஈ, வழங்கு, வினியோகி, விளம்பு, பரிமாறு என்பன 'கொடு' என்ற பொருண்மைக் கூறை உட்படுத்தும். இவ்வினைகள் கொடுப்பவர், பெறுபவர், கொடுக்கப்படும் பொருள் என்ற பங்கெடுப்பாளர்களைப் பெறும். *வில்* என்பது விற்பவர் அல்லது கொடுப்பவர், விற்கப்படும் பொருள் அல்லது கொடுக்கப்படும் பொருள், பெறுபவர், பெற்பவர் பதிலாகக் கொடுக்கும் பணம் ஆகிய பங்கெடுப்பாளர்களை ஏற்கும்.

செலுத்து, கட்டு, அடை, ஒடுக்கு என்பன கொடுப்பவரையும் கொடுக்கப்படும் பணத்தையும் பங்கெடுப்பாளர்களாகப் பெறும். *அடகுவை, பணயம்வை, ஈடுவை, ஒத்திவை* என்பன ஒருவித பரிவர்த்தனையைக் குறிப்பிடும். இவையாவும் பணம் பெறுவதற்காகச் செய்யப்படும் பரிவர்த்தனையாகும். பணம் பெறுவதற்காக ஒரு பொருள் தற்காலிகமாக ஒருவருக்குக் கொடுக்கப்படுகின்றது. *செலவழி* ஒருவர் ஒரு சேவை அல்லது நன்மை பெறுவதற்காகப் பணத்தைக் கொடுப்பதைக் குறிப்பிடும். இவ்வினை செலவழிப்பவரையும், செலவழிக்கப்படும் பணத்தையும் பங்கெடுப்பாளர்களாகப் பெறும். *எறி, வீசு, எய், ஏவு, ஊற்று, கொட்டு, போடு, இடு, வை, விடு* என்ற வினைகள் ஒருவர் தம் கையில் உள்ள பொருளை வேறு இடத்திற்கு மாற்றுவதைக் குறிப்பிடும். இவ்வினைகள் இடமாற்றம்/கைமாற்றம் செய்பவரையும் இடமாற்றம்/கைமாற்றம் செய்யப்படும் பொருளையும் பங்கெடுப்பாளர்கள்களாக ஏற்கும்.

5.4.2.1.1. ***கொடு* என்பதன் பொருண்மை நீட்சி**

கொடுத்தல் வினைகள் மொழியைக் கடந்து மிக விரிவாக ஆயப்பட்டுள்ளது. ஹுஆங் மற்றும் ஆரென்ஸ் (Huang and Ahrens 1999), பிசாங் (Bisang 1996), இவாசாகி (Iwasaki 1997), நியுமான் (Newman1993, 1996), சோங் (Song 1997), தெப்காஞ்ஜனா மற்றும் உவேகரா (Thepkanjana and Uehara 2008), விபெர்க் (Viberg 2002), யப் மற்றும் இவாஸ்கி (Yap and Iwasaki), முவென்ஜை மற்றும் தெப்காஞ்ஜனா (Mueanjai and Thepkanjana 2007) ஆகியோர் இத்தகைய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

'கொடு" என்பது குறித்த நியூமானின் ஆய்வு மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகும். நியுமான் பல்வேறு மொழிகள் 'கொடு' என்ற வெளிப்பாட்டைக் கையாளுகின்றன

என்பதில் அதிக அளவில் வேறுபாடு காட்டுகின்றன மற்றும் 'கொடு' என்பது உருவகமாகப் பயன்படுத்தப்படுகின்றது என்று காட்டுவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளார்; ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பொழுங்குகள் ஒரு அடிப்படையான மூலமுன்வகை 'கொடு' தோற்ற விவரங்களின் பல்வேறு துணை அமைப்புகளின் கருத்துருசார் நீட்சிகள் வழி ஊக்கப்படுத்தப்படுள்ளது. 'கொடு' ஏற்கும் வேறுபட்ட தொடரியல் வடிவங்களும் மற்றும் 'கொடு' என்பதன் அடிப்படையிலான பொருண்மை நீட்சிகளின் பரப்பெல்லையும் உரிமம் வழங்கப்பெற்றவை மற்றும் அடிப்படை கருத்துருசார் திட்டத்தால் பலவழிகளில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனவை.

அவர் 'கொடு' வினையை அறிமுகப்படுத்தி கொடுப்பது என்பதன் உதேசமான உலகப்பொது சட்டகத்தைப் பற்றி விளக்குகின்றார். அவர் மனித சமூகப் பரிமாற்றத்தில் கொடுப்பது என்பதன் அடிப்படை தன்மையையும் மற்றும் எவ்வாறு இது மொழிகளில் 'கொடு' வினையின் வெளிப்படையிலான பொருண்மை-இலக்கண அடிப்படைத் தன்மையில் பிரதிபலிக்கின்றது என்றும் வலியுறுத்துகின்றார்.

பின்னர் அவர் 'கொடு' என்பதன் பொருண்மையியலைப் பண்பாக்கம் செய்கின்றார். மூலமுன்வகை கொடுத்தல் தோற்ற விவரங்களின் கலவைத்தன்மையான திட்டத்தை முன்வைக்கின்றார்: ஒரு நபர் (கொடுப்பவர்) ஒரு பொருளின் கட்டுப்பாட்டை மற்றொரு நபருக்கு (பெறுபவர்) கடத்தும் ஒரு செயல்; மற்றும் இந்த தோற்ற விவரங்களின் பல்வேறு 'பொருண்மைக் களங்கள்' விவரிக்கப்படுகின்றது. இவை 'இடம்-காலம்' ('spatio-tempora'), 'கட்டுப்பாடு' ('control'), 'வலு இயக்கவியல்' ('force dynamics') மற்றும் 'மனிதனின் ஆர்வம்' ('human-interest) என்பனவாகும்.

பின்னர் அவர் 'நேரடியான அர்த்தம் தருகிற கொடு உள்ள கட்டுமானங்களைப்' (constructions with literal GIVE) பரிசோதிக்கின்றார். உலகப் பொதுவாக நிறுப்பட்ட செயலி-செயலுக்குள்ளாவர் தொடரியல் அமைப்பொழுங்கைக் கொண்டு மொழிகள் கொடுப்பவரை செயலியாகக் (எ.கா. 'எழுவாய்') கொள்வதில் ஒற்றுமை காட்டுகின்றன; அதே சமயம் 'பொருள்' மற்றும் 'பெறுபவர்' (உருப-)தொடரியல் அடிப்படையில் கையாளப்படுகின்றன என்பதில் வேறுபடுகின்றன. பின்வருவன சாத்தியங்களாகும்: முதலில் 'பொருள்' என்பதைத் தொடரியல் செய்படுபொருளாகக் கையாளுவது, பெறுபவரை திரிபாகக் (oblique) (கொடை, இலக்கு, இடம், பயன்பெறுபவர், அல்லது வைத்திருப்பவர்) கையாளுவது; இரண்டாவது 'பெறுபவரை' செய்பபடுபொருளாகவும் 'பொருளை' திரிபாக (எடுத்துகாட்டாக கருவி) அடையாளப் படுத்துவது; மூன்றாவது இரு தாழ்நிலை பங்கெடுப்பாளர்களையும் தொடரியல் அடிப்படையில் செய்ப்படுபொருள்-போன்றதாகக் கையாளுவது. நான்காவது இரு தாழ்நிலைப் பங்கெடுப்பாளர்களையும் திரிபாக அடையாளப்படுத்துவது. நியூமான் இரு மாறுபாடுகளின் முதலாவது மற்றதைவிடக் கூடுதல் 'அடிபடையானது' அல்லது குறைவாக 'அடையாளப்படுத்தப்பட்டது என்ற கூற்றை மறுக்கின்றார். நியூமானின் அணுகுமுறைப்படி மொழியைக் கடந்த இந்த வேறுபட்ட நடத்தை தன்னிச்சையனதாகவோ கொள்கையற்றதாகவோ கருதப்படவில்லை; மாறாக மூலமுன்வகை 'கொடு' தோற்ற விவரங்களின் நேர்வுகளுக்கு இடையிலுள்ள பொருத்தங்களால் ஊக்குவிக்கப்பட்டுள்ளது மற்றும் தரப்பட்ட மொழியில் தொடரியல் அடையளங்களின் மைய பொருண்மைகளாகும்.

மேலும் அவர் மொழிகளில் 'கொடு' என்பதன் உருவக நீட்சிகளின் பல்வகைகளை விளக்குகின்றார் (Newman 1966:233-249). அவர் எவ்வாறு 'கொடு' என்பதன் பொருண்மை நீட்சியாகப் பின்வரும் முக்கிய வகைபாடுகளைத் தருகின்றார்:

(1) அகநிலையான தனிப்பட்ட கருத்துப்பரிமாற்றம் *(give a talk),*

(2) உள்பொருள்களின் (entities) வெளிப்படல்/காட்டுதல் (emergence/manifestation) *(what gives?),*

(3) காரணக் கட்டுமானங்கள் (causative constructions) *(given to believe)*,

(4) அனுமதி/இயலுதல் (permission/enablement) *(I give you cook =* 'I make you cook'),

(5) திட்டமிட்ட ஊடாட்டம் (schematic interaction),

(6) பெறுபவர்/பயன் (recipient/benefactive) (7 *cook give you =* T cook for you'),

(7) சலனம் (away/into)

(8) நிறைவேறியமை (completedness).

நியுமான் தன்னுடைய தொடக்க அடிப்படையின் பண்பாக்கம், மூலவகை கொடுத்தல் காட்சி அடிப்படையில் இந்த உருவகக் கட்டுமானங்களில் 'கொடு' என்பதன் பல்வேறு நீட்சிகளின் நம்பதகுந்த மற்றும் சாத்தியமான விவரத்தைத் தருகிறார். இதன் விளைவு உருவகம்சார் மற்றும் ஆகுபெயர்சார் உறவுகளின் கலவைத்தன்மையான மற்றும் நல்நியாயப்படுத்தப்பட்ட வலைப்பின்னலாகும்.

கொடு என்பதற்கு கிரியாவில் 22 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இவை நான்கு பொருண்மைத் தலைப்புகளின் கீழ் குழுமப்பட்டுள்ளன.

அ. கிடைக்கச் செய்தல் என்ற வழக்கு

1. (ஒருவர் அல்லது ஒன்று குறிப்பிட்ட ஒன்றை) பெறுமாறு செய்தல்; (கடனாக, தானமாக, பரிசாக அல்லது அவற்றை ஒத்த பிற வகையில் ஒன்றை) அளித்தல்
2. (ஆடு, மாடு போன்றவை பால்) சுரத்தல்; (பயிர்) மகசூல் காணுதல்; (செடி, மரம், முதலியன காய், பழம் போன்றவை) உற்பத்தி செய்தல்
3. (வரி, கட்டணம், விலை முதலியவற்றை) செலுத்துதல்
4. (பெண்ணை) திருமணம் செய்து தருதல்
5. (ஒரு குறிப்பிட்ட நிலை, தன்மை, வாய்ப்பு, முதலியவற்றை ஒன்றுக்கு அல்லது ஒருவருக்கு) அளித்தல்
6. (அடி, உதை, அல்லது தண்டனை) பெறச் செய்தல்
7. (ஒரு துறை, இலாகா போன்றவற்றின் அதிகாரத்தை ஒருவர்) பெறுமாறு செய்தல்; ஒதுக்குதல்
8. (விற்பனை செய்தல் போன்ற முறையில் ஒன்றை ஒருவருக்கு) சேரச்செய்தல்
9. (குறிப்பிட்ட பணிக்காக ஒன்றை ஒருவரிடம்) ஒப்படைத்தல்
10. (முத்தம்) தருதல்

ஆ. **வெளிப்படுத்துதல், உருவாக்குதல் தொடர்புடைய வழக்கு**

11. (இன்பம், உற்சாகம் அல்லது தொல்லை, தொந்தரவு முதலியவற்றை) உண்டாக்குதல்
12. (தகவல், சம்மதம், புகார், விளக்கம் முதலியவற்றை ஒருவரிடம்) தெரிவித்தல்
13. (கட்டளை, ஆணை) இடுதல்

14. (வேதி.) (ஒரு செயல்பாட்டின் விளைவாக மற்றொன்றை) உண்டாக்குதல்

15. (குறிப்பிட்ட நிலை, படைப்பு முதலியவற்றை) உருவாக்குதல்

16. (பூ முதலியவை மணத்தை) வெளிப்படுத்தல்

இ. உள்ளே செல்லுமாறு செய்தல் என்ற வழக்கு

17. நுழைதல்; செருகுதல்

18. (இரத்தம், பிராணவாயு முதலியவற்றை) உட்செலுத்தல்

19. (மருந்து, மாத்திரை முதலியவற்றை) உட்கொள்ளச் செய்தல்; (குழந்தை, நோயாளி போன்றோருக்குப் பால், சோறு முதலியவற்றை) உண்ண அளித்தல்; புகட்டுதல்

ஈ. இதர வழக்கு

20. (ஒரு நூலில் சொற்கள், படங்கள் முதலியவற்றை) இடம்பெறச் செய்தல்

21. (திவசம், பலி போன்ற சடங்குகளை) நிகழ்த்துதல்

22. (வாகனங்கள் குறிப்பிட்ட அளவு எரிபொருளுக்குக் குறிப்பிட்ட தூரம்) ஓடுதல்

கொடு என்பதன் எடுத்துக்காட்டான அர்த்தம் "கிடைக்கச் செய்தல் என்ற வழக்கு" என்ற பொருண்மைத் தலைப்பின் கீழ் முதலாவதாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. *கொடு* என்பதன் எடுத்துக்காட்டான அர்த்தம் மூன்று பங்கெடுப்பாளர்களை ஏற்கும்: கொடுப்பவர், பெறுபவர், கொடுக்கப்படும் பொருள். கொடுப்பவரின் உரிமையில் அல்லது கையில் இருக்கும் பொருள் பெறுபவரின் உரிமைக்கு மாறும் அல்லது கைக்கு மாறும். கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள முதல் அர்த்தம் இத்தகைய எடுத்துக்காட்டன அர்த்தமாகும்.

இரண்டாவது அர்த்தத்தில் கொடுப்பவரும் பெறுபவரும் எடுத்துக்காட்டான கொடுப்பவராகவும் பெறுபவராகவும் இல்லை. பெறுபவர் வெளிப்படையாகப் பேசப்படவில்லை. கொடுப்பவர் தமக்கு உரிமையாக இருக்கிற ஒன்றைத் தொடர்புள்ள பெறுபவரின் பயன்பாட்டிற்குத் தருகின்றது. இது கைகளை நீட்டி தமது உரிமையை மற்றவரின் கைகளுக்கு மாற்றும் செயல்பாடல்ல. "கிடைக்கச் செய்தல் என்ற வழக்கு" என்ற பொருண்மைத் தலைப்பின் கீழ் வரும் 2 முதல் 10 வரையுள்ள அர்த்தங்களும் இத்தகையதாகும்.

"வெளிப்படுத்துதல், உருவாக்குதல் தொடர்புடைய வழக்கு" என்ற பொருண்மைத் தலைப்பின் கீழ் வரும் அர்த்தங்கள் *கொடு* என்பதன் இரண்டாம் நிலை பொருண்மை நீட்சியைக் குறித்து நிற்கின்றன. இது நியூமானின் "உள்பொருள்களின் (entities) வெளிப்படல்/காட்டுதல் (emergence/manifestation)" என்ற பொருண்மை நீட்சி வகைப்பாட்டை மேலுறல் செய்யும்.

"உள்ளே செல்லுமாறு செய்தல்" என்ற வழக்கு" என்ற பொருண்மைத் தலைப்பின் கீழ் வரும் அர்த்தங்கள் *கொடு* என்பதன் மூன்றாம் நிலை பொருண்மை நீட்சியைக் குறித்து நிற்கின்றன. இது நியூமானின் "சலனம் (away/into)" என்ற பொருண்மை நீட்சி வகைப்பாட்டை மேலுறல் செய்யும்.

உ. கொடு என்பதன் இலக்கணவாக்கம்

கொடு என்பது பொருளடக்க வினையிலிருந்து இலக்கண வினையாக பொருண்மை பொருண்மை மாற்றம் அடைந்துள்ளது. *கொடு* முன்மை வினையிலிருந்து துணைவினையாக பொருண்மை மாற்றம் அடைந்து பின்வரும் துணைவினைச் செயல்பாட்டைக் குறித்து நிற்கும்.

(1) *கொடு* ஒருவருக்கு அல்லது ஒன்றுக்கு உதவுகின்ற கொடை அர்த்தில் பயன்படுத்தப்படும்; அதாவது முதன்மை வினைச் சுட்டும் செயல் பிறருக்காகச் செய்யப்படுகின்றது என்பதைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும்.

104அ. அம்மாவிற்கு ஒரு குடம் தண்ணீர் எடுத்துக்கொடு

104ஆ. அவள் அவனுக்கு சமையல் செய்து கொடுத்தாள்

104இ. அவள் குழந்தைக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தாள்

(2) *கொடு* நிலை மாற்றம் அடைவதைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்படும்.

105. எவ்வளவோ அடித்தும் இரும்புத்தகடு வளைந்து கொடுக்கவில்லை

(3) *கொடு* ஒரு குழுமப் பெயர்களுடன் இணைந்து புதிய வினைகளை விளைவிக்கும். இந்நிலையில் கொடு என்பது வினையாக்கியாகச் இலக்கணச் செயல்பாடு செய்வதாகக் கூற இயலும். இராசேந்திரன் (1978, 2000) பின்வரும் ஆக்கங்களைப் மூன்று தலைப்பின் கீழ் பட்டியலிட்டுள்ளார்:

அ. கருத்துப்பரிமாற்றக் குறித்த பெயர்களுடன்

அறிக்கை கொடு, அனுமதி கொடு, உத்திரவாதம் கொடு, உத்தரவு கொடு, உறுதிகொடு, ஒப்புதல் கொடு, சம்மதம் கொடு, பதில் கொடு, பயிற்சிகொடு, பேச்சுகொடு, தீர்ப்புகொடு, வரவேற்புகொடு, வாக்குகொடு, வாக்குறுதிகொடு, விளக்கம்கொடு, விடைகொடு

ஆ. கட்புல உணர்வுகுறித்த பெயர்களுடன்

காட்சிகொடு, தரிசனம்கொடு, தோற்றம் கொடு

இ.பிற பெயர்களுடன்

அடைக்கலம் கொடு, ஆதரவுகொடு, இடங்கொடு, ஈடுகொடு, செல்லங்கொடு, பறிகொடு, பாதுகாப்புகொடு

இவை எல்லாவற்றையும் பெயர்+வினையாக்கி என்ற ஆக்கத்தால் விளையும் கூட்டுவினைகளாகக் கொள்ள இயலாது ஏனென்றால் அவற்றின் ஆக்கம் செய்யப்படுபொருள் + வினை என்ற தொடராக அமையுமேயன்றி கூட்டாகாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவற்றில் 18 கூட்டுச்சொற்களாக க்ரியா அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ளதையும் சுட்டிக்காடுகின்றார். க்ரியா பட்டியலிட்டுள்ள 18 கூட்டுக்களை கூட்டுவினைகளாகக் கொள்ள இயலும். *பேச்சுக்கொடு, பறிகொடு* என்பன போன்ற கூட்டுவினைகளைப் பிரித்துப் பொருள்கொள்ளவியலாத கூட்டுவினைகள் என அறுதியாகச் சொல்ல இயலும்.

ஐகுல் மற்றும் குர்டொகுல் (Aygül and Kurtoglu 2012) என்போர் துருக்கிய மொழியில் 'கொடு' என்பதன் ஒருபொருள்பன்மொழியை ஆய்கையில் நாம் முன்னர் குறிப்பிட்ட பெயர் + கொடு (வினையாக்கி) வகையிலான கூட்டு வினைகளை பொருண்மைப் புல ஆய்வு கலவைநிலைப் பயனிலைகள் எனக்குறிப்பிட்டு, 'கொடு' வினை சேரும் பெயர்களை 10 பொருண்மைக் களங்களாகப் பிரித்து பட்டியலிட்டு '*கொடு*' என்பதன் ஒருபொருள் பன்மொழியை ஆய்கின்றனர். அதைப் பின்பற்றி தமிழில் *கொடு* வினையின் ஒருபொருள்பன்மொழியைப் பின்வருமாறு பட்டியலிட்டு ஆயலாம்.

கருத்துப் பரிமாற்றம்		
மொழிசார்ந்த	வாய்மொழி சார்ந்த	விடைகொடு, பதில் கொடு, தகவல் கொடு, கட்டளைகொடு, அறிக்கை கொடு,

		விரிவுரைகொடு, விளக்கம் கொடு, வாக்குகொடு, தீர்ப்புகொடு, மேற்கோள்கொடு, அறிவுரைகொடு, பேச்சுகொடு, ஆணைகொடு,
	எழுத்துமொழி சார்ந்த	விளம்பரம் கொடு, மனுகொடு, புகார் கொடு,
மொழிசாராத		சைகைகொடு, குரல்கொடு, சமிக்கைகொடு,
உளநிலை அல்லது மனநிலை		
		கருத்துரைகொடு, முடிவுகொடு, அர்த்தம் கொடு, யோசனைகொடு, முக்கியத்துவம் கொடு, மரியாதைகொடு
உணச்சிநிலை		
		உற்சாகம் கொடு, மகிழ்ச்சிகொடு, துன்பம்கொடு, இன்பங்கொடு, சமாதனங்கொடு, பயங்கொடு, ஆதரவுகொடு, தொல்லைகொடு, பாசங்கொடு, அதிர்ச்சிகொடு, முத்தங்கொடு
உரிமை/உடைமை மாற்றம்		
		பொருள்கொடு, பணங்கொடு, கடன்கொடு, வட்டிகொடு, கையூட்டுகொடு, வாடைகைகொடு, தானங்கொடு, பிச்சைகொடு, சொத்தை எழுதிக்கொடு
		அன்பளிப்புகொடு, பரிசுகொடு, வெகுமதிகொடு,

		பதக்கம் கொடு, விருதுகொடு
		தத்துகொடு,
நிலைமாற்றம்		
		உருக்கொடு, வடிவுகொடு,
அனுமதி		
		அனுமதி கொடு, வழிகொடு, சந்தர்ப்பங்கொடு
		கூக்குரல் கொடு, குரல் கொடு, வெளிச்சம் கொடு, மணங்கொடு, சூடுகொடு,
உடலுறுப்பு தொடர்பானவை		
		காதுகொடு, கைகொடு,
உற்பத்தி நிலை		
		விளைச்சல் கொடு, மகசூல்கொடு, பால்கொடு, குழந்தைகொடு,
உருவாக்கு நிலை		
		குழந்தைகொடு, உயிர்கொடு,
இறப்பு நிலை/இழப்பு நிலை		
		காவுகொடு, பறிகொடு, பலிகொடு,

5.4.2.2 கைக்குப் பொருள் வருதல் அல்லது பெறுதல்

வாங்கு, பெறு, வசூலி, மீட்டு, திருப்பு என்பன பெறுபவர், பெறப்படும் பொருள், கொடுப்பவர் என மூன்று பங்கெடுப்பாளர்களைப் பெறும். *திருடு, களவாடு, கொள்ளையடி, சூறையாடு, அபகரி, கவர்* என்பன முந்தைய குழும வினைகளைப் போன்று கைக்குப் பொருள்வருவதைக் குறிப்பிட்டாலும் '+சட்டத்திற்குப் புறம்பாக' என்ற கூடுதல் பொருண்மைக் கூறு அடிப்படையில் இவை முந்தைய வினைகளிலிருந்து வேறுபடும். *பிடுங்கு, பறி, கொய், ஆய், உருவு* என்பன '+வலுக்கட்டாயமாக' என்ற கூடுதல் பொருண்மைக் கூறு அடிப்படையில் முந்தைய வினைக் குழுமங்களிலிருந்து வேறுபடும். *தத்தெடு, சுவீகரி, சுவீகாரமெடு* என்ற வினைகள் பெறப்படும் பொருள் குழந்தை என்ற தேர்வால் பிற வினைக் குழுமங்களிலிருந்து வேறுபடும். *சம்பாதி, ஈட்டு* என்பன பெறுபவர் தமது உழைப்பை அல்லது சேவையைக் கொடுத்து பணத்தைப் பெறுவதைக் குறிப்பிடும். *எடு, பொறுக்கு, அள்ளு, வாரு, கோரு* என்பன கொடுப்பவரை பங்கெடுப்பாளராகப் பெறாது.

5.4.2.2.1 வாங்கு என்பதன் பொருண்மை நீட்சி

வாங்கு என்பதற்கு க்ரியா 12 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது.

1. பிறர் தருவதை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது ஏற்றுக்கொள்வதன் மூலம் தன்னிடத்தில் இருக்கச் செய்தல்.
2. ஒன்றை அதற்கு உரிய விலை, பொருள் போன்றவற்றைக் கொடுத்து தன்னுடையதாக ஆக்கிகொள்ளுதல்.
3. செய்யும் வேலைக்குப் பதிலாக அல்லது ஈடு செய்யும் வகையில் ஒன்றைப் பெறுதல்.
4. முயற்சியின் விளைவாக ஒன்றைப் பெறுதல்.

5. தேவையான ஒன்றைக் கொடுக்கும் உரிமை அல்லது தகுதி உள்ளவரிடமிருந்து பெறுதல்.
6. குறிப்பிட்ட நாளில் ஒன்றைச் செய்வதற்குச் சம்பந்தப்பட்டவரிடம் தேதி, நேரம் ஆகியவற்றைக் கேட்டுப் பெறுதல்.
7. தண்டனையாக அல்லது பகைகாரணமாக ஒருவருவருடைய கால், கை அல்லது தலையை வெட்டுதல்
8. ஒன்றை பாடுபட்டு பெறுதல்
9. செய்த காரியத்திற்கு தண்டனை பெறுதல்
10. செய்யும் காரியத்தின் விளைவாக மற்றவர்களுடைய மதிப்பீட்டை பெறுதல்
11. உறிஞ்சுதல்;இழுத்தல்; உள்வாங்குதல்
12. ஒருவர்சொல்வதை மனத்தில் பதியவைத்துக்கொள்ளுதல்

இராசேந்திரன் (1978) *வாங்கு* என்பதன் பொருண்மை நீட்சியைப் பின்வருமாறு பகுத்துப் பட்டியலிடுகின்றார்:

நீட்சி	**எடுத்துக்காட்டான தொடர்கள்/கூட்டுகள்**
மதிப்புதரும் ஒன்றை பெறுதல்	புகழ்வாங்கு, பெயர்வாங்கு, பேரும் புகழும் வாங்கு, பட்டம் வாங்கு, பாராட்டு வாங்கு, பதக்கம் வாங்கு, பரிசு வாங்கு,
இகழ்ச்சி தரும் ஒன்றைப் பெறுதல்	தண்டனை வாங்கு, பேச்சு வாங்கு, ஏச்சு வாங்கு
உழைப்பிற்கு/சேவைக்குப் பதிலாகப் பெறுதல்	சம்பளம் வாங்கு, கூலிவாங்கு, ஊதியம் வாங்கு, கைக்கூலிவாங்கு, வாடகைவாங்கு

பெயர் + வாங்கு கூட்டாக வந்து பொருள் தருதல்	காற்று வாங்கு, மூச்சுவாங்கு, பின்வாங்கு, பழிவாங்கு, காதில் வாங்கு, உயிரை வாங்கு, மானத்தை வாங்கு, வெளுத்து வாங்கு, வேலைவாங்கு, உள்வாங்கு, தலையைவாங்கு

புலனறி மற்றும் அறிவுதொடர்பான பொருண்மைக் களத்திற்குப் பொருண்மை நீட்சி

காதில் வாங்கு, உள்வாங்கு என்ற கூட்டு வினைகள் முறையே 'கேள்', 'புரி' எனப் பொருள் தந்து கைமாற்றப் பொருண்மைக் களத்திலிருந்து முறையே புலனறிசார், அறிவுசார் பொருண்மைக் களங்களுக்குப் பொருண்மை நீட்சி செய்யும்.

106. அவன் தன் தாய் கூறியதை காதில் வாங்காமல் போய்க்கொண்டிருந்தான்.

107. அவன் ஆசிரியர் விளக்குவதை உள்வாங்கவில்லை.

5.5. நிலைமாற்ற வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்

நிலைமாற்றம் தொடர்பான பொருண்மை இயல் ஆய்வுகள் (ஆங்கில மொழியில்) பெரும்பாலாலும் தொடரியல் அடிப்படையிலேயே அமைகின்றன. அவைப் பெரும்பாலும் பங்கெடுப்பாளர் அமைப்பு (argument structure) தொடர்பாகவே அமைகின்றன (Fillmore, Charles 1970; Levin 1993, 1999; Hovav and Levin 1998, 2002; Levin and Hovav, 19991, 1995, 2005; Goldberg, 2001; Rumshisky, 2008)

சலன வினைகள் இடமாற்றத்தைக் குறிப்பிடுவன; கைமாற்ற வினைகள் உரிமை மாற்றத்தைக் குறிப்பன. மாறாக நிலைமாற்ற வினைகள் பொருள்கள் அடையும் நிலை

மாற்றங்களைக் குறிப்பிடுவன. பொருள்கள் வடிவ மாற்றம் அடைவது, பிற பண்புகளில் மாற்றம் அடைவது என்பன இதன் கண் படும்.

நிலை மாற்ற வினைகளைப் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் பின்வரும் துணைப் பொருண்மைக் களங்களாகப் பிரிக்கலாம் (இராசேந்திரன், 1978, 1983, 2001):

1. ஈரம் இழத்தல்-ஈரம் பெறுதல் வினைகள்
2. சூடு பெறுதல்-சூடு இழத்தல் வினைகள்
3. கடினமாதல்-கடினமிழத்தல் வினைகள்
4. வேகுதல் வினைகள்
5. இறுகுதல்-தளர்தல் வினைகள்
6. நிறம்மாறுதல் வினைகள்
7. பழுத்தல் வினைகள்
8. நிமிர்தல்-உருக்குலைதல் வினைகள்
9. சுருங்குதல்-விரிதல் வினைகள்
10. கூடுதல்-குறைதல் வினைகள்
11. துண்டுகளாதல் வினைகள்
12. அழிதல் வினைகள்

5.5.1 ஈரமிழத்தல்-ஈரம்பெறுதல் வினைகளின் பொருண்மை நீட்சி

காய், உணங்கு, வரள், வாடு, வதங்கு, வறு, பொரி, சுடு, கருகு, கரி, வற்று என்பன ஈரமிழத்தல் துணைப் பொருண்மைக் களத்தில் அடங்கும். *நனை, ஈரமாகு, ஊறு, குவர்* என்பன ஈரம் பெறுதல் துணைப் பொருண்மைக் களத்தில் அடங்கும். *வற்று* என்பது நீர்மப்பொருட்கள் சூடு காரணமாக அளவில் குறைவதை குறிப்பிடும்.

108. குளத்தில் நீர் வற்றி விட்டது.

109. கடுமையான கோடை காரணமாக ஆற்றில் நீர் வற்றிவிட்டது.

காய், உணங்கு, வரள், வாடு, வதங்கு, வறு, பொரி, சுடு, கருகு, கரி என்பன திடப்பொருட்கள் ஈரமிழப்பதை குறிப்பிடும். +/-திரவப்பொருள் அல்லது +/-திடப்பொருள் என்ற பண்புக்கூறால் இவ்விரு துணைப் பொருண்மைக் களங்களும் வேறுபடும். *வாடு, வதங்கு* என்பன முதன்மையாக செடி, இலை என்பன தமது புதுமைத் தன்மையை இழப்பதைக் குறிப்பிடும். *வதங்கு* என்பது *வாடு* என்பதைக் காட்டிலும் தீவிரத்தன்மையைக் குறிப்பிடும்.

110. செடிகள் நீரில்லாமல் வாடிவிட்டன.

111. செடிகள் நீரில்லாமல் வதங்கிவிட்டன.

112. செடிகள் எல்லாம் வாடி வதங்கிவிட்டன.

வாடு என்பது மரம், செடி, கொடி முதலியன நீரின்மையால் பசுமை இழந்து காயும் நிலைக்குச் செல்வதைக் குறிப்பிடுதை மூலமுதன்மைப் பொருண்மையாகக் கருதலாம்.

113அ. நீரின்மையால் செடிகள் வாடிக்கிடக்கின்றன.

113ஆ. மழையின்மையால் பயிர்கள் வாடின.

முகம் களையும் பொலிவும் இழத்தல்

இது வாடு என்பதன் முக்கியப் பொருண்மை நீட்சியாகும். தாவரங்கள் வாடுவது இங்கு முகத்திற்கு நீட்சிசெய்யப்படுகின்றது.

114அ. அந்த செய்தியைக் கேட்டதும் அவளது முகம் வாடிவிட்டது.

114ஆ. பசியால் குழந்தைகளின் முகம் வாடிவிட்டன.

துன்புறுதல்

முகம் பொலிவிழத்தலுக்கு நீட்சி செய்யப்பட்ட *வாடு* மேலும் நீட்சிசெய்யப்பட்டு துன்புறுவதைக் குறிப்பிட்டு நிற்கின்றது.

115அ. அவள் கணவன் இன்றி தனிமையில் வாடுகின்றாள்.

115ஆ. அவரது குடும்பம் வறுமையால் வாடுகின்றன.

காய் என்ற வினையின் மூலமுதன்மைப் பொருண்மையாக 'வெப்பத்தால் ஈரத்தன்மையை இழத்தல்' என்பதைக் கருதலாம்.

116அ. மழை இல்லாமல் பயிர் காய்ந்து விட்டது.

116ஆ. வெயில்லால் செடிகள் காய்ந்துவிட்டன.

117இ. மொட்டைமாடியில் இட்ட வடாகம் எல்லாம் நன்றாகக் காய்ந்துவிட்டது.

காய் ஈரத்தன்மை இழத்தலைக் குறிப்பிடுவதன் நீட்சியாக தொண்டை உலர்வதையும் புண் உலர்வதையும் குறிப்பிடுகின்றது.

118. பேசிப் பேசி அவருக்குத் தொண்டை காய்ந்தது.

மருந்து இட்டுக்கொண்டு வந்ததால் விரலில் இருந்த புண் காய்ந்துவிட்டது.

ஈரத்தன்மையைக் குறிப்பிடும் *காய்*, 'சூடேறு', 'உடல் சுடு', 'பிரகாசி' எனப் பொருண்மை நீட்சி செய்கின்றது.

119. அடுப்பில் போட்டிருந்த தோசைக் கல் நன்றாகக் காய்ந்துவிட்டது.

120. குழந்தையைத் தொட்டுப் பார்த்தபோது உடல் காய்வது தெரிந்தது.

121. மொட்டை மாடியில் நின்றால் நிலாக் காய்வது நன்றாகத் தெரியும்.

காய் என்பது *வயிறு* என்பதுடன் இணைந்து *வயிறு காய்* என 'அதிக அளவில் பசித்தல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

122. வயிறு காய்ந்தால் தான் அவன் சாப்பிட வருவான்.

ஈரத்தன்மை இழத்தல் வினைகளின் முக்கியமான பொருண்மை நீட்சியாக முகப்பொலிவு மாற்றம், தொண்டை, தோல் என்பன ஈரத்தன்மை இழத்ததால் ஏற்படும் மாற்றம் இவற்றைக் குறிப்பிடலாம்.

123. காய்ச்சல் காரணமாய் அவள் முகம் வாடியது.

124. பேசிபேசி அவளுக்குக் தொண்டை காய்ந்தது/வரண்டது.

125. அவளது உதடுகள் ஈரப்பசையின்றி காய்ந்தது/உலர்ந்தது/வரண்டது.

126. அவள் சருமம் வரண்டது போல் தோன்றுகின்றது.

5.5.2 **சூடு பெறுதல்-சூடு இழத்தல் வினைகளின் பொருண்மை நீட்சி**

சுடு, சூடாகு, காய், கொதி என்ற வினைகள் சூடுபெறும் நிலைமாற்றத்தைக் குறிப்பன. *குளிர், தணு, தணி, ஆறு* என்பன சூடிழக்கும் நிலைமாற்றத்தைக் குறிக்கும்.

'வெப்பத்தினால் சுடாகி ஆவியாகும் நிலை அடைதல்' என முதன்மைப் பொருள்தரும் *கொதி* என்ற வினை 'மிகுந்த கோபம் அடைதல்' எனப் பொருண்மை நீட்சிசெய்வது நிலைமாற்றமடைதல்-உணர்ச்சியதல் பொருண்மை (பொருண்மைக் கள) மாற்றமாகும்.

127. தன்னை இகழ்வது கேட்டு அவன் மனம் கொத்தித்தான்.

'ஒரு பொருள், திரவம் சராசரி வெப்பநிலைக்கும் குறைவான நிலையை அடைதல்' என முதன்மைப் பொருள் தரும் குளிர் என்ற நிலைமாற்ற வினை 'மகிழ்ச்சியடைதல்; சுகம் என்று உணர்தல்' என உணர்ச்சிசார் பொருண்மை மாற்றம் அடையும்.

128அ. அவர்களுடைய உபசரிப்பில் அவர் மனம் குளிர்ந்தார்.

128ஆ. அவர் தன் இறைவனது திருவுவை மனம் குளிரக்கண்டார்.

'வெப்பநிலை சராசரிக்கும் குறைதல்' என முதன்மைப் பொருள் தரும் *தணி* என்ற நிலைமாற்ற வினை *கோபம், பசி, தாகம்* என்பன குறைவதைக் குறிப்பிட்டு உணர்வு/உணர்ச்சி-சார் பொருண்மை மாற்றம் அடையும்.

129. வென்னீர் சூடு தணிந்த பின்னர் அவன் குளித்தான்.

130. சிறிது நேரம் சென்றபின்னர் அவனது கோபம் தணிந்தது.

131. எவ்வளவு சாப்பிட்டும் அவனது பசி தணியவில்லை.

132. அவன் தாகம் தணிய மோர் குடித்தான்.

'சூடாக இருப்பது சூடு இழத்தல்' என முதன்மைப் பொருள்படும் *ஆறு* என்ற நிலைமாற்ற வினை 'பசி, கோபம் போன்ற உணர்வுகள் தணிதல்' என உணர்வுசார் பொருண்மை மாற்றம் அடைகின்றது.

133. சாப்பிடுவதற்கு நேரம் ஆகிவிட்டதால் சாப்பாடு ஆறிவிட்டது.

134. அவளது கோபம் ஆற வெகு நேரம் பிடித்தது.

135. அவள் தன் பசி ஆற உண்டாள்.

136. அவர் கூறிய ஆறுதலைக் கேட்டு அவனது மனசு ஆறிவிட்டது.

5.5.3 **கடினமாதல்-கடினமிழத்தல் வினைகளின் பொருண்மை நீட்சி**

கடினமாகு, இறுகு, கெட்டிப்படு, கெட்டியாகு, கெட்டிப்பிடி, கட்டிதட்டு, உறை, முறுகு என்பன கடிமாகும் நிலைமற்றத்தைக் குறிப்பிடும் வினைகள் ஆகும். *மென்மையாகு, மிருதுவாகு, குழை, நெகிழ், உருகு, இளகு, இழுகு, கரை* என்பன கடினமிழத்தல் நிலைமாற்றத்தைக் குறிப்பிடும் வினைகள் ஆகும்.

கடினமாகு, இறுகு, கெட்டிப்படு, கெட்டியாகு, கெட்டிப்பிடி, கட்டிதட்டு, உறை, முறுகு என்பன கடிமாகும் நிலைமற்றத்தைக் குறிப்பிடும் வினைகள் ஆகும். 'மென்மை அல்லது இளகிய தன்மை இழந்து கடினத்தன்மை அடைதல்' என முதன்மைப் பொருள் தரும் *இறுகு* என்ற வினை 'முகம் இறுக்கமாக மாறுதல்' எனப் பொருண்மை நீட்சி அடையும்.

137. நீதிபதியின் தீர்ப்பு கேட்டவுடன் அவனது முகம் கவலையால் இறுகியது.

'நீர், எண்ணை, இரத்தம் முதலியன கெட்டித்தன்மை அடைதல்' எனப் பொருள்படும் *உறை* என்ற நிலைமாற்ற வினை 'பயத்தால் இயங்கமுடியாமல் விறைப்பாதல்' எனப் பொருண்மை நீட்சியுறும்.

138அ. அவள் இரவில் யாரோ அலறும் குரல் கேட்டு பயத்தால் உறைந்தாள்.

138ஆ. அவர் முகத்தில் பயமும் கவலையும் உறைந்து கிடந்தன.

மென்மையாகு, மிருதுவாகு, உருகு, இளகு, இழுகு, நெகிழ், குழை, கரை என்பன கடினமிழத்தல் நிலைமாற்றத்தைக் குறிப்பிடும் வினைகள் ஆகும். 'வெண்ணெய், பனிக்கட்டி, உலோகம் போன்றவை வெப்பத்தினால் இளகுதல்' எனப் பொருள்படும் *உருகு* என்ற நிலைமாற்றவினை 'மனம் நெகிழ்தல்' எனவும் 'ஒருவரை நினைத்து ஏங்குதல்' எனவும் பொருண்மை நீட்சி செய்யும்.

139. அவர் துன்பப்படுபவரைக் கண்டால் மனம் உருகிவிடுவார்.

140. அவன் அவளையே நினைத்து உருகினான்.

தார், மெழுகு, வெல்லம் போன்றவை வெப்பத்தால் கெட்டித்தன்மை இழத்தலைக் குறிப்பிடும் *இளகு* என்ற நிலைமாற்ற வினை 'மனம் நெகிழ்தல்' எனப் பொருண்மை நீட்சி பெறும்.

141. அவர் தன் மனைவி அழுவதைப் பார்த்து மனம் இளகினார்.

'இறுகி அல்லது கெட்டியாகக் காணப்படுவது தளர்தல்' எனப் பொருள்படும் நெகிழ் என்ற வினை 'அன்பு, பரிவு, இரக்கம் முதலியவற்றால் மனம் இளகுதல்' எனப் பொருண்மை நீட்சியடையும்.

142. வரண்டு கெட்டியாய் கிடந்த பூமியை உழுது நெகிழச்செய்தான்.

143. அவர்கள் செய்த பேருதவியைக் கண்டு அவன் மனம் நெகிழ்ந்தான்.

'திடப்பொருள் திரவப் பொருளில் கலத்தல்' அல்லது 'பனிக்கட்டி போன்றவை உருகுதல்' எனப் பொருள்படும் *கரை* என்ற நிலைமாற்ற வினை 'மனம் நெகிழ்தல் அல்லது மனம் உருகுதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

144. அவளது கண்ணீர் அவனது மனத்தைக் கரைத்தது.

5.5.4. நிறமாற்ற வினைகளின் பொருண்மை நீட்சி

வெளு, வெளிறு, கறு, சிவ, நரை என்பனவற்றை நிற மாற்ற பொருண்மைக் களத்தில் அடக்கலாம். 'வெண்மை நிறமாக மாறுதல்' என அடிப்படைப் பொருண்மையை உணர்த்தும் *வெளு* என்ற நிறமாற்ற வினை 'பயம் போன்றவற்றால் வெளிறுதல்' என உணர்ச்சிசார் பொருண்மை நீட்சி பெற்றும்.

145. பயத்தால் அவளது முகம் வெளுத்தது.

வெளிறு 'வெண்மை நிறமாக மாறுதல்' என அடிப்படைப் பொருண்மை தரவியலும் *வெளிறு* என்ற நிறமாற்ற வினை 'பயத்தால் இயல்பான நிறத்தை அல்லது முகக்களையை இழத்தல் என உணர்ச்சிசார் பொருண்மை நீட்சியடையும்.

146. அளவுக்கு மீறிய பயத்தால் அவளது முகம் வெளிறியது.

'கருமை நிறமாக மாறு' என அடிப்படையாகப் பொருள்படவியலும் *கறு* என்ற நிறமாற்ற வினை 'அவமானம், கடுங்கோபம் இவற்றால் முகம் ஒளி இழத்தல்' என உணர்ச்சிசார் பொருண்மை நீட்சியுறும்.

147. கோபத்தால் அவரது முகம் கறுத்தது.

'சிவப்பு நிறம் அடைதல்' என அடிப்படையாகப் பொருள்படும் *சிவ* என்ற வினை 'கோபத்தால் அல்லது வெட்கத்தால் முகம் சிவப்பாதல்' என உணர்ச்சிசார் பொருண்மை நீட்சி செய்யும்.

148. கோபத்தால் அவர் முகம் சிவந்தார்.

149. வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது.

5.5.5.துண்டு அல்லது துணுக்கு நிலைமாற்ற வினைகளின் பொருண்மை நீட்சி

பொருட்கள் துண்டுகளாக அல்லது துணுக்குகளாக நிலைமாற்றம் அடைவதைக் குறிப்பிடும் வினைகள் இங்கு குழுமப்பட்டுள்ளன. *ஒடி, நொடி, முறி, பிடு, அல்லு, அறு, உடை, நொறுங்கு, இடி, தகர், தவிடுபொடியாகு, பெயர், கீறு, பிள, கிழி, பிய், வெடி, பொட்டு, பொடி, அரை, நுணுங்கு, மசி, சதை, சிதை, நை, நசுங்கு* என்பன துண்டு-துணுக்கு நிலை மாற்றப் பொருண்மைக் களத்தின் கண்படும். *ஒடி, நொடி, முறி, பிடு, அல்லு, அறு* என்பது இரண்டாகப் பிரிவதைக் குறிப்பிடும். *உடை, நொறுங்கு, இடி, தகர்,*

தவிடுபொடியாகு பெயர் என்பன பொருள் இரண்டுக்கும் மேற்பட்ட துண்டுகளாகப் பிரிவதைக் குறிப்பிடும். *கீறு, பிள, கிழி, பிய்* என்பன நீட்டுவாக்கில் பிரிதல் என்பதைக் குறிப்பிடும். *வெடி, பொட்டு* என்பன சப்தத்துடன் துண்டுகளாகப் பிரிவதைக் குறிப்பிடும். *பொடி, இடி,அரை, நுணுங்கு, மசி, சதை, சிதை, நை, நசுங்கு* என்பன சிறு துகள்களாகப் பிரிவதைக் குறிப்பிடும்.

உடை என்பதற்கு க்ரியா 9 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது.

1. (விசையோடு தாக்கப்படுவதால் அல்லது அழுத்துவதால் ஒன்று) துண்டாதல்; பிளத்தல்
2. (கீழே விழுந்து) துண்டுதுண்டாதல்
3. (குழாய், நாளம் போன்றவற்றில் அழுத்தம் அதிகமாவதால்) விரிசல் ஏற்படுதல்
4. (ஆறு, குளம் போன்ற வற்றின் கரை) உடைதல்
5. (கட்சி, நிறுவனம் போன்ற அமைப்புகள்) பிளவுபடுதல்
6. (உடம்பிலுள்ள கட்டி பழுத்து) கண் திறத்தல்; பிளத்தல்
7. (குரல்) மாறுபடுதல்
8. (மனம்) தளர்தல்
9. (மறைக்கப்படிருந்தது) வெளிப்படுதல்

ஒன்று முதல் ஆறுவரையுள்ள அர்த்தங்கள் உடைதல் என்ற நிலை மாற்றத்தைக் குறிப்பிடுகின்றன. ஏழு முதல் ஒன்பது வரையுள்ள அர்த்தங்கள் இவற்றிலிருந்து வேறுபடுகின்றன.

'இரண்டாக முறிதல்' என முதன்மைப் பொருள் தரும் *ஒடி* என்ற நிலை மாற்ற வினை 'மனம் செயலிழத்தல்' என உணர்ச்சிசார் பொருண்மை நீட்சி செய்யும்.

150. அவளது மரணச் செய்தியால் அவன் மனம் ஒடிந்தான்.

'ஒடிதல்' எனப் பொருள்படும் *நொடி* என்ற நிலை மாற்ற வினை 'மனம் தளர்தல்' என உணர்ச்சி சார் பொருண்மை நீட்சி செய்யும்.

151. பெரியவர் மனைவி இறந்த செய்தி கேட்டு மிகவும் நொடிந்து விட்டார்.

'துண்டாதல் அல்லது பிளத்தல்' எனப் பொருள்படும் *உடை* என்ற நிலைமாற்ற வினை 'மனம் தளர்தல்' என உணர்ச்சிசார் பொருண்மை நீட்சிசெய்யும்.

'உடைந்து சிறுசிறு துண்டுகளாதல்' எனப் பொருள்படும் *நொறுங்கு* என்ற நிலை மாற்ற வினை 'மனம் துன்புறுதல்' என உணர்ச்சிசார் பொருண்மை நீட்சி செய்யும்.

152. அவன் அடுத்தடுத்த தோல்வியால் மனம் நொறுங்கினான்.

'உடைதல் அல்லது தகர்தல்' எனப் பொருள்படும் *இடி* என்ற வினை 'மனம் துன்புறுதல்' என உணர்ச்சிசார் பொருண்மை நீட்சி செய்யும்.

153. தேர்வில் தோற்றுவிட்டதால் அவன் மனம் இடிந்து உட்கார்ந்தான்.

'சிதறுதல் அல்லது உடைதல்' எனப் பொருள்படும் *தகர்* என்ற வினையும் 'மனம் துன்புறுதல்' என உணர்ச்சிசார் பொருண்மை நீட்சி செய்யும்.

154. தாங்கவியலாத பொருள் இழப்பால் அவன் மனம் தகர்ந்தது.

'துண்டாதல்' எனப் பொருள்படும் *பிள* சில் சூழல்களில் அல்லது சில சொற்களுடன் சேருந்துவருகையில் உருவகமாக உணர்வையோ உணர்ச்சியையோ உணர்த்திப் பொருண்மை நீட்சி செய்யும்.

155. அவன் அந்த கோபுரத்தின் உயரத்தைப் பார்த்து வாயைப் பிளந்தான் (அதிசயித்தான்)

156. அவன் பணம் என்றால் வாயைப் பிளப்பான்.

157. தலைவலி மண்டையைப் பிளக்கின்றது.

‘ஓசையோடு பிளத்தல்’ எனப் பொருள்படும் *வெடி* என்ற நிலைமாற்றவினை ‘கோபம், அழுகை, விம்மல் என்பன வேகத்துடன் வெளிப்படுதல்’, ‘கோபம், எரிச்சல் முதலியவற்றால் சீறுதல்’ என உணர்ச்சிசார் பொருண்மை நீட்சி செய்யும்.

158. அவளது கோபம் அழுகையாய் வெடித்தது.

159. அவர் கோபத்தால் வெடித்தார்.

நிலைமாற்றம்-உணர்ச்சி பொருண்மை நீட்சி

நிலைமாற்ற பொருண்மைக்கள வினைகள் உணர்ச்சி பொருண்மைக் களத்திற்குப் பொருண்மை நீட்சி செய்வது முக்கியமான பொருண்மை மாற்றமாகத் தெரிகின்றது. உணர்ச்சி அடைவது இயல்பு நிலையிலிருந்து உணர்ச்சி நிலைக்கு மாறும் மாற்றமாகக் கருதப்படுவதால் நிலை மாற்றவினைகள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வினைகளாகப் பொருண்மை நீட்சிசெய்வது இயல்பாகத் தெரிகின்றது. பின்வரும் அட்வணை இதைப் பட்டியலிடும்

நிலைமாற்றம்	**உணர்வு/உணர்ச்சி வெளிப்பாடு**
வாடு	முகம் களையும் பொலிவும் இழத்தல், துன்புறுதல்
காய், உலர், வரள்	தொண்டை ஈரத்தன்மை இழந்தது போன்ற உணர்வு
காய்	பசி (வயிறு காய்)
கொதி	கோபப்படு (மனங் கொதி)
தணி	தாகம் தணி, கோபம் தணி

குளிர்	மனங்குளிர்
ஆறு	சாந்தமாதல், பசி ஆறுதல்
இறுகு	முகம் இறுகு (துன்புறு)
கடினமாகு	மனம் கடினமாதல்
உறை	மனம் உறை
இளகு	மனம் இளகுதல்
நெகிழ்	மனம் நெகிழ்
சிவ	முகம் சிவ (வெட்கப்படு, கோபப்படு)
கறு	முகம் கறு (கோபப்படு)
வெளிறு	முகம் வெளிறு (பயப்படு)
ஒடி	மனம் ஒடி (மன வலுவிழத்தல்)
நொடி	மனம் நொடி (மனம் தளர்தல்)
உடை	மனம் உடை (மனம் தளர்தல்)
நொறுங்கு	மனம் நொறுங்கு (மனம் தளர்தல்)
வெடி	கோபம் போன்ற உணர்ச்சிகள் வேகத்துடன் வெளிப்படுதல்
தகர்	மனம் தகர்
பிள	கடுமையாக இருத்தல் (வெயில்மண்டையைப் பிளக்கின்றது, தலைவலி மண்டையைப் பிளக்கின்றது)

5.6 தாக்க வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்

இங்கு குழுமப்படும் வினைகளில் பொரும்பாலானவை நிலைமாற்றத்தையும் உட்படுத்தும். தாக்கம் நிலை மாற்றத்தை ஏற்படுவது இயற்கையே. எனவே பல தாக்க வினைகள் நிலை மாற்றத்தை வெளிப்படுத்துவை அறியலாம். பல தாக்கவினைகள் நிலைமாற்ற வினைகளின் செயப்படுபொருள் குன்றா வினைகளாக அமைகின்றன. இவ்வினைகள் நிலைமாற்றத்தை உட்படுத்தவியலும் என்ற காரணத்தால் இவைகளும் பங்கெடுப்பாளர் அமைப்பு அடிப்படையில் ஆயப்பட்டுள்ளன (Fillmore, Charles 1970; Levin 1993, 1999; Hovav and Levin 1998, 2002; Levin and Hovav, 19991, 1995, 2005; Goldberg, 2001; Rumshisky, 2008).

தாக்கவினகளைப் பற்றிய பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன (Dixon 1991, Dowty 1991, Fillmore 1968, 1970, 1977a, 1977b, Guerssel, et al. 1985, Jackendoff 1990, Pinker 1989, Richardson 1983, Ruhl 1972, 1989, Sehnert and Sharwood-Smith 1973, Snell-Hornby 1983, Styan 1984). இவையெல்லாம் பங்கெடுப்பாளர் அமைப்பு தொடர்பானவை. லெவின் (Levin 1993) ஆங்கில வினைகளை அவற்றின் பங்கெடுப்பாளர் மாற்றம் அடிப்படையில் வகைபாடு செய்கின்றார். அவர் தாக்கத்தால் தொடுதல் வினகைகள் (verbs of contact by impact) என்ற வகைப்பாட்டில் நான்கு துணை வகைகளை அடக்குகின்றார்: அடி வினைகள். (hit verbs), நையப்புடை வினைகள் (swat verbs), அறைவினைகள் (spank verbs), செயலியற்ற தாக்கத்தால் தொடுதல் வினைகள் (non-agentive verbs of contact by impact) (Levin 1993:148- 156).

இராசேந்திரன் (1978) தாக்க வினைகளைப் பின்வருமாறு வகைப்பாடு செய்கின்றார். அவர் இவ்வினைகளின் முதன்மைப் பொருண்மைகளை எடுத்துக்கொண்டு வகைப்பாடு செய்கின்றார். அவர் பயன்படுத்தப் படும் கருவிகள் அடிபடையில் பின்வரும் பொருண்மைகூறுகளை அடையாளம் காண்கின்றார்.

1. கையைப் பயன்படுதல்
2. கம்பு போன்ற கருவிகளைப் பயன்படுத்தல்
3. பல்லைப் பயன்படுத்தல்
4. காலைப் பயன்படுத்தல்
5. உடலைப் பயன்படுத்தல்
6. விரல்களைப் பயன்படுத்தல்
7. வெட்டுக்கருவிகளைப் பயன்படுத்தல்
8. நகங்களைப் பயன்படுத்தல்

விளைவுகள் அடிப்படையில் பின்வரும் பொருண்மைக் கூறுகளை அடையாளம் காண்கின்றார்.

வலித்தல், துளைத்தல், துண்டுகளாகவோ துகள்களாகவோ பிரிதல், பொடியாதல், நசுங்குதல், மசிதல், அமுங்குதல், சாறு வெளிவருதல், (வெட்டுவதால்) துண்டாதல், தேய்தல், உராய்தல், கலங்குதல், சிதறுதல், பிரிதல், நகர்தல், இழுக்கப்படுதல்

இத்தகைய பண்புக்கூறுகள் எல்லாம் ஒன்றுக்கொன்று தனிப்பட்டு நிற்கின்றது எனக் கூற இயலாவிட்டாலும் அவறின் கவனக்குவிப்பு இதுதான் என்று கூறவியலும்.

இங்கு நாம் இதில் உள்ள எல்லா வினைகளின் பொருண்மை நீட்சியையோ பொருண்மை மாற்றத்தையோ ஆராயப் போவதில்லை. அது இவ்வாய்விற்கு அப்பாற்பட்டதாக அமையும். இவ்வினகளில் காணப்படும் பொதுவான மற்றும் சிறப்பான

பொருண்மை நீட்சிகளையும் மாற்றங்களையும் கொண்டுவருவதுதான் இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

தாக்க வினகளின் பொருண்மை நீட்சியை அறிய *தாக்கு* என்ற வினையின் பொருண்மை நீட்சியை புரிந்துகொள்ள முயல்வோம். க்ரியா *தாக்கு* என்ற வினைக்கு ஏழு அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது. 'ஒருவரை அடித்தல், வெட்டுதல் போன்றவற்றால் பாதிப்பு ஏற்படுதல்' என்பது க்ரியாவில் தரப்பட்டுள்ள முதன்மைப் பொருளாகும். பின்வருவனவற்றை இதன் பொருண்மை நீட்சிகளாகக் கருத இயலும்.

160. அவர்கள் கத்தி கம்புகளுடன் வந்து அவனைத் தாக்கினர்.

5.6.1 *தாக்கு* என்ற வினையின் பொருண்மை நீட்சி

'கம்புகளாலும் பிற ஆயுதங்களாலும் தாக்குதல்' என மூலமுதன்மைவகைப் பொருண்மைதரும் *தாக்கு* என்பது குண்டு போன்ற ஆயுதங்களால் தாக்குதல், விலங்குகளும் பிற உயிரினங்களின் தாக்குதல், நோய்க்கிருமிகள், நோய்கள் தாக்குதல், புயல் போன்ற இயற்கை சக்திகள் தாக்குதல், விஷவாயு தாக்குதல் எனப் பொருண்மை நீட்சியடைகின்றது.

161. அவனை புலி தாக்கியது

162. தேனீக்கள் கூட்டமாக வந்து அவனைத் தாக்கியது

163. அவன் நோய் தாக்கியதால் மிகவும் துன்பப்படுகின்றான்.

164. சுனாமி தாக்கியதால் தமிழ்நாட்டில் பலர் உயிரிழந்தனர்.

165. பாதாள சாக்கடையில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள் விஷவாயு தாக்கி மடிந்தனர்.

‘மின்சாரம் பாய்தல்’ *தாக்கு* என்பதன் சிறப்புப் பொருண்மை நீட்சியாகும்.

166. அவனை மின்சாரம் தாக்கி அவன் மரணம் அடைந்தான்.

‘பேச்சு, எழுத்து இவற்றால் பழித்துக் கூறுதல்’ எனபது *தாக்கு* என்பதன் மற்றொரு சிறப்புப் பொருண்மை நீட்சியாகும்.

167. பத்திரிகைகள் அவனைத் தாக்கி எழுதின.

5.6.2. *உடை* என்பதன் பொருண்மை நீட்சி

உடை என்பதற்கு க்ரியாவின் அகராதி 13 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது.

1. (விசையுடன் தாக்கி, எறிந்து அல்லது முறித்து) துண்டாக்குதல்; பிளத்தல்
2. (தானியங்களை) குறுணை ஆக்குதல்
3. (முட்டை தேங்காய் போன்றவற்றின்) ஓட்டைப் பிளத்தல்
4. (கட்டியிருப்பதை அல்லது ஒட்டியிருப்பதை) பிரித்தல்; (மூடியாகப் பொருத்தப்பட்டிருப்பதை) திறத்தல்
5. (பூட்டைச் சாவியால் திறக்காமல்) தட்டி நீக்குதல்
6. (கடலையை) தோல் நீக்கிப் பருப்பு எடுத்தல்
7. (துவரை, பயறு, உளுந்து போன்றவற்றின்) பருப்பை இரண்டாக்குதல்
8. (கட்சி, நிறுவனம் போன்ற அமைப்புகளின்) ஒற்றுமையைக் குலைத்தல்
9. (போராட்டம் போன்றவற்றை) செயலிழக்கச் செய்தல்
10. (ரகசியம், உண்மை போன்றவற்றை) வெளியாக்குதல்
11. (மரபு, கோட்பாடு போன்றவற்றை) மீறுதல்; மாற்றுதல்
12. (புதிரை) விடுத்தல்

13. (கற்பனை, மாயை போன்றவற்றை) தர்கர்த்தல்

உடை என்பதன் எடுத்துக்காட்டான அர்த்தம் க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள முதல் அர்த்தமாகும், அதாவது 'விசையுடன் தாக்கி, எறிந்து அல்லது முறித்து துண்டாக்குதல் அல்லது பிளத்தல்' என்பதாகும். 2 முதல் 7 வரையுள்ள அர்த்தங்களை முதல் அர்த்தத்தின் நீட்சியாகக் கருதலாம். 8 முதல் 13 வரையுள்ள அர்த்தங்களை உருவக நீட்சியாகக் கருதலாம்.

5.7 புலனுணர்வு வினைகளின் பொருண்மை மாற்றமும் நீட்சியும்

5.7.1 புலனுணர்வு வினைகள் பற்றிய முன்னோடியான ஆய்வுகள்

உணர்வு தொடர்பான வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் ஆர்வமூட்டுவதாகும். ஆங்கிலம், பிரஞ்சு, ரொமானியன் ஆகிய மொழிகளில் உள்ள புலனுணர்வு வினைகளின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஆய்ந்த நெகு (Neague, 2013) "கருத்துருப் பல்பொருளொருமொழியம்" (conceptual polysemy) மற்றும் "படிப்படியான பல்பொருளொருமொழியம்" (gradual polysemy) என்பவைகளுக்கு இடையில் வேறுபாடு பாராட்டுகின்றார். அவர் முந்தையது வேறுபட்ட அனுபவங்களின் பொருண்மைக் களங்களுக்கு இடையில் நடக்கும் கருத்துருப் பொருத்தங்களைக் குறிப்பிடுகின்றது என்றும் அது உலகப் பொதுமையானது என்றும் ஏனென்றால் புலனுணர்வு வினகளின் பொருண்மை நீட்சிகளின் உடல்சார் அடிபடை காரணமாக அது ஒரே பண்பாட்டுப் பின்னணிக்குள் எல்லா மனிதர்களாலும் பங்கிடப்படவும் பொதுவானதாகவும் இருக்கின்றது என்கின்றார். மேலும் பிந்தைய வகை கருத்துருப் பல்பொருளொருமொழியின் வெளிப்படையான உருப்படுத்தம் ஆகும் மற்றும் அது மொழிச்சிறப்பானது (language-specific) அதாவது சொற்களின் பொருண்மைப் பொருளடக்கம் வேறுபட்டமொழிகளில் வேறுபடுகின்றது எனவும் விளக்குகின்றார்.

புலனுணர்வுப் பொருண்மைக் களம் பல்பொருமொழியத்தன்மை நிறைந்ததாகும்; ஏனென்றால் அது இயல்புப் புலனுணர்வை மட்டும் குறிப்பிடாமல் அறிவு, உய்த்துணர்தல், உணர்ச்சி போன்ற பிற அனுபவங்களின் பொருண்மைக்களங்களையும் குறிப்பிடுகின்றது. எனவே புலனறிவு, ஆசை, எண்ணுதல் மற்றும் உணர்ச்சி என்பன உருவக அடிப்படையில் புலனறிவுச் செயல்பாடுகளாக உருப்படுத்தம் செய்யப்படுகின்றது. முதலில் புலனறிவு என்பது புலனுணர்வாகும் என்பது செறிவானதாகும்/விளைவாக்கமானதாகும்; குறிப்பாகப் புரிந்துகொள்வது/அறிவது என்பது காண்பதாகும்; இதில் காண்பது என்பது மூலப் பொருண்மைக் களம் புரிந்துகொள்ளுதல் அல்லது அறிதல் என்பது இலக்குப் பொருண்மைக் களம்.

தனது தோல்விக்குப் பின்னால் உள்ள காரணங்களை அவனால் காணமுடிகின்றது. மனதை உடலாகக் கருதுவதைக் கருத்துரு உருவகமாக எடுத்துக்கொள்வதை நமது விவாதத்தின் பின்னணியாகக் கொண்டு நாம் ஸ்வீட்சரைப் (Sweetser 1990:29) பின்பற்றலாம். மனதின் சொற்றொகையை நமது உடலின் சொற்றொகையிலிருந்து உருவாக்கும் நமது போக்கால் ஊக்குவிக்கப்பட்டதாகும்; அதாவது நாம் அனுபவத்தின் ஒரு புலத்தை அதாவது மனதை வேறொன்றின் அடிப்படையில் (அதாவது உடலின் அடிப்படையில்) கருத்துவாக்கம் செய்கின்றோம். ஸ்வீட்சர் உருவகம் நமது வெளி அனுபவம் மற்றும் நமது அக உணர்ச்சிகரமான புலனறிவு நிலைகளுக்கு இடையிலுள்ள பொருத்தங்களால் ஊக்குவிக்கப்பட்டிருக்கக் கூடும் என்று கருதுகின்றார். மற்றொரு முக்கியமான கருத்து இந்த இரு பொருண்மைக் களங்களுக்கு இடையிலுள்ள பொருத்தங்கள் ஒரு திசைநோக்காகும்: உடல் அனுபவத்தின் சொற்றொகையிலிருந்து உடலியக்க நிலைகளின் சொற்றொகை; மறுதலையாக அல்ல.

இருப்பினும் வேறுபட்ட மொழிகளில் புலனுணர்வு வினைகளின் பல்பொருளொருமொழியம் மூலஎடுத்துக்காட்டு வகையான (prototypical) புலனுணர்வு மட்டுமன்றி அருவ உணர்வுகளையும் பௌதிக நீட்சிப் பொருண்மைகளையும் உட்படுத்தும்.

5.7.1.1 புலனுணர்வின் உருவகங்களில் ஸ்வீட்சரின் அணுகுமுறை

ஐரோப்பிய மொழிகளின் புலனுணர்வு வினகளின் பொருண்மை நீட்சிகளைப் புலனுணர்வு அடிப்படையிலும் வரலாற்று அடிப்படையிலும் ஆய்ந்த ஸ்வீட்சர் (Sweetser 1990) பின்வருமாறு வாதிடுகின்றார்:

> "உடல்சார் புலனுணர்வின் சொற்றொகை அகத்தன்னியல்புசார் மற்றும் அகநிலைசார் உணர்வுகளின் சொற்றொகையுடன் முறையான உருவகம்சார் தொடர்புகளைக் காட்டுகின்றது. இத்தொடர்புகள் யாவும் முறையற்ற/சீரற்ற பொருத்தங்கள் அல்ல; அவை உடல்சார் மற்றும் அகநிலைசார் உணர்வுகளின் இணையான அல்லது ஒப்புமையான பகுதிகளுக்கு இடையிலுள்ள அதிகம் ஊக்குவிக்கப்பட்ட தொடர்ச்சிகளாகும்." (Sweetser 1990:45).

பல வேறுபட்ட இந்தோ-ஐரோப்பிய மொழிகளை ஆய்ந்த அவர் பின்வரும் பொதுமைக் கருத்துக்களைத் தருகின்றார்: 'பார்த்தல்' வினகள் 'அறிவு' அல்லது 'மனப்பார்வை' இவற்றின் பொருண்மைக்கு நீட்சி செய்யப்படுகின்றது; 'கேட்டல்" வினைகள் 'அகம்சார் ஏற்பு' அல்லது 'கீழ்படிகை' இவற்றின் பொருண்மையுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. மேலும் 'சுவை' வினைகள் அகத்தன்னியல்புடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது மற்றும் அவை நமது தற்சார் விருப்பம் மற்றும் விருப்பமின்மை இவற்றுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. ஸ்வெட்சர் (Sweetser 1990) மற்றும் இப்ரடெக்-

ஆண்டுனாஞோ (Ibrretxe-Antuñano 1999, 2008) என்ற இருவரும் புலனுணர்வு வினைகள் பண்பாட்டால் வலுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக ஸ்வீட்சர் (Sweetser 1990;39) 'காணுதல்' வினைகள் ஐரோப்பிய மொழிகளில் முக்கியமாக அறிவுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது; ஏனென்றால் 'பார்வை என்பது உலகைப் பற்றிய நமது புறவயமான தரவின் முதன்மை மூலம் ஆகும்'. பழைய ஐரோப்பியப் பண்பாடுகளில் உடல்சார்ந்த மற்றும் ஆன்மா சார்ந்த பார்வை உடல்கூறுசார் 'குருடு' அகப் பார்வையின் மிக மேம்பட்ட நிலையின் தேவையான உடனியங்குகிற/ஒருங்கிணைந்த ஒன்றாகக் கருதப்பட்டது; மிகச்சிறந்த மூலமுதல்வகைப் புராண கதாபாத்திரங்களும் தீர்க்கதரிசிகளும் குருடர்களாவர். ஆனல் இந்தப் பண்படுகளில் ஆன்மாவின் பரப்பெல்லை புறவயமானதும் உண்மையானதும் ஆகும்; பொருத்தமான அகப்பார்வை உள்ளவர்களால் தான் பார்க்கவியலும். இருப்பினும் எவான்சும் வில்கின்சும் (Evans and Wilkins 2000) ஆஸ்டிரேலிய மொழிகள் (கிட்டத்தட்ட 60) *நினை* (think), *அறி* (know) போன்ற புலனறிசார் வினைகளைக் *கேள்* (hear) என்பதிலிருந்து எடுக்கின்றது; *பார்* என்பதிலிருந்து அல்ல. அவர்கள் "ஒரே பொருண்மைக் களம் அதன் உலகப்பொதுமையையும் அதன் ஒத்தறி பகுதியும் கொண்டிருக்கும்; ஒன்று இயற்கையின் பாற்பட்டது மற்றொன்று பண்பாட்டின் பாற்பட்டது" என்கின்றனர்.

ஆங்கிலப் புலனுணர்வு வினகளின் குறிப்பிட்ட நேர்வில் ஸ்வீட்சர் பின்வரும் உருவகப் பொருத்தங்களை நிறுவுகின்றார்:

பார்த்தல் -> அறிவு

கேட்டல் -> கவனம் -> கீழ்படிதல்

ருசித்தல் -> விருப்பம்/விருப்பமின்மை

தொடுதல் -> உணர்ச்சிகள்

முகர்தல் -> விருப்பமில்லாத உணர்ச்சிகள்

5.7.1.2 புலனறி வினகளின் பல்பொருளொருமொழியின் இப்ரடெக்-ஆண்டுனாஞோவின் மாதிரி

மற்றொரு புலனறி மொழியியலாரன இப்ரடெக்-ஆண்டுனாஞோ **(Ibrretxe-Antuñano 1999)** என்பவர் ஆங்கிலம், பாஸ்க், மற்றும் ஸ்பானிஷ் மொழிகளில் கவனக்குவிப்பு செய்த ஒருகால வகைப்பாட்டியல் ஆய்வில் புலனுணர்வு வினைகளின் பல்பொருளொருமொழியைப் பற்றி விவாதிக்கின்றார். ஸ்வீட்சரின் புலனுணர்வு வினைகளின் பொருண்மையியல் ஆய்வையும் புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதியையும் மதிப்புரை செய்த அவர் இரண்டு அணுகுமுறையின் குறைபாடுகளை அடையாளம் கண்டு கீழே விளக்கப்பட்டுள்ள அணுகுமுறையைப் பரிந்துரைக்கின்றார்.

புலனுணர்வின் பொண்மைக்களத்தின் உடல்சார் அடிப்படை

புலனறி மொழியியல் புலனுணர்வு வினைகளின் பொருண்மை நீட்சிகள் இவ்வினைகளின் உடல்சார் அடிப்படையில் கணிக்கப்படும் என்று கூறுகின்றது (Lakoff and Jonson 1980; Sweester 1990); ஆனால் புலனுணர்வின் களத்தில் உடல்சார் அடிப்படை சரியாக என்ன என்பதைப் பற்றி விவாதம் இல்லை. இப்ரடெக்-ஆண்டுனாஞோ ஐந்து அர்த்தங்களைப் (பார்த்தல், கேட்டல், சுவைத்தல், தொடுதல், முகர்தல்) புலனுனர்வு வினைகளின் பொருண்மை நீட்சிகளின் உடல்சார் அடிப்படை என்று அவர் நம்புகின்ற பண்புக்கூறுகளின் அடிப்படையில் பண்பாக்கம் செய்கின்றார். அவர் மூன்று அளகைகளின் அடிப்படையில் வேறுபட்ட அர்த்த முறைகளை பண்பாக்கம் செய்யும் முதன்மையான பண்புக்கூறுகளை வகைப்பாடு செய்கின்றார்: (1) புலனுணர்வில்

மூன்று முக்கிய தனிமங்களுக்கு இடையில் உள்ள உறவு: புலனுணர்பவர், புலனுணரப்பட்ட பொருள், மற்றும் புலனுணரும் செயல்; (2) உணர்வுகளின் பண்புக்கூறுகளின் பயன்பாடு; (3) பண்புக்கூறுகளுக்கு இடையிலுள்ள இடையுறவுகள்.

முதல் அளகை அடிப்படையில் அவர் நேரடித் தொடர்பு, அண்மை, அகம், எல்லைகள் மற்றும் இடம் என்பனவற்றை அடையாளம் காண்கின்றார். பார்த்தல், கேட்டல், முகர்தல் உணர்வுகளில் நேரடித் தொடர்பு எதிர்மறை மதிப்பைக் கொண்டிருக்கின்றது; ஆனால் தொடுதலுக்கும் சுவைத்தலுக்கும் நேர்மறை மதிப்பைக் கொண்டிருக்கின்றது. அண்மை பார்த்தலுக்கும் கேட்டலுக்கும் எதிர்மறை மதிப்பைக் கொண்டிருக்கின்றது மீதி மூன்று அர்தங்களுக்கும் நேர்மறை மதிப்பைக் கொண்டிருக்கின்றது. 'உட்படையான' என்ற பண்புக்கூறு கேட்டலுக்கும், முகர்தலுக்கும், சுவைத்தலுக்கும் நேர்மறை மதிப்பைக் கொண்டிருக்கின்றது மற்றும் பார்த்தலுக்கும் தொடுதலுக்கும் எதிர்மறை மதிப்பைக் கொண்டிருக்கின்றது. 'எல்லைகள்' என்ற பண்புக்கூறு உணரப்படும் போது உணர்பவர் உணரப்பட்ட பொருளால் கட்டாயப்படுத்தப்பட்ட எல்லைகளைப் பற்றி அறிவாரா என்பதைக் குறிப்பிடுகின்றது. எடுத்துக்காட்டாக நாம் எதையாவது தொடும்போது நாம் தொடும் பொருளின்/நபரின் இடத்தை ஆக்கிரமிக்கின்றோம். பார்த்தலுக்கும் கேட்டலுக்கும் பயன்படுத்தப்படுகின்ற 'இடம்' என்ற பண்புக்கூறு உணரப்படுகையில் உணர்பவர் உணரப்பட்ட பொருளின் சூழலைப் பற்றி அறிவாரா என்பதைக் குறிப்பிடுகின்றது. எடுத்துக்காட்டாகப் பார்த்தல் உணர்பவரிடமிருந்து உணரப்படும் பொருள் எவ்வளவு தூரத்திலிருக்கின்றது என்ற தகவலை நமக்குத் தெரிவிக்கின்றது. கேட்டலைப் பொறுத்தவரையில் ஒலிகள் வருகின்ற திசையை அடையாளங்காண இயலும்.

(2)-ஆவது அளகை மேலே கூறப்பட்ட உணர்வுகளில் கூறப்பட்ட பண்புக்கூறுகளின் விநியோகம் பற்றி குறிப்பிடுகின்றது. எடுத்துக்காட்டாக 'எல்லைகள்' மற்றும் 'இடம்' என்ற பண்புக்கூறுகளின் விநியோகம் முன்பு காட்டியபடி சில உணர்வுகளுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இறுதியாக (3)-ஆவது அளகை இப்பண்புக்கூறுகள் தூய்மையானதா அல்லது கலவைத்தன்மையானதா என்று குறிப்பிடும்; அதவது அவை பல பண்புக்கூறுகளின் இடையுறவுகளின் விளைவா என்று குறிப்பிடுகின்றது.

புலனுணர்வின் மூல பொருண்மைக்களத்தை பண்பாக்கம் செய்யும் பண்புக்கூறுகள் எவ்வாறு குறிப்பிட்ட புலனுணர்வு வினைகளால் சில பொருண்மைகள் வெளிப்படுத்தப்படுகிறது மற்றும் சில புலனுணர்வு வினைகளால் வெளிப்படுத்தப்படவில்லை என விளக்க இயலும். நீட்சி செய்யப்பட்ட பொருண்மைகளின் ஆக்கத்தில் எந்தத் தனிமங்கள் பங்கெடுக்கவியலும் என்று அவை காட்டவியலும். மூலப் பொருண்மைக் களத்திலிருந்து எந்த மற்றும் எவ்வளவு தகவல்கள் இலக்குப் பொருண்மைக்களத்திற்குத் தெரிந்தெடுக்கப்படுகின்றது மற்றும் இடமாற்றம் செய்யப்படுகின்றது என்பது தொடர்பாக இப்ரடெக்-ஆண்டுனாஞோ 'பண்புக்கூறு தேர்வு' என்ற கருதுகோளை முன்மொழிகின்றார்; இது உடல்சார்ந்திருக்கும் பொருண்மை நீட்சிகளைக் கணிக்கின்றது.

முந்தைய புலனறி மொழியியல் இலக்கியத்தில் பொருத்தச் செயல்பாங்கு மற்றும் புரிந்துகொள்ளுதல் 'மாறாத கொள்கை' (invariance principle) (Lakoff 1993) என்று அழைக்கப்படுகின்ற ஒன்றால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கருதப்பட்டது; இதன்படி "உருவகப் பொருண்மைகள் இலக்குப் பொருண்மைக் களத்தின் மரபுரிமை அமைப்புடன்

இசைவுள்ள வழியில் இலக்குப் பொருண்மைக் களத்தின் புலனறி இடவியலை பாதுகாக்கின்றது'. (Lakoff 1993; 215). ஓரளவுக்கு 'மாறாத கொள்கை' என்பதை நினைவுபடுத்தும் "பண்புத் தேர்வு" என்ற இந்தச் செயற்பாங்கு இலக்குப் பொருண்மைக் களத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பண்புகள் மூலப் பொருண்மைக்களத்தில் அடையாளங்காணப்படும் பண்புகளின் பகுதியாக இருக்கவேண்டும்; வேறு ஏதும் இல்லை என்று கூறுகின்றது.

பல்பொருளொருமொழியின் இணைப்பாக்கம்சார் அணுகுமுறை

புலனறி வினைகளின் பொருண்மை நீட்சி அவை நிர்ணயிக்கப்படும் மூலப் பொருண்மைக் களத்தின் உடல்சார் அடிப்படையால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன; உருவகம் மற்றும் பண்புத்தேர்வு செயற்பாங்குகளால் அமைப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன மற்றும் ஒரே வாக்கியத்தில் சேர்ந்து நிகழும் வேறுபட்ட தனிமங்களின் பொருண்மைப் பொருளடக்கத்தால் தூண்டப்படுகின்றது; சிறிதளவிலோ பேரளவிலோ. புலனறி வினைகளின் பல்பொருளொருமொழி அர்த்தங்களுக்கு இடையேயுள்ள உறவும் மற்றும் தொடரில்/கட்டுமானத்தில் அல்லது வாக்கியத்தில் சேர்ந்துவரும் தனிமங்களின் பொருண்மை பொருளடக்கமும் இப்ரடெக்-ஆண்டுனாஞோவில் (Ibrretxe-Antuñano 1999) விவாதிக்கப்படும் இறுதிச் சிக்கலாகும்.

அவரது கருத்து புலனறி பொருண்மையியலுடன் இயைபுடையது; இதில் சொற்பொருண்மைக்கும் (சொற்பொருண்மையியல்) வாக்கியப் பொருண்மைக்கும் (இணப்பாக்கப் பொருண்மையியல்) இடையிலுள்ள மரபு அடிப்படையிலான வேறுபாடு பயனுள்ள பிரிவாகக் கருதப்படவில்லை. புலனறி பொருண்மையியலார் சொற்களுக்கு நன்றாக நிறுவப்பட்ட பொருண்மை இருக்கையில் தரப்பட்ட எந்தச் சொல்லின் பொருண்மையும் நேரடியாக/உடனடியாக உருவாக்கப்படுகின்றது, அதாவது அது

பயன்படுத்தப்படும் சூழலில் உருவாக்கப்படுகின்றது. இணைப்பாக்கத்தின் கொள்கை "சொற்கள் நன்றாகப் பொதியப்பட்ட தன்னிறைவான அலகுகளில் பொருண்மையைக் கொண்டுள்ளது மற்றும் பொருண்மை உருவாக்கம் ஒரு தரப்பட்ட இலக்கண அமைப்புக்குள் பொருண்மையின் இச்சிறிய அலகுகளின் இணைப்பால் பெரிய அலகுகள் விளைகின்றது" (Evans and Green 2006:214).

புஸ்தெஜொவிஸ்கியின் எடுகோளான/ஊகமான சொல் அர்த்தங்களின் மைய குழுமம் தனிப்பட்ட சொல் அலகுகள் தொடர்களாகவும் பெருந்தொடர்களாகவும் பிறவற்றுடன் இணைக்கப்படுகையில் சொல் அர்தங்களின் பெரிய குழுமத்தால் ஆக்கப்படுகின்றது; வினைகளைப் பொறுத்தவரையில் பொருண்மை நீட்சிகள் வினை அதன் பங்கெடுப்பாளர்களுடன் இணைக்கப்படுகையில் பெறப்படுகின்றது.

புலனுணர்வு வினைகளின் உண்மையான அர்த்தங்களுக்கும் அவை உட்படுத்தப்படும் தொடரியல் உருவமைப்புக்கும் இடையிலுள்ள அண்மையான தொடர்பு நிக்குலாவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த ருமானியன் மொழியியலார் ருமானியனில் உள்ள புலனறி வினைகளின் பொருண்மைக் களத்தைப் பொருண்மையியல் அளவுகோலுடன் தொடரியல் அளவுகோலை இணைத்து ஆய்கின்றார்; அவர் புலனுணர்வு வினைகளின் பொருண்மைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கெடுப்பாளர்களின் பொருண்மை இயல்பைப் பொறுத்து அமைகின்றது என்று வாதிடுகின்றார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கெடுப்பாளர் வகைக்கும் புலனுணர்வின் வேறுபட்ட வகைகளுக்கும் இடையில் ஒரு தொடர்பை நிறுவுகின்றார்: உடல்சார்/புலனறிசார், நேரடியான/மறைமுகமான, பருமை/அருவம்.

இப்ரடெக்-ஆண்டுனாஞோ புலனுணர்வு வினைகளின் பொருண்மைக் களத்தில் பொருண்மைகள் வினைகள் அதன் பங்கெடுப்பாளர்களுடன் இணைவதால்

பெறப்படுகின்றது என்ற கருதுகோளைப் பரிசோதனை செய்கின்றார். அவர் *தொடு* என்ற வினை (1) நேரடித் தொடர்பு இருந்தால் ஒரு செயல் (*ஜாண் உணவைத் தொடவில்லை*); இரண்டு துணைச் செயல்களைக் கொண்ட சாதனை: செயலும் விளைவும் (எ.கா.*ஜாண் மேரியைத் தொட்டான்*). பிந்தைய எடுத்துக்காட்டில் *தொடு* என்ற வினை பொருண்மை மயக்கமுள்ளது: ஜாண் மேரியை உடலளவில் பாதித்தான் (எ.கா.அவளை நடுங்கச் செய்தான்) அல்லது உருவக நிலையில் பாதித்தான், அதாவது உணர்ச்சிவசப்படுத்தினான்.

5.7.2 புலனுணர்வு வினைகளின் பொருண்மைக்களப் பாகுபாடு

உணர்வு வினைகளை உணர்வு உறுப்புகளின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்பாடு செய்யலாம் (இராசேந்திரன், 1978, 2001:241-243).

1. கண் தொடர்பான உணர்வு வினைகள்: *பார், காண், நோக்கு, கவனி, பார்வையிடு, நோட்டமிடு, தரிசி, தெரி, தோன்று, தோற்றமளி, கண்ணில் படு, கண்ணுக்குப் புலப்படு, கண்ணுக்குப் புலனாகு, உதி, காட்சியளி, காட்சிகொடு, காட்சி தா, தோற்றம் தா, தரிசனம் கொடு, தரிசனம் தா, கண்வை, கண்போடு, கண்படு*
2. காது தொடர்பான உணர்வு வினைகள்: *கேள், கவனி, காதுகொடு, செவிசாய், செவிமடு, செவிகொடு, காதில்வாங்கு, காதால் கேள், ஒட்டுக்கேள், கேள்விப்படு, காதில் விழு, காதில் போடுக்கொள், காதுகொடுத்துக் கேள், காதில் ஏறு*
3. மூக்கு தொடர்பான உணர்வு வினைகள்: *மண, முகர், மோ, மோப்பம் பிடி, நாறு, நாற்றமடி, மணம்வீசு, மணம் கமழ், வாசனையடி, வாடையடி*

4. நாக்குத் தொடர்பான உணர்வு வினைகள்: *சுவை, ருசி, இனி, தித்தி, கச, கை, காறு, துவர், சுன, உப்புக்கரி, உப்புக்கை, புளி, எரி*

5. தோல் தொடர்பான/தொடு உணர்வு தொடர்பான உணர்வு வினைகள்: *சுடு, குளிர், விறை, ஊர், கடி, உறுத்து, எரி, காந்து*

5.7.2.1. கட்புலன் தொடர்பான வினைகளின் பொருண்மை நீட்சி

பார், காண், நோக்கு, கவனி, பார்வையிடு, நோட்டமிடு, தரிசி, தெரி, தோன்று, உதி, காட்சியளி, காட்சி கொடு, காட்சி தா, கண்வை, கண்போடு, கண்படு, திருஷ்டிவிழு என்பன கட்புலம் தொடர்பான வினைகளாகும். *பார்* என்பன தன்னிச்சையான புலனறிதலையும் தன்னிச்சையற்ற கட்புலனுணர்வையும் தன்னிச்சையற்ற கட்புலப்புலனுணர்வையும் குறிப்பிடும். இரண்டாவது முதலாவதன் பொருண்மை நீட்சி எனக் கருதலாம். *காண்* என்பது தன்னிச்சையற்ற கட்புலப்புலனுணர்வை மட்டுமே குறிப்பிடும்; தன்னிச்சையான கட்புலனுணர்வைக் குறிப்பிடாது. ஆங்கிலத்தி 'see' என்பதற்கும் 'look at' என்பதற்கும் உள்ள வேற்றுமைதான் தன்னிச்சையால் உணர்வதற்கும் தன்னிச்சையில்லாமல் உணர்வதற்கும் உள்ள வேறுபாடு ஆகும். *நோக்கு* என்பது தன்னிச்சையான கட்புலனுணர்வை மட்டும் குறிப்பிடும்.

168. அவள் அவனை வரும் வழியில் வைத்துப் பார்த்தாள்/கண்டாள்.

169. அவள் ஜன்னல் வழியாக அவனைப் பார்த்தாள்/*கண்டாள்.

170. அவள் அவனை உற்று நோக்கினாள்.

கவனி என்பது கட்புல உணவையும் செவிப்புலனுண்வையும் உட்படுத்தும்.

171. அவள் அங்கு நடப்பதைக் கவனித்தாள்.

172. அவன் அவர் பேசுவதக் கவனித்துக் கொண்டிருந்தான்.

பார்வையிடு என்பது பரிசீலனை செய்யும் நோக்குடன் பார்ப்பதைக் குறிப்பிடும். *நோட்டமிடு* என்பது ஒரு நோக்கத்துடன் பார்ப்பதைக் குறிப்பிடும். தரிசி என்பது இறைவனை அல்லது இறைவனடியார்களை வணங்கும் பொருட்டு சென்று பார்ப்பதைக் குறிப்பிடும்.

173, அவர் அந்த தொழிற்சாலையைப் பார்வையிட்டார்.

174. அந்தத் திருடன் அவள் பர்சை நோட்டமிட்டான்.

175. அவர் கோயிலுக்குள் சென்று சிவனை தரிசித்தார்.

தெரி என்பது 'கண்ணுக்குப் புலப்படுதல் அல்லது புலனாதல்' என்ற முதன்மை அர்த்தில் பயன்படுத்தப்படுகின்றது.

176. தூரத்தில் இருக்கின்ற கோபுரம் எனக்குத் தெரிகின்றது.

தோன்று என்பது 'பார்வைக்குத் தெரிதல்; காணப்படுதல்; காட்சி தருதல்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றது.

177. இரவில் வானத்தில் நட்சத்திரங்கள் தோன்றும்.

178. பார்ப்பதற்கு இருவரும் இரட்டைக் குழந்தைகள் போல் தோன்றுகின்றனர்.

உதி என்பது 'சூரியன், சந்திரன் போன்ற கிரகங்கள், நட்சத்திரங்கள், ஆகியவைக் கண்ணுக்குப் புலனாகும் படி வானத்தில் தோன்றுவதைக் குறிப்பிடும்.

179. சூரியன் கிழக்கே உதித்தது.

இது அறிவுசார் வினையாகப் பொருண்மை நீட்சி செய்யும்.

180. அவன் மனதில் ஒரு எண்ணம் உதித்தது.

காட்சியளி என்பது 'தோற்றம் தருதல்; தோன்று' என்ற பொருளில் பயன்படுத்தப் படுகின்றது.

181. அவர் எப்போதும் சிரித்த முகத்துடன் காட்சியளிப்பார்.

182. அவனது தவத்தை மெச்சி ஈசன் அவன் முன் காட்சியளித்தார்.

கண்வை என்பது 'ஒருவருக்கு அல்லது ஒன்றிற்கு தீங்கு அல்லது கேடு வரும் வகையில் பாத்தல்' எனப் பொருள்படும். *கண்போடு* என்பது *கண்வை* என்பதன் ஒருபொருள்பன்மொழியாகும்.

183. யாரோ கண்வைத்துவிட்டார்கள் போலும்; அவனுக்கு வியாபாரம் பெரும் நஷ்டம்.

கண்படு என்பது சிலருடைய பார்வையால் தீங்கு நேர்தல் எனப்பொருள்படும். *திருஷ்டிவிழு கண்படு* என்பதன் ஒருபொருள்பன்மொழியாகும்.

184. கண்பட்டிருக்கப்போகின்றது. குழந்தைக்கு திருஷ்டி சுற்றிப் போடு.

பார் என்பதற்கு க்ரியா 26 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது. இதில் மூலமுதன்மைவகைப் பொருள் 'கண்கள் மூலம் அறிதல் அல்லது உணர்தல்' என்பதாகும். 'திரைப்படம், திருவிழா போன்றவற்றை நடக்கும் இடத்துக்குச் சென்று காணுதல்', 'சுற்றுலா செல்வதன் மூலம் ஓர் இடத்தைச் சுற்றிப் பார்த்தல்; சுற்றிப் பார்க்கச் செல்லுதல்' 'ஓர் இடத்தைப் பார்வையிடுதல்' என்பனவை சூழல்கள் தரும் கூடுதல் தகவலாகும். அதாவது சூழலுடன் இணைந்து *பார்* என்ற வினை பெறும் கூடுதல் பொருண்மையாகும்.

1. அறிதல் அல்லது உணர்தல்

பார் என்பதன் முக்கியமான பொருண்மை நீட்சி 'அறி'. இங்கு 'கட்புலத்தால் அறிதல்' என்ற மூலமுதன்மைவகைப் பொருண்மையின் 'கட்புலத்தால்' என்றப் பொருண்மைப் பண்புக்கூறு பின் தள்ளப்பட்டு 'அறிதல்' என்பது கவனக்குவிப்பு செய்யப்படுகின்றது. 'படிப்பது, கேட்பது, சிந்திப்பது மூலம் ஒன்றை அறிந்துகொள்ளுதல்' எனக் க்ரியா இவ்வர்த்தத்தை விளக்குகின்றது.

185. அவள் தான் படித்துப் பார்த்தவற்றையெல்லாம் அவனிடம் கூறினாள்.

186. அவனுடைய கவிதைகளில் பாரதியாரின் தாக்கம் இருப்பதைப் பார்க்கலாம்.

2. சந்தித்தல்

பார் என்பதன் மற்றொரு முக்கியமான பொருண்மை நீட்சி 'சந்தித்தல்' என்பதாகும். 'பார்பது' என்பது 'சந்திப்பதாக' மாறுவது எதிர்பாக்கவியலும் பொருண்மை நீட்சியாகும்.

187. அமைச்சரைப் பார்ப்பதற்காக நிரூபர்கள் காத்திருக்கின்றார்கள்.

3. சோதித்து அறிதல்

இதுவும் *பார்* என்பதன் எதிர்பார்க்கவியலும் அல்லது ஊகிக்கவியலும் பொருண்மை நீட்சியாகும்.

188. கணக்குச் சரியாக உள்ளதா என்று பார்.

189. தனக்கு சர்க்கரைவியாதி இருப்பதை அறிய அவள் இரத்தப்பரிசோதனை செய்து பார்த்தாள்.

4. படித்தல்/படித்து அறிதல்

'படித்து அறிதல்' என்ற பொருண்மையும் எதிர்பார்க்கவியலும் அர்த்த நீட்சியாகும்.

190. அவன் அந்தச் சொல்லின் அர்த்தத்தை அறிய புத்தகத்தைப் பார்த்தான்.

5. பொருட்படுத்துதல்/முக்கியத்துவம் அளி

'பொருட்படுத்துதல்/முக்கியத்துவமளித்தல்' என்ற பொருண்மை நீட்சியும் முக்கியமான பொருண்மை நீட்சியாகும்

191. அவன் செவிடு என்பதைப் பார்க்காமல் அவள் அவனைக் காதலித்தாள்.

192. அவர்களின் குறைகளைப் பார்ப்பதைவிட நிறைகளைப் பார்.

6. மேற்கொள்ளுதல் அல்லது நடத்துதல்

'ஒரு செயல், தொழில் முதலியவற்றை மேற்கொள்ளுதல்' என க்ரியா விளக்கும் இபொருண்மை நீட்சியும் எதிர்பார்க்க அல்லது ஊகிக்க இயலும் பொருண்மை நீட்சியாகும். ஆங்கிலத்தில் look after' எனக் குறிப்பிடப்படும் வினையுடன் இப்பொருண்மை நீட்சி ஒப்பிடத் தகுந்ததாகும்.

193. வீட்டு வேலைகளை எல்லாம் அவன் மனைவி பார்த்துக்கொள்வாள்.

194.தன் தந்தைக்குப் பின் அவன் தான் வியாபாரத்தைப் பார்த்துக்கொள்கின்றான்.

7. யோசித்தல் அல்லது எண்ணுதல்

'யோசி, எண்ணு' என்பதும் *பார்* என்பதன் குறிப்பிடத்தகுந்த பொருண்மை நீட்சியாகும்.

193. ஆகஸ்டில் என் மகளின் கல்யாணத்தை நடத்தலாமா என்று பார்க்கின்றேன்

8. கருதுதல்/எடுத்துக்கொள்ளுதல்/கணக்கிலெடுத்தல்

பார் என்பது பின்வருமாறு 'கருத்துதல்', 'எடுத்துக்கொள்ளுதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

194. இப்போது இதனால் விளையும் நன்மைகளைப் பார்ப்போம். பின்னர் தீமைகளைப் பார்ப்போம்.

195. அவன் இரவுபகல் என்று பார்க்காமல் கடுமையாக உழைத்தான்.

9. நேரிடுதல்/எதிர்கொள்ளுதல்

'நேரிடுதல்/எதிர்கொள்ளுதல்' என்பதும் *பார்* என்பதன் குறிப்பிடத்தகுந்த பொருண்மை நீட்சியகும்.

196. அவர் இதுவரை ஐந்து தேர்தல்களைப் பார்த்துவிட்டார்.

197. நாம் வாழ்க்கையில் பல அனுபவங்களைப் பார்க்கப்போகின்றோம்.

10. கேட்டல்

'பார்' என்பதன் பொருண்மை 'உணர்தல்' எனச் சுருங்கி 'கேட்டல்' என நீட்சியடைகின்றது.

198. அவன் அவரைப் பற்றிக் கூறியதைப் பார்த்து நான் அதிசயித்தேன்.

5.7.2.2. செவிப்புலன் தொடர்பான வினைகளின் பொருண்மை நீட்சி

கேள், கவனி, காதுகொடு, செவிசாய், செவிமடு, செவிகொடு, காதில்வாங்கு, காதால் கேள், கேள்விப்படு, காதில் விழு, காதில் போடுக்கொள், காதுகொடுத்துக் கேள், காதில் ஏறு என்பன செவிப்புலன் தொடர்பான வினைகளாகும்.

கேள் என்பது தன்னிச்சையான செவிப்புலனுணர்வையும் (listen) தன்னிச்சையல்லாத செவிப்புலனுணர்வையும் (hear) குறிப்பிடும். *கவனி* என்பது கட்புலனையும் செவிப்புலனையும் உட்படுத்தி அறிதல் எனப் பொருள்படும்.

199. அவர் திக்கித் திக்கிப் பேசுவதைக் கவனித்தேன்.

200. அவள் பாடிக்கொண்டே நடப்பதை அவன் கவனித்தான்.

காதுகொடு, செவிசாய் என்பன ஒருவர் கூறுவதை அங்கீகரிக்கும் வகையில் கேட்டல் எனப் பொருள்படும்.

201. போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்க மறுக்கின்றது.

202. அவன் தன்னுடைய ஆசிரியரின் உபதேசங்களுக்குக் காதுகொடுத்தான்.

செவிமடு என்பது உயர் வழக்காக 'கேட்டல்' எனப் பொருள்படும்.

203. அவர் அந்த இனியப் பாடலுக்குச் செவிமடுத்தார்.

காதில் வாங்கு என்பது 'ஒருவர் சொல்வதைக் கவனமாய்க் கேட்டல்' எனப் பொருள்படும்.

204. அவன் அவர் கூறுவதை நன்றாகக் காதில் வாங்கிக்கொண்டு செயல்பட்டான்.

205. அவன் தன் மனைவி கூறுவதைக் காதில் வாங்காமல் போய்விட்டான்.

காதால் கேள் என்பது 'கேட்ட ஒன்றை அழுத்தமாகக் கூறுகையில் நேரடியாகக் கேட்டல்' எனப் பொருள்படும்.

206. அவள் என்னைப் பற்றி தரக்குறைவாகப் பேசியதை நானே காதால் கேட்டேன்.

ஒட்டுக்கேள் என்பது 'பிறர் பேசுவதை மறைந்திருந்து கேட்டல்' எனப் பொருள்படும்.

207. அவன் அடுத்த அறையில் இருந்துகொண்டு அவர்கள் பேசுவதை ஒட்டுக்கேட்டன்

காதில் விழு என்பது 'காதால் கேட்பதன் மூலம் அறியவருதல்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றது.

208. அவள் என்னைப் பற்றி கூறிய புகார்கள் என் காதில் விழுந்தது.

கேள்விப்படு என்பது 'ஒரு செய்தியை நேரடியாக அல்லாமல் பிறர் சொல்லக் கேட்டறிதல் அல்லது தெரிந்துகொள்ளுதல்' என்று பொருள்படும்.

209. அவன் தேர்வில் தோற்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேன்.

210. நான் கேள்விப்பட்ட செய்தி எல்லாம் உண்மையா என்று தெரியவில்லை.

காதில் போட்டுக்கொள் என்பது 'கேட்டு உரிய கவனம் செலுத்துதல்' என்ற பொருளில் வரும். இது பெரும்பாலும் எதிர்மறை வடிவில் வரும்.

211.அவர் தன் மனைவி கூறியதைக் காதில் போட்டுக்கொள்ளாமல் செயல்பட்டார்.

காதுகொடுத்துக் கேள் என்பது 'கவனத்துடன் கேட்டல்' எனப் பொருள்படும்.

212. அவர் தன் நண்பர் கூறிய அறிவுரைகளைக் காதுகொடுத்துக் கேட்டார்.

காதில் ஏறு என்பது 'ஒருவர் சொல்வது மனத்தில் பதிதல்' என்ற பொருள் தரும்.

213. அவன் ஒரு தீர்மானம் எடுத்துவிட்டான். இனி என்ன சொன்னாலும் காதில் ஏறாது.

5.7.2.2.1. *கேள்* என்பதன் பொருண்மை நீட்சி

கேள் என்பதற்கு க்ரியா 15 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது. க்ரியா *கேள்* என்பதற்கு 'வினவுதல்; கேள்வி எழுப்புதல்' என்ற பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முதலாவது அர்த்தமாகப் பட்டியலிட்டுள்ளது. 'செவிப்புலனால் உணர்தல்' என்பதை ஏழாவது அர்த்தமாகப் பட்டியலிட்டுள்ளது. நம்மைப் பொறுத்தவரை *கேள்* என்பதன் மூலம்முதல்வகைப் பொருண்மையாக 'செவிப்புலனால் உணர்தல்' என்பது எடுக்கப்பட்டு பிற அர்த்தங்கள் அதன் நீட்சியாகத் தரப்பட்டுள்ளது.

214. அவன் தன் குழந்தை மழலைப் பேசுவதைக் கேட்டு மகிழ்ந்தான்.

215. அவன் போகிற வழியில் ரேடியோவிலிருந்து வந்த பாட்டைக் கேட்டான்.

1.செவிப்புலனால் உணரப்படுதல்

முந்தையது தன்னிச்சையால் காதால் உணர்வதைக் குறிப்பிடும். இரண்டாவது பொருள் தன்னிச்சையின்றி செவிப்புலனால் உணரப்படுவதைக் குறிப்பிடும். முதலாவதை 'hear' என்றும் இரண்டாவதை 'listen' என்றும் ஆங்கிலத்தில் குறிப்பிடலாம்.

216. அவர்கள் ஆசிரியர் கூறுவதை உன்னிப்பாக் கேட்டார்கள்.

217. அவன் பாட்டு சப்தம் கேட்டு உணர்ந்தான்.

2.காதில் வாங்கிக் கருதில் கொள்ளுதல்

கேள் என்பது 'ஒருவர்கூறுவதைக் அல்லது ஒருவரது அறிவுரையைக் காதில் வாங்கிக் கருத்தில் கொள்ளுதல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

218. அவன் அவர் சொல்வதைக் கேட்டு நடந்தான்.

3.மனம் இணங்குதல்

கேள் என்பது சில சூழல்களில் குறிப்பாக எதிமறையில் ஒன்றைச் செயவதற்கு மனம் இணங்குதல் அல்லது ஒப்புதல் எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

219. அவளைத் தண்டிப்பதற்கு அவனுக்கு மனம் கேட்கவில்லை.

4.கேள்விப்படுதல்

சில சூழல்களில் கேள் என்பது 'கேள்விப்படுதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

220. அவருடைய தயாள குணம் பற்றி கேட்டிருக்கின்றேன்.

5. வினவுதல்

இது *கேள்* என்பதன் குறிப்பிடத் தகுந்த பொருண்மை நீட்சியாகும். சில உலக மொழிகளிலும் இத்தகைய பொருண்மை நீட்சியைக் காணலாம்.

221. ஆசிரியர் அவனிடம் கேள்வி கேட்டார்.

222. அவன் அவரிடம் அவரது முகவரியைக் கேட்டான்.

5. தருமாறு தெரிவித்தல் அல்லது கோருதல்

கேள் சில சூழல்களில் 'தருமாறு தெரிவித்தல் அல்லது கோருதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

223. என் மனைவி என்னிடம் எதையும் கேட்டதில்லை.

224. அவர்கள் ஊதிய உயர்வு கேட்டுப் போராடுகின்றார்கள்.

6. அனுமதி கோருதல்

சில சூழல்களில் கேள் 'அனுமதி கோருதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

225. அவன் தன்னைக் கேட்காமல் போனதை அவர் விரும்பவில்லை.

7. படித்தல், கற்றல்

கேள் அருகிய வழக்காக 'கற்றல், படித்தல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

226. அவன் தன் ஆசிரியரிடம் பாடம் கேட்டான்.

8. ஜாதக பலனை தெரிந்துகொள்ளுதல்

கேள் என்பது சில சூழலில் 'ஜாதகபலனைஅறிதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

227. அவர் ஜோசியரிடம் தன் ஜாதக பலனைக் கேட்டார்.

5.7.2.3. முகர்புலன் தொடர்பான வினைகளின் பொருண்மை நீட்சி'

மண, மணத்து, முகர், மோ, மோப்பம் பிடி, நாறு, நாற்றமடி, மணம்வீசு, மணம் கமழ், வாசனையடி, வாடையடி என்பன இதில் குழுமப்படும்.

மோப்பம் பிடி என்பதன் பொருண்மை நீட்சி

மோப்பம்பிடி என்பது 'மூக்கால் வாசனையை உணர்தல்' என அடிப்படையில் பொருண்மை தரும். இது 'சந்தேகப்படு', 'ஊகி', 'கண்டுபிடி' எனப் பொருண்மை நீட்சி அடையும்.

228. நாய் மோப்பம்பிடித்துக் கொண்டு உணவகத்தின் முன் உட்கார்ந்திருந்து.

229. அவன் அந்த நடவடிக்கையில் ஏய்ப்பை மோப்பம் பிடித்தான்.

230. அவள் இங்கிருந்து கொண்டே அங்கு நடப்பதை மோம்பம் பிடித்தாள்

5.7.2.4. நா உணர்வு தொடர்பான வினைகளின் பொருண்மை நீட்சி

சுவை, ருசி, இனி, தித்தி, கச, கை, காறு, துவர், சுன, உப்புக்கரி, உப்புக்கை, புளி, எரி என்பன நா உணர்வு தொடர்பான வினகளாகக் குழுமலாம்.

***சுவை* என்பதன் பொருண்மை நீட்சி**

சுவை என்பது 'உணவுப் பொருட்களின் சுவையை நாவால் உணர்தல்' என அடிப்படையில் பொருள்தரும். பின்வருவன இதன் பொருண்மை நீட்சிகளாகும்.

231. அவன் தின்பண்டத்தைச் சுவைத்து உண்டான்.

அனுபவித்தல் அல்லது இரசித்தல்

'அனுபவித்தல் அல்லது இரசித்தல்' என்பது *சுவை* என்பதன் ஊகிக்க இயலும் அல்லது எதிபார்க்கவியலும் பொருண்மை நீட்சியாகும்.

232. அவன் பாரதியாரின் கவிதையைப் படித்துச் சுவைத்தான்.

5.7.2.5. தொடு உணர்வு தொடர்பான வினைகளின் பொருண்மை நீட்சி

தொடு, சுடு, குளிர், விறை, ஊர், கடி, உறுத்து, எரி, காந்து என்பவைகளைத் தொடு உணர்வை அல்லது தோல் உணர்வைக் குறிப்பிடும் வினைகளாகக் குழும இயலும்.

***தொடு* என்பதன் பொருண்மை நீட்சி**

'கைபடுவதன் மூலம் உணர்தல்' என்பது தான் *தொடு* என்பதன் அடிப்படைப் பொருள் என எடுத்துக்கொள்ளலாம்.

233. அவர் பாதங்களைத் தொட்டு வணங்கினான்.

234. அவள் அவன் தன்னைத் தொடுவதை விரும்பவில்லை.

மனதை பாதித்தல்

தொடு சில சூழலில் 'மனதைப் பாதி' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

235. அவர் கூறியது அவன் மனதைத் தொட்டது.

அடைதல், எய்தல்

சில சுழல்களில் *தொடு* என்பது 'அடைதல், எய்துதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

அவர் தனது பதவி உயர்வின் உச்சத்தைத் தொட்டார்.

கையாளுதல் நடத்துதல்

'கையாளுதல் நடத்துதல்' எனச் சில சூழல்களில் *தொடு* என்பது பொருண்மை நீட்சி செய்யும்.

236. அந்த வியாபாரத்தைத் தொடாதே.

எட்டுதல்

சில சூழல்களில் *தொடு* எனபது 'எட்டுதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

237. இந்தியாவின் மக்கள் தொகை இன்னும் சில ஆண்டுகளில் நூறு கோடியைத் தொட்டுவிடும்

பயன்படுத்துதல்

தொடு குறிப்பாக எதிமறையில் 'பயன்படுத்துதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

238. அவன் அவளது காரைத் தொடுவதில்லை.

உண்ணுதல்

தொடு பெரும்பாலும் எதிர்மறையில் 'உண்ணுதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

239. அவன் உணவைத் தொட்டு பல நாட்கள் ஆகின்றன.

240. மாடு பல நாட்களாகப் பருத்திகொட்டையைத் தொடவில்லை.

5.7.2.6. புலனுணர்வு வினைப் பொருண்மைகள் அறிவுசார்ந்த பொருண்மைக் களத்துக்கு விரிதல்

உணர்வுப் பொருண்மைக் களத்தைச் சார்ந்த வினைகளின் பொருண்மைகள் அறிவுப் பொருண்மைக் களத்திற்கு பொருண்மை நீட்சி செய்வது குறிப்பிடத் தகுந்த பொருண்மை நீட்சியாகும். நெகு (Neagu, 2013) புலனறி மொழியியல் பார்வையில் ஆங்கிலம், பிரஞ்சு, ரொமானியன் ஆகிய மொழிகளில் புலனுணர்வுப் பொருண்மைக் களத்திலிருந்து மூலமுதன்மைவகை வினைகளின் ஒருசொல்பல்பொருள்சார் பொருண்மைகளை விளக்குவது இங்கு கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

பார் என்ற வினை 'படித்து அறிதல்', 'யோசித்தல் அல்லது எண்ணுதல்' எனப் பொருண்மை நீட்சி செய்வதைப் பார்த்தோம். *காண்* என்ற வினை 'கண்டுபிடித்தல்' என பின்வருமாறு பொருண்மை நீட்சி செய்யும்.

241. அவர்கள் இறுதியில் தங்கள் பிரச்சனைக்கு தீர்வு கண்டார்கள்.

காண் என்ற வினை பின்வருமாறு 'அறிதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

242. அவள் தன் குடித்துவிட்டு வந்ததைக் கண்டு மனம் நொடிந்தாள்.

காண் என்ற வினை பின்வரும் எடுத்துக்காட்டில் வருவதுபோல் 'தெரிந்துகொள்ளுதல்' எனப் பொருண்மை நீட்சிசெய்யும்.

243. அந்த புத்தகத்தில் பல விஷயங்களைக் காணலாம்.

காண் என்பது சில சூழல்களில் 'கற்பனை செய்' எனப் பொருண்மை நீட்சிசெயும்.

244. நான் அவனைக் கடவுளாகக் கண்டேன்.

காண் என்பது சில சூழல்களில் 'சிந்தி' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

ஒவ்வொருவரும் அவர்கள் அனுபவத்தின் அடிப்படையில் ஒன்றைக் காண்பார்கள்.

நோக்கு என்பது பின்வரும் எடுத்துக்காட்டில் 'புரிதல்/ஆய்தல்' எனப் பொருண்மை நீட்சிசெய்யும்.

245. ஆசிரியர் கூறுவதை நோக்கும் போதுதான் எனக்கு அது தவறெனத் தெரிந்தது.

நோட்டம்மிடு, நோட்டம்போடு என்பன சில சூழல்களில் 'ஆலோசி' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

246. அவன் அங்கிருந்து எவ்வாறு வெளியேறுவது என்று நோட்டமிட்டான்.

தெரி என்ற வினை பின்வரும் எடுத்துக்காட்டில் வருவது போல் 'அறிதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

247. அவன் அவர் நல்லவர் என தெரிந்துகொண்டான்.

248. அவனுக்குத் தமிழ் தெரியும்.

249. எனக்கு அவரைத் தெரியும்.

தோன்று என்பது 'எண்ணம் அல்லது சிந்தனை ஏற்படு' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

250. அதைப் படிக்கையில் எனக்குப் பல சிந்தனைகள் மனத்தில் தோன்றியது.

உதி என்பதும் 'எண்ணம் அல்லது சிந்தனை ஏற்படு' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

251. அவர் போச்சைக் கேட்கையில் எனக்குப் பல சிந்தனைகள் மனத்தில் உதித்து.

கேள் என்பது சில சூழல்களில் 'அறிதல்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

252. அவள் இறந்துவிட்டாள் எனக் கேட்டு வருந்தினேன்.

கேள்விப்படு என்பது 'தெரிந்துகொள்' எனப் பொருண்மை நீட்சி செய்யும்.

253. அவர் அங்கு வந்தார் என்று கேள்விப்பட்டேன்.

மோப்பம்பிடி என்பது 'ஊகி', 'தெரிந்துகொள்' எனப் பொருண்மை நீட்சிசெய்யும்.

254. போலீஸ் அந்த வீட்டில் கொலையாளி இருப்பதை மோப்பம் பிடித்தனர்.

சுவை, ருசி என்பன என்பது 'ரசி' எனப் பொருண்மை நீட்சிசெய்யும்.

255. அவன் பாரதியார் பாடலைச் சுவைத்துப்/ருசித்துப் படித்தான்.

பின்வரும் பட்டியல் புலனுணர்வு வினகள் அறிவுசார் பொருண்மைக் களத்திற்கு பொருண்மை நீட்சி செய்வதைக் காட்டும்.

வினை	**பொருண்மை நீட்சி**
பார்	படித்து அறிதல், எண்ணுதல், யோசித்தல்
காண்	கண்டுபிடித்தல், அறிதல், தெரிந்துகொள்ளுதல், கற்பனை செய்தல், சிந்தித்தல்
நோக்கு	புரிதல், ஆய்தல்
நோட்டமிடு, நோட்டம்போடு	ஆலோசி
தெரி	அறிதல்
தோன்று	எண்ணம் அல்லது சிந்தனை ஏற்படு
உதி	எண்ணம் அல்லது சிந்தனை ஏற்படு
கேள்	அறிதல்
கேள்விப்படு	தெரிந்துகொள்
மோப்பம்பிடி	ஊகி, தெரிந்துகொள்
சுவை, ருசி	ரசி

5.8. முடிவுரை

பல்பொருண்மை அல்லது பல்பொருள் ஒருமொழியம் மொழிமைப்பில் விலக்க இயலாத சிக்கலும் தேவையும் ஆகும். ஒரு சொல் ஒரு பொருண்மையைக் குறிப்பிடும் படி ஒரு மொழி செயலாற்ற இயலாது. மொழி விளைவாக்கம் உள்ளதாகும். குறைந்த எண்ணிக்கையிலான சொற்களைக் கொண்டு எண்ணிறந்த எண்ணிக்கையிலான

பொருண்மைகளை வெளிப்படுத்துவது அதன் விளைவாக்கத் தன்மையாகும். பெயர்களைக் காட்டிலும் வினைகள் அதிகமான பல்பொருண்மையைக் கொண்டிருக்கின்றன. இரண்டாயிரத்திற்கும் குறைவான எண்ணிக்கையிலான வினைகளைப் பயன்படுத்தித்தான் தமிழ் செயல்தொடர்பான கருத்துருக்களை வெளிப்படுத்தி வருகின்றது. பொருண்மை நீட்சி அல்லது பொருண்மை மாற்றத்தின் விளைவுதான் பல்பொருண்மை. இவ்வியலில் புலனறிக் கோட்பாட்டையும் பொருட்புலப் பொருண்மையியல் கோட்பாட்டைப் பயன்படுத்தித் தமிழ் வினைகளின் பொருண்மை நீட்சியையும் பொருண்மை மாற்றத்தையும் விளக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. வினைகளை சலன வினைகள் (இடமாற்ற வினைகள்), கைமாற்ற வினைகள், நிலை மாற்ற வினைகள், தாக்க வினைகள், புலனனுணர்வு வினைகள், உணர்ச்சி வினைகள், அறிவுசார் வினைகள், கருத்துப்பரிமாற்ற வினைகள் எனப் பகுக்கப்பட்டு அவற்றில் வரும் வினைகள் பொருண்மை நீட்சி செய்வது பற்றி ஆயப்பட்டது. இவ்வித ஆய்வு, வினைகள் ஒரு பொருண்மைப் புலத்திலிருந்து மற்றொரு பொருண்மைப் புலத்திற்கு பொருண்மை நீட்சி செய்வத்தை உணர்த்தியது. பிற மொழிகளில் வினைகளின் பொருண்மை நீட்சி தொடர்பான ஆய்வுகளுடன் ஒப்பிடுப் பார்க்கையில் இவ்விதமான பொருண்மை நீட்சி ஒரு பொதுத்தன்மையை உணர்த்தி நிற்பதை அறிய முடிகின்றது.

இயல் 6

ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டு அடிப்படையில் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்

6.1 அறிமுகம்

கணினியின் வரவால் சொற்பொருண்மையியல் புதிய பரிமாணங்களை எய்தியுள்ளது. கணினியைப் பயன்படுத்திச் சொற்பொருண்மை ஆய்வை மேற்கொள்ளும் செயல்பாடுகள் கணினிச் சொற்பொருண்மையியல் (computational lexical semantics) என்ற புதிய பாடக்கிளை உருவாகும் அளவுக்கு வளர்ந்துள்ளது. சொற்பொருண்மை ஆய்வு என்றால் கணினியைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆய்வு என்று கூறுகிற அளவிற்கு இக்கிளை இயற்கை மொழி ஆய்வில் (Natural Language Processing) கால் ஊன்றியுள்ளது. சொற்பொருண்மையியல் மொழியியலில் பரந்த ஒரு கிளையாக வளர்ந்துள்ளது. கணினிச் சொற்பொருண்மையியல் இவ்வாய்வுக்கு அடிப்படைக் கோட்பாடாய் அமைகின்றது.

சொற்களைப் பற்றிக் கூடுதலாக விளக்கம் தருவது அகராதிகளாகும். இவ்வகராதிகள் சொற்களின் உச்சரிப்பு, இலக்கணக்கூறு இவற்றைத் தருவதோடுச் சூழல் அடிப்படையில் சொற்களின் பல்பொருண்மையை (polysemy) (ஒருசொல்பல்பொருளை) எடுத்துக்காட்டுகளுடன் தருகின்றன. இதற்கு அகராதிகள் சொற்களுக்கிடையிலான பொருண்மை உறவுகளைப் பயன்படுத்துகின்றன. இப்பொருண்மை உறவுகள் ஒருபொருள்பன்மொழியம் (synonymy), உள்ளடங்கு-உள்ளடக்கு மொழியம் (hyponymy-hyperonymy), பகுதி-முழுமை மொழியம் (meronymy-holonymy) போன்றனவாகும். எடுத்துக்காட்டாக அகராதிகள் *நூல்* என்பதற்குப் *புத்தகம்* என்ற அதன் ஒருபொருள்பன்மொழியை விளக்கமாக கொள்ளலாம்; *நாய்* என்பதற்கு (அது ஒரு)

விலங்கு என்ற உள்ளடக்கு மொழியைத் (hyperonymy) தரலாம்; தலை என்பதற்கு (அது ஒரு) உடல் உறுப்பு என்ற பகுதி-முழுமை (meronymy) உறவை வெளிப்படுத்தலாம். இவ்வகராதிகள் ஒரு சொல்லின் பொருண்மையைப் பயன்பாட்டுச் சூழல்கள் அடிப்படையில் பல சிறு பொருண்மைகளாகப் பிரித்துப் பட்டியலிடும். இப்பொருண்மைகளின் பட்டியலை (பொருண்மை நீட்சியை) அச்சொல்லைப் பிற சொற்களுடன் தொடர்புபடுத்தியும் சூழலுடன் தொடர்புபடுத்தியும் ஆக்கலாம் அல்லது அறிந்து கொள்ளலாம் என்னும் கோட்பாடு அடிப்படையில் இவ்வாய்வு அமைகின்றது. குறிப்பாக வினைகளின் பல்பொருண்மையை ஆக்கமாகப் பெறுவதே இவ்வியலின் நோக்கமாகும்.

6.2 .ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு

ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு பற்றிப் புஸ்தெஜோவிஸ்கியின் நூலில் (Pustejovsky, 1995) கூறப்படுள்ள செய்திகள் இங்குச் சுருக்கமாகக் கூறப்படுகின்றன. அவர் மேற்கோளாகக் காட்டியுள்ள நூல்களும் ஆய்வின் முழுமைக்கு வேண்டி அவ்வாறே தரப்பட்டுள்ளன. மொழியின் சொல் எவ்வாறு, எதைக் குறிப்பிடுகின்றது என்பது முதலில் கருதப்பட வேண்டும். கணினி மொழியியலாரும் கோட்பாட்டு மொழியியலாரும் அகராதியைத் தொடரியல், உருபனியல் மற்றும் பொருண்மைத் தகவல்களுக்காக அடையாளப்படுத்தப்பட்ட சொல் பொருள்களின் நிலையான குழுமமாகக் கையாளுகின்றனர். பின்வரும் கருத்துருக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1. புதிய சூழல்களில் சொற்களின் படைப்பாக்கப் பயன்பாடு (creative use)

2. ஒருங்கிணைப்பு (compositionality) அடிப்படையில் சொல் பொருண்மையியல் மாதிரிகளின் மதிப்புரை

புஸ்தெஜோவிஸ்கியின் கருத்துப்படி பின்வருவன சொற்பொருண்மையியலின் முக்கியமான சிக்கல்கள் ஆகும்.

1. மொழியின் பல்லுருப இயல்பை (polymorphic nature) விளக்குதல்

2. இயற்கை மொழிக் கூற்றுகளின் பொருண்மைத் தன்மையைப் (semanticality) பண்பாக்கம் செய்தல்

3. புதிய சூழல்களில் சொற்களின் விளைவாக்கப் பயன்பாட்டைப் (creative use of ords) புரிந்துக்கொள்ளுதல்

4. ஒன்றுசேர்க்கப்பட்ட பொருண்மை உருப்படுத்தத்தை (co-compositinal semantic representetion) மேம்படுத்தல்.

சொற்கள் பங்கெடுக்கிற தொடரியல் அமைப்பொழுங்குகளை ஆய்வதற்காகச் சொற்களின் பொருண்மைகளைக் குழுமுவதற்கு அண்மைக்காலத்தில் மொழியியல் வழிமுறைகள் உருவாக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் வினைகளைப் பொருண்மையியல் அடிப்படையில் தனிப்பட்ட வகுப்புகளாகப் பகுக்க லெவின் (Levin,1993) வினைப்பங்கெடுப்பாளர் மாறுபாடுகளின் பரந்த வகைப்பாட்டின் சுருக்கத்தைத் தருகிறார். எடுத்துக்காட்டாக *மூழ்கு* 'sink', *உருள்* 'roll' மற்றும் *உடை* 'break' என்பவைகளுக்குச் செயப்படுபொருள் குன்றாவினை வடிவமும், செயப்படுபொருள் குன்றியவினை வடிவமும் இருக்கின்றன. இவ்வினைகளின் சொற்பொருண்மைகள் "செய்யச் செய்" என்ற பொருள்கோள் கூற்றினால் உறவுப்படுத்தப்பட்டுள்ளன. பல செயப்படுபொருள் குன்றியவினைகளுக்குச் செயப்படுபொருள் குன்றாவினை வடிவம் இல்லாமல் இருக்கும் (எ.கா. வந்துசேர் 'arrive', இற 'die', விழு 'fall') (Pustejovsky, 1995:9):

(1) அ.The boat sank in stormy weather .

படகு புயல்காற்றுச் சூழலில் மூழ்கியது.

ஆ. The plane sank the boat in stormy weather

ஆகாயவிமானம் புயல்காற்றுச் சூழலில் படகை மூழ்கடித்தது

(2) அ. The ball rolled down the hill .

பந்து மலையிலிருந்து உருண்டது.

ஆ. Mary rolled the ball down the hill .

மேரி பந்தை உருட்டிவிட்டாள்.

(3) அ. The bottle broke suddenly .

புட்டி திடீரென உடைந்தது.

ஆ. Mary broke the bottle suddenly .

மேரி புட்டியைத் திடீரென உடைத்தாள்.

(4) அ. The letter arrived on time .

கடிதம் சமயத்தில் வந்தது.

ஆ. *The mailman arrived the letter on time .

*தபால்காரர் கடித்ததைச் சமயத்தில் வந்தார்.

(5) அ. My terminal died last night .

ஆ.*The storm died my terminal last night

(6) அ. The block tower fell.

கோபுரம் வீழ்ந்தது

ஆ. *Raja fell the block tower .

*இராஜா கோபுரத்தை வீழ்த்தினான்

இ. Raja felled the block tower .

இராஜா கோபுரத்தை வீழ்த்தினான்

வினைகளின், வினைத்தொடர்களின் மற்றும் வாக்கியங்களின் நோக்க வகைகளின் பின்வரும் வகைப்பாடுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்

1. செயல்பாடுகள் (Activities)

   எ.கா. நட, ஓடு, நீந்து, குடி (walk, run, swim, drink)

2. நிறைவேற்றல்கள் (Accomplishments)

   எ.கா. கட்டு, அழி, உடை (build, destroy, break)

3. பலன்கள் (Achievements)

   எ.கா. இற, கண்டுபிடி, வந்துசேர் (die, find, arrive)

4. நிலைகள் (States)

   எ.கா. நோயுறு, தெரி, காதலி, ஒடு, நினை, இரு (sick, know, love, resemble, think, be)

சொற்பொருண்மையியல் சொற்களை வேறுபட்ட பொருண்மை வகுப்புகளாகக் குழுமம் செய்வதுடன் எவ்வாறு சொற்கள் எல்லாம் ஒன்றோடொன்று பொருண்மை

அடிப்படையில் தொடர்புக்கொண்டுள்ளன என்பதையும் ஆய்கின்றது. நாம் சொல் உறவுகளின் ஐந்து வகுப்புகளை ஆய்வோம்.

1. ஒருபொருள் பன்மொழி (synonymy)

2. எதிர்மொழியம் (antonymy)

3. பொருள் உள்ளடங்கல் மற்றும் சொல் மரபுரிமை (hyponymy and lexical inheritance)

4. சினை-முதல் உறவு (meronymy)

5. உட்படுத்தல் மற்றும் முற்கோள் செய்தல் (entailment and presupposition)

பொதுவாக ஒருபொருள் பன்மொழியம் கருத்துருக்களுக்கு இடையே உள்ள உறவுகள் என்று எடுத்துக்கொள்ளப்படுவதைவிடச் சொற்களுக்கு இடையே உள்ள உறவு என்று எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இரண்டு வெளிப்படுத்தங்கள் எல்லாச் சூழல்களிலும் வாக்கியத்தின் உண்மை மதிப்பீடு மாறாமல் ஒன்றையொன்று இடம் பெயர்க்குமானால் அவைகளுக்கிடையே உள்ள உறவு ஒருபொருள் பன்மொழியம் என்று ஒரு நிலைபெறு விளக்கம் கூறுகின்றது (லையான்ஸ் 1977, குரூஸ் 1986). ஒருபொருள்பன்மொழியம் வெளிப்பாடுகளின் இடப்பெயர்ச்சியால் விளக்கப்பட்டால் அவைகளுக்கு இடையே உள்ள உறவு ஒரே வகைப்பாட்டுச் சொற்களுக்கு இடையிலான உறவாகும் (intra-category relation); எடுத்துக்காட்டாக, பெயர்ச் சொல்லுக்கும் பெயர்ச் சொல்லுக்கும் உள்ள உறவு, வினைச் சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் உள்ள உறவு. எதிர்மொழியம் பொருண்மை எதிர்நிலை அடிப்படையில் பண்பாக்கம் செய்யப்பட்ட உறவாகும். ஒருபொருள் பன்மொழியம் போல எதிர்மொழியமும் கருத்துருக்களுக்கு இடையே உள்ள உறவாகக் கருதப்படாமல் சொற்களுக்கிடையே உள்ள உறவாகக் கருதப்படுகிறது.

(7) உயர் - தாழ்

கனமான – இலேசான

வேகமாக – மெதுவாக

நீளம் - குட்டை

சேர்ந்து வருகைத் தரவு (co-occurrence data) ஒருபொருள் பன்மொழிகள் ஒரே எதிர் மொழிகளைப் பங்கிட்டுக்கொள்ளத் தேவையில்லை என்று எடுத்துக்காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக *உயர்* மற்றும் *ஏறு* என்பதும் *தாழ்* மற்றும் *இறங்கு* என்பதும் ஒத்த பொருண்மைக் கொண்டவை; இருப்பினும் *உயர்/இறங்கு*, *தாழ்/ஏறு* என்பன எதிர்மொழி இணைகள் அல்ல. கணினி மொழியியலில் மிகக் கூடுதலாக ஆயப்பட்ட சொல் உறவு பொருள் உள்ளடங்கு உறவாகும் (hyponymy); குறிப்பாக மரபுரிமை வலை அமைப்புகளில் (inheritance net works) விளக்கப்படும் வகைப்பாட்டியல் உறவு (taxonamic relation); எடுத்துக்காட்டாக *வண்டி* என்பது *வாகனம்* என்பதன் பொருள் உள்ளடங்கு சொல் என்று குறிப்பிடப்பட்டால் *வாகனம்* அல்லது *ஊர்தி* என்பது *வண்டி* என்ற கருத்துருவின் மேற்கருத்துரு (super concept) எனலாம். அதாவது *வண்டி* என்ற குழுமம் *வாகனம்* என்ற குழுமத்தால் சுட்டிக்காட்டப்படும் தனி அங்கங்களின் துணைக் குழுமமாகும்.

விளக்குவதற்கும் முறையாக ஆய்வதற்கும் மிகக் கடினமான சொல்லுறவு சினை மொழியமாகும் (meronymy), அதாவது பகுதிகளுக்கும் முழுமைக்கும் உள்ள உறவு 'பகுதியாக இருக்கிற' (part of), உருவாக்கப்பட்ட (made of) என்ற பயனிலைகளால் குறிக்கப்படும் இவ்வுறவு அறிவு உருப்படுத்த மொழிகளில் (knowledge representation Languages) மிகப் புழக்கமுள்ளதாகும். உட்படுத்தமும் (entailment), முற்கோளும் (presupposition) சொற்களை ஒன்றுக்கொன்று உறவுப்படுத்தத்தக்க மற்றொரு வழி ஆகும். பின்வரும் வாக்கியங்கள் எவ்வாறு ஒன்றையொன்று உள்ளடக்குகிறது என்பதைக் காண்போம்.

(8) அ. ராமன் பாம்பைக் கொன்றான்.

ஆ. பாம்பு இறந்தது.

அதாவது கொல்லும் நிகழ்வு இருந்தால் இறக்கும் நிகழ்வும் இருக்கும். இம்மாதிரியான உட்படுத்தும் உறவுகளைக் கண்டுகொள்வது மொழியியலில் சொற்கூறிடலின் நோக்கமாக 1960-களில் இருந்தது; இன்றும் ஆய்வுகளுக்கு ஊக்கமாய் இருக்கின்றது.

ஆங்கிலத்தில் *sell,* மற்றும் *trade* என்ற வினைகள் உரிமையை அல்லது வைத்திருப்பதை முற்கோள் செய்யும். தமிழில் *வில்* மற்றும் *பண்டமாற்று* என்ற வினைகள் உரிமையையோ வைத்திருப்பதையோ முற்கோள் செய்யும் (Pustejovsky, 1995:25):

(9) அ. ராஜா தன் சைக்கிளை விற்கிறான்.

ஆ. ராஜா சைக்கிள் வைத்திருக்கிறான்.

(10) அ. ராணி அவலுக்காக நெல்லைப் பண்டமாற்று செய்தாள்.

ஆ. ராணி நெல் வைத்திருக்கிறாள்.

சில சொற்களில் முற்கோள் நேரடியானதல்ல. எடுத்துக்காட்டாக *மற* என்ற வினை அது ஏற்கும் நிரப்பியின் உண்மையை முற்கோள் செய்யும்.

(11) அ. ராஜா கதவைப்பூட்டியதை மறந்துவிட்டான்.

ஆ. ராஜா கதவைப்பூட்டியதை மறக்கவில்லை.

ராஜாவின் நினைவு எப்படி இருந்தாலும் "ராஜா கதவைப்பூட்டியது" உண்மையாகும். இருப்பினும் பின்வரும் எடுத்துக்காட்டில் நிரப்பியுடன் தொடர்புள்ள உண்மை நிகழ்ச்சிப் பொருள்கோண்மை இல்லை.

(12) ராஜா கதவைப்பூட்ட மறந்துவிட்டான்.

6.2.1. பல்பொருண்மையின் தர்க்கச்சிக்கல்

6.2.1.1. பொருண்மை நீட்சியின் பல்வேறுவகைகள்

ஒரு மொழியில் உள்ள சொல் அலகுகளின் பொருண்மையியல் விளக்கத்தின் சரியான நடைமுறை, இலக்கணத்தில் உள்ள மயக்கத்தின் நடத்தையையும் சொல்

தேர்வையும் சரியானபடி விளக்க நம்மை அனுமதிக்க வேண்டும். இது மொழியின் இலக்கணம் மற்றும் பொருண்மை விளக்கத்தை எளிமைப்படுத்தும். ஒரு மொழியிலுள்ள பல சொற்களுக்குப் பல பொருள்கள் இருக்கின்றன. இதைப் பல்பொருண்மை (polysemy) என்பர். சொற்கள் பல்பொருண்மைகளை அடையும் வழியில் வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக வென்ரே (Weinreich, 1964) என்பவர் இரண்டு வகையான மயக்கங்களை வேறுபடுத்துகிறார். முதலாவது முரண்படும் மயக்கம் (contrastive ambiguity) எனப்படும். முரண்படும் மயக்கம் ஒரு சொல் எதேச்சையாக இரண்டு வேறுபட்ட தொடர்பு இல்லாத பொருண்மைகளைக் கொண்டிருப்பதாகும். இதை ஒரு சொல் போலி (homonymy) என்பர்.

(13) அ. அவர் ஒரு *படி* அரிசி வாங்கினார்.

ஆ. அவன் *படி* ஏறி உள்ளே சென்றான்.

(14) அ. அவன் ஒரு *அடி* நகர்ந்தான்.

ஆ. அவள் அந்தப் பெரியவரின் *அடி* தொட்டு வணங்கினாள்.

(15) அ. அந்தக் கருத்துரையாடல் முக்கிய நிகழ்ச்சிக்குத் *திரும்பியது*.

ஆ. அந்த மாடு வலது பக்கமாகத் *திரும்பியது*.

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளில் சாய்வெழுத்துச் சொற்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் இருக்கின்றன. இது வரலாற்று அடிப்படையில் தொடர்புள்ளவையாக இருந்தாலும் சரி அல்லது எதேச்சையானாலும் சரி இவை அகராதி அமைப்பதற்கும் பொருளின் ஒரு கால ஆய்வைச் செய்வதற்கும் தேவை இல்லாதவை. பின்வரும் வாக்கியங்களில் இணைச் சொற்பொருண்மைகள் சூழல் அடிப்படையில் அடிப்படை பொருண்மையிலிருந்து வேறுபட்டு இருப்பதைக் காணலாம்.

(16) அ. அவன் வங்கியிலிருந்து பணம் எடுத்தான்.

ஆ. அவர்கள் ரயில் சந்திப்பில் ஒரு புதிய வங்கியைக் கட்டி வருகிறார்கள்.

(16) அ. அவன் ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்தான்.

ஆ. அவள் ஜன்னலை மூடினாள்.

(17) அ. அவன் கதவுக்குப் பச்சை வர்ணம் பூசினான்.

ஆ. அவள் கதவு வழியாக வெளியேறினாள்.

(18) அ. கடை பத்து மணிக்குத் திறக்கும்.

ஆ. அவன் வாயைத் திறந்து பதில் கூறவில்லை.

இந்தப் பொருள் வேறுபாடுகள் துணை நிலைப் பல்பொருண்மைகள் என்று அழைக்கப்படும். நம்முடைய சொற்பொருண்மையின் மாதிரி எப்படியாவது *வங்கி* என்ற சொல் ஒரு நிறுவனத்தையும், கட்டிடத்தையும் குறிப்பிடுவதையும் *ஜன்னல்* என்ற சொல் ஒரு பௌதீகப்பொருளையும் துளையையும் குறிப்பிடுவதையும் விளக்க இயல வேண்டும். இவ்வெடுத்துக்காட்டுகளில் பொருள்களின் துணை நிலையில் இரண்டு வகைகள் இருக்கின்றன: ஒன்று வகைப்பாட்டைத் தக்கவைப்பது, இரண்டு வகைப்பாட்டை மாற்றுவது. தர்க்கப் பல்பொருண்மை (logical polsemy) என்பது சொல் வகைப்பாட்டில் மாற்றம் இல்லாத சொல்லின் பல்பொருண்மைகள் மேலூறலாக வரவோ சார்ந்து வரவோ பொருண்மைகளைப் பங்கிட்டுக் கொள்ளவோ செய்யும் துணைநிலை மயக்கமாகும். எனவே துணைநிலையில் ஒரு பல்பொருண்மை தர்க்க பல்பொருண்மையை விட சிறிது அகலமானது. ஏனென்றால் முந்தையதும் எவ்வாறு வகைப்பாடு கடந்த பொருள்கள் உறவு கொண்டிருக்கின்றன என்று விளக்குகின்றது. எடுத்துக்காட்டாக *பூட்டு* என்பதைப் பெயராகவும் வினையாகவும் பயன்படுத்துவது ஆகும்.

6.2.1.2. முரண் மயக்கம்

மேற்சொன்ன வேறுபாடுகளைப் பயன்படுத்திக் குறிப்பாகத் தனிச் சொல்லுடன் பல பொருள்களின் இடுகுறித் தன்மையான தொடர்பைப் பயன்படுத்திப் பொருள் மயக்கம் குறித்த இன்று வரை உள்ள ஆய்வுகள் முரண் மயக்கத்தையே விளக்குகின்றது. மேலும் அது துணைநிலைப் பல்பொருண்மையாக விளக்கப்பட்டால், அது வகைப்பாடு கடந்த பொருண்மை மயக்கமாக இருந்திருக்கின்றது; இது முரண் பொருள்களின் துணை

வகைகளாக விளக்கப்படுகின்றன. இது அவ்வளவு வியக்கத்தக்கதல்ல; ஏனென்றால் சொல் பொருள்களை வேறுபடுத்தத் தற்போதைய உருப்படுத்த உத்திகளும் (representational techniques) திட்டங்களும் (strategies) தந்திருந்தும், இப்பொருள் மயக்க வகைகளுக்கு இடையே தர்க்க அடிப்படையிலான வேறுபாட்டைச் செய்யக் காரணம் இல்லை என்று தோன்றுகின்றது. இந்தத் திட்டத்தைப் பொருளினைப் பட்டியலிடும் பேரகராதிகள் (Sense Enumeration Lexicons (SELS)) என்று புஸ்தெஜோவிஸ்கி குறிப்பிடுகிறார் (Pustejovsky, 1945:29).

முரண் பொருளுள்ள சொற்களின் மயக்க நீக்கங்களுக்கு என்ன காரணிகள் பங்களிக்கின்றது என்பதை ஒரு எடுத்துக்காட்டு வழி காண முயல்வோம். பின்வரும் வாக்கியத்தின் பொருள் மயக்கத்தை எடுத்துக்கொள்வோம்:

(19) John shoots a few bucks.

இந்த வாக்கியத்தில் *shoot* என்ற வினையும் *buck* என்ற பெயரும் முரண் அடிப்படையில் பொருள் மயக்கம் உள்ளவைகளாகும். இவ்வாக்கியம் *John* வேட்டை ஆடியதையோ சூதில் பணம் செலவழித்ததையோ குறிப்பிடும். இந்த எடுத்துக்காட்டு பயன் வழியியல் கட்டுண்ட பொருள் மயக்கநீக்கம் (pragmatically constrained disamibuation) என்று அழைக்கப்படும்; ஏனென்றால் இந்தக் கூற்றைப் புரிந்துக்கொள்வது, *John* யார் மற்றும் அவன் எந்தச் செயலில் ஈடுப்பட்டுள்ளான் என்பது குறித்த குறிப்பிட்ட சூழலில் பெறப்படும். சொல் மயக்க நீக்கம் ஒரு சொல்லுக்கென்று சுதந்திரமாக நிகழ்வதில்லை; ஒரு சொல்லின் சூழலோ பொருண்மைக்களமோ தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் பிற சொற்களின் பொருண்மை மயக்கமும் கட்டுப்பட்டுவிடும். இது முரண் பொருள் மயக்கத்தின் பண்புக்கூறாய் இருந்தாலும் தர்க்கப் பொருண்மையிலுள்ள பொருண்மைச் சுருக்கத்தை இது பண்பாக்கம் செய்யாது. பின்வரும் வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம்.

(20) Nadia's plane taxied to the terminal

மேற்சொன்ன எடுத்துக்காட்டில் பெயர்ச் சொற்களான *plane* மற்றும் *terminal* என்பனவற்றில் பொருள் மயக்கம் உள்ளன. இங்கே *plane* என்பதற்கு 'விமானம்', 'மரவேலைக் கருவி' என்ற இரு பொருள்கள் உள்ளன; *terminal* என்பதற்கு 'கணினி முனை', 'கட்டிடம்' என்ற இரு பொருள்கள் உள்ளன. அம்மாதிரியான சொற்களில் பொருள் மயக்க நீக்கத்தின் கணினி அடிப்படையிலான கருதல் தரப்பட்ட வாக்கியத்திற்குள் தரப்பட்ட சூழல் மற்றும் பயன்வழி நடவடிக்கைகளைக் கொண்டு சொல்லுக்குச் சரியானப் பொருளைக் காண்பது தான்.

இறுதியாகப் பொருள் மயக்க நீக்கத்திற்குச் சூழல் மற்றும் பயன் வழியியல் செய்திகள் தேவைப்படாத முரண் மயக்கத்தின் நேர்வுகள் இருக்கின்றன. வாக்கியத்தின் பயனிலை உறவின் காரணமாகப் பெறப்படுகிற மயக்க நீக்கம் எடுத்துக்காட்டாகப் பின்வரும் வாக்கியங்களில் *club* என்ற சொல்லின் சரியானப் பொருள் தலைகீழான எழுவாய் இடத்தில் வருகிற பெயர்த் தொடரின் வகைப்படுத்தல் அறிவால் பெறப்படுகிறது.

(21) அ. Nadia's favourite club is the five-iron.

ஆ. Nadias's favourite club is the Carlton.

இவ்வெடுத்துக்காட்டில் பொருத்தமான பொருள் கண்டுபிடிக்கப்படும் வழியின் காரணமாகப் புஸ்தெஜோவிஸ்கி இதை வகைப்படுத்தல்சார் கட்டுப்படுத்தப்பட்ட பொருண்மை மயக்க நீக்கம் (sortally constrained disamibuation) என்பார்.

6.2.1.3. துணைநிலை வருகைப் பல்பொருண்மை

முன்னர் விவாதித்தப் பொருண்மை மயக்க நிகழ்வுகள் போல் அல்லாமல் துணை வருகைப் பல்பொருண்மை (complementary polysemy) பொருள்களுக்கிடையே, உறவுகளின் வேறுபட்ட வகைகளை உள்ளடக்கி உள்ளதாகத் தெரிகிறது. முன்னர் பார்த்த *கதவு, ஜன்னல்* இவற்றின் பொருள் மயக்கங்கள் உருவம்-இடம் பிறழ்ச்சிகள் (figure-ground

reversals) என்று அழைக்கப்படுகின்ற மாறுபாடுகளின் (alternation) பெரிய குழுமத்தின் பாகமாகும். இது மொழியில் *அடுப்படி*, *குழாய்*, *கேட்* போன்ற பெயர்களின் பெரிய வகுப்பை உள்ளடக்கும். இப்பெயர்களில் "துளை" மற்றும் இத்துளையை வடிவமைக்கப் பயன்படும் "பௌதீகப்பொருள்" என்ற இரு பொருள்களால் மயக்கம் விளைகின்றன. இப்பொருள் பிறழ்ச்சி தர்க்கப் பல்பொருண்மைகள் என்று விளக்கப்பட இயலும் பல பெயர்ப் பிறழ்ச்சிகளில் ஒன்றாகும். இங்குப் பெயர்ச் சொற்கள் சீராகத் தொடர்புள்ள பொருள் பிறழ்ச்சிகளைக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

(22) எண்ணக்கூடியப் பெயர்-திரள் பெயர்ப் பிறழ்ச்சி (count/Mass alternation)

அ. அந்த ஆடு மைதானத்தில் மேய்கிறது.

ஆ. ராஜா மதிய உணவில் ஆடு சாப்பிட்டான்.

(23) பாத்திரம்-பாத்திரத்திலிருக்கும் பொருள் பிறழ்ச்சி (container/containee alternation)

அ. குழந்தை புட்டியை உடைத்துவிட்டது.

ஆ. குழந்தை புட்டி முழுவதும் குடித்துவிட்டது.

(24) உருவம்-இடம் பிறழ்ச்சி (Figure-Ground Reversals)

அ.ஜன்னலில் வர்ணம் பூசினான்.

ஆ.ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்தான்.

(25) உற்பத்திப்பொருள்-உற்பத்தியாளர் பிறழ்ச்சி (product/producer alternation)

அ.அந்த நாளேடு அதன் ஆசிரியரைப் பதவியிலிருந்து விலக்கியது.

ஆ. அந்த நாளேட்டை அவன் கிழித்துவிட்டான்.

(26) தாவரம்-உணவுப் பிறழ்ச்சி (plant-food alternation)

அ.அவன் தோட்டத்தில் ஆப்பிள் நட்டான்.

ஆ.அவன் இரண்டு ஆப்பிள் சாப்பிட்டான்.

(27) செயல்பாடு–விளைவுப் பிறழ்ச்சி (process/result alternation)

அ. அவன் அவளை அந்த வேலைக்குத் தேர்வு செய்தான்.

ஆ. அவள் தேர்வு மகிழ்வைத் தந்தது.

(28) இடம்-மக்கள் பிறழ்ச்சி (place/people alternation)

அ. ராஜா தஞ்சாவூருக்குச் சென்றான்.

ஆ. முதலமைச்சரை தஞ்சாவூர் மகிழ்ச்சியோடு வரவேற்றது.

தர்க்கப் பல்பொருண்மைக்குள் சரியான பொருள் குறிப்பிட்ட சொல் வருகிற சூழல் அடிப்படையில் அடையாளம் காணப்படுகின்றது.

துணைநிலை வருகைப் பல்பொருண்மை பிற வகைப்பாட்டிலும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, *நல்ல* போன்ற பெயரடைகள் அவை அடை செய்யும் பெயர்களின் அடிப்படையில் பல்பொருண்மைகளைப் பெறும்.

(29) அ. நல்ல கார்

ஆ. நல்ல சாப்பாடு

இ. நல்ல கத்தி

தர்க்க அடிப்படையிலான பல்பொருண்மையை வினைகள் தேர்வு செய்யக்கூடிய பல் நிரப்பிகளின் வகைகளுடன் (multiple complement types) தொடர்புள்ளதாகக் காணலாம்.

(30) அ. ராணி நாவலைப் படிக்கத் தொடங்கினாள்.

ஆ. ராணி நாவல் படிப்பதைத் தொடங்கினாள்.

இ. ராணி நாவலைத் தொடங்கினாள்.

தொடங்கு போன்ற வினைகள் அவை பல எண்ணிக்கையிலானத் தொடரியல் மற்றும் பொருண்மையியல் சூழல்களை (வினைத் தொடர், தொழிற்பெயர்த் தொடர், பெயர்த் தொடர்) தேர்வு செய்ய இயலும் என்ற நிலையில் பல்பொருண்மையை வெளிப்படுத்துவன ஆகும். அதிக அளவுக்கு இவ்வினை ஒரே பொருளைத் தக்க வைத்திருக்கிறது. அது தேர்வு செய்யும் நிரப்பியின் வகை அடிப்படையில் சிறிது

வேறுபடலாம். எனவே இது தர்க்கப் பல்பொருண்மைக்கு நியாயமான எடுத்துக்காட்டாகத் தெரிகின்றது.

பல்பொருண்மைகளாகப் பார்க்க இயலும் பிற தொடர்புள்ள பொருள்கள் தன் விளைவு/காரண விளைவு போன்ற (inchoative/causative) பிறழ்ச்சிகளாகக் கூடுதல் அகலமாக விளக்கப்படும் வினைப் பிறழ்ச்சிகளின் களத்திற்குக் கொண்டு செல்கின்றது.

(31) அ. புட்டி உடைந்தது.

ஆ. ராஜா புட்டியை உடைத்தான்.

(32) அ. ஜன்னல் திடீர் என்று திறந்தது.

ஆ. ராணி ஜன்னலைத் திறந்தாள்.

6.2.1.4. தொடக்க நிலை சொற்பொருண்மைக் கோட்பாடு

தொடக்க நிலை மாதிரியைக் கூடுதல் தெளிவாகத் தரவேண்டி சிக்கலைக் கோடிட்டுக் காட்டுவோம். இயற்கை மொழிப் பொருண்மையியலின் மையச்சிக்கல் மொழியின் எந்தக் கோவைக்கும் சரியானப் பொருள்கோளைத் தருவது என்று எடுத்துக்கொண்டால், நாம் சொல் வடிவுகளுக்கும் பொருண்மை வடிவுகளுக்கும் இடையிலான பொருத்தம் சரியாக விளக்கப்பட்ட மற்றும் உறுதியான செயல்பாட்டாலும் நடைமுறைப்படுத்தப்படும் என நம்புகிறோம். முன்னர் பார்த்தபடி பல்பொருண்மையை விளக்க மிக நேரடியான வழி தனிப்பொருண்மையால் அல்லது சொற்பொருண்மையால் விவரிக்கப்பட்டச் சொற்களின் பட்டியலைக் கொண்டிருக்கும்படி அகராதியை அனுமதிப்பதுதான். இது சொல் வடிவில் பொருள் வேறுபாட்டைக் குறியாக்கம் செய்யும் எளிமையான வழியாகும். மேலும் இது இலக்கணத்தில் பொருண்மை நடவடிக்கையின் இயல்பின் மேல் மிகக் குறைந்த தாக்கமே கொண்டிருக்கும். இம்மாதிரியான அகராதியைப் பொருளைப் பட்டியலிடும் அகராதி ((Sense Enumeration Lexicon சுருக்கமாக SEL) என்று விவரணைச் செய்கிறோம். இந்தப் பொருளைப் பட்டியலிடும் அகராதியைப் பின்வருமாறு பண்பாக்கம் செய்யலாம். அகராதி L-இன் ஒவ்வொரு சொல்லும் அதனுடன்

தொடர்புடைய S_1 முதல் S_n பல பொருள்களைக் கொண்டிருக்கும் சொற்பதிவுகள் யாவும் (W_{S1}...W_{Sn}) எனச் சேகரிக்கப்பட்டிருந்தால் L என்ற அகராதிச் சொற்களைப் பட்டியலிடும் அகராதி என்று அழைக்கப்பெறும். இச்சொற்பொருண்மை ஒழுங்குமுறைத் (lexical sense organization) தரப்பட்டிருக்க, ஒரு சொல் வடிவம் பொருண்மை மயக்கம் உள்ளது என்ற உண்மை, வாக்கியப் பொருள்கோளில் எவ்வாறு சொற்கள் எல்லாம் சேர்கின்றன என்ற சேர்க்கைச் செயற்பாங்கை நெகிழச் செய்யவோ சிக்கலாக்கவோ செய்யவில்லை என்று தெரிகின்றது. எடுத்துக்காட்டாக, *நூல்* என்ற சொல்லின் இரு முரண்பட்ட பொருள்களை வகைப்பாட்டு வகையின் ஒரளவுக்கு நிலைபேறு பெற்ற சொல் தரவு அமைப்பையும் அகராதியின் வகைப்பாட்டியல் அமைப்புக்குள் (taxonomic structure) கருத்துருவை இடம் காணும் இனச்சொல்லின் அடிப்படைக் குறிப்பீட்டையும் பயன்படுத்தி நேரடியாகப் பட்டியலிடலாம்.

(33) [நூல்1
வகைப்பாடு = எண்ணுப்பெயர்
இனம் = தாள்களின் தொகுப்பு]

(34) [நூல்2
வகைப்பாடு = திரள்பெயர்
இனம் = இழை]

வினைகளின் தேர்வுத் தேவைகள் இனச் சொற்களைப்போல் அதே குழுமப் பண்புக் கூறுகளின் (அல்லது வகைகளின்) அடிப்படையில் விவரணை செய்யப்படுவதாக எடுத்துக்கொண்டால், பொருண்மை மயக்க நீக்கம், இருக்கிற சொற்பதிவுகளின் குழுமத்திலிருந்து செயல்படுபவர் (functor) மற்றும் பங்கெடுப்பாளர்களின் பண்புக் கூறுகளைச் சரியாகப் பொருத்துவதன் செயற்பாங்காகத் தெரிகிறன்து. எடுத்துக்காட்டாக, *நூல்* என்ற வினை அதன் பொருள்களில் ஒன்றில் *நூல்* என்பதைச் செயப்படுப்பொருளாகத் தேர்ந்தெடுக்கிறது.

(35) ராஜா ராட்டால் நூல் நூற்றான்.

(36) நூல்
வகைப்பாடு = வினை
பொருண்மை = Ro(θ_1, θ_2, θ_3)
ப.அமைப்பு = ப.ஆளர் = பெ.தொ(+மனிதன்)
ப.ஆளர் = பெ.தொ(+நூல்)
ப.ஆளர் = பெ.தொ (இராட்டு)

மொழியியல் கோட்பாடு அடிப்படையில் இது சொல் திட்டவரைவின் (Lexical Design) நல்லத் தகுதியான ஒரு மாதிரி ஆகும்; ஏனென்றால் அமைப்பு மற்றும் பொருண்மைத் தேவைகள் எல்லாம் திருப்தி செய்யப்படுகிறது வரை இந்தச் சொல் அறிவைப் பயன்படுத்தும் இணைக்கும் நுட்பத்தை மாற்றவோ விரிவுபடுத்தவோ தேவையான காரணம் இல்லை. வினைகளுக்குப் பயன்படுத்தப்படும் இம்மாதிரியான அணுகுமுறை சொல் குறிப்பின் (lexical sign) பகிர்வின் வழி தொடர்புபடுத்தப்பட்ட வேறுபடுத்தப்பட்ட பொருள்களாக உருப்படுத்தப்பட வேண்டி நிரப்பித் தேர்வில் வேறுபாட்டை அனுமதிக்கும்; இந்த நடைமுறை ஏதேனும் ஒரு வழியில் தற்போதைய மொழியியல் சட்டகங்களில் பயன்படுத்தப்படுகின்றது. இம்மாதிரியான அணுகுமுறை, ஒவ்வொரு சொல்லும் ஒரு குறிப்பிட்ட தொடரியல் சூழலுக்குப் பொருத்தமானதாகத் தேர்வு செய்யப்படுவதாய் அனுமானிக்கப்படுகிறது. இது பின்வரும் *தொடங்கு* என்ற வினையால் எடுத்துக்காட்டப்படுகிறது. $R_i(\theta_1, \theta_2)$ என்ற தொடர்பாகக் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வடிவின் பொருண்மையும் சொல் மிகை விதியாலோ பொருண்மை எடுகோளாலோ ஒன்றை ஒன்று தொடர்புபடுத்தப்படலாம்.

(37) தொடங்கு1

வகைப்பாடு = வினை
பொருண்மை = $R_1(\theta_1, \theta_2)$
ப.அமைப்பு = ப.ஆளர்1=பெ.தொ
ப.ஆளர்2=வி.தொ(+எச்சம்)

(38) தொடங்கு2
வகைப்பாடு = வினை
பொருண்மை = $R_1(\theta_1, \theta_2)$
ப.அமைப்பு = ப.ஆளர்1 = பெ.தொ
ப.ஆளர்2 = +முன்னேற்றம்

(39) தொடங்கு3
வகைப்பாடு = வினை
பொருண்மை = $R_3(Q_1,Q_2)$
ப.அமைப்பு = ப.ஆளர்1 = பெ.தொ
ப.ஆளர்2 = பெ.தொ

மேற்கண்டவாறு பொருளைப் பட்டியலிடும் அகராதிகள் பற்றித் தொடக்க விளக்கம் தரலாம். இனி, பொருளைப் பட்டியலிடும் அகராதி எவ்வாறு சொல் தேர்வையும் முன்னர் குறிப்பிட்டப் பொருண்மை மயக்கத்தின் இரு வகுப்புகளையும் நேரிடுகிறது என்பதைப் பார்ப்போம். பின்வரும் எடுத்துக்காட்டை எடுத்துக்கொள்வோம்:

(40) ராணி நூலைப் படியில் வைத்தாள்.

நூல் என்பதற்கும் *படி* என்பதற்கும் உள்ள முரண் பொருண்மைகளைப் (பொருண்மை மயக்கங்களை) பொருத்தமானப் பண்புக்கூறுகளால் வேறுபடுத்தலாம்.

(41) நூல்1 வகைப்பாடு = எண்ணுப்பெயர்
இனம் = தாள்களின் தொகுப்பு
(42) நூல்2 வகைப்பாடு = திரள்பெயர்
இனம் = இழை

அதாவது *நூல்* என்பதன் முரண் பொருள்கள் வகைப்படுத்தல் அடிப்படையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது அல்லது வேறுபடுத்தப்பட்டுள்ளது; எனவே கருத்தாடல் சூழல் சரியான பொருளைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையில்லை. பின்வரும் எடுத்துக்காட்டில் *அணை* என்ற வினை அது ஏற்கும் செயப்படுப்பொருளின் தோ;வு அடிப்படையில் மயக்க நீக்கம் பெறும்.

(43) அணை வகைப்பாடு = வினை
பொருண்மை = R1(θ1, θ2)
ப.அமைப்பு = ப.ஆளர்1 = மனித இனம்
ப.ஆளர்2 = பௌதீகப் பொருள் விலங்கினம்

(44) அணை
வகைப்பாடு = வினை
பொருண்மை = R2(θ1 . θ2)

ப.அமைப்பு = ப.ஆளர்1 = மனித இனம்
ப.ஆளர்2 = ஒளி தரும் பொருள்

முன்னர் கூறியபடி ஒரு முரண் பொருள் ஒரு வாக்கியத்தில் நிறுவப்பட்டுவிட்டால் பயன்வழியியல் அடிப்படையிலான பொருள் மயக்க நீக்கம் பின்தொடர்கிற செயற்பாங்கில் பிற முரண்பாட்டுப் பொருள்களின் குறுக்கத்திற்கு வசதி செய்யும். *படி* என்ற பெயர்ச்சொல்லுக்கு *படி1* மற்றும் *படி2* என்ற இரண்டு பொருள்கள் இருப்பதாகக் கொண்டால் அடிப்படைப் பயனிலைச் செயற்பாங்கில் நிறுவப்பட்டதாகத்

தரப்படுகையில் சரியான பொருளின் தேர்வு நேரடியாக விளையும். நாம் துணை வருகைநிலையில் பல்பொருண்மையின் உருப்படுத்தத்தை எடுத்துக்கொள்வோம். முன்னர் வினை நிரப்பியத்தில் வேறுபாடுகள் பட்டியலிடப்பட்டச் சொல் பொருள்களாகக் குறியாக்கம் செய்யப்பட்டுள்ளதாகப் பார்தோம். அவை தொடரியல் வருகை முறையைப் பொருத்தமாக விளக்குவதாகத் தெரிகிறது. நாம் முன்னால் விவரித்த பெயர்ப் பல்பொருண்மையைப் பொருளினைப் பட்டியலிடும் அகராதி உருப்படுத்தங்களால் ஆய முற்படுவோம். இவை உருவம்/இடம் பிறழ்ச்சிகள் பாத்திரம்/பாத்திரப்பொருள் பிறழ்ச்சிகள் எண்ணிக்கை/திரள் பிறழ்ச்சிகள் என்பனவற்றை அடக்கும். எடுத்துக்காட்டுகள் மறுமுறையும் கீழே தரப்பட்டுள்ளன.

(45) அ. ஆடு மைதானத்தில் ஓடுகிறது.

ஆ. அவன் உணவகத்தில் ஆடு சாப்பிட்டான்.

(46) அ. ராணி புட்டியை உடைத்தாள்.

ஆ. குழந்தை புட்டியைத் தீர்த்துவிட்டது.

(47) அ. அவன் ஜன்னலுக்கு வர்ணம் பூசினான்.

ஆ. ராணி ஜன்னல் வழியாக வெளியே வந்தாள்.

மரபாக முரண்பாட்டுப் பொருள் மயக்கம் போல, இவைகள் பொருளினைப் பட்டியலிடுவதன் எளிய நேர்வுகளாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள *ஆடு* என்ற பெயரின் துணை வருகைநிலை பொருள்களின் உருப்படுத்தம் நல் நோக்கம் கருதியவையாகும்.

(48) ⎧ ஆடு1
⎪ வகைப்பாடு = எண்ணக்கூடியபெயர்
⎩ இனம் = விலங்கு

(49) ⎧ ஆடு2
⎪ வகைப்பாடு = திரள்பெயர்
⎩ இனம் = இறைச்சி ⎫

இவ்விரு பொருள்களும் தர்க்க அடிப்படையில் உறவு உள்ளவை என்ற உண்மை மேற்சொன்ன இரு உருப்படுத்தங்களில் வெளிப்படுத்தப்படவில்லை; ஆனால் பொருள்கள் வகையால் வேறுபடுத்தப்படுகின்றன. இது சாதாரணமாக ஒருங்கிணைப்பிற்கு முக்கியமானதாகக் கருதப்படும். ஒரு சொல் அலகின் முரண் பொருள்களைத் துணைநிலைப் பொருள்களிலிருந்து வேறுபடுத்தும் அகராதிச் சட்டகத்தில் நாம் செய்ய இயலும் சாத்தியமான மாற்றம் பொருள் அடையாள எண்ணால் வேறுபடுத்தப்பட்ட துணைநிலை பொருள்களை ஒரே பதிவில் சேகரிப்பதுதான்.

(50) ⎧ ஆடு
⎪ அர்த்தம்1= [வகைப்பாடு=திரள்பெயர்
⎪ இனம்=இறைச்சி]
⎪ அர்த்தம்2= [வகைப்பாடு=எண்ணுப்பெயர்
⎪ இனம்=விலங்கு]
⎩

எவ்வாறு பொருள்கள் சேகரிக்கப்படுகிறது என்ற வேறுபட்ட தன்மையைக் கூற நாம் பொருளினைப் பட்டியலிடும் அகராதியின் விவரணையைப் பின்வருமாறு மாற்றலாம். L-இல் w என்ற ஒவ்வொருச் சொல்லுக்கும் s1...sn என்ற அச்சொல்லுடன் தொடர்புடைய பல பொருள்கள் இருந்தால் அம்மாதிரியான அகராதி பொருளினைப் பட்டியலிடும் அகராதி எனலாம். அப்படி என்றால், (i) s1...sn என்பன முரண் பொருள்களாய் இருந்தால், இந்தப் பொருளை வெளிப்படுத்தும் சொற்பதிவுகள் ws1...ws2 என சேகரிக்கப்படும். (ii) s1...s2 என்பன துணை நிலை வருகைப் பொருள்களாக

இருந்தால், இந்தப் பொருள்களை வெளிப்படுத்தும் சொற்பதிவுகள் (ii) s1...s2 என சேகரிக்கப்படும். இந்த ஒவ்வொரு பொருண்மை மயக்கங்களும் (i)-இலோ (ii)-இலோ உருப்படுத்தம் செய்யப்படும். இந்த அணுகுமுறை கோட்பாடு மற்றும் கணினிப் பொறியியல் மரபுகளில் பல ஆய்வாளர்களால் பின்பற்றப்படுகின்றன. சொல் விளக்கத்தின் இம்மாதிரியின் அனுகூலம் என்னவென்றால் அகராதி தனிப்பட்ட மற்றும் சுதந்திரமான கூறாக அல்லது இணைப்புப் பகுதியாகத் தரவின் மூலமாக அல்லது கணினி அணுகுமுறையிலிருந்து தனியாக இருக்கிறது. இதனால் அகராதியைக் குறைந்தது எதிர்பார்க்கக்கூடிய மற்றும் நல் விளக்க வழியில் இலக்கணத்தின் பிற உட்கூறுகளுடன் ஊடாட்டம் செய்யும் நிலையான நோக்கீட்டு இடமாக அறிந்து கொண்டு தொடரியல் மற்றும் பொருண்மையியல் பொருள்கோண்மையின் பண்புகளை ஆயலாம்.

6.2.2. பொருளினைப் பட்டியலிடும் அகராதிகளின் எல்லை

பொருளினைப் பட்டியலிடும் அகராதியால் அனுமதிக்கப்படும் உருப்படுத்தங்கள் இயற்கை மொழிப் பொருண்மையியல் வர்ணனையை விளக்கப் போதுமானதல்ல. சொற்பொருண்மைக் கோட்பாடு பல வழிகளில் பொருண்மையியல் கோட்பாட்டின் பொது அமைப்பைப் பாதிக்கும். ஒருபொருள் பன்மொழியம், எதிர்மொழியம், பல்பொருண்மை, மற்றும் ஆகுபெயர் போன்ற நடப்புகளை விளக்க வெளிப்பாடுகளுக்குப் பொருண்மை மறுதரவாகத் தரவியலும் என்பதைப் பொருண்மையியல் கோட்பாட்டின் நோக்கமாகக் கருதினால் ஒருங்கிணையும் இயல்பு பற்றிய நம்முடையப் பார்வை இறுதியாக மொழி காட்டுகிற அடிப்படைச் சொல் வகைபாடுகளைச் சார்ந்திருக்கும். தற்காலப் பொருண்மையியல் கோட்பாட்டின் நிலைப்பேறு தற்கோள் என்னவென்றால் சொற்கள் இயங்கு செயலனாகவோ வெளிப்படா பங்கெடுப்பாளராகவோ நடத்தைச் செய்யும். புஸ்தெஜோவிஸ்கி (1991a) விவாதித்தபடி நாம் வகைப்பாடுகள் குறிப்பிட இயலும் வழியை மாற்றினால் ஒருங்கிணையும் இயல்பின் வடிவும் மாறும். எனவே சொற்பொருண்மையியலின் நமது பார்வை மொழியில் பொருண்மை ஒருங்கிணைப்பின்

இயல்பை மறு மதிப்பீடு செய்யக் கட்டாயப்படுத்த இயலும். மொழியின் பொருண்மையியல் விளக்கத்திற்குப் பொருளினைப் பட்டியலிடும் அகராதிகளின் குறைபாடுகளைக் காட்டும் மூன்று அடிப்படை வாதங்கள் இருக்கின்றன. அவை கீழே தரப்பட்டுள்ளன (Pustejovsky,1995:39):

1. சொற்களின் படைப்பாக்கப் பயன்பாடு (the creative use of words): சொற்கள் புதியச் சூழல்களில் புதிய பொருளைப் பெறும்.

2. சொற்பொருண்மைகளின் பரவல் (the permeability of word senses): சொல்லின் பொருள்கள் நுண்நிலை விளக்கங்கள் சொல்லின் பிற பொருள்களுடன் மேலுறல் செய்யவும் குறிப்புரைச் செய்யவும் செய்யும்.

3. பல்தொடரியல் வடிவுகளின் வெளிப்பாடு (the expression of multiple syntactic forms): ஒரு தனிச் சொல்லின் பொருள் பல தொடரியல் உறவுகளைக் கொண்டிருக்கலாம்.

இவை ஒவ்வொன்றும், பொருளினைப் பட்டியலிடும் மாதிரிகள் சொல் அறிவின் இயல்பையும் (nature of lexical knowledge) பல்பொருண்மையையும் நிறைவாக வெளிப்படுத்த இயலாமையைக் குறித்து நிற்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் பொருளினைப் பட்டியலிடும் அகராதிகளை உள்ளடக்கியிருக்கும் சட்டக அமைப்புகள் இயற்கை மொழிப் பொருண்மையியலின் குறையுள்ள மாதிரிகளாகத் தோன்றுகிறது.

6.2.2.1. சொற்பொருண்மைக் கோட்பாட்டின் குறிக்கோள்கள்

மேற்கூறியபடி சொற்பொருண்மையியல் மற்றும் ஒருங்கிணைப்புப் பொருண்மையியல் கோட்பாட்டின் முதன்மைக் குறிக்கோள் தரவைப் போதுமான அளவு விளக்குவதும் பின்வரும் இரண்டு செய்திகளில் வெளிப்படையாக இருப்பதுமாகும்.

1. வெளிப்படையான வழியில் ஒழுங்குமுறை/பயிலக்கூடியதாக இருக்க வேண்டும்.

2. பல்லுருபனியல் தன்மைகளின் (polymorphism) பல்வேறு நடப்புகள் போதுமான அளவு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

6.2.2.2. சொற்களின் படைப்பாக்கப் பயன்பாடு

பொருளினைப் பட்டியலிடும் மாதிரிக்கு எதிரான முதல் வாதம் சொற்களின் படைப்பாக்கப் பயன்பாட்டைக் குறித்ததாகும்; அதாவது எவ்வாறு சொற்கள் புதிய சூழல்களில் எண்ணற்ற பொருண்மைகளை எடுக்க இயலுகின்றது என்பது குறித்ததாகும். இது 'எல்லையற்ற பல்பொருண்மை' வாத அடிப்படையில் அமைவதல்ல; முறையான பொருள் மாறுதல்கள் தொடரியலில் மாற்றம்சார் ஒழுங்குகள் (transformational regularities) போல ஒழுங்கானது என்பதன் அடிப்படையில் அமைந்தது. பின்வரும் வாக்கியங்களில் *நல்ல* என்ற பெயரடையின் பொருள் மயக்கத்தை எடுத்துக்கொள்வோம்.

(52) அ. ராணி முடிவில் ஒரு நல்ல குடை வாங்கினாள்.

ஆ. வெளியூருக்குப் போயிருந்த ராமு திரும்பி வந்த பின் நல்ல உணவைச் சாப்பிட விரும்பினான்.

இ. ராமு ஒரு நல்ல ஆசிரியர்.

பொருளினைப் பட்டியலிடும் அகராதிக்குள் *நல்ல* போன்ற பெயரடைச் சொல்லின் வேறுபட்ட பொருள்களை உருப்படுத்தம் செய்வதற்கான ஒரே வழி சொல்லின் பயன்பாடு அடிப்படையில் பொருள்களை வெளிப்படையாகப் பட்டியலிடுவதாகும். நல்ல1, நல்ல2,... நல்ல$_n$, மேற்சொன்ன வாக்கியங்களுக்கு இது கீழே பட்டியலிட்டுள்ள மூன்று நிலைநிறுத்தப்பட்டப் பொருள்களுடன் பொருந்தும்.

(53) அ. நல்ல1: நன்றாகச் செயல்படுதல்.

ஆ. நல்ல2: நன்றாக ஏதோ ஒரு செயலைச் செய்தல்.

இ. நல்ல3: திறமையுள்ள.

மேற்சொன்னபடி அர்த்தத்தைப் பட்டியலிடும் மாதிரி கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ள பொருண்மை மயக்கத்தை விளக்க அம்மாதிரியான சொற்களின் வேறுபட்ட பொருள்களைப் பட்டியலிட வேண்டும்.

(54) விரைவான படகு: இங்கு விரைவான என்பது படகின் இயற்கையான வேகத்தையோ படகு விரைவாக செலுத்தப்படுவதையோக் குறிக்கும் (எ.கா. அவர்கள் விரைவான படகில் ஏறி மீன் பிடிக்கச் சென்றார்கள்.)

(55) விரைவான தட்டச்சர்: தட்டச்சுச் செயலை வேகமாக நிகழ்த்தும் ஒரு நபர்.

(56) டென்னிஸ் ஒரு விரைவான விளையாட்டு: விளையாட்டில் பயன்படுத்தப்படும் இயக்கங்கள் விரைவாக நிகழும்.

(57) விரைவான ஓட்டுனர்: வண்டியை விரைவாக ஓட்டும் நபர்.

(58) விரைவானத் தீர்மானம்: குறைந்தக் காலத்தில் செய்யப்படும் தீர்மானம். மேற்சொன்ன வாக்கியங்களில் விரைவான என்பது குறைந்தது மூன்று வேறுபட்ட பொருள்களை உட்படுத்தும்.

(59) அ. விரைவான (1) = வேகமாக நகர்தல்.

ஆ.விரைவான (2) = வேகமாக செயலை நிகழ்த்துதல்.

இ.விரைவான (3) = குறைந்த கால எடுக்கும் செயலைச் செய்தல்.

புஸ்தெஜொவிஸ்கியும், போகுரெவும் (Pustejovsky & Boguraev 1993) வாதிடுவது போல் ஒரு உண்மையான அகராதிக்குச் சொற்களின் பொருள்கள் மேலும் தேர்வுக் கட்டுப்பாடுகளால் அடையாளப்படுத்தப்படும். எடுத்துக்காட்டாக விரைவான (1) என்பது நகரக்கூடிய பொருள்கள் அடங்கிய வகுப்பைச் சார்ந்த பொருட்களால் பயனிலைப்படுத்தப்பட வேண்டும். விரைவான (3) என்பது எவ்வாறு குறைவான காலம் எடுக்கும் செயலுடன் தொடர்புபடுத்துவது என்ற நிலையில் பொருள்கோள் செய்யப்பட வேண்டும். நெருக்கமாக ஆய்ந்தால் விரைவான என்பதன் ஒவ்வொரு நேர்வும் சிறிது வேறுபட்ட வழியில் பயனிலைப்படுத்தப்படுகின்றது. சொற்களின் பொருள்களை எல்லைக்குட்பட்ட எண்ணிக்கையில் பட்டியலிடும் செயல்பாடு இவ்வகையிலான பெயரடைகளின் படைப்புத்தன்மையான பயன்பாட்டை விளக்காது. ஒரு குறிப்பிட்ட

சொல்லுக்கு எல்லாப் பொருள்களையும் முழுவதுமாகப் பட்டியலிடப் பொருளைப் பட்டியலிடும் அகராதியின் இயலாமையைப் பின்வரும் எடுத்துக்காட்டாலும் உணரலாம்.

(60) அ. ராமனுக்கு மற்றொரு சிகரெட் வேண்டும்.

ஆ. கோபாலனுக்கு ஒரு கொக்கக்கோலா வேண்டும்.

இ. ராணிக்கு வேலை வேண்டும்.

(61) அ. ராஜா வகுப்பைத் தொடங்கினான்.

ஆ. ராணி கட்டுரையை முடித்தாள்.

இ. நாங்கள் கூட்டத்தைப் பத்து மணிக்குத் தள்ளி வைத்தோம்.

பொருண்மைக் கோட்பாட்டின் குறிக்கோள் ஒரு வெளிப்பாட்டின் நல் வடிவத்தன்மையைத் தீர்மானிக்கவும் அதன் பின்னர் வெளிப்ப்பாட்டின் பொருள்கோளைத் தருவதாகவும் இருந்தால் நாம் மேற்சொன்ன மூன்று வாக்கியங்களை எவ்வாறு பொருள்கொள்வது என்பதை எவ்வாறாவது விளக்க வேண்டும். *வேண்டு* என்ற வினைக்குச் சூழல் அடிப்படையில் பொருள் வேறுபடுகிறது என்பது தெளிவாகும். அதாவது *வேண்டு* என்பது முதல் வாக்கியத்தில் புகைப்பிடிக்க விரும்பு என்பதையும் இரண்டாவது வாக்கியத்தில் குடிக்க விரும்பு என்பதையும் மூன்றாவது வாக்கியத்தில் பெற விரும்பு என்பதையும் குறிப்பிடுகிறது. மேற்கண்ட எந்தப் பொருள்கோளையும் இல்லாததாக்கலாம்; ஆனால் பொருளைப் பட்டியலிடும் அகராதிக்குள் *வேண்டு* என்பதன் ஒவ்வொருப் பயன்பாட்டையும் பெற ஒரே வழி வேண்டுதல் உறவின் முறைக்கு வெளிப்படையான குறிப்புரைத் தருவதாகும்.

(62) அ. வேண்டு 1 : புகைப்பிடிக்க விரும்பு

ஆ.வேண்டு 2 : தண்ணீர் குடிக்க விரும்பு

இ. வேண்டு 3 : பெற விரும்பு

6.2.2.3. பொருள்களின் பரவுதல்

சொற்களைப் பட்டியலிடும் மாதிரிகளுக்கு எதிரான முதல் விவாதம் பொருள் முழுமையின்மைச் சிக்கல். இரண்டாவது வாதம் நிறுவப்பட்ட பொருள்களின் சிக்கல்; அதாவது அகராதியின் வேறுபட்ட ஒழுங்கமைப்பிற்கான வாதம் ஒரு சொல்லின் பொருள்களின் எல்லைகள் கண்டிப்பானதல்ல என்பதன் அடிப்படையிலாகும். பொருளினைப் பட்டியலிடுதல் விளக்க நுட்பமாகப் போதுமானது என்று எடுத்துக் கொண்டாலும் தரப்பட்ட எந்தச் சூழலிலும் சரியான பொருளை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதில் தெளிவு இல்லை. எடுத்துக்காட்டாகச் *சுடு* போன்ற வினைகளின் சீரான பொருண்மை மயக்கத்தைக் கருத்தில் கொள்வோம். இது சூழலைப் பொறுத்து "நிலைமாற்றம்", மற்றும் "உருவாக்குதல்", என்ற பொருள்களுக்கு இடையில் வேறுபாட்டை வேண்டுகின்றன.

(63) அ. ராணி கிழங்கை சுட்டுத் தின்றாள் (நிலைமாற்றம்)

ஆ. ராதா வடை சுட்டாள் (உருவாக்கம்)

இங்கு ஆர்வமூட்டும் உண்மை ஒரு பொருள் மற்றொன்றை உட்படுத்துகின்றது. என்பதாகும். இந்தப் பொருள் பிறழ்ச்சி வகுப்பில் (sense alternation class) *அவி, பொரி* போன்ற பிற வினைகளும் இதைக் காட்டும்.

(64) அ. ராணி கொழுக்கட்டை அவித்தாள்.

ஆ. ரமணி கிழங்கு அவித்தாள்.

(65) அ. ராதை அப்பளம் பொரித்தாள்.

ஆ. ராணி மீன் பொரித்தாள்.

கொழுக்கட்டை என்பதும் *அப்பளம்* என்பதும் முறையே அவிப்பதாலும் பொரிப்பதாலும் இருப்பு நிலைக்கு வந்தன. இருப்பினும் இவை 64.ஆவிலும், 65.ஆவிலும் வினையும் உண்ணத்தகுந்த உணவின் விளைவுக்கும் காரணமாகும் செயல்பாட்டிலிருந்து வேறுபடவில்லை. இங்குச் சிக்கல் என்னவென்றால் வேறுபட்ட பொருள்களின் மையப் பொருண்மை உட்கூறுகளுக்கு இடையில் மேலுறல் இருக்கிறது. எனவே தேர்வுக்

கட்டுப்பாடு அடிப்படையில் மட்டும் சரியான சொல் பொருள் தேர்வை உத்தரவாதம் செய்ய இயலாது. இந்த அணுகுமுறையின் மற்றொரு சிக்கல் இது அருவமாக்கலின் பொருத்தமான அல்லது இயல்பான மட்டத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதாகும்.

அட்கின்ஸ் (Atkins,1991) அகராதிப் பதிவுகளின் தட்டையான வரிசை முறையான பட்டியல் அடிப்படையிலான ஒழுங்கமைப்பை விமர்சிக்கிறார். தேர்வுக் கட்டுப்பாடுகளின் நுட்பத்தால் மரபாகத் தரப்படுவதைக் காட்டிலும் நிரப்பியின் பொருண்மைப் பொருளடக்கத்தில் ஓரளவுக்குக் கூடுதல் குறைகள் நீக்கப்பட்ட வேறுபாடுகளைப் பயன்படுத்துவது சாத்தியமான அணுகுமுறை. சொல் அறிவின் பொருளினைப் பட்டியலிடும் மாதிரிகளுக்கு மற்றொரு சிக்கல் தர்க்கப் பல்பொருண்மையின் நேர்வில் பொருள்களுக்கிடையே உள்ள தர்க்க உறவை நிறைவாக வெளிப்ப்படுத்த இயலாமை ஆகும். எடுத்துக்காட்டாக, *ஜன்னல்* மற்றும் *கதவு* போன்ற பெயர்களை உட்படுத்தும் பொருள் மாறுபாடுகள் பொருள் இணைகளின் பட்டியலாக ஆயப்படுகிறது.

(66) ஜன்னல்1
வகை = எண்ணுப்பெயர்
இனம் = துவாரம்

(67) ஜன்னல்2
வகை = எண்ணுப்பெயர்
இனம் = பௌதீகப்பொருள்

இங்குச் சிக்கல் என்னவென்றால் இவ்வெளிப்பாடுகளால் இவ்வுலகில் சுட்டிக்காட்டப்படும் பொருள்களுக்கு இடையிலான தர்க்க உறவு வெளிப்படவில்லை என்பதாகும்.

எடுத்துக்காட்டாகக் காலக் குறிப்புள்ள வாக்கிய நிரப்பி (tensed S-complement) “உண்மைத் தன்மை” (factivity) என்ற பண்பைக் காட்டும். இதில் முழு வாக்கியம்

கொண்டிருக்கிற வினைப்பாங்கு (modality) கவனத்தில் கொள்ளப்படாமல் நிரப்பித் தேற்றக்கூற்று (proposition) உண்மையாகக் கருதப்படும்.

(68) அ. அவன் தன் குடையை எடுத்து வர மறந்து விட்டான்.

ஆ. அவன் தான் குடையை எடுத்து வந்தேன் என்பதை மறந்து விட்டான்.

இ. அவன் தன் குடையை மறந்து விட்டான்.

பொருளினைப் பட்டியலிடும் மாதிரியில் இவ்வாக்கியங்கள் தனித்தனியான பொருள்களுடன் பொருந்தும். இங்குப் பொருள்களை வேறுபடுத்தப் பொருத்தமான பண்புக்கூறுகள் அறிமுகப்படுத்தப்படும்.

(69) மற 1
வகைப்பாடு = வினை
பொருண்மை = R_2 (θ_1, θ_2) [-உண்மைத் தன்மை]
பங்.அமைப்பு = [பஆளர் 1 =பெதொ
பஆளர் =விதொ [+எச்சம்]]

(70) மற 2
வகைப்பாடு 2 = வினை
பொருண்மை = R_2 (θ_1, θ_2) [+உண்மைத் தன்மை]
ப.அமைப்பு= [பஆளர் 1 = பெ.தொ.
பஆளர்2 = வா [+காலம் அடையாளப்படுத்தப்பட்டது]]

(71) மற 3

வகைப்பாடு = வினை

பொருண்மை = R2 (θ1, θ2)

பங்.அமைப்பு = [ப.ஆளர்1 =பெதொ]
[ப.ஆளர்2 = பெதொ]

சரியான அணுகுமுறை *மற* என்பதற்கு ஒரு விவரணையைத் தருவது. இது வேறுபட்ட நிரப்பி வகைகளுடன் பொருத்தமான இணைப்பாக்கத்தினால் அனுமதிக்கத் தக்க எல்லாப் பொருள்களையும் உருவாக்கும். பொதுவான உட்படு பொருளுடன் தொடர்புடைய பல துணை வகைப்பாடுகளின் பண்பை விளக்கும் மற்றொரு எடுத்துக்காட்டு *நினைவுகூர்* (remember) என்ற வினையாகும்.

(71) அ. ராணி தன் குழந்தைக்கு உணவு ஊட்டிவிட்டேன் என்பதை நினைவு கூறவில்லை. (உண்மை)

ஆ. ராஜா தன் குழந்தையைக் குளிப்பாட்ட நினைவு கூர்ந்தான். (உண்மை)

இ. தான் சாவியை எங்கே வைத்தேன் என்று ராஜாவால் நினைவு கூற இயலவில்லை. (உட்படுத்தப்பட்டக் கேள்வி)

ஈ. ராணி தன் கணவன் பெயரை இறுதியாக நினைவு கூர்ந்தாள் (மறைக்கப்பட்டக் கேள்வி)

உ. ராஜாவால் தான் பேச வேண்டிய வரிகளை நினைவுகூற இயலவில்லை. (மறைக்கப்பட்டக் கேள்வி)

மறைக்கப்பட்ட கேள்விகளையும் (concealed question) மறைக்கப்பட்ட வியப்பையும் வியப்புகளையும் (concealed exclamations) உள்ளடக்கிய பல்துணை வகைப்பாட்டின் பிற எடுத்துக்காட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன:

(72) அ. அவனுக்கு விமானம் வரும் நேரம் தெரியும்.(= எந்த நேரத்தில் விமானம் வரும்)

ஆ. ராஜா விடையைக் கண்டுபிடித்து விட்டான். (= விடை என்ன)

(73) அ. ராணி தன்னுடைய மோசமான நடத்தையால் என்னை அதிர்ச்சி அடையச்செய்தாள். (= அவள் நடத்தை எவ்வளவு மோசம்)

ஆ. அவன் வாங்கும் விலை உயர்ந்த வைரங்கள் என்னை ஆச்சரியப்படச் செய்யும். (= அவன் வாங்குவது எவ்வளவு விலையுயர்ந்த வைரம்).

இத்தொடர்கள் பெயர்த்தொடர்களாக இருப்பினும் அவற்றின் பொருண்மையியல் வினையானது வெளிப்படையானக் கேள்வியையோ வியப்பையோ தெரிந்தெடுத்தது போன்ற ஒரே தன்மைக் கொண்டவை. இதுபோல் *வருத்தப்படு* என்ற பயனிலை *வா* மற்றும் பெ.தொ. நிரப்பிகளை எடுக்கும். இதில் இரண்டும் உண்மைத் தன்மை உடையதாய்ப் பொருள்கோள் செய்யப்படும்.

(74) அ. ராணி தான் குமுதத்தில் அந்தக் கதையை வெளியிட்டுவிட்டேன் என்று வருத்தப்பட்டாள்.

ஆ. ராணி குமுதத்தின் கதைக்கு வருத்தப்பட்டாள்.

இ. ராணி நிழல் படங்களை வார இதழில் வெளியிட்டதற்கு வருத்தப்பட்டாள்.

ஈ. ராணி வார இதழின் நிழல் படங்களுக்கு வருத்தப்பட்டாள்.

இந்த எல்லா நிகழ்வுகளிலும் பொருளினைப் பட்டியலிடும் அகராதிகள் அவற்றின் வெளிப்படையில் வேறுபட்ட ஆனால் தொடர்புள்ள பொருள்களுடன் மாறுபாடான அமைப்புகளைப் (alternative structures) பட்டியலிடும். இருப்பினும் இப்பொருள்கள் மிக நெருங்கிய உறவு கொண்டவை என்ற உண்மை இவ்வணுகுமுறை இத்தொடரியல்

வடிவங்களுக்குப் பின்னால் உள்ளுறையும் பொதுமையாக்கத்தை வெளிப்படுத்தத் தவறுகிறது என்பதை உணர்த்தும். மற்றொரு குழும எடுத்துக்காட்டுக் காரண மற்றும் அனுபவ வினைகளுடன் (causative and experiencer verbs) சாத்தியமான எழுவாய்களின் பரப்பு எல்லையை உட்படுத்தும். பின்வரும் வாக்கியங்களைக் கருத்தில் கொள்ளவும்:

(75) அ. சென்னையில் கார் ஓட்டுவது எனக்குப் பயமாக இருக்கிறது.

ஆ. ஓட்டுவது எனக்குப் பயமாக இருக்கிறது.

இ. ராஜா கார் ஓட்டுவது எனக்குப் பயமாக இருக்கிறது.

ஈ. கார் எனக்குப் பயமாக இருக்கிறது.

(76) அ. இந்த இசையைக் கேட்பது வெறுப்பாக இருக்கிறது.

ஆ. இந்த இசை எனக்கு வெறுப்பா இருக்கிறது.

இ. ராஜா ராணியைக் கொன்றான்.

ஈ. துப்பாக்கி ராணியைக் கொன்றது.

உ. போர் ராணியைக் கொன்றது.

ஊ. ராஜா விசையை இழுத்தது ராணியைக் கொன்றது.

(77) அ. ராஜா பூட்டைத் திறந்தான்.

ஆ. சாவி பூட்டைத் திறந்தது.

இ. ராஜா சாவியைத் திருப்பியது பூட்டைத் திறந்தது.

மேற்சொன்ன உதாரணங்கள் காட்டுவது போல் பொருண்மையியல் உறவில் ஒரு வினையின் தொடரியல் பங்கெடுப்பாளர் எப்பொழுதும் அதே தர்க்கப் பங்கெடுப்பாளராக இருப்பதில்லை. இவை பொது ஆகுபெயர் நேர்வுகளைப் போல் இருந்தாலும் இவற்றில் சீரானப் பொருண்மை மாறுபாடுகள் (shifting meaning) இருப்பதனால் இவற்றைத் தர்க்க ஆகுபெயர் என்று பண்பாக்கம் செய்யலாம்.

இறுதியாக மறுதலை உறவுகளை வெளிப்படுத்தும் *சந்தி*, *வாதிடு* என்ற வினைகளில் வரும் மாறுபாடுகளை எடுத்துக் கொள்வோம். இவை

பல்பொருண்மையானவை மற்றும் மறுதலையான எழுவாய் பொருள்கோளை அனுமதிக்கின்றன. இருப்பினும் சலன வினைகளில் மறுதலைப் பொருள்கோள் மீதானக் கட்டுப்பாடு எழுவாயும் செயப்படுபொருளும் நகர்வதை வேண்டுகிறது (Levin,1993; Dowty,1991).

(78) அ. ராஜா ராணியைச் சந்தித்தான்.

ஆ. ராணி ராஜாவைச் சந்தித்தாள்.

இ. ராஜாவும் ராணியும் சந்தித்தார்கள்.

(79) அ. ராஜா ராணியுடன் வாதிட்டான்.

ஆ. ராணி ராஜாவுடன் வாதிட்டாள்.

இ. ராஜாவும் ராணியும் வாதிட்டார்கள்.

(80) அ. கார் லாரி மேல் மோதியது.

ஆ. காரும் லாரியும் மோதிக் கொண்டன.

(81) அ. கார் மரத்தின் மீது மோதியது.

ஆ. *காரும் மரமும் மோதிக் கொண்டன.

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகள் பொருண்மை விளக்கங்கள் (meaning postulates) போன்ற கூடுதல் சக்தி வாய்ந்த நுணுக்கங்களின் சேர்ப்பு இல்லாமல் எடுத்துக்காட்டப்பட்ட சொற்களின் பொருள்களுக்கு இடையே உள்ள உறவுகளை வெளிப்படுத்துவதற்குப் பொருள்களைப் பட்டியலிடும் அகராதியின் மரபான இயலாமையைக் காட்டுகின்றன. பொதுவாகச் சொல் விளக்கத்தின் பொருளினைப் பட்டியலிடும் மாதிரி இயற்கை மொழிக் கூற்றுகளின் பொருண்மையை விளக்குவதற்குப் போதுமானதல்ல என்ற பார்வை மேற்சொன்ன மூன்று வாதங்களிலிருந்து வெளிப்படுகின்றது.

6.2.3. பொருண்மை வகை ஒழுங்குமுறை

இப்பகுதியில் ஆக்கமுறை அகராதிக்குள் சொல் பற்றியச் செய்திகளின் ஒழுங்குமுறை விவரிக்கப்படும். இதன் நோக்கம், சொல் படைப்பாக்கத்தின் மற்றும் பொருள் நீட்சி நடப்பின் ஆக்கத்தன்மையை விளக்கும் அளவுக்கு வெளிப்படுத்தும் மற்றும் நெகிழ்வுத்தன்மையுள்ள மொழியின் முறையான கூற்றைத் தருவதாகும். புஸ்தெஜோவிஸ்கி ஓர் ஆக்கமுறை அகராதியைப் பின்வரும் உருப்படுத்தங்களின் நான்கு நிலைகளை உள்ளடக்கும் ஒரு கணினி ஒழுங்குமுறையாகப் பண்பாக்கம் செய்கிறார்.

1.பங்கேற்பாளர் அமைப்பு (argument structure): தர்க்கப் பங்கேற்பாளர்களின் எண்ணம் மற்றும் வகையையும் அவை எவ்வாறு தொடரியல் அடிப்படையில் மெய்யாக்கம் பெறுகிறது என்றும் குறிப்பிடுதல்

2.நிகழ்வு அமைப்பு (event structure): ஒரு சொல் அலகு மற்றும் ஒரு தொடரின் நிகழ்வு வகையின் விவரணை, வகைகள் நிலை (state), செயற்பாங்கு (process) மற்றும் மாற்றம் (transition) என்பவைகளை உள்ளடக்கும் மற்றும் நிகழ்வுகள் துணை நிகழ்வுசார் அமைப்பைக் (subeventual structure) கொண்டிருக்கலாம்.

3.குண அமைப்பு (Qualia Structure): வடிவ (formal), உறுப்பு (constitutive), நோக்க (telic) மற்றும் செயலிப் (agentive) பங்களிப்புகள் இவற்றை ஒன்றுபடுத்தி உருவாக்கப்பட்ட விளக்கங்களின் பாங்குகள்.

4.சொல் மரபுரிமை அமைப்பு (Lexical Inheritance Structure): வகைச் சட்டகத்தில் (type lattice) எவ்வாறு ஒரு சொல் அமைப்பு (Lexical Structure) பிற அமைப்புகளுடன் தொடர்புகொண்டுள்ளது என்பதையும் அகராதியின் உலகமயமான ஒழுங்கமைப்புக்கு (global organization) அதன் பங்களிப்பையும் அடையாளம் காணல்.

ஒரு குழும ஆக்கமுறை நுட்பங்கள் இந்நான்கு நிலைகளை இணைக்கின்றன. சூழலில் உள்ள சொற்களின் ஒருங்கிணைந்த பொருள்கோளைத் தருகிறது. இவ்வாக்கச்

செயன்மைகள் பின்வரும் பொருண்மையியல் மாற்றங்களில் உள்ளடக்கப்படும். இவை எல்லாம் வகை ஒருங்கிணைப்புகளின் நல்லுருவாக்கத் தன்மைக் கட்டுப்பாடுகளை உட்படுத்தும்.

- வகைக் கட்டாயம் (Type Coercion): இதில் ஒரு சொல்லோத் தொடரோ அதன் தொடரியல் வகை மாறாமல் அத்தொடரில் உள்ள அதிகாரம் செய்யும் சொல்லால் (governing item) ஒரு பொருள்கோளுக்கு கட்டாயப்படுத்தப்படும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட இணைப்பு (selective binding): இங்கு ஒரு தொடருக்குள் பல் தனிமங்கள் (multiple elements) இயக்கிகளாகச் செயல்பட்டு இணைப்பாக்கத்திலுள்ள சொற்களுக்குச் சொல் நிலையாக்கம் அடையாத புதிய பொருண்மைகளை உருவாக்கும். பொருண்மையியல் இணைப்பாக்கத்தின் செயன்மைகளுக்கு உட்படும்போது வகை ஒழுங்கமைப்பு (type System) மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு (lexical inheritance structure) இவற்றால் விவரணை செய்யப்படும். இது முறை இணை இணைப்பாக்கம் (manner co-composition), பண்புக்கூறு எழுத்தாக்கம் (feature transciption), இலகு வினை குறிப்பீட்டாக்கம் (light verb speafication) போன்ற சூழல் அடிப்படையில் வளப்பெற்ற குறையாகக் குறிப்பிட்ட பொருண்மையியல் வடிவுகளின் நேர்வுகளை உள்ளடக்கும்.

இம்மூன்று பொருண்மையியல் மாற்றங்களும் (semantic transformations) தொடரியல் அடிப்படையில் வேறுபடும் வெளிப்பாடுகளுக்கிடையே உள்ள பொருண்மை உறவுத் தன்மையை (semantic relatedness) எவ்வாறு கண்டுபிடிப்பது என்ற நமது விவாதத்திற்கு முக்கியமானதாகும். பங்கெடுப்பாளர் (argument), நிகழ்வு (event), மற்றும் குண வகைகள் (qaualia type) என்பன நல் வடிவத்தன்மை கட்டுப்பாடுகளுக்குப் பொருந்த வேண்டும்.

6.2.3.1. பங்கெடுப்பாளர் அமைப்பு

புஸ்தெஜோவிஸ்கி நான்கு வகையானப் பங்கெடுப்பாளர்களை அறிமுகப்படுத்துகிறார்.

1.உண்மையானப் பங்கெடுப்பாளர் (true arguments): சொற்களின் தொடரியல் அடிப்படையில் உருப்படுத்தம் செய்யப்பட்ட அளகைகள் (parameters) .

(85) ராஜா தாமதமாக வந்தான்.

2.வழுநிலைப் பங்கெடுப்பாளர்கள் (default arguments): தொடரியல் அடிப்படையில் வெளிப்படுத்தப்படத் தேவையில்லாத குண அமைப்பில் தர்க்க வெளிப்பாடுகளில் பங்கெடுக்கும் அளகைகள்.

(86) ராஜா தன் வீட்டைச் செங்கற்களால் கட்டினான்.

3.நிழல் பங்கெடுப்பாளர்: (shadow arguments): சொல்லுக்குள் பொருண்மையியல் அடிப்படையில் உட்படுத்தப்பட்ட அளகைகள் (parameters): அவைகள் துணை வகைப்படுத்தல் (sub typing) அல்லது உரையாடல் சிறப்புக் குறிப்பீட்டின் (discourse specification) செயன்மைகளால் மட்டும் வெளிப்படுத்தப்படலாம்.

(87) ராஜா பந்தை இடது காலால் உதைத்தான்.

4.உண்மைத் தொடரடைகள் (true adjuncts): தர்க்க வெளிப்பாட்டை அடை செய்யும், ஆனால் சூழல் பொருள்கோளின் பகுதியாக அமையும் மற்றும் குறிப்பிட்ட சொற்களின் பொருண்மையியல் உருப்படுத்தத்தில் தொடர்புப்படுத்தப்படாத அளகைகள் தொடரடைகள் எனப்படும். இவை கால மற்றும் இட விசேடணங்களின் (modification) தொடரடை வெளிப்பாடுகளை (adjunct expressions) உட்படுத்தும்.

(82) ராஜா புதன்கிழமை தோறும் கோயிலுக்குச் செல்கிறான்.

உண்மைப் பங்கெடுப்பாளர்கள் (true arguments) தொடரியலால் வெளிப்படுத்தப்படவேண்டிய அளகைகளை விவரணைச் செய்யும். இக்களம் பங்கெடுப்பாளர் அமைப்பின் மீது, θ-அளவீடு (θ-criterion) மற்றும் பிற புறக் கட்டுப்பாடுகளால் பொதுவாக அடக்கப்படும். உண்மைப் பங்கெடுப்பாளர்களின் வெளிப்பாட்டில் விளையும் வினைகளின் பல்பொருண்மை வடிவுகளுக்கு இடையே உள்ள வினைசார் பிறழ்ச்சிகள் (verbal alternation) ஒரு விருப்புத் தொடரின் (optional phrase) வெளிப்பாட்டை உள்ளடக்கும் பிறழ்ச்சிகளிலிருந்து வேறுப்படுத்தப்பட வேண்டும். முதலில் சொன்னது தொடக்கக-காரண (inchoative-causative) பிறழ்ச்சியை உட்படுத்தும். இரண்டாவது மூலப்பொருள்-விளைபொருள் (material-product) பிறழ்ச்சியை உட்படுத்தும்.

(83) அ. ஜன்னல் உடைந்தது.

ஆ. ராஜா ஜன்னலை உடைத்தான்.

(84) அ. ராணி பொம்மையை மரத்தில் செதுக்கினாள்.

ஆ. ராணி மரத்தைப் பொம்மையாகச் செதுக்கினாள்.

இ. ராணி பொம்மையைச் செதுக்கினாள்.

ஈ. ராணி மரத்தைச் செதுக்கினாள்.

மூலப்பொருளின் வெளிப்பாடு விருப்பாக இருப்பதால் பங்கெடுப்பாளராக அதன் செல்வாக்குப் படைக்கப்பட்ட பொருள்களிலிருந்து வேறுபட்டது. மூலப்பொருள்-விளைபொருள் பிறழ்ச்சியில் வரும் விருப்புப் பங்கெடுப்பாளர்களை வழுநிலைப் பங்கெடுப்பாளர்கள் எனலாம். அவை வாக்கியத்தின் தர்க்க நல் வடிவாக்கத் தன்மைக்குத் தேவையாகும்; ஆனால் புறத்தொடரியலில் வெளிப்படுத்தாமல் விடப்படலாம்.

6.2.3.2. குண அமைப்பு

இப்பகுதியில் குண அமைப்பு என்று அழைக்கப்படுகின்ற சொல்லின் உறவு ஊக்கத்தைத் (relational force) தரும் அமைப்பாக்க உருப்படுத்தம் (structured representation) விளக்கப்படும். ஓர் அர்த்தத்தில் ஆக்கமுறை அகராதி எல்லாச்

சொற்களையும் குறிப்பிட்ட அளவுக்கு உறவுள்ளதாக ஆய்கிறது; ஆனால் இப்பண்பு செயல்பாட்டு அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் முறை வகைப்பாட்டிலிருந்து வகைப்பாட்டிற்கும் பொருண்மை வகுப்புகளுக்கு இடையிலும் வேறுபடும். சுருக்கமாக, குண அமைப்பு ஒரு சொல்லின் பொருண்மையின் நான்கு முக்கியமான நோக்குகளைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறது.

• உறுப்பு உறவு (constitutive relation): ஒரு பொருளுக்கும் (object) அதன் உறுப்புப் பாகங்களுக்கும் (constituent parts) இடையில் உள்ள உறவு.

• வடிவ உறவு (formal relation): பொருளை (object) பெரிய சொற்களத்திற்குள் வேறுபடுத்தம் செய்கிறது.

• நோக்க உறவு (telic relation): பொருளின் தேவையையும் செயல்பாட்டையும் தருகிறது.

• செயலி உறவு (agentive relation): பொருளின் மூலம் அல்லது அதைக் கொண்டு வருகையில் உட்படும் காரணிகளைத் தருகின்றன.

மராவ்சிக் (Moravcsik, 1973), அரிஸ்டாட்டிலின் விளக்கங்கள் பொருள்கோளால் தூண்டப்பெற்ற சொற்பொருண்மையின் இப்பார்வை சொற்பொருண்மையியலின் வடிவுசார் ஆய்வுகளில் (formal treatments) அலட்சியப்படுத்தப்பட்ட சொற்பொருண்மை நோக்கங்களுக்கு அழுத்தம் தருகிறது. ஒரு சொல்லின் விளக்கப் பாங்குகளைப் பார்த்து நாம் பொருளின் சொற்பொருண்மையின் சொற்கூறிடல் அணுகுமுறை மற்றும் சொல் உறவு அணுகுமுறை அனுமதிப்பதைவிட வளமையான விவரணையை அனுமதிக்கிறோம். இக்குண அமைப்புகள் பல்லுருப நடத்தையையும் பொருள் படைப்பு நடப்பையும் கண்டுபிடிக்க வேண்டி மாற்று விதிகளைப் போன்ற

செயன்மைகளை அனுமதிக்கின்ற தொடரமைப்பு வருணனைகளைப் போல அமைகின்றன. குணப் பங்களிப்புகளைப் பொறுத்தவரை இரண்டு பொதுவான குறிப்புகள் இருக்கின்றன:

1. ஒவ்வொரு வகைப்பாடும் ஒரு குண அமைப்பை வெளிப்படுத்தும்.

2. எல்லாச் சொற்களும் ஒவ்வொரு குணப் பங்களிப்புக்கும் மதிப்பீட்டைக் கொண்டிருக்காது.

எவ்வாறு ஆக்கமுறை அகராதி ஒரு தொடரின் எல்லா அலகுகளிலிருந்தும் ஒருங்கிணைப்பு அடிப்படையில் ஒரு சீரானப் பொருண்மை உருப்படுத்தத்தைத் தருகிறது என்கிறது முதல் குறிப்பு. இரண்டாவது குறிப்பு குண அமைப்பைக் குறிப்பட்ட பொருண்மை வகுப்புகளுடன் ஒத்தறி அடிப்படையில் பயன்படுத்தத்தக்கது அல்லது குறிப்பிடத்தக்கது என்று கருத நம்மை அனுமதிக்கின்றது. குண அமைப்பின் தொடக்க உருப்படுத்தமாகப் பரம்பரைப் பண்புக்கூறு அமைப்பை (Generic Feature Structure) பயன்படுத்தலாம். α என்ற சொல்லுக்குப் பங்களிப்புகளைப் பின்வருமாறு பண்பாக்கம் செய்யலாம்.

(85)

$$\begin{pmatrix} \alpha \\ \\ \text{குண அமைப்பு} = \begin{pmatrix} \text{உறுப்புப் பங்களிப்பு} = \ldots \\ \text{வடிவப் பங்களிப்பு} = \ldots \\ \text{நோக்கப் பங்களிப்பு} = \ldots \\ \text{செயலிப் பங்களிப்பு} = \ldots \end{pmatrix} \end{pmatrix}$$

மேற்சொன்ன பட்டியல் ஒரு குறிப்பிட்ட சொல்லலகு எவ்வாறு குறிப்பீடு செய்கின்றது என்பதைப் பற்றிக் கூறவில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு புதினத்தின் நோக்கம் படிப்பதற்கு என்றாலும் அது ஒருவர் எழுதுவதால் உருவாக்கம் பெறுகிறது என்றாலும்

நாம் புதினம் என்ற பொதுப் பெயர் அம்மாதிரியான செயல்களைக் காட்டுவதாகக் கூற விரும்பவில்லை. எனவே ஒரு சொல் அலகுக்குப் பின்வருவது போன்ற குண மதிப்பீடுகளை, அவை உணர்வு அடிப்படையில் சரியானது என்றாலும் அவற்றைச் சரியாகப் பிணைக்காமல் பட்டியலிட இயலாது.

(86) புதினம்
…
குண அமைப்பு= உறுப்புப்பங்களிப்பு=கதை
வடிவப் பங்களிப்பு=புத்தகம்
நோக்கப் பங்களிப்பு=படிப்பது
செயலிப் பங்களிப்பு=எழுவது

இது பயனிலைப்படுத்தல் அடிப்படையில் சிக்கலாக இருப்பதோடல்லாமல் பொருண்மையியலின் கூடுதல் பல்லுருப ஆய்வை ஊக்குவிக்கும் தரவைக் கவனிக்காது விட்டுவிடுகிறது. அதாவது *புதினம்* என்ற பெயர் மரபு வழியில் பயனிலைப்படுத்தப்பட வேண்டும் ஆனால் குறிப்பிட்ட சூழல்களில் வட்டாரத் தொடரியல் மற்றும் பொருண்மையியல் சூழல்களாலும் சொல்லின் பொருண்மையியலிலிருந்து மீட்டுருவாக்கத்தாலும் உரிமை தரப்பட்ட பொருள்கோள்களை அனுமதிக்க வேண்டும். இக்கருதல்களின் தீர்வுகள் குண மதிப்பீடுகளை நன்கு விளக்கப்பட்ட வடிவுகளுடனும் உறவுசார் அமைப்புகளுடன் (relational structure) கூடிய வெளிப்பாடுகளாக ஆய்வதாகும். எடுத்துக்காட்டாக, *படி* என்ற உறவின் பங்கெடுப்பாளர்கள் பயனிலைச் சொல்லின் பொருத்தமானப் பிணைப்பைச் சுட்டிக்காட்டிக் கீழே வெளிப்படையாகத் தரப்பட்டுள்ளன.

(87) [புதினம்

... குண அமைப்பு = (வடிவ = புத்தகம் (x) ; நோக்க= படி (y,x))]

மேற்கண்ட உருப்படுத்தம் தரப்படுகையில் *தொடங்கு, முடி* என்ற வினைகளால் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ள சூழலில் பொருள் விளைவை (“Sense In Context” Effect) உருவாக்கச் சூழல் தகவல் எங்கிருந்து வருகிறது என்பதை இப்போது பார்க்க இயலும்.

(88) அ.ராணி புதினத்தைத் தொடங்கினாள்.

ஆ.ராஜா சிகரட்டை முடித்துவிட்டான்.

இ.ராஜா இரண்டாவது மதுபானத்தைத் தொடங்கினான்.

குண அமைப்புப் (Qualia Structure) பெயர்களையும் அவற்றை உள்ளடக்கும் பெயர்த் தொடர்களையும் அவற்றுடன் தொடர்புடைய குணச் சிறப்புகளையும் செயல்களையும் குறியாக்கம் செய்ய வைக்கிறது. இது மறுபடியும் *தொடங்கு* அல்லது *முடி* என்பதன் பொருளினைச் சூழல்படுத்தம் செய்வதற்குத் (“contextalizing the sense”) தேவையான தகவலைப் பெயர்த் தொடர் நிரப்பியை ஆளும் வினைக்குத் தருகின்றது.

நாம் சுருக்கமாக வினைகளின் பொருண்மையியலையும் பொருண்மையியலில் குண அடிப்படையில் உருப்படுத்தத்தால் (qualia-based representation) செய்யப்படும் பங்களிப்பையும் சுருக்கமாக விளக்குவோம். உள்ளுணர்வு அடிப்படையில் ஒரு நிலையான பயனிலை (stative predicate) குண அமைப்பில் வடிவம் சார்ந்த பங்களிப்புடன் பொருந்தும்; அதாவது சில நிலவரங்கள் அது எவ்வாறு வந்தது என்பதன் குறிப்பு இல்லாமல் இருப்பது. எடுத்துக்காட்டு, *உயரமான* என்ற பயனிலையைப்

(பங்களிப்பாளர் அமைப்புப் பற்றிய விளக்கங்களைத் தவிர்த்துப்) பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்.

(86)

உயரமான
நிஅமைப்பு = [E1=e1==நிலை]

குஅமைப்பு = [முறையான=உயர்ந்த (e1,x)]

அடுத்தப்படியாக, காரணப் பயனிலைகளுடன் (causative predicates) (அதாவது மாற்றல்கள் (transitions) தொடர்புயை குண அமைப்பை (qualia structure) எடுத்துக்கொள்வோம். இவ்வினைகள் ஒரு தொடக்கச் செயலை அல்லது செயற்பாங்கை (process) மற்றும் அதைத் தொடர்ந்து விளையும் நிலையையும் உள்ளடக்குவதாக ஆயப்படுகிறது. இவ்விரண்டு வருகை நிலைகள் (phases) முறையே செயலி மற்றும் வடிவக் குணப் பங்களிப்புகளுடன் நேரடியாகப் பொருத்தமுறுகிறது. உடை என்ற வினையின் செயப்படுபொருள் குன்றா வடிவம் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

(90)

உடை
நிகழ்வு அமைப்பு = [E1=e1: செயற்பாங்கு
E2=e2: நிலை]
குண அமைப்பு = (மறு அமைப்பு= $<_{\alpha}$
முறையான =உடைக்கப்படு
செயலி =உடை-செயல் (e1,x,Y))

இறுதியாக ஒரு செயற்பாங்கைக் காட்டும் பயனிலைகள், அப்பயனிலை தொடர்புபடுத்தப்பட்டுள்ள விளக்கத்தின் பாங்கு அடிப்படையில் வேறுபடுத்தப்பட்டுள்ளன. புஸ்தெஜோவ்ஸ்கி இங்குச் செயலி (agentive) மற்றும் வடிவச்

(formal) செயற்பாங்குகளுக்கிடையே உள்ள வேறுபாட்டை மட்டும் எடுத்துக்கொள்கிறார். டால்மி கூறியபடி (Talmy. 1975, 1985) பல மொழிகள் செயற்பாங்குகளின் செய்வினை மற்றும் செயப்பாட்டுவினை வகுப்புகளை வேறுபடுத்துகின்றன. முதலாவது வகுப்பு *ஓடு* மற்றும் *நகர்* போன்ற சலன வினைகளையும் இரண்டாவது *தூங்கு, குறட்டைவிடு* போன்ற வினைகளையும் உள்ளடக்குகின்றன. இவ்வோறுபாடு ஒரு மொழியில் உள்ள செயப்படு பொருளற்ற வினை/எர்காடிவ் அற்ற வினை வேறுபாட்டுடன் பொருத்தமாக (Isomophic) இருக்கத் தேவையில்லை. செய்வினைச் செயற்பாங்கு (active process class) *ஓடு* என்ற வினையால் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக *ஓடு* என்ற வினை 1-இன் குண அமைப்பையும் உறங்கு என்ற வினை 2-இன் குண அமைப்பையும் கொண்டிருக்கின்றன.

(91) ஓடு
நிகழ்வு அமைப்பு = E1=e1:செயற்பாங்கு
குண.அமைப்பு = செயலிசார்:ஓடு செயல் (e1,x)

(92) உறங்கு
நிகழ்வு அமைப்பு= E1:e1=செயற்பாங்கு
குண.அமைப்பு = வடிவம்சார்;:உறங்கு(e1,x)

பொருண்மை மட்டங்களின் ஊடாட்டம்

இங்குச் சொற்பொருண்மையியல் உருப்படுத்தங்களின் ஒரு சீரான மொழி உருவாக்கத்திற்கு வேண்டி பங்கெடுப்பாளர் (argument), நிகழ்வு (event) மற்றும் குண அமைப்பு (Qualia Structure) என்ற மூன்று மட்டங்களும் தொடர்புடுத்தப்படும். வகைப்படுத்தப்பட்ட பண்புக்கூறு அமைப்புகள் அடிப்படையிலான ஒழுங்கமைப்புகள் (typed feature structures) மேற்கொள்ளப்படும். இந்த ஒழுங்கமைப்பில் இரண்டு

பாகங்கள் இருக்கிறது; ஒன்று வகைப் படிநிலை அமைப்பு (type hirarchy) மற்றொன்று வகைகளின் மேல் செயல்படும் கட்டுப்பாட்டு ஒழுங்கமைப்பு (constraint system). புஸ்தெஜோவ்ஸ்கி பின்வருமாறு கருதுகிறார்: பொருண்மை வகுப்புச் செய்திகள் (semantic class information) துணை வகைக் குறிப்பீடுகளால் மரபுரிமையாகப் பெறப்படலாம். இது பங்கெடுப்பாளர்களின் வகைகளின் மீது கட்டுப்பாடுகளைத் தருகின்றது. முன்னர் விளக்கப்பட்ட இம்மூன்று நிலைகளும் எவ்வாறு ஒருங்கிணைந்த உருப்படுத்தத்தை (integrated representation) இணைந்து தருகின்றது என்பதை எடுத்துக்காட்ட *கட்டு* என்ற சொல்லின் பொருண்மையை எடுத்துக்கொள்வோம். நாம் உருப்படுத்தத்தின் ஒவ்வொரு நிலைக்கும் அமைப்புகளைத் தனித்தனியாகத் தந்துவிட்டோம். இவ்வினையுடன் தொடர்புபடுத்தப்பட்ட மூன்று பங்கெடுப்பாளர்களை நினைவு கூறவும்: இரு உண்மைப் பங்கெடுப்பாளர்கள் (true argument) மற்றும் ஒரு வழுநிலைப் பங்கெடுப்பாளர் (default argument). மேலும் இவ்வினையை இரு துணை நிகழ்வுகள் (subevents), ஒரு செயற்பாங்கு (process) மற்றும் விளைநிலை (resulting state) என்பனவற்றைக் கொண்டிருக்கும் சொல் பேறாக (lexical accomplishment) ஆய்ந்தோம். இவை குண அமைப்புடன் இணைக்கப்பட்டுப் பின்வரும் உருப்படுத்தத்தைப் பெறும் (Pustejovsky, 1995: 82):

(93)

கட்டு

நி.அமைப்பு= E1=e1: செயற்பாங்கு
E2=e2: நிலை
மறு அமைப்பு= <α
தலை= e1

ப.அமைப்பு= ப.ஆளர்1= [1] விலங்கு_தனி
வடிவசார் =பௌதீகப்பொருள்
ப.ஆளர்2= [2] செய்யப்பட்டது
உறுப்பு = [3]
வடிவ = பௌதீகப்பொருள்
வப.ஆளர் [3] மூலப்பொருள்
வடிவ = திரள்

கு.அமைப்பு= உருவாக்கு_சொ.க.அ
வடிவசார்= இரு (e2, [2])
செயலிசார்=கட்டு_செய்கை(e1= [1], [3])

அகத் தொடரியல் எழுவாய் (deep syntactic object) (ப.ஆளர்1) மற்றும் ப.ஆளர்2-இன் உறுப்பு உறவால் தர்க்கச் செயப்படுபொருளுடன் (logical object) தொடர்புடைய வழுநிலைப் பங்கெடுப்பாளர் (வப.ஆளர்1) என்பனவற்றை உள்ளடக்குவம் செயலிச் செயலாகச் (AGENTIVE act) செயற்பாங்கு அடையாளம் காணப்படுகின்றது. வடிவப் பங்களிப்புச் (formal role) செயப்படுப்பொருள் (பங்கெடுப்பாளர்2)-ஆக விளைநிலையை (resulting state) வெளிப்படுத்துகிறது. இந்தத் தனியான ஒன்று வழுநிலைப் பங்கெடுப்பாளர் (வப.ஆளர்-1) செயப்படுபொருளால் உருவாக்கப்பட்டதாக விவரணை செய்வதால் அதிலிருந்து தர்க்க அடிப்படையில் வேறுபடுகிறது.

குண அமைப்பு (Qualia Structure)

இங்குக் குண அமைப்பில் சொற்கள் எவ்வாறு பொருண்மைத் தகவல்களைக் குறியாக்கம் செய்கிறது என்பதைப் பற்றிக் கூறுப்படுகின்றது; குறிப்பாகக் குண அமைப்பு எதைப் பரிமாறுகிறது என்பதைப் பற்றி விளக்குகிறது.

கீழே குண அமைப்பு ஒவ்வொரு பங்களிப்பும் எடுக்கும் சாத்தியமான மதிப்புகளுடன் முறையில்லாத (Informal) பொருள்கோண்மைத் தரப்பட்டுள்ளது.

1. உறுப்பு அமைப்பு (Constitutive Structure): பொருளுக்கும் அதன் உறுப்புகளுக்கும் அல்லது பொருத்தமான பகுதிகளுக்கும் இடையே உள்ள உறவு.

அ. உருப்பொருள் (Material)

ஆ. எடை (Weight)

இ. பாகங்களும் அதன் கூறு தனிமங்களும் (Parts And Component Elements)

2. முறையான அமைப்பு (Formal Structure): ஒரு பெரிய பொருட்களத்திற்குள் பொருளை (object) வேறுபடுத்தும்.

அ. நோக்குநிலை (Orientation)

ஆ. பருமன் (Magnitude)

இ. வடிவம் (Shape)

ஈ. பரிமாணம் (Dimensionality)

உ. நிறம் (Colour)

ஊ. இருப்பு (Position)

3. நோக்க அமைப்பு (Telic Structure): பொருளின் (object) தேவையும் செயல்பாடும்.

அ. ஒரு செயல் செய்வதில் செயலிக்கு இருக்கும் நோக்கம்.

ஆ. சில செயல்களைக் குறிப்பிடும் உள்ளமையும் செயல்பாடு அல்லது நோக்கம்.

4. செயலி அமைப்பு (Agentive Structure): ஒரு பொருளின் தொடக்கத்திற்கோ வருகைக்கோ உட்படும் காரணிகள்.

அ. உருவாக்குபவர் (Creator)

ஆ. உருவாக்கப்பட்ட பொருள் (Artifact)

இ. இயற்கை வகை (Natural Kind)

ஈ. காரணச் சங்கிலி (Causal Chain)

ஆக்கமுறை அகராதிக்குள் இந்தப் பார்வை வேறுபட்டது. ஒரு சொல்லின் அல்லது தொடரின் குறிபொருளை மாற்ற பொருண்மையியல் மாற்றங்கள் (semantic transformation) பயன்படும் அமைப்புச் சட்டகத்தை குண அமைப்புத் தருகிறது. இந்த மாற்றங்கள் வகைக்கட்டாயம் (type coercion,) தேர்வு இணைப்பு (selective binding) மற்றும் ஒருங்கிணைப்பு (co-composition) போன்ற ஆக்கமுறை உபாயங்கள் ஆகும். இவை வெளிப்பாட்டைப் புதிய பொருண்மைக்கு முறையாக உருப்படுத்தம் செய்கிறது. இந்தச் செயன்மைகள் சொல் இயைபு உறவுகள் (lexical governance relation) என்பதன் அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது; அதாவது அவற்றின் பயன்பாடுகள் தொடர்கள் தோன்றுகிற தொடரியல் மற்றும் பொருண்மையியல் சூழ்நிலைகளால் கட்டுண்டது. எடுத்துக்காட்டாக, நாம் ஒரு பெயர்த்தொடரின் அமைப்பை ஆளும் வினையின்

அமைப்புடன் (governing verb) சேர்த்தால் ஒருங்கிணைப்பின் வளமான கருத்துச்சாயலைப் பார்க்கத் தொடங்குவோம். இது சொற்களின் படைப்புப் பயன்பாட்டையும் சூழல் பொருளையும் எடுத்துக்காட்டும். பின்வரும் வாக்கியங்களில் எழுவாய் மற்றும் நிரப்பி இடத்தில் வருகிற பெயர்த்தொடர்கள் *பயன்படு* என்ற வினையின் பொருள்கோண்மையில் எவ்வாறு பங்கெடுக்கிறது என்பதைக் கருத்தில் கொள்வோம்.

(94) அ.ராஜா வான்கோழிக்குப் புதிய கத்தியைப் பயன்படுத்தினான்.

ஆ.ராணி கல்லூரிக்குச் செல்லத் தொடங்கியதிலிருந்து மூக்குக் கண்ணாடியைப் பயன்படுத்துகிறாள்.

இ. இந்தப் பேருந்து டீசலைப் பயன்படுத்துகிறது.

ஈ. என் மனைவி தினமும் சுரங்கப் பாதையைப் பயன்படுத்துகிறாள்.

(95) அ.நகல் எடுக்கும் பொறியில் டோனர் பயன்படுத்தப்படுகிறது.

ஆ.ஈஸ்ட் பீர் பானத்தில் பயன்படுத்தப்படுகிறது.

முதல் வாக்கியத்தில் வெட்ட இயலும் கத்தியைப் பற்றிய நமது அறிவு வெளிப்பாட்டில் சிக்கனத்தை அனுமதிக்கிறது. இதனால் வெட்டுகிற குறிப்பிட்ட செயல்பாட்டைக் கூறுவது நீக்கப்படுகிறது. இதுபோல மூக்குக் கண்ணாடி கட்புலக் கருவியாகும். அதைப் பயன்படுத்துவது அதை அணியும் செயலைக் குறிப்பிடும். *பயன்படு* போன்ற வினைகளின் பயன்பாடு பொருண்மையியல் அடிப்படையில் இலகு (light) ஆகும் (Grimshaw and Rosen 1990); இது புஸ்தெஜோவ்ஸ்கியால் குறைத்துச் சிற்பிக்கப்பட்டது

(underspecified) என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த நேர்வுகளுக்கு எந்த அர்த்தம் பொருத்தமானது என்பதைத் தீர்மானிக்க நம்மை அனுமதிக்கும் காரணிகள் இரண்டாகும்:

1. கட்டுமானத்தில் ஒவ்வொரு தொடருக்கும் குண அமைப்புகள்.

2. குண அமைப்புத் தகவலைச் சாதகமாக எடுத்துக்கொள்ள இயலும் கூட்டிணைப்பின் வளமானப் பாங்கு.

சூழலில் பொருள்கோண்மையைக் குண அமைப்பு பெறச் செய்யும் வழிக்கு எடுத்துக்காட்டாக *இரசி* என்ற வினையின் சூழ்நிலையில் வரும் மறைக்கப்பட்ட பயனிலை நிரப்பியால் பெறப்படுவதைக் காட்டலாம்.

(96) அ.ராணி ஒரு திரைப்படத்தை இரசித்தாள் (பார்த்து)

ஆ.ராஜா தேனீரை இரசித்தான் (குடித்து)

இ.ராணி கல்கியின் பொன்னியின் செல்வனை இரசித்தாள் (படித்து)

ஒன்றை இரசிப்பதற்குப் பல வழிகள் இருந்தாலும் இந்த வாக்கியங்களைப் பொறுத்த வரையில் நமது புரிந்துகொள்ளுதல் சம்மந்தப்பட்ட பொருள்களுடன் தொடர்புடைய குணங்கள் மற்றும் செயல்களின் பொருள்கோண்மையால் (விளக்கத்தால்) சாத்தியமாகிறது. ஒரு பொருளின் குண அமைப்பைப் பொருள்கோண்மைகள் உருவாக்கப்படுகிற தொடக்கப் புள்ளிகளாகப் பார்க்க இயலும். எனவே *திரைப்படம்*, *தேனீர்* மற்றும் *புத்தகம்* இவற்றின் நோக்கப் பண்புகள் (telic roles) திரைப்படம் பார்த்தல், தேனீரைக் குடித்தல், கல்கியின் பொன்னியின் செல்வனைப் படித்தல் என்ற செயல்களை வருவரைவு (project) செய்கின்றது. ஒரு வினையின் பொருளின் சூழலாக்கம் அதன் நிரப்பியின் பொருண்மையிலிருந்து வரத் தேவை இல்லை; ஆனால்

வெளிப்படையான வழிகளில் எழுவாயாலும் ஊக்கப்படுத்தப்படும். எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் வாக்கியம் ஒன்றில் மறைந்தப் பயனிலையின் பொருள்கோண்மைக்கு இரண்டு காரணிகள் பங்கெடுப்புச் செய்கிறன: எழுவாய்ப் பெயர்த்தொடருடன் உறவுடைய குண அமைப்புகள் மற்றும் இரட்டைச் செயப்படுபொருள் பெயர்த்தொடர்கள் (double object NPs).

அ. பெரும்பாலான விமான ஓட்டிகள் சத்திரபதி சிவாஜியை விட இந்திராகாந்தியை விரும்புகிறார்கள்.

ஆ. பெரும்பலான விமான ஓட்டிகள் பம்பாயை விட தில்லியை விரும்புகிறார்கள்.

விமான நிலையங்களின் பெயர்களாக அடையாளம் காணப்படும் நிரப்பிகள் இறங்குதல், பறக்கத்தொடங்குதல் என்ற வழுநிலை இணை-இணைப்புப் பொருள்கோண்மையை அனுமதிக்கின்றது. பின்வரும் வாக்கியங்களில் உள்ள செயலிப்பெயர்கள் (agentive nominals) வினைத்தொடர் பொருண்மையால் கூறப்படாத பொருள்கோண்மையைச் செய்கின்றது.

(97) அ. புத்தக விற்பனையாளர்கள் இவ்வாண்டு புதினங்களுக்குப் பதிலாகப் பாடநூலைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

ஆ. விவசாயிகள் இவ்வாண்டில் பொன்னி நெல்லைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

மேற்சொன்ன வாக்கியங்களில் விவசாயிகள் சாப்பிட பொன்னி நெல்லைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்றோ, புத்தக விற்பனையாளர் படிப்பதற்குப் பாடநூலைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்றோ பொருள் கொள்ள இயலாது. விவசாயிகள் விவசாயம் செய்ய பொன்னி நெல்லையும், புத்தக விற்பனையாளர் விற்க பாடப்புத்தகங்களையும் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்றும் பொருள் பெறப்படும். செயலிப் பெயர்களில் இருந்து

கிடைக்கும் நோக்கப் பங்களிப்புகள் வினைத்தொடர் அகப்பொருள்கோளைப் புறக்கணிக்கும். இதுவரை நாம் வினை மற்றும் பெயர்களின் பொருண்மையியலைப் பற்றி விவாதித்தோம். இருப்பினும் குண அமைப்பு அடிப்படையிலான உருப்படுத்தத்தைப் பிற சொல் வகைப்பாடுகளுக்கும் நீட்சி செய்யலாம். பின்வரும் எடுத்துக்காட்டுகளை எடுத்துக்கொள்வோம்.

(98) அ.வெளிச்சமான மின்விளக்கு.

ஆ.உருண்டையான மின்விளக்கு.

(99) அ.விரைவான தட்டச்சாளர்.

ஆ.ஆண் தட்டச்சாளர்.

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளில் *வெளிச்சமான* மற்றும் *விரைவான* என்பன உண்மையில் நிகழ்வுப் பயனிலைகள். அவை தலைப்பெயரின் ஏதோ நோக்கை அடை செய்கின்றது. ஒவ்வொன்றும் பெயருடன் தொடர்புடைய குண அமைப்பால் உந்தப்பட்ட நிகழ்வைக் குறிப்பிடுகிறது. மின் விளக்குக்கின் நோக்கப் பங்களிப்பு (telic role) வெளிச்சம் தருவது ஆகும். தட்டச்சாளருக்கு அப்பெயர் ஆக்கப்படும் வினையின் செயற்பாங்கைக் குறிப்பிடும் நோக்கப் பங்களிப்பு தட்டச்சு செய்வதாகும். மாறாக *உருண்டையான* மற்றும் *ஆண்* என்ற பெயரடைகள் தலையின் முறையான பங்களிப்பைக் குறிப்பிடுகின்றன. பெயரடைகள் அவைகள் அடை செய்யும் தொடர்களின் குண அமைப்புக்குள் இருக்கிற வகை செய்யும் தகவல் அடிப்படையில் துணைத் தேர்வு செய்ய இயலும் என்று தோன்றுகிறது. இருப்பினும் இது எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது என்பது இன்றும் தெளிவாக இல்லை. பெயரடைகள் தலைப் பெயரிலுள்ள குறிப்பிட்ட குண அமைப்புக்குத் தேர்வு செய்யவில்லை; ஆனால் குணப் பங்களிப்பின் மதிப்பிற்குள் இருக்கிற அல்லது இல்லாத குறிப்பிட்ட வகையையும் தேர்ந்தெடுக்கும் என்பது சாத்தியமாகும்.

இப்பகுதியில் புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைப் பற்றி விரிவாகப் பார்தோம். ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு எவ்வாறு சொற்களின் பல்பொருண்மையை ஆக்கமுறை அணுகுமுறையால் விளக்கவியலும் என்று தெளிவாகக் கூறுகின்றது. அவருடைய கோட்பாட்டை இயன்றவரைத் தமிழ் எடுத்துக்காட்டுகளின் உதவியால் விளக்கும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்முயற்சியின் பயனாய் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைத் தமிழுக்குப் பயன்படுத்தும் ஆய்விற்கு ஒரு தொடக்கம் ஏற்பட்டுள்ளது. இது அடுத்துவரும் பகுதிக்கு அடிப்படையாய் அமையும்.

6.3. ஆக்கமுறை அகராதி கோட்பாடு அடிப்படையில் வினைகளின் பொருண்மை நிட்சி

இங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட வினைகளின் பல்பொருண்மையை அல்லது பொருண்மை நீட்சியை ஆக்கமுறை அகராதி கோட்பாட்டின் அடிப்படையில் விளக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.3.1 அசை

க்ரியாவில் அசை என்பதற்கு மூன்று முரண்படு பதிவுகள் தரப்பட்டுள்ளன. முதல் இரு பதிவுகளும் வினைப் பதிவுகளாகும்; மூன்றாவது பதிவு பெயர்ப் பதிவாகும். அசை1 செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் அசை2 செயப்படுபொருள் குன்றாவினையாகவும் எடுக்கப்பெற்றுத் தனித்தனி பதிவுகளாகத் தரப்பட்டுள்ளன.

6.3.1.1. அசை1

க்ரியாவின் அகராதியில் *அசை1* என்பதற்கு நான்கு பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை க்ரியாவின் தற்காலத் தமிழ்

அகராதியின் அடிப்படையில் இவ்வினையின் வேறுபட்ட பொருள்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்.

அட்டவணை 1

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	காரணம்	இடம்
1	(மேலும் கீழும் அல்லது பக்கவாட்டில் மென்மையாக) ஆடுதல்.	1.காற்றில் கிளைகள் அசைகின்றன. 2.அவர் நாற்காலியில் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தார்.	1. கிளைகள் 2. அவர்	1. காற்று	2. நாற்காலி
2	நகர்தல்; நகர்ந்து இடம்பெயர்தல்	1.அவர் தேர் மாதிரி அசைந்து போகிறார். 2.படுக்கையில் அசையாமல் படுத்திருந்தான்.	1. அவர்/ தேர் 2. அவன்		2.படுக்கையில்
3	(பெறும்பாலும் எதிர்மறைச் சொற்களோடு) (முடிவிலிருந்து/கொள்கையிலிருந்து) மாறுதல்	அம்மா எவ்வளவோ கேட்டுப்பார்த்தும் அப்பா அசையவில்லை.	அப்பா		
4	(உடலில் உறுப்புகள்) மேலும் கீழுமோ பக்கவாட்டிலோ இயங்குதல்;	தாடை அசையாமல் பேச முடியாது.	தாடை		

மேற்கண்ட அட்டவணையில் *அசை1* என்பதற்கு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் தரப்பட்டுள்ளத் தகவலகள் அடிப்படையில் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்களில் “(மேலும் கீழும் அல்லது பக்கவாட்டில் மென்மையாக) ஆடுதல்” என்பது முதன்மை அர்த்தமாகும்; “நகர்தல்; நடந்து இடம் பெயர்தல், (பெரும்பாலும் எதிர்மறைச் சொற்களோடு) (முடிவிலிருந்து/கொள்கையிலிருந்து) மாறுதல், (உடல் உறுப்புகள்) இயங்குதல்” என்பன துணைநிலைப் பொருளாகும். இவற்றுள்

மூன்று பொருள்கள் (1, 2, 4) உண்மையான சலனத்தையும் ஒன்று (3) உருவகமான சலனத்தையும் குறிப்பிட்டு நிற்கின்றன. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வினையின் வேறுபட்ட பொருள்களைச் சூழல் தரும் கட்டுப்பாட்டின் அடிப்படையில் புரிந்துகொள்ள உதவும். செயப்படுபொருள் குன்றியவினையான அசை1 அசையும் பொருள்களை எழுவாயைப் பங்கெடுப்பாளராக ஏற்கும். இவ்வினை தலையை ஆட்டுவதிலிருந்து முடிவிலிருந்து அல்லது கொள்கையிலிருந்து மாறுதல் வரையிலான பொருண்மை நீட்சியைக் காட்டுவதாய் இவ்வகராதி மூலம் தெரிய வருகிறது. இப்பொருண்மை நீட்சிகளை ஓரளவிற்கு இவ்வினையின் எழுவாயாக வரும் பங்கெடுப்பாளரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம். அதாவது இவ்வினையின் வேறுபட்ட பொருள்களை அல்லது பல்பொருண்மையை எழுவாயின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் நிர்ணயிக்கலாம் அல்லது ஆக்கலாம். க்ரியாவில் தரப்பட்டுள்ள தகவல்களிலிருந்து இவ்வினையின் வேறுபட்ட பொருண்மைகளைப் பின்வருமாறு ஆயாலாம்.

(235)



வேறுபட்டச் சூழலில் இவ்வினைகள் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான பொருள்களை உணர்த்தும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த ஒரு சொற்பொருண்மையியலின் மாதிரியை நாம் தரவேண்டும். இவ்வினை அசையும் செயலைச் செய்யும் எழுவாயை முக்கிய பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். எழுவாய்ப் பங்கெடுப்பாளர்

வழுநிலையில் பெயர்த்தொடராக மெய்படுத்தம் பெறும். எனவே இதன் பங்கெடுப்பாளர் சட்டகம் பின்வருமாறு அமையும்.

(236) அசை1 [பெதொ ---]

மேலே பட்டியலிடப்பட்டுள்ள இவ்வினையின் பொருண்மை நீட்சிகளை ஓரளவிற்கு இவ்வினையின் எழுவாயாக வரும் பங்கெடுப்பாளரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம் அல்லது ஆக்கலாம். புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையில் இவ்வினையின் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (முறையான பங்களிப்பு, உறுப்பு பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு) சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்.

6.3.1.2 அசை2

க்ரியாவின் அகராதியில் *அசை2* என்பதற்கு நான்கு பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இவ்வினையின் வேறுபட்ட பொருள்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்.

அட்டவணை 2

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	
1.	ஆட்டுதல்	1.கம்பத்தை அசைத்துப் பிடுங்கினார்கள். 2.சம்மதத்துக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். 3.குடியரசுத் தலைவரைக்	1.அவர்கள் 2.அவன்	1.கம்பம் 2. தலை	

		குழந்தைகள் கொடி அசைத்து வரவேற்றனர்.	3.குழந்தைகள்	3. கொடி	
2.	(ஒரு பொருளை) இடம்பெயரச் செய்தல்;	இந்தக் கனமானப் பெட்டியை ஒரு ஆளால் அசைக்க முடியாது.	ஒரு ஆள்	இந்தக் கனமான பெட்டி	
3	(உடலில் சில உறுப்புகளை) மேலும் கீழுமோ பக்கவாட்டிலோ ஆட்டுதல் அல்லது இயக்குதல்	கைகால்களை அசைக்க இடமில்லை..		கைகால்கள்	
4	(நம்பிக்கையை, உறுதியை) குலைத்தல்	1.அவருடைய உறுதியை அசைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. 2.என்னை எவனும் அசைக்க முடியாது.	1.சந்தர்ப்பம் 2.எவனும்	1.அவருடைய உறுதி	

அசை2 என்பதற்கு தற்காலத் தமிழ் அகராதியில் "ஆட்டுதல்" என்பது முதன்மைப் பொருளாகவும் "(ஒரு பொருளை) இடம்பெறச் செய்தல், (விரல் முதலியவற்றை) தொழிற்படுத்துதல், (நம்பிக்கையை, உறுதியை) குலைத்தல்; மாற்றுதல்" என்பன துணைநிலைப் பொருள்களாகவும் பட்டியலிடப்பட்டுள்ளன. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வினையின் வேறுபட்ட பொருள்களைச் சூழல் தரும் கட்டுப்பாட்டின் அடிப்படையில் புரிந்துகொள்ள உதவும். "ஆட்டுதல், ஒரு பொருளை இடம்பெறச் செய்தல், விரல் முதலியவற்றைத் தொழிற்படுத்துதல்" என்பன உண்மையான சலனத்தையும் "நம்பிக்கை, உறுதி போன்றவற்றைக் குலைத்தல்/மாற்றுதல்" என்பது

உருவகச் சலனத்தையும் குறிப்பிட்டு நிற்கிறது. இவ்வினை கம்பத்தை அசைப்பதிலிருந்து நம்பிக்கையை அல்லது உறுதியை அசைத்தல் வரையிலானா பொருண்மை நீட்சிகளைக் காட்டுவது இவ்வகராதி மூலம் தெரிகின்றது. க்ரியாவில் தரப்பட்டுள்ள தகவல்களிலிருந்து இவ்வினையின் வேறுபட்ட பொருண்மைகளைப் பின்வருமாறு ஆயலாம்:

(237)



வேறுபட்ட சூழலில் இவ்வினையின் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான பொருள்களை உணர்த்தும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த ஒரு சொற்பொருண்மையில் மாதிரியை நாம் தரவேண்டும். இவ்வினை அசைத்தல் செயலைச் செய்யும் எழுவாயையும் அசைக்கப்படும் (அல்லது அசையும்) செயப்படுபொருளையும் முக்கியப் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். எழுவாய்ப் பங்கெடுப்பாளர் வழுநிலையில் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்படுத்தம் பெறும். எனவே இதன் பங்கெடுப்பாளர் சட்டகம் பின்வறுமாறு அமையும்.

(238) அசை [பெதொ + பெதொ-ஐ---]

மேலே பட்டியலிடப்பட்டுள்ள இவ்வினையின் பொருண்மை நீட்சிகளை ஓரளவிற்கு இவ்வினையின் எழுவாயாகவும் செயப்படுபொருளாகவும் வரும் பங்கெடுப்பாளரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம். புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையில் இவ்வினையின் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் காட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடைப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதி கோட்பாட்டுச் சட்டகத்தில் நிகழ்வு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு என்ற நான்கு அமைப்புகளின் அடிப்படையில் இவ்வினைப் பின்வறுமாறு உருபடுத்தம் செய்யலாம்.

(239)
அசை2
நிஅமைப்பு= E1: e1:செயற்பாங்கு
E2= e2:நிலை
மறு அமைப்பு=$<_{\alpha}$
தலைமை= e1
பஅமைப்பு= பஆளர்1= [1]
பஆளர்2= [2] பௌதீகப்பொருள்
முறையான= இருப்புப்பொருள்
குஅமைப்பு= வநிகாரணம்-சொகஅ
முறையான=அசை_விளைவு (e2, [2])
செயலி=அசை_செயல்(e1, [1], [2])

மேற்கண்ட சட்டகம் *அசை2* என்ற செயப்படுபொருள் குன்றாவினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற செயற்பாங்கையும் e2 என்ற நிலையையும் கொண்டிருப்பதை

உணர்த்தும். இது அசைத்தலாகிய செயல்பாட்டால் அசையப்பட்ட நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும். பங்கெடுப்பாளர் அமைப்பு பஆளர் 1 என்ற எழுவாயையும் பஆளர்2 என்ற செயப்படுபொருளையும் குறிப்பிட்டு நிற்கும். செயப்படுபொருளின் பொருண்மைக் கூறுகளின் தெரிவால் அசை2 என்ற வினை பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்பது புலனாகும்.

6.3.2 அஞ்சு

க்ரியாவின் அகராதியில் *அஞ்சு* என்பதற்கு இரண்டு பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இவ்வினையின் இரு பொருள்களையும், எடுத்துக்காட்டுகளையும், பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடுகின்றது.

அட்டவணை 3

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	காரணம்
1	பயப்படுதல்	1.யானையைக் கண்டு சிறுவன் அஞ்சி நடுங்கினான். 2.போராட்ட வீரர்கள் சிறைவாசத்திற்கு அஞ்சுவது இல்லை.	1.சிறுவன் 2.போராட்ட வீரர்கள்		1.யானையைக் கண்டு 2. சிறைவாசத்திற்கு
2	விரும்பத்தகாதது நடந்துவிட்டதை அல்லது நடந்துவிடக்கூடும் என்பதைத் தெரிவிக்குபோது பயத்தை அல்லது கவலையை வெளிப்படுத்துதல்	1.விபத்தில் குறைந்தது நூறு பேராவது இறந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. 2.நான் இவ்வளவு சொல்லியும் அவர் செய்யமாட்டார் என்று அஞ்சுகிறேன்.	(நான்)		1. குறைந்தது நூறு பேராவது இறந்திருக்கக்கூடும் என்று 2.நான் இவ்வளவு சொல்லியும் அவர் செய்யமாட்டார் என்று

அஞ்சு என்பது அடிப்படையில் செயப்படுபொருள் குன்றிய வினையாகும். இது பொரும்பாலும் ஒரு மனித இருப்புப்பொருளை எழுவாயாக ஏற்கும். இது சில சூழல்களில் செயப்படுபொருள்குன்றாவினையாகவும் செயல்படும். இதற்குப் பதிலாக இது ஒரு குவேற்றுமைத் தொடரையோ நிரப்பியையோ ஏற்று வரலாம்.

(2///)அ.அஞ்சு [பொ.தொ. + பெ.தொ.-ஐ ----]

ஆ,அவள் அவனை அஞ்சினாள்.

(2///) அ, அஞ்சு [பொ.தொ. + பெ.தொ.-கு ----]

ஆ. அவள் அவனுக்கு அஞ்சினாள்.

.அஞ்சு [பொ.தொ. + வா-என்று----]

அவள் அவன் வந்துவிடுவானோ என்று அஞ்சினாள்.

அஞ்சு என்பது "பயப்படுதல்", "விரும்பத்தகாதது நடந்துவிட்டதை அல்லது நடந்துவிடக்கூடியதாக இருப்பதை குறிப்பிடும்போது அதைப் பயத்தோடு தெரிவித்தல்" என இரு பொருள்கள் பெறும். முதலாவது பயப்படுதல் ஒன்றைக் கண்டு அல்லது ஒன்றின் துன்பத்தைக் கருத்தில் கொண்டு நிகழ்கிறது. இரண்டாவது பயப்படுதல் விரும்பத்தகாதது நடந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தால் ஏற்படுவது. பயப்படச் செய்யும் காரணங்கள் வினையடைத் தொடராகவும் நிரப்பனால் கட்டுண்ட நிரப்பியாகவும் (adjunct) வரும். இவற்றுள் ஒன்று கு-வேற்றுமைப் பெயர்த்தொடராகவும் உருபடுத்தம் பெறும்.

அஞ்சு என்பதன் பல்பொருண்மையை நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு என்ற நான்கு அமைப்பு விளக்கங்களின் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் விளக்கலாம் அல்லது ஆக்கலாம்; புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டுச் சட்டகத்தில் *அஞ்சு* என்பதன் பொருண்மை அமைப்பைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்:

(240)
அஞ்சு
நிஅமைப்பு= E1 : e1 : நிலை
D-E1= e2:செயற்பாங்கு
தலைமை = e1
பஅமைப்பு = பஆளர்1 : x : உயிருள்ள_இருப்புப்பொருள்
வநிபஆளர்1: [2] [T]
குஅமைப்பு = முறையான : அஞ்சு (e1, [1])
செயலி : அனுபவ_செயல் (e2, [1] [2])

மேற்கண்ட சட்டகம் *அஞ்சு* என்ற வினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற நிலையையும் e2 என்ற செயற்பாங்கையும் கொண்டிருப்பதை உணர்த்தும். இது பயமுறுத்தும் நிலையால் அஞ்சும் நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும்.

6.3.3 அடங்கு

க்ரியாவின் அகராதியில் *அடங்கு* என்பதற்கு எட்டு பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அட்டவணை

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்கள்	
			எழுவாய்	எழுவாயின் அடை/இடம்/பிற பங்கெடுப்பாளர்
1	(கோபம், தாகம், ஆசை, வேகம் முதலியவற்றின் தீவிரம்) தணிதல்; குறைதல்	1.அவளுடைய ஆவேசமும் படபடப்பும் இன்னும் அடங்கவில்லை.	1. ஆவேசமும் படபடப்பும்	அவளுடைய
2	(ஒன்று வெளிவராமல்) உள்ளுக்குள் இருந்துவிடுதல்	கேள்வி மனத்தில் எழுந்த வேகத்திலேயே அடங்கிவிட்டது.	கேள்வி	மனத்தில் எழுந்த
3	(உயிர்) நின்றுபோதல்; ஒடுங்குதல்	மூச்சு அடங்கும்வரை தன் மகன் நினைவாகவே இருந்தார்.	மூச்சு	அவர்
4	(ஓசை ஆரவாரம்) ஓய்தல்; (குரல்) அமுங்குதல்	1.காலை நேர ஓசைகள் ஒருவாறு அடங்கின. 2.அவளது குரல் அடங்கி ஒலித்தது.	1.காலை நேர ஓசைகள் 2. குரல்	2.அவளது
5	(ஒன்றின் கீழ் அல்லது ஒன்றின் உள்) அமைதல்; வரையறைக்கு உட்படுதல்	1.பொது ஊழியர் என்ற விளக்கத்தில் நகர சபை ஆனையாளரும் அடங்குவார். 2.முத்திரை நாணயங்கள் அடங்கிய ஒரு புதையல் அகப்பட்டது. 3.உன் கேள்வியிலேயே பதிலும் அடங்கியிருக்கிறது. 4.ஆவல் கட்டுக்குள் அடங்கவில்லை	1. நகர சபை ஆணையாளர் 2.முத்திரை நாணயங்கள் 3.பதில் 4.ஆவல்	1.பொது ஊழியர் என்ற விளக்கத்தில் 2.புதையல் 3.கேள்வி
6	(குறிப்பிட்ட அளவில்) கொள்ளுதல்	1.கைக்கு அடங்குகிற அளவுள்ள ஒரு மாம்பழம். 2.இவ்வளவு துணிகளும் பெட்டியில் அடங்காது.	1. மாம்பழம் 2.துணிகள்	1.கை
7	கீழ்ப்படிதல்; பணிந்து போதல்	பெற்றோருக்கு அடங்கிய பையன்.	பையன்	பெற்றோருக்கு

8	சார்ந்திருத்தல்	நஷ்டத்தை இலாபமாக்குவதில்தான் உன் திறமையே அடங்கியிருக்கிறது.	திறமை	நஷ்டத்தை இலாபமாக்குவதில்

அடங்கு என்பது செயப்படுபொருள் குன்றிய வினையாகும். எனவே இதன் பொருள்கோண்மை அல்லது பொருண்மை நீட்சி பெரும்பாலும் இதன் எழுவாயாக வரும் பெயர் அல்லது பெயர்த்தொடரின் பொருண்மைப் பண்புக்கூறுகள் அடிப்படையில் அமையும். இதனுடன் இணைந்து இதன் சூழலை நிர்ணயிக்கும் பிற சொற்களின் பொருண்மைப் பண்புக்கூறுகளும் *அடங்கு* என்பதன் பொருண்மையைத் தேர்ந்தெடுக்கின்றது என்பதை மேற்கண்ட அட்டவணை தெளிவுபடுத்துகின்றது. இதைப் பின்வருமாறு வாய்ப்பாட்டால் குறிப்பிடலாம்.

(241) அடங்கு [பெதொ + சேர்ந்துவரும் பிற சொற்கள்-----]

+எழுவாய் + + அவற்றின் பங்களிப்பு

+பொ.ப.கூ. + பொ.ப.கூ.

அடங்கு என்ற வினைக்கு “கோபம், தாகம், ஆசை முதலியன தீவிரத்தில் தணிதல் அல்லது குறைதல்”, “வெளிவராமல் உள்ளுக்குள் இருந்து விடுதல்”, “உயிர் ஒடுங்குதல்”, ஓசை, ஆரவாரம் ஓய்தல்; குரல் அமுங்குதல்”, “ஒன்றின் கீழ் அல்லது ஒன்றின் உள் அமைதல்; வரையறைக்கு உட்படுதல்”, “குறிப்பிட்ட அளவில் கொள்ளுதல்”, “கீழ்ப்படிதல்; பணிந்துபோதல்”, “சார்ந்திருத்தல்” என்ற பொருள்களைப் பட்டியலிடலாம். இவ்வினை “தணிதல், குறைதல்” என்ற முதன்மைப் பொருளிலிருந்து “ஒடுங்குதல்”, “ஓய்தல்” எனவும் “அமுங்குதல்”, “கீழ்ப்படிதல்” எனவும் “உட்படுதல்”, “கொள்ளுதல்”, “சார்ந்திருத்தல்”,

எனவும் மாற்றம் அல்லது நீட்சி பெறுகின்றது. இவ்வினை அடங்கும் எழுவாயைப் பங்கெடுப்பாளராக ஏற்கும். எழுவாயின் பொருண்மைப் பண்புகள் மேற்சொன்ன பொருள் வேறுபாடுகளை வெளிப்படுத்தும். புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறைக் கோட்பாட்டுச் சட்டகத்தில் அடங்கு என்பதன் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்பு பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு, சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து ஆக்கலாம் அல்லது விளக்கலாம்.

6.3.4.அடக்கு

க்ரியாவின் அகராதியில் அடக்கு என்பதற்கு நான்கு பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படு பொருள்	இடம்
1	(சிரிப்பு, கோபம், பேச்சு முதலியவற்றை) வெளிவிடாது தடுத்தல்; தணித்தல்; கட்டுபடுத்துதல்	1.அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. 2.மூச்சை அடக்குவதற்குப் பயிற்சி வேண்டும்.	1.அவள்	1.அழுகை 2.மூச்சு	
2	ஓர் அளவுக்குள் வைத்திருத்தல்	இந்தக் கட்டுரையை ஒரு பக்கத்துக்குள் அடக்க முடியுமா?	நீ	கட்டுரை	ஒரு பக்கத்திற்குள்

3	பணிய வைத்தல்; ஒடுக்குதல்	1.மக்களை அடக்கி ஆள நினைத்த சர்வாதிகாரிகள் தோல்வியே கண்டனர். 2.யானையை அடக்க மாவுத்தனால்தான் முடியும்.	1.சர்வாதிகாரிகள் 2.மாவுத்தன்	1.மக்கள் 2.யானை	
4	(வாய்க்குல்) திணித்தல்	வாயில் அடக்கிக்கொண்டிருந்த புகையிலையைத் துப்பினான்.	அவன்	புகையிலை	வாயில்

அடக்கு என்பது அடங்கு என்பதன் செயப்படுபொருள் குன்றாவினையாகும். *அடக்கு* என்பதன் பொருள்களை *அடங்கு* என்ற வினையின் பொருள்களின் காரணவாக்கங்களாகப் புஸ்தெஜோவிஸ்கியின் கோட்பாட்டின் படி பெறலாம். *அடக்கு* என்பது "சிரிப்பு, கோபம், பேச்சு முதலியவற்றை வெள்விடாது தடுத்தல், தணித்தல், கட்டுப்படுத்துதல்", "ஓர் அளவுக்குள் வைத்திருத்தல்", "பணிய வைத்தல்; ஒடுக்குதல்", "வாய்க்குள் திணித்தல்' என்ற பொருள்களைத் தரும். "சிரிப்பு, கோபம், பேச்சு முதலியவற்றை வெளிவிடாது தடுத்தல், தணித்தல், கட்டுபடுத்துதல்" என்பது இவ்வினையின் முதன்மைப் பொருளாகும். இம்முதன்மைப் பொருளிலிருந்து இறுதி பொருள் தவிர பிற பொருள் நீட்சிகளை விளக்குவது அல்லது ஆக்குவது கடினமல்ல. நான்காவது பொருள் ஊகிக்க இயலாததாக உள்ளது. *அடக்கு* என்பது "தடுத்தல்", "தணித்தல்", "கட்டுப்படுத்துதல்" என்ற முதன்மைப் பொருளில் தொடங்கி "பணிய வைத்தல்" "ஒடுக்குதல்" என நீண்டு "ஒரு அளவுக்குள் வைத்தல்", "திணித்தல்" என மாறுகின்றது. இவ்வினை எழுவாயாக வரும் அடக்கும் செயலியையும்

செயப்படுபொருளாக வரும் அடக்கப்படும் பொருளையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். வினையின் செயப்படுபொருளாக வரும் பெயர்களின் பொருண்மைப் பண்புக்கூறுகள் அடிப்படையில் இவ்வேறுபட்ட பொருள்களை விளக்க இயலும். செயப்படுபொருள்களின் பொருண்மையியல் பண்புக்கூறுகள் க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள பல்பொருண்மைக்குக் காரணமாக அமைகின்றன. பின்வரும் வாய்ப்பாடு இதனைத் தெளிவு படுத்தும்;

(242) அடக்கு [பெதொ + பெதொ-ஐ -----]
+எழுவாய் + செயப்படுபொருள்
+பொ.ப.கூ. + பொ.ப.கூ.

புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தில் இவ்வினையின் பல்பொருண்மையை நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு) மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு என்ற நான்கு அமைப்புகளின் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் விளக்கலாம் அல்லது ஆக்கலாம். இவ்வினையின் பொருண்மை அமைப்பைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்.

(243) அடக்கு

நிஅமைப்பு = E1 = e1 = செயற்பாங்கு
E2 = e2 = நிலை
மீள் அமைப்பு = $<_{\alpha}$
தலைமை = e1

பஅமைப்பு = பஆளர்1 = [1] (விலங்கின–தனி
முறையான =பௌதீகப்பொருள்)
பஆளர்2 = [2] (உடற்கூறு சம்மந்தப்பட்ட
ஒரு குழுமச் செயல்கள்
விலங்கினங்கள் மனிதவினங்கள்
ஒன்றின் அளவு)

குஅமைப்பு = dc _சொகஅ
முறையான = அடங்கு_விளைவு (e2 , [1])
செயலி = அடக்கு_செயல்(e1, [1] , [2])

மேற்கண்ட பொருண்மை அமைப்பு *அடக்கு2* என்ற செயப்படுபொருள் குன்றா வினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற செயற்பாங்கையும் e2 என்ற நிலையையும் கொண்டிருப்பதை உணர்த்தும். இது அடக்கலாகிய செயல்பாட்டால் அடக்கப்பட்ட நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும். பங்கெடுப்பாளர் அமைப்பு பஆளர்1 என்ற எழுவாயையும் பஆளர்2 என்ற செயப்படுபொருளையும் குறிப்பிட்டு நிற்கும். செயப்படுபொருளின் பொருண்மைக்கூறுகளின் தெரிவால் *அடக்கு2* என்ற வினை பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்பது புலனாகும்.

6.3.5 அடி

அடி என்பதற்கு க்ரியாவில் ஒன்றையொன்று விலக்கும் வேறுபடுத்தும் ஆறு முரண்படு பதிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு பதிவு முதல் வினையாகும்; மற்றொரு

பதிவு துணை வினையாகும்; மூன்று பதிவுகள் பெயர்களாகும்; ஒன்று இடைச்சொல்லாகும். இரண்டு வினைப் பதிவுகளில் முதல் வினைப் பதிவு மட்டும் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது. *அடி 1* என்பதற்குக் க்ரியாவில் 27 பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இவ்வேறுபட்ட பொருள்களையும் எடுத்துக்காட்டுகளையும் இவ்வினையின் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்.

அட்டவணை 6

வ.எண்	**பொருள்**	**எடுத்துக்காட்டுகள்**	பங்கெடுப்பாளர்			
			எழுவாய்	செயப்படு பொருள்	கருவி/காரணம் /முறை	இடம்/இலக்கு
அ	(அறைதல் அல்லது அறைபடுதல் என்னும் முறையில் உள்ள வழக்கு)					
1	கையால் அல்லது கம்பு முதலியவற்றால் அறைதல்; ஒன்றை மற்றொன்றின் மீது பலத்துடன் அறைதல்	1.குழந்தையை கையாலும் அடிக்கக்கூடாது,கம்பாலும் அடிக்கக்கூடாது 2.புடவையை கால் மீது அடித்துத் துவைத்தாள். 3.தங்கத்தைக் காய்ச்சி அடித்துத் தகடாக்கினார். 4.அந்தக் கொடுமையான பேச்சு நெஞ்சில் சம்மட்டி கொண்டு அடிப்பது போலிருந்தது.	1.நீ 2.அவள் 3.அவர்	1.குழந்தை 2.புடவை 3.தங்கம்	1.கை, கம்பு 4.சம்மட்டி	2.கல் மீது 4.நெஞ்சு

2	(அறைந்து)தாக்குதல் அல்லது கொல்லுதல்	1.காட்டில் ஆடு மேய்க்கப் போனவனைப் புலி அடித்துவிட்டது. 2.நேற்று வீட்டில் ஒரு பாம்பை அடித்தோம். 3.ஆடு அடித்து விருந்து வைத்தார்கள்.	1.புலி 2.நாங்கள் 3.அவர்கள்	1.காட்டில் ஆடு மேய்க்கப் போனவன் 2.பாம்பு 3.ஆடு		
3	(இலக்கில் படும்படி) எறிதல்	நாயைக் கல்லால் அடிக்காதே.	நீ	நாய்	கல்	
4	(ஆணி முதலியவற்றை) உட்செலுத்துவதற்கு அறைதல்	1.மாட்டுக்குளம்பில் ஆணி அடித்து லாடம் கட்டினார்கள். .	1.அவர்கள்	1.ஆணி		1.மாட்டுக் குளம்பு
5	தட்டி ஒலி எழுப்புதல்	கோவில்மணியை அவன் கடகடவென்று அடித்தான்.	அவன்	கோவில் மணி		
6	(மணி கடிகாரம்) ஒலித்தல்	கடிகாரம் பத்து முறை அடித்துவிட்டு ஓய்ந்தது.	கடிகாரம்			
7	(சிறகை) ஓசையுடன் அசைத்தல்	பறவை சிறகையடித்துப் பறந்தது.	பறவை	சிறகு		
8	பதியும்படி அழுத்துதல்	அஞ்சல் தலையில் முத்திரை அடித்தார்.	அவர்	முத்திரை		அஞ்சல் தலை
9	(கிரிக்கெட், டென்னிஸ் போன்ற விளையாட்டுகளில்) பந்தை மட்டையால் தட்டுதல்/ (தட்டுவதன் மூலம் புள்ளிகள்	1.இந்திய அணி வீரர் அடித்த பந்து எல்லைக்கோட்டை அடைந்தது. 2.அவர் அடித்துள்ள ஐந்தாவது சதம் இது. 3.முக்கியமான கட்டத்தில் அவர்	இந்திய அணி வீரர் அவர் அவர்	பந்து ஐந்தாவது சதம் பந்து		

	அல்லது ஓட்டங்கள்)பெறு தல்.	அடித்த பந்து வலையில் மோதியதால் புள்ளியை இழந்தார்.				
ஆ	(ஒன்றின் இயக்கம் அல்லது விளைவு குறித்த வழக்கு)					
10	(வெயில்,குளிர் முதலியன பலமாக) உறைத்தல்	1.முகத்தில் சுரீரென்று வெயில் அடித்தது.	வெயில்		சுரீரென்று	முகத்தில்
11	(காற்று, மணம் பலமாக) வீசுதல்	1.மணிக்கு எண்பது மையில் வேகத்தில் புயல் அடித்தது. 2.சாக்கடை நாற்றம் பயங்கரமாக அடித்தது.	1.புயல் 2.சாக்கடை நாற்றம்			
12	(அலை) மோதுதல்	1.கரையில் அலை அடிக்கிறது.	அலை			கரையில்
13	(மழை வலுவாக) பெய்தல்	1.கோடை மழை திடீரென்று பிடித்து அடித்து ஓய்ந்தது. 2.சாரல் அடிக்கிறது.	மழை			
14	(இதயம்) துடித்தல்					
15	ஓசையுடன் அசைதல்	காற்றில் கொடி படபடவென்று அடித்துக்கொண்டது.	கொடி		படபடவென்று	
இ	ஒன்றைச் செய்வதில் அழுத்துவது, அமுக்குவது போன்றவற்றை உள்ளடக்கிய					

	வழக்கு					
16	(ஒன்றை இயக்குவதன் மூலம்) உட்செலுத்துதல் அல்லது வெளியேற்றுதல்	1.கால்பந்துக்கு காற்று அடிக்க வேண்டும். 2.குழாயில் ஒரு வாளி தண்ணீர் அடித்து வை		காற்று தண்ணீர்		
17	(ஒன்றை) கலக்குதல்	இரண்டு முட்டையை அடித்து மாவில் ஊற்றிப் பிசை.		முட்டை		
18	அச்சிடுதல்	1.கல்யாணப் பத்திரிகை அடித்தாகிவிட்டது.		கல்யாணப் பத்திரிகை		
19	(கூடாரம்) ஏற்படுத்துதல்	தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூடாரம் அடித்துத் தங்கினார்கள்	தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள்	கூடாரம்		
20	(பை முதலியன) தைத்தல்	1.இந்த துணியில் இரண்டு பை அடித்துக் கொடு. 2.கால்சட்டையின் ஓரம் பிரிந்திருக்கிறது, அதை அடித்துக் கொடு.		1.பை 2.கால்சட்டையின் ஓரம்		
21	(சுண்ணாம்பு, வண்ணக்கலவை) பூசுதல்	1.சுவருக்குச் சுண்ணாம்பு அடிக்கிறான். 2.மாட்டுக்கொம்புக்கு வண்ணம் அடிக்க வேண்டும்.		1.சுண்ணாம்பு 2.வண்ணம்		1.சுவருக்கு 2 மாட்டுக் கொம்புக்கு
22	(விளக்கை) ஒளிரச் செய்தல்	அப்படியே நிற்கிறாயே! பாம்பு இருக்கிறதா என்று விளக்கை அடித்துப் பார்.		விளக்கு		
23	(கஞ்சா அல்லது சாராய வகை) உட்கொள்ளுதல்	கஞ்சா அடித்தவனின் கண்கள் சிவந்திருந்தன.		கஞ்சா		

24	(காய்ச்சல்) ஏற்படுதல்; காணுதல்	குழந்தைக்கு இரண்டு நாட்களாக காய்ச்சல் அடிக்கிறது	காய்ச்சல்			
25	(அதிர்ஷ்டம், யோகம்) வாய்த்தல்; ஏற்படுதல்	அவனுக்கும் ஒருமுறை அதிர்ஷ்டம் அடித்தது.	அதிர்ஷ்டம்			அவனுக்கு
26	(பட்டியல், நூல முதலியவற்றிலிருந்து பெயர், சொல் முதலியவற்றை) நீக்குதல்	பணம் செலுத்தாததால் பதிவேட்டிலிருந்து அவன் பெயரை அடித்துவிட்டார்கள்		அவன் பெயர்		பதிவேட்டிலிருந்து
27	பறித்துச் செல்லுதல்	கூட்டத்தில் என் பையிலிருந்த பேனாவை யாரோ அடித்துவிட்டார்கள் .	யாரோ	பையிலிருந்த பேனா		கூட்டத்தில்
28	(வண்டியில் ஏற்றி) கொண்டுவருதல் ; (கொண்டுவந்து) கொட்டுதல்	1.நாளை ஒரு வண்டி மணல் அடித்துவிடு! 2.முதலில் மணல் அடித்துவிட்டு கப்பி அடியுங்கள்.	1.ஒரு வண்டி மணல் 2.மணல், கப்பி			
29	(ஒன்றை அல்லது ஒருவரைக் குறிப்பிடப்படும் நிலையில் இருக்கும்படி) ஆக்குதல்	1.அவளுடைய அழகு அவனை பைத்தியமாக அடித்துவிடும் போலிருந்தது. 2.அவர் தூங்கிவிட்டதால் என் பதிலுக்கு அவசியம் இல்லாமல் அடித்துவிட்டார்.	1.அவளுடைய அழகு 2.அவர்	அவன்	பைத்தியமாக	2.என்பதிலுக்கு அவசியமில்லாமல்
30	(பூச்சிமருந்து, எரு போன்றவற்றை) தூவுதல்; போடுதல்	1.எங்கள் ஊருக்கு அமைச்சர் வரவிருப்பதால் சாலை ஓரங்களில் மருந்தடித்தார்கள்.		1.மருந்து		1.சாலை ஓரங்களில்

		2.வயலுக்குப் பூச்சிமருந்து அடிப்பது மண்ணைப் பாதிப்புக்கு உள்ளாக்கிவிடும்.		1.பூச்சிமருந்து		2.வயலுக்கு
31	(தட்டச்சில் அல்லது கணிப்பொறியின் விசைப்பலைகையில் எழுத்துக்களையும் எண்களையும் விரலால்) தட்டிப் பதிவு செய்தல்	1.தட்டச்சில் நான்கு பக்கங்கள் அடித்துவிட்டு அப்புறம் சாப்பிட்டேன்		நான்கு பக்கங்கள்		தட்டச்சில்
32	(குறிப்பிடப்படுவதைக் கொண்டு) காரியத்தைச் சாதித்தல்	1.எல்லோரையும் பணத்தால் அடித்துவிட்டு வழக்கைத் தனக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டான். 2.'அவனை என் பேச்சால் அடிக்கிறேன் பார்' என்று சவால் விட்டான்.	அவன் 2.நான்	எல்லோரையும் 2.அவன்	பணத்தால் 2.பேச்சால்	

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "கையால் அல்லது கம்பு முதலியவற்றால் அறைதல்; ஒன்றை மற்றொன்றின் மீது பலத்துடன் அறைதல்" என்பதை முதன்மைப் பொருளாகவும் "(அறைந்து) தாக்குதல் அல்லது கொல்லுதல், (இலக்கில் படும்படி) எறிதல், (ஆணி முதலியவற்றை) உட்செலுத்துவதற்கு அறைதல், தட்டி ஒலி எழுப்புதல், (மணி கடிகாரம்) ஒலித்தல், ஓசையுடன் அசைத்தல், பதியும்படி அழுத்துதல், (வெயில், குளிர் முதலியன பலமாக) உறைத்தல், (காற்று, மணம் பலமாக) வீசுதல், (அலை) மோதுதல், (மழை

வலுவாகப்) பெய்தல், ஓசையுடன் அசைதல், (ஒன்றை இயக்குவதன் மூலம்) உட்செலுத்துதல் அல்லது வெளியேற்றுதல், (ஒன்றை) கல்க்குதல், அச்சிடுதல், (கூடாரம்) ஏற்படுத்துதல், (பை முதலியன) தைத்தல், (சுண்ணாம்பு, வண்ணக் கலவை) பூசுதல், (கஞ்சா அல்லது சாராய வகை) உட்கொள்ளுதல், (காய்ச்சல்) ஏற்படுதல்; காணுதல், (அதிஷ்டம், யோகம்) வாய்த்தல்; ஏற்படுதல், (பட்டியல், நூல் முதலியவற்றிலிருந்து பெயர், சொல் முதலியவற்றை) நீக்குதல் பறித்துச் செல்லுதல்; திருடுதல், (வண்டியில் ஏற்றிக் கொண்டு வருதல்) அல்லது (கொண்டுவந்துக்) கொட்டுதல், (ஒருவரை மற்றொரு நிலையில் இருக்கும்படி) ஆக்குதல் அல்லது (அவசியம்/தேவை இல்லாதபடிச்) செய்தல்" என்பனவற்றைத் துணைநிலைப் பொருள்களாகவும் பட்டியலிடுகின்றது. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வினையின் வேறுபட்ட பொருள்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொள்ளவும் உதவும். இச்செயப்படுபொருள் குன்றாவினை அடிக்கும் செயலியையும் அடிக்கப்படும் செயப்படுபொருளையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். அடிக்கும் செயலி பங்கெடுப்பாளர் வழுநிலையில் பெயர்த்தொடராகவும் அடிக்கப்படும் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்படுத்தம் பெறும் அடி என்பது தாக்குதல் என்ற பொருண்மைக் களத்தின் கீழ் வாரும். க்ரியாவில் இவ்வினை அறைந்து தாக்குதல், இலக்கில் படும்படி எறிதல், உட்செலுத்துவதற்கு அறைதல், தட்டி ஒலி எழுப்புதல், ஒலித்தல், ஓசையுடன் அசைத்தல், பதியும்படி அழுத்துதல், உறைத்தல், வீசுதல், உட்செலுத்துதல் அல்லது வெளியேறுதல், கலக்குதல், அச்சிடுதல், ஏற்படுத்துதல், தைத்தல், பூசுதல், உட்கொள்ளுதல், ஏற்படுதல், நீக்குதல், திருடுதல், கொட்டுதல், ஆக்குதல், செய்தல் என்ற பலவித பொருள்களில் வருகின்றது. ஒன்று, 1, 2, 3, 4, 5 மற்றும் 8 என்பன ஒருவித

தாக்கத்தை வெளிபடுத்துகின்றது. இத்தாக்கம் இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் அடிக்கப்படுபவர்/அடிக்கப்படுவது என்பதன் பொருண்மைப் பண்புக்கூறுகள் அடிப்படையில் வேறுபடுகின்றது. இவ்வேறுபாடுகளை முதன்மைப் பொருளிலிருந்து புரிந்துகொள்ள இயலும். ஏழாவது பொருள் சிறிது வேறுபட்டு அமைந்துள்ளது. இருப்பினும் இதுவும் ஒருவித இயக்கத்தை உணர்த்துகிறது. ஒன்பது முதல் இருபத்தியொன்று வரையிலானப் பொருள்களை ஏறக்குறைய உருவக நீட்சி எனலாம். எழுவாயாக வரும் பெயர் மற்றும் செயப்படுபொருளாக வரும் பெயர் இவற்றின் வேறுபட்ட பொருண்மைப் பண்புக்கூறுகள் காரணமாக அடி என்ற வினை இவற்றுடன் சேர்ந்து வருகை புரியும்போது இப்பொருள் வேறுபாடுகள் வெளிப்படையாகத் தெரியும். ஒன்பது முதல் பதினைந்து வரையிலுள்ள பொருள்கள் எழுவாய்ப் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகள் அடி என்பதுடன் சேர்ந்து வருகை செய்யும்போது தூண்டப்படும் பொருள்களாகும். 16 முதல் 21 வரை உள்ள பொருள்கள் செயப்படுபொருளாக வரும் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகள் *அடி* என்பதுடன் சேர்ந்து வரும்போது தூண்டப்படும் பொடுள்களாகும். இவ்வாறு *அடி* என்பதன் பல்பொருண்மையை அல்லது பொருள் நீட்சியை எழுவாய்ப் பெயரின் பொருண்மஒப் பண்புக்கூறுகள் மற்றும் செயப்படுபொருள் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகள் என்பனவற்றின் அடிபொபடையில் விளக்கலாம். இவ்வறு *அடி* என்பதன் பல்பொருணையை ஆக்கப் பொருண்மை விதிகளாக அமைத்து விளக்கலாம். பொருள்கள் 22, 23 என்பன நான்காம் வேற்றுமைத் தொடரை அனுபவிப்பவராகவும் அனுபவிக்கப்படும் பொருளை முதல் வேற்றுமைத் தொடராகவும் ஏற்கின்றன. இவ்விரு பொருள்களும் எழுவாய்ப் பெயர்கள் அடி என்ற வினையுடன் சேர்ந்து வருகை செய்வதால் கிடைப்பதாகும். 24, 25, 26 என்ற பொருள்கள் செயப்படுபொருளாக வரும் பெயரைச்

சார்ந்திருக்கிறது. மேற்சொன்ன பொருள்களை எல்லாம் சேர்த்து வருகை விதிகளின் மூலம் அகராதி ஆக்கங்களாகப் பெறலாம். பொருள் 27 நிரப்பிகளாக வரும் தொடரைச் சார்ந்திருக்கிறது. இவ்வாறு *அடி* என்பதன் எல்லாப் பொருள்களையும் ஆக்கமுறை விதிகளால் பெற இயலும். பின்வரும் வாய்ப்பாடு இதனைத் தெளிவுபடுத்தும்.

(244) அடி [பெதொ + பெதொ-ஐ -----]
+எழுவாய் +செயப்படுபொருள்
+பொ.ப.கூ. +பொ.ப.கூ.

புஸ்தெஜோவிஸ்கியின் ஆக்கமுறைக் கோட்பாட்டுச் சட்டகத்தி அடி என்பதன் பல்பொருண்மையை நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.3.6 அடை

க்ரியாவில் அடை என்பதற்கு அவற்றின் முரண்படு பொருண்மை அடிப்படையில் ஐந்து பதிவுகள் தரப்பட்டுள்ளது. அவற்றில் வினையாக வரும் இரு பதிவுகள் மட்டும் இங்கு விலாக்கப்படுகின்றன.

6.3.6.1. அடை1

அடை என்ற வினைக்கு 7 பொருள்கள் க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இப்பொருள்களையும் எடுத்துக்காட்டுகளையும் இவ்வினை ஏற்கும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடுகின்றது.

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செய்படுபொருள்	காரணம்/இடம்
1	பெறுதல்	1. சுதந்திரம் அடைந்து விட்டோம். 2. அந்த அழகியை அடையப் பலரும் போட்டிப் பொடுகிறார்கள். 3. உழைப்பால் அவர் அடைந்திருக்கிற தகுதியும் மதிப்பும் ஏராளம்.	1.நாம் 2.அவர்கள் 3.அவர்	1. சுதந்திரம் 2. அழகி 3. தகுதியும் மதிப்பும்	3.உழைப்பால்
2	(ஓர் இடத்திற்குச் சென்று) சேர்தல்	1. நீந்திச் சென்று கரையை அடைந்தான். 2. பறைவைகள் கூட்டை அடைந்தன. 3. அரசு தொலக்காட்சி ஏழுகோடி வீடுகளைச் சென்றடைகிறது	1.அவன் 2.பறைவைகள் 3. அரசு தொலக்காட்சி	1. கரையை 2. கூட்டை	3.வீடுகளைச்
3	(குறிப்பிட்ட வயதை, பருவத்தை) எட்டுதல்	1. மூப்படைந்த அவர் உடல் தளர்ந்து கொண்டே வந்தது 2. வயோதிகம் அடைந்துவிட்டால் பிறர் உதவி தேவைப்படுகிறது.	1.அவர் 1.நபர்		1.உடல் தளர்ந்து
4	(சூரியன், சந்திரன்) மறைதல்	1. முன் நிலவுக்காலம் என்பதால், நிலா அடைந்தாகி விட்டது. 2. விடிந்தது முதல்	1.நிலா		

		அடையும் வரை இந்த விட்டில் சச்சரவுதானா?. 3. விடியற்காலை மண் வெட்டி தூக்கினால் பொழுது அடைந்துதான் வீட்டுக்கு வருவார்.	2.(நேரம்) 3.பொழுது		
5	(தூசி, அழுக்கு) படிதல்	1. வீட்டில் அழுக்கு அடைகிறது. 2. அழுக்கு அடைந்த சட்டை	1.அழுக்கு 2. அழுக்கு		1.வீட்டில் 2.சட்டை
6	(பூச்சிகள். பிராணிகள் போன்றவை) ஓர் இடத்தில் தங்குதல்	1. தோட்டத்தில் புதர்கள் இருந்தால் பாம்பு அடையும். 2. சுவரெங்கும் முட்டைப்பூச்சி அடைந்து காணப்பட்டன. 3. பறைவகள் கூட்டில் அடைந்தன. 4. இப்போது எல்லாரும் அமெரிக்காவில் போய் அடைகிறார்கள்.	1.பாம்பு 2.முட்டைப்பூச்சி 3.பறைவகள் 4.எல்லோரும்		1.புதர்கள் 2.சுவரெங்கும் 3.கூட்டில் 4.அமெரிக்காவில்
7	(கடன், பாக்கி) தீர்த்தல்	இரண்டு வருடத்திற்கு முன் வாங்கிய கடன் இன்னும் அடைய வில்லை.	கடன்		

இவ்வினை பின்வரும் முக்கியப் பங்கெடுப்பாளர்களை ஏற்கும் அடையும் எழுவாய் அடையப்படும் செயப்படுபொருள் வழுநிலையில் எழுவாய் முதல் வேற்றுமைத் தொடராகவும் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்படுத்தம் பெறும். முதன்மைப் பொருளாகப் "பெறுதல்" என்ற பொருள் தரப்பட்டுள்ளது. இப்பொருளில் இவ்வினை வழுநிலையில் முதல் வேற்றுமைத் தொடராக

வரும் எழுவாயைப் பெறுபவராகவும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் செயப்படுபொருளைப் பெறப்படும் பொருளாகவும் ஏற்கும். பெருபவர் பெரும்பாலும் மனித இனத்தையோ அத்குதியுள்ள விலங்கினத்தையோ குறித்து நிற்கும். பெறப்படும் பொருள் உருவத்தன்மையோ அருவத்தன்மையோ உடையதாக வரும். இரண்டாவது பொருள் "உணர்வுகளை அனுபவித்தல்" எனத் தரப்பட்டுள்ளது. இதைப் பெறுதலின் நீட்சியாக எடுத்துக்கொள்ளலாம். மூன்றாவது பொருள் "ஓரிடத்தைச் சேர்தல்" எனத் தரப்பட்டுள்ளது. 4, 5, 6 ஆகிய பொருள்கள் எதிர்பாராத பொருள்களாகும். இவற்றை முரண்படும் பொருளாகக் கொண்டு *அடை* என்பதன் பிற பொருண்மையிலிருந்து வேறுபடுத்தலாம். எழுவாய் மற்றும் செயப்படுபொருள் இவற்றின் அடிப்படையில் *அடை* என்ற வினையின் முதல் மூன்று பொருண்மைய் நீட்சிகளையும் விளக்கலாம்.

(245)

1.அடை [எழுவாய்:உயிரினம்: மனிதவினம் / செயப்படுபொருள்:தகுதி, மதிப்பு போன்ற பேறுகள்] → "பெறுதல்"

2.அடை [எழுவாய்:உயிரினம்:மனிதவினம்"(உணர்ச்சிகளை) / செயப்படுபொருள்:உணர்ச்சிகள்] → "அனுபவித்தல்"

3.அடை [எழுவாய்:உயிரினம்:மனிதவினம் / செயப்படுபொருள்:இடம்] → "சென்றடைதல்"

அடை1 "சென்றடைதல்" என்ற பொருளில் பின்வரும் சொற்பொருண்மையியல் அமைப்பை வெளிபடுத்தும்.

(246)

அடை1

பஅமைப்பு= [பஆளர்1 = தனி
வபஆளர் = y = இடம்]

நிஅமைப்பு= [E1:e1:செயற்பாங்கு
E2=e2:நிலை
மறு அமைப்பு= $<_{\alpha}$
தலைமை= e2]

குஅமைப்பு= [முறையான= இல் (e2, x,y)
செயலி=அடை_செயல்]

வேறுபட்ட சூழல்களில் *அடை1* உணர்த்தும் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான பொருள்களைப் பெறும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் ஒரு சொற்பொருண்மையியல் மாதிரியை நாம் தரவேண்டும். அடை1 என்ற வினையின் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு) சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்.

6.3. அடை2

அடை2 வினைக்கு க்ரியாவில் 7 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அட்டவணை

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செய்படுபொருள்	இடம்/காரணம்/முறை
1	(ஓர் இடத்தில்) பிடித்து வைத்தல்	1.போராட்ட வீரர்களைச் சிறையில் அடைத்தார்கள். 2.தெரு நாய்களைப் பிடித்து தனி இடத்தில் அடைத்து வைத்தார்கள்.	1.அவர்கள் 2.அவர்கள்	1.போராட்ட வீரர்கள் 2.தெருநாய்கள்	1.சிறையில் 2.தனியிடத்தில்
2	(ஒன்றை ஒன்றில்) நிரப்புதல்; திணித்தல்	1.தைலத்தைக் குப்பியில் அடைத்து விற்று வந்தான். 2.தலையணையில் பஞ்சை அடைத்தான். 3.இது சின்ன பெட்டிதான்; அதிக இடத்தை அடைக்காது. 3.இந்த பழங்களைப் பெட்டியில் அடைத்து அனுப்புகிறார்கள்.	1.அவன் 2.அவன் 3.சின்ன பெட்டி	1.தைலம் 2.பஞ்சு 3.இடம்	1.குப்பியில் 2.தலையணையில்
3	(கதவை, ஜன்னலை) சாத்துத்தல்	சாரல் அடிக்கிறது. ஜன்னலை அடை.	நீ	ஜன்னல்	சாரல் அடிக்கிறது
4	(கடை முதலியவற்றை நிரந்தரமாகவோ பணி முடிந்த பின்னரோ) மூடுதல்	1.கோடை விடுமுறைக்காகப் பள்ளிக்கூடம் அடைத்து விட்டார்கள். 2.கடை அடைத்தே கிடக்கிறது.	1.அவர்கள்	1.பள்ளிக்கூடம் 2.கடை	1.கோடை விடுமுறைக்காக
5	(துவாரம் இடைவெளி முதலியவற்றில்) தடுப்பு எற்படுத்துதல்	1.முள்ளை வெட்டிப் போட்டு பாதையை அடைத்தார்கள். 2.துளையில் கட்டையை செருகி	1.அவர்கள் 2.அவன்	1.பாதை 2.துளை	1.முள்ளை வெட்டிப் போட்டு 2.கட்டையைச் செருகி

		அடைத்தான்.			
6	தடைபடுதல்	1.இதயத்துக்கு இரத்தம் எடுத்து செல்லும் நாளம் அடைத்து வெடித்தது. 2.மூக்கு அடைக்கிறது.	1.நாளம் 2.மூக்கு		
7	(கடனை, பாக்கியை) தீர்த்தல்	கடனை ஒரு வாரத்திற்குள் அடைத்து விடுகிறேன்.	நான்	கடன்	

இவ்வினை செயப்படுபொருள் குன்றாவினையாகும் இது அடைக்கும் எழுவாயையும் அடைக்கப்படும் செயப்படுபொருளையும் பங்கெடுப்பாளராக ஏற்கும். வழுநிலையில் எழுவாய் முதல் வேற்றுமைத் தொடராகவும் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்படுத்தம் பெறும். முதன்மைப் பொருள் “பிடித்து வைத்தல்” என்பதாகும். இரண்டாவது பொருள் “நிரப்புதல்”, “திணித்தல்” என்பதாகும். இரண்டாவது பொருளை *அடை* என்பதுடன் சேர்ந்து வரும் செயப்படுபொடுள் மற்றும் இடம் அடிப்படையில் வரையறை செய்யலாம். 3, 4, 5, 6, 7 என்பன பிற பொருள் நீட்சிகளாகும். ‘தடைபடுதல்’ என்ற அர்த்ததில் செயப்படுபொருளாக வரவேண்டிய இருப்புப்பொருளே எழுவாய் போன்று வந்து செயல்படுவதைக் கவனிக்கவும். இந்த அர்த்த்தில் *அடை2* என்பதின் பங்கெடுப்பாளர் அமைப்பு செயப்படுபொருள் குன்றிய *அடை1* போல் வருகின்றது. *அடை* என்பதன் செயப்படுபொருளாக வரும் பெயரின் அல்லது பெயர்த் தொடரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் இப்பொருண்மைகளைக் கட்டுபடுத்தி விளக்கலாம்.

(247) அடி [பெதொ + பெதொ-ஐ -----]
+எழுவாய் +செயப்படுபொருள்

+பொ.ப.கூ. +பொ.ப.கூ.

வேறுபட்ட சூழல்களில் அடை2 என்பதன் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான பொருள்களைப் புரிந்துகொள்ளவும் அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்தவும் ஒரு சொற்பொருண்மையியல் மாதிரியை நாம் தரவேண்டும். இவ்விணையின் பல்பொருண்மை ஆக்கத்தைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிலழு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு) சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்; புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டுச் சட்டகத்தில் *அடை2* என்பதன் பொருண்மை அமைப்பைப் பின்வருமாற்;உ உருப்படுத்தம் செய்யலாம்.

(248)
அடை2
நிஅமைப்பு= E1:e1:செயற்பாங்கு
E2=e2:நிலை
மறு அமைப்பு=<α
தலைமை= e1
பஅமைப்பு= பஆளர்1= [1]
பஆளர்2= [2] பௌதீகப்பொருள்
முறையான= இருப்புப்பொருள்
குஅமைப்பு= வநிகாரணம்-சொகஅ
முறையான=அடை_விளைவு (e2, [2])
செயலி=அடை_செயல்(e1, [1] , [2])

6.3.7 *அணி*

அணி என்பதற்கு க்ரியாவில் இரண்டு பொருள்கள் தரப்பட்டுள்ளன.

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செய்படுபொருள்	இடம்
1	(ஆடை, அணிகலன் முதலியவற்றை) உடலில் தரித்தல்; பொருத்துதல்; போடுதல்;	காலில் சதங்கை அணிந்து ஆடத் தொடங்கினால்.	அவர்கள்	சதங்கை	கால்
2	(திருநீறு, சந்தனம் முதலியவற்றை) பூசுதல்	'சிவசிவ' என்றுக் கூறிக்கொண்டே நெற்றியில் திருநீறு அணிந்தார்.	அவர்	திருநீறு	நெற்றி

இவ்வினை முக்கியமாக இரு பங்கெடுப்பாலர்களை ஏற்கும்; அணியும் எழுவாய்/செயலி, அணியப்படும் செயப்படுபொருள். *அணி* என்பதன் முதன்மை அர்த்தம் "ஆடை அணிகலன் முதலியவற்ற உடலில் பொருத்துதல்" என்பதாகும் இரண்டாவது பொருள் "திருநீறு முதலியவற்றைப் பூசுதல்" என்பதாகும். இந்த இரண்டு அர்த்தங்களும் *அணி* என்ற வினையின் செயப்படுபொருளின் பொருண்மைப் பண்புக்கூறால் பெறப்படுகின்றது. இவ்விரு பொருள்களிலும் *அணி* என்பது மூன்று பங்கெடுப்பாளர்களை ஏற்கும்: அணிவிக்கும் உயிர் இருப்புப்பொருள், அணிவிக்கப்படும் பௌதீகப்பொருள், அணிவிக்கப்படும் இடம். இவ்விரு அர்த்தங்களும் அணிவிக்கப்படும் பௌதீகப் பொருளின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் வேறுபடுகின்றன.

புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டின்படி பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப்பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணிப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் அணி என்ற வினையின் பல்பொருண்மையை ஆய்ந்து அதன் பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை விளக்கலாம்.

6.3.8. *அணை*

க்ரியா அகராதி அணை என்பதற்கு அவற்றின் முரண்படுநிலை பொருள்களின் அடிப்படையில் நான்கு பதிவுகளைத் தந்துள்ளது. அதில் ஒன்று பெயராகும். மீதி மூன்றும் வினையாகும். அணை2 என்பது அணை1 என்பதன் செயப்படுபொருள் குன்றா வடிவாகும்.

6.3.8.1. *அணை1*

க்ரியா *அணை1* என்பதற்கு பின்வருமாறு ஓர் அர்த்தத்தைப் பட்டியலிட்டுள்ளது.

அட்டவணை

வ.எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்	
			எழுவாய்	இடம்
1	(நெருப்பு, விளக்கு) நின்றுபோதல்; அவிதல்	தெருவுக்கு வெளிச்சம் தந்துகொண்டிருந்த விளக்கும் அணைந்தது.	விளக்கு	

இவ்வினை முக்கியமாக அணியும் பொருளை எழுவாய்ப் பங்கெடுப்பாளராக ஏற்கும். மேலேயுள்ள அட்டவனை நெருப்பு, விளக்கு போன்றவற்றை இவ்வினையின் எழுவாய்ப் பங்கெடுப்பாளர்களாகக் காட்டுகின்றது. புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டின்படி பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப்பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் அணை1 என்ற வினையின் பல்பொருண்மையை ஆய்ந்து அதன் பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை விளக்கலாம்.

6.3.8.2. *அணை2*

அணை2 என்ற வினை *அணை1* என்ற வினையின் செயப்படுபொருள் குன்றா வடிவமாகும்.

அட்டவணை

வ.எண்	**பொருள்கள்**	**எடுத்துக்காட்டு**	**பங்கெடுப்பாளர்**		
			எழுவாய்	**செயப்படுபொருள்**	**இடம்**
1	(நெருப்பை, விளக்கை) நிறுத்துதல்; அவித்தல்	அடுக்குமாடிக் கட்டிடத்தில் நெருப்பை அணைப்பது பெரும்பாடுதான்.		நெருப்பு	அடுக்குமாடிக் கட்டிடத்தில்

இவ்வினை முக்கியமாக இரு பங்கெடுப்பாளர்களை ஏற்கும்; அணைக்கும் செயலி/எழுவாய், அணைக்கப்படும் செயப்படுபொருள். மேலேயுள்ள அட்டவணை

நெருப்பு, விளக்கு போன்றவற்றை இவ்வினையின் செயப்படுபொருள் பங்கெடுப்பாளர்களாகக் காட்டுகின்றது. புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டின்படி பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப்பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் *அணை2* என்ற வினையின் பல்பொருண்மையை ஆய்ந்து அதன் பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை விளக்கலாம்.

அணை2 என்பதன் பொருண்மை அமைப்பைப் புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டு அடிப்படையில் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்.

(245)
அணை2
நிஅமைப்பு= E1:e1:செயற்பாங்கு
E2=e2:நிலை
மறு அமைப்பு= $<_{\alpha}$
தலைமை= e1
பஅமைப்பு= பஆளர்1= [1]
பஆளர்2= [2] தீ
பௌதீகப்பொருள்
முறையான= பொருளன்
குஅமைப்பு= வநிகாரணம்-சொகஅ
முறையான=அணை_விளைவு (e2, [2])
செயலி=அணை_செயல்(e1, [1], [2])

6.3.8.3. *அணை3*

அணை3 என்ற வினைக்கு க்ரியாவில் மூன்று அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அட்டவணை

வ.எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்/முறை
1	அன்போடு தழுவுதல்	குழந்தையை அணைத்து மகிழ்வதில் தாய்க்குத்தான் எவ்வளவு இன்பம்!	தாய்	குழந்தையை	
2	(ஒரு பொருளைக் கைகளால்) மார்போடு சேர்த்துக்கொள்ளுதல்	அவள் குடையை மார்போடு அணைத்தவாறு நடந்து சென்றாள்.	அவள்	குடை	மார்போடு
3	(ஒன்றைப் பலப்படுத்துவதற்காக அதை ஒட்டி) மண் போடுதல்	1.மரத்துக்கு மண் அணைக்க வேண்டும். 2.வெள்ளம் அரித்துச் சென்ற கரைக்கு மண் அணைத்து மிதிக்க வேண்டும்.		1.மண் 2.மண்	1.மரத்துக்கு 2.கரைக்கு

இவ்வினை முக்கியமாக இரண்டு பங்கெடுப்பாளர்களை ஏற்கும்; அணைக்கும் செயலி/எழுவாய்; அணக்கப்படும் செயப்படுபொருள். வழுநிலையில் எழுவாய் முதல் வேற்றுமைத் தொடராகவும் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்படுத்தம் பெறும். இவ்வினை ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் இவ்வினையின் பொருள்கள் வேறுபடுகின்றன. இவ்வினையின் முதன்மைப் பொருள் மனித இனங்கள் தழுவிக்கொள்வதையும், இரண்டாவது பொருள் ஒரு நபர் அஃறிணைப் பொருளை மார்போடு

சேர்த்துக்கொள்வதையும் குறிப்பிடுகின்றது. இவ்விரு பொருள்களையும் செயப்படுபொருளாக வரும் பெயர்ச்சொல்லின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் வேறுபடுத்தி துணைநிலை வருகை முறையை விதிகளால் விளக்கலாம். மூன்றாவது பொருள் தர்க்க அடிப்படையில் எதிர்பாராதது. இப்பொருளை இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் பெயர்ச்சொல்லின் பொருண்மைக் கூறுகளாலும் மற்றும் நான்காம் வேற்றுமைத் தொடராக வரும் பெயர்ச்சொல்லின் பொருண்மைக் கூறுகளாலும் கட்டுப்படுத்தி பொருண்மை வேறுபாட்டை விளக்கலாம்.

(246)

அணை →
- → 1 செயப்படுபொருள் [+மனித இனம்]
- → 2.செயப்படுபொருள் [+அஃறிணைப்பொருள்]
- → 3.செயப்படுபொருள் [+மண் போன்ற அஃறிணைப் பொருள்]

[இடம் +கு வேற்றுமை பெறும்]

முதன்மைப் பொருளிலிருந்து துணைநிலைப் பொருள்களைப் பெறுவது அல்லது விளக்குவது ஆக்கமுறை அகராதிக் கோட்பாடாகும். *அணை3* என்பதன் வேறுபட்ட பொருள்களை அல்லது பொருண்மை நீட்சியைப் புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப்பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்.

மேலும் இவற்றிற்கிடையே வரும் பொருணமை இடைவெளிகளை புஸ்தெஜொவிஸ்கியின் அமைப்புகளும் பங்களிப்புகளும் விளக்கும்.

6.3.9. அமை

அமை என்பதற்கு முரண்படு பொருள்களின் அடிப்படையில் க்ரியாவில் இரண்டு பதிவுகள் தரப்பட்டுள்ளன. அமை1, அமை2.

6.3.9.1. அமை1

அமை1 என்பது *அமை2* என்ற வினையின் செயப்படுபொருள் குன்றியவினை வடிவமாகும். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் *அமை1* என்பதற்கு மூன்று பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அட்டவணை

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்கள்	
			எழுவாய்	இடம்/முறை/ பயனாளி
1.	உருவாகுதல்; உருப்பெருதல்	1.இந்த ஊரில் அமையவிருக்கும் அணுமின் நிலையத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். 2. தோடி ராகத்தில் அமைந்த கீர்த்தனை. 3. அது அவ்வளவு நல்ல ஏற்பாடாக அமையவில்லை. 4. சட்ட விதிகள் இவ்வாறு அமைந்துள்ளன.	1.மின்நிலையம் 2.கீர்த்தனை 3.அது 4.சட்ட விதிகள்	1.ஊர் 2.தோடி ராகம் 3.நல்ல ஏற்பாடாக 4.இவ்வாறு
2.	வாய்த்தல்; பொருந்துதல்;	1. அறைகள் வசதியாக அமைந்திருந்தன.	1.அறைகள்	1.வசதியாக

	ஏற்புடையதாக இருத்தல்	2.என் பெண்ணுக்கு மாப்பிள்ளை அமையவில்லை.	2.மாப்பிள்ளை	2.பெண்ணுக்கு
3.	(குறிப்பிட்ட முறையில்) இருத்தல்	1. முதல் பதிப்பிலிருந்து பெரிதும் வேறுபட்ட முறையில் இரண்டாம் பதிப்பு அமைந்திருக்கிறது. 2.கட்சி உட்பூசல் தான் தேர்தல் தோல்விக்குக் காரணமாக அமைந்த்து.	1.இரண்டாம் பதிப்பு 2.கட்சி உட்பூசல்	1.வேறுபட்ட முறையில் 2. தேர்தல் தோல்விக்குக் காரணமாக

அமை1 என்பதன் முதன்மைப் பொருளாக "உருவாகுதல், உருப்பெறுதல்" என்பன வருகின்றன. "வாய்த்தல், பொருந்துதல், ஏற்புடையதாக இருத்தல், குறிப்பிட்ட முறையில் இருத்தல்" என்பன அதன் துணைநிலைப் பொருள்களாகும். இவ்வினை முக்கியமாக இரு பங்கெடுப்பாளர்களை ஏற்கும்; அமையும் பொருள், அமையும் இடம். *அமை1* ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் இவ்வினையின் பொருள்கள் வேறுபடுகின்றன. இவ்வினை ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் மெய்ப்படுத்தங்களாக வரும் முதல் வேற்றுமைத் தொடர், நான்காம் வேற்றுமைத் தொடர், ஆக-நிரப்பிகள் இவற்றின் அடிப்படையில் வேறுபட்ட பொருள்கள் வருவதை அட்டவணையில் தந்துள்ள பயன்பாட்டுக்கூறுகள் உணர்த்துகின்றன. முதன்மைப் பொருளிலிருந்து துணைநிலைப் பொருள்களை பெறுவது அல்லது விளக்குவது ஆக்கமுறை அகராதிக் கோட்பாடாகும். *அமை1* என்பதன் வேறுபட்ட பொருள்களை அல்லது பொருண்மை நீட்சியை புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டு அடிப்படையில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண

அமைப்பு (முறையான பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம். மேலும் இவற்றிக்கிடையே வரும் பொருண்மை இடைவெளிகளையும் புஸ்தெஜொவிஸ்கியின் அமைப்புகளும் பங்களிப்புகளும் விளக்கும்.

6.3.9.2. அமை2

அமை2 என்பது *அமை1* என்ற வினையின் செயப்படுபொருள் குன்றாவினை வடிவமாகும். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் *அமை2* என்பதற்கு மூன்று பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செய்படுபொருள்	இடம்/ முறை
1	உருவாக்குதல்; ஏற்படுத்துதல்	1.சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.		1.குடியிருப்புகள்	1.சென்னைப் புறநகர்ப் பகுதிகள்
		2.இந்தப் படத்தில் சண்டைக் காட்சிகளை நன்றாக அமைத்திருக்கிறார்கள்.	2.அவர்கள்	2.சண்டைக் காட்சிகளை	2. இந்தப் படம்
		3.நீங்கள்தான் எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்க	3.நீங்கள்	3.நல்ல வாழ்க்கை	

		வேண்டும். 4.சட்ட விதிகள் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன.	-	4.சட்ட விதிகள்	4.திருத்தி
2	(ஆட்சி, நிர்வாகக் குழு முதலியவற்றை) தோற்றுவித்தல்; ஏற்படுத்துதல்;	1.தொழிலாளர்கள் சங்கம் அமைத்துப் போராடினார்கள். 2.உயர் ஆலோசனைக் குழு அமைக்க முடிவு.	1.தொழிலாளர்கள் 2.அவர்கள்	1. சங்கம் 2.உயர் ஆலோசனைக் குழு	
3	(ஒன்றை மற்றொன்றில்) இணைத்தல்; பொருத்துதல்;	இந்த இயந்திரத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் இணைப்புகளின் வரைபடம் இது.	-	மின் இணைப்புகள்	இந்த இயந்திரம்

அமை2 என்பது *அமை1* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினை வடிவமாகும். இவ்வினை முக்கியமாக மூன்று பங்கெடுப்பாளர்களை ஏற்கும்: அமைக்கும் செயலி/எழுவாய், அமைக்கப்படும் செயப்படுபொருள், அமைக்கப்படும் இடம். இம்மூன்று பங்கெடுப்பாளர்களின் பொருண்மைப் பண்புக்கூறுகள் இவ்வினைக்கு பல்பொருண்மையைத் தருகின்றன. புஸ்தெஜொவிஸ்கியின் சட்டகத்தில் *அமை2* என்பதன் காரணவாக்க அர்த்தங்களை *அமை1* என்பதன் அர்த்தங்களிலிருந்து பெற இயலும். இது "உருவாக்குதல்", "தோற்றுவித்தல்" மற்றும் "இணைத்தல்" என்ற மூன்று பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது. *அமை2* ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் குறிப்பாகச் செயப்படுபொருளின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் இதன்

வேறுபட்ட அர்த்தங்களை விளக்க இயலும். அமை2 என்பதன் வேறுபட்ட அர்த்தங்களை அல்லது பொருண்மை நீட்சியைப் புஸ்தெஜொவிஸ்கியின் சட்டகத்தில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு என்பனவற்றின் அடிப்படையில் விளக்கவும் ஆக்கவும் இயலும். மேலும் இவற்றிற்கிடையே வரும் பொருண்மை இடைவெளிகளையும் புஸ்தெஜொவிஸ்கியின் அமைப்புகளும் பங்களிப்புகளும் விளக்கும்.

6.3.10. ஆடு

ஆடு என்பதற்கு க்ரியாவில் இரண்டு பதிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று வினைப் பதிவு மற்றொன்று அதனுடன் முற்றிலும் தொடர்பில்லாத பெயர்ப் பதிவு. *ஆடு* என்பதற்கு 11 பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவைகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை

வ. எண்	**பொருள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**முறை**	**இடம்/காரணம்/நிரப்பி**
அ	அசைதல் தொடர்பான வழக்கு				
1	(தொங்கிய நிலையில் அல்லது நின்ற நிலையில் இருப்பது) இப்படியும் அப்படியும் அசைதல்;	1.அவளுடைய பின்னல் குதிரை வாலாக ஆடியது. 2.பாம்பு படம் எடுத்து ஆடிற்று. 3.யானை ஆடிக்கொண்டே கரும்பைத் தின்றது.	1.அவளுடைய பின்னல் 2.பாம்பு 3.யானை	1.குதிரை வாலாக 2.படம் எடுத்து -	
2	(பயத்தால்	இரத்தத்தைப்	அவள்		இரத்தத்தைப்

	அல்லது குளிரால் உடல்) நடுங்குதல்;	பார்த்ததும் அவள் உடம்பெல்லாம் ஆடத் தொடங்கியது.	உடம்பெல்லாம்		பார்த்ததும்
3	அதிர்தல்	புகைவண்டி சென்ற வேகத்தில் பாலம் ஆடியது.	பாலம்		புகைவண்டி சென்ற வேகத்தில்
4	ஒரு நிலையில் இல்லாமல் சீரற்று அசைதல்;	1.நாற்காலி சரியாக நிற்காமல் ஆடியதால் அவன் விழப் பார்த்தான். 2.குழந்தைகளுக்கு முன்பல் இரண்டும் ஆடுகிறது.	1. நாற்காலி 2.முன்பல் இரண்டும்	1.சரியாக நிற்காமல்	
5	(ஊஞ்சல் அல்லது ஊஞ்சலில் ஒருவர் உட்கார்ந்து) முன்னும் பின்னுமாகப் போய்வருதல்	1.ஊஞ்சல் வேகமாக ஆடிற்று. 2.அவர் ஊஞ்சலில் உட்கார்ந்து மெதுவாக ஆடிக்கொண்டே பேசிக்கொண்டிருந்தார்.	1.ஊஞ்சல் 2.அவர்	2. ஊஞ்சலில் உட்கார்ந்து மெதுவாக	
ஆ	செயல்புரிதல் தொடர்பான வழக்கு				
6	(நடனம் கூத்துப் போன்றவற்றை) நிகழ்த்துதல்; நடனத்தை ஒத்த வகையில் இயங்குதல்	1.சிவன் ஆடிய ஊழித் தாண்டவம். 2.பாடலின் கருத்துக்கும் பாவத்துக்கும் ஏற்றவாறு அபிநயத்துடன் ஆட வேண்டும். 3.மயில் தோகையை விரித்து ஆடியது. 4.இன்று என்ன கூத்து ஆடப்போகிறீர்கள் ?	1.சிவன் 2.நபர் 3.மயில் 4.நீங்கள்	அபிநயத்துடன் மயில் தோகையை விரித்து	ஊழித் தாண்டவம் கூத்து

7	(ஒரு விளையாட்டில்) பங்குபெறுதல்; விளையாடுதல்	1.அந்தக் காலத்தில் நாங்கள் இரவு முழுவதும் தாயம் ஆடுவோம். 2.இன்றையக் கால்பந்தாட்டப் போட்டியில் இந்திய அணி சிறப்பாக ஆடியது.	1.நாங்கள் 2.இந்திய அணி	1. இரவு முழுவதும் 2.சிறப்பாக	தாயம் 2.இன்றையக் கால்பந்தாட்டப் போட்டியில்
8	செக்கில் எள், கடலை போன்றவற்றை) அரைத்து எண்ணெய் எடுத்தல்	உங்கள் வீட்டில் இந்த வருஷம் எத்தனை காணம் ஆடினீர்கள்?	நீங்கள்		எத்தனை காணம்
9	அடக்கமோ கட்டுப்பாட்டோ இல்லாமல் நடந்துகொள்ளுதல்;	பணம் இருக்கும்வரை ஆடுவான்.	அவன்	பணம் இருக்கும்வரை	
10	(சூழ்நிலைக்குப் பொருத்தமில்லாமல்) கோபித்து ஆர்ப்பாட்டம் செய்தல்;	குழந்தை என்ன சொல்லிவிட்டான் என்று இப்படி ஆடுகிறீர்கள்?	நீங்கள்	இப்படி	குழந்தை என்ன சொல்லிவிட்டான் என்று
11	(பிறருடைய விருப்பங்களுக்கும் ஆணைகளுக்கும் அடிபணிந்து) அடிமையாக நடத்தல்;	1.மனைவி சொன்னதையெல்லாம் கேட்டு இவன் ஆடுகிறான். 2.கண்டவர் சொல்வதைக் கேட்டு ஆடியவன் தானே நீ.	1 இவன் 2.நீ	மனைவி சொன்னதையெல்லாம் கேட்டு கண்டவர் சொல்வதைக் கேட்டு	

க்ரியாவின் தற்காலத் தமிழகராதி *ஆடு* என்பதற்கு 11 பொருள்களைப் பட்டியலிட்டு அவற்றை “அசைதல் தொடர்பான வழக்கு” மற்றும் “செயல் புரிதல் தொடர்பான வழக்கு” என்று இரண்டு குழுமங்களாகப் பகுக்கின்றது. *ஆடு* என்பது பலவிதமான

அசைவுகளையும் இயக்கங்களையும் உருப்படுத்தமும் மெய்ப்படுத்தமும் செய்கின்றது. பின்னல் அசைவதும், பாம்பு அசைவதும், உடம்பு பயத்தாலோ குளிராலோ அசைவதும், பாலம் அசைவதும், பல் அசைவதும், ஊஞ்சல் அசைவதும் அசைதல் பாற்படும். நடனம், நாடகம் நிகழ்த்துதல், நடனம் புரிதல், விளையாட்டில் பங்குபெறுதல், அடிமையாக இயங்குதல், அடக்கமோ கட்டுப்பாடோ இல்லாமல் அடிமையாக இயங்குதல் என்பன இயக்கத்தின் பாற்படும். *ஆடு* என்பது ஆட்டு என்பதன் செயப்படுபொருள் குன்றியவினையாகும். இது முதல் வேற்றுமைத்தொடராக வரும் எழுவாயை முக்கியப் பங்கெடுப்பாளராக ஏற்கும். சில சூழல்களில் செயப்படுபொருள் போல் செயல்படும் ஒரு பெயர்த்தொடரையும் பங்கெடுப்பாளராக ஏற்கும் (பொருள் 6, 8). சில சூழல்களில் பொருள்கோளுக்கு ஆடப் பயன்படுத்தும் கருவி (ஊஞ்சல் போன்றவை) மற்றும் ஆடுமிடம் (அரங்கம் போன்றவை) ஆடும் காரணம்/முறை முக்கியத்துவம் பெறும்.

(247) ஆடு [பெதொ + (பெதொ – இல்)]

(248) ஆடு [பெதொ + எழுவாய் + பெதொ - செ.பொ]

ஆடு ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் அதன் வேறுபட்ட பொருள்களை விளக்கலாம். முதன்மைப் பொருளிலிருந்து துணைநிலைப் பொருள்களைப் புஸ்தெஜோவ்விஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டு அடிப்படையில் ஆக்க இயலும். *ஆடு* என்பதன் வேறுபட்ட பொருள்களை அல்லது பொருண்மை நீட்சியைப் புஸ்தெஜோவ்ஸ்கியின் சட்டகத்தில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு என்பனவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தவும் மையப் பொருண்மையிலிருந்து பிற பொருள்களை ஆக்கவும் இயலும். மேலும் இவற்றிற்கிடையே வரும் பொருண்மை இடைவெளிகளைப் புஸ்தெஜோவிஸ்கியின் அமைப்புகளும் பங்களிப்புகளும் விளக்கும்.

6.3.11.ஆட்டு

ஆட்டு என்பது *ஆடு* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினையாகும். *ஆட்டு* என்பதற்கு க்ரியாவில் ஒரு பதிவு மட்டுமே தரப்பட்டுள்ளது. *ஆட்டு* என்பதற்கு பட்டியலிடப்பட்டுள்ள 4 பொருள்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்:

அட்டவணை

வ.எண்	பொருள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	கருவி/இடம்/காரணம்
1	(ஒன்றை) அசைத்தல்	1.நாய் வாலை ஆட்டியபடியே அருகில் வந்தது. 2.அவர் குழந்தைகளைப் பார்த்து கையை ஆட்டினார். 3.சரி என்று தலையை ஆட்டினான். 4.ஏணியை ஆட்டாமல் கிழே இறங்கி வா.	1.நாய் அவர் அவன்	1.வால் கை தலை	
2	உலுக்குதல்; குலுக்குதல்;	1.குதிரைமேல் சேனத்தை வைத்துக் கட்டிவிட்டு ஆட்டிப்பார்த்தான். 2.காசு இருக்கிறதா என்று உண்டியலை ஆட்டிப்பார்த்தான். 3.புளிய மரத்தின் கிளையை ஆட்டியதும் சடசடவென்று புளியம்பழங்கள் கீழே விழுந்தன.	1.அவன் 2.அவன் -	1.சேணம் 2.உண்டியல் 3.புளிய மரத்தின் கிளை	
3	(ஊஞ்சல் தொட்டில்	ஊஞ்சலில் உட்கார்ந்து அதைக் காலால்	அவர்	ஊஞ்சல்	காலால்

	போன்றவற்றை) முன்னும் பின்னுமாக போய்வரச் செய்தல்;	ஆட்டிக்கொண்டே பேச ஆரம்பித்தார்.			
4.	(இயந்திரத்தில் இட்டுக் கரும்பு முதலியவற்றை) பிழிதல் / (இயந்திரத்தில் மாவு முதலியவற்றை) அரைத்தல்	1.கரும்பு ஆட்டிவிட்டீர்களா? 2.எண்ணெய் ஆட்டும் செக்கு 3.தோசைக்கு மாவு ஆட்ட வேண்டும்.	1.நீங்கள் 2.செக்கு	1.கரும்பு 2.எண்ணெய் 3.மாவு	செக்கு தோசைக்கு

ஆடு என்பது *ஆட்டு* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினையாதலால், *ஆட்டு* என்பதன் பொருள்களை *ஆடு* என்ற வினையின் பொருள்களின் காரணவாக்கங்களாகப் புஸ்தெஜோவ்ஸ்கியின் கோட்பாட்டின்படி பெறலாம். க்ரியாவின் அகராதியில் *ஆடு* என்பதற்குப் பத்து பொருள்களும் *ஆட்டு* என்பதற்கு நான்கு பொருள்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. *ஆடு* என்பதற்கும் *ஆட்டு* என்பதற்கும் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்கள் பெரும்பாலானவை இணைகளாக அமைகின்றன. சில தனிப்பண்புகளை அல்லது முரண்பாடுகளைக் காட்டுகின்றன. "(வால் தலை முதலியவற்றை அல்லது கொடி போன்றவற்றை) அசைத்தல்" என்பது முதன்மைப் பொருளாகும். "(ஒரு பொருளை) அசைத்தல் உலுக்குதல்", "(ஊஞ்சல், தொட்டில் போன்றவற்றை அல்லது ஒரு பொருளை) முன்னும் பின்னுமாகப் போய்வரச்செய்தல்", "இயக்குதல்", "இயந்திரத்தில்) அரைத்தல்", "(மாவு, எண்ணெய் முதலியன ஆட்டித் தயாரித்தல்)" என்பன துணைநிலைப் பொருள்களாகும். இயக்குதல், அரைத்தல், ஆட்டித் தயாரித்தல் என்பன காரண பொருள்

நீட்சிகளாகும். “ஆட்டு” செயப்படுபொருள் குன்றாவினையாக இரண்டு முக்கியப் பங்கெடுப்பாளர்களை ஏற்கும். வழுநிலையில் முதல் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாய் மற்றும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் செயப்படுபொருள் எழுவாய் மற்றும் செயப்படுபொருளாக வரும் பெயர்களின் பொருண்மைப் பண்புகூறுகள் அடிப்படையில் *ஆட்டு* வேறுபட்ட பொருள்கோள்கள் பெறும்.

(249) ஆட்டு [பெதொ + பெதொ - ஐ]
+ எழுவாய் + செயப்படுபொருள்
+[பொருண்மைக்கூறுகள்] + [பொருண்மைக்கூறுகள்]

இவ்வினையின் சொற்பொருண்மை அமைப்பைப் பின்வருமாறுத் தரலாம்:

(250)
ஆட்டு
நிஅமைப்பு= E1:e1:செயற்பாங்கு
E2=e2:நிலை
மறு அமைப்பு= $<_{\alpha}$
தலைமை= E1
பஅமைப்பு= பஆளர்1= [1]
பஆளர்2= [1] [பௌதீகப்பொருள்
முறையான= பொருளன்]
குஅமைப்பு= வநிகாரணம்-சொகஅ
முறையான=ஆடு_விளைவு (e2, [1])
செயலி=ஆட்டு_செயல்(e1, [1] , [1])

முதன்மைப் பொருளிலிருந்து துணைநிலைப் பொருள்களைக் புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டு அடிப்படையில் ஆக்க இயலும். *ஆட்டு* என்பதன் வேறுபட்ட பொருள்களை அல்லது பொருண்மை நீட்சியைப் புஸ்தெஜோவ்ஸ்கியின் கோட்பாட்டின்படி பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள்; அடிப்படையிலும் வகைக் கட்டாயம்,

தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து ஆக்கத்தை விளக்கலாம்.

6.3.12 இழு

இழு என்பதற்கு க்ரியாவில் வினையாக ஒரு பதிவு மட்டுமே தரப்பட்டுள்ளது. 14 பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவைகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	முறை/கருவி /இடம்
1	(கையால் அல்லது ஏதேனும் இணைப்பின் மூலம்) தனக்குப் பின்னால் அல்லது தன்னை நோக்கி அல்லது மேல்நோக்கி வரச்செய்தல்	1.இரப்பர் வளையத்தை அதிகமாக இழுக்காதே. 2.சினிமாவுக்குப் போகலாம் என்று கையைப் பிடித்து இழுத்தான். 3.செக்கு இழுக்கும் மாட்டை வண்டி இழுக்க வைக்க முடியாது. 4.சேற்றில் மாட்டிக்கொண்ட யானையைப் பளுதூக்கியால் இழுத்துக் காப்பாற்றினார்கள்.	1.நீ 2.அவன் 3.மாடு 4.அவர்கள்	1.இரப்பர் வளையம் 2.கையை 3.மாடு, வண்டி 4.யானை	1.அதிகமாக கையைப் பிடித்து 4.பளுதூக்கியால்
2	(உடல் உறுப்புகள் வியாதி காரணமாக) வெட்டிவெட்டி மடங்குதல்; கண்டப்படுதல்	காக்காய் வலிப்பு வந்தது மாதிரி அவனுக்குக் கையும் காலும் இழுத்துக்கொண்டன.	கையும் காலும்		காக்காய் வலிப்பு வந்தது மாதிரி

3	ஓர் இடத்தில் அல்லது ஒரு நிலையில் இருப்பதை மற்றொரு இடத்துக்கு அல்லது நிலைக்குக் கொண்டு வருதல்	1.நாற்காலியை சுவர் ஓரமாக இழுத்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்தார். 2.ஜன்னல் திரையை சற்று இழு, வெளிச்சம் வரட்டும். 3.அவள் பேசும்போது அடிக்கடி முக்காட்டை இழுத்து விட்டுக்கொண்டாள். 4.நாடவை இழுத்துச் சுருக்குப்பையை மூடினான்.	1.அவர் 2.நீ 3.அவள் 4.அவன்	1.நாற்காலி 2.ஜன்னல் திரை 3.முக்காடு 4. நாடா	1.சுவர் ஓரமாக
4.	(ஒன்றை அல்லது ஒருவரை ஏதேனும் ஒன்றில்) வலியத் தொடர்புபடுத்துதல்	1.என்னை வம்புச் சண்டைக்கு இழுக்காதே!. 2.எதற்காக அனாவசியமாக அவன் பெயரை இழுக்கிறாய்?	நீ	நான்	வம்புச் சண்டைக்கு
5	(பேச்சில் சொல்ல வந்ததைச் சொல்லாமல் தயக்கத்துடன்) நீடித்தல்	1.'அவர் உங்களைப் பற்றி..' என்று மேலே சொல்லாமல் இழுத்தார். 2.'பரிட்சைக்குப் படிக்க வேண்டும்' என்று இழுத்தாற்போல் சொன்னான்.	1.அவர் 2.அவன்		1.மேலே சொல்லாமல் 2.பரிட்சைக்குப் படிக்கவேண்டும் என்று
6	(வேலை முடிவுக்கு வராமல்) நீளுதல்	வேலை இன்னும் எவ்வளவு நாள் இழுக்குமோ?	வேலை		
7	(மரணத் தருவாயில் இருப்பவரை குறித்து வரும்போது) உயிருக்குப் போராடுதல்	அவர் நிலைமை இன்றைக்கோ நாளைக்கோ என்று இழுத்துக்கொண்டிருக்கிறது	அவர் நிலைமை		இன்றைக்கோ நாளைக்கோ என்று

8	(மூச்சு) இரைத்தல்	உனக்கு ஏன் இப்படி மூச்சு இழுக்கிறது.	மூச்சு		
9	(காற்று, புகை, பொடி முதலியவற்றை வாய் அல்லது மூக்கு வழியாக) உறிஞ்சி உள்ளே போகச் செய்தல்	1.ஒரு முறை ஆழமாக மூச்சை இழுத்து விட்டுக்கொண்டார். 2.பீடியை பற்றவைத்து புகையை இழுத்து ஊதினார். 3.'சர்' என்று பொடியை ஓர் இழுப்பு இழுத்தார்.	அவர் அவர்	மூச்சு புகை பொடி	ஒரு முறை ஆழமாக பீடியை பற்றவைத்து 'சர்' என்று
10	கவர்தல்; ஈர்த்தல்	1.இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல் அவள் அழகு அவனை இழுத்தது. 2.ரசிகர்களை உங்கள் பக்கம் இழுக்கும் சக்தி உங்களுக்கு இருக்கிறது.	காந்தம், அவள் அழகு சக்தி	இரும்பு, அவன் ரசிகர்கள்	 உங்கள் பக்கம்
11	(தண்ணீர்) இறைத்தல்	தண்ணீர் இழுத்து இழுத்துக் கையெல்லாம் வலிக்கிறது.	-	தண்ணீர்	கை
12	(கோடு) வரைதல்	வயது பத்தாகிறது. நேராக ஒரு கோடு இழுக்கத் தெரியவில்லையே!		கோடு	நேராக
13	(கம்பியாக, இழையாக) நீண்டுவருமாறு செய்தல்	இரும்பைக் கம்பியாக இழுக்கலாம்.		இரும்பு	கம்பியாக
14	(முடி) வாறுதல்	1.உன் உச்சி வடிவாக இல்லை.முடியைச் சரியாக இழு. 2.தலை இழுத்து முகம் கழுவிக்கொண்டு புறப்பட்டாள். 3.அவர் நடு உச்சி பிரித்துதான் தலை இழுப்பார்.	நீ அவள் அவர்	முடி தலை தலை	

இழு என்பது ஒரு இயக்க வினையாக, '(கையால் அல்லது ஏதேனும் இணைப்பின் மூலம்) தனக்குப் பின்னால் அல்லது தன்னை நோக்கி அல்லது மேல்நோக்கி வரச்செய்தல்' என்ற பொருளை முதன்மையாகக் குறித்து நிற்கும். இது ஒரு காரண வினையாக ஒரு பொருளின் நகர்வை உந்தும். இந்த நகர்வு எழுவாயை நோக்கி நிகழும். இழு அதன் உண்மைப் பொருளில் எழுவாயை நோக்கிப் பொருளின் நகர்வையும் அதன் அருவப் பொருளில் அருவத்தன்மையான நகர்வையும் (கவர்ந்திழு) குறிக்கும். மேற்கண்ட அட்டவணையில் 1-4, 10-14 என்பன உண்மைத்தன்மையான நகர்வையும் 5-10 அருவத்தன்மையான அல்லது உருவகத்தன்மையான நகர்வையும் குறிப்பிடும்.

இவ்வினை செயப்படுபொருள் குன்றாவினையாக முக்கியமாக இரு பங்கெடுப்பாளர்களை ஏற்கும். ஒன்று முதல் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும். மற்றொன்று இரண்டாம் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும். செயப்படுபொருள் (இழுக்கப்படும் பொருள்) இழு ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் இதன் வேறுபட்ட அர்த்தங்களை விளக்க இயலும்.

(251) இழு [பெதொ + பெதொ- ஐ ---]

எழுவாய்	+	செயப்படுபொருள்
(பொருண்மை பண்புக்கூறுகள்)		(பொருண்மைப் பண்புக்கூறுகள்) (இழுக்கும் செயல்)

இழு என்பதன் வேறுபட்ட அர்த்தங்களை அல்லது பொருண்மை நீட்சிகளைப் புஸ்தெஜொவிஸ்கியின் சட்டகத்தில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக்கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை

இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் இவ்வினை உணர்த்தும் வேறுபட்ட அர்த்தங்களை (பல்பொருண்மையை) விளக்கலாம்.

(251)
இழு
நிஅமைப்பு = [E1:e1:செயற்பாங்கு
E2=e2:நிலை
மறு அமைப்பு= <α
தலைமை= e1]
பஅமைப்பு= [பஆளர்1= [1]
பஆளர்2= [1] [பௌதீகப்பொருள்
முறையான= பொருளன்]]
குஅமைப்பு= [வநிகாரணம்-சொகஅ
முறையான= இழுபடு_விளைவு (e2, [1])
செயலி=இழு_செயல்(e1, [1], [2])]

மேற்கண்ட சட்டகம் *இழு* என்ற செயப்படுபொருள் குன்றாவினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற செயற்பாங்கையும் e2 என்ற நிலையையும் கொண்டிருப்பதை உணர்த்தும். இது இழுத்தலாகிய செயல்பாட்டால் இழுபட்ட நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும். பங்கெடுப்பாளர் அமைப்பு பஆளர்1 என்ற எழுவாயையும் பஆளர்2 என்ற செயப்படுபொருளையும் குறிப்பிட்டு நிற்கும். செயப்படுபொருளின் பொருண்மைக் கூறுகளின் தெரிவால் இவ்வினை பல்வேறு அர்த்தங்களைக் குறித்து நிற்பது புலனாகும்.

13. ஈர்

ஈர் என்பதற்கு க்ரியா அகராதியில் மூன்று பதிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் முதல் பதிவு வினை, இரண்டாவது பதிவு பெயர், மூன்றாவது பதிவு பெயரடை.

வினையாக வரும் *ஈர்* என்பதன் அர்த்தங்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

அட்டவணை:

வ. எண்	**பொருள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	செயப்படு பொருள்	காரணம்\முறை
1	(பொருள்களைத் தன்னை நோக்கி) இழுத்தல்;	1.பொருள்களை ஈர்க்கும் சக்தி பூமிக்கு இல்லையென்றால் நாம் மிதக்க வேண்டியதாகி விடும். 2.காந்தம் இரும்பை ஈர்க்கும்.	1. பூமி 2.காந்தம்	பொருள்கள் 2. இரும்பு	
2	(பூமி நீரை) உறிஞ்சுதல்;	வறண்டு கிடந்த நிலம் மழைநீரை உடனே ஈர்த்துக்கொண்டது.	வறண்டு கிடந்த நிலம்	மழைநீர்	
3	(மனத்தை, கவனத்தை) கவர்தல்; (ஒருவரை தன்பக்கம்) இழுத்தல்	1.ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது. 2.அவளுடைய இனிய பேச்சும் சிரிப்பும் அவனை ஈர்த்தன.	1.ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் 2.அவளுடைய இனிய பேச்சும் சிரிப்பும்	பொதுமக்களின் கவனம் அவன்	

ஈர் என்பதற்கு க்ரியாவில் மூன்று அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இவற்றில் முதலிரண்டும் உண்மை இயக்கத்தையும் மூன்றாவது அருவ இயக்கத்தையும் குறிப்பிடும். *ஈர்* என்பது முதல் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும் எழுவாயையும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும் செயப்படுபொருளையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும்.

(252) ஈர் : [பெதொ + பெதொ - ஐ---]

மேலே பட்டியலிடப்பட்டுள்ள இம்மூன்று அர்த்தங்களும் பங்கெடுப்பாளரின் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் வேறுபடும். முதல் இரண்டு அர்த்தங்களில் பூமி எழுவாயாக வருகின்றது; ஆனால் செயப்படுபொருள் வேறுபடுகின்றன. மூன்றாவது அர்த்தத்தில் செயப்படுபொருள் மனதைக் கவரும் பொருள்களாகும். *ஈர்* என்பதன் முதன்மை அர்த்தத்திலிருந்து பிற துணைநிலை அர்த்தங்களை அல்லது அர்த்த நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். ஈர் என்பதன் பல்பொருண்மையைப் புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாடு அடிப்படையிலான நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயற்பாடுகளாலும் விளக்க முடியும்.

(253) (ஈர்
நிஅமைப்பு= E1:e1:செயற்பாங்கு
E2=e2:நிலை
மறு அமைப்பு= தலைமை= e1
பஅமைப்பு = [பஆளர்1= [1]
பஆளர்2= [2] [பௌதீகப்பொருள்
முறையான= இருப்புப்பொருள்]
குஅமைப்பு= [வநிகாரணம்-சொகஅ
முறையான=ஈர்க்கப்படு_விளைவு (e2, [2]
செயலி=ஈர்_செயல்(e1, [1] , [2]])

மேற்கண்டச் சட்டகம் *ஈர்* என்ற செயப்படுபொருள் குன்றாவினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற செயற்பாங்கையும் e2 என்ற நிலையையும் கொண்டிருப்பதை உணர்த்தும். இது ஈர்த்தலாகிய செயல்பாட்டால் ஈர்க்கப்பட்ட நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும். பங்கெடுப்பாளர் அமைப்பு பஆளர்1 என்ற எழுவாயையும் பஆளர்2 என்ற செயப்படுபொருளையும் குறிப்பிட்டு நிற்கும். எழுவாய் மற்றும் செயப்படுபொருளின் பொருண்மைக்கூறுகளின் தெரிவால் இவ்வினை பல்வேறு அர்த்தங்களை குறித்து நிற்பது புலனாகும்.

6.3.14 உடை

உடை என்பதற்குக் க்ரியாவில் மூன்று பதிவுகள் தரப்பட்டுள்ளன. இரண்டு வினைப் பதிவுகள் ஒரு பெயர்ப் பதிவு. இவ்விரு வினைப் பதிவுகளும் ஒரே வினையடியின் செயப்படுபொருள் குன்றிய (உடை1) மற்றும் குன்றாத (உடை2) வடிவங்களாகும்.

6.3.14.1 உடை1

உடை1 என்பதற்கு க்ரியாவில் 9 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

வ.எண்	பொருள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	காரணம்/முறை	இடம்
1.	(விசையோடு தாக்கப்படுவதால் அல்லது அழுத்துவதால் ஒன்று) துண்டாதல்; பிளத்தல்	1.சவுக்குக் கட்டையால் அடித்ததில் திருடனின் கால் உடைந்தது. 2.பளு தாங்காமல் நாற்காலி உடைந்தது. 3.விபத்தில் அவருடைய மண்டை உடைந்து ரத்தம் ஒழுகியது.	1.திருடன் கால் 1.நாற்காலி 3.மண்டை	1.சவுக்குக் கட்டையால் அடித்ததில் 2.பளு தாங்காமல் 3.விபத்தில்	
2	(கீழே விழுந்து) துண்டுதுண்டாதல்	1.பீங்கான் கோப்பை உடைந்து நொறுங்கியது. 2.மாடியிலிருந்து விழுந்த தொட்டி உடைந்து சிதறியது. 3.கை தவறி விழுந்து என் கண்ணாடி உடைந்தது.	1.பீங்கான் கோப்பை 2. தொட்டி 3.கண்ணாடி	2மாடியிலிருந்து விழுந்து 3.கை தவறி விழுந்து	
3	(குழாய், நாளம் போன்றவற்றில் அழுத்தம் அதிகமாவதால்) விரிசல் ஏற்படுதல்	1.மூளையில் ரத்தநாளம் உடைந்துவிட்டதாம். 2.தொற்றுக்குள்ளான குடல்வால் சில சமையம் உடைந்துவிடும். 3.இயந்திரத்தில் வெப்பம் அதிகரித்ததால் குழாய் உடைந்துவிட்டது. 4.சிறுவன் ஊதிக்கொண்டிருந்த பலூன் உடைந்தது. 5.நீரின் மேற்பரப்பில் குமிழிகள் தோன்றி உடைந்துகொண்டிருந்	1.ரத்தநாளம் 2.தொற்றுக்குள்ளான குடல்வால் 3. குழாய் 4. பலூன் 5.குமிழிகள்	இயந்திரத்தில் வெப்பம் அதிகரித்ததால் 4.சிறுவன் ஊதிக்கொண்டிருந்த	1.மூளையில் 5.நீரின் மேற்பரப்பில்

		தன.			
4	(ஆறு, குளம் போன்றவற்றி ன் கரை) தகர்தல்	ஏரிக்கரை உடைந்து வெள்ளம் ஊருக்குள் புகுந்தது.	ஏரிக்கரை		
5	(கட்சி, நிறுவனம் போன்ற அமைப்புகள்) பிளவுபடுதல்	1.தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு கட்சி உடைந்துவிட்டது. 2.சொத்து தகராறின் காரணமாகக் குடும்பம் உடைந்துவிடும்போல் இருக்கிறது.	1.கட்சி 2.குடும்பம்	1.தேர்தலில் ஏற்பட்ட தோல்வி 2.சொத்து தகராறு	
6	(உடம்பிலுள்ள கட்டி பழுத்து) கண்திறத்தல்; பிளத்தல்;	கட்டி நன்றாகப் பழுத்து உடைந்துவிடும்போல் இருக்கிறது.	கட்டி	நன்றாகப் பழுத்து	
7	(குரல்) மாறுபடுதல்; (சோகத்தால்) தழுதழுத்தல்;	1.பாகவதர் குரல் உடைந்துவிட்டது. 2.தன் பிள்ளையை வழியனுப்பும்போது அவள் குரல் உடைந்து கண்கள் கலங்கின.	1.பாகவதர் குரல் 2. அவள் குரல்	2. தன் பிள்ளையை வழியனுப்பு ம்போது	
8	(மனம்) தளர்தல்:	1.மனைவி இறந்ததிலிருந்து அவர் மிகவும் உடைந்துபோய்விட் டார். 2.ஒரு வேலையும் கிடைக்காததால் அவன் மனம் உடைந்துவிட்டான்.	1.அவர் 2.அவன்	1.மனைவி இறந்ததிலிரு ந்து 2.ஒரு வேலையும் கிடைக்காத தால்	
9	(மறைக்கப்பட் டிருந்தது) வெளிப்படுதல்	அவன் குட்டு உடைந்தது.	அவன் குட்டு		

மேலே பட்டியலிடப்பட்டுள்ள ஒன்பது அர்த்தங்களும் இவ்வினை ஏற்கும் பங்கெடுப்பாளரின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில், குறிப்பாக எழுவாய்ப் பெயரின் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் வேறுபடுவதைக் காணலாம். முதலாவது அர்த்ததில் விசையோடு தாக்கப்படுவதால் கால் போன்றவை உடைவது குறிப்பிடப்படுகின்றது. இரண்டாவது அர்த்தத்தில் நாற்காலி, பீங்கான் போன்ற உடையும் பொருட்கள் எழுவாயாக வரும். மூன்றாவது அர்த்ததில் அழுத்தத்தால் குழாய், நாளம் போன்றவை சிறிதாக வெடிப்பதைக் குறிப்பிட உடை பொருண்மை நீட்சி செய்கின்றது. நான்காவது அர்த்ததில் உடைவது ஆறு, குளம் போன்றவற்றின் கரைகளுக்கு நீட்சி செய்கின்றது. ஐந்தாவது அர்த்ததில் உருவக அடிப்படையில் கட்சி, நிறுவனம் போன்றன பிளவுபடுதலைக் குறிப்பிட உடை பொருண்மை நீட்சி செய்வது வெளிப்படுகின்றது. ஆறாவது அர்த்தத்தில் உடம்பில் ஏற்படும் கட்டி, பரு போன்றவை உடைவதைக் குறிப்பிட்டு உடை பொருண்மை நீட்சி செய்வது குறிப்பிடப்படுகிறது. எழாவதாகப் பட்டியலிடப்பட்டுள்ள பொருண்மை நீட்சியில் உணர்ச்சியால் குரல் தழுதழுத்தல் உடைவதாக உருவகிக்கப்பட்டுள்ளது. எட்டாவதாகச் சோகத்தால் மனம் தளர்தல் உடைவதாக உருவகிக்கப்பட்டு பொருண்மை நீட்சி செய்வது குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்பதாவதாக இவ்வினை மறைக்கப்பட்ட உண்மை வெளிப்படுவது உடைவதாக உருவகிக்கப்பட்டு பொருண்மை நீட்சி செய்வது பட்டியலிடப்பட்டுள்ளது. இவ்வினையின் முதன்மைப் பொருண்மையிலிருந்து பிற துணைநிலைப் பொருண்மைகளை அல்லது பொருண்மை நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ளத் தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். இவ்வினையின் பல்பொருண்மையைப் புஸ்தெஜோவ்ஸ்கியின் கோட்பாடு ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையிலான நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண

அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின்; ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் விளக்கலாம்.

உடை1 என்பதற்குக் கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள ஒன்பது அர்த்தங்களில் 1, 2, 3, 4 என்பன உண்மையான உடைதலையும் 5, 6, 7, 8, 9 என்பன உருவகமான உடைதலையும் குறிப்பிடும். இவ்வினை முதல் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும் எழுவாயைப் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். இப்பங்கெடுப்பாளராக வரும் பெயர்களின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் இவ்வினை வேறுபட்ட பொருண்மைகளை உணர்த்தி பொருண்மை நீட்சி செய்யும். இதைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

(253) உடை[1 பெதொ]
+ எழுவாய்
+ பொருண்மைப் பண்புக்கூறுகள்

6.3.14.2 உடை2

உடை2 என்பதற்கு க்ரியாவில் 13 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படு பொருள்	கருவி/முறை
1	(விசையுடன் தாக்கி, எறிந்து அல்லது முறித்து) துண்டாக்குதல், பிளத்தல்	1.சிறுவன் பொம்மையை தரையில் வீசி உடைத்தான். 2.இது கல்	1.சிறுவன் 2.இயந்திர	1.பொம்மை 2.கல்	1.தரையில் வீசி

		உடைக்கும் இயந்திரம். 3.கையிலிருந்த குச்சியை இரண்டாக உடைத்தேன். 4.கொள்ளைக்காரர்கள் கதவை உடைத்து வீட்டிற்குள் புகுந்திருக்கிறார்கள்.	ம் 3.நான் 4.கொள்ளைக்காரர்கள்	3.குச்சி 4.கதவு	3.இரண்டாக
2	(தானியங்களை) குருணை ஆக்குதல்	1.திருகையில் உடைத்த அரிசியைக் கஞ்சி காய்ச்சினாள். 2.உடைக்கப்பட்ட தானியங்களை கோழிக்கு உணவாகக் கொடுக்கிறார்கள். 3.மக்காச்சோளத்தை உடைத்து தவிட்டுடன் தீனியில் கலக்கவும்.		1.அரிசி 2.தானியங்கள் 3.மக்காச்சோளம்	திருகை
3	(முட்டை, தேங்காய் போன்றவற்றின்) ஓட்டைப் பிளத்தல்	1.முட்டையை உடைத்துப் பாலுடன் கலந்து குழந்தைக்குக் கொடுத்தாள். 2.துவையல் அறைக்கத் தேங்காயை உடை.	அவள் நீ	முட்டை தேங்காய்	
4	(கட்டியிருப்பதை அல்லது ஒட்டியிருப்பதை) பிரித்தல்; (மூடியாகப் பொருத்தப்பட்டிருப்பதை) திறத்தல்	1.துணிக்கட்டை உடைத்து அவர் ஒவ்வொன்றாக எடுத்து விலைப் போட்டார். 2.தபாலில் வந்த கடிதத்தை அப்பா உடைத்துப் பார்த்தார். 3.அவருக்குச் சோடா உடைத்துக் கொடு.	அவர் அப்பா நீ	1.துணிக்கட்டு 2.தபாலில் வந்த கடிதம் 3.சோடா	
5	(பூட்டைச் சாவியால்	1.திருடர்கள் பூட்டை உடைத்து அறைக்குள்	திருடர்கள்	பூட்டு	

	திறக்காமல்) தட்டி நீக்குதல்	நுழைந்தார்கள். 2.சாவியைத் தொலைத்துவிட்டதால் பூட்டை உடைக்கவேண்டி வந்தது.			
6	(கடலையை) தோல் நீக்கி பருப்பை எடுத்தல்			கடலை	
7	(துவரை, பயறு, உளுந்து போன்றவற்றின்) முழுப் பருப்பை இரண்டாக்குதல்	துவரை உடைக்க ஆட்களுக்குச் சொல்லியிருகிறேன்.	ஆட்கள்	துவரை	
8	(கட்சி, நிறுவனம் போன்ற அமைப்புகளின்) ஒற்றுமையைக் குலைத்தல்	எங்கள் கூட்டுறவு சங்கத்தை உடைக்க அவர் செய்த முயற்சிகள் வீணாயின.	அவர்	கூட்டுறவு சங்கம்	
9	(போராட்டம் போன்றவற்றை) செயலிழக்கச் செய்தல்	தீவிரவாத குழுக்களை உடைக்கப் புது உத்திகளைப் பயன்படுத்த அரசு தயங்காது.	அரசு	தீவிரவாத குழுக்கள்	
10	(ரகசியம், உண்மை போன்றவற்றை) வெளியாக்குதல்	1.அவன் என்னிடம் ரகசியமாகச் சொன்ன விசயத்தை நான் போட்டு உடைத்துவிட்டேன். 2.உண்மையை உடைத்துச் சொல்லிவிட வேண்டியதுதான்.	நான்	1.ரகசியமாகச் சொன்ன விசயம் 2.உண்மை	போட்டு
11	(மரபு, கோட்பாடு போன்றவற்றை) மீறுதல்; மாற்றுதல்	1.வாசகர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்க இலக்கணத்தை உடைக்கிறாரா இந்த ஆசிரியர். 2.திரை இலக்கணத்தை	1.ஆசிரியர் 2.இயக்குநர்	1,இலக்கணம் 2.திரை இலக்கணம்	

		உடைத்தவர் என்று இந்த இயக்குநரைச் சொல்லலாம்.			
12	(புதிரை) விடுவித்தல்	குறுக்கெழுத்துப் போட்டிப் புதிர்களை உடைக்க அவர் உத்திகள் சொல்லித்தந்தார்.		குறுக்கெழுத்துப் போட்டிப் புதிர்கள்	
13	(கற்பனை, மாயை போன்றவற்றை) தகர்த்தல்	திரைப்படம் ஒரு அதிசயம் என்ற மாயையைத் தொலைக்காட்சி அலைவரிசைகள் உடைத்துவிட்டன.	தொலைக் காட்சி அலைவரி சைகள்	திரைப்படம் ஒரு அதிசயம் என்ற மாயை	

உடை2 என்பது *உடை1* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினை வடிவமாகும். இரண்டுக்கும் இடையில் இணையான பொருண்மை நீட்சிகளை ஒப்பிட்டு அறியலாம். "துண்டாக்குதல், பிளத்தல்" என்பன இதன் முதன்மை அர்த்தங்களாகும். இவ்வினையானது (தானியங்களை) குருணை ஆக்குதல், (முட்டை, தேங்காய் போன்றவற்றின்) ஓட்டைப் பிளத்தல், (கட்டியிருப்பதை அல்லது ஒட்டியிருப்பதை) பிரித்தல்; (மூடியாகப் பொருத்தப்பட்டிருப்பதை) திறத்தல், (பூட்டைச் சாவியால் திறக்காமல்) தட்டி நீக்குதல், (கடலையை) தோல் நீக்கி பருப்பை எடுத்தல், துவரை, பயறு, உளுந்து போன்றவற்றின்) முழுப் பருப்பை இரண்டாக்குதல் (பட்டியலிடப்பட்டுள்ள முதல் ஏழு அர்த்தங்கள்) எனப் பொருண்மை நீட்சி செய்யும். இந்த ஆறு அர்தங்களும் உடை என்பதன் உண்மைத் தன்மையான பொருண்மை நீட்சிகளாகும். இவ்வினை மேலும் (கட்சி, நிறுவனம் போன்ற அமைப்புகளின்) ஒற்றுமையைக் குலைத்தல், (போராட்டம் போன்றவற்றை) செயலிழக்கச் செய்தல், (ரகசியம், உண்மை போன்றவற்றை) வெளியாக்குதல், (மரபு, கோட்பாடு போன்றவற்றை) மீறுதல்;

மாற்றுதல், (புதிரை) விடுவித்தல், (கற்பனை, மாயை போன்றவற்றை) தகர்த்தல் என உருவக அடிபடையில் பொருண்மை நீட்சி செய்யும். இதை உருவகத் தன்மையான பொருண்மை நீட்சி எனக் குறிப்பிடலாம்.

உடை2 என்பதன் முதன்மைப் அர்த்தத்திலிருந்து பிற துணைநிலைப் பொருண்மைகளை அல்லது பொருண்மை நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். *உடை2* முதல் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாயையும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் செயப்படுபொருளையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். இப்பங்கெடுப்பாளர்களாக வரும் பெயர்களின் பொருண்மைக்கூறுகள் இவ்வினைக்கும் பல்பொருண்மையைத் தரும். பல்பொருண்மையைப் புஸ்தெஜோவ்ஸ்கியின் கோட்பாடு அடிப்படையிலான நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின்; ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் விளக்கலாம்.

(254) உடை2

நிஅமைப்பு= E1:e1:செயற்பாங்கு
E2=e2:நிலை
மறு அமைப்பு= $<_{\alpha}$
தலைமை= e1

பஅமைப்பு= பஆளர்1= [1]
பஆளர்2= [1] பௌதீகப்பொருள்
முறையான= பொருளன்

குஅமைப்பு= வநிகாரணம்-சொகஅ
முறையான=உடை_விளைவு (e2, [1])
செயலி=உடை_செயல் e1, [1], [1])

மேற்கண்ட சட்டகம் *உடை2* என்ற செயப்படுபொருள் குன்றாவினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற செயற்பாங்கையும் e2 என்ற நிலையையும் கொண்டிருப்பதை உணர்த்தும். இது உடைத்தலாகிய செயல்பாட்டால் உடைபட்ட நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும். பங்கெடுப்பாளர் அமைப்பு பஆளர்1 என்ற எழுவாயையும் பஆளர்2 என்ற செயப்படுபொருளையும் குறிப்பிட்டு நிற்கும். செயப்படுபொருளின் பொருண்மைக்கூறுகளின் தெரிவால் *உடை2* என்ற வினை பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்பது புலனாகும்.

6.3.15. ஊறு

ஊறு என்ற சொல்லுக்குக் க்ரியாவில் இரண்டு பதிவுகள் தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று வினை மற்றொன்று பெயர். *ஊறு* என்ற வினைக்குக் க்ரியாவில் 5 பொருள்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இதைப் பட்டியலிடும்.

அட்டவணை

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	காரணம்	இடம்
1	(நீர், எச்சில் முதலியன) வெளிவருதல்; சுரத்தல்	1.கிணற்றில் நீர் ஊறட்டும், பிறகு தண்ணீர் இறைக்கலாம். 2.மசாலாவின் வாசனையால் வாயில் நீர் ஊறுகிறது.	1. நீர் 2. நீர்	2. மசாலாவின் வாசனையால்	1.கிணறு 2.வாய்
2	(அரிசி, பருப்பு முதலிய பொருள்கள்) நனைந்து மென்மையாதல்	1.அரிசி ஊறிவிட்டதா என்று பார். 2.இஞ்சியைத் தேனில் ஊறவைத்துச் சாப்பிட வேண்டும்.	1.அரிசி 2.இஞ்சி	- -	2.தேன்
3	(அழுக்குப் போவதற்காகத் துணி) நீரில் நனைதல்	குளிக்கிற வாளியில் சட்டையை ஊறவைத்திருப்பது யார்?	சட்டை		குளிக்கிற வாளியில்
4	காகிதம் துணி முதலியவற்றில் (நீர், மை போன்றவை) பரவுதல்	இந்தக் காகிதத்தில் மை ஊறுகிறது.	மை		காகிதத்தில்
5	(குறிப்பிட்ட உணர்வு, பழக்கவழக்கம் போன்றவற்றில் மனம்) தோய்தல்	1.பழைய பழக்கவழக்கங்களில் ஊறிவிட்ட எங்களால் புதியனவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 2.தான் சொல்வது எப்போதும் சரியாகவே இருக்கும் என்கின்ற எண்ணம் அவர் உள்ளத்தில் ஊறிப்	1.நாங்கள் 2.எண்ணம்		பழக்கவழக்கங்கள் 2.உள்ளம்

		போயிருக்கிறது. 3.தேசப்பற்று என்பது அவர் இரத்தத்தில் ஊறிப்போய்விட்ட ஒன்று.	3.தேசப் பற்று		3. இரத்தம்

“(நீர், எச்சில் முதலியன) வெளிவருதல்; சுரத்தல்” என்பன கிரியா பட்டியலிட்டுள்ள முதல் அர்த்தமாகும். (அரிசி, பருப்பு முதலிய பொருள்கள்). இவ்வினை நனைந்து மென்மையாதல், (அழுக்குப் போவதற்காகத் துணி) நீரில் நனைதல், காகிதம் துணி முதலியவற்றில் (நீர், மை போன்றவை) பரவுதல் என உண்மைத் தன்மையான பொருண்மை நீட்சி செய்யும். ஐந்தாவதாகப் பட்டியலிடப்பட்டுள்ள ‘(குறிப்பிட்ட உணர்வு, பழக்கவழக்கம் போன்றவற்றில் மனம்) தோய்தல்’ என்ற அர்த்தம் உருவகம் தழுவிய பொருண்மை நீட்சியாகும்.

ஊறு செயப்படுபொருள் குன்றிய வினையாகும். எனவே அது உணர்த்தும் அர்த்தங்கள் அல்லது அதன் பொருண்மை நீட்சி அது வரும் சூழலால் அல்லது அதனுடன் வரும் சொற்களால் குறிப்பாக எழுவாயின் பொருண்மைப் பண்புகூறுகளால் தீர்மானிக்கப்படுகின்றது. இதைப் பின்வருமாறு சுருக்கமாக வாய்ப்பாட்டில் தரலாம்.

(254) ஊறு [பெதொ]
+ எழுவாய்
+ பொருண்மைப் பண்புக்கூறுகள்

மேலே தந்துள்ள *ஊறு* என்பதன் அட்டவணையைப் பார்த்தால் இந்த கூற்றின் உண்மை தெளிவாகும். பட்டியலிட்டுள்ள ஐந்து அர்த்தங்களும் பயன்பாட்டில் வேறுபட்டு நிற்கின்றன. பங்கெடுப்பாளர்களாக வரும் எழுவாய், காரணம், இடம் என்பனவற்றின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் நாம் இவ்வினையின் பொருண்மை நீட்சியை விளக்கலாம். முதன்மைப் பொருளிலிருந்து பிற துணைநிலைப் பொருள்களை அல்லது

பொருள் நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ ஆக்கவோ இயலும். அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டுச் சட்டகத்தில் *ஊறு* என்ற வினையின் பல்பொருண்மையை அல்லது பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயற்பாடுகளாலும் விளக்க முடியும்.

5.3.16. ஊற்று

ஊற்று என்ற சொல்லுக்கு க்ரியாவில் இரண்டுப் பதிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் முதல் பதிவு வினை இரண்டாவது பதிவு பெயர். *ஊற்று* என்ற வினைக்குக் க்ரியாவில் 5 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அட்டவணை

வ.எண்	பொருள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்/பயனாளி/காரணம்/முறை
1	(நீர் முதலிய திரவப்பொருள்களை) கீழே சாய்த்து வழியவிடுதல்; வார்த்தல்	1.பேனாவில் மை ஊற்று. 2.அவர் கண்ணாடிக் குவளையில் மது ஊற்றும் அழகேத் தனி.	1.நீ 2.அவர்	1.மை 2.மது	1.பேனாவில் 2.கண்ணாடிக் குவளையில்
2	(செடிகளுக்கு நீரை) பாய்ச்சுதல்; விடுதல்	செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றினாயா?	நீ	தண்ணீர்	செடிகளுக்கு
3	(தயாரிக்கும்	1.ஐந்தாவது	1.நான்	-	1.ஐந்தாவது

	முறையாக அதற்கு உரியவற்றில்) வார்த்தல்	தோசைக்கு ஊற்றுகிறேன். 2.இட்லி ஊற்றாமல் எங்கே போனாய்?	2.நீ		தோசைக்கு 2.இட்லி
4	(எதிர்பாராத முறையில்) சிந்துதல்	அரிசி வடிக்கும்போது கஞ்சியைக் காலில் ஊற்றிக்கொண்டு துடிதுடித்துப்போனாள்	அவள்	கஞ்சி	காலில்
5	அதிக அளவில் வெளிவருதல்	1.வெட்டுக்காயத்திலிருந்து இரத்தம் ஊற்றியது. 2.வானம் கிழிந்ததுபோல் மழை ஊற்றியது.	1.இரத்தம் 2.மழை	-	1.வெட்டுக்காயத்திலிருந்து 2.வானம் கிழிந்ததுபோல்

ஊற்று என்பது *ஊறு* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினை வடிவமாகும். ஆனால் பொருண்மை அடிப்படையில் இவற்றிற்கிடையே ஒத்த இணைகள் இல்லை. "(நீர் முதலிய திரவப்பொருள்களை) கீழே சாய்த்து வழியவிடுதல்; வார்த்தல்" என்பது கிரியா பட்டியலிடும் இவ்வினையின் முதன்மைப் பொருளாகும். (செடிகளுக்கு நீரை) பாய்ச்சுதல்; விடுதல், (தயாரிக்கும் முறையாக அதற்கு உரியவற்றில்) வார்த்தல், (எதிர்பாராத முறையில்) சிந்துதல், அதிக அளவில் வெளிவருதல் என்பன இவ்வினையின் பொருண்மை நீட்சிகளாகும்.

பங்கெடுப்பாளர்களாக வரும் எழுவாய், செயப்படுபொருள், இடம், பயனாளி, காரணம், முறை என்பனவற்றின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் நாம் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம். *ஊற்று* என்பதன் முதன்மைப் பொருண்மையிலிருந்து பிற துணைநிலைப் பொருண்மைகளை அல்லது பொருண்மை

நீட்சிகளை ஊகிக்கவோ அல்லது புரிந்துகொள்ளவோ இயலும். அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டுச் சட்டகத்தில் *ஊறு* என்ற வினையின் பல்பொருண்மையை அல்லது பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயற்பாடுகளாலும் விளக்க முடியும்.

6.3.17 *எடு*

எடு என்ற சொல்லுக்குக் க்ரியாவில் இரண்டு பதிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாவது வினை இரண்டாவது பதிவு துணைவினை ஆகும். எடு என்ற வினைக்குக் க்ரியாவில் 42 பொருள்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இதைப் பட்டியலிடும்.

அட்டவணை

வ. எண்	**பொருள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	செயப்படுபொருள்	காரணம்/இடம்/முறை
அ	ஒன்று இருக்கும் நிலையை மாற்றுவது தொடர்பான வழக்கு				
1	ஏதேனும் ஒன்றை) தூக்குதல்/(ஒரு செயலுக்குப் பயன்படும் விதத்தில்	1.தரையில் பளபளப்பாக கிடந்ததைக் குனிந்து எடுத்துப்	1.அவன்	1.பளபளப்பாக கிடந்தது	1.தரையில் 2.வண்டியிலிருந்து

	ஒன்றை) பிடித்தல்;	பார்த்தான். 2.வண்டியிலிருந்து சாமான்களை எடுத்து உள்ளே வை. 3.அழுகிற குழந்தையை எடுக்காமல் எங்கே போய்விட்டாள்? 4.அந்த காலத்தில் ஆசிரியர் பிரம்பை எடுத்தால் மாணவர்கள் நடுங்குவார்கள். 5.வாள் எடுத்துப் போரிடத் தெரியாத வீரன். 6.கண்ணில் தூசு விழுந்துவிட்டதால் கைக்குட்டையால் ஒத்தி எடுத்தான்.	2.நீ 3.அவள் 4.ஆசிரியர் 5.வீரன் 6.அவன்	2. சாமான்கள் 3.அழுகிற குழந்தை பிரம்பு 5.வாள் தூசு	6.கண்ணில்
2	(தோற்றம், வடிவம், பிறவி முதலியவை) அடைதல்;	1.விபத்தில் தப்பியது மறுபிறவி எடுத்ததுபோல் இருக்கிறது. 2.தண்ணீர்ப் பிரச்சனை விசுவரூபம் எடுத்துள்ளது. 3.திருமால் எடுத்த பத்து அவதாரங்களில் ஒன்று கிருஷ்ணாவதாரம். 4.இந்தப்	1.நான் 2.தண்ணீர்ப் பிரச்சனை 3.திருமால் 4. அவர்	1.மறுபிறவி 2.விசுவரூபம் 3.பத்து அவதாரங்கள் 4.அவதாரம்	4.இந்தப் படத்தில்

		படத்தில் அவர் வில்லனாக அவதாரம் எடுத்துள்ளார்.			
3	(கடைதல், பிழிதல் போன்றவற்றால் அல்லது வேதியியல் முறைப்படி ஒன்றிலிருந்து) பிரித்துப் பெறுவதன் மூலம் ஒன்றைத் தயாரித்தல்;	1.தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதை கிராமத்தில் இன்றும் பார்க்கலாம். 2.கரும்பிலிருந்து சாறு எடுத்து வெல்லம், ஜீனி போன்றவற்றைத் தயாரிக்கிறார்கள் . 3.கீழாநெல்லியிலிருந்து மஞ்சள் காமாலைக்கு மருந்து எடுக்கிறார்கள். 4.நோய் எதிர்ப்புச் சத்திக்கான சில மருந்துகள் விலங்குகளின் உடலிலிருந்து எடுக்கப்படுகின்றன.	1.வெண்ணெய் 2.அவர்கள் 3.அவர்கள்	வெண்ணெய் எடுப்பதை 2. சாறு 3. மருந்து 4.நோய் எதிர்ப்புச் சத்திக்கான சில மருந்துகள்	1. .தயிரைக் கடைந்து 2.கரும்பிலிருந்து 3.கீழாநெல்லியிலிருந்து 4.விலங்குகளின் உடலிலிருந்து
4	(ஒரு நிலையிலிருந்து கையை, காலை) விலக்குதல்;	1.வழியில் கால் நீட்டிக்கொண்டிருக்கிறாயே காலை எடு. 2.தோள்மீது வைத்திருந்த கையை எடுக்காமலேயே நடந்து வந்தார். 3.அவள் மேலிருந்து கண்ணை எடுக்க	1.நீ 2.அவர்	1.கால் தோள்மீது வைத்திருந்த கை 3. கண்ணை	3.அவள் மேலிருந்து

		முடியவில்லை.			
5	(சிறையில் இருப்பவரை ஜாமினில்) வெளியில் கொண்டுவருதல்;	1.என்னை வெளியில் எடுக்க யாருமே வரவில்லை என்று புலம்பினான் அந்தக் கைதி. 2.திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்ட தன் தம்பியை ஜாமினில் எடுப்பதற்காக அவர் முயன்று வருகிறார்.	1. யாரும் 2. அவர்	நான் (கைதி) தம்பி	1.வெளியில் 2.ஜாமினில்
ஆ	வசமாக்கிக் கொள்ளுதல் தொடர்பான வழக்கு				
6	(பணம் கொடுத்து ஒன்றை) வாங்குதல்;	1.தீபாவளிக்குத் துணி எடுத்துவிட்டீர்களா? 2.மரம் எடுக்கக் கொல்லத்துக்குப் போயிருக்கிறார். 3.பயணச்சீட்டு எடுப்பதற்காக எல்லோரும் வரிசையில் நின்றிருந்தார்கள். 4.உலகப் புகழ்பெற்ற ஓவியம் ஒன்றைப் பல கோடி ரூபாய்க்குப் பிரபல தொழிலதிபர் ஏலத்தில் எடுத்திருக்கிறார்.	1.நீங்கள் 2.அவர் 3.அவர்கள் 4.தொழிலதிபர்	1. துணி 2.மரம் 3.பயணச்சீட்டு 4.உலகப் புகழ்பெற்ற ஓவியம் ஒன்று	1.தீபாவளிக்கு 4.ஏலத்தில்
7	ஒரு இடத்தில் இருக்கும் பணம்,	1.பல்காரருக்குக் கொடுக்க	1. யார்	1. பத்து ரூபா	1. ஐம்பது ரூபாயில்

	பொருள் போன்றவற்றை ஒருவர் தன்னிடத்தில் வரச்செய்தல்;	வைத்திருந்த ஐம்பது ரூபாயில் பத்து ரூபாயை யார் எடுத்தது? 2.பெட்டியில் ஆயிரம் ரூபாய் வைத்திருக்கிறேன் அதிலிருந்து இருநூறு எடுத்துக்கொள். 3.எங்கள் வங்கியில் பணம் போடவும் எடுக்கவும் ஆகும் நேரம் சில நிமிஷங்கள்தான். 4.பலாப்பழத்திலிருந்து சுளையை எடுத்துக்கொடு.	2.நீ 4.நீ	2.இருநூறு 3. பணம் 4. சுளை	3.வங்கியில் 4.பலாப்பழத்திலிருந்து
8	தோண்டுதல், மூழ்குதல் போன்ற செயல்பாடுகளின் மூலம் ஒன்றை) பெறுதல்;	1.நெய்வேலியில் எடுக்கப்படுவது பழுப்பு நிலக்கரியாகும். 2.வளைகுடா நாடுகளில்தான் அதிக அளவில் எண்ணெய் எடுக்கப்படுகிறது. 3.தம்பி! கிணற்றுக்குள் வாளி விழுந்துவிட்டது. கொஞ்சம் எடுத்துத் தருகிறாயா? 4.கடலில் மூழ்கி சங்கு எடுப்பவர்கள். 5.ஆன்மீகக் கடலில் மூழ்கி	தம்பி (நீ) 4.அவர்கள் 5.அவர்	1.பழுப்பு நிலக்கரி 2.எண்ணெய் 3. வாளி 4. சங்கு 5.முத்துக்களின் தொகுப்பு	1.நெய்வேலியில் 2.வளைகுடா நாடுகளில் 3.கிணற்றுக்குள் 4.கடலில் மூழ்கி 5.ஆன்மீகக் கடலில் மூழ்கி

		அவர் எடுத்த முத்துக்களின் தொகுப்புதான் இந்நூல்.			
9	(தேர்வில் மதிப்பெண்கள் அல்லது விளையாட்டுப் போட்டியில் புள்ளிகள்) பெறுதல்;	1.கணக்குப் பாடத்தில் சுலபமாக நூற்றுக்கு நூறு எடுக்கலாம். 2.சச்சின் டெண்டுல்கர் பத்தொன்பது பந்துகளில் இருபது ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.	2.சச்சின் டெண்டுல் கர்	1. நூற்றுக்கு நூறு 2.இருபது ஓட்டங்கள்	1.கணக்குப் பாடத்தில் 2.பத்தொன்பது பந்துகளில்
10	(செலவழித்த பணம், போட்ட முதலீடு போன்றவற்றை அல்லது லாபத்தை) ஈட்டுதல்;	1.படம் சரியாக ஓடாததால் போட்ட பணத்தை அவரால் எடுக்க முடியவில்லை. 2.இந்த வருடமாவது எதிர்பார்த்த அளவு லாபத்தை எடுக்க முடியுமா?	1.அவர்	1.பணம் 2. லாபத்தை	1.படம் சரியாக ஓடாததால் 2.இந்த வருடம்
11	(வீடு, வண்டி முதலியவற்றை)அமர் த்துதல்	வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கியிறுக்கிறார்	அவர்	வாடகை வீடு	
12	(விடுப்புக் கேட்டு) பெறுதல்	1.மூன்று நாட்கள் விடுப்பு எடுத்திருக்கிறேன். 2.தொழிலாளர்கள் அடிக்கடி விடுப்பு எடுத்தால் உற்பத்தி பாதிக்கப்படும்.	1.நான் 2.தொழி லாளர்கள்	1.விடுப்பு விடுப்பு	

13	(வானொலி, தொலைக்காட்சி போன்றவை அலைவரிசைகளை ஏற்று) செயல்படுதல்	1.தூர்தர்சன் நேற்றிலிருந்து சரியாகவே எடுக்கவில்லை. 2.உங்கள் வானொலியில் திருச்சி பண்பலை எடுக்கிறதா?	1.தூர்தர்சன் 2. திருச்சி பண்பலை		
14	(சிகிச்சை) பெறுதல்	1.பத்து நாள் சிகிச்சை எடுத்துக் கொண்டதால்தான் நான் இப்போது தேரியிருக்கிறேன். 2.யாரிடம் நீங்கள் சிகிச்சை எடுத்துக் கொள்கீறீர்கள்?	1. நாள் 2. நீங்கள்	1.சிகிச்சை 2. சிகிச்சை	1.பத்து நாள் சிகிச்சை
15	(உரிய அனுமதி இல்லாமல் ஒன்றை) வசமாக்கிக்கொள்ளுதல்	1.அரசாங்க பணத்தை எடுத்ததற்காக அவர்மீது வழக்குப் போடப்பட்டது. 2.என் புத்தகத்தை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.	1. அவர் 2.யாரோ	பணம் 2. புத்தகம்	1.அரசாங்க பணத்தை எடுத்ததற்காக
இ	சேகரித்தல் தொடர்பான வழக்கு				
16	(விவரங்களை) கணக்கிட்டுக் குறித்தல் அல்லது சேகரித்தல்	ஜன்னல்களுக்குத் திரைபோட அளவு எடுக்க வேண்டும்.		அளவு	ஜன்னல்களுக்குத் திரைபோட
17	(ஓர் இடத்திலிருந்து அல்லது பல இடங்களுக்குத்	1.குளத்தில் தண்ணீர் எடுக்கப்	1.நாம்	1.தண்ணீர்	1.குளத்தில்

	தேடிச் சென்று ஒன்றை) சேகரித்தல்	போகலாமா? 2.பருத்தி எடுக்க ஆட்கள் வருகிறார்கள். 3.தோட்டத்திலிருந்து பூ எடுத்துவந்து பூஜை செய்வது வழக்கம். 4.நேற்று குப்பை எடுப்பவர்கள் யாரும் வரவேயில்லை.	2. ஆட்கள் 3. பூ 4. -	பருத்தி 4.குப்பை	- 3.தோட்டத்திலிருந்து
18	(புத்தகம், கோப்பு முதலியவற்றைப் பிரித்து ஒரு பகுதியை) தேடிப்பார்த்தல்	ஐம்பதாம் பக்கத்தை எடு.	நீ	ஐம்பதாம் பக்கம்	
19	(பிற படைப்புகளிலிருந்து ஒரு அம்சத்தையோ பகுதியையோ) பயன்படுத்துதல்	1.இந்த உத்தியை ஒரு பிரெஞ்சு நாவலிலிருந்து எடுத்துக்கொண்டேன். 2.இந்த மேற்கோள் கம்ப ராமாயணத்திலிருந்து எடுத்தது என்றார்.	1.நான்	1.இந்த உத்தி	1.பிரெஞ்சு நாவலிலிருந்து 2.கம்ப ராமாயணத்திலிருந்து
20	(ஒன்றை) தேர்ந்தெடுத்தல்	1.துணைப்பாடமாக அவர் சமஸ்கிருதத்தை எடுத்துப் படிக்கிறார். 2.குளிர்பானங்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.	1. அவர்	1. சமஸ்கிருதம் 2.குளிர்பானங்களின் மாதிரிகள்	1.துணைப்பாடமாக 2.பரிசோதனைக்கு
ஈ	ஒன்றை உருவாக்குதல்				

	தொடர்பான வழக்கு				
21	(கோயில்) கட்டுதல்; (சுவர்) எழுப்புதல்	1.ராஜராஜன் தஞ்சையில் கோயில் எடுத்தான். 2.எங்கள் வீட்டைச் சுற்றி சுவர் எடுக்க இருபதாயிரம் ரூபாய் ஆயிற்று.	1.ராஜராஜன்	1. கோயில் 2.சுவர்	1.தஞ்சையில் 2.எங்கள் வீட்டைச் சுற்றி
22	(திரைப்படம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஒளிப்பதிவின் மூலம்) உருவாக்குதல்; (புகைப்படம்) பிடித்தல்; (பிரதி) தயாரித்தல்	1.திரைப்படக் கல்லூரி மாணவர் ஒருவர் எடுத்த குறும்படம் இது. 2.இந்த விண்ணப்பத்தைப் பிரதி எடுத்து வைத்துக்கொள். 3.நான் போன வருடம் எடுத்துக்கொண்ட புகைப்படம்.	1.திரைப்படக் கல்லூரி மாணவர் ஒருவர் 2.நீ 3.நான்	1.குறும்படம் 2 விண்ணப்பம் 3.புகைப்படம்	2.பிரதி
23	(வகிடு) உண்டாக்குதல்	ஏன் திடீரென்று நேர் வகிடு எடுத்திருக்கிறாய்?	நீ	வகிடு	
உ	நீக்குதல் தொடர்பான வழக்கு				
24	பிணத்தை) தூக்கிச் செல்லுதல்; அகற்றுதல்	மூத்த மகன் வரும்வரை தாயின் உடலை எடுக்காமல் வைத்திருந்தார்கள்.	அவர்கள்	தாயின் உடலை	
25	(இருந்ததை) அப்புறப்படுத்துதல்/(வெட்டுவது, அறுப்பது முதலியவை மூலமாக) நீக்குதல்	1.ஏன் மீசையை எடுத்துவிட்டாய்? 2.குழாயில் இருக்கும் அடைப்பை எடுத்த பிறகு தண்ணீர்	1.நீ 2.குழாயில் இருக்கும் அடைப்பு	1. மீசை	

		ஒழுங்காக வருகிறது.			
26	(சிக்கு, முடிச்சு போன்றவற்றை) பிரித்தல்	நூலில் விழுந்துவிட்ட முடிச்சை எடுக்க அரைமணி நேரமா?	நீ	நூலில் விழுந்துவிட்ட முடிச்சு	
27	(நடைமுறையில் இருப்பதை அல்லது நடைபெற்று வருவதை) முறைப்படி நீக்குதல் அல்லது விலக்குதல்	மதுவிலக்கை எடுப்பது பற்றி ஒரு தெளிவான முடிவு வேண்டும்.		மதுவிலக்கு	
28	(மந்திரவாதி போன்றவர்களிடம் சென்று செய்வினை, பில்லிசூனியம் போன்றவை) செயல்படாதவாறு நீக்குதல்	பக்கத்து வீட்டுக்காரி வைத்த செய்வினையை எடுப்பதற்காக அம்மா பூசாரியிடம் போயிருக்கிறாள்		பக்கத்து வீட்டுக்காரி வைத்த செய்வினை	
ஊ	மேற்கொள்ளுதல் தொடர்பான வழக்கு				
29	(காவலில்) வைத்தல்	நகைக்கடைக் கொள்ளையில் சம்பந்தபட்ட ஒரு நபர் காவலில் எடுக்கப்பட்டார்.		நகைக்கடைக் கொள்ளையில் சம்பந்தபட்ட ஒரு நபர்	காவலில்
30	(முடிவை) தீர்மாணித்தல்	அமைச்சரவை எடுத்திருந்த முடிவைப் பத்திரிகைகள் விரிவாக விமர்சித்திருந்தன .	அமைச்சரவை	முடிவு	
31	(ஏதேனும் ஒரு செயல்பாட்டை) மேற்கொள்ளுதல்	1.அவனுக்காக நான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீண். 2.விரைவில் நடவடிக்கை	1. நான்	1.முயற்சிகள் 2.நடவடிக்கை	

		எடுக்க இருப்பதாக மனு கொடுத்தவர்களிடம் அமைச்சர் உறுதியளித்தார். 3. எடுத்த காரியத்தை முடித்துவிட வேண்டும்.		3.காரியம்	
32	(உறுதிமொழி) ஏற்றல்	1.புதிய அமைச்சர்கள் நேற்று பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர். 2.இனிமேல் குடிப்பதில்லை என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டான்.	1.புதிய அமைச்சர்கள் 2.அவன்	1.பதவிப் பிரமாணம் 2. உறுதிமொழி	
எ	பிற வழக்குகள்				
33	(ஒன்றை) உட்கொள்ளுதல்	இந்த மருந்தை ஒரு அறுபது நாள் தொடர்ந்து எடுத்துக்கொண்டால் சலிப் பிரச்சனை வராது		மருந்து	
34	(வாகனத்தை) கிளப்புதல்; (வாகனத்தை) பயன்படுத்துதல்	1.'நேரமாயிற்று வண்டியை எடுங்கள்' என்று நடத்துனர் கூறினார். 2.என் சைக்கிளை நீ எடுத்துக்கொண்டு போ.	2. நீ	1.வண்டி 2. சைக்கிள்	
35	(காலம்) பிடித்தல்; செலவாதல்	இதை முடிப்பதற்கு நிறைய நேரம் எடுத்துவிட்டது.	நிறைய நேரம்		இதை முடிப்பதற்கு
36	(ஒருவர் கேட்கும்	நான்	-	-	பத்து ரூபாய்(கு)

	குறிப்பிட்ட தொகையை) தருதல்; கொடுத்தல்	பேரம்பேசியதும் கடைக்காரன் பத்து ரூபாய் எடுங்கள் என்று கடைசியில் சொன்னான்.			
37	எடுபடுதல்	என் பேச்சு அங்கே எடுக்குமா என்று தெரியவில்லை	என் பேச்சு		அங்கே
38	எடுப்பாக இருத்தல்	கருப்பு நிறத்திற்கு வெள்ளைதான் நன்றாக எடுக்கும்.	வெள்ளை தான்		கருப்பு நிறத்திற்கு
39	(ஒன்றைப் பற்றிய பேச்சை) ஆரம்பித்தல்	அவன் பேச்சை இங்கு எவனும் எடுக்கக் கூடாது என்று மிரட்டினான்.	இங்கு எவனும்	அவன் பேச்சை	
40	(குழி, பள்ளம் போன்றவை) தோண்டுதல்	தென்னங்கன்று நட இரண்டறையடி ஆழத்துக்கு ஒரு குழி எடுக்க வேண்டும்.		குழி	தென்னங்கன்று நட
41	(திரையரங்கில் படத்தை) காட்டுதல்	இந்தத் திரையரங்கத்தில் எப்போதுமே புதுப் படங்களைத்தான் எடுப்பார்கள்.	அவர்கள்	புதுப் படங்கள்	திரையரங்கத்தில்
42	உறிஞ்சுதல், பிரித்தல் மூலம் ஒன்றை ஒன்றிலிருந்து பெறுதல்	வேர்கள் தங்களுக்குத் தேவையான அளவு நீரை மண்ணிலிருந்து எடுத்துக்கொள்கி ன்றன.	வேர்கள்	நீர்	மண்ணிலிருந்து

எடு என்பதன் பொருள்கள் பின்வருமாறு ஆறு குழுமங்களாகப் பிரிக்கப்பட்டுக் க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன:

அ. ஒன்று இருக்கும் நிலை மாற்றுவது தொடர்பான வழக்கு

ஆ. வசமாக்கிக் கொள்ளுதல் தொடர்பான வழக்கு

இ. சேகரித்தல் தொடர்பான வழக்கு

ஈ. ஒன்றை உருவாக்குதல் தொடர்பான வழக்கு

உ. நீக்குதல் தொடர்பான வழக்கு

ஊ. மேற்கொள்ளுதல் தொடர்பான வழக்கு

எ. பிற வழக்குகள்

இவ்வினை முதல் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும் எழுவாயையும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும் செயப்படுபொருளையும் முக்கியப் பங்கெடுப்பாளராக ஏற்கும். இவ்வினையின் பங்கெடுப்பாளர்களாக வரும் பெயர்ச் சொற்களின் பொருண்மைக்கூறுகள் இவ்வினைக்கு வேறுபட்ட அர்த்தங்களைத் தரும். இதைப் பின்வருமாறு வாய்ப்பாட்டில் தரலாம்:

(255) எடு. [பெதொ + பெதொ_ஐ]

+ எழுவாய் + செயப்படுபொருள்

(பொருண்மைக்கூறுகள்) (பொருண்மைக்கூறுகள்)

“தூக்குதல்” என்பது *எடு* என்ற வினையில் முதன்மை அர்த்தமாகும். முதன்மை அர்த்தத்திலிருந்து பிற துணை நிலையில் வரும் “வசமாக்கிக் கொள்ளுதல்”, “சேகரித்தல்”, “உருவாக்குதல்”, “நீங்குதல்” “மேற்கொள்ளுதல்” என்ற குழும அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் விளக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். வேறுபட்ட வருகைச்சூழலில் இவ்வினையின் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான அர்த்தங்களைப் பெறும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள

அர்த்தங்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் சொற்பொருண்மையியல் மாதிரியை நாம் தரவேண்டும்;. *எடு* என்பதன் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு[விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்.

6.3.18. ஏறு

ஏறு என்ற சொல்லுக்குக் கிரியாவில் ஒரு பதிவு மட்டும் தரப்பட்டு 16 அர்த்தங்கள் பட்டடியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் அடிப்படையில் இவ்வினையின் வேறுபட்ட அர்த்தங்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்:

அட்டவணை

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	இடம்	காரணம்/முறை/அடைபவர்
அ	மேல் நோக்கிச் செல்லுதல் தொரடர்பான வழக்கு				
1	உயரமான ஓர் இடத்தை அடையும் பொருட்டு (மேலே) செல்லுதல்;	1.வெற்றி பெற்றவர்கள் மேடையில் ஏறிப் பரிசுகளைப் பெற்றுச் சென்றார்கள். 2.வயதாகிவிட்டதால் மாடிப்படி ஏறமுடியவில்லை.	1.வெற்றி பெற்றவர்கள்	1. மேடையில் 2. மாடிப்படி	2.வயதாகிவிட்டதால்

		3.குரங்கு மரத்தில் சரசரவென்று ஏறியது.	3.குரங்கு	3. மரத்தில்	
2	(ஒரு பரப்பின் மட்டம்) கூடுதல்; உயர்தல்;	1.அடைமழை பெய்தால்தான் குளத்தில் நீர் ஏறும். 2.அவன் மூச்சை இழுத்துவிட்டபோது மார்பு ஏறி இறங்கியது.	1. நீர் 2. மார்பு	1. குளத்தில்	2.அவன் மூச்சை இழுத்துவிட்டபோது
3	(பொருள்களின் மதிப்பு, விலை போன்றவை) உயர்தல்;	கடந்த மாதத்தில் மட்டும் தங்கத்தின் விலை பல முறை ஏறியிருக்கிறது.	தங்கத்தின் விலை	கடந்த மாதத்தில்	பல முறை
4	(ஆட்சியில், அரியணையி) அமர்தல்;	1.இளவரசனை அரியணை ஏறவிடாமல் சதிசெய்யும் மந்திரியைப் பற்றிய நாடகம். 2.ஆட்சியில் ஏறியதும் பல நல்ல திட்டங்களைப் பிரதமர் மக்களுக்கு அறிவித்தார்.	2.பிரதமர்	2.ஆட்சியில் ஏறியதும்	
ஆ	ஒன்றினுள் அல்லது ஓர் இட்த்தில் வருதல் தொடர்பான வழக்கு				
5	(வண்டி, ரயில் முதலிய வாகனத்தினுள்) நுழைதல்;	சீக்கிரம் ஏறு வண்டி புறப்படப் போகிறது.		வண்டி	
6	(பயணம் செய்வதற்காக பஸ், இரயில் போன்றவற்றை) பிடித்தல்;	நான் காலை பத்து மணிக்கு ரயில் ஏற வேண்டும்.	நான்	ரயில்	

7	(குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காக ஒரு இடத்துக்கு) செல்லுதல்;	மனைவிக்குப் பிடித்த மாதிரி புடவை எடுப்பதற்காகக் கடைகடையாய் ஏறி இறங்கினார்.	அவர்	கடைகடையாய்	மனைவிக்குப் பிடித்த மாதிரி புடவை
இ	ஒன்றின் மேல் போதல் என்னும் வழக்கு				
8	கீழே கிடப்பதன் மேல் செல்லுதல்;	தெருவில் படுத்துக்கிடந்த நாய்மீது லாரி ஏறிவிட்டது.	லாரி	நாய்மீது	
ஈ	உள்ளே செல்வதை அல்லது பரவுவதை, படிவதை மேல் நோக்கிச் செல்வதாகக் கூறும் வழக்கு				
9	(காலில் ஆணி, முள் போன்றவை அல்லது உடம்பில் விஷம் முதலியவை) உட்செல்லுதல்;	1.காலில் ஏறிய முள்ளைப் பிடுங்க முடியவில்லை. 2.பாம்பின் விஷம் ஏறி மாட்டின் வாயில் நுரை தள்ளியது.	1.முள் 2.பாம்பின் விஷம்	1.காலில் 2. மாட்டின் வாயில்	
10	(வழுக்கை, நரை) விழுதல்;	1.முடி கொட்டி வழுக்கை ஏறியிருந்தது. 2.காதோரங்களில் நரை ஏறியிருந்தது.	1.வழுக்கை 2. நரை	2.காதோரங்களில்	1.முடி கொட்டி
11	(குளிர், உஷ்ணம்) பரவுதல்;	1.சாராயம் குடித்தவுடன் உடம்பில் உஷ்ணம் ஏறத் தொடங்கியது. 2.வெயில் ஏறஏற ஒரே	1.உஷ்ணம் 2.வெயில்	1. உடம்பில்	1.சாராயம் குடித்தவுடன் 2.புழுக்கம்

		புழுக்கம்.			
12	(சாயம், நிறம் முதலியவை) படிதல்; பிடித்தல்;	1.துவைத்துத்துவைத் துப் பழுப்பு ஏறிய வேட்டி. 2.வெற்றிலை போட்டுக் காவி ஏறிய பற்கள்.	1. பழுப்பு 2. காவி	1. வேட்டி 2. பற்கள்	1.துவைத்துத்துவை த்து 2.வெற்றிலைபோட் டு
13	(கோபம், வெறி முதலியவை) அதிகரித்தல்;	1.மகன் பேசப்பேச அவர் முகத்தில் கோபம் ஏறியது. 2.போதை ஏறியதும் உளற ஆரம்பித்தான்.	1. கோபம் 2. போதை	1. முகத்தில் அவன்	1.மகன் பேசப்பேச
உ	மரபு வழக்கு				
14	(குறிப்பிட்ட ஒன்று) அதிகமாகச் சேர்தல்;	1.கையில் காசு ஏறியிருக்கிறது. 2.உனக்குக் கொழுப்பு ஏறி விட்டது.	1. காசு 2.கொழுப்பு	1.கையில்	
15	(உடம்பு) சதை விழுதல்; சதை போடுதல்;	1.உனக்கு உடம்பு ஏறவே ஏறாதா? 2.போன தடவை பார்த்ததைவிட இப்போது அவனுக்கு உடம்பு நன்றாக ஏறியிருக்கிறது.	1.உனக்கு 2. உடம்பு		
16	(எதிர்மறை வினைவடிவங் களில் அல்லது எதிர்மறைத் தொனியில்) கவனத்தில் படுதல்; (மனத்தில்) பதிதல்;	1.நீங்கள் என்ன சொன்னாலும் அவன் மூளையில் ஏறாது. 2.நாம் சொல்வது அவன் காதில் ஏறுமா?		1. மூளையில் 2. காதில்	

ஏறு என்பதன் அர்த்தங்கள் பின்வருமாறு ஆறு குழுமங்களாகப் பிரிக்கப்பட்டு க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன:

அ. மேல்நோக்கிச் செல்லுதல் தொடர்பான வழக்கு

ஆ. ஒன்றினுள் அல்லது ஓர் இடத்தில் வருதல் தொடர்பான வழக்கு

இ. ஒன்றின் மேல் போதல் என்னும் வழக்கு

ஈ. உள்ளே செல்வதை அல்லது பரவுவதை, படிவதை மேல்நோக்கிச் செல்வதாகக் கூறும் வழக்கு

உ. மரபு வழக்கு

"மேல்நோக்கிச் செல்லுதல்" என்பது *ஏறு* என்பதன் முதன்மைக் குழும அர்த்தமாகும். "ஒன்றினுள் அல்லது ஓர் இடத்தில் வருதல்", "ஒன்றின் மேல் போதல்", "உள்ளே செல்லுதல் அல்லது பரவுதல் அல்லது படிதல்" என்பன துணைநிலைக் குழும அர்த்தங்களாகும். இது தவிர ஏறு மரபு வழக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. *ஏறு* என்ற வினை ஏறும் செயலியையும் எழுவாயையும் ஏறும் இடத்தையும் முக்கியப் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். வழுநிலையில் எழுவாய் முதல் வேற்றுமைத் தொடராகவும் ஏறுமிடம் வழுநிலையில் ஏழாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்படுத்தம் பெறும். இப்பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் இவ்வினை வேறுபட்ட அர்த்தங்களைப் பெறும். இதைப் பின்வருமாறு வாய்ப்பாட்டில் தரலாம்.

(256) ஏறு [பெதொ + பெதொ -இல் ___]

+எழுவாய் +இடம்

+பொருண்மை கூறுகள் +பொருண்மைக் கூறுகள்

6.3.19. ஏற்று

க்ரியாவின் அகராதியில் *ஏற்று* என்பதற்கு இரண்டு வினைப் பதிவுகள் (ஏற்று1, ஏற்றி2) பட்டியலிடப்பட்டுள்ளன.

6.3.19.1. *ஏற்று1*

க்ரியாவின் அகராதியில் *ஏற்று1* என்பதற்கு 12 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதி கோட்பாடு அடிப்படையில் இவ்வினையின் வேறுபட்ட பொருள்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்.

அட்டவணை:

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்/காரணம்/ முறை/அடைபவர்
அ	ஒன்றினுள் அல்லது ஓர் இடத்தின் மேல் வந்திருக்கும்படி செய்தல் தொடர்பான வழக்கு				
1	(வாகனத்தில்) ஏறச்செய்தல்	1.பேருந்தில் அதிகப் பயணிகளை ஏற்றுவது தவறு. 2.அம்மாவை வண்டியில் ஏற்றிவிட்டு வீட்டுக்கு வந்தேன்.	1.- 2.நான்	1.பயணிகள் 2.அம்மா	பேருந்தில் வண்டியில்
2	(ஒன்றின் மேல்) தூக்கிவைத்தல்; (ஒருவரை அல்லது ஒன்றை) ஒரு இடத்திற்கு மேலே போகச் செய்தல்	1.எல்லாச் சாமன்களையும் வண்டியில் ஏற்றிவிட்டீர்களா? 2.பால் பாத்திரத்தை இப்பொழுதுதான் அடுப்பில் ஏற்றினேன். 3.அவனை குதிரைமேல் ஏற்றி உட்கார வைத்தேன்.	1.நீங்கள் 2.நான் 3.நான்	1. சாமான்கள் 2.பால் பாத்திரம் 3.அவன்	1. வண்டியில் 2.அடுப்பில் 3.குதிரை

ஆ	ஒன்றின் மீது போகச்செய்தல் தொடர்பான வழக்கு				
3	(கீழே கிடப்பதன் மேல் ஒன்றை) செலுத்துதல்	1.தெருவில் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தைகள்மேல் ஏற்றிவிடாமல் லாரியை ஓட்டு	நீ	-	குழந்தை மேல்
இ	மேல்நோக்கி போகச்செய்தல் தொடர்பான வழக்கு				
4	(கம்பத்தில் கொடியை) உயர்த்துதல்	1.தேசியக்கொடி ஏற்றப்பட்டதும் தேசிய கீதம் ஒலித்தது. 2.காலையில் ஏற்றிய கொடியை மாலையில்தான் இறக்குவார்கள்.	1.- 2. அவர்கள்	1.தேசியக்கொடி 2.கொடி	காலையில்
5	(நீரை) மேலே போகச்செய்தல்	நீரேற்று நிலையம்		நீர்	
6	(கீழ்நோக்கி வருவதை அல்லது ஒரு நிலையில் இருப்பதை) உயர்த்துதல்	1.மூக்கில் இறங்கியிருந்த கண்ணாடியை விரல்களால் ஏற்றிவிட்டுக்கொண்டு பேச ஆரம்பித்தார். 2.படத்தை இன்னும் சிறிது ஏற்றி மாட்டு.	1.அவர் 2.நீ	1.மூக்கில் இறங்கியிருந்த கண்ணாடி 2.படை	1.விரல்களால்
7	(விலை, அளவு, தன்மை முதலியவற்றை) உயர்த்துதல்;	வீட்டுக்காரர் ஆறு மாதத்திற்கு ஒரு முறை வாடகையை ஏற்றிவிடுகிறார்.	வீட்டுக்காரர்	வாடகை	

	அதிகபடுத்துதல்				
8	(குரலை) உயர்த்துதல்	குரலை படிப்படியாக எப்படி ஏற்றி இறக்கலாம் என்ற பயிற்சி நடிகர்களுக்கு அளிக்கப்படுகிறது.		குரல்	
9	உயர்வாகக் கூறுதல்	இறைவனது திருவிளையாடல்கள் ஏற்றிப் போற்றப்படுகின்றன.		இறைவனது திருவிளையாடல்கள்	
ஈ	உள்ளே செல்வதை மேல்நோக்கிச் செல்வதாக கூறும் வழக்கு				
10	உடம்பில்) உட்செலுத்துதல்	விபத்தில் கால் இழந்தவருக்கு உடனடியாக இரத்தம் ஏற்றவேண்டும்.		இரத்தம்	விபத்தில் கால் இழந்தவருக்கு
11	(ஒரு தன்மை, விசை போன்றவற்றை ஒன்றுக்கு) ஊட்டுதல்	1.உணர்ச்சிகரமான பேச்சுகளால் மக்களுக்கு வெறி ஏற்றிவிடுகிறார். 2.கவிஞர்கள் சொற்களுக்கு ஒளியையும் அழகையும் அல்லவா ஏற்றிவிடுகிறார்கள்! 3.கட்டியங்காரன் நிகழ்காலத்தின் சாயலைத் தெருக்கூத்தில் ஏற்றிவிடுகிறான்.	1.அவர் 2.கவிஞர்கள் 3.கட்டியங்காரன்	1. வெறி 2. சொற்களுக்கு ஒளியையும் அழகையும் 3.நிகழ்காலத்தின் சாய	3.தெருக்கூத்தில்
12	(சூட்டை) பரவச்செய்தல்	பாத்திரத்தை லேசாகச் சூடேற்றியபின் எண்ணையை ஊற்றவும்.		சூடு	

உ	ஒன்றின் மீது மாற்றுதல் தொடர்பான வழக்கு				
13	(பழி, பாவம் முதலியவற்றை ஒருவர்மேல்) சுமத்துதல்	பிறர்மேல் பழியை ஏற்றிவிடுவது சுலபம்.		பழி	பிறர்மேல்
14	(குறிப்பில்) சேர்த்தல்	அந்த உறுப்பினர் கூறிய சில சொற்கள் அவைக்குறிப்பில் ஏற்றப்படாது.		அந்த உறுப்பினர் கூறிய சில சொற்கள்	அவைக்குறிப்பில்
15	(அரியணையில், ஆட்சியில்) அமர்த்துதல்	1.தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரை ஆட்சியில் ஏற்றிவிட்டுக் கட்சிப்பணியில் ஈடுபட்டிருக்கும் தலைவர். 2.தன் மகனை அரியணையில் ஏற்றிவிட்டுத் துறவரம் பூண்ட மன்னர்.	1. தலைவர் 2. மன்னர்.	1.தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவர் 2.மகன்	1.ஆட்சியில் 2.அரியணையில்

ஏற்று என்பதன் பொருள் பின்வறுமாறு ஐந்து குழுமங்களாகப் பிரிக்கப்பட்டு க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளது.

அ. ஒன்றினுள் அல்லது ஓர் இடத்தின் மேல் வந்திருக்கும்படி செய்தல் தொடர்பான வழக்கு

ஆ. ஒன்றின் மீது போகச்செய்தல் தொடர்பான வழக்கு

இ. மேல்நோக்கி போகச்செய்தல் தொடர்பான வழக்கு

ஈ. உள்ளே செல்வதை மேல்நோக்கிச் செல்வதாக கூறும் வழக்கு

உ. ஒன்றின் மீது மாற்றுதல் தொடர்பான வழக்கு

ஏற்று1 என்பது *ஏறு* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினை வடிவமாகும். இரண்டுக்கும் இடையில் இணையான பொருள்களைக் காணலாம். "ஒன்றினுள் அல்லது ஓர் இடத்தின் மேல் வந்திருக்கும்படி செய்தல்" என்பது இவ்வினையின் முதன்மைக் குழுமப் பொருளாகும். முதன்மைக் குழுமப் பொருளிலிருந்து பிற துணைநிலையில் வரும் "ஒன்றின் மீது போகச்செய்தல்", "மேல்நோக்கி போகச்செய்தல்", "உள்ளே செலுத்துதல்", "ஒன்றின் மீது மாற்றுதல்" என்ற குழுமப் பொருள்களை சூழல் அடிப்படையில் விளக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். இவ்வினை வழுநிலையில் ஏற்றும் எழுவாயை முதல் வேற்றுமைத் தொடராகவும் ஏற்றப்படும் செயப்படுபொருளை இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் ஏற்றும் இடத்தை ஏழாம் வேற்றுமைத் தொடராகவும் ஏற்கும். இத்தொடர்களின் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் இவ்வினை வேறுபட்ட அர்த்தங்களைப் பொருள்கோள் செய்யும்.

(257) ஏற்று [பெதொ + பெதொ - ஐ + (பெதொ - இல்)]
+எழுவாய் +செயப்படுபொருள்
+பொ.ப.கூ. +பொ.ப.கூ.

வேறுபட்ட பொருண்மைச்சூழலில் *ஏற்று1* என்பதன் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான அர்த்தங்களைப் பெறும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் பொருண்மையின் ஒரு மாதிரியை நாம் தரவேண்டும். *ஏற்று1* என்பதன் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு) சொல் மரபுரிமை

அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து அதன் பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை விளக்கலாம்.

6.3.19.2 ஏற்று2

ஏற்று2 என்ற வினைக்குக் க்ரியாவில் 2அர்த்தங்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இதைப் பட்டியலிடும்.

43 அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம் காரணம்/ முறை/ அடைபவர்
1	(விளக்கு கர்ப்பூரம் போன்ற போன்றவற்றை) எரியச்செய்தல்; கொளுத்துதல்	மணி ஆறு ஆகப் போகிறது, இன்னும், விளக்கு ஏற்றாமல் என்ன செய்கிறாய்?	நீ	விளக்கு	
2	(மின்விளக்கை எரியச் செய்ய விசையைப்) போடுதல்	மின்விளக்கை ஏற்றியவுடன் அறையில் ஒளி பாய்ந்திருந்த்து.		மின்விளக்கு	அறையில்

ஏற்று2 என்பது வழுநிலையில் முதல் வேற்றுமையாக வரும் ஏற்றும் செயலியை எழுவாயாகவும் ஏற்றுப்படும் பொருளைச் செயப்படுபொருளாகவும் ஏற்கும். இவ்வினையின் அர்த்தங்கள் *ஏற்று1 என்பதன்* அர்த்தங்களிலிருந்து முரண்படும். எனவே தனித்தனி பதிவுகளாகத் தரப்பட்டுள்ளன. மேற்கண்ட அட்டவணையில் இரண்டு

வகையிலான ஏற்றுதல்கள் அதாவது ஒளிவிடச் செய்யும் செயல்கள் இரண்டு அர்த்தங்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளதை உணராலாம். கர்பூரத்தை அல்லது எண்ணெய் விளக்கை ஒளிவிடச் செய்யும் செயலும் மின் விளக்கை ஒளிவிடச் செய்யும் செயலும் வேறுபட்டவை எனக் குறிப்பிடும்படி பொருண்மை நீட்சி செய்வது காட்டப்பட்டுள்ளது.

6.3.20. ஓடு

ஓடு என்ற வினைக்குக் கிரியாவில் 20அர்த்தங்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இதைப் பட்டியலிடும்.

அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	இடம்/காரணம்	முறை
அ	(இடம்பெயர்தல் தொடர்பான வழக்கு)				
1	(மனிதன், விலங்கு ஆகியவை கால்களை முன்னும் பின்னும் வேகமாக எடுத்து வைப்பதன் மூலம்) நடப்பதை விட விரைந்து செல்லுதல்/(மீன் போன்றவை நீரில்) விரைவாக நீந்திச் செல்லுதல்/(பாம்பு போன்றவை) வேகமாக ஊர்ந்து செல்லுதல்	1வேகமாக ஓடித்தான் ரயிலைப் பிடிக்க வேண்டியிருந்தது. 2குழந்தை குடுகுடுவென்று ஓடியது. 3வெடிச் சத்தத்தைக் கேட்ட யானைகள் மிரண்டு ஓடத்தொடங்கின.	1.அவன் 2.குழந்தை 3.யானைகள்	1.ரயிலைப் பிடிக்க 3.வெடிச் சத்தத்தைக் கேட்ட	1.வேகமாக 2.குடுகுடுவென்று 3.மிரண்டு

2	(இயந்திர விசையால் இயங்கும் பேருந்து போன்ற வாகனங்கள்) ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லுதல்	1சுரங்க இரயில் இன்று முதல் ஓடும் 2போராட்டத்தின் காரணமாகப் பேருந்துகள் ஓடவில்லை.	1.சுரங்க இரயில் 2.பேருந்துகள்		
3	(உருண்டையான பொருள்கள் வேகமாக) உருளுதல்	மட்டையாளர் அடித்த பந்து தடுப்பதற்கு ஆளின்றி எல்லைகோட்டை நோக்கி ஓடியது	பந்து	தடுப்பதற்கு ஆளின்றி	எல்லைக் கோட்டை நோக்கி
3	(இயந்திரங்கள்) இயங்குதல்; செயல்படுதல்	1கடிகாரம் நன்றாக ஓடுகிறது	கடிகாரம்		நன்றாக
4	(நீர் இரத்தம் போன்ற திரவங்கள்) பாய்தல்/(மின்சாரம் கம்பியில் பாய்தல்	1.இந்த ஆறு காட்டின் வழியாக ஓடிக் கடலில் கலக்கின்றது. 2.அதில் மின்சாரம் ஓடுகின்றது.	1. ஆறு	1.காட்டின் வழியாக 2.மின்சாரம்	
5	(துரத்தப்படும் அல்லது பிடிபட்டிருக்கும் நிலையிலிருந்து) விரைவாகத் தப்பிச் செல்லுதல்	எல்லோரும் ஓடு வந்ததும் திருடன் பயந்து ஓடிவிட்டான்.	எல்லோரும், திருடன்		பயந்து
6	(வீடு நாடு முதலியவற்றிலிருந்து வெளியேறி) வேறிடம் செல்லுதல்	யுத்தத்தின் போது தங்கள் நாட்டிலிருந்து ஓடிவந்த அகதிகள்	அகதிகள்	தங்கள் நாட்டிலிருந்து	
7.	(கவர்ச்சி	உடம்பில் ஒரு சின்ன காயம்	அவன்	மருத்துவரிடம்	

	காரணமாகவோ தேவை அல்லது அவசரம் கருதியோ ஒடுவரை) நாடிச் செல்லுதல்	என்றால் கூட அவன் மருத்துவரிடம் ஓடுவான்.			
8	(விளையாட்டு, பந்தயம் போன்றவற்றில் புள்ளிகள் பெறுவதற்காக வோ முன்னிலை பெறுவதற்காக வோ) (ஓட்டமாக) விரைதல்	இந்த பந்தயத்தில் எத்தனை குதிரைகள் ஓடுகின்றன.	குதிரைகள்	இந்த பந்தயத்தில்	
9	(படச்சுருள் அல்லது தையல் இயந்திரம், தறி போன்றவற்றில் நூல் முதலியவை) ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குச் செல்லுதல்	ஓடிக்கொண்டிருந்த படச்சுருள் அறுந்து விட்டதால் படம் பாதியிலேயே நிறுத்தப்பட்டது.	படச்சுருள்		
ஆ	ஒரு நிலையில் நின்று இயங்குதல் தொடர்பான வழக்கு				
10	(இயந்திரங்கள்) இயங்குதல்; செயல்படுதல்	இந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரம் சரியாக ஓடுவதில்லை	தண்ணீர் இறைக்கும் இயந்திரம்		
11	(சுவாசக்காற்று) உள்ளே போய் வெளியே வருதல்	மருந்து கொடுத்த பிறகு அவருக்கு மூச்சு சீராக ஓட ஆரம்பித்தது	மூச்சு		சீராக
12	(இதயம்) இயங்குதல்;	ஓடிகொண்டிருந்த இதயம் ஒரு கணம் நின்று	இதயம்		

	(நாடி) தொடர்ந்து துடித்தல்	விட்டது போல் இருக்கின்றது.			
இ	இயக்கம் இல்லாதவற்றை இயக்கம் உள்ளது போல் கூறும் வழக்கு				
13	(கையில் ரேகை, ஒரு பரப்பில் கோடு போன்றவை) காணப்படுதல்; அமைந்திருத்தல்	உன் கையில் அதிர்ஷ்ட ரேகை ஓடுகிறது.	அதிருஷ்ட ரேகை		
14	(உடம்பில் நரம்பு, நாளம் போன்றவை அல்லது மண்ணில் வேர் போன்றவை) பரவுதல்	அவள் கழுத்தில் பச்சை நரம்பு ஒன்று ஓடுகின்றது.	பச்சை நரம்பு	அவள் கழுத்தில்	
15	(ஒரு பொருளின் மீது மேலும் கீழுமாகப் பார்வையை) செலுத்துதல்	நான் கொடுத்த கடிதத்தின் மேல் பார்வையை ஓடவிட்டார்.	பார்வை	கடித்தின் மேல்	
16	(முகத்தில் புன்னகை, மனதில் சிந்தனை போன்றவை) தோன்றுதல்	உன் மனதில் என்ன ஓடுகின்றதுஎன்று எனக்குத் தெரியாதா	என்ன	உன்மனதில்	
17	(தலையில் நரை) பரவுதல்	தலையில் அங்கங்கே நரை ஓடியிருந்தது.	நரை	தலையில்	
18	(திரைப்படம், நாடகம் முதலியவை அரங்குகளில் தொடர்ச்சியாக) நடத்தல்/காட்டப்	இந்த திரைப்படம் நூறுநாள் ஓடுமா?	திரைப்படம்		

	ப்படுதல்				
19	(ஒரு பொருள்) விற்பனையாதல்; (கடைவியாபரம்) நடத்தல்	புதிதாய் வந்திருக்கும் இந்த மருந்து எங்கள் கடையில் சுமாரகத்தான் ஓடுகிறது	புதிதாய் வந்திருக்கும் இந்த மருந்து	கடையில்	சுமாரகத்தான்
20	(காலம் விரைவாக) கழிதல்; நடத்தல்	வேலையில் சேர்ந்து ஒருவருடம் ஓடிவிட்டது.	ஒருவருடம்		வேலையில் சேர்ந்து
21	(எதிர்மறை வடிவங்களில் அல்லது எதிமறைச் சொற்களோடு வரும்போது) செயல்படத் தோன்றுதல்	காவல் துறை அதிகாரிகள் திடீரென்று வந்தவுடன் எனக்கு ஒன்றும் ஓடவில்லை.	ஒன்றும்		எனக்கு

கிரியா அகராதி *ஓடு* என்ற வினையின் அர்த்தங்களை மூன்று முக்கியக் குழுமங்களாகப் பகுத்து பட்டியலிடப்படுகின்றது.

அ. இடம்பெயர்தல் தொடர்பான வழக்கு

ஆ. ஒரு நிலையில் நின்று இயங்குதல் தொடர்பான வழக்கு.

இ. இயக்கம் இல்லாதவற்றை இயக்கம் உள்ளது போல் கூறும் வழக்கு

க்ரியா *ஓடு* என்ற வினைக்கு (மனிதன், விலங்கு ஆகியவை கால்களை முன்னும் பின்னும் வேகமாக எடுத்து வைப்பதம் மூலம்) நடப்பதை விட விரைந்துச் செல்லுதல் என்பதை முதன்மை அர்த்தமாகவும் (இயந்திர விசையால் இயங்கும் போன்ற வாகனங்கள்) ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லுதல், (இயந்திரங்கள்) இயங்குதல்/ செயல்படுதல், (மூச்சு) விடுதல்; (சுவாசக் காற்று) உள்ளே போய் வெளியே வருதல்,

(மூச்சு) விடுதல்; (சுவாசக் காற்று) உள்ளே போய் வெளியே வருதல், (நீர், இரத்தம் போன்ற திரவங்கள் குறிப்பிட்டப் பாதையில் வழியாகப் பாய்தல்) (கையில் ரேகை, செடியின் வேர் முதலியன) பதிந்திருத்தல், (தலையில் நரை) பரவுதல், (திரைப்படம், நாடகம் முதலியவை அரங்குகளில் தொடர்ச்சியாக) நடத்தல்; (பணி, வேலை) நடைபெறுதல், (திரைப்படம்,நாடகம் முதலியவை அரங்குகளில் தொடர்ச்சியாக) நடத்துதல்; (பணி, வேலை) நடைபெறுதல்,(ஒரு பொருள்) விற்பனையாதல், (காதல் விரைவாகக்) கழிதல்; கடத்தல், (எதிர்மறை வடிவங்களில் அல்லது எதிமறைச் சொற்களோடு) செயல்படத் தோன்றுதல்; செயல்படுத்த எண்ணுதல் என்பனவற்றைத் துணைநிலை அர்த்தங்களாகவும் பட்டியலிட்டுள்ளது. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளத் தகவல்கள் *ஓடு* என்ற வினை மனிதன், விலங்கு போன்றவைத் தமது கால்களால் வேகவாக நகர்வதை முதன்மை அர்த்தமாக வெளிப்பத்தும். வாகனங்கள் இயந்திர விசையால் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லுதல் இதன் இரண்டாவது அர்த்தமாகும். இயந்திரங்கள் இயங்குவதைக் குறிப்பிடுவது *ஓடு* என்பதன் மூன்றாவது அர்த்தமாகும். சுவாசக்காற்று உள்ளேயும் வெளியேயும் வருவது *ஓடு* என்பதன் நான்காவது அர்த்தமாகும். திரவத்தின் தொடர்ச்சியான நகர்வு இயக்கம் ஐந்தாவது அர்த்தமாகும். இவைகள் ஓடு என்பதன் உண்மைச் சலன அர்த்தங்களாகும்.

“இடம்பெயர்தல் தொடர்பான வழக்கு” என்பதன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்கள் யாவும் இடப்பெயர்ச்சிசார்ந்த சலங்களாகும். “ஒரு நிலையில் நின்று இயங்குதல் தொடர்பான வழக்கு” என்பதன் கீழ் தரப்பட்டுள்ள அர்த்தங்கள் இடப்பெயர்சியைக் குறிப்பிடாமல் ஒரு நிலையில் நின்று இயங்குவதைக் குறிப்பிடும்.

“இயக்கம் இல்லாதவற்றை இயக்கம் உள்ளது போல் கூறும் வழக்கு” என்பதன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள இரு அர்தங்களையும் உருவக நீட்சிகளாகக் கொள்ளலாம். இவ்வாறு *ஓடு* முன்றுவகையில் பொருண்மை நீட்சி செய்கின்றது.

இவ்வினை முதல் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாயையும் ஏழாம் வேற்றுமைத் தொடராகவும் வரும் இடத்தையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். *ஓடு* ஏற்கும் எழுவாய்ப் பெயர்த்தொடர்களின் மற்றும் இடப் பெயர்த்தொடர்களின் அடிப்படையில் இதன் வேறுபட்ட அர்த்தங்களை விளக்கலாம். இதைப் பின்வருமாறு வாய்ப்பாட்டில் கூறலாம்.

(258) ஓடு [பெதொ - பெதொ-இல்]
+ எழுவாய் +இடம்
+ பொருண்மைப் பொருண்மைப்
பண்புக்கூறுகள் பண்புக்கூறுகள்

ஓடு என்பதன் பல பொருண்மையை அதன் எழுவாயாக வரும் சொற்களின் சூழலாலும் அறிந்துகொள்ளலாம். இவை *ஓடு* என்பதன் முதன்மை அர்த்தத்திலிருந்து அதன் துணைநிலை அர்த்தங்களை ஆக்க உதவும். புஸ்தெஜொவ்கியின் பொருண்மை அமைப்புச் சட்டகத்தில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் என்ற ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையில் ஆய்ந்து விளக்கலாம்.

6.3.21. ஓட்டு

ஓட்டு என்ற சொல் வடிவுக்குக் கிரியாவில் இரண்டுப் பதிவுகள் தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று வினைப் பதிவு, மற்றொன்று பெயர்ப் பதிவு, *ஓட்டு* என்ற வினை *ஓடு* என்ற வினையின் செயப்படுபொருள் குன்றா வினை வடிவமாகும். இவ்வினைக்குக் கிரியாவில் 11 அர்த்தங்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இதைப் பட்டியலிடும்.

அட்டவணை

வ. எண்	**அர்த்தங்கள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**செயப்படு பொருள்**	**இடம்/காரணம்**
அ	ஓடும்படிச் செய்தல் தொடர்பான வழக்கு				
1	(பெரும்பாலும் வீட்டு விலங்குகளைத்) துரத்துதல்; விரட்டுதல்	தொட்டத்திற்குள் ஆடு புகுந்து விட்டது, அதை ஓட்டு.	நீ	ஆடுகள்	
2	(செல், போ ஆகிய வினைகளுடன் இணைந்து) ஆடு மாடு போன்ற மிருகங்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு விரட்டிக் கொண்டுபோதல்	சந்தைக்கு மாடுகளை ஓட்டிச்செல்லும் சத்தம் கேட்டது.	-	மாடுகள்	சந்தைக்கு
ஆ	இயங்கச்செய்தல் தொடர்பான வழக்கு				
3	(ஒன்றின் மீது) நடக்க அல்லது போகச் செய்தல்	பரப்பிய கதிர்களின் மீது மாட்டை ஓட்டி மணிகளைப் பிரித்தார்கள்.	அவர்கள்	மாடு	
4	(வாகனங்களை) செல்லுத்துதல்; கருவிகளை இயக்குதல்	1ரிக்ஷா ஓட்டிக்கொண்டிருந்தவர் கார் ஓட்டக் கற்றுக்கொள்கிறா	1.அவர்	ரிக்ஷா, கார்	

		ர். 2ஏர் ஓட்ட மாடு இல்லை.		ஏர்	
5	(விலங்குகளின் மீது ஏறி அமர்ந்து) சவாரி செய்தல்	1கடிவாளம் இல்லாமலேயே குதிரை ஓட்டிக்கட்டினார். 2புலியை அடக்கி அதன் மீது ஏறி அமர்ந்து ஓட்டிவரும் ஐயப்பன் படம் சுவரில் தொங்கியது.	1.அவர் 2.ஐயப்பன்	1.குதிரை 2.புலி	
இ	மேலும் கீழும் அல்லது நீள வாக்கில் போகச் செய்தல் தொடர்பான வழக்கு				
6	(விரல்களை) விரைவாக நகர்த்துதல்	1களிமண்ணை உருட்டி அதன் மீது விரல்களை ஓட்டி உருவம் கொடுத்தார். 2அவள் வீணை தந்திகளின் மீது விரல்களை ஓட்டினாள்.	1.அவர் 2.அவள்	1.விரல்கள் 2.விரல்கள்	1.களிமண் 2.வீணை தந்திகள் மீது
7	(பார்வையைப் பொருள்கள் மீது) செலுத்துதல்	கடைவாசலில் நின்று கண்ணாடி ஜன்னல்களின் பின் வைக்கப்பட்டிருந்த பொருள்களின் மீது பார்வையை ஓட்டினான்.	அவன்	பார்வை	கண்ணாடி ஜன்னல்களின் பின் வைக்கப்பட்டிருந்த பொருள்களின் மீது
8	(கற்பிக்கும் பாடத்தை)வேகமாகச் சொல்லிச் சொல்லுதல்	ஆசிரியருக்கு நேரம் இல்லை, பாடத்தை ஓட்டிவிட்டார்.	ஆசிரியர்	பாடம்	

ஈ	அகற்றுதல் தொடர்பான வழக்கு				
9	(பேய் போன்றவற்றை ஒருவரை விட்டு) விலகச் செய்தல்	பேய் ஓட்டுவதற்கு பூசாரியை அழைத்துவரப்போனார்கள்	பூசாரி	பேய்	
உ	மரபு வழக்கு				
10	(நேரத்தைக்) கழித்தல்	வண்டி இரண்டு மணி நேரம் தாமதமாக வருகிறதாம், பொழுதை எப்படி ஓட்டுவது?		பொழுது	
11	(காரியத்தைச்) சமாளித்தல்	அறைகுறை ஆங்கிலத்தை வைத்துக்கொண்டு எப்படியோ இதுநாள் வரை ஓட்டிவிட்டேன்.	நான்		ஆங்கிலத்தை வைத்துகொண்டு

ஓட்டு என்ற வினை *ஓடு* என்ற வினையின் செயப்படுபொருள் குன்றா வினை வடிவமாகும். *ஓடு* என்பதற்குத் தரப்பட்டுள்ள அர்த்தங்களுக்கும் *ஓட்டு* என்பதற்குத் தரப்பட்டுள்ள அர்த்தங்களுக்கும் இடையில் பல இணைகளைக் காணலாம். க்ரியா அகராதி *ஓட்டு* என்பதன் அர்த்தங்களை முக்கியமாக ஐந்தாகப் பகுத்துப் பட்டியலிடுகின்றது:

அ. ஓடும்படிச் செய்தல் தொடர்பான வழக்கு

ஆ. இயங்கச்செய்தல் தொடர்பான வழக்கு

இ. மேலும் கீழும் அல்லது நீள வாக்கில் போகச் செய்தல் தொடர்பான வழக்கு

ஈ. அகற்றுதல் தொடர்பான வழக்கு

உ. மரபு வழக்கு

க்ரியா “விலங்குகளை விரட்டுதல்; துரத்துதல்” என்பதை முதன்மை அர்த்தமாகப் பட்டியலிடுகின்றது. முதல் இரண்டிற்கும் அதிக வேறுபாடில்லை. சுழல் தான் இவற்றை வேறுபடுத்துகின்றது. “வாகனங்களை ஓட்டு” என்ற அர்த்தத்தில் *ஓட்டு* என்பதன் சொற்பொருண்மையியல் அமைப்பு பின்வருமாறு அமையும்:

(255)
ஓட்டு
நிஅமைப்பு= [E1:e1:செயற்பாங்கு
E2=e2:செயற்பாங்கு
மறு அமைப்பு=< o_α]

பஅமைப்பு= [ப ஆளர்1= x:மனிதன்
ப ஆளர்2 = y:வாகனம்]

குஅமைப்பு= [முறையான = நகர் (e2, y)
செயலி =ஒட்டு-செயல் (e1, x , y)]

ஓட்டு முக்கியமாக வழுநிலையில் முதலில் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாயையும் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் வரும் செயப்படுபொருளையும் ஏழாம் வேற்றுமைத் தொடராகவோ பின்னுருபுத் தொடராகவோ வரும் இடத்தையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும்.

(256) ஒட்டு [பெதொ + பெதொ - ஐ + பெதொ_இன்_மீது]

பங்கெடுப்பாளர்களாக வரும் எழுவாய், செயப்படுபொருள், இடம் என்பனவற்றின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் நாம் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம். *ஓட்டு* என்பதன் முதன்மை அர்த்தத்திலிருந்து பிற துணைநிலை அர்த்தங்களை அல்லது அர்த்த நீட்சிகளை ஊகிக்கவோப் புரிந்துகொள்ளவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்த இதற்கு உதவும். புஸ்தெஜொவ்ஸ்கியின் கோட்பாட்டு அடிப்படையில்

அமையும் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.3.22. கட்டு

கட்டு என்பதற்குக் கிரியாவில் அவற்றின் முரண்படு பொருண்மை அடிப்படையில் நான்குப் பதிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் *கட்டு1* முக்கிய வினைவடிவமாகும், கட்டு 2துணைவினை வடிவமாகும். கட்டு3-உம் கட்டு4-பெயர்ப் பதிவுகளாகும். இவற்றில் *கட்டு1*மட்டும் இங்கு விளக்கப்பட்டுள்ளது.

கட்டு1என்பதற்கு கிரியாவில் 26 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது. இவற்றை அவற்றின் எடுத்துக்காட்டுகளுடனும் அதிலிருந்து பெறப்படும் பங்கெடுப்பாளர்கள் குறித்தத் தகவலுடன் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை

வ. எண்	**பொருள்**	**எடுத்துக்காட்டு**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**செய்படுபொருள்**	**இடம்/காரணம்/முறை**
அ	உருவாக்குதல் தொடர்பான வழக்கு				
1	உருவாக்குதல் (வீடு, பாலம் முதலியவற்றை அமைத்தபடி); அமைத்தல்	1.பத்து மாடிக் கட்டிடம் கட்டும் பணி நடந்துக்கொண்டிருக்கிறது.		1.பத்து மாடிக் கட்டிடம்	

	(பறவை, தேனி முதலியவை கூட்டை)	2.கதவின் சாவித் துளையில் குளவி கூடு கட்டியிருந்தது.	2. குளவி	2.கூடு	2.கதவின் சாவித் துளையில்
2	பதித்தல் (ஆபரணங்களில் கற்களை); பொருத்துதல் (செயற்கையாகப் பல்லை)	1.மோதிரத்துக்குப் பச்சைக்கல் கட்டினால் அழகாக இருக்குமா?. 2.அவர் தங்கப்பல் கட்டியிருக்கிறார்.	2.அவர்	1.பச்சைக்கல் 2. தங்கப்பல்	1.மோதிரத்துக்கு
3	எழுதுதல் (பாட்டு)	அந்த காலத்தில் காட்டிய பாட்டுகளைக் கூத்தில் பாடியிருக்கிறார்கள்.	அவர்கள்	பாட்டுகள்	கூத்தில்
4	அமைத்தல் (பல பாகங்களை ஒன்று சேர்த்து ஒன்றை)	1.ரயில் பெட்டி கட்டும் தொழிற்சாலை ஒன்று சென்னையில் இருக்கிறது. 2.கப்பல் கட்டும் கூடம் ஒன்றை அரசு அமைக்கவிருக்கிறது. 3.மூங்கில் முள்ளை வெட்டிப் படல் கட்டிக்கொண்டிருந் தான். 4.வெவ்வேறு உத்திகளைப் பயன்படுத்தி இந்த நாவல் கட்டப்பட்டிருக்கிறது .	1.தொழிற்சா லை 2. கூடம் 3.அவன்	1.ரயில் பெட்டி 2..கப்பல் 3. படல் 4. நாவல்	1.சென்னையில் 4.வெவ்வேறு உத்திகளைப் பயன்படுத்தி
5	சேர்த்தல் (மண்ணைத் திரட்டிப் பயிரின் வேரில்)	பயிர்க்காலில் மண்ணைக் கட்டிக்கொண்டுருந் தான்.	அவன்	மண்	பயிர்க்காலில்

6	அமைத்தல் (புத்தகங்கள் போன்றவற்றை அச்சிடுவதற்க்காக அவற்றின் பக்கங்களை)	1.முன்பெல்லாம் அச்சகங்களில் சிரமப்பட்டுப் பக்கம் கட்டிக்கொண்டிருப் பார்கள்.	1.அவர்கள்	1. பக்கம்	1.அச்சகங்களில்
ஆ	இணைத்தல் தொடர்பான வழக்கு				
7	பிணைத்தல்(கயிறு போன்றவற்றால் ஒருவரை ஒன்றோடு); இணைத்தல் (ஒன்றை மற்றொன்றொடு; சுற்றுதல்(ஒன்றைச் சுருட்டி அல்லது மற்றொன்றுள் வைத்துக் கயிறு முதலிய வற்றால்)	1.திருடனைப் பிடித்துத் தூணோடு கட்டியிருந்தார்கள். 1.சடையின் நுனியில் குஞ்சலம் கட்டியிருந்தாள். 3.ஒரு கிலோ அரிசியைப் பொட்டலம் கட்டிக் கொடுங்கள்.	1.அவர்கள் 2.அவள் 3.நீங்கள்	1.திருடன் 2. குஞ்சலம் 3.பொட்டலம்	1.தூணோடு 2.சடையின் நுனியில் 3.அரிசியை
8	கெட்டியாகச் சுற்றுதல்(எலும்பு முறிவு, காயம் போன்றவற்றுக்குச் சிகிச்சை அளிக்கும் விதமாக மருந்து போன்றவற்றை வைத்து)	1.எலும்பு முறிந்த இடத்தில் மருத்துவர் கட்டுக் கட்டி விட்டார். 2.புண்ணில் மருந்து வைத்துத் துணியால் கட்டினாள்.	1. மருத்துவர் 2.அவள்	1.கட்டு 2.புண்ணை	1.எலும்பு முறிந்த இடத்தில் 2.புண்ணில். மருந்து வைத்து
9	குறிப்பிட்ட முறையில் உடுத்துதல் (புடவை, வேட்டி முதலியவற்றை)	1.கல்யாணத்துக்குப் போகப் பட்டுப் புடவை கட்டிக்கொண்டாள். 2.தலையில் கட்டியிருந்த துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டான்.	1.அவள் 2.அவன்	2. பட்டுப் புடவை 2.துண்டை	2.தலையில், இடுப்பில்

		3.வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு தோட்ட வேலையில் அவன் இறங்கினான்.	3. அவன்	3.வேட்டி	3.மடித்து
10	அணிதல் (கடிகாரம், தாயத்து போன்றவற்றை)	1.அவர் விலை உயர்ந்த கடிகாரம் ஒன்றைக் கட்டியிருந்தார். 2.'இந்த தாயத்தை கட்டிக்கொள்ளுங்க, எல்லாம் சரியாகிவிடும்' என்றார் பூசாரி.	1.அவர் 2. நீங்கல்	1. விலை உயர்ந்த கடிகாரம் 2.தாயத்து	
11	மறைத்தல்(கண்ணாடித் துணியால் சுற்றி)	தீவிரவாதிகள் அவரைக் கண்ணைக் கட்டிக் கடத்தி சென்றார்கள்.	தீவிரவாதிகள்	கண்	
12	அணிவித்து முடிச்சிடுதல் (சடங்குகளில் தாலி, பட்டம் போன்றவற்றை)	1.அறுபதாம் கல்யாணத்திலும் தாலி கட்டப்படும். 2.மணப்பெண்ணுக்குத் தாய்மாமன் பட்டம் கட்டினான்.	2. தாய்மாமன்	1. தாலி 2. பட்டம்	1.அறுபதாம் கல்யாணத்தில்
13	பிணைத்தல் ; பூட்டுதல் (வண்டி, ஏர் முதலியவற்றில் மாட்டை)	1.தமிழ்நாட்டில் பெரும்பாலும் ஏரில் எருமைகளைக் கட்டி உழுவதில்லை. 2.ஊருக்கு போக வண்டி கட்டிக்கொண்டு வா		1.எருமைகள் 2.வண்டி	1.தமிழ்நாட்டில்
14	தொடுத்தல் (பூக்களைச் சரமாக, மாலையாக)	1.உதிரிப்பூ வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கிறாள். 2.ஆள் உயர மாலையைக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.	1.அவள் 2.அவர்கள்	1.உதிரிப்பூ 2.ஆள் உயர மாலையை	
15	மடித்தல், சுருட்டுதல்	இரண்டு பீடா கட்டிக் கொடு.	நீ	பீடா	

	(வெற்றிலையை பீடாவாக)				
16	மடக்கி வைத்தல் (கைகளை மார்பின் குறுக்காக); பின்புறம் வைத்திருத்தல் (கைகளை இணைத்த னிலையில்); கோத்து அனைத்தல் (உயர்த்திய கால் மூட்டுகளைக் கைகளால்)	1.மார்பில் கை கட்டி நிற்க்கும் விவேகானந்தரின் உருவப்படம். 2.கையைப் பின் புறமாகக் கட்டி கொண்டு உலாத்தினான். 3.இரு கையாலும் முழங்காலைக் கட்டியபடி உக்காந்திருந்தான்.	1.விவேகனந்தர் 2.அவள் 3.அவன்	1.கை 2.கை 3.முழங்கால்	1.மார்பில் 2.பின்புறமாக
17	திருமணம் செய்து கொள்ளுதல்; திருமணம் செய்து தருதல்	1.கட்டினால் அத்தைப் பெண்ணைத்தான் கட்டுவேன் என்று அவன் ஒற்றைக்காலில் நின்றான். 2.உங்கள் பெண்ணை எனக்கு கட்டித் தருவிர்களா என்று அவரிடம் தைரியமாகக் கேட்டான்.	1.அவன்	1.அத்தை பெண் 2. உங்கள் பெண்	2.எனக்கு
18	தேக்குதல் (நீரை); தேங்குதல் (நீர்)	வயலில் கட்டிய தண்ணீரை யாரோ திறந்து விட்டார்கள்.		தண்ணீர்	வயலில்
19	திரளுதல் (நெஞ்சில் சளி, கபம்) திரளுதல் (அடிப்பட்ட இடத்தில் இரத்தம், கால் போன்ற உறுப்பில் நீர்)	1.நெஞ்சில் சளி கட்டியிருக்கிறது. 2.கீழே விழுந்ததில் தொடையில் இரத்தம் கட்டிவிட்டது. 3.காலில் நீர் கட்டியிருக்கிறது.	1. சளி 2. இரத்தம் 3. நீர்		1.நெஞ்சில் 2.தொடையில் 3.காலில்

20	போதுமானதாக இருத்தல் (பெரும்பாலும் எதிர்மறை வாக்கியங்களில்); கடுப்படியாதல் (விலை , கூலி முதலியவை).	1.முப்பது ரூபாய்ப் பொருளைப் பத்து ரூபாய்க்குக் கேட்டால் எப்படி கட்டும்?. 2.'நீங்கள் கேட்கிற விலை எனக்கு கட்டாது' என்றார் கடைக்காரர்.			எப்படி
21	செலுத்துதல் (கட்டணம், சந்தா,வட்டி போன்றவற்றை)	1.நாளைக் காலை தேர்வுக்குப் பணம் கட்டிவிடு. 2.ஒழுங்காக வட்டி கட்டி வருகிறேன்.	2.நான்	1. பணம் 2. வட்டி	
22	பூணுதல்(வேடம்); தரித்தல்	1.அந்த காலத்தில் எங்கள் தாத்தா கட்டி ஆடாத வேடமே இல்லை. 2.அவர் எந்த வேடம் கட்டினாலும் பாத்திரத்தோடு பொருந்திவிடுவார்.	1. எங்கள் தாத்தா 2.அவர்	வேடம் வேடம்	
23	சூட்டுதல் (பெரும்பாலும் விரும்பாத விதத்தில்) (பட்டைப்பெயர்)	1.எல்லாரும் சேர்ந்து எனக்கு திருட்டுப் பட்டம் கட்டிவிட்டார்கள். 2.அவன் எனக்கு பைத்தியக்காரப் பட்டம் கட்டலாம் என்று பார்க்கிறான்.	1.அவர்கள் 2.அவன்	1. திருட்டுப் பட்டம் 2.பயித்தியக் காரப் பட்டம்	
24	முறித்தல் (விசத்தை மருந்து)	பாம்பு விஷத்தைச் சிறியாநங்கை கட்டும் என்று சித்த மருத்துவம் கூறுகிறது.	சிறியாநங்கை	பாம்பு விஷம்	
25	இறுகுதல் (சிலவகை உணவு, மருந்து போன்றவற்றை உட்கொள்வதால்	1.அடிக்கடி கீரை சாப்பிட்டால் மலம் கட்டாது. 2.'வயிற்றுப்போக்கு அதிகமானால்	1. மலம் 2.வெந்தயம்	2.மலம்	

	மலம்); இறுகச்செய்தல் (சில வகை உணவு, மருந்து மலத்தை)	வெந்தயத்தை சாப்பிடுங்கள். மலத்தை கட்டும்' என்றார் வைத்தியர்.			

கட்டு1 என்பதன் அர்த்தங்கள் பின்வருமாறு இரு முக்கியக் குழுமங்களாகப் பிரிக்கப்பட்டு கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளது.

அ. உருவாக்குதல் தொடர்பான வழக்கு

ஆ. இணைத்தல் தொடர்பான வழக்கு

இதன் முதன்மைக் குழும அர்த்தம் "உருவாக்குதல்" என்பதாகும். முதன்மைக் குழும அர்த்தத்திலிருந்து பிற துணை நிலையில் வரும் "இணைத்தல்" என்ற குழும அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் விளக்கவோ ஆக்கவோ இயலும். வேறுபட்ட பொருண்மைச் சூழலில் *கட்டு1 என்பதன்* சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான அர்த்தங்களைப் பெறும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் பொருண்மையின் ஒரு மாதிரியை நாம் தரவேண்டும். *கட்டு1* என்பதன் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு, (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்.

கட்டு1 என்பது வழுநிலையில் முதல் வேற்றுமைத் தொடராக வரும் கட்டும் எழுவாயும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் கட்டப்படும் செயப்படுபொருளையும் முக்கியப் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். இத்தொடர்களின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் இவ்வினை வேறுபட்ட அர்த்தங்களைப் பொருள்கோள் செய்யும்.

(257) கட்டு [பெதொ + பெதொ-ஐ __]
+ எழுவாய் + செயப்படுபொருள்/ +பொருண்மைப் பண்புக்கூறுகள்

கட்டு1 என்பதற்கு புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறைக் கோட்பாடு அடிப்படையில் சொற்பொருண்மை அமைப்பைப் பின்வருமாறுத் தரலாம்:

(258) கட்டு1

நி அமைப்பு= E1:e1: செயற்பாங்கு
E2=e2: நிலை
மறு அமைப்பு =<α
தலைமை = e1

பஅமைப்பு= பஆளர்1= [1] விலங்கு_தனி
முறையான = பொதீகப்பொருள்

பஆளர்2= [2] உருவாக்கப்பட்டபொருள்
ஆக்கக்கூறு = [3]
முறையான = பௌதீகப்பொருள்

வழுநிலைபஆளர் [3] மூலப்பொருள்
முறையான= திரள்பொருள்

குஅமைப்பு= உருவாக்கு –சொகஅ
முறையான= இரு (e2, [2])
செயலி=கட்டு_செயல் (e1, [1], [2])

6.3.23. *கலை*

க்ரியாவில் கலை என்பதன் முரண்பாட்டு அர்த்தங்கள் கருதப்பட்டு ஐந்து பதிவுகளாகத் தரப்பட்டுள்ளன. இவற்றில் மூன்று வினைப் பதிவுகள், இரண்டு பெயர்ப் பதிவுகள். *கலை1* என்பது *கலை2* என்பதன் செயப்படுபொருள் குன்றிய வினைவடிவாகும்.

6.3.23.1 *கலை1*

கலை1 என்ற வினைக்கு 6 அர்த்தங்கள் க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன. இதிலிருந்து கிடைக்கும் தகவல்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை

வ எண்	**அர்த்தங்கள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்**		
			எழுவாய்	**காரணம்/முறை**	**இடம்**
1	(அடுக்கு வரிசை முதலியன) சீர்கெடுதல்	1.தலைமுடிக் கலைந்து காதுகளை மூடிக் கொண்டது. 2.மடித்து அடுக்கி வைத்திருந்தத் துணிகள் கலைந்துக் கிடந்தன. 3.ஊர்வலத்தினர் வரிசைக் கலையாமல் அமைதியாகச் சென்றனர்	1.தலைமுடி 2.மடித்து அடுக்கி வைத்திருந்தத்துணிகள் 3.வரிசை		
2	(தூக்கம்,தியானம் முதலியவை)	1.எங்களிடையே நிலவிய	1.மௌனம்	1.அவருடைய கேள்வியால்	

	நீங்குதல்; அகலுதல்	மௌனம் அவருடைய கேள்வியால் கலைந்தது. 2.கதவுத் தரப்படும் சத்தம் கேட்டுத் தூக்கம் கலைந்தது.	2.தூக்கம்	2.கதவுத் தட்டப்படும் சத்தம் கேட்டு	
3	(அலுவல் நேரம்) முடிதல்	1அந்த வாலிபரை நீதிமன்றம் கலையும் வரையிலும் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது.	1.நீதி மன்றம்		
4	(கூட்டம்,மேகம் முதலியவைப்) பிரிதல்; பிரிந்துச் செல்லுதல்	1மழை வரும் போலிருந்தது, ஆனால் மேகம் கலைந்துவிட்டது. 2விழா முடிந்ததும் கூட்டம் கலைந்தது.	1மேகம் 2கூட்டம்		
5	(எழுதப்பட்டது, வரையப்பட்டது) அழிதல்	1நெற்றியில் குங்குமம் கலைந்திருந்தது. 2பலருடையக் காலடி பட்டுக் கோலம் கலைந்திருந்தது.	1குங்குமம் 2கோலம்	2பலருடைய காலடி பட்டு	
6	(உருவாகியிருந்தக் கரு) சிதைதல்; இல்லாமல் போதல்	அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் கரு கலைந்ததாக மருத்துவர் கூறினார்.	கரு	அதிர்ச்சியில்	

மேற்கண்ட அட்டவணையிலிருந்து க்ரியா அகராதி *கலை1என்பதன்* முதன்மை அர்த்தமாக அடுக்கு, வரிசை முதலியன சீர் இழத்தலையும் குலைதலையும் குறிப்பிடுவது தெரிகின்றது. அதன் துணைநிலை அர்த்தங்களாகத் தூக்கம், தியானம் முதலியவை பிரிதலையும் பிரிந்துச் செல்லுதலையும், எழுதப்பட்டது, வரையப்பட்டது என்பன அழிதலையும் உருவாகியிருந்த கரு சிதைதலையும் இல்லாமல் போதலையும் குறிப்பிடுகின்றது. துணைநிலை அர்த்தங்கள் யாவையும் முதன்மை அர்த்தத்திலிருந்து ஆக்கப்பொருண்மைக் கோட்பாட்டு அடிப்படையில் ஆக்க இயலும். இவ்வினை முதல் வேற்றுமைத் தொடராக வரும் கலைக்கும் எழுவாயை பங்கெடுப்பாளராக ஏற்கும். இதத்தொடரின் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் இவ்வினை வேறுபட்ட அர்த்தங்களை உணர்த்தும்.

(259) கலை1 [பெதொ_____]

வேறுபட்டப் பொருண்மைச் சூழலில் *கலை1 என்பதன்* சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான அர்த்தங்களைப் பெறும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் பொருண்மையின் ஒரு மாதிரியை நாம் தர வேண்டும். *கலை1* என்பதன் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு, (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு,) சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை

இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து அதன் பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை விளக்கலாம்.

6.3.23.2 கலை2

கலை2 என்பது *கலை1* என்பதன் செயப்படுபொருள் குன்றா வினைவடிமாகும். புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையில் காரண வினை அர்த்தங்களைக் காரண வினையல்லா அர்த்தங்களிலிருந்து ஆக்கவியலும். கலை2 என்பதற்குக் கிரியாவில்9அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அட்டவணை

வ.எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	காரணம்/முறை/இடம்
1	(அடுக்கு, வரிசை முதலியவற்றை) ஒழுங்கற்றதாக ஆக்குதல்; குலைத்தல்	1.தயவுசெய்து அடுக்கிவைத்திருக்கும் புத்தகங்களை எடுத்துக் கலைக்காதீர்கள். 2.வாரியிருந்த தலைமுடியைச் சட்டென்று வீசிய காற்று கலைத்துவிட்டது. 3.சீட்டைக் கலைத்துப் போடு!	1.நீங்கள் 2.காற்று 1.நீ	1.அடுக்கி வைத்திருக்கும் புத்தகங்கள் 2.வாரியிருந்த தலைமுடி 2சீட்டு	
2	(தூக்கம், தியானம் முதலியவை மேற்கொண்டு) நீடிக்காதவாறு செய்தல்	1.சத்தம்போட்டுப் பேசி தாத்தாவின் தூக்கத்தை கலைத்துவிட்டாயே! 2.தன் தவத்தைக் கலைத்தவர்களுக்கு முனிவர் சாபம்	1.நீ 2.அவர்கள்	1.தாத்தாவின் தூக்கம் 2.தவம்	1.சத்தம்போட்டுப் பேசி

		கொடுத்தார்.			
3	(கூட்டம், மேகம் முதலியவற்றை) பிரிந்து போக வைத்தல்	1.கும்பலைக் கலைக்கக் காவலர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடித்தனர். 2.சூறாவளிக் காற்று மேகங்களைக் கலைத்துவிட்டது.	1.காவலர் 1.சூறாவளிக் காற்று	1.கும்பல் மேகங்கள்	1.கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடித்தனர்
4	(எழுதப்பட்டதை, வரையப்பட்டதை) அழித்தல்	1.நெற்றிக் குங்குமத்தை வியர்வைக் கலைத்திருந்தது. 2.தவழ்ந்து சென்ற குழந்தை கோலத்தைக் கலைத்துவிட்டது.	1.வியர்வை 2. தவழ்ந்து சென்ற குழந்தை	1.நெற்றிக் குங்கும் 2.கோலம்	
5	(சட்டமன்றம், அமைச்சரவை முதலியவற்றில் உள்ளவர்களை) அதிகாரம் இழக்கச் செய்தல்	பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத்தேர்தல் நடத்த பிரதமர் உத்தேசித்துள்ளார்.	பிரதமர்	பாராளுமன்றம்	
6	(கட்சி, அமைப்பு முதலியவற்றை) இல்லாமல் ஆக்குதல்	தங்கள் இயக்கத்தைக் கலைத்துவிட்டு ஜனநாயக முறைக்கு வரும்படி தீவிரவாதிகளை பிரதமர் கேட்டுக்கொண்டார்.	தீவிரவாதிகள்	இயக்கம்	
7	(உருவாகியிருக்கும் கருவை) சிதைத்தல்; அழித்தல்	ஆரம்ப நிலையிலிருக்கும் கருவைக் கலைத்துக்கொள்வது சட்டபடி குற்றமாகாது.		ஆரம்பநிலையிலிருக்கும் கரு	
8	(மனத்தை) கெடுத்தல்	யாரோ அவன் மனத்தைக்	யாரோ	அவன் மனம்	

		கலைத்திருப்பதால் தான் சொத்தைப் பிரிக்கச் சொல்கிறான்.			
9	(ஒப்பனையை) நீக்குதல்	1.நாடகம் முடிந்ததும் கதாநாயகி ஒப்பனையைக் கலைத்துக் கொண்டிருந்தார். 2.நீ போட்டிருக்கும் நல்லவன் வேடத்தைக் கலைக்கும் வரை நான் ஓயமாட்டேன்.	1.கதாநாயகி 2.நீ	1.ஒப்பனை 2.நல்லவன் வேடம்	
10	துரத்துதல்; விரட்டுதல்	1.நாய் ஆட்டைக் கலைத்துக்கொண்டு சென்றது. 2.என்னை வீட்டைவிட்டுக் கலைக்கப்போகிறாயா?	1.நாய் 2.நான்	1.ஆடு 2.வீடு	

கலை2 என்ற வினை *கலை1* என்பதன் செயப்படுபொருள் குன்றா வினையாகும். இது அதன் முதன்மை அர்த்தமாக அடுக்கு, வரிசை முதலியவற்றை ஒழுங்கற்றதாக ஆக்குவதையும் குலைத்தலையும் குறிப்பிடுகின்றது. அதன் துணைநிலை அர்த்தங்களாகத் தூக்கம், தியானம் முதலியவற்றை நீடிக்காது செய்வதையும் கூட்டம், மேகம் முதலியற்றை பிரிந்து போகச் செய்வதையும், எழுதப்பட்டதையும் வரையப்பட்டதையும் அழிப்பதையும் கட்சி, அமைப்பு முதலியவற்றை இல்லாமல் ஆக்குதவதையும் சட்டமன்றம், அமைச்சரவை முதலியவற்றில் உள்ளவர்களை அதிகாரம் இழக்கச் செய்வதையும் உருவாகியிருக்கும்

கருவை சிதைப்பதையும் அழிப்பதையும் மனத்தைக் கெடுப்பதையும் ஒப்பனையை நீக்குவதையும் துரத்துவதையும் விரட்டுவதையும் துணைநிலை அர்த்தங்களாகக் குறிப்பிடுகின்றது. இத்துணை அர்தங்கள் யாவற்றையும் முதன்மை அர்த்தத்திலிருந்து ஆக்கப்பொருண்மைக் கோட்பாட்டு அடிப்படையில் ஆக்கவியலும். இதன் சொற்பொருண்மை அமைப்பு பின்வருமாறு அமையும்.

(260)
கலை2
நிஅமைப்பு= E1:e1:செயற்பாங்கு
E2=e2:நிலை
மறு அமைப்பு= <α
தலைமை= e1
பஅமைப்பு= பஆளர்1= [1]
பஆளர்2= [2] பௌதீகப்பொருள்
முறையான= பொருளன்
குஅமைப்பு= வநிகாரணம்-சொகஅ
முறையான=கலை_விளைவு (e2 [2])
செயலி=கலை_செயல்(e1, [1], [2])

பங்கெடுப்பாளர்களாக வரும் எழுவாய், செயப்படுபொருள், இடம் என்பனவற்றின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் நாம் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம். *குலை2* என்பதன் முதன்மை அர்த்தத்திலிருந்து பிற துணைநிலை அர்த்தங்களை அல்லது அர்த்த நீட்சிகளை மொழி பேசுபவரால் ஊகிக்கவோப் புரிந்துகொள்ளவோ இயலும். அடைப்புக்குறிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளத் தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டு அடிப்படையில் அமையும் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை

இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம்.

6.3.24. சேர்

சேர்1, *சேர்2* என்பன முறையே செயப்படுபொருள் குன்றிய மற்றும் செயப்படுபொருள் குன்றா வினைவடிவங்களாகும். புஸ்தெஜொவ்ஸ்கியின் கோட்பாட்டுச் சட்டகத்தில் காரண வினை அர்த்தங்களைக் காரண வினையல்லா அர்த்தங்களிலிருந்து பெறும் அல்லது ஆக்கும் செயல்பாடு விவரிக்கப்பட்டுள்ளது.

6.3.24.1 சேர்1

சேர்1 என்ற சொல்லிற்குக் க்ரியாவின தற்கால அகராதி 6 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது.

அட்டவணை 52

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	இலக்கு (கு வேற்றுமை, ஒடு வேற்றுமை)	இடம் (இல் வேற்றுமை)/முறை
அ	(இணைதல் தொடர்பன வழக்கு)				
1	கூட்டாக இணைதல்	1.இந்த ஆங்கில நாவலை இரண்டு பேர் சேர்ந்து மொழிபெயர்த்திருக் கின்றனர். 2.கொஞ்சம் பொறு, நாம் இரண்டு பேரும் சேர்ந்து போவோம். 3.நான்கும் இரண்டும் சேர்ந்தால்	1.இரண்டுபேர் 2.இரண்டுபேர் நான்கும் நான்கும்		

		ஆறு.			
2	(ஒன்றை அல்லது ஒருவரை மையமாகக் கொண்டு நபர்கள்) ஒன்றாதல்; ஒருங்கிணைதல்; திரளுதல்	1.அனைத்துத் தொழிற்சங்கங்களும் போராட்டத்தை முன்னிட்டு ஒன்றாகச் சேர்ந்தன. 2.அவர் போகும் இடங்களிலெல்லாம் நிறைய கூட்டம் சேர்கிறது.	1.அனைத்துத் தொழிற்சங்கங்கள் 2.கூட்டம்		
3	ஒருவருடன் பழக்கம் ஏற்படுத்திக்கொள்ளுதல்; நட்பு கொள்ளுதல்	1.அவனோடு சேராதே, ரொம்ப மோசமானவன். 2.உங்களுடன் சேர்ந்ததால் தான் நானும் நிறைய புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தேன்.	1.நீ 2.நான்	1.அவனோடு உங்களோடு	
4	(சாலை, ஆறு முதலியன) சந்தித்தல்; இணணதல்	தெருவும் சந்தும் சேரும் இடத்தில் ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளது.	தெருவும் சந்தும்		
5	(உடைந்த எலும்பு) ஒட்டிப் பொருந்துதல்	முறிந்த கையெலும்பு சேர்வதற்கு நான்கு மாதங்கள் ஆகலாம்.	முறிந்த கையெலும்பு		
6	(ஒரு அமைப்பு, நிறுவனம், குழு முதலியவற்றில்) இடம்பெறுதல் (வேலையில்) பொறுப்பேற்றுக்கொள்ளுதல்	1.பொறியியல் கால்லூரியில் சேர விரும்புகிறேன். 2.அவர் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சைப் பெறுகிறார். 3.அவர் வேலையில் சேர்ந்து கொஞ்ச நாளிலேயே பதவி உயர்வு பெற்றுவிட்டார்.	1.நான் 2.அவர் 3.அவர்		பொறியியல் கால்லூரியில் 2.மருத்துவமனையில் 3.வேலையில்
ஆ	(அடைதல் தொடர்பான				

	வழக்கு)				
7	(பணம்) சேமிக்கப்படுதல்	இன்னும் கொஞ்சம் பணம் சேர்த்துவிட்டால் புது வீடு கட்ட ஆரம்பித்துவிடுவேன்.	பணம்		
8	(ஓர் இடத்தை) அடைதல்	1.சீக்கிரம் புறப்பட்டால்தான் இருட்டுவதற்குள் வீடு போய்ச் சேர முடியும். 2.நீ அனுப்பிய கடிதம் போய்ச் சேர்ந்ததா என்று தெரியவில்லை.	2.கடிதம்	வீடு	
9	(ஒன்று ஒருவரிடம்) சென்றடைதல் அல்லது வந்தடைதல்	நான் அனுப்பிய பணம் வந்து சேர்ந்த உடனேயே எனக்குத் தகவல் தெரிவிக்கவும்.	பணம்		வந்து
10	(சொத்து ஒருவருக்கு) உரிமையாதல்	உயிலின்படி அவருடைய சொத்து அனைத்தும் இந்த பள்ளிக்குச் சேரும்.	சொத்து	இந்த பள்ளிக்கு	
இ	(பொருந்துதல் தொடர்பான வழக்கு)				
11	பொருத்தமாக அமைதல்	1.இந்தச் சாவி வீட்டில் உள்ள எல்லாப் பூட்டுக்கும் சேரும். 2.இந்தச் சட்டை யாருக்கும் சேராது போலிருக்கிறதே!	1.இந்தச் சாவி 1. இந்தச் சட்டை	1.எல்லாப் பூட்டுக்கும் 2. யாருக்கும்	
ஈ	(ஓர் இடத்தில் திரண்டிருத்தல் தொடர்பான வழக்கு)				
12	(செல்வம்) குவிதல்	அவனுக்குப் பல்வேறு வழிகளில்	பணம்	அவனுக்கு	

		பணம் சேர்கிறது.			
13	(அழுக்கு அல்லது துணி முதலியன) நிறைதல்	1. நக இடுக்கில் அழுக்கு சேர்ந்திருக்கிறது. 2.துணி நிறையச் சேர்ந்துவிட்டது; துவைப்பதற்கு நேரம் இல்லை.	1.அழுக்கு 2. துணி		1.நக இடுக்கில்

க்ரியாவின் அகராதி *சேர்1* என்பதன் அர்த்தங்களைப் பின்வருமாறு நான்கு முக்கியக் குழுமங்களாகப் பகுத்து ஆய்கின்றது.

அ. இணைதல் தொடர்பான வழக்கு

ஆ. அடைதல் தொடர்பான வழக்கு

இ. பொருந்துதல் தொடர்பான வழக்கு

ஈ. ஓரிடத்தில் திரண்டிருத்தல் தொடர்பான வழக்கு

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "கூட்டாக இருத்தல்" என்பதை முதன்மை அர்த்தமாகவும் (சாலை, ஆறு முதலியன) சந்தித்தல்; இணைதல், (உடைந்தது) ஒட்டிப் பொருத்துதல், (ஓர் இடத்தைப் போய்) அடைதல், (சொத்து ஒருவருக்கு) உரிமையாதல், (அமைப்பில், நிறுவனத்தில்) இடம்பெறுதல், பொருத்தமாக அமைதல்; (உணவு முதலியன) ஒத்துப்போதல், (செல்வம்) குவிதல்; (அழுக்கு, துணி முதலிய) நிறைதல்" என்பனவற்றைத் துணைநிலை அர்த்தங்களாகவும் பட்டியலிடப்பட்டுள்ளது. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்த

வேறுபாடுகளை அல்லது அர்த்த நீட்சிகளைப் புரிந்துகொள்ளவும் ஆக்கவும் உதவும். முதன்மை அர்த்தமான "ஒன்று கூடு" என்பதில் தொடங்கி "சாலை, ஆறு என்பன சந்தித்தல், உடைந்தது பொருந்துதல், ஓரிடத்தைப் போய் அடைதல், சொத்து ஒருவருக்கு உரிமையாதல், ஒரு நிறுவனத்தில் போய்ச் சேர்தல், பொருத்தமாக அமைதல், ஓரிடத்தில் திரள்தல்" எனச் *சேர்1* என்ற வினையின் அர்த்தங்கள் நீட்சியுறும். இவ்வர்த்தைகளைத் துணைநிலை வருகைநிலையில் வரும் அர்த்தங்களாகக் க்ரியா அகராதி கருதி ஒரே பதிவுச் சொல்லின் கீழ் தந்துள்ளது. இவ்வர்த்தங்களைச் சூழலால் பெற இயலும். *சேர்1* என்பதன் பங்கெடுப்பாளராக வரும் எழுவாயின் பொருண்மைக் கூறுகள் அதற்கு மேற்சொன்ன வேறுபட்ட பொருள்கோள்களைத் தரும். சேர்1 எழுவாப் பெயர்த்தொடர் மட்டும் ஏற்கும் செயப்படுபொருள் குன்றிய வினையாகும். இருப்பினும் எழுவாய் எதனுடன் சேர்கின்றது எங்கு சேர்கின்றது என்பன இவ்வினையின் பொருள்கோளுக்குரிய முக்கிய தகவல்களாகும். எனவே இலக்குப் பங்கெடுப்பாளர் இவ்வினையுடன் வழுநிலையில் சேரும். இவ்விலக்குப் பங்கெடுப்பாளர் ஓடுவேற்றுமைத் தொடராகவோ குவேற்றுமைத் தொடராகவோ இல்வேற்றுமைத் தொடராகவோ உருப்படுத்தம் பெறும். எழுவாயின் பொருண்மைப் பண்புக்கூறுகளுடன் இலக்குப் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைப் பண்புகூறுகளும் இவ்வினையின் பொருண்மையை அல்லது பொருண்மை நீட்சியை அறிந்துகொள்ள முக்கியமானதாகும். இவ்வினையின் பங்கெடுப்பாளர் சட்டகம் பின்வருமாறு அமையும்:

(261) சேர் [பெதொ + பொதோ-ஓடு/பொதொ-கு/பெதொ-இல்-----

புஸ்தெஜொவ்ஸ்கியின் கோட்பாடு அடிப்படையில் பெறப்படும் நிகழ்வு

6.3.24.2.சேர்2

சேர்2 என்பது *சேர்1*-இன் செயப்படுபொருள் குன்றா வினையாகும் (அல்லது காரண வினையாகும்). இவற்றின் வேர்களின் வடிவங்கள் ஒன்றாக இருந்தாலும் இவை அவை ஏற்கும் கால ஒட்டுக்கள் அடிப்படையில் வெறுபடும். (எடுத்துக்காட்டாக *சேர்1 –ந்த்-* என்பதை இறந்த கால ஒட்டாக ஏற்கையில் *சேர்2 –த்த்-* என்பதை இறந்தகால ஒட்டாக ஏற்கும். *சேர்2* என்பதற்கு க்ரியாவில் 13 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது.

அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இலக்கு/இடம்/முறை
அ	(ஒன்று கூடுமாறு செய்தல் தொடர்பான வழக்கு)				
1	(நபர்களை) திரட்டுதல்; ஒருங்கிணைத்தல்	1.திரைப்பட தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவரையும் சேர்த்து ஓர் அமைப்பு உருவாக்கப்படுகிறது. 2.என்னை அடிப்பதற்கு அவன் ஆள் சேர்க்கிறானாமே?	2. அவன்	1.திரைப்பட தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவரையும் 2. ஆள்	
2	(பொருள்களை) சேகரித்தல்	1.தபால் தலைகளை சேர்ப்பதில் எனக்கு ஆர்வம் அதிகம். 2.இவை அவர் சேர்த்திருக்கும் பழைய	1.நான் 2.அவர்	1.தபால் தலை 2.பழைய நாணயங்கள்	

		நாணயங்கள்.			
3	(பணம்) சம்பாதித்தல்; ஈட்டுதல்	1.அவன் வெளிநாட்டுக்குப் போய்ச் சேர்த்த பணத்தையெல்லாம் வீடாக வாங்கிக் குவிக்கிறான். 2.வீணாக ஊர் சுற்றுவதை விட்டுவிட்டு ஒரு வேலையில் சேர்ந்து நாலு காசு சேர்க்கிற வழியைப் பார்.	1.அவன் 2.நீ	1.பணம் 2.காசு	
4	(பணத்தை) சேமித்தல்	1.சம்பாதித்த காசையெல்லாம் சேர்த்துவைக்காமல் செலவு செய்துவிட்டு இப்போது சோற்றுக்கே திண்டாடுகிறார். 2.பெண்ணின் மேல்படிப்பிற்காக பணம் சேர்த்துக்கொண்டிருக்கிறேன்	1.நீ 2. நான்	1. காசு 2.பணம்	
ஆ	(அடையச் செய்தல் அல்லது இடம்பெறச் செய்தல் தொடர்பான வழக்கு)				
5	(ஓர் இடத்தை) சேரச் செய்தல்	1.பாட்டியை எப்படித்தான் ஊர்க் கொண்டுபோய் சேர்க்கப்போகிற னோ! 2.இந்தக் கடிதத்தை அவரிடம் சேர்த்துவிடு.	1.நான் 2.நீ	1.பாட்டி 2.கடிதம்	1.ஊர்க் கொண்டுபோய் 3.அவரிடம்
6	(ஒன்றை ஒருவரிடம்)	1.கடிதத்தை தபாலில்	1.நீ	1.கடிதம்	1.தபாலில்

	ஒப்படைத்தல்	சேர்த்துவிட்டாயா? 2.நீங்கள் கொடுத்த பணத்தை பத்திரமாக உங்கள் வீட்டில் சேர்த்துவிட்டேன்.	2.நான்	2. பணம்	2.வீட்டில்
7	(அமைப்பு, நிறுவனம், குழு முதலியவற்றில் ஒருவரை) இடம்பெறச் செய்தல்	1.குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க நன்கொடை கொடுக்கவேண்டியிருக்கிறது. 2.நேற்றுதான் அவரை மருத்துவமனையில் சேர்த்தோம்.	1.- 2. நாங்கள்	1.குழந்தை 2.அவர்	2. மருத்துவமனையில்
இ	(இணையச் செய்தல் தொடர்பான வழக்கு)				
8	(புத்தகம், விவரங்கள், வரிசை முதலியவற்றில் ஒன்றை) உள்ளடக்குதல்; இணைத்தல்	1.இந்த அகராதியில் ஐம்பதாயிரத்திற்கும் அதிகமானச் சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 2.பெண்ணிய எழுத்தாளர்கள் வரிசையில் இவரையும் சேர்க்கலாம்.	1.- 2.-	1. சொற்கள் 2.இவர்	1.அகராதியில் 2.பெண்ணிய எழுத்தாளர்கள் வரிசையில்
9	(ஒன்றை ஒன்றில்) கலத்தல்	1.காப்பியில் கொஞ்சம் பாலைச் சேர்க்கட்டுமா? 2.பசை கட்டியாக இருக்கிறது. கொஞ்சம் தண்ணீர் சேர்த்துக்கொள்.	1.நான் 2.நீ	1.பால் 2.தண்ணீர்	1.காப்பியில் 2.பசையில்
10	(குறிப்பிட்ட ஒரு தன்மையை அல்லது நிலையை ஒருவருக்கு அல்லது	1.தொன்மக் குறியீடுகள் இந்தக் கவிதைக்கு புதிய பரிமாணத்தைச்	1.தொன்மக் குறியீடுகள்	1.புதிய பரிமாண	1.கவிதைக்கு 2.சென்னை

	ஒன்றுக்கு) அளித்தல்	சேர்க்கின்றன. 2.இந்தப் புதிய பூங்கா சென்னை மாநகரத்திற்கு எழில் சேர்க்கிறது.	2. இந்தப் புதிய பூங்கா	2. எழில்	மாநகரத்திற்கு
11	(ஒன்றுக்கொன்று) தொடர்புகொள்ளும் படி ஒன்றக்குதல்; இணணத்தல்	1.கொடுத்திருக்கும் எண் வரிசையில் புள்ளிகளைச் சேர்த்தால் ஒரு விலங்கின் படம் கிடைக்கும். 2.கையோடு கை சேர்த்துக்கொண்டு இருவரும் நடந்தார்கள். 3.என்னை அவனுடன் சேர்த்துப் பேசாதீர்கள்.	1.-	1. புள்ளிகள் 2.கை	1.கொடுத்திருக்கும் எண் வரிசையில் 2.கையோடு
12	(ஒரு எண்ணை மற்றொரு எண்ணுடன்) கூட்டுதல்	நான்குடன் இரண்டைச் சேர்த்தால் ஆறு கிடைக்கும்.		இரண்டு	நான்குடன்
13	(கிரிக்கெட்டில் ஒரு வீரர் அல்லது அணி ஓட்டத்தை) பெறுதல்	தொடக்க ஆட்டக்காரர்கள் மட்டுமே 175 ஓட்டங்கள் சேர்த்தனர்.	தொடக்க ஆட்டக்காரர்கள்	175 ஓட்டங்கள்	

க்ரியாவின் அகராதி சேர்2 என்பதன் பொருள்கோள்களை கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளில் மூன்று குழுமங்களாகப் பகுத்துத் தருகின்றது.

அ. ஒன்று கூடுமாறு செய்தல் தொடர்பான வழக்கு

ஆ. அடையச் செய்தல் அல்லது இடம்பெறச் செய்தல் தொடர்பான வழக்கு

இ. இணையச் செய்தல் தொடர்பான வழக்கு

இக்குழுத் தலைப்புகள் 'ஒன்று கூடுதல்' என்ற மூலமுன்வகைப் பொருண்மையானது 'அடையச் செய்தல்', 'இடம்பெறச் செய்தல்', 'இணையச் செய்தல்' என பொருண்மை நீட்சி செய்வதை வெளிப்படுத்தி நிற்கின்றன. இம்மூன்று வகைக் குழுமங்களும் சேர்2 வெவேறு வகையான பங்கெடுப்பாளர்களை ஏற்று தம்மில் வேறுபடுபவதை உணர்த்தும்.

சேர்2 என்பது *சேர்1* என்பதன் காரண வினையாகும். இவ்வடிவுகள் உருபனியல் அடிப்படையில் வேறுபடுவன. இவ்வினையின் அர்த்தங்களைச் *சேர்1* என்ற வினையின் அர்த்தங்களின் காரணவாக்கத்தால் பெறவியலும். கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி '(நபர்களை) திரட்டுதல்; ஒருங்கிணைத்தல்', '(பணத்தைச்) சேமித்தல்', '(பொருள்களை) சேகரித்தல்', '(பணம்) சம்பாதித்தல்; ஈட்டுதல்', '(பணத்தை) சேமித்தல்' என்பனவற்றை "ஒன்று கூடுமாறுச் செய்தல்" என்ற பொருண்மைக் குழுமத்தின் கீழும், '(ஓர் இடத்தை) சேரச் செய்தல்', '(ஒன்றை ஒருவரிடம்) ஒப்படைத்தல்', '(அமைப்பு, நிறுவனம், குழு முதலியவற்றில் ஒருவரை) இடம்பெறச் செய்தல்' என்பனவற்றை "அடையச் செய்தல் அல்லது இடம்பெறச் செயதல்" என்ற பொருண்மைக் குழுமத்தின் கீழும், '(புத்தகம், விவரங்கள், வரிசை முதலியவற்றில் ஒன்றை) உள்ளடக்குதல்; இணைத்தல்', '(ஒன்றை ஒன்றில்) கலத்தல்', '(குறிப்பிட்ட ஒரு தன்மையை அல்லது நிலையை ஒருவருக்கு அல்லது ஒன்றுக்கு) அளித்தல்', '(ஒன்றுக்கொன்று) தொடர்புகொள்ளும்படி ஒன்றக்குதல்; இணணத்தல்', '(ஒரு எண்ணை மற்றொரு எண்ணுடன்) கூட்டுதல்', '(கிரிக்கெட்டில் ஒரு

வீரர் அல்லது அணி ஓட்டத்தை) பெறுதல்' என்ற அர்த்தங்களை "இணையச் செய்தல்" என்ற பொருண்மைக் குழுமத்தின் கீழும் அடக்குகின்றது.

'ஒன்றுகூடுமாறு செய்தல்' என்பதை மூலமுதன்மை வகை (அல்லது அடிப்படை) அர்தமாகவும் பிற அர்த்தங்களை இதன் துணைநிலை அர்த்தங்களாகவும் கொண்டு நாம் *சேர்2* என்பதன் பொருண்மை நீட்சியை விளக்க முயலவேண்டும். அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வேறுபட்ட அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொள்ளவோ ஆக்கவோ உதவும். இவ்வினை முதல் வேற்றுமைத் தொடராக வரும் செயப்படுபொருளையும் முக்கிய பங்கெடுப்பாளராக ஏற்கும். விருப்பாக ஏழாம் வேற்றுமைத் தொடராக வரும் இப்பங்கெடுப்பாளர்களும் பொருள்கோளில் பங்கெடுக்கும். பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்களையும் எடுத்துக்காட்டுக்களையும் ஆயும் போது, இவ்வினையின் பொருள்கோளுக்கு அல்லது பொருண்மை நீட்சிக்கு எழுவாய்ப் பெயர்த்தொடர் எந்தப் பங்களிப்பையும் செய்வதாகத் தெரியவில்லை. செயப்படுபொருள் பெயர்தொடர்தான் பெரும்பாலும் பொருள்கோள் செய்கின்றது; உடன் சேரும் பங்களிப்பாளரும் பொருள்கோளுக்குப் பங்களிப்பு செய்கின்றது. இதை பின்வருமாறு வாய்ப்பட்டுச் சட்டகத்தில் உருப்படுத்தம் செய்யலாம்.

(262) சேர்2 [பெதொ+பெதொ –ஐ +(பெதொ-{ஓடு|உடன்}/பெதொ-இடம்/பெதொ-இல்) ---]

இவ்வினையின் பல்வேறு அர்த்தங்களை இது ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் குறிப்பாகச் செயப்படுபொருளின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம் அல்லது ஆக்கலாம். புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தில்

நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் இவற்றின் ஊடாட்டத்தால் இவ்வார்த்தைகளை அறியவும் ஆக்கவும் இயலும். இவ்வினையின் சொற்பொருண்மை அமைப்புப் பின்வருமாறு அமையும்:

(263) சேர்
நிஅமைப்பு= E1:e1:செயற்பாங்கு
E2=e2:நிலை
மறு அமைப்பு=<α
தலைமை= e1
பஅமைப்பு= பஆளர்1= [1]
பஆளர்2 = [2] பௌதீகப்பொருள்
முறையான = இருப்புப்பொருள்
குஅமைப்பு = வநிகாரணம்-சொகஅ
முறையான= சேர்_விளைவு (e2, [2])
செயலி = சேர்_செயல்(e1, [1], [2])

6.3.25.தட்டு

தட்டு என்பதற்குக் க்ரியாவில் ஆறு பதிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் முதல் மூன்றும் வினைப் பதிவுகளாகும். பின்னர் வரும் மூன்றும் பெயர்ப் பதிவுகளாகும்.

6.3.25.1 தட்டு1

தட்டு1 என்பதற்குக் க்ரியாவில் 8 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவை கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 55

வ.எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்/முறை
அ	(ஒன்றை				

	மற்றொன்றின் மீது படச்செய்தல் தொடர்பான வழக்கு)				
1	(பாராட்டுவது, உணர்வு பெறச் செய்வது, விரைவுபடுத்துவது முதலியவற்றுக்காகக் கையால்) மெதுவாக அடித்தல்	1.'நன்றாக வரைந்திருக்கிறாய்' என்று கூறி பையனின் முதுகில் தட்டினார். 2.புரையேறிவிட்டால் தலையில் தட்டுவார்கள். 3.குதிரையைத் தட்டியதும் அது வேகமாக ஓடத் தொடங்கியது.	1.அவர் 1. - 2. -	3. குதிரை	1. பையனின் முதுகில் 2.தலையில்
2	(கை, கம்பு முதலியவற்றால்) சற்று விசையுடன் அடித்தல்	1.கதவை இரு முறை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான். 2.ஆசிரியர் மேஜையைத் தட்டியதும் வகுப்பில் அமைதி ஏற்பட்டது.	1.அவன் 2.ஆசிரியர்	1.கதவு 2.மேஜை	
ஆ	(அடித்தல் தொடர்பான வழக்கு)				
3	(ஒன்றுக்குக் குறிப்பிட்ட வடிவம் கொடுக்க கையாலோ கருவியாலோ அதை) அடித்தல்	1.சாணி உருண்டையைக் கையால் தட்டி சுவரில் அறைந்தாள். 2.ஆணியைத்	1.சாணி		1. சுவர்

		தட்டி நேராக்கிக் கொடு.	2.ஆணி		
இ	(விழச் செய்தல் தொடர்பான வழக்கு)				
4	(குப்பையை) கொட்டுதல்	குப்பையை பக்கத்து வீட்டில் தட்டியதால் வந்தது தகராறு.	1.-	1. குப்பை	1.பக்கத்து வீட்டில்
5	(தூசி போன்றவை கீழே விழும்படி) அடித்து நீக்குதல்	புத்தகங்களை யெல்லாம் தூசி தட்டி ஒழுங்காக அடுக்கி வை.	1.நீ	2.தூசி	
6	(காலை) தடுத்து தடை ஏற்படுத்துதல்	காலைத் தட்டி விழச் செய்தான்	1.அவன்	2.கால்	
ஈ	(மரபு வழக்கு)				
7	(பெரும்பாலும் சமையலில் பயன்படுத்தும் பூண்டு, இஞ்சி போன்றவற்றை) நசுக்குதல்	1.இஞ்சி தட்டிப்போட்டு வைத்தால் நன்றாக இருக்கும். 2.நாலு பூண்டைத் தட்டிப்போட்டு ரசம் வை.	1- 2. நீ	1.இஞ்சி 2.பூண்டு	
8	(பெரும்பாலும் எதிர்மறையில் எதிர்மறைத் தோனியில்) (பேச்சு, வேண்டுகோள் முதலியவற்றை) மறுத்தல்; புறக்கணித்தல்	1.நான் சொன்னால் தட்டாமல் செய்வார். 2.அவர் சொன்னால் தட்ட முடியுமா?	1. அவர் 2. -		

க்ரியா அகராதி இவ்வினையின் அர்த்தங்களை மூன்று முக்கிய வகைகளாகப் பகுத்துத் தருகின்றன.

(அ) ஒன்றை மற்றொன்றின் மீது படச்செய்தல் தொடர்பான வழக்கு

(ஆ) அடித்தல் தொடர்பான வழக்கு.

(இ) விழச் செய்தல் தொடர்பான வழக்கு)

(ஈ) (மரபு வழக்கு) இவ்வினையின் முதனிலை அர்த்தம்

'(பாராட்டுவது, உணர்வுபெறச்செய்வது, விரைவுபடுத்துவது முதலியவற்றிற்காகக் கையால்) மெதுவாக அடித்தல்', '(கை, கம்பு முதலியவற்றால்) சற்று விசையுடன் அடித்தல்' என்ற அர்த்தங்கள் "ஒன்றை மற்றொன்றின் மீது படச்செய்தல்" என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளன. '(ஒன்றுக்குக் குறிப்பிட்ட வடிவம் கொடுக்க கையாலோ கருவியாலோ அதை) அடித்தல்' என்ற அர்த்தம் "அடித்தல்" என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளது. '(குப்பையை) கொட்டுதல்', '(தூசி போன்றவை கீழே விழும்படி) அடித்து நீக்குதல்', '(காலை) தடுத்து தடை ஏற்படுத்துதல்' என்ற மூன்று அர்த்தங்கள் "விழச் செய்தல்" என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளன. '(பெரும்பாலும் சமையலில் பயன்படுத்தும் பூண்டு, இஞ்சி போன்றவற்றை) நசுக்குதல்', '(பெரும்பாலும் எதிர்மறையில் எதிர்மறைத் தோனியில்) (பேச்சு, வேண்டுகோள் முதலியவற்றை) மறுத்தல்; புறக்கணித்தல்' என்பன "மரபு வழக்கு" என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளன.

தட்டு1 என்பதன் மூலமுதல்வகைப் பொருண்மையாக "ஒன்றை மற்றொன்றின் மீது படச்செய்தல்" என்பதை எடுத்துக்கொண்டு அது "அடித்தல்" , "விளச்செய்தல்" எனப்

பொருண்மை நிட்சி செய்துள்ளதாக விளக்கவியலும். ஏழாவது அர்த்தமான 'நசுக்குதல்' என்பதைக் கூட இவற்றுடன் சேர்த்துக்கொண்டால் இவைகள் யாவும் இயக்கத்தை உட்படுத்துவனவாகத் தெரிகின்றது. எட்டாவது அர்த்தத்தை உருவக நீட்சியாகக் கருதலாம்.

இவ்வினை முக்கியமாக இரு பங்கெடுப்பாளர்களை ஏற்கும்: தட்டும் செயலைச் செய்யும், வழுநிலையில் முதல் வேற்றுமைத் தொடராகவும் எழுவாயகவும் வரும் செயலிப் பங்கெடுப்பாளர், தட்டப்படும் செயலுக்கு உட்படுத்தப்படும் அல்லது தட்டப்படும், வழுநிலையில் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் செயப்படுபொருளாகவும் வரும் விளைவுப் பங்கெடுப்பாளர். இவ்வினையின் பல்வேறு அர்த்தங்களை இது ஏற்கும் செயப்படுபொருள் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம் அல்லது ஆக்கலாம். தட்டு1 என்பதன் பின்வரும் சட்டகம் இதை உருப்படுத்தம் செய்யும்:

(264) தட்டு [பெதொ + பெதொ-ஐ __]
+ எழுவாய் + செயப்படுபொருள்
+பொருண்மைப் +பொருண்மைப்
பண்புக்கூறுகள் பண்புக்கூறுகள்

புஸ்தெஜொவ்ஸ்ர்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தில் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைபாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.3.26. நட

நட என்பதற்கு கிரியா 10 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது. இவ்வர்த்தங்கள் நடத்தலாகிய செயல்பாட்டையும் நிகழ்வு நிகழ்வதையும் நெறியின் படி செல்லுதலையும் குறிப்பிடும்.

அட்டவணை 56

வ. எண்	பொருள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்	
			எழுவாய்	காரணம்/இடம்/ முறை
அ	(இடம்பெயர்தல் தொடர்பான வழக்கு)			
1	இயல்பான வேகத்தில் கால்களை மாற்றிமாற்றி முன்வைத்து இடம்பெயர்தல்	1.தவழ்ந்து கொண்டிருந்த குழந்தை இப்பொழுதுதான் நடக்கத் தொடங்கியிருக்கிறது. 2.கையில் காசு இல்லாத்தால் அலுவலகத்திலிருந்து நடந்தே போனான். 3.'கூனாதே, நிமிர்ந்து நட ' என்று அப்பா கூறினார்.	1.குழந்தை 2.அவன் 2.-	
2.	(விண்வெளி வீர ர் விண்கலத்துக்கு வெளியில் வந்து) மிதந்தபடி நகர்தல்	1.விண்வெளியில் அதிக நேரம் நடந்த பெண் என்ற சாதனையை இந்திய வம்சாவெளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் நிகழ்த்தினார்.	1.பெண்	
ஆ	(நிகழ்தல் தொடர்பான வழக்கு)			
3	(ஒரு சம்பவம் அல்லது நன்மை, தீமை போன்றவை) நிகழ்தல்;	1.இப்படி ஒரு விபத்து நடக்கும் என்று யாரும் எதிர்ப்பார்க்கவில்லை. 2.நடந்தது நடந்துவிட்டது;	1.விபத்து 2.நடந்தது	

	ஏற்படுதல்	இனிமேல் வருந்திப் பயன் இல்லை. 3.ஆட்டத்தின் கடைசி பந்தில்தான் அந்த அற்புதம் நடந்தது. 4.நடந்ததைச் சொன்னால் அவள் நம்புவாளா என்ற சந்தேகம் ஏற்பட்டது.	3. அற்புதம்	
4	(ஒன்றுக்கு அல்லது ஒருவருக்கு ஒன்று) நேர்தல்	1.இரண்டு பேரும் பேசிக்கொள்வதில்லையே. உங்களுக்கிடையே என்ன நடந்தது? 2.என் குடும்பத்துக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்க வேண்டும்?	1. என்ன 2.இப்படியெல்லாம்	
5	(குடும்பம், ஆட்சி, அலுவலகம் முதலியவை) இயங்குதல்; செயல்படுதல்	1.மூத்த மகனின் சம்பளத்தில் தான் குடும்பம் நடக்கிறது. 2.மியான்மாரில் வெகு காலமாக ராணுவ ஆட்சிதான் நடக்கிறது. 3.முதலாளி இருக்கும் வரை அலுவலகம் ஒழுங்காக நடக்கும்.	1.குடும்பம் 2.ராணுவ ஆட்சி 3.அலுவலகம்	
6	நாடகம் முதலியவை) நிகழ்த்தப்படுதல்/(திரைப்படம்) காட்டப்படுதல்	1.எங்கள் ஊரில் சர்க்கஸ் நடக்கிறது. 2.இந்தத் திரையறங்கில் என்ன படம் நடக்கிறது?	1.சர்கஸ் 2.படம்	ஊர் 2. திரையரங்கு
7	(ஒரு நிகழ்ச்சி அல்லது வழக்கு, ஆராய்ச்சி, பேச்சுவார்த்தை முதலியவை) நட்த்தப்படுதல்; நடைபெறுதல்	1.மகனின் கல்யாண வேலைகள் நல்லபடியாக நடக்க வேண்டும். 2.இரு நாடுகளுக்கிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. 3.நந்தம்பாக்கத்தில் அச்சுக்கலை கண்காட்சி நடக்கிறது.	1.கல்யாணவேலைகள் 2. பேச்சுவார்த்தைகள் 3.அச்சுக்கலைக்காட்சி	3.நந்தம்பாக்கம்
இ	(நெறிமுறைகளின் படி செல்லுதல் தொடர்பான			

	வழக்கு)			
8	(குறிப்பிட்ட பண்பு, தன்மை போன்றவை வெளிப்படும் முறையில் அல்லது பண்பு, தன்மை போன்றவை வெளிப்படுத்தும் முறையில் ஒருவர்) செயல்படுதல்	1.நான் சொல்வதைக் கேட்டு நடப்பதாக இருந்தால் இங்கு இரு. 2.அவன் இப்படி முரட்டுத்தனமாக நடந்துகொள்வான் என்று நான் நினைக்கவே இல்லை. 3.தனக்கு எல்லோரும் பணிந்து நடக்கவேண்டும் என்று அவர் நினைக்கிறார். 4.என்னிடம் மிகுந்த மரியாதையுடன் நடந்துகொண்டார்.	1.நீ 2.அவன் 3.எல்லோரும் 4.அவர்	1.கேட்டு 2.முரட்டுத்தனமாக 3.பணிந்து 4.மரியாதையுடன்
ஈ	(மரபு வழக்கு)			
9	(குறிப்பிட்ட வயது) உடையதாக இருத்தல்	1.என் மகளுக்கு எட்டு முடிந்து ஒன்பது நடக்கிறது. 2.எனக்கு மூன்று வயது நடக்கும்போது கீழே விழுந்து அடிபட்டதால் ஏற்பட்ட தழும்பு.	1.ஒன்பது வயது 2.மூன்று வயது	1.மகளுக்கு 2.எனக்கு
10	ஏற்படுதல்; பலித்தல்	1.உன்னுடைய வேலையெல்லாம் என்னிடம் நடக்காது! 2.நானும் அவனை மாற்றுவதற்கு எவ்வளவோ முயற்சி செய்து பார்த்துவிட்டேன். ஆனால் அது நடக்கவில்லை.	1.வேலையெல்லாம் 2.அது	1.என்னிடம்

க்ரியா அகராதி இவ்வினைகளின் அர்த்தங்களை மூன்று முக்கிய குழுமங்களாகப் பகுத்து ஆய்கின்றது.

அ. இடம் பெயர்தல் தொடர்பான வழக்கு

ஆ. நிகழ்தல் தொடர்பான வழக்கு

இ. நெறிமுறைகளின்படி செல்லுதல் தொடர்பான வழக்கு

ஈ. மரபு வழக்கு

முதல் இரு அர்த்தங்களான 'இயல்பான வேகத்தில் கால்களை மாற்றிமாற்றி முன்வைத்து இடம்பெயர்தல்', '(விண்வெளி வீரர் விண்கலத்துக்கு வெளியில் வந்து) மிதந்தபடி நகர்தல்' என்பன "இடம் பெயர்தல்" என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளன. '(ஒரு சம்பவம் அல்லது நன்மை, தீமை போன்றவை) நிகழ்தல்; ஏற்படுதல்', '(ஒன்றுக்கு அல்லது ஒருவருக்கு ஒன்று) நேர்தல்', '(குடும்பம், ஆட்சி, அலுவலகம் முதலியவை) இயங்குதல்; செயல்படுதல்', '(குடும்பம், ஆட்சி, அலுவலகம் முதலியவை) இயங்குதல்; செயல்படுதல்', 'நாடகம் முதலியவை) நிகழ்த்தப்படுதல்/(திரைப்படம்) காட்டப்படுதல்', '(ஒரு நிகழ்ச்சி அல்லது வழக்கு, ஆராய்ச்சி, பேச்சுவார்த்தை முதலியவை) நடத்தப்படுதல்; நடைபெறுதல்', '(நெறிமுறைகளின்படி செல்லுதல் தொடர்பான வழக்கு) என்ற ஆறு அர்த்தங்கள் "நிகழ்தல்" என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளன. '(குறிப்பிட்ட பண்பு, தன்மை போன்றவை வெளிப்படும் முறையில் அல்லது பண்பு, தன்மை போன்றவை வெளிப்படுத்தும் முறையில் ஒருவர்) செயல்படுதல்' என்ற ஒரு அர்த்தம் "நெறிமுறைகளின்படி செல்லுதல்" என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளது. '(குறிப்பிட்ட வயது) உடையதாக இருத்தல்',' 'ஏற்படுதல்; பலித்தல்' பலித்தல் என்ற இரு அர்த்தங்கள் பன 'மரபு வழக்கு என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளன.

'இயல்பான வேகத்தில் கால்களை மாற்றிமாற்றி முன்வைத்து இடம்பெயர்தல்' என்பதை மூலமுதன்மைவகைப் பொருண்மையாகக் கருதி பிற ஒன்பது அர்த்தங்களையும் இம்மூலமுதன்மைப் பொருண்மையின் நீட்சியாக விளக்கலாம். இடம் பெயர்தல்

என்பதிலிருந்து நிகழ்தல், நெறிமுறைகளின்படி செல்லுதல் என்ற பொருண்மைகள் நீட்சி அடைந்துள்ளதாக விளக்குவது பயனுள்ள முயற்சியாய் அமையும். முதன்மை அர்த்தத்திலிருந்த பிற துணைநிலை அர்த்தங்களை அல்லது அர்த்த நீட்சிகளை புரிந்துகொள்ளவோ ஆக்கவோ இயலும் என்பது புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடாகும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். இவ்வினை வழுநிலையில் நடக்கும் செய்லைச் செய்யும் முதல் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாயை முக்கியப் பங்கெடுப்பாளராக ஏற்கும். எழுவாயின் பொருண்மையில் கூறுகள் இவ்வினையின் வேறுபட்ட அர்த்தங்களை வெளிப்படுத்தும். இடம்/முறை போன்ற பிற பங்கெடுப்பாளர்களும் இவ்வர்த்த வேறுபாடுகளுக்குக் காரணமாய் அமையலாம். இதைப் பின்வருமாறு வாய்ப்பாட்டில் உருப்படுத்தம் செய்யலாம்.

(265) ஓடு [பெதொ - பெதொ-இல்]
+ எழுவாய் +இடம்
+ பொருண்மைப் பொருண்மைப்
பண்புக்கூறுகள் பண்புக்கூறுகள்

புஸ்தெஜொவ்ஸ்கியின் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக்கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு, மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருணமை விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.3.27. மாறு

க்ரியாவின் அகராதியில் *மாறு* என்பதற்கு இரண்டு பதிவுகள் உள்ளன. அதில் ஒன்று வினை மற்றொன்று பெயர். வினைப் பதிவுக்கு 6 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இவ்வினையின் வேறுபட்ட அர்த்தங்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்;

அட்டவணை

வ.எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	காரணம்/ இடம்	முறை
அ	(வேறு நிலைக்குப் போதல் தொடர்பான வழக்கு)				
1	(இருக்கும் நிலையிலிருந்து) புதிய அல்லது வித்தியாசமான நிலைக்கு வருதல்	1.சமூகம் மாறவேண்டும் என்று பேசினால் மட்டும் போதுமா? 2.புதிய கருத்துகளுக்கு வழிவகுக்கும் அளவில் கல்வித்திட்டம் மாறியுள்ளது. 3.வாய்ச்சண்டை அடிதடியாக மாறியது. 4.வெப்பத்தால் நீர் நீராவியாக மாறுகிறது.	1.சமூகம் 2.கல்வித்திட்டம் 3.வாய்ச்சண்டை 4.நீர்	2. புதிய கருத்துக்களுக்கு 3. அடிதடியாக 4.வெப்பத்தால்	4.நீராவியாக
ஆ	(இடம் விட்டு இடம் போதல் தொடர்பான வழக்கு)				
2	ஒரு இடத்திலிருந்து நீங்கி வேறு ஒரு இடத்துக்கு வருதல்	1.இடம் மாறினால் கொஞ்சம் மனத்துக்கு நிம்மதியாக இருக்கும். 2.முன்னால்	1.இடம் 2.இருக்கைகள்		

		உட்கார்ந்திருந்தவரின் தலை மறைத்ததால் நண்பர்கள் இருவரும் திரையறங்கில் இருக்கைகள் மாறி உட்கார்ந்துகொண்டனர் .			
3	(காலி செய்து அல்லது விலகி) வேறொன்றுக்குச் செல்லுதல்	1.நாங்கள் வீடு மாறி ஆறு மாதம் ஆகிறது. 2.விழுப்புரத்தில் வண்டி மாறிச் சென்னைக்கு வந்தான். 3.தேர்தலுக்குப் பிறகு பலர் கட்சி மாறியுள்ளனர்.	1.நாங்கள் 2.அவன் 3.பலர்	1.வீடு 2.வண்டி 3.கட்சி	
இ	(ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்று என்ற சூழல் தொடர்பான வழக்கு)				
4	(திசை, பாதை முதலியவை குறித்து வரும்போது) சரியானதைத் தவறவிடுதல்	1.நாம் பாதை மாறி வந்துவிட்டோம் என்று நினைக்கிறேன். 2.சென்னைக்கு வரவேண்டிய கப்பல் புயலில் திசைமாறிச் சென்றுவிட்டது.	1.நாம் 2. கப்பல்	1.பாதை 2.திசை	
5	குறிப்பிட்ட காலம்வரை இருந்துவந்த அல்லது செயல்பட்டுவந்த ஒன்றுக்குப் பதிலாக வெறொன்று வருதல்	1.திரையறங்கில் நாளை படம் மாறலாம். 2.'பம்பாய்' நகரத்தின் பெயர் 'மும்பை' என்று மாறியுள்ளது.	1.படம் 2.'பம்பாய்' நகரத்தின் பெயர்	1.திரையரங்கில்	
6	(நோய்) குணமாதல்	1.இந்த நோய் மாற எத்தனை காலம் பிடிக்கும்? 2.நோய் மாறவே	1.நோய் 2.நோய்		

		மாறாதா என்று மருத்துவரிடம் கேட்டாள். 3.கடுமையான குளிசைகள் சாப்பிட்டும் நோய் மாறவில்லை.	3. நோய்		

க்ரியா அகராதி மாறு என்பதன் அர்த்தங்களை மூன்றாகப் பகுத்துப் பட்டியலிடுகின்றது.

அ. வேறுநிலைக்குப் போதல் தொடர்பான வழக்கு

ஆ. இடம் விட்டு இடம் போதல் தொடர்பான வழக்கு

இ. ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்று என்ற சூழல் தொடர்பான வழக்கு

'இருக்கும் நிலையிலிருந்து) புதிய அல்லது வித்தியாசமான நிலைக்கு வருதல்' என்ற முதல் அர்த்தம் "வேறுநிலைக்குப் போதல்" என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளது. . 'ஒரு இடத்திலிருந்து நீங்கி வேறு ஒரு இடத்துக்கு வருதல்', '(காலி செய்து அல்லது விலகி) வேறொன்றுக்குச் செல்லுதல்' என்ற இரு அர்த்தங்கள் "இடம் விட்டு இடம் போதல்" என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளது. '(திசை, பாதை முதலியவை குறித்து வரும்போது) சரியானதைத் தவறவிடுதல்', 'குறிப்பிட்ட காலம்வரை இருந்துவந்த அல்லது செயல்பட்டுவந்த ஒன்றுக்குப் பதிலாக வெறொன்று வருதல்', '(நோய்) குணமாதல்' என்ற மூன்று அர்த்தங்கள் "ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்று என்ற சூழல் தொடர்பான வழக்கு" என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளன. "வேறுநிலைக்குப் போதல்" என்ற முதன்மை அல்லது அடிப்படை பொருண்மை குழுமம் கொண்ட *மாறு* என்ற வினை "இடம் விட்டு இடம் போதல்" என

நீட்சி அடைந்து பின்னர் "ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்று என்ற சூழல் வருதல்" எனப் பொருண்மை நீட்சி அடைந்துள்ளதாகக் கருதலாம்.

'(இருக்கும் நிலையிலிருந்து) புதிய அல்லது வித்தியாசமான நிலைக்கு வருதல்' என்ற அர்த்தத்தை மூலமுதல்வகைப் பொருண்மையாகக் கொண்டு. இதிலிருந்து பிற அர்த்தங்கள் நீட்சியுற்றதாய் விளக்கவும் இயலும். இவ்வர்த்தக் குழுமங்கள் ஒன்றையொறு சூழலால் விளக்க இயலுபனவாகவும் முதன்மைக் குழும அர்த்தங்களிலிருந்து துணைக் குழும அர்த்தங்களைப் பெற இயலுபனவாகவும் இருக்கின்றன. இவ்வினை முக்கியமாக முதல் வேற்றுமைத் தொடராக வரும் மாறும் பொருளை எழுவாய்ப் பங்கெடுப்பாளராக ஏற்கும்

(266) மாறு [பெதொ + பெதொ-இல்]
+ எழுவாய் +இடம்
+ பொருண்மைப் பொருண்மைப்
பண்புக்கூறுகள் பண்புக்கூறுகள்

பங்கெடுப்பாளர்களான வரும் எழுவாய், காரணம், இடம், முறை என்பனவற்றின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் நாம் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம். *மாறு* என்பதன் முதன்மை அர்த்தத்திலிருந்து பிற துணைநிலை அர்த்தங்களை அல்லது அர்த்த நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ ஆக்கவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். புஸ்தெஜொவ்ஸ்கியின் கோட்பாட்டு அடிப்படையில் அமையும் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம்,

தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம்.

6.3.28.*மாற்று*

க்ரியாவின் அகராதியில் *மாற்று* என்பதற்கு 12 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் அடிப்படையில் இவ்வினையின் வேறுபட்ட அர்த்தங்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்.

அட்டவணை

வ.எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	முறை/இடம்
அ	(வேறுபட்ட நிலைக்குப் போகச் செய்தல் தொடர்பான வழக்கு)				
1	(திருத்துதல், நீக்குதல், சேர்த்தல் முதலிய சொற்களின் மூலம் ஒன்றையோ ஒருவரையோ) புதிய அல்லது வித்தியாசமான நிலைக்கு வருமாறு செய்தல்	1.சமுதாய அமைப்பை அடியோடு மாற்ற நினைக்கிறோம். 2.பாடத்திட்டத்தை மாற்றியமைக்க முடிவு செய்துள்ளார்கள். 3.சில பாக்டீரியாக்கள் பாலைத் தயிராக மாற்றுகின்றன.	1.நாம் 2.அவர்கள் 3.சில பாக்டீரியாக்கள்	1.சமுதாய அமைப்பு 2.பாடத்திட்டம் 3.பால்	1.அடியோடு 3.தயிராக
ஆ	(இடம் விட்டு இடம் போகச் செய்தல் தொடர்பான வழக்கு)				

2	(ஒரு பொருள், கைகால்கள் போன்றவற்றை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு அல்லது ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு) கொண்டுவருதல்	1.சுமையைத் தலையிலிருந்து தோளுக்கு மாற்றிக்கொண்டான். 2.பெட்டியை வேறு வண்டிக்கு மாற்றவா? 3.கால்களை மாற்றிப் போட்டு உட்கார்ந்தான்.	1.அவன் 2.நான் 3.அவன்	1.சுமை 2.பெட்டி 3. கால்கள்	1.தலையிலிருந்து தோளுக்கு
3	அதுவரை இருந்த, வைத்திருந்த, பழகியிருந்த ஒன்றை நீக்கிவிட்டு அல்லது விட்டுவிட்டு வேறொன்றை ஏற்றுக்கொள்ளுதல்	1.வீட்டை மாற்றிவிடலாம் என்று நினைக்கிறேன். 2.காரை மாற்றிவிட்டாயா? 3.ஊருக்கு புறப்பட தயாராக இருந்தவர் கடைசி நேரத்தில் மனத்தை மாற்றிக்கொண்டார். 4.என் முடிவை மாற்றிக்கொள்வதாக இல்லை.	1நான் 2.நீ 3.அவர் 4.நான்	1. வீடு 2.கார் 3.மனம் 4.முடிவு	
4	ஒரு இடத்தை விட்டு வேறொன்றுக்குப் போகுமாறு ஒருவரைப் பணித்தல்	1.உன்னை விற்பனைப் பிரிவுக்கு மாற்றியயிருக்கிறார்கள். 2.என்னைச் சோதனைச் சாவடிக்கு மாற்றியிருக்கிறார்கள்.	1.அவர்கள் 2.அவர்கள்	1. நீ 2.நான்	1.விற்பனைப் பிரிவுக்கு 2.சோதனைச் சாவடிக்கு
இ	(ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை வருமாறுச் செய்தல் தொடர்பான வழக்கு)				
5	காசோலையை	காசோலையை		1. காசோலை	வங்கியில்

	வங்கியில் கொடுத்துப் பணம் பெறுதல்	வங்கியில் கொடுத்து மாற்ற இவ்வளவு நேரமாகிவிட்டது.			கொடுத்து
6	ஒரு நாட்டின் பணத்தைக் கொடுத்து அதற்கு உரிய மற்றொரு நாட்டின் பணத்தைப் பெறுதல்	என்னிடம் இருக்கும் நூறு வெள்ளியையும் மாற்ற வேண்டும்.		நூறு வெள்ளி	
7	பணத்தை ஒருவரிடம் கொடுத்துச் சில்லறை பெறுதல்	இந்த ஐநூறு ரூபாயை பத்து ரூபாய் நோட்டுகளாக மாற்றிக் கொண்டுவா.	நீ	ஐநூறு ரூபா	பத்து ரூபாய் நோட்டுகளாக
8	ஒன்று இருந்த இடத்தில் மற்றொன்றைப் பொருத்துதல்	அந்த உடைந்த கண்ணாடியை மாற்று!	நீ	உடைந்த கண்ணாடி	
9	(உடுத்தியிருந்த ஆடையை கழற்றிவிட்டு வேறு ஆடையை) போட்டுக்கொள்ளுதல்; அணிதல்	சட்டையை மாற்றிக்கொண்டு எங்கே கிளம்பிவிட்டாய்?	நீ	சட்டை	
10	ஒன்று அல்லது ஒருவர் இருந்த நிலையில் ஒன்றையோ அல்லது ஒருவரையோ இருக்கச் செய்தல்	1.'கனகாம்புஜம்' என்ற பெயரை திரைப்பட்த்திற்காக 'பூஜாஸ்ரீ'' என்று மாற்றிக்கொண்டாள். 2.அந்த சாலையின் பெயரை மாற்றி ஒரு வருடமாகிவிட்டது.	அவள்	'கனகாம்புஜம்' என்ற பெயர்	'பூஜாஸ்ரீ'' என்று
11	(தன் சொத்து முதலியவற்றை மற்றவருக்கு) அதிகாரபூர்வமான முறையில் உரியதாக்குதல்	1.வீட்டை என் பேரன் பெயருக்கு மாற்றி எழுதி வைத்துவிட்டேன். 2.சொத்தை தன் பெயருக்கு மாற்ற வேண்டும் என்று அவர் மூத்த மகன்	1.நான் 2. அவர்	1.வீடு 2.சொத்து	1. பேரன் பெயருக்கு 2.தன்பெயருக்கு

		நச்சரிக்கிறான்.			
12	(நோயை) குணப்படுத்தல்	இப்போது காசம் மாற்றக்கூடிய நோயாகிவிட்டது.		காசம்	

மாற்று என்பது *மாறு* என்பதன் செயப்படுபொருள் குன்றா வினைவடிவமாகும். *மாறு* என்பதற்கு க்ரியாவில் 6 அர்த்தங்களையும் *மாற்று* என்பதற்கு 12 அர்த்தங்களையும் பட்டியலிப்பட்டுள்ளன. இரு வினைகளின் அர்த்தங்களில் பெரும்பாலானவை ஒன்றிற்கொன்று இணையானவையாக இருந்தாலும் சில தனித்தன்மையைக் காட்டுகின்றன. க்ரியா அகராதி *மாறு* என்பதன் அர்த்தங்களை மூன்றாகப் பகுத்துப் பட்டியலிடுகின்றது. '(ஒரு பொருள், கைகால்கள் போன்றவற்றை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு அல்லது ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு) கொண்டுவருதல்', 'அதுவரை இருந்த, வைத்திருந்த, பழகியிருந்த ஒன்றை நீக்கிவிட்டு அல்லது விட்டுவிட்டு வேறொன்றை ஏற்றுக்கொள்ளுதல்', 'ஒரு இடத்தை விட்டு வேறொன்றுக்குப் போகுமாறு ஒருவரைப் பணித்தல்' என்ற மூன்று அர்த்தங்கள் "இடம் விட்டு இடம் போகச் செய்தல்' என்ற பொருண்மை குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளன.

அ. வேறுபட்ட நிலைக்குப் போகச் செய்தல் தொடர்பான வழக்கு

ஆ. இடம் விட்டு இடம் போகச் செய்தல் தொடர்பான வழக்கு

இ. ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை வருமாறு செய்தல் தொடர்பான வழக்கு

"வேறுபட்ட நிலைக்குப் போகச் செய்தல்" என்பது இதன் முதனிலைக் குழும அர்த்தமாகும். "இடம் விட்டு இடம் போகச் செய்தல்" , "ஒன்றுக்குப் பதிலாக"மற்றொன்றை

வருமாறு செய்தல்" என்பன துணைநிலை குழும அர்த்தங்களாகும். '(திருத்துதல், நீக்குதல், சேர்த்தல் முதலிய சொற்களின் மூலம் ஒன்றையோ ஒருவரையோ) புதிய அல்லது வித்தியாசமான நிலைக்கு வருமாறு செய்தல்' என்ற முதல் அர்த்தம் மட்டும் "வேறுபட்ட நிலைக்குப் போகச் செய்தல்"என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளது. 'காசோலையை வங்கியில் கொடுத்துப் பணம் பெறுதல்', 'ஒரு நாட்டின் பணத்தைக் கொடுத்து அதற்கு உரிய மற்றொரு நாட்டின் பணத்தைப் பெறுதல்', 'பணத்தை ஒருவரிடம் கொடுத்துச் சில்லறை பெறுதல்', 'ஒன்று இருந்த இடத்தில் மற்றொன்றைப் பொருத்துதல்', '(உடுத்தியிருந்த ஆடையை கழற்றிவிட்டு வேறு ஆடையை) போட்டுக்கொள்ளுதல்; அணிதல்', 'ஒன்று அல்லது ஒருவர் இருந்த நிலையில் ஒன்றையோ அல்லது ஒருவரையோ இருக்கச் செய்தல்', '(தன் சொத்து முதலியவற்றை மற்றவருக்கு) அதிகாரபூர்வமான முறையில் உரியதாக்குதல்', 'நோயை) குணப்படுத்தல்' என்ற எட்டு அர்த்தங்கள் "ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை வருமாறு செய்தல்" என்ற பொருண்மைக் குழுமத்தில் அடக்கப்பட்டுள்ளன. "வேறுபட்ட நிலைக்குப் போகச் செய்தல்" என்ற பொருண்மைக் குழுமம் "இடம் விட்டு இடம் போகச் செய்தல்", "ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை வருமாறு செய்தல்" என பொருண்மை நீட்சி செய்துள்ளதாக விளக்கலாம். "புதிய அல்லது வித்தியாசமான நிலைக்கு வருமாறு செய்தல்" என்ற அர்த்தத்தை மூலமுதன்மைவகைப் பொருண்மையாகக் கொண்டு பிற அர்த்தங்களை இதிலிருந்து நீட்சி உற்றதாய் விளக்கம் தரலாம்.

இவ்வினை செயப்படுபொருள் குன்றாத வினையாக முக்கியமாக இரு பங்கெடுப்பாளர்களை ஏற்கும்: வழுநிலையில் முதல் வேற்றுமைத் தொடராக

மெய்ப்படுத்தம் பெறும் மற்றும் எழுவாயாக வரும் மாற்றும் பங்கெடுப்பாளர் வழுநிலையில் இரண்டாம் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும் மற்றும் செயப்படுபொருளாக வரும் மாற்றப்படும் பங்கெடுப்பாளர். அட்டவணையை ஆய்ந்தால் எழுவாயாய் வரும் பெயர்த்தொடர் இவ்வினையின் பொருள்கோளில் எந்த பங்களிப்பும் செய்வதாகத் தெரியவில்ல. இவ்வினையின் பல்வேறு அர்த்தங்களை இவ்வினை ஏற்கும் செயப்படுபொருளாக வரும் பெயர்த்தொடர்களின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம் அல்லது ஆக்கலாம் என்று தெரிகின்றது. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வேறுபட்ட அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொள்ளவோ ஆக்கவோ உதவும்.

(267) மாற்று [பெதொ + பெதொ-ஐ __]
+ எழுவாய் + செயப்படுபொருள்
+பொருண்மைப் பண்புக்கூறுகள் +பொருண்மைப் பண்புக்கூறுகள்

புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தில் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொலர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.4. சுருக்கவுரை

இங்கு பதினாறு வினைகளை எடுத்துக்கொண்டு அவற்றின் பல்பொருண்மையையும் பொருண்மை நீட்சியையும் புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை

அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தின் அடிப்படையில் விளக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினைகள் அவை ஏற்கும் பங்கெடுப்பாளர்கள் அடிப்படையில் வேறுபட்ட அர்த்தங்களைத் தரும் அல்லது ஆக்கும் எனக்கூறலாம். தாய்மொழி பேசுபவர்களைப் பொறுத்தவரையில் ஒரு வினையின் பொருண்மை நீட்சி சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால் ஒரு மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பவற்கு இத்தகைய பொண்மை நீட்சி எதிர்பாரதாக அமையும். வினைகள் அடையும் உருவக நீட்சி அவற்றின் பல்பொருண்மைக்குக் காரணமாக அமைகின்றது. வினைகளின் பொருண்மை நீட்சியைப் புஸ்தெஜோவ்விஸ்கி தரும் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தின் அடிப்படையில் ஓரளவுக்கு விளக்கவியலும் என்பது தெரிகின்றது.

இயல் 7
முடிவுரை

'தமிழ் வினைகளில் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்' என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வை மேற்கொள்கையில் இதை ஒரு வரலாற்று மொழியியல் பார்வையில் செய்யவேண்டும் என்ற நோக்கம் இருந்தது. பின்னர் இது தொடர்பான நூல்களையும் கட்டுரைகளையும் படிக்கும் போது இதன் பரிமாணம் தெரியவந்தது. ஒரு மொழியின் தற்போதைய நிலை அது அடைந்துள்ள வரலாற்று மாற்றங்களின் வெளிப்பாடு தான் என்பது மனதில் பதிந்த போதுதான் தற்காலத் தரவுகளை வைத்துக் கொண்டே வினைகளின் பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் ஆயலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. அகராதியில் ஒவ்வொரு சொல்லுக்கும் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்கள் யாவும் பொதுவாக வரலாற்றுப் பரிமாணதைப் பிரதிபலிக்கும் பொருண்மை மாற்றம் மற்றும் பொருண்மை நீட்சியின் விளைவுதான் என்ற புரிதலின் அடிப்படையில் தான் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அகராதிகள் அர்த்தங்களைப் பட்டியலிடுமே அன்றி எவ்வாறு ஒன்று இன்னொன்றானது, இதில் செயல்படும் விதிகளும் விளக்கங்களும் யாவை என்ற அடிப்படையில் அவை சொற்களின் பொருண்மைகளை அணுகுவதில்லை. இத்தகைய நோக்கத்தின் அடைப்படையில் தான் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

சொற்பொருண்மையியல் சொற்களை வேறுபட்ட பொருண்மை வகுப்புகளாக அல்லது பொருண்மை களங்களாக குழுமம் செய்வதுடன் எவ்வாறு சொற்கள் எல்லாம் ஒன்றோடொன்று பொருண்மை அடிப்படையில் தொடர்புகொண்டுள்ளன என்பதையும் ஆய்கின்றது. நாம் சொற்களின் பொருண்மை உறவுகளைப் பின்வருமாறு குறைந்தது ஐந்து வகைகளாகப் பிரித்து ஆயலாம் எனக் கண்டோம்:

1. ஒருபொருள் பன்மொழியம் (synonymy)

2. எதிர்மொழியம் (antonymy)

3. உள்ளடங்கு மொழியம் மற்றும் சொல் மரபுரிமை (hyponymy and lexical inheritance)

4. சினைமொழியம் (சினை-முதல் உறவு) (meronymy)

5. உட்படுத்தம் மற்றும் முற்கோள் (entailment and presupposition)

பொதுவாக ஒருபொருள் பன்மொழியம் கருத்துருக்களுக்கு இடையே உள்ள உறவுகள் என்று எடுத்துக்கொள்ளப்படுவதை விடச் சொற்களுக்கு இடையே உள்ள உறவு என்று எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இரண்டு வெளிப்படுத்தங்கள் எல்லாச் சூழல்களிலும் வாக்கியத்தின் உண்மை மதிப்பீடு மாறாமல் ஒன்றையொன்று இடம் பெயர்க்குமானால் அவைகளுக்கிடையே உள்ள உறவு ஒருபொருள் பன்மொழியம் என்று ஒரு நிலைபெறு விளக்கம் கூறுகின்றது (லையான்ஸ் 1977, குரூஸ் 1986). ஒரு பன்மொழியம் வெளிப்பாடுகளின் இடப்பெயர்ச்சியால் விளக்கப்பட்டால் அவைகளுக்கு இடையே உள்ள உறவு ஒரே வகைப்பாட்டுச் சொற்களுக்கு இடையிலான உறவாகும் (intra-category relation); எடுத்துக்காட்டாக, பெயர்ச் சொல்லுக்கும் பெயர்ச் சொல்லுக்கும் உள்ள உறவு, வினைச் சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் உள்ள உறவு. பொருண்மை அடிப்படையில் உள்ளங்கு சொல்லுக்கும் உள்ளடக்குச் சொல்லுக்கும் உள்ள உறவு உள்ளடங்கு மொழியம் எனப்படும். எடுத்துக்காட்டாக *நாய்* (உள்ளடங்கு மொழி) என்பதற்கும் *விலங்கு* (உள்ளடக்கு மொழி) என்பதற்கும் உள்ள பொருண்மை உறவு உள்ளடங்கு மொழியம் ஆகும். சினையாக வரும் சொல்லுக்கும் முழுமையாக வரும் சொல்லுக்கும் உள்ள உறவு சினைமொழியம் எனப்படும். எடுத்துக்காட்டாக *கை* (சினைமொழி) என்பதற்கும் *உடல்* (முழு மொழி) என்பதற்கும் உள்ள உறவு சினை மொழியம் எனப்படும். வினையைப் பொறுத்தவரையில் தெளிவான உள்ளடங்கு-

உள்ளடக்கு மொழிய உறவையோ சினை-முழுமை மொழிய உறவையோ எதிர்பார்க்கவியலாது. எடுத்துக்கடாட்டாக *வினியோகி* என்பதைக் *கொடு* என்பதன் உள்ளடங்கு மொழியம் எனக் கூற இயலும்; *நட, ஓடு* என்பன ஒருவகைச் சலனங்கள்/இயக்கங்கள் எனலாம். இருப்பினும் பொதுவாக உள்ளடக்குதல், முற்கோள் செய்தல் என்ற பொருண்மை உறவுகளின் அடிப்படையில் வினைகளின் பொருண்மைகள் உறவு படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, *குறட்டைவிடு* என்பது *தூங்கு* என்பதை உட்படுத்தல் செய்யும். அவன் *குறட்டை விடுகிறான்* என்பது *தூங்கினான்* என்பதை உட்படுத்தம் செய்யும்; *வெல்* என்பது *முயல்* என்பதை முற்கோள் செய்யும். எதிர்மொழியம் பொருண்மை எதிர்நிலை அடிப்படையில் பண்பாக்கம் செய்யப்பட்ட உறவாகும். ஒருபொருள் பன்மொழியம் போல எதிர்மொழியமும் கருத்துருக்களுக்கு இடையே உள்ள உறவாகக் கருதப்படாமல் சொற்களுக்கிடையே உள்ள உறவாகக் கருதப்படுகிறது.

அகராதிகள் பொதுவாகச் சொற்களை அகரவரிசப்படுத்தித் தந்து அவற்றின் இலக்கண வகைப்பாட்டை (பெயர், வினை, பெயரடை, வினையடை) தந்து ஒவ்வொரு சொல்லுக்கும் அவை சூழலில் பயன்படுத்தப் படுகையில் வெளிப்படும் அர்ந்தங்களைப் பட்டியலிடுகின்றன; அதாவது சொற்களின் அர்த்தங்களை சூழல் அடிப்படையில் விளக்குகின்றன எனலாம். அகராதிகள் பொதுவாகச் சொற்களின் அர்த்தங்களை விளக்குவதற்கு மேற் சொன்ன பொருண்மை உறவுகளைப் பயன்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக *செல்* என்பது *போ* என்பதன் ஒருபொருள்பன்மொழி என்றும், *நொண்டு* என்பது *நட* என்பதன் ஒருவகை என்றும், *தாழ்* என்பது *உயர்* என்பதன் எதிர்மொழி என்றும், *நட* என்பது ஒருவகைச் சலனம் என்றும், *குறட்டைவிடு* என்பது

தூங்கு என்பதை உட்படுத்தும் என்றும், *வெற்றி பெறு* என்பது *முயல்* என்பதை முற்கோள் செய்யும் என்றும் அர்த்த விளக்கங்கள் தரலாம். அகராதிகள் சொற்களுக்கு அர்த்தம் தருகையில் இத்தகைய முறையையே பயன்படுத்துகின்றன.

பொருட்புல அகராதிகள் அல்லது சொற்களஞ்சியங்கள் (thesaurus) சொற்களைப் பொருண்மை அடிப்படையில் அல்லது மேற்சொன்ன பொருண்மை உறவுகளின் அடிப்படையில் குழுமி ஒருசொல் பன்மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு மொழியின் சொற்றொகையை ஒரு அமைப்பில் தருவதாகும். (தமிழுக்கு இத்தகைய சொற்களஞ்சியம் இராசேந்திரன் அவர்களால் உருவாக்கப்பட்டு தமிழ்ப் பல்கலைக் கழத்தால் வெளியிடப்பட்டுள்ளது.)

சொல்வலை (wordNet) சொற்களஞ்சியம் (பொருட்புல அகராதி), மற்றும் அகராதி (அகரமுதலி) என்ற இரண்டையும் ஒருண்கிணைக்குக்கும் சொல் தரவாகும். சொல்வலை (wordNet) சொற்களை ஒருபொருள்பன்மொழிகளாகக் குழுமி அவைகளுக்கு இடையே உள்ள மேற்கண்டது போன்ற பொருண்மை உறவுகளை வெளிப்படுத்தி சொற்றொகையை பொருண்மை உறவுகளால் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ள ஒரு வலை போன்ற அமைப்பாக உருப்பத்தம் செய்கின்றது. (தமிழ்க்கு இத்தகைய சொல்வலை இராசேந்திரனின் மேற்பார்வையில் உருவாக்கப்பட்டுள்ளந்து.)

பல்பொருண்மை (பல்பொருளொருமொழியம்) (polysemy) என்பது மேற்சொன்ன பொருண்மை உறவுகளில் இருந்து வேற்பட்டது. அகராதிகள் சொற்களை பொதுவாக அகரவரிசையில் பட்டியலிட்டு அவற்றின் அர்த்தங்களைப் பட்டியலிடுகின்றன. அகராதிகள் சொற்களின் அர்த்தங்களைப் பட்டியலிடுகையில் ஒருவித நிரலைக் கடைபிடிக்கின்றன. பெரும்பான்மையும் சொற்களின் உண்மைப் பொருண்மைக்கு

அல்லது முக்கியப் பொருண்மைக்கு முக்கியத்துவம் தந்து அர்த்தங்களின் பட்டியலில் முதலில் அதைத் தரும்; பிற அர்த்தங்களை அல்லது அர்த்த நீட்சிகளை (பல்பொருண்மை) அதனைத் தொடர்ந்து தரும். இத்தகைய முறையில் சொற்களின் பொருண்மை மாற்றமும் சொற்களின் பொருண்மை நீட்சியும் முறையாக விளக்கப்படுவதில்லை. இத்தகைய முயற்சிக்கான துண்டுகோலாக தற்போதைய ஆய்வு அமைகின்றது.

இவ்வாய்வைப் பொருத்தமட்டில் எவ்வாறு சொற்களின் உண்மை/மைய அர்த்தம் விரிந்து பல்பொருண்மைத் தன்மை (பல்பொருளொருமொழியம்) அடைகின்றது என்பதாகும். சொற்களுக்கு என்று அர்த்தம் இல்லை சூழலில் அது பயன்படுத்தப்படுகையில் தான் அது பொருள்கோள் செய்யப்படுகின்றது என்று வாதிடுவர். அத்தகைய சூழல்களை ஒருவரன்முறை அமைப்பில் விளக்க இயலும் சாத்தியங்கள் இங்கு ஆயப்படுள்ளன.

இவ்வாய்வு இரு ஆய்வுக்கோட்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினைச் சொற்களின் பொருண்மை நீட்சியையும் மாற்றத்தையும் புலனறிவு மொழியியல்கோட்பாடுகள் அடிப்படையில் ஆய்வது ஒன்று. மற்றொன்று வினைச் சொற்களின் பொருண்மை நீட்சியையும் பொருண்மை மாற்றதையும் ஆக்கமுறை அகராதி கோட்பாடு அடிப்படையில் பார்ப்பது. புலனறிவு மொழியியல் ஆய்வுகள் சொற்கள் எவ்வாறு பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும் அடைகின்றன என்ற நமது கேள்விகளுக்கு நம்பத்தகுந்த விடைகளை அளிப்பதோடு அவற்றை வகைப் படுத்தவும் புரிந்து கொள்ளவும் உதவுகின்றன.

இவ்வாய்வை மேற்கொள்ளும் போது பல கேள்விகள் எழுந்தன. சொற்களுக்கென்று குறிப்பாக வினைகளுக்கு என்று தனியாகப் பொருண்மை இருக்கின்றதா அல்லது சூழல்கள் தான் பொருண்மையை அளிகின்றதா? சொற்களின்

பொருண்மை மாறுகின்றது அல்லது நீட்சி அடைகின்றது என்றால் சொற்களுக்கு குறிப்பாக வினைகளுக்கு அடிப்படையான பொருண்மை இருக்கிறது என்ற ஊகத்தின் அல்லது எடுகோளின் அடிப்படையில் அல்லவா அமையும்? அது எந்த அளவுக்குச் சரியானது? சொற்களுக்கு, குறிப்பாக வினைகளுக்கு அடிப்படை பொருண்மை என்று ஒன்று இருக்கின்றதா? அல்லது சொற்களுக்கு அல்லது வினைகளுக்கு சாத்தியமான பல பொருண்மைகள் இருக்கின்றன; அவை சூழலால் வெளிக்கொணரப்படும் எனக் கருதவேண்டுமா? இவ்வாறான பல கேள்விகளுக்கான பதில்கள் புலனறிவு மொழியியல் கோட்பாடுகள் மூலம் கிடைத்தன. மூலமுதன்வகைக் கோட்பாடு சொற்களுக்கு மூலமுதன்வகைப் பொருள் இருப்பதை உறுதி செய்தன. மூலமுதன்வகைப் பொருண்மை ஒத்துக்கொண்டால் பொருண்மை நீட்சியைப் பற்றியும் பொருண்மை மாற்றத்தையும் பற்றி விளக்குவது எளிதாகின்றது. இக்கோட்பாடு எவ்வாறு ஒரேமாதிரியான அல்லது ஒத்த பொருண்மை மாற்றங்களும் பொருண்மை நீட்சிகளும் மொழிகளைக் கடந்து காணப்படுகின்றது என விளங்கிக்கொள்ள உதவுகின்றது. இருப்பினும் மூலமுதன்மைவகைக் கோட்பாடு எவ்வாறு ஒரு சொல்வகைப்பாட்டின் பொருண்மை மாறுகின்றது என்பதற்கு முழுவிளக்கம் தரத் தவறுகின்றது. சொல்கள ஆய்வு அடிப்படையிலான புலனறி மொழியில் பார்வை சில கேள்விகளுக்கு விளக்கங்கள் தருகின்றது. என்னே களப்பொருண்மை இயல் கோட்பாடும் இவ்வாய்வுக்கு ஆய்வுநெறிமுறையாக அமைந்து. களப்பொருண்மையியல் கோட்பாடு அடிப்படையில் தமிழ் வினைகள் பொருண்மைக் களங்களாகப் பகுக்கப்பட்டன. ஒவ்வொரு பொருண்மைக் களத்திலும் வரும் சொற்களுக்கு இடையே உள்ள பொருண்மை வேறுபாடுகள் விளக்கப்பட்டு அவை பொருண்மை நீட்சி அடைகையில் அவை ஒரு பொருண்மைக் களத்திலிருந்து மற்றொரு பொருண்மைக் களத்திற்கு நகர்வது

வெளிப்படுத்தப்பட்டது. பொருண்மை மாற்றத்தில் வினைகள் ஒரு பொதுமையைக் கடை பிடிப்பதையும் பொருண்மை நீட்சிகளும் பொருண்மை மாற்றங்களும் ஊகிக்க அல்லது எதிர்பார்க்க இயலுபவையாகவும் ஒரு உலகப்பொதுமையான தன்மையை வெளிப்படுத்தி நிற்பதையும் அறிய முடிந்தது.

ஒவ்வொரு பொருண்மைக் களத்திலிருந்தும் அவற்றை உருப்படுத்தம் செய்யும் சொற்கள் எடுத்துக்காட்டுகளாக எடுக்கப்பட்டு அவை காட்டும் பொருண்மை நீட்சியும் பொருண்மை மாற்றமும் ஆயப்பட்டன. பல பொருண்மை நீட்சிகள் ஊக்கிக்க இயலுவனவாகவும் எளிதில் விளக்க இயலுவனவாகவும் இருப்பது தெரியவந்தது. பொருண்மை மாற்றத்திற்கு ஆகுபெயர், உருவகம், மிகைப்படுத்தல், குறைப்படுத்தல், சிதைத்தல், உயர்ச்சி, ஒப்புமை, என்பன காரணங்களாக அமைவது வெளிப்பட்டது. பொருண்மை நீட்சி அல்லது பொருண்மை மாற்றக் கோட்பாடுகளுக்கு விளக்கங்களும் தெளிவுகளும் தற்போதைய ஆய்வின் மூலம் கிடைக்கப் பட்டது. பொருண்மை மாற்றத்தை விளக்க மரபு வகைப்பாட்டியல்களைப் பயன்படுதவியலும் ஆனால் வகைப்பாடுகள் பொருண்மை மாற்றங்களை ஊகிக்கப் பயன்படாது என்பது தெரியவந்து. அண்மைக் கால ஆய்வுகளின் அடிப்படையில் பொருண்மை மாற்றத்தின் ஒழுங்குமுறையை அறிய முடிந்தது. வினைச் சொற்களின் பொருண்மை மாற்றத்தையும் பொருண்மை நீட்சியையும் நன்கு புரிந்துகொள்ள சொற்களின் பல்பொருண்மைத் தன்மை பற்றிய அறிவு தேவை என்பது இவ்வாய்வின் முலம் வெளிப்பட்டது.

அடுத்தபடியாக வினைச் சொற்களின் பொருண்மை நீட்சியையும் பொருண்மை மாற்றதையும் விளக்குவதற்கு புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைப் பயன்படுத்துவதாகும். ஆக்கமுறை அகராதிக்கோட்பாடு கணினி சொற்பொருண்மையியல் ஆய்வை அடிப்படையாகக் கொண்டது. கணினி வழி சொற்பொருண்மையை ஆயும் ஆய்வு கணினி சொற்பொருண்மையியல் எனப்பட்டது.

சொற்பொருண்மையியல் கணினிமொழியியலில் பெரிய ஆய்வுக் களமாக மாறிவருகின்றது. மட்டுமன்றி இது இயற்கைமொழிப் பகுப்பாய்வி மற்றும் ஆக்கிகள் உள்ளடங்கிய பயன்பாட்டின் பல்வேறு வகைகளுக்கு முக்கியப் பங்கு வகிக்கின்றது. சொற்பொருண்மையியல் உளமொழியியலில் இருந்து அறிவு உருப்படுத்தம் மற்றும் கணினி அமைப்பு வரை பரந்த சிக்கல்களை உட்படுத்தியுள்ளது. இச்சிக்கல்களைச் சரிவர உணர்வதற்கு முன்னோடியாக அமையும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது மிகவும் தேவையாகும். மொழியியல் ஆய்வு ஒலியனியல், உருபனியல், தொடரியல் என்பதோடு முடிந்து விடாமல் பொருண்மையியலும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும். குறிப்பாக அகராதி தொடர்பான செயல்பாடுகள் வெறும் அர்த்தங்களைப் பட்டியலிடும் முயற்சிகளாக முடிந்துவிடாமல் மனித மனத்தின் ஆக்கபூர்வமான பொருண்மை ஆக்கத்தை அல்லது நீட்சியை விளக்குவதாக அமையவேண்டும். தொடரியலுக்குத் தரப்பட்ட முக்கியத்துவம் ஏனோ பொருண்மையியலுக்குத் தரப்படவில்லை. பொருண்மையின் அருவத்தன்மையான வெளிப்பாடு இதன் காரணமாக இருக்கலாம். இருப்பினும் புஸ்தெஜோவ்விஸ்கி சொற்களுக்குத் பட்டியலிடும் பின்வரும் செயல்பாடுகள் மிக முக்கியமானவைகளாகும்:

- மொழியின் பல்லுருப இயல்பை விளக்குதல்
- இயற்கை மொழி கூற்றிகளின் பொருண்மைத் தன்மையைப் பண்பாக்கம் செய்தல்
- புதிய சூழல்களில் சொற்களின் விளைவாக்கப் பயன்பாட்டை புரிந்துக்கொள்ளுதல்
- ஒன்று சேர்க்கப்பட்ட பொருண்மை உருப்படுத்தத்தை மேம்படுத்தல்.

சொற்பொருண்மையியல் ஆய்வில் ஈடுபடுவோர் புஸ்தெஜோவ்ஸ்கின் சொற்பொருண்மையியல் குறித்த பின்வரும் கருத்துகளை மிக முக்கியத்துவம் வாய்ந்தாக எடுத்துக்கொள்ளவேண்டும்:

மொழியின் தொடரியல் அமைப்பின் பின்பலம் அல்லாமல் சொற்பொருண்மையியல் ஆய்வு தோல்விவுறும். பொருண்மையை அது தாங்கி வரும் அமைப்பிலிருந்து முற்றிலுமாகப் புறம் தள்ளி ஆயும் வழி இல்லை. இது முக்கியமான

வழிமுறையாகும்; ஏனென்றால் பொருண்மை கோட்பாடுகளை மதிப்பீடு செய்ய இலக்கண வேறுபாடுகள் பயனுள்ளதாக அமைகிறன.

சொற்களின் பொருண்மைகள் புலனறிவு ஒழுங்கு முறையில் ஆழமான கருத்துரு அமைப்புகளையும் அது செயல்படும் களங்களையும் பிரதிபலிக்கவேண்டும். இயற்கை மொழியின் பொருண்மையியல் மொழியியல் அல்லாத கருத்துரு அடிப்படையிலான ஒழுங்படுத்தும் கொள்கைகளின் பிம்பமாக அமைய வேண்டும்.

ஒரு மொழியில் உள்ள சொல் அலகுகளின் பொருண்மையியல் விளக்கத்தின் சரியான நடைமுறை, இலக்கணத்தில் உள்ள மயக்கத்தின் நடத்தையையும் சொல் தேர்வையும் சரியானபடி விளக்க நம்மை அனுமதிக்க வேண்டும். இது மொழியின் இலக்கணம் மற்றும் பொருண்மை விளக்கத்தை எளிமைப்படுத்தும். ஒரு மொழியிலுள்ள பல சொற்களுக்குப் பல பொருள்கள் இருக்கின்றன. இதைப் பல்பொருண்மை (polysemy) எனப் பார்த்தோம். சொற்கள் பல்பொருண்மைகளை அடையும் வழியில் வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக இரண்டு வகையான மயக்கங்களை வேறுபடுத்தலாம் எனப்பார்த்தோம். முதலாவது முரண்படும் மயக்கம் (contrastive ambiguity) எனப்படும். முரண்படும் மயக்கம் ஒரு சொல் எதேச்சையாக இரண்டு வேறுபட்ட தொடர்பு இல்லாத பொருண்மைகளைக் கொண்டிருப்பதாகும். எடுத்துக்காட்டாக *படு* என்ற வினை படுப்பதையும் ஏதோ ஒன்று மற்றொன்றில் படுவதையும் குறிப்பிடும்; இதை ஒரு சொல் போலி (homonymy) எனக்கண்டோம். இரண்டாவது மயக்கம் துணைநிலை மயக்கம் (complementary ambiguity) எனப்படும். எடுத்துக்காட்டாக *ஓடு* என்ற வினை விலங்குகள் ஓடுவதையும் ஆறு ஓடுவதையும் குறித்து நிற்கும். இந்த அர்த்த வேறுபாடுகள் துணை நிலைப் பல்பொருண்மைகள்/பல்பொருளொமொழியம் (complementary polysemy) என்று அழைக்கப்படும். நம்முடைய சொற்பொருண்மையின் மாதிரி எப்படியாவது *படு* என்ற

சொல் ‘படுக்கையில் படு’ மற்றும் ‘மேலில் படு’ எனப் பொருள்கோள் செய்யப்படுவதையும் *ஓடு* என்ற ‘சொல் விலங்குகள் ஓடும் செயல்’, ‘ஆறு ஓடும் செயல்’ எனப் பொருள்கோள் செய்யப்படுவதையும் விளக்க இயல வேண்டும். இவ்வெடுத்துக்காட்டுகளில் பொருள்களின் துணை நிலையில் இரண்டு வகைகள் இருக்கின்றன: ஒன்று வகைப்பாட்டைத் தக்கவைப்பது; இரண்டு வகைப்பாட்டை மாற்றுவது. தர்க்க பல்பொருண்மை என்பது சொல் வகைப்பாட்டில் மாற்றம் இல்லாத சொல்லின் பல்பொருண்மைகள் மேலூறலாக வரவோ சார்ந்து வரவோ பொருண்மைகளைப் பங்கிட்டுக் கொள்ளவோ செய்யும் துணைநிலை மயக்கமாகும். எனவே துணைநிலையில் பல்பொருண்மை தர்க்கப் பல்பொருண்மையை விட சிறிது அகலமானது. ஏனென்றால் முந்தையது சொற்கள் எவ்வாறு வகைப்பாடு கடந்த பொருண்மை உறவு கொண்டிருக்கின்றன என்று விளக்குகின்றது. எடுத்துக்காட்டாக *பூட்டு* என்பதைப் பெயராகவும் வினையாகவும் பயன்படுத்துவது ஆகும்.

இவ்வாய்வின் முக்கியப் பண்புகள் மற்றும் நிறைவுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

வினைகளின் பொருண்மை மாற்றம் அல்லது பொருண்மை நீட்சியை புலனறிவு பொருண்மையியல் கோட்பாடு அடிப்படையில் களப்பொருண்மையியல் துணையோடு விளக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாய்வு புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையில் தமிழ் வினைகளின் பொருண்மையை ஆய மேற்கொள்ளப்பட்ட முதன் முயற்சியாகும். முதன் முறையாக புஸ்தெஜோவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு தமிழாக்கம் செய்யப்பட்டு தமிழ் வினைகளை எடுத்துக்காட்டுகளாகத் தந்து இக்கோட்பாட்டைத் தமிழ் மொழியியலுக்கு அறிமுகப்படுத்துகின்றது.

தமிழ் வினைகளின் பல்பொருண்மை பல ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் வினைகளின் பல்பொருண்மையை விளக்கும் அமைப்பியல்

அடிப்படையிலான ஒரு சீரான ஆய்வாக இது அமைகின்றது. தமிழ் வினைகளின் பல்பொருண்மைகளைப் பட்டியலிடும் முயற்சியில் ஈடுபடாமல் பல்பொருண்மையைச் சேர்ந்துவரும் சொற்களிலிருந்து ஆக்கும் முயற்சி இவ்வாய்வேட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வேடு தமிழில் வினைச்சொற்களின் பல்பொருண்மையை ஆய்ந்ததோடு அல்லாமல் எவ்வாறு இப்பல்பொருண்மையை அல்லது பொருண்மை நிட்சியை ஆக்கபூர்வமாக விளக்கலாம் என்ற நோக்கிலும் கவனத்தைச் செலுத்தியுள்ளது. இதற்கு உறுதுணையாக புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு கையாளப்பட்டுள்ளது. இக்கோட்பாடு இன்றைய காலகட்டத்தில் அர்த்தங்களைப் பட்டியலிடும் அகராதியின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி சொற்பொருண்மையை ஆக்கமுறையாக ஆய்வதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. இதன் அடிப்படையில் தான் தமிழ் வினைகளின் அர்த்தங்களை ஆக்கபூர்வமாக ஆயும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டை தமிழ் எடுத்துக்காட்டுகளின் உதவியால் புரிந்துகொள்ளும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினைச் சொற்களின் பல்பொருண்மையை விளக்க புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக்கோட்பாடு எந்த அளவுக்குப் பொருத்தமானது என்பதை அறியும் முயற்சியும் இவ்வாய்வேட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வேடு ஒரு தொடக்கம் தான். எதையும் முடிவுரையாகச் சொல்ல இங்கு முயற்சி எடுக்கப்படவில்லை. புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு மிக ஆக்கபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் அமைவதை உணர முடிகின்றது. புஸ்தெஜோவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தில் அனைத்து வினைச்சொற்களையும் தர முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஒருசில விதிகளால் எவ்வாறு எண்ணிறந்த வாக்கியங்களை உருவாக்க இயலுகின்றதோ அதேபோல்

அர்த்தங்களையும் சூழல்களுக்குத் தகுந்தவாறு ஊகித்தறியும் நமது ஆக்கத்திறன் விளக்கப்படவேண்டும். இத்தகைய முயற்சியின் ஆரம்ப கட்டத்தான் இவ்வாய்வு.

"தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றமும் பொருண்மை நீட்சியும்" என்ற ஆய்வுத் தலைப்பை எடுத்துக்கொண்டு ஆய முயலுகையில் சொற்பொருண்மை கோட்பாடு பற்றி பேசுகின்ற தமிழ் நூல்கள் மிகக் குறைந்ததாகத்தான் கிடைத்தது. பொதுவாகப் பொருண்மையில் என்ற தலைப்பில் அமைந்த ஓரிரு நூல்கள் தான் தமிழில் கிடைத்தன. இராசேந்திரன் அவர்களின் நூல்களும் கட்டுரைகளும் அவரது மேலாண்மையின் கீழ் சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வேடுகளும் ஓரளவுக்கு உதவின. பல்பொருண்மை கோட்பாடு பற்றியும் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு பற்றியும் பேசுகின்ற தமிழ் நூல்கள் கிடைக்கப் பெறவில்லை. இவ்வாய்வேடு இதை ஓரளவுக்குப் பூர்த்தி செய்யும்.

தமிழ் மொழியின் வினைகளின் பொருண்மை மாற்றம் மற்றும் பொருண்மை நீட்சி பற்றிய விரிவான ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாய்வேடு இத்தேவையைப் பூர்த்திசெய்யும். மேலும் தமிழ் வினைகளின் பொருண்மை மாற்றம், பொருண்மை நீட்சி, ஒருபொருள்பன்மொழியம் இவற்றிற்குக் காரணமான உருவக நீட்சி, ஆகுபெயர் நீட்சி என்பன விரிவாக ஆயப்படும் போது பொருண்மைமாற்றத்தின் மற்றும் பொருண்மை நீட்சியின் ஒரு வகைப்பாட்டியல் கிடைக்கும்.

வினைகளின் பொருண்மை நீட்சி மற்றும் பொருண்மை மாற்றங்களின் பொதுத்தன்மை, பொதுமையான போக்கு, உலகப்பொதுத்தன்மை, ஊகிக்க இயலும் அல்லது எதிர்பார்க்க இயலும் தன்மை என்பன நமது கருத்தாடல் செயல்பாட்டை எளிதாக்குகின்றது. மேலும் புதிய மொழியில் வினைகளைக் கையாளுகையில் வினைகளின் பொருண்மை மாற்றம் மற்றும் பொருண்மை நீட்சி குறித்த நமது அறிவு மிகப்

பயனுள்ளதாக அமையும். இத்தகைய அறிவு தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வரப்பிரசாதமாய் இருக்கும்.

பொருண்மாற்றம் மற்றும் பொருண்மை நீட்சி குறித்த விதிகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு வினைக்கும் பக்கக் கணக்கில் நீண்டுகொண்டிருக்கும் அர்த்தங்களின் பட்டியலைக் கட்டுப்படுத்த இயலும். புஸ்தொஜோவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு இதற்கு வழிவகுக்கும்.

மொழிபெயர்பாளர்களுக்கு, குறிப்பாக இயந்திரத்தைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பல்பொருளொருமொழி குறிந்த விளக்கங்களும் விதிகளும் சொற்பொருண்மை மயக்கங்களை நேரிடுவதற்கு உறுதுணையாக அமையும்.

துணைநூல்கள் (Bibliography)

இராசேந்திரன், ச. 2001. தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் [Modern Tamil thesaurus] தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். Uploaded in the websites: academia.edu. and ResearchGate.

இராசேந்திரன், ச. 2008. தமிழ் வினையடிகளின் வரலாற்றுமொழியியல் ஆய்வு [A Historical Linguistic Analysis of Tamil Verbal Bases]. சென்னைச் செம்மொழித் தமிழ் மைய நிறுவனம் நிதியுதவி நல்கிய ஆய்வுத்திட்டதின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். Uploaded in the websites: academia.edu. and ResearchGate.

இராசேந்திரன், ச. 2008. தமிழ்ப் பெயர்ச்சொற்களின் ஆக்கமுறை அகராதி உருவாக்கம் [Building generative lexicon for Tamil nouns]. Uploaded in the websites: academia.edu. and ResearchGate.

இராசேந்திரன், ச. 2009. தமிழ் வினைச்சொற்களின் ஆக்கமுறை அகராதி உருவாக்கம் [Building generative lexicon for Tamil verbs].. Uploaded in the websites: academia.edu. and ResearchGate.

இராசேந்திரன், ச. 2009. தமிழில் சொல்வலை [Tamil WordNet]. Uploaded in the websites: academia.edu. and ResearchGate.

இராசேந்திரன், ச. 2009. தமிழ்ப் பெயர்ச்சொற்களின் மூலப்பொருண்மையியல் ஆய்வு [Ontology of Tamil nouns]. Uploaded in the websites: academia.edu. and ResearchGate.

இராசேந்திரன், ச. 2009. தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு [Semantic structure of Tamil sentences]. Uploaded in the websites: academia.edu. and ResearchGate.

இராசேந்திரன், ச. தமிழ் வினையடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு. Uploaded in Academia.edu.

இராசேந்திரன், ச. மூலப்பொருண்மையியல் ஆய்வு [Ontology]. Uploaded in Academia.edu.

இராசேந்திரன், ச. தமிழ் பெயர்ச்சொற்களின் ஆக்கமுறை அகராதி [Generative semantics of Tamil nouns]. Uploaded in Academia.edu.

இராசேந்திரன், ச. தமிழ் வினைச்சொற்களின் ஆக்கமுறை அகராதி [Generative semantics of Tamil verbs]. Uploaded in Academia.edu.

இராசேந்திரன், ச. மற்றும் ச. பாஸ்கரன் 2006. தமிழ் மின்சொற்களஞ்சியம். [Tamil electronic thesaurus] தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். Uploaded in the websites: academia.edu. and ResearchGate.

தாமோதரக்கண்ணண். 2005. வைரமுத்துக்கவிதைகளில் வரும் உவமைகள் மற்றும் உருவகங்களின் பொருண்மையியல் ஆய்வு. முனைவர்பட்ட ஆய்வேடு. தமிழ்ப் பல்கலைக்கழம், தஞ்சாவூர்.

ராமகிருஷ்ணன், எஸ். (பதிப்பாசிரியர்). 2008. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, இரண்டாம் பதிப்பு. க்ரியா, சென்னை.

Abusch, Dorit. 1986. Verbs of change, causation, and time. Report CSLI-86-50, Center for the Study of Language and Information, Stanford University.

Allan, Keith & Kate Burridge. 1991. Euphemism and dysphemism: Language used as a shield and a weapon. Oxford University Press, New York.

Apresjan, J. 1973. Regular polysemy. Linguistics,142(5):5-32.

Aristotles. 1995. “Categories.” “Organon IV”. Both in Philosophische Schriften. Vol. 1, Wissenschaftliche Buchgesellschaft, Darmstadt.

Bisang, Walter. 1996. “Areal typology and grammaticalization: Processes of Grammaticalaization based on nouns and verbs in East and mainland South East Asian Languages.” Slang 20:519-597.

Black, M. 1962. “Metaphor,” in Models and Metaphors. Ithaca: Cornell University Press

Black, M. 1979. More about metaphor. In Ortony (ed.), Metaphor and thought. Cambridge University Press, Cambridge.

Blank, Andreas. 1999a. “Polysemy in Lexicon”. In: Rgine Eckardt & Klaus von Heusinger (eds.) Meaning Change-Meaning variation. Workshop held at Konstanz. Feb. 1999. Vol. I, 11-29.

Blank, Andreas.1999b. "Co-presence and succession: A cognitive typology of metonymy". In: Radden, G., & K.-U. Panther (Eds.), Metonymy in Language and Thought. Benjamins, Amsterdam.

Blank, Andreas. 2001. "Pathways of lexicalization". In: Haspelmath, M. et al. (Eds.), Language typology and universals. An international handbook. Berlin, De Gruyter, New York.

Blank, Andreas. 2003a. “Words and concepts in time: towards diachronic cognitive onomasiology”. In: Eckardt, R., et al. (eds.), Words in Time. Diachronic Semantics, Berlin/New York, 37-65.

Blank, Andreas. 2003b. “Polysemy in the lexicon and in discourse.” in: Nerlich, B. et al. (eds.), Polysemy. Flexible Patterns of Meaning in Mind and Language, Berlin/New York, 267-293.

Bloomfield, L. 1933. Language. New York: Allen & Unwin.

Boroditsky, Lera. 2002. Metaphoric structuring: Understanding time through spatial metaphors. Cognition 75:1-28.

Bréal, Michel (1899), Essai de sémantique (2nd ed.), Paris: Hachette (Referred as a seconday source from Wikipaedia)

Brown, Cecil H.1976. “A theory of lexical change (with examples from folk biology, human anatomical partonymy and other domains)”. Anthropological Linguistics 21.257-76.

Burrow, Thomas and Muray B. Emenearu. 1984. Dravidian etymological dictionary, 2nd ed. Oxford University Press, Oxford.

Carpenter, Marisa J. 2013. Semantic Change and Cognition: How the present illuminates the past and the future.

Chomsky, Noam. 1976. Reflections on Language. Temple Smith, London.

Coseriu, Eugenio (1964), "Pour une sémantique diachronique structurale", Travaux de Linguistique et de Littérature, 2: 139–186. (Referred as a secondary source from Wikipaedia.)

Coseriu, Eugene 2000. “Structural semantics and ‘‘cognitive’’ semantics.” Logos and Language 1(1), 19–42.

Croft, William (1993): "The role of domains in the interpretation of metaphors and metonymies". In: Cognitive Linguistics 4, 335-370.

Croft, William. 1993. “The role of domains in the interpretation of metaphors and metonymies”. Cognitive linguistics 4: 335-70.

Croft, W./Cruse, D.A. (2004): Cognitive Linguistics, Cambridge, etc. Detges, U. (1999): “Wie entsteht Grammatik? Kognitive und pragmatische Determinanten der Grammatikalisierung von Tempusmarkern”, in: Lang, J./Neumann-Holzschuh, I. (eds.), Reanalyse und Grammatikalisierung in romanischen Sprachen, Tübingen, 31-52.

Cruse, D. Alan. 1986. Lexical semantics. University Press, Cambridge.

Cruse, D. Alan. 1995. “Polysemy and related phenomena from a cognitive linguistic viewpoint.” In Dizier, P.S. and Viegas, E., editors, Computational Lexical Semantics, pages 33-49. England: Cambridge University Press, Cambridge.

Cruse, D. Alan. 1995. “Polysemy and related phenomena from a cognitive linguistic viewpoint.” In P.St. Dizier and E. Viegas (eds.), Computational Lexical Semantics. Cambridge University Press, Cambridge.

Cruse, D.Alan. 2000. Meaning in Language, an introduction to Semantics and Pragmatics. Oxford University Press, Oxford, United Kingdom.

Darmesteter, Arsène (1887), La vie des mots, Paris: Delagrave. (Referred as a secondary souce from Wikipaedia).

Deane, Paul D. 1988. "Polysemy and cognition". Lingua, 75, 325-361.

Detges, U./Waltereit, R. 2002. “Grammaticalization vs. reanalysis: a semantic-pragmatic account of functional change in grammar”, in: Zeitschrift für Sprachwissenschaft 21, S. 151-195.

Dixon, Robert M. W. 1991. A New Approach to English Grammar, on Semantic Principles. Oxford University Press, Oxford.

Dowty, David R. 1991. “Thematic proto-roles and argument selection”. Language 67:547-619.

Evans, N., D. Wilkins, 2000. “In the mind’s ear: the semantic extensions of perception verbs in Australian”, Languages, 76, 546-592.

Evans, V., M. Green. 2006. Cognitive Linguistics. An Introduction. New Jersey and London, Lawrence Erlbaum.

Faber, P. & Mairal Usón, R. (1999). Constructing a lexicon of English verbs. Mouton de Gruyter, Berlin and New York.

Fass, Dan C. (1988) Collative Semantics: A Semantics for Natural Language Processing. Memorandum in Computer and Cognitive Science, MCCS-88-118,

Fass, Dan. 1988. Metonymy and metaphor: what's the difference?, Proceedings of the 12th conference on Computational linguistics, p.177-181, August 22-27, 1988.

Fellbaum, Christiane. (ed.) 1998. WordNet: An Electronic Lexical Database. MIT Press, Cambridge.

Filmore, Charles J. 1968. Lexical entries for verbs. Foundations of Language, 4:373-393.

Fillmore, Charles J. 1970. "The grammar of *hitting* and *breaking*". In: Roderick A. Jacobs & Peter S. Rosenbaum (eds.) Readings in English Transformational Grammar, Ginn, Waltham, MA. 120-133.

Fillmore, C.J. 1997a. Santa Cruz lectures on deixis. Stanford, CA, CSIL publications.

Filmore, Charles J. 1977b. "Topics in lexical semantics". In: R. W. Cole (ed,) Current Issues in Linguistics Theory, Indiana University Press, Bloomington, 76-138.

Fortson, Benjamin W. 2003. An approach to semantic change. In: Brian D. Joseph and Richard D. Janda (eds.) Handbook of historical linguistics, Oxford, Blackwell. 648-66.

Fritz, Gerd (1974), Bedeutungswandel im Deutschen, Tübingen: Niemeyer. (Referred as a seconday source from Wikipaedia).

Fussell, S. R. (Ed). (2002). The Verbal communication of emotion: interdisciplinary perspectives. Lawrence Erlbaum Associates, Mahwah, NJ.

Fussell, S.R. & Moss, M. (1998). Figurative language in emotional communication. In S. R. Fussell & R. Kreuz (Eds.), *Social and cognitive approaches to interpersonal communication* (pp. 113-141). Mahwah, NJ: Erlbaum.

Gao, Hong. 2001a. Notions of motion and contact for physical contact verbs. Proceedings of the 18th Scandinavian Conference of Linguistics, vol.2, ed. by Arthur Holmer, Åke Viberg, and Jan-Olof Svantesson, 193-209. Lund University, Lund:

Gao, Hong. 2001b. The Physical Foundation of the Patterning of Physical Action Verbs: A Study of Chinese Verbs. Lund University Press, Media-Tryck Lunds Universitet.

Geeraerts, Dirk (1983), "Reclassifying Semantic change", Quaderni di semantica, 4: 217–240.

Geeraerts, Dirk 1988 Cognitive grammar and the history of lexical semantics. In Rudzka-Ostyn, Brygida (ed.), Topics in Cognitive Linguistics. (Amsterdam Studies in the Theory and History of Linguistic Science. Series IV—Current Issues in Linguistic Theory; 50.) John Benjamins, Amsterdam. 647–677.

Geeraerts, Dirk. 1997. Diachronic prototype semantics: A contribution to historical lexicology. Clarendon Press, Oxford.

Goldberg, Adele E. 2001. Patient arguments of causative verbs can be omitted: The role of information structure in argument distribution. *Language sciences* 23: 503-524.

Grice, H. Paul 1975 Logic and conversation. In Cole, Peter and Jerry Morgan (eds.), Syntax and Semantics, vol. 3: Speech Tests. Academic Press, New York.41–58.

Guerssel, M., K. Hale, M. Laughren, B. Levin, and J. W. Eagle. 1985. A cross-linguistic study of transitivity alternations. Papers from the Parasession on Causatives and Agentivity, *CLS* 21.2:48-63. Chicago, Illinois.

Hale, Ken & Jay Keyser. 1998. The basic elements of argument structure. MIT working papers in linguistics 32: 73-118.

Hanks, P. 2006. "Metaphoricity is gradable." Corpus-Based Approaches to Metaphor and Metonymy, 17-35.

Hanks, P and Pustejovsky, J. 2005. "A pattern dictionary for natural language processing". Revue Française de Linguistique Appliquee.

Hasser,V. 2003. "Metaphor in Semantic Change", In: A Barcelona (ed.). Metaphor and Metonymy at the crossroads, Mouton de Gruyter, Berlin/New York, 171-194.

Horie, K. 1993. A Cross-linguistic Study of Perception and Cognition Verb Complements: A Cognitive Perspective, PhD Dissertation. University of Edinburgh.

Hovav, Rappaport and Levin, Beth. 2002. Change of State Verbs: Implications for Theories of Argument Projection. BLS 28, 2002.

Huang, Chu-Ren and Kathleen Ahrens. 1999. "The function and category of gei in Mandarin ditransitive construction." JCL 27:1-26.

Ibarretxe-Antunano, Iraide. 1996. "Semantic extensions in the sense of smell." ASJU, XXX-2: 631-643.

Ibarretxe-Antunano, Iraide. 1998. “Predictable vs. Unpredictable polysemy.” In: S.J Hwang and A. Lommel (eds.) LACUS Forum. 25:201-211.

Ibarretxe-Antunano, I. 1999. Polysemy and Metaphor in Perception Verbs: A Cross-linguistic Study. PhD Thesis. University of Edinburgh.

Ibarretxe-Antunano, I. 2002. “Mind-as-body as a cross-linguistic conceptual metaphor”, Miscelanea. A Journal of English and American Studies, 25, 93-119.

Ibarretxe-Antuñano, Iraide. 2006. “Cross-linguistic polysemy in tactile verbs”, In J. Luchenbroers (eds.), Cognitive Linguistics Investigations across Languages, Fields, and Philosophical Boundaries, John Benjamins, Amsterdam and Philadelphia, 235-253.

Ibarretxe-Antuñano, Iraide. 2008. “Vision metaphor for the intellect: Are they really cross-linguistic?”, Journal of the Spanish Association of Anglo-American Studies, 30, 15-33.

Jakendoff, R. 1983. Semantics and cognition. MIT Press, Cambridge, Massachusetts.

Jackendoff, R. 1987. “The Status of Thematic Relation in Linguistictheory,” Linguistic Inquiry 18:369-411.

Jackendoff, Ray S. 1990. Semantic Structures. MIT Press. Cambridge:

Jakendoff, Ray S. 1996. ‘Conceptual semantics and cognitive linguistics’. Cognitive linguistics, 7.1.93- 129.

John, Mark. 1987. The body in the mind. The bodily basis of meaning, imagination and reason. Chicago University Press, Chicago:

Johnson, M. 1987. The Body in the Mind. The Bodily Basis of meaning, Imagination, and Reason, Chicago University Press, Chicago and London.

Katz, J. 1964. “Implicative Verbs”. Language 47:340-58.

Katz, J. and J. Fodor. 1963. “The Structure of Sematic Theory,” Language 39:170-210.

Kilgarriff, A. 1997. “I don’t believe in word senses”. Computers and the Humanities, 31:91-113.

Koga, H. (2001). Auxiliation of Japanese Motion and Transfer Verbs. BA thesis.

Koch, P. (1999): “TREE and FRUIT: A cognitive-onomasiological approach”, Studi Italiani di Linguistica Teorica e Applicata 28, 331-347.

Koch, Peter (1999): "Frame and contiguity: on the cognitive basis of metonymy and certain types of word-formation". In: Radden, G., & K.-U. Panther (Eds.), Metonymy in thought and language. Benjamins, Amsterdam.

Koch, Peter (in press): "Lexical typology. In: Haspelmath, M. et.al. (Eds.), Language Typology and Universals. An international handbook. De Gruyter. Berlin, New York.

University of Alberta. Edmonton, Canada.

Krishnakumaran, S. and X.J. Zhu. 2007. Hunting Elusive Metaphors Using Lexical Resources. Proceedings of the Workshop on Computational approaches to Figurative Language, pp.13-20.

Lakoff, George (1987): Women, fire and dangerous things. What categories reveal about the mind. University of Chicago Press, Chicago:

Kurath, Hans. 1921. The Semantic Sources of the Words for the Emotions in Sanskrit, Greek, Latin and the Germanic Languages. George Banta Publishing Co. Menasha, Wi.

Lakoff, George. 1987. Women, fire and dangerous things. What categories reveal about the mind. Chicago University Press, Chicago.

Lakoff, George. 1993. "The Contemporary Theory of Metaphor", In: A Ortony, Metaphor, and Thought, Cambridge University Press, Cambidge, 202-251.

Lakoff, George and Mark Johnson. 1980. Metaphors we live by. University of Chicago Press, Chicago.

Lakoff, George and Johnson, Mark. 1980. Metaphors we live by. University of Chicago Press, Chicago.

Langacker, Ronald W. Abstract motion. Proceedings of the Twelfth Annual Meetings of the Berkeley Linguistics Society, 455-471. Berkeley Linguistics, Berkeley, CA.

Langacker, Ronald W.1987. Foundations of Cognitive Grammar. Vol. 1, Theoretical prerequisites. Stanford University Press, Stanford.

Langacker, Ronald W.1988. A View of linguistic semantics. In Brygida Rudzka-Ostyn (ed.). Topics in Cognitive Linguistics, John Benjamins, Amsterdam, 49-90.

Langacker, Ronald W. 1986. Abstract motion. Proceedings of the Twelth Annual Meeting of the Berkeley Linguistics Society. Berkeley Linguistics Society. Berkeley. CA, 455-471.

Langacker, Ronald W. 2000 Virtual reality. Studies in the Linguistic Sciences 29: 77–103.

Langacker, Ronald W. 2002. Dynamicity, fictivity, and scanning: The imaginative basis of logic and linguistic meaning. *Korean Linguistics Today and To-morrow: Proceedings of the 2002 International Conference on Korean Linguistics*, 3 – 32. Association for Korean Lin-guistics, Seoul.

Langacker, Ronald W. 2008. Cognitive grammar: A basic introduction. Oxford University Press. Oxford, U.K and New York.

Leech, G. 1971. Meaning and the English verb, Longman, London.

Lehrer, A. 1974. Semantic Fields and Lexical Structure. Amsterdam: North-Holland Publishing Company.

Lehrer, Adrienne. 1985. "The influence of semantic fields on semantic changes". Jacek Fisiak (Ed.) Historical Semantics. Historical Word: Formation. Mouton de Gruyter Berlin. Leibniz New York, Amsterdam. 1903

Levin, Beth. 1993. English verb classes and alternations. University of Chicago Press, Chicago, IL.

Levin, Beth. 1999. Objecthood: An event structure perspective. CLS 35; Part 1: 223-247.

Levin, Beth and Malka Rappaport Hovav. 1991. Wiping the slate clean: A lexical semantic exploration. Cognition 41: 123-151.

Levin, Beth and Malka Rappaport Hovav. 1995. Unaccusativity: At the Syntax-Lexical Semantics Interface. MA: MIT Press, Cambridge.

Levin, Beth and and Rappaport Hovav. 2005. Argument Realization, University Press, Cambridge

Lichtenberk, F. 1991. Semantic change and heterosemy in grammaticalization. Language. 67:475-509.

Lüdtke, Helmut. 1999. Diachronic semantics: Towards a unified theory of language change? In Andreas Blank and Peter Koch. (eds). Historical semantics and cognition, Mouton de Gruyter, Berlin. 49-60.

Matlock, Teenie. "The Conceptual Motivation of Fictive Motion."

McConvell, Patric and Ponsonnet, Maia. 2013. "Results and Prospects in the Study of Semantic Change: A Review of From Polysemy to Semantic Change (2008)." Journal of Language Contact 6 (2013) 180-196.

Miller, George A. and Philip N. Johnson-Laird. 1976. Language and Perception. Harvard University Press, Cambridge. MA:

Miller, George A., Richard Beckwith, Christian Fellbaum, Derek Gross, and Katherine J. Miller. 1990. Introduction to WordNet: An on-line lexical database. International Journal of Lexicography 3:235-244.

Neagu, M. 1999. "Categories in Natural Languages: the study of Nominal Polysemy." in English and Romanian. Bzau, Alpha.

Neague, M 2013. What is Universal and what is language-specific in the polysemy of perception verb? RRL, LVIII, 3, p. 329-343, București.

Nerlich, Brigitte & Clarke, David D. 2001. Ambiguities we live by; towards a pargmatics of ploysemy. Journal of pragmatics, 33, 1-20.

Nerlich, Brigitte & Clarke, David D. 2003. Polysemy: flexible patterns and evolving polysemies: the acquisition of get between four and ten years. In: B. Nerlich, Z.Todd, V. Herman and D.D. Clarke (eds.) Polysemy Flexible patterns of meaning in mind and language. (pp 333-335), Mouton de Gruyter, New York.

Nerlich, Brigitte & Clarke, David D. "Synecdoche as a communicative strategy". In: Blank, A., & P. Koch (Eds.), Historical semantics and cognition. Mouton de Gruyter, Berlin, New York:

Newman, John. 1993. “A cognitive grammar approach to Mandarin gei.” JCL 21:313-336.

Newman, John. 1996. Give: A Cognitive Linguistic Study. Mouton de Gruyter, Berlin and New York:

Newman, John. 1997. “Eating and drinking as sources of metaphor in English.” Cuardernos de Filología Inglesa (special issue on Cognitive Linguistics) 6(2): 213–231.

Ogura, M. & W. S.-Y. Wang. 1995. “Lexical diffusion in semantic change: With special reference to universal changes.” Folia Linguistica Historica 16, 29-73.

Pedersen, Bolette Sandford. 1999. “Systematic Verb Polysemy in MT: A Study of Danish Motion Verbs with Comparisons with Spanish.” Machine Translation,14:1-35-82.

Nida, Eugene A. 1975. Componential Analysis of Meaning: an introduction to semantic structures. Belgium: Mouton.

Palmer, M., Gildea, D., and Kingsbury, P. 2005. “The Proposition Bank: An annotated corpus of semantic roles”. Computational Linguistics, 31(1):71-106.

Pinker, Steven. 1989. Learnability and Cognition: The Acquisition of Argument Structure. MIT Press, Cambridge.

Paul, Hermann (1880), Prinzipien der Sprachgeschichte, Tübingen: Niemeyer.

Ponterotto, Diane. 2012. “Metaphorical aspects of motion verbs: a contrastive view of English and Italian”. In Mininni, G. & .Manuti, A. (Eds.) Applied Psycholinguistics: positive effects and ethical perspectives, vol.1, 407-818. FrancoAngeli, ISBN Milan. 978-88-568-4636-2.

Ponterotto, Diane. 2014. Happiness is moving up: Conceputalizing emotions through motion verbs. Selected papers from the 4th UK Cognitive Linguistics Conference, htt://uk-cal.org.uk/proceedings, pages 265-283.

Princeton University. 1997. *WordNet* version 1.6. Software.

Pustejovsky, James (1995): The Generative Lexicon. Cambridge/Mass.: MIT Press.

Pustejovsky, James. 2006. Type theory and lexical decomposition. Journal of Cognitive Science, 6:39-76.

Pustejovsky, James & Branimir Boguraev (1996): "Introduction: Lexical Semantics in Context". In: id. (Eds.), Lexical Semantics. The Problem of Polysemy (1-14). Clarendon, Oxford:

Pustejovsky, James & Rumshisky, Anna. 2009. "Mechanism of sense extension in verbs." In Gilles-Maurice de Schryver (ed.) A way with words: Recent Advances in Lexical Theory and Analysis: A Festschrift for Patrick Hanks. Menha Publishers.

Radden, G. 1995. "Motion Metaphorized: The Case of Coming and Going." In E.H. Casad (ed.) Cognitive Linguistics in the Redwoods: The Expansion of a New Paradigm in Linguistics. Cognitive Linguistics Research 6. Mouton de Gruyter, Berlin and New York, 423-458.

Rajendran, S. 1976. Verbs of Cooking in Tamil. Working Papers in Linguistics No.1, Deccan College, Pune, 1976, 8-16

Rajendran, S. 1978. Syntax and Semantics of Tamil Verbs (manuscript) Ph.D. Thesis.: University of Poona, Poona.

Rajendran, S. 1983. Semantics of Tamil Vocabulary (manuscript). Post-doctoral theisis, Deccan College, University of Poona, Poona.

Rajendran, S. 1982. Verbs of 'Seeing' in Tamil. In BDCRI vol. 41, 1982, 151-159.

Rajendran, S. 1983. Semantics of Tamil Vocabulary. (Report of the UGC Sponsored Postdoctoral Work in manuscript). Deccan College Post Graduate and Research Institute, Poona.

Rajendran, S. 1983. Coming and Going in Tamil. In: E. Annamalai (edited) To Greater Heights, CIIL, Myosre, 1983, 83-118.

Rajendran, S. 1995. Componential Analysis of 'Eating' in Tamil. PILC Journal of Dravidic Studies, vol. 5, no.2, 1995. 175-181.

Rajendran, S. 2000. Strategies in the Formation of Compound Verbs in Tamil. International Journal of Dravidian Linguistics vol. 29, no. 2, June 2000, 107-126.

Rajendran, S. 2001. வாருங்கள் போங்கள் [Coming and going]. In: P.V. Ravi et al (edited) Professor K.Karunakaran 60th Birth Day Commemoration Volume, Coimbatore, July 2001, 45-52.

Rajendran, S. 2002. "Preliminaries to the preparation of a WordNet for Tamil". Language in India 2:1, March 2002, www.langugeinindia.com

Rajendran, S. 2002. Semantic Structure of Directional Verbs of Movement. Language in India 2:5, August 2002, www.languageinindia.com

Rajendran, S. 2002. Syntax and Semantics of Verbs of Transfer in Tamil. Language in India 2:8, November 2002, www.languageinindia.com.

Rajendran, S.2003. “Creating Generative Lexicon from Dictionaries: Tamil Experience” In Rajeev Sangal el al (ed.) Recent Advances in Natural Language Processing. CIIL, Myore, 83-91.

Rajendran, S. 2010. Building Generative lexicon from MRDs in Tamil. Report of the UGC sponsored major research poject. Tamil University, Tamilnadu.

Rajendran, S. 2018. “Cognitive Extensions of Meaning in Verbs of Movement in Tamil.” International Journal of Dravidian Linguistics, vol. XLVIII, no.2, pp 23-41.

Rajendran, S. 2018. Grammaticalization of Verbs in Tamil.” Paper presented in 40th International Conference of Linguistic Society of India (ICOLSI 40) held in CIIL, Mysore from 5th to 7th December 2018. Uplodade in academia.edu and Reseach Gate.

Rajendran, S., Arulmozi S., Kumara Shanmugam, B., Baskaran, S. and Thiyagarajan, S. 2002. “Tamil WordNet.” In Proceedings of the First International Global WordNet Conference. Mysore: CIIL, 271-274.

Ramachandran, V. S. and S.M. Antis.1986. The perception of apparent motion. Scientific American 254: 102–109.

Rappaport Hovav, Malka & Beth Levin. 1998. Building verb meanings. In Butt & Geuder (eds.), 97-134.

Rastier, François. 1999. Cognitive semantics and diachronic semantics: The values and evolution of classes. In Blank, Andreas & Peter Koch (eds.), *Historical Semantics and Cognition,* 109-144. Berlin/New York: Mouton de Gruyter.

Reddy,M. 1979. The conduit metaphor: A case of frame conflict in our language about language. In Ortony (ed.) Metaphor and thought. Cambridge University Press, Cambridge, 284-324.

Reimer, Nick. 2001. “A study of semantic extension of percussion/impact vocabulary in English and Warlpiri.” Glot International 5: 327-328.

Reisig, Karl (1839), "Semasiologie oder Bedeutungslehre", in Haase, Friedrich (ed.), Professor Karl Reisigs Vorlesungen über lateinische Sprachwissenschaft, Leipzig: Lehnhold. (Referred as a secondary source from Wikipaedia)

Richardson, John F. 1983. Smash Bang. BLS 9, 221-217.

Rogers, A. 1971. “Three kinds of physical perception verbs”, CLS 7, 206-223.

Rogers, A. 1972. “Another look at flip perception verbs”, CLS 8, 303-316.

Roppenhofer, J., Ellsworth, M. Petuck, M. Johnson,C., and Scheffczyk, J. 2006. FrameNet II: Extended Theory and Practice.

Rosch, E.H. 1973. “Natural categories.” Cognitive Psychology 4, 328-350.

Rosch, E.H. 1978. “Principles of categorization.” In E.Rosch and B. Lloyd (eds), Cognition and categorization. Hillside, NJ:Lawrence Erlbaum Associates.

Ruhl, Charles. 1972. The grammar of *hitting* and *breaking* revisited. *Glossa* 6:147-154.

Rumshisky, A. 2008. “Resolving polysemy in verbs: Contextualized distributional approach to argument semantics.” Distributional Models of the Lexicon in linguistics

and Cognitive Science, special issues of Italian Journal of Linguistics/ Rivista di Linguistica.

Sandström, K. 2006. When motion becomes emotion; a study of emotion metaphors derived from motion verbs. Lulea University of Technology (LIMS), Lulea.

Sehnert, James, and Mike Sharwood-Smith. 1973. The verbalization of instrumentals in English. Studia Anglica Posnaniensia 5:37-46

Shen, Y.M. 1995. "The semantics of the Chinese verb 'come'". In: Eugene H. Casad (ed.). Cognitive linguistics in the Redwoods: The expansion of a new paradigm in linguistics, 507-540. Berlin, Federal Republich Germany: Walter de Gruyter & Co.

Saeed, John I. (1997): Semantics. Cambridge/Mass.: Blackwell.

Song, Jae Jung. 1997. "On development of MANNER from GIVE." In: John Newman (ed.), The linguistics of Giving, Amsterdam and Philadelphia: John Benajmins. 327-348.

Stern, G.1931. Meaning and change of meaning with special reference to the English language. Elander, Göteborg.

Snell-Hornby, Mary. 1983. Verb Descriptivity in German and English. Carl Winter, Heidelberg.

Stern, Gustaf. 1968. Meaning and change of meaning. Bloomington, Indiana University Press, Indiana. (first published in 1931).

Sweester, Eve. 1984. Semantic structure and semantic change: a cognitive linguistic study of modality, perception, speech acts and logical relations. University of California, Berkeley.

Suseela, M. 2001. A Historical Study of Old Tamil Syntax. Tamil University, Thanjavur.

Sweetster, Eve. 1990. From etymology to pragmatics: Metaphorical and cultural aspects of semantic structure. Cambridge University Press, Cambridge:

Talmy, Leonard. 1975. Semantics and syntax of motion. In: John P. Kimball (ed.) Syntax and Semantics, Volume 4, 181-238. Academic Press, New York:

Talmy, Leonard. 1983. How language structures space. In: Herbert L. Pick, Jr. and Linda P. Acredolo (ed.).Spatial Orientation: Theory. Research and Application. Plenum Press, New York. 225-282.

Talmy, Leonard. 1996. Fictive motion in language and 'ception'. In: Paul Bloom, Mary A. Peterson, Lynn Nadel and Merrill F. Garrett (eds.), Language and Space, 211-276.:MIT Press, Cambridge, MA.

Talmy, Leonard. 1978. The relation of grammar to cognition – a synopsis. In: David Waltz (ed.). Proceedings of TINLAP-2, 14-24. Association for Computing Machinery, New York.

Talmy, Leonard. 1983. How language structures space. In H Pick and L Acredolo, editors, Spatial Orientation: Theory, Research, and Application, pages 225-282. Plenum Press, New York.

Talmy, Leonard. 2000. Towards a cognitive semantics, Volume I: Conceptual Structuring systems. MIT Press, Cambridge.

Taylor, John R. 2002. 1995. Linguistic categorization: prototypes in linguistic theory. Oxford University Press, Newyork.

Taylor, John R. 2002. Cognitive Grammar. Oxford University Press, Oxford.

Thepkanjana, Kingkarn and Satoshi Uehara. 2008. “The verb of giving in Thai and Mandarin Chinese as a case of polysemy: A comparative study.” LS 30:621-651.

Touplikioti, Sophia. 2007. Teaching of the polysemous verbs ‘make’ and ‘do’ to Greek learners of English: A cognitive linguistic approach. PhD thesis. Aristotle University of Thessaloniki, Greece.

Traugott, Elizabeth Closs (1990), "From less to more situated in language: the unidirectionality of Semantic change", in Adamson, Silvia; Law, Vivian A.; Vincent, Nigel; Wright, Susan (eds.), Papers from the Fifth International Conference on English Historical Linguistics, Amsterdam: Benjamins, pp. 496–517. (Referred as a secondary source from Wikipaedia).

Traugott, Elizabeth Closs, & Dasher, Richard B. 2001. Regularity in semantic change. Cambridge University Press, Cambridge:

Traugott, Elizabeth Closs. 1989. On the rise of epistemic meanings in English: An example of subjectification in semantic change. Language 65, 31-55.

Traugott, Elizabeth Closs & Bernd Heine. 1982. From propositional to textual and expressive meanings: Some semantic-pragmatic aspects of grammaticalization. In Perspectives on historical linguistics, edited by W. P. Lehmann and Y. Malkiel. Amsterdam: John Benjamins, 245-271.

Traugott, Elizabeth C. 1988 Pragmatic strengthening and grammaticalization. In Proceedings of the Annual Meeting of the Berkeley Linguistics Society 14, 406– 416.

Traugott, Elizabeth Closs. 1990. From less to more situated in language: The undirectionality of semantic change. In Papers from the Fifth International Conference on English Historical Linguistics, edited by Sylvia Adamson, Vivien Law, Nigel Vincent and Susan Wright. Benjamins, Amsterdam. 496-517.

Trier, Jost (1931), Der deutsche Wortschatz im Sinnbezirk des Verstandes (dissertation) (Referred as a secondary source from Wikipaedia).

Tuggy, D. 1993. Ambiguity, ploysemy and vagueness. Cognitive linguistics 273-290, 4-3.

Tuggy, D. 1999. Linguistic evidence for polysemy in the mind: a response to William Croft and Dominick Sandra. Cognitive linguistics, 10, 343-368.

Ullmann, Stephen. 1957. Principles of semantics. Blackwell, Oxford.

Ullmann, Stephen. 1962. Semantics: An introduction to the science of meaning. Blackwell, Oxford.

Ullmann, Stephen. 1957 Principles of Semantics. 2nd edition. Blackwell, Oxford.

Ullmann, Sephen. 1962. Semantics: An introduction to the science of meaning. Blackwell, Oxford.

Ullmann, Stephen 1964 Semantics: An Introduction to the Science of Meaning. 2nd edition. Blackwell, Oxford.

Vanhove, Martine (ed.) 2008. From Polysemy to Semantic Change: Towards a typology of lexical semantic associations, John Benjamins, Amsterdam/ Philadelphia.

Viberg, Ake. 1983. The verbs of perception: a typological study. Linguistics 21.123-162.

Viberg, Ake. 2002. "The polysemy of Swedish ge 'give' from a crosslinguistic perspective." In Anna Braasch and Claus Povlsen, eds. Proceedings of Euralex 2002 (II), pp. 669-682. Centre for Sprogteknologi, Copenhagen University, Compenhagen.

Warren, Beatrice (1992), Sense Developments: A contrastive study of the development of slang senses and novel standard senses in English, [Acta Universitatis Stockholmiensis 80], Stockholm: Almqvist & Wiksell. (Referred as a secondary source from Wikipaedia).

Wierzbicka, A. 1982. Lingua Mentalis:The Semantics of Natural Natural Languge, Academic Press, New York, NY.

Wierzbicka, A. 1982. "Why Can You Have a Drink When You Can't Have and Eat?," Language 58:753-799.

Wierzbicka, A. ,2009 . Language and metalanguage: Key issues in emotion research. Emotion Review, 1 (1), 3-14.

Wittgenstein, L. 1972. Philosophical Investigations (Translated by G. E. M. Anscombe). Basil Blackwell.

Yap, Foong Ha and Shoichi Iwasaki. 1998. "'Give' constructions in Malay, Thai and Mandarin Chinese." JCL 22:363-394.

Chancharu, James N. Semantic Extension of the Verbs of Tactile Sensation in Thai and Zhuang.

Yin, Hui. 2011. The cognitive semantics of Chinese motion/directional verbs. Working Papers of the Linguistics Circle of the University of Victoria 21. `

Yin, Hui. 2002. A Cognitive Approach to the Japanese Verb Kuru 'Come'. Proceedings NWLC.

Zharikov, S. and Gentner, D. (2002). Why do metaphors seem deeper than similes. In Proceedings of the twenty-fourth annual conference of the cognitive science society, pages 976–981.